அருணகிரிநாதர் அருளிய

திருப்புகழ்

விருத்தியுரை

அ. குழந்தைவேல் முதலியார்
தேவாரகள் விலாச அச்சுக்கூடம்

சென்னை

காபிரைட்] 1947 [விலை ரூபா 4

உ

முருகன் துணை

திருப்புகழ்

(முதற்பாகம்)

சென்னை பச்சையப்பன் காலேஜ் தமிழாசிரியரும்
'செந்தமிழ்ச்செல்வி' பத்திராசிரியரும்
'பாவலராற்றுப்படை' 'புலவர்கதை' 'இராஜராஜன்'
முதலியவற்றின் நூலாசிரியருமாகிய

மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள்

எழுதிய

விருத்தியுரை அடங்கியது.

அமரம்பேடு. இரங்கசாமிமுதலியார் குமாரர்

அமரம்பேடு. குழந்தைவேல் முதலியார்

தெய்வமகள் விலாச அச்சுக்கூடம்

சென்னை

1947

24. தாண்டவராயபிள்ளை வீதி.

பதிப்புரிமை]

AKM

Printed by DAIVA MAGAL VILASAM PRESS,
24, Thandavaraya Pillai Street Sowcarpet, Madras

முகவுரை

திருப்புகழ் முத்தமிழ்ப்புலமையும் வித்தகக்கவியும் வல்லவரும், மெய்ஞ்ஞானானுபூதிச் செல்வருமாகிய **அருணகிரிநாதரால்** அருளிச்செய்யப்பட்ட மிக்கச் சிறந்த நூலென்பது யாவருமறிந்த தொன்று. அது செந்தமிழ் இலக்கியச்செறிவும் இலக்கணவமைதியும் சாத்திரப்பொருள் அடக்கமும் பெற்றிருத்தலோடு வடமொழிக் கலப்பும் பெரிதும் உடையதாய் உள்ளது. அன்றியும் சந்தப் பாட்டாதலின் அதன் இன்பம் நோக்கிச் சொற்கள் திரித்தும் பெயர்த்துரைக்கப்பட்டுள்ளன. அல்லதூஉம் பாட்டுக்கள் பல பாடபேதங்களோடும், ஆங்காங்குச் சிதைந்து, பொருள் புலப்படாநிலையிற் காணப்படுகின்றன. அதனால் திருப்புகழுக்கு உரை வகுப்பது ஒரு கடினமான வேலையென்பது எல்லார்க்கும் இனிது விளங்கும். அத்தகைய நூலை ஒருவாறு உரையெழுத மேற்கொண்டு முதல் நூறுபாட்டுக்களுக்கு எழுதியுள்ளேன். சிலவிடங்களில் யார்க்கும் பொருள் விளங்காத இடங்களும் இருக்கின்றன. அவையெல்லாம் ஏடெழுதுவோரால் ஏற்பட்ட வழூஉக்களென்பது எனது துணிபு.

பொருட்டுறையில் பெரும்பாலும் இந்நூலாசிரியர் ஒரே நெறியைப் பற்றிச் செல்லுதலின் விருத்தியுரை முதலிலிருந்து முடிவுவரையில் ஒரே ஒழுங்காகச் செல்லுதற்கு இயலவில்லை எனினும், பலவிடங்களில் தக்க மேற்கோள்களை எடுத்துக் காட்டியும், சொல்நயம் பொருணயங்களை விளக்கியும், பொருளை ஒழுங்குபடுத்தித் தூய்மை செய்தும் இருக்கின்றேன். இதனைத் தொடுத்து முடிப்பதற்கு இடையிலே பல இடையூறுகளால் காலம் நீட்டித்துவிட்டபடியாலும், வேறு சில காரணங்களாலும், என் விரு-

பத்திற் கிணங்க இவ்வுரை முடிவதற்கு இயலாதுபோயிற்று. இனி மறு பதிப்பில் குமரன் திருவருளால் இக்குறைகளையெல்லாம் ஒழித்து நான் விரும்புமாறு செய்து முடிக்கலாமென எண்ணுகின்றேன். நூலாசிரியர் வரலாறும் சுருக்கமாக ஆராய்ந்து எழுதியுள்ளேன். இதைக் கண்ணுறும் செந்தமிழ்ச் செல்வர்கள் இந்நூலின் அருமை பெருமைகளையும் உணர்ந்திடுவதற்குத் தடையாயுள்ள பல காரணங்களையும் உணர்ந்து, குறைகளைப் பொருட்படுத்தாது, குணத்தை மேற்கொண்டு இதனை விரைந்து ஏற்றுக் கொள்வார்களென நாடுகின்றேன். இனி இரண்டாம் பாகம் பல நூற்பாட்டுகளை ஆராய்ந்து எடுத்து அவைகளுக்கெல்லாம் குறியீடு கொடுத்தும், முறை வகுத்தும், செவ்வையாக விருத்தியுரை வரைந்து வெளியிடக் கருதியுள்ளேன். அம்முறையில் எத்துணைப் பாட்டுக்கள் ஏற்படுமோ அத்துணையும் நூறு நூறாக ஒவ்வொரு பாகமாக வெளியிட்டு வரக் கருதுகின்றேன். ஆறுமுகச்செல்வன் அருள்புரிக.

இந்நூலை அச்சிடுங் காலத்தில் உடனிருந்து உதவி புரிந்த என் மாணவரும் சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்தர பாடசாலைத் தமிழ்ப்புலவருமாகிய மயிலை சிவ முத்துக்குமாரசுவாமி முதலியார் அவர்களது உதவி பாராட்டற்பாலது.

இந் நன்முயற்சியிலே எளியேனைப் புகுத்தி முட்டின்றி முடித்த முருகவேள் திருவருள் எழுமையும் எழுபிறப்பும் சிந்தித்து உருகற்பாலது.

சென்னை }
1923ஆ } இங்ஙனம்.

மணி. திருநாவுக்கரசன்.

அருணகிரிநாதர்

அருணகிரிநாதர் வரலாறு

தொடக்கம்

நமது தெய்வச் செந்தமிழ் நாட்டிலே தோன்றிய அரும் பெரும் புலவர்கள் அளவிறந்தவர். தமிழ் நன்மக்கள் இயற்கையிலேயே பாடுந்திறமையைப் பெற்றவரென்பது அந்நாட்டிலே கடல்போன்று பரந்து வழங்கும் பழமொழிகளாலும் செய்யுட்களாலும் இனிது விளங்கும். இக்கருத்தை மேனாட்டுப் புலவரான (Reverend Lazarus) லாஸரஸ் பாதிரியாரும் எடுத்துக் காட்டியிருக்கின்றார். தமிழ்ச்சங்கங்கள் இருந்த காலத்தில் பல நூல்கள் வெளிப்பட்டன. அந்நூல்களெல்லாம் அகப்பொருள் புறப்பொருளென்னும் இருவகை ஒழுக்கங்களையும் சித்திரிக்காமல் உள்ளது உள்ளவாறே விளக்குரைக்கும் பெற்றியன. சங்கங்களுக்குப் பின் தோன்றிய நூல்களுள் பெரும்பான்மையன மதவைராக்கியம், தத்துவஞானம் முதலியவற்றை மிகுத்துரைப்பனவாகவும், புனைந்துரை மிக்கனவாகவும் காணப்படுகின்றன. சிந்தாமணி முதலிய காப்பியங்களையும், கம்பராமாயண முதலிய இதிகாசங்களையும் இதற்கு உதாரணமாகக் காண்க. சமயகுரவரும், ஆழ்வார்களும் தோன்றிப் பக்திரசம்பொருந்திய திருப்பாடல்களை அருளிச்செய்து, மக்களுக்கு மெய்யுணர்வைப் புகட்டினார். அன்றியும் திருஞானசம்பந்தர் முதலியோர் தாம் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாசுரங்களுக்குப் பண்ணடைவு அமைத்து, இசை இலக்கணத்தை இயற்றமிழோடு புகட்டி மனப்புலனுக்கேயன்றிச் செவிப்புலனுக்கும் இன்பமூட்டினர். அத்

தகைய இன்பத்தில் ஈடுபட்டிருந்த தமிழ்நாடர், மன அறிவோடு செவிச்செல்வத்தையும் பெற்று களிதுளும்பி னர். அதனால், அக்காலத்திலே தோன்றிய நூல்களெல்லாம் பொதுவாகவோ சிறப்பாகவோ இசை, ஒழுக்கம், தத்துவப் பொருள் முதலியன அமைந்து, சமயப்பற்றுடையனவாய்த் திகழ்ந்தன. இக்குணங்கள் மேன்மேலும் வளர்ந்து ஓங்கி வருங்காலத்தில் சமயநூல்களுக்கே யன்றிப் பிற நூல்களுக்கு அவ்வளவு பெருமை இல்லை. அதனால் புலவர்கள், சிவபெருமான், திருமால் முதலியோரையே தலைவர்களாக அமைத்து அந்தாதி, கலம்பகம், கோவை முதலிய பிரபந்தங்களைப் பாடியும் தலபுராணங்களை இயற்றியும் நின்றார்கள். சைவநூல்களில் திருமுறைக்கு இணையான வேறு நூல் தோன்றுதல் இயலாது. வைணவ நூல்களுள் திவ்யப் பிரபந்தத்திற்கு நிகராக வேறு நூல் எழப்படமுடியாது. எத்தகைய புலமையோரும் அவர் பாடும் பாட்டுக்களெல்லாம் இந்நூல்களுக்குக் கீழ்ப்பட்டனவே யாகும். இத்தகைய காலத்தில் செவ்வி பொருந்தத் தோன்றியது நம் அருணகிரிநாதர் இயற்றியருளிய திருப்புகழ் நூல். திருப்புகழ் ஒரு புத்தம் புதுச்சுவையைத் தமிழிலே பிறப்பித்து அதைச் சிறப்பிக்கலாயிற்று. கற்றோர்க்கும் மற்றோர்க்கும் உண்ண உண்ண உவட்டா அமிழ்தாய் ஐம்புலன்களும் மனமென்னும் ஆறுவது புலனோடு ஒருமையுறும்படி அருமை ஒலிகளைப் பெற்று மிளிர்கின்றது. பொருள் தெரியாதவர்களும் திருப்புகழைக் கேட்டுக் களிக்கத் திளைக்கின்றனர். நாடக

அரங்கங்களிலும் பாகவதப் பிரசங்க மேடைகளிலும் திருப்புகழ்ப் பாக்களை மகாஜனங்கள் கேட்கின்றார்கள். கணிகையர் கச்சேரிகளிலும் திருப்புகழை விரும்புகின்றனர். திருப்புகழை மட்டும் தனியே ஓதும் நியமத்தைக் கொண்டிருக்கும் சங்கங்களும் சென்னைமாநகரில் தோன்றியிருக்கின்றன. இவை அனைத்தையும் சற்று உற்றுப்பார்க்கில், அருணகிரி நாதருடைய பெருமையும் அவர் தமிழர் மனத்தைக் கவர்ந்துள்ள தன்மையும் நன்கு விளங்கும். இத்தகைய பெரியார் எந்நாட்டிலே எந்நகரிலே யாருக்கு எப்போது பிறந்தாரென்றும், எங்ஙனம் கல்வி பயின்றாரென்றும், எங்ஙனம் வாழ்க்கையைச் செலுத்தினாரென்றும் எங்ஙனம் அறுமுகப்பெருமான் அருளைப் பெற்றனரென்றும், ஒவ்வொருவரும் அறிய அவாவுகின்றனர். அவற்றைக் குறித்து எமக்கெட்டிய வரையில் சிலவற்றைக் கூறுவோம்.

ஆராய்ச்சி

நம் நாட்டுப் புலவர் வரலாறு ஒன்றேனும் சரியாகக் கிடைக்கவில்லை. அதற்குக் காரணம் சில உள. அவைகளுள் முக்கியமான காரணம் நம்மவர்கள், பெரியோர்கள் சரித்திரத்தையன்றி, மற்றவர் சரித்திரத்தை விரும்பாமையே யாகும். எவற்றைக் கூறினும் அவர், முன்பின்றியே கூறுதல் வழக்கம். அவ்வழக்கத்தையே பெருமக்களும் விரும்பி வந்தனர். தற்புகழ்ச்சி என்னும் குற்றத்திற்குப் பயந்தும், அநித்தியமான பொருளை விரும்பலாகாதென்னும் தத்துவ ஞானத்திற்குக் கட்டுப்பட்டும், நான் எனது என்னும் அகங்

காரமமகாரங்களைக் காட்டலாகாதெனினும் அவையோர் சொல்லுக்கு அடங்கியும் இருந்தாராதலின், அவர்களியற்றிய நூல்களில் தம்மைப்பற்றிய குறிப்பு யாதொன்றும் பொதுவாய்க் காணப்படுவதில்லை. அவர்கள் கடவுளர் மேலன்றி வீரர்மேலும் பாடுதல் செய்யார். அங்ஙனம் செய்ய நேரினும் மக்கட்டன்மைக்கு மேலும் ஒரு தெய்வத் தன்மையை ஏற்றியே யாதும் சொல்லத் துணிவர். இந்த விளக்கக் கர்ணபரம்பரையாக வழங்கி வரும் ஒரு சிறிய நிகழ்ச்சியை யெடுத்துக் கூறுவோம். அதிவீரராமபாண்டியா ரென்னும் கவிஞர், நைடதமென்னும் நவரசம்பொருந்திய காவியத்தைப் பத்து அழகும் பொருந்தப்பாடி முடித்துத் தம் தந்தையாராகிய குலசேகர வழுதியினிடத்துச் சென்று காட்ட, அவர் அதனைத் திருப்பிக் கூடப் பாராது, ‘அழிந்துபோகும் நம்மைப்போன்ற ஒரு மன்னவனையா பாடினாய்? அழியாத இறைவனை யன்றோ பாடல் வேண்டும்’ என்று புகழ்ச்சி கேட்க வந்த மைந்தனை இகழ்ச்சிசெய்து அவன் மகிழ்ச்சியைக்கொன்றார் என்பதும், அதன்பின்னர் அதிவீரராமபாண்டியர் தமதந்தையாரை மகிழ்விக்கவேண்டித் திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதியை அன்புச் சுவை பொருந்தப் பாடி முடித்துத் தந்தைக்குக் காட்ட அவர் அதனை இறைவன்மேல் பாடப்பட்ட நூலென்று அறிந்து மகிழ்ச்சி பொங்கிக் கையிலேந்திக் கண்ணிலொற்றிக்கொண்டு தம் புதல்வர்பா லளித்துப் படிக்கச் செய்து கேட்டுக்கொண்டு வருகையில்,

உரகா பரணத் திருமார்பும்
 உமையொப் பனையாள் இடப்புறமும்
சிரமா லிகையும் புரிசடையும்
 செய்ய வாயும் கறைமிடறும்
வரதா பயமும் மழுமானும்
 வயங்கு கரமும் மலரடியும்
கருவார் புரியான் வெளிப்படுத்திக்
 காட்சி கொடுத்து நின்றனனே.

என்னும் பாட்டை மைந்தர் படித்தபொழுது தம் வசமற்றுப் பரவசப்பட்டுத் தமது மைந்தரை இருகரத்தாலும் தழுவி மார்போடணைத்துக் கொண்டாரென்றும், அதன் பின்னர் அதிவீரராமபாண்டியர் கூர்மபுராணம் முதலிய சிவநூல்களையன்றி வேறு நூல்களைப் பாடாதொழிந்தனர் என்றும் கூறுவர்.

இனிப் புலவர் சரித்திரத்தை ஆராயப் புகுவோர்க்கு இடையூறு புரிவோர் பலர். அவர்களுள் காலத்தை நீட்டித்துச் சொல்லுவதால் சிறப்பு அதிகமென மயக்க உணர்ந்து, ஆழ்வார்கள் காலத்தைக் கிருதயுகத்திற்கு இழுத்துச் செல்லுகின்றவர்களும் 'இவருக்கு முன் அவர்' 'அவருக்கு முன் இவர்' என்று முதலிலே தெரிந்துகொண்ட பொருளையே உண்மை எனக்கொண்டு ஆராய்ச்சியால் ஏற்படும் உண்மைகள் தம் கொள்கைகளுக்கு முரண்பட்டிருந்தால் அவற்றைக் கேளாது மகத்துச் சனியாக முற்றும் வெறுப்பவர்களும், சாதி, சமயம் முதலிய படுகுழியில் விழுந்து ஆராய்ச்சிக்கரை யேறினால், குலத்திற்குக் குறை வருமோ?

சமயத்திற்குச் சங்கடம் நேருமோ? என்று அஞ்சி ஒதுங்குகின்றவர்களும், அவையே காரணமாக இல்லாததைப் புனைந்தும் உள்ளதை மறைத்தும் எழுதி, உண்மையை மறைக்கின்றவர்களும் எனப் பலதிறத்தருளர். இவற்றையெல்லாம் ஒருங்குவைத்து உண்மையைக் கொழித்துச் சொல்லுவது கல்லில் நார் உரிப்பதுபோலத் தோன்றும். இது மெய், இது பொய், இது புனைந்துரை, இது உயர்வு நவிற்சி என்று நுணுகி அறிதல் சாலவும் அரிதெனினும் அருணகிரிநாதர் வரலாற்றைக் கர்ண பரம்பரையை ஒட்டியும் ஆராய்ச்சி முறையைப் பற்றியும் ஒருவாறு எடுத்துக் கூறுவாம்.

அருணகிரிநாதரும் பட்டினத்துப் பிள்ளையாரும்

அருணகிரிநாதர் இப்போது வட ஆர்க்காடு ஜில்லாவைச் சார்ந்த திருவண்ணாமலை என்னும் சிவநகரிலே அவதரித்தவர். இவர் குலம் தேவகணிகையர் குலம் என்று சொல்லப்பட்டுளது. இவருடன் ஓட்டுடன் பற்றின்றி உலக போகத்தைத் துறந்த பட்டினத்துப் பிள்ளையார் திருக்குமாரரென்று சிலர் கூறுவர். அது பொருந்தாது. ஏனெனில் பட்டினத்துப் பிள்ளையார் இருந்தகாலம் வரகுண பாண்டியனுக்குப் பிற்பட்டதாகவும் நம்பி ஆண்டார் நம்பிக்கு முற்பட்டதாகவும் தெரிதலால் ஏறக்குறைய ஆயிரம் ஆண்டிற்கு முற்பட்டது என்பது தெளிவாம். அருணகிரிநாதர் காலம், பிரபுட தேவராயனென்னும் அரசனுடைய காலமென்பது வெளிப்படை. அவன் ஏறக்குறைய நானூறு ஐம்பது ஆண்டுகளுக்குமுன் இருந்தான். இங்ஙனமிருத்தலின்,

அருணகிரிநாதர் பட்டினத்துப் பிள்ளையாருக்குப் புதல்வராதல் எங்ஙனம் பொருந்தும்? அன்றியும், 'பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்போல் ஆரும் துறக்கை யரிதரிது' என்று தாயுமானவராலும் பிறராலும் பாராட்டப்படும் பெருந் துறவையுடைய பட்டினத்தார் ஒரு கணிகைமாதைக் கண்டு அறிவு மயங்கினாரென்றும், உலக இயலுக்கு மாறாக அவர் வீரியத்தை உண்டதனால் குழந்தை பிறந்தது என்று கூறுதலும் அசம்பாவிதமாம் ஆதலின், அருணகிரிநாதர் பட்டினத்தார் புதல்வரல்லர் என்பது கடைப்பிடிக்க.

அருணகிரியார் கல்வித்திறம்

அருணகிரியார் கல்வி கற்ற வரலாற்றைப் பற்றியும் இளம்பருவச் செயல்களைப் பற்றியும் நமக்கு யாதும் தெரியவில்லை. ஆனால், அவர் அருளிச்செய்த நூல்களை ஆராய்ந்து பார்க்குமிடத்து அவர் செந்தமிழ்ப் புலமையே யன்றி வடமொழிப் புலமையும் வாய்ந்தவரென்பது தெளிவாகப் புலப்படும். வடமொழியைக் கல்லாதவரும் சில வடசொற்களைப் பயிற்சி வசத்தால் தம் நூலில் பெய்துரைக்கலாமாதலின், அதுபற்றி அருணகிரியார் வடமொழியில் வல்லுனர் என்பது பொருந்தாது எனின். அற்றன்று; புலமையினாலேயன்றிப் பயிற்சி ஒன்றால் மட்டும் எடுத்துக் கூற முடியாத வடமொழிச் சொற்களும் தொடர்களும் திருப்புகழில் நிறைந்திருக்கிறபடியால் அவருக்கு வடமொழிப் புலமை இருந்தே தீரவேண்டும் என்பது துணியப்படும்.

உலகவாழ்வில் வெறுப்புற்றமை

இவரைப் பெற்ற அன்னை இவர் இளம் பருவத்திலேயே உயிர் துறந்தார். இவர்பால் பேரன்பு வைத்து இவரை ஆதரித்து வந்தவர் இவரது தமக்கையார். அவ்வம்மையார் அருணகிரிநாதருக்கு வேண்டும் உணவு, உடை முதலிய எல்லாத் துப்புரவுகளையும் குறைவறக் கொடுத்து வந்தனர். அவற்றைப் பெற்று இனிது வாழ்ந்தும், கல்விச் செருக்கால் கவிபாடியும், கணிகையர் மரபிலே தோன்றினமையால், இயற்கையாக ஏற்படும் இசை வுணர்ச்சியாலும் செயற்கையாய்த் தெரிந்துகொண்ட இசை ஞானத்தாலும் வாலிபப் பருவத்தாலும் சிற்றின்பப் பிரியராய் விளங்கினர். அதனால் கணிகையர் வீடே இவருக்கு உறைவிடமாயிற்று. அவர்களும் இவரிடம் அன்பு பாராட்டுவார்போல் அபிநயித்து வந்தனர். அழகு, கல்வி, இசை, இன்குரல் முதலிய எல்லாம் கணிகையர் வீட்டில் சிறப்படையா. பொருள் ஒன்றே அங்குப் புகழைக் கொடுப்பது ஆதலின், கல்வி முதலியவற்றால் சிறந்திருந்த அருணகிரியார் கணிகையர்க்கு அவ்வப்போது பொருள் வழங்க வேண்டியதாயிற்று. அவர் விரும்பியபடி எல்லாம் அவர் அன்பிற் சிறந்த தமக்கையார் மனங்கோணாதபடி தம்பியாருக்கு அளித்து வந்தார். இவ்வாறு தமக்கிருந்த பொருளையும், தம் தமக்கையாருக்கிருந்த பொருளையும் அழித்தார். பொருள் முட்டுப்படவே வேசையர் இவருக்குக் கட்டுப்படாராயினர். முன்னரே இவரிடத்தில் தொகை தொகையாகப் பொருள் பெற்ற

வரும், இவர் உண்ட மிச்சிலை உண்டவரும், உம்மைப் பிரிந்து வாழேமென்று விண்டவரும் எல்லாரும் முகங் கொடுத்துப் பேசாது கடுகடுத்து நின்றனர். அப்பொழுதும் அவர்பால் வைத்த பாசத்தால் அவர் தம் செய்கைகளுக் கெல்லாம் ஒவ்வோர் வழியாகக் கருத்தை அமைத்து, எவ்வாறேனும் தம் தமக்கையாரை வருத்திச் சிறிது பொருள் பெற்றுக் கணிகையர் வீடு சென்று மீள்வர். இவ் வாறு சிறிது காலம் நடைபெற்று வந்தது. தமக்கையார் அணிகலங்களும் ஒழிந்தன. வீடும் வெறும் வீடாயிற்று. அந்நிலையில் ஒருநாள் அருணகிரியார் கணிகையர்களுக்குக் கொடுக்கப் பொருளில்லாது இளைத்து அல்லலுற்றுத் தமக்கையாரிடஞ் சென்று 'அம்மையே எனக்குப் பொருள் வழங்குக; நான் கணிகை இல்லத்துக்குச் செல்லல் வேண் டும்' என வற்புறுத்தினர். அவ்வம்மையார், தம்மிடம் பொருளில்லாமையை எவ்வளவு எடுத்துக் கூறியும் இசைந் திலர். அதன்மேல் அச்செல்வி மனம் உளைந்து சகோதரனை நோக்கி, 'நீ தாசி வீட்டிற்குச் சென்று அநுபவிக்கும் சுகத்தை என்னிடம் அநுபவிப்பாயாக. நானும் பெண் பால். உனக்கும் எனக்கும் தாய் ஒருத்தியேயாயினும், தந்தையர் வெவ்வேறவர். ஆதலின், அதனால் குறையில்லை. உன்னுடைய துன்பத்தை இவ்வாறு நீக்கிக் கொள்வதில் யாதும் தடையில்லை' எனக் கூறினர். இங்ஙனம் அவ் வம்மை வெறுத்துக் கூறிய அச்சுடுசொல் இடி இடித்தாற் போல அருணகிரியார் செவியில் பட்டு அம்புபோல் உடம

பில பட்டுருவியது. உடனே இரண்டு செவிகளையும் பொத்திக்கொண்டு 'இத்தகைய தகாத கொடுமொழிகளை என்னைப் பெற்ற தாயினும் பெரிய தாயாகிய தமக்கை சொல்வதற்குக் காரணமாக விருந்தது என்னுடைய அறிவற்ற செயலன்றோ? இதனால் நான் பழிக்கும் பாவத்திற்கும் ஆளானேன். இத்தகைய பெரும்பாவி உயிர் தரித்திருத்தல் உலகமாதாவுக்குப் பெரும் பாரமே. ஆதலின், உடனே உயிர் மாய்த்துக் குற்றத்தை ஒழித்தலே எனக்குக் கருமமும் தருமமுமாகும். இன்றேல் என்னைப்போலும் இவ்வுலகத்தில் பாவிகள் யார் உளர்? என்று துணிந்து அவ்விடம் விட்டுத் துண்ணென அகன்றார்.

உபதேசம் பெற்றது

தம் இன்னுயிரை மாய்த்துக் கொள்ள வேண்டுமென எண்ணிய அருணகிரிநாதர் வல்லாள மன்னனால் முன்னாகக் கட்டப்பட்டுச் சிறந்திருக்கும் கோபுரத்தின் மீதேறித் தலைகீழாக விழுந்தார். இங்ஙனம் விழுந்தவரை முனிவரொருவர் தமது திருக்கரத்தில் தாங்கிக்கொண்டனர். அருணகிரியார் முனிவர் பெருந்தகையை நோக்கி, 'அறுமுகப்பெருமானே ஓர் உருவெடுத்தாற்போலத் தோன்றிய ஐயனே! நான் ஒரு பெரும்பாவி; என்னைத் தேவரீர் புனிதமான திருக்கரத்தில் தீண்டலும் தகாது. நான் செய்த கொடுஞ்செயல்களை எண்ணுந்தோறும் என்னுடைய உடலைச் சித்திரவதை செய்து தீயிலிட்டாலும் சாலாது எனத் தோன்றுகிறது. ஆதலின், இக்கோபுரத்தின் மீதேறிக் குப்புறவிழுந்து, உடலைச் சிதைக்

கத் துணிந்தேன், அத்தகைய நாயினுங்கடைப்பட்ட புழுத் தலைச் சிறியேனை அடிகளாகிய தேவரீர் காத்தது பாம்புக் குப் பாலூட்டி வளர்ப்பதுபோலாகும். ஆகவே, அருள் செய்து எனக்கு விடை கொடுங்கள்; நான் சென்று என் னுயிரை மாய்த்துப் பூபாரத்தை யொழிப்பேன்' என்று வேண்டி நின்றனர். மானிடக்கோலந் தாங்கி வந்த ஆறு முகப்பெருமான் அதுகேட்டுப் புன்னகைசெய்து, 'கண்மணி! மனம் வருந்தவேண்டா; உன் குற்றத்தை நீ உணர்ந்ததே உனக்குத் தக்க தண்டனையாகும்; இனிப் புனிதனாவாய்; கணிகையர் உறவிலே மிக்க விருப்புடையவனாய்த் திரிந் துழன்றாயேனும் முருகனிடத்தில் உண்மையன்புபொருந்தி யிருந்தனை; அவனை மறவாது சிந்தித்தாய், வந்தித் தாய், வணங்கினாய். ஆதலின், நீ என்றும் இருத்தற்கு உரியை, இறத்தற்கு உரியையல்லை. இன்றுதொட்டு முரு கப்பெருமானை வாயாரப்பாடுந் திருத்தொண்டைக் கைக் கொள்வாயாக' என்று அருள் சுரந்து, அவர் நெற்றியிலே திருநீறிட்டுத் திருமந்திரத்தைச் செவியிலோதி, ஜபமாலை யொன்றைக் கையிலே தந்து, 'சும்மா விரு' என்னும் மௌனநிலையையும் உணர்த்தித் திருவுருக்கரந்தனர்.

அருணகிரியார் தம்மைக் காத்தருளித் தமக்கு ஞானோபதேசம் புரிந்தவன் அருந்தவராலும் காணுதற் கரிய அருட்பெருங் கடலாகிய ஆறுமுகச்செல்வனே யென் றுணர்ந்து, 'அந்தோ! என்னுயிரினும் இனிய என்னப்பனை யென்று காண்பேன்? என் கண்களால் இன்னும் சிறிது

நேரம் அவன் அழகைப் பார்த்துக் களியாது ஒழிந்தேனே! அவன் திருவடிமலரைச் சிரோபூஷணமா யணியாதொழிந்தேனே! அவன் அன்பு ததும்பும் இன்பவதனத்தை அழகு தவழும் புன்னகையோடும் என்னுள்ளத்தில் கொள்ளை கொள்ளாது ஒழிந்தேனே!" என்று பலவாறாகக் கூறியரற்றி மெய்யெல்லாம் மயிர்க்கூச்செறியக் கண்களில் அருவி பொழிய, வாய்குழற, நாத் தழுதழுப்பத் தஞ்செயலற்று அவ்வாசிரியமூர்த்தி மறைந்த திக்கை நோக்கி நோக்கி அழுவாராயினர். அவர் தோன்றியவிடத்தைச் சுற்றிச் சுற்றி வலம் வந்தார். அம்மையே! என்னையாட்கொண்ட அமுதே! அப்பனே! ஒப்பிலாப் பெருந்தகையே! நாயேன் உன்னை யொழிய ஒருவரையும் நம்பேன், நீயே யென்னை யாளுடையானென்று சொல்லிக் கோபுரவாயிலிலேயே தமக்குறைவிடமாகக் கொண்டு அங்கேயே தங்கி நிஷ்டைகூடி நின்றார். அவரைப் பற்றியிருந்த தொழுநோயும் அவரைத் தொழுநோயாய் விட்டு விலகியது. அவர் முகத்தில் அன்பு மிளிர்ந்தது; கண்களில் அருள் வழிந்தது; உடம்பு தூய்மையடைந்து ஒளிர்ந்தது.

அருணகிரியாரின் அன்புள்ள தமக்கையார் தமது தம்பியாருடைய வரவு காணாராய் உளம் வருந்தித் தாம் சொன்ன சொல்லை நினைந்து அவரைத் தேடிக்கொண்டு தாசிகள் வீடுதோறுஞ் சென்றார். அவரை எங்குங் காணாராய்க் கோயிலுக்குச் செல்ல, அவர் அங்கே யிருத்தலைக் கண்டு அவரைக் குறுகினார். அப்போது அருணகிரியார்

எழுந்து அவரது அடிகளில் விழுந்து, வணங்கி, 'அன்னையினும் பன்மடங்கு அன்புடைய தமக்கையே! உம்மாலன்றோ இன்று நான் நற்கதி யடைந்தேன், இனித் துறவியாகவே காலங் கழிப்பேன், யாதற்கும் வருந்தாது நீர் வீடு சென்று நம் முருகவேள் திருவடியில் அன்பைப் பதித்துத் துதித்து வருவீராக' என்று சொல்லி அவரைத் தேற்றி யனுப்பினர். அவ்வம்மையாரும் அவருடைய நிலைமையைக் கண்டு மகிழ்ந்து முருகன் திருவருளைப் புகழ்ந்து வீடு சென்றனர்.

திருப்புகழ் பாடியது

அருணகிரிநாதர் குருமணியாக எழுந்தருளிய குமரவேள் தமக்குக் கட்டளையிட்டவாறே அவருடைய புகழைப் பாடுதற்கு விரும்பி எவ்வாறு பாடுவேனென்று திகைத்திருக்கையில் குருமணியினது புன்னகை மனத்திலே முளைத்துத் தோன்ற, 'முத்தைத்தரு பத்தித் திருநகை' என அடியெடுத்துப் பாடுவாராயினர். அன்றுமுதல் திருப்புகழ் பாடுதலையே தமது திருப்பணியாகக் கொண்டார். அருணையைச் சுட்டிப் பல சந்தக்கவிகளை இயற்றியதோடு அமையாது, பல திவ்ய ஸ்தலங்களுக்குஞ் சென்று திருப்புகழ் பாடத் தொடங்கினர். இங்ஙனம் திருப்பரங்குன்றம், மதுரை, திருச்செந்தூர், திருவாவினன்குடி, திருவேரகம், திருப்போரூர், திருத்தணிகை, சீகாளத்தி முதலிய பல க்ஷேத்திரங்களுக்குஞ் சென்று, பாடிக்கொண்டு வருவாராயினர். அங்ஙனம் வருவார்க்கு வயலூரில் முருகவேள்

தரிசனந் தந்தருளினார். அதனாலவர் அப்பதியைக் குறித்துப் பலவிடங்களிலும் மிகுதியாகப் பாடுவாராயினர். அப்பதியிலே தங்கியிருந்தபோது அவரைச் செவ்வேள் விராலிமலைக்கு வாவெனப் பணித்தனர். அவ்வாறே அருணகிரியார் விராலிமலைக்குச் சென்று முருகனைத் தொழுதனர்.

ஈழநாட்டிற்குச் சென்று கதிர்காமம் முதலிய க்ஷேத்திரங்களையுந் தரிசித்துப் பாடிப் பெரும்புகழ் பெற்றுப் பாவலரும் நாவலரும் வணங்குமாறு பரஞான திலகராய் விளங்கியிருந்தார்.

வில்லிபுத்தூரார்

அருணகிரிநாதர் இவ்வாறு வாழ்ந்துவருங்கால் வில்லிபுத்தூரரென்னும் புலவர் அண்ணாமலையை யடைந்தனர். அவர் திருமுனைப்பாடி நாட்டிலுள்ள சனியூரிலே வீரராகவாசாரியருக்குப் புதல்வராகப் பிறந்தவர்; கொங்கர் குலபதியாகிய வக்கபாகை நாட்டரசன் வரபதியாட்கொண்டான் சமஸ்தான புலவர்; வடமொழியிலும் தென்மொழியிலும் வல்லவர்; பாவன்மை மிக்கவர். அவர் பலவிடங்களுக்குஞ் சென்று அவ்வவ் விடங்கடோறுமுள்ள செந்தமிழ்ப் புலவர்களோடு எதிர்த்து வாதுபுரிந்து கடுவினாக்களை யெழுப்பி விடை பிறக்க இயலாதாருடைய செவிகளைத் தோண்டிக்கொண்டு அறுத்தல் வழக்கம். அத்தகையார் திருவண்ணாமலைக்கு வந்ததும் அங்குள்ள சிறந்த புலவர் யாரென வினவினார். அனைவரும் ஒரேபடியாக அருணகிரிநாதரே அண்ணாமலைக்கு உண்ணாவமுதாய் விளங்கும் உத்தமப் புலவர் என

இசைத்தனர். அதைக்கேட்ட வில்லிபுத்தூரர் அருணகிரியார் பாடிய சில பாக்களைக் கேட்டு அவைகளுக்குக் குற்றங் கூறத் தொடங்கினார் அன்றியும் அருணகிரியாரோடு தமக்கு வாதுபுரிய விருப்பமுள்ளதாகவும் அறிவித்தனர். அதுகேட்ட பெரியோர் சிலர் வில்லிபுத்தூரர் செருக்கு மொழிகளைச் செவிசுட்டக் கேட்டு அருணகிரியாரபாற் சென்று வில்லிபுத்தூரர் இறுமாப்பை யடக்கவேண்டு மென்கக் குறையிரந்து வேண்டிக்கொண்டனர் அவரும் அதற்கு இசைய இருவரும் ஒரு மன்றத்தில் தங்கி வாது செய்யத் தொடங்கினர் அப்போது அருணகிரிநாதர் வில்லி புத்தூரரை நோக்கித் தாம் பாடும் ஒரு செய்யுளுக்கு உரை கூறிவிட்டால் தாம் தோற்றுவிட்டதாக ஒப்புக் கொள்ளலா மென்று கூறினர். வில்லிபுத்தூரர் அதற்குடன்பட்டு அருணகிரியாரை அப்பாட்டை விரைந்து கூறும்படி கேட்ட னர். அருணகிரிநாதர் கந்தரந்தாதி யென்னும் பெயரை யுடைய தமது நூலிலேவரும் ஐம்பத்து நான்காவது செய்யு ளாகிய,

'திதத்தததத் திதத்த திதிதாதை தாததுத தித்தத்திதா
திதத்தத்தத திதத திதித்தித்த தேதுத்து தித்திதத்தா
திதத்தத்தத் திதத்தைத தாததி தேதுதை தாதத்து
திதத்தத்தத திதிதிதி தீதீ திதிதுதி தீதொத்ததே'

என்னும் பாட்டை எடுத்து இயம்பினர் அதற்குப் பொருள் கூற இயலாது வில்லி மயங்கினர் உடனே அருணகிரியார் வில்லி செருக்கடங்கி ஒடுங்கியிருப்பதைக் கண்டு, புலவரே!

கவி யொருவர் பாங்கன்று; எறும்பும் தன்கையால் எண் சாண் என்பதை உணர்ந்து இனியேனும் இத்தகாத செயல்களை விடுத்தொழிவீராக என்று அறிவு புகட்டினர். வில்லிபுத்தூராரும், அருணகிரியாருடைய பரந்த புலமையும் விரிந்த உள்ளத்தையும் கண்டு கழி மகிழ் வெய்தி அவருடன் அளவளாவி அவர் பாடிய திருப்புகழ்ப் பாக்களில் பொருந்தியுள்ள சந்தப்பொலிவையும் சொல்நயம் பொருள் நயங்களையும் பாராட்டிச் சென்றனர்.

இந்நிகழ்ச்சிக்கு ஆதாரமாக இரண்டு கவிகளைக் காட்டுவர். அவை வருமாறு:

'குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டியனிங் கில்லை
குறும்பியளவாகக் காதைக் குடைந்து தோண்டி
எட்டினமட் டறுப்பதற்கோ வில்லி யில்லை
இரண்டொன்றா முடிந்து தலையிறங்கப் போட்டு
வெட்டுதற்கோ கவியொட்டக் கூத்தனில்லை
விளையாட்டாகக் கவிதைதனை விரைந்து பாடித்
தெட்டுதற்கோ அறிவில்லாத் துரைகளுண்டு
தேசமெங்கும் புலவரெனத் திரியலாமே'

'காசுக்குக் கம்பன் கருணைக் கருணகிரி
ஆசுக்குக் காளமுகி லாவனே—தேசுபெறு
மூழுக்குக் கூத்த னுவக்கப் புகழேந்தி
கூழுக்கிங் கௌவையெனக் கூறு.'

முதற்கவி உலகவியலுக்கு முரண்பட்டிருத்தலாலும் யுக்திக்குப் பொருந்தாமையாலும் அவ்வாற்றே ஒப்புக்கொள்ளத்தக்கதாகக் காணப்படவில்லை.

இனி, வில்லிபுத்தூரார் திருவண்ணாமலை ஆலயத்தின் வழியாகச் செல்லுபவர் அதனைத் தரிசிக்கலாகாதென்னும் கருத்தால் திரையிட்டுச் சென்றனரென்றும், அதனை அறிந்த அருணகிரியார்,

'புரத்தைத்தர சிங்கத்தைப் போர்ப்பாகக் கூற்றை
எரித்தவர்க்குத் தாச னெதிரே—தரித்தபுகழ்
தேனகாட்டுஞ் சோணகிரித் தேசிகனைப் போற்றாமல்
ஏன்கெட்டுப் போனா னிவன்.'

என்னும் பாடலைக் கூறினரென்றும், அதனால் வில்லி கண்ணிழந்தனரென்றும், இழந்த கண்களை அருணகிரியார் அருள் செய்ததனால் மீண்டும் பெற்றனரென்றும் அதன் பிறகே வில்லிபுத்தூரார் சிவஸ்துதி விரவிய மகாபாரதம் பாடினாரென்றும் கூறுவர். இவைகளுக்கெல்லாம் தக்க ஆதாரமில்லை.

சம்பந்தாண்டான்

சம்பந்தாண்டான் என்னும் பெயருடைய தேவி உபாசகன் ஒருவன், அக்காலத்தில் திருவண்ணாமலையில் வாழ்ந்திருந்தான். அவன் செந்தமிழ்ப்புலமையு முடையவன்; தன்னினும் சிறந்தார் யாரு மிலரெனத் தருக்கித் திரிபவன்; அரசன் அபிமானமும் பெற்றவன். அவனுக்கு அருணகிரியார் புகழிலும் நன்மதிப்பிலும் அழுக்காறுண்டாயிற்று. எங்ஙனமேனும் அவருடைய பெருமையைக் குறைக்கவேண்டுமென அவன் அரசன்பாற் சென்று,

அருணகிரிநாதர் முருகவேளை அரசனுக்குத் தரிசனஞ் செய்
விக்க வேண்டுமென்றும் கூறினன். மன்னனாகிய பிரபுட
தேவன் இவ்விருவருடைய பகைமை தலைக்கீடாகவேனும்
முருகவேளைத் தரிசிக்கலாமென ஆவல்கொண்டு அந்
நிகழ்ச்சிகளை அருணகிரியாருக்கு அறிவித்தான். அருண
கிரியாரும் அதற்கு உடன்பட்டார். நாள் ஒன்று குறிக்கப்
பட்டது. குறிக்கப்பட்ட இடத்தை வேந்தனும் அடைந்த
னன். முன்னர் அருணகிரியார் முருகவேள் காட்சியை
அரசனுக்கு அளித்தற்காகத் தாம் செய்யவேண்டிய
சடங்குகள் எல்லாவற்றையும் முடித்து அறுமுகப்பெரு
மான் அருள்நோக்கி நின்றனர். முருகவேளோ காட்சி
தரவில்லை. அவ்வாறு தாராமைக்குக் காரணம் சம்பந்தாண்
டான் வேண்டுகோளால் தேவியார் முருகவேளைத் தம்மடிமீ
திருத்தி விளையாட்டயர்ந்ததேயாம் என்பதை உணர்ந்து
உடனே மயிலைப் பாடுவாராயினர். பாடலும் மயிலானது
தேவியார் முன்னின்று நடனம் புரிந்தது. அக்காட்சியில்
அம்மை யீடுபட்டு இருப்பக் குமரன் அம்மை மடியினின்
றுந் தாவி மயிலின்மீது ஏறுதலும் மயில் பறந்துசென்று
முருகனுடன் அருணகிரியாரிடம் சென்றது. அரசனும்
முருகன் காட்சி பெற்றனன்.

பின்னர் சம்பந்தாண்டான் வேண்டுகோளால் அர
சன் அருணகிரியாரைத் தேவலோகத்துப் பாரிசாத மல
ரைக் கொணர்ந்து கொடுக்கும்படி வேண்டிக்கொண்டான்.
அப்பெருந்தகையாரும் அதற்கு ஒருப்பட்டுத் தம்முடைய

உடலத்தை மலையில் ஓரிடத்தில் அடக்கஞ்செய்து கிளி உருக்கொண்டு தேவலோகம் சென்று இந்திரனிடம் பாரிசாத மலரைப் பெற்றுக்கொண்டு திரும்பினர். இதற்கிடையில் சம்பந்தாண்டான் அருணகிரியார் தற்கொலை புரிந்து கொண்டாரென அரசற்குணர்த்தி அவர் உடலைச் சோதிக்குமாறு தூண்டி அரசனைக் கொளுத்திவிடும்படி செய்தான். மீண்டு வந்த அருணகிரியார் தமது உடலைக் காணாது திருவருளை யெண்ணி அரசனைக்கண்டு, தமது நிலையை உணரும்படி செய்து அந்நிலையிலேயே குமரவேள் தியானத்தமர்ந்து, பன்னாள் நிட்டைகூடி நின்று அவன் திருவடிகளில் இரண்டறக் கலக்கும் சுத்தாத்துவித முத்திப்பேற்றை எய்தினர்.

இனி முருகன்காட்சி பேரொளியுடைத்தாயிருந்தமையான், அரசன் கண்ணிழந்தானென்றும் அக்கண்ணை மீண்டும் பெறவே, பாரிசாதமலரை விரும்பினனென்றும் கிளியுருப்பெற்ற அருணகிரியார் அவ்வடிவத்துடன் தேவி திருக்கரத்தில் தங்கினரென்றும் பலவேறு வகையாகக் கூறுவாருமுளர். இவை யனைத்தும் கர்ணபரம்பரைச் செய்திகளேயன்றி வேறல்ல. இவற்றிற்கு ஆதாரமாகச் சிலர் எடுத்துக்காட்டும் அகச்சான்றுகளுக்குக் கருத்து வேறாதலும் பிறசான்றுகள் கர்ணபரம்பரைச் செய்திகளேயே யொட்டியனவாதலும் நுண்ணுணர்வான் அறிந்து கொள்க. அருணகிரியார் தமக்கையாரும் சிறிதுகாலஞ் சென்றதும் இறைவன் திருவடி நிழலெய்தினர். விரிக்கிற் பெருகும்.

அருணகிரிநாதர் பெருமை

அருணகிரியார் பெருஞ்சிறப்பிற்கு முக்கிய காரணமாயுள்ளது அவர் தமிழிலே புதுவதாக ஏற்படுத்திய சந்தமேயாம். இவருக்கு முன் தொல்காப்பியத்தின் கண்ணே கூறப்பட்ட நூறு வண்ணங்கள் பொருந்திய தமிழ்ப்பாடல்கள் இருந்தனவேயன்றி இவர் உண்டாக்கிய தத்த, தந்தன, தய்ய முதலிய வண்ணங்கள் இருந்தில. பாட்டுக்களுக்கு உயிராகவுள்ளது ஒலியென்பதும், அவ் வொலிகளின் அமைப்பே செவிக்கும் அந்தக்கரணங்களுக்கும் பயன்பட்டு உள்ளுணர்ச்சியைத் தட்டி யெழுப்பும் என்பதும் சான்றோர் கொள்கை. இதனாலன்றே வேதம் ஓதுதலில் சிறிதும் பிறழ்வுறுதலாகாதென்றும் அங்ஙனம் வரின் ஓதுவோர்க்கும் ஓதுவிப்போர்க்கும் தீங்குகள் நேரிடுமென்றும் நியதி பிறந்திருக்கின்றது. இவருக்குப் பின் இவரைப்போன்று சந்தமமைத்து ஆயிரக்கணக்கான பாடல்களைப் பாடினவர் திருப்புகழ்சாமியென்னும் தண்டபாணிசாமிகள். அவர் பாட்டுகள் வடமொழிக் கலப்பு பெரும்பான்மையுமின்றி யிருத்தலின் வடமொழிக் கலப்பின்றிச் சந்தமமையாது என்பார் கூற்றை மறுப்பதற்குத் தக்க ஆதாரமாய் இலங்குகின்றது. ஆயினும் அவர் பாட்டுகளுக்கும் அருணகிரியார் பாட்டுகளுக்கும் உள்ள வேற்றுமை நோக்கின் அஜகஜாந்தரமாகும். ஆதலின் அருணகிரியாரைப் போலப் பல சந்தங்களை அமைத்துப் பாடிய புலவர் ஒருவருமிலர் என்பது

துணிபு. இதுவே இவருக்கு உரிய தனிச்சிறப்பு. இவர் சந்தங்கள் ஏறக்குறைய நூற்றுக்குமேல் வேற்றுமையுள்ளன.

இரண்டாவதாக இவருக்கு உள்ள பெருமை இவரடைந்த ஞானநிலையாம். இவர் ஞானநிலையைக் குறித்தே சிவானுபவப் பெருஞ்செல்வராகிய தாயுமான சுவாமிகள் தம் நூலிலே ஆறு இடங்களில் விதந்தோதி யிருக்கின்றார். அவர் பாடியருளிய 'சும்மாவிருசொல்லற' என்னும் அரும்பொருளைப் பலவிடங்களிலே தாயுமானவர் 'சும்மாவிருக்கச் சுகமுதயமாகுமே' என்றும், 'சும்மா விருக்கும் சுகம்' என்று கூறியருளினார். சும்மா விருக்கும் மௌன நிலையை அருணகிரியாருக்கு முன் வடமொழியில் சில சிறு உபநிடதங்களும் கூறியிருப்பினும் இவரைப்போல அதனை வற்புறுத்திப் பறையறைந்தவர் வேறொருவருமிலர். இவ்வுண்மை கடைப்பிடித்தே தாயுமானச்செல்வர்,

'ஐயா அருணகிரி அப்பா உனைப்போல
மெய்யாக ஓர்சொல் விளம்பினர் யார்—வையகத்தோர்
சாற்றரிதென் றேசற்றார் தன்னனையாய முக்கணெந்தை
நாற்றிசைக்கும் கைகாட்டினை.'

என்னும் திருப்பாட்டை அருளிச் செய்வாராயினர். அன்றியும்,

'அறிவை யறிவதுவே யாகும் பொருளென்
றுறுதிசொன்ன வுண்மையினை யோருநா ளெந்நாளோ.'

என்னும் கண்ணியினால் அவர் உரையின் திடத்தைப் புலப்படுத்தினார். இவர் வாக்கின் பெருமையை,

'வாக்கிற் கருணகிரி வாதவூ ரர்கனிவில்
தாக்கிற் றிருஞான சம்பந்தர்—நோக்கிற்கு
நக்கீர தேவர் நயத்துக்குச் சுந்தரனார்
சொற்குறுதிக் கப்பரெனச் சொல்'

என்னும் பழம்பாடல் இனிது விளக்கும். இவர் முதலிடைக் கடைச்சங்கங்களைக் குறித்தும், பிரபுடதேவராஜர் முதலிய மன்னர்களைக் குறித்தும், சுந்தரமூர்த்திசுவாமிகள் திருஞானசம்பந்தர் முதலிய அடியார்களைக்குறித்தும், மனுநீதிசோழனைக்குறித்தும், ஆங்காங்குக் கூறியிருக்கின்றார். அன்றியும் க்ஷேத்திரங்களைப்பற்றிக் கூறுமிடங்களில் அந்தந்த க்ஷேத்திர வரலாறுகளையும் எடுத்திசைப்பார். இவ்வாறாதலின் இவர் பரந்த புலமை உடையவரென்பது நன்கு புலப்படும்.

கொள்கைகள்

திருஞானசம்பந்தர் முருகப்பெருமானுடைய அவதாரமென்பது இவருடைய கொள்கை. அதை இவர் பலவிடங்களில் விரித்துக் கூறியிருக்கின்றார். இராமாயணக் கதையைக் கூறுமிடத்து அனுமான் ருத்திரமூர்த்தி அம்சமென்று கூறியிருக்கின்றார். முப்பத்தாறு தத்துவங்களை ஒப்புக்கொண்டிருக்கின்றார். சுத்தாத்துவித முத்தியைக் குறித்து விளக்கமாகச் சொல்லியிருக்கின்றார். ஆதலால், இவர் சைவசித்தாந்தியென்பது நன்றாகப் புலப்படும். மயிலை மந்திரரூபமயிலை யென்று உணர்த்தி யிருக்கின்றார். முருகப்

பெருமானை யன்றி வேறொருவரையும் முதற்கடவுளாகக் கூறாராயினும், சிவபெருமான், உமாதேவியார், கணபதி, திருமால் முதலிய தேவர்களைக் குறித்து ஆங்காங்கு வாயாரப் புகழ்ந்து பாடியிருக்கின்றார். இவர் கௌமார சமயத்தைச் சேர்ந்தவரென்றும், சைவசித்தாந்தி யல்லரென்றும் சிலர் கூறுவர். அது பொருந்தாது. சிவபெருமானே முருகவேளாகத் தோன்றினார் என்பதும் சைவசித்தாந்தத்தைத் தவிர்த்து, கௌமாரதரிசனம் என ஒன்று இன்மையாலும் என்பது.

பிறகுறிப்புக்கள்

இவர் சிற்றின்பப் பிரியராய்ப் பரத்தையர் இடத்திலே பழகி, அவர் வஞ்சனை முதலியவைகளை நன்கு அறிந்து இருத்தலின் மிக அழகாக அப்பகுதிகளை எடுத்துக் கூறுகிறார். ஆங்காங்குச் சிலேடையணிகளும் வருணனைகளும் கற்பனை அலங்காரங்களும் இவர் பாடல்களில் காணப்படுகின்றன. இவர் உடலின் இழிவையும் நோய்களின் தொகையையும் உலகவாழ்வின் நிலையாமையையும் மிக விரித்துக் கூறியிருக்கின்றார்.

அருணகிரியார் அருளிச்செய்த நூல்கள்

திருப்புகழ் — இதுவே இவர் செய்த நூல்களின் முதன்மையானது. முருகன் திருப்புகழைப்பற்றிச் சொல்லுவதால் இந்நூல் இப்பெயர் பெற்றது. இதன் தொகை பதினாயிரம் என்று மார்க்கசகாயதேவரும் பிறரும் கூறுவர்

'அருணகிரி நாதர் பதினாறாயிர மென்
றுரைசெய் திருப்புகழை யோதீர்--பரகதிக்கண்
ஏணி யருட்கடலுக் கேற்ற மரக்கலஞ்சீர்
காணி பிறவிக் காம்'

ஆனால் இப்பொழுது கிடைத்துள்ள பாடல்கள் இரண்டாயிரத்துக்கு மேற்பட்டவையல்ல. இவற்றுள்ளும் பல பாடல்களும் பல அடிகளும் இடைச்செருகலாகத் தோன்றுகின்றன.

கந்தரந்தாதி —இது பக்திரசம் பொருந்திய அரிய நூல் இதைப்பற்றி 'கந்தரந்தாதியைப் பாராதே, கழுகுக் குன்றத்துப் பாலையும் நினையாதே' என்று ஒரு பழமொழியும் வழங்குகின்றது. இதில் தான் தகரவர்க்கத்தாலாகிய பாட்டும் அமைந்துள்ளது

கந்தரநுபூதி —அருணகிரியார் நூல்களில் ஞானம் மிகுந்ததும் பலராலும் பாராட்டப்படுவதும் இதுவே.

'கந்தரநு பூதிபெற்றுக் கந்தரநு பூதிசொற்ற
எந்தை யருணாடி யிருக்குநா ளெந்நாளோ.'

என்னும் தாயுமானார் திருவாக்கையும் காண்க

கந்தரலங்காரம், திருவகுப்பு முதலியனவும் இவர் பாடியனவே.

உடற்கூற்று வண்ணம்,—பட்டினத்தார் பாடியருளியது என்று சிலரும், இவர் பாடியதெனப் பலரும் கூறுவர்.

திருப்புகழ்

திருப்புகழ் என்பது திரு + புகழ் என்னும் இரண்டு சொற்களாலாகிய ஒரு தொடர். திரு என்பது கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம், எனவே அழகு எனப்படும். பெரும்பாலும் இச்சொல் கடவுளர், முனிவர், பெரியோர் முதலியோர்களைக் குறித்து வழங்கும்போதும் அவர்கள் செய்கைகளைக் குறித்து வழங்கும்போதும் சேர்த்துச் சொல்லப்படும். தூய்மை, பெருமை, சிறப்பு முதலிய பொருள்களையும் பெறும். புகழ் என்பது புகழ்தலாகிய நூலைக் குறிக்கும் ஆதலின் ஆகுபெயராம். எனவே திருப்புகழ் என்பது அடையடுத்த ஆகுபெயராம். ஈண்டுப் புகழ் என்றது முருகப்பெருமானுடைய புகழ், சில வாழ்நாள் பல்பிணிச் சிற்றறிவுடைய மக்கட் புகழும் ஏனைய கடவுளர் புகழும்போலன்றி என்றும் நிலைபெறுவ தொன்றாதலின் அவன் புகழே புகழெனப்படும் என்பது விளங்கத் திரு என்னும் அடைமொழி புணர்க்கப்பட்டது. திருவாசகம் திருக்கோயில், திருவடி முதலியவற்றுள்ளும் திரு என்பது சேர்க்கப்பட்டிருத்தல் காண்க. இது தொல்காப்பியத்திற் கூறப்பட்ட தேவபாடாண்டிணையின் பாற்படும்.

தல அகராதி

பாடல்

1 கதிர்காமம், 86.
2 குமரகோட்டம், 48.
3 குருகிரி (சுவாமிமலை), 68, 69
4 குன்றுதோறாடல், 21.
5 சிதம்பரம், 60, 61, 62.
6 சிபுருடமங்கை, 29.
7 சுப்பிரமணியர் துதி, 2.
8 சுவாமிமலை, 65
9 சோணாசலம் (திருவருணை), 63, 64
10 சோலைமலை, 28, 49, 54.
11 திருக்கற்குடி, 33.
12 திருக்கரபுரம், 99.
13 திருக்குராவடி, 93.
14 திருக்குரட்டி, 89.
15 திரிசிராமலை, 23.
15 திருச்செங்கோடு, 26.
17 திருச்செந்தில், 9, 10, 11, 12, 13, 14, 44, 47
18 திருத்தணிகை, 46, 66.
19 திருப்பரங்குன்றம், 82.
20 திருப்பரங்கிரி, 3, 4, 5, 6, 7, 8
21 திருப்பழனிமலை, (திருவாவினன்குடி), 15, 16, 17, 39, 40, 41, 42, 43.
22 திருப்புலியூர், 87.

பாடல்

23 திருப்போரூர், 24, 25
24 திருமயிலை, 34.
25 திருவருணை, 35, 53, 77, 78, 83, 95.
26 திருவண்ணாமலை, 73, 79.
27 திருவாரூர், 70
28 திருவாலங்காடு, 91.
29 திருவானைக்கா, 32
30 திருவிடைமருதூர், 98
31 திருவேங்கடம், 31
32 திருவேரகம், (சுவாமிமலை) 18, 19, 20, 85
33 தென்கடம்பந்துறை, 22.
34 நிம்பபுரம், 75, 76,
35 பழமுதிர் சோலை, 27.
36 பழனி, 30, 59, 71, 72, 92
37 பெரும்பற்றப்புலியூர் (சிதம்பரம்) 56.
38 பொது, 36, 38, 45, 50, 51, 55, 57, 58, 67, 74, 80, 81, 88, 90 94, 97.
39 யாழ்ப்பாணம், 37
40 விநாயகர் துதி, 1
41 விநாயகமலை, 100.
42 விராலிமலை 84, 96.
43 வேளூர் (வைதீசுவரன் கோயில்) 52.

உ

முருகன் துணை

சிறப்புப்பாயிரம்

நூற்சிறப்பு

நேரிசை வெண்பா

எல்லாரு ஞானத் தெளிஞரே கேளீர்சொல்
கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாமோ—பொல்லாக்
கருப்புகழைக் கேட்குமோ கானமயில் வீரன்
திருப்புகழைக் கேட்குஞ் செவி. 1

வேதம்வேண் டாஞ்சகல வித்தைவேண் டாங்கீத
நாதம்வேண் டாமஞான நூல்வேண்டாம்—ஆதி
குருப்புகழை மேவுகின்ற கொற்றவன்றன் போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம். 2

நூற்பயன்

ஞானம் பெறலாம் நலம்பெறலாம் எந்நாளும்
வானம் அரசாள வரம்பெறலாம்—மோனவீ
டேறலாம் யானைக் கிளையான் திருப்புகழைக்
கூறினார்க் காமேயிக் கூறு. 3

ஆறுமுகந் தோன்றும் அழகிய வேல் தோன்றுமவன்
ஏறுமயில் தோன்று மெய்யில் தோன்றும்—சீறிவரு
சூரன் முடியைத் துணித்தோன் திருப்புகழைப்
பாரில் வழுத்தினோர் பால். 4

கலி விருத்தம்

பொருப்பது பொடிபட விடுத்திடு கைவேலா
இருப்பிட முனக்கெது எனக்கரு ளியம்பாய்
உருக்கநல விழுக்குல மொழுக்கமில ரேனும்
திருப்புகழ் படிப்பவர் மனத்தினி லிருப்பாம். 5

திருப்புகழ் படிக்குமவர் சிந்தைவலு வாலே
ஒருத்தரை மதிப்பதிலை யுன்றனரு ளாலே
பொருப்பனைய மிகப்பொருது வென்றுமயில மீதே
தரித்தொரு திருத்தணியில் நின்றபெரு மாளே. 6

வெண்பா

ஓராறு மாமுகனை யுசிதமெய்ஞ் ஞானத்தனை
பேரா லருணகிரி பெருமானில்—சீராரும்
தோத்திரமா நந்தத் துதிக்குந் திருப்புகழை
ஏத்தினவ ரீடேறு வார். 7

அருணகிரி நாதர்பதி னாறா யிரமென
றுரைசெய் திருப்புகழை யோதீர்—பரகதிக்கம்
தேணி யருட்கடலுக் கோர மனத்தளாசசிக
காணி பிறவிக் கரம் 8

திருப்புகழைக் கற்கத் திருப்புகழைக் கேட்கத்
திருப்புகழை நித்தஞ் செபிக்கத்—திருப்புகழை
அர்ச்சிக்க முத்தியெளி தாகுமே கூற்றைவென்று
கொர்ச்சிக்க லாமே கெட. 9

ஓம்

குமாராய நமஃ

திருப்புகழ்

விருத்தியுரை.

சிறப்புப்பாயிரம்

நேரிசை வெண்பா

1 எல்லாரு ஞானத் தெளிஞரே கேளீர்சொல்
கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாமோ—பொல்லாக்
கருப்புகழைக் கேட்குமோ கான மயில்வீரன்
திருப்புகழைக் கேட்குஞ் செவி.

(இ-ள்) ஞானம் தெளிஞரே - மெய்யறிவின் தெளிவை உடையவர்களே!, எல்லாரும் கேளீர் - இங்குச் சொல்லப்படுவதை யாவரும் கேளுங்கள், சொல்-சொல்லப்படும், கல்-கற்கள், எல்லாம்-யாவும், மாணிக்கக்கல் ஆமோ-(கல் என்னும் பெயரளவில் ஒத்திருப்பினும்) மாணிக்க ரத்தினத்துக்கு ஒப்பாகுமோ?(ஆகாது) (அதுபோல) கானம்-காட்டில் வாழும், மயில்-மயிலை ஊர்தியாகவுடைய, வீரன்-வீரம்பொருந்திய முருகப்பெருமானது, திரு - மேன்மை பொருந்திய, புகழை - சிறப்பை, (அஃதாவது திருப்புகழ் என்னும் இந்நூலை) கேட்கும்-கேட்கின்ற, செவி-காதுகள், பொல்லாத-(பிறவிக்கு ஏதுவாக விருக்கும்) கொடிய, கருப் புகழை - இழிந்த மானுடர் புகழை, கேட்குமோ - கேட்க மாட்டா என்றவாறு.

(விருத்தியுரை) ஞானம்-வடமொழித்திரிபு, இஃது அத்துச் சாரியை பெற்ச் சாரியையின் அகரம் 'அத்தினகரம் அகரமுனையில்லை' (நன்-சூ 252) என்னும் விதியின்படி கெட்டது தெளிஞர் என்பதில் ஞகரம் பெயரிடைநிலை எல்லாம்-முழுவதும் என்பப் பொருள்படுவதோர் உரிச்சொல் என்பர் **பேராசிரியர்** பொல்லார் - ஆறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் கருமை - கொடுமை; இழிவு ஓகாரங்கள் இரண்டும் எதிர்மறை பொல்லாக் கருப்புகழ் என்பது ஆறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சத் தொடராதலின் வலிமிக்கது, இதனை 'செய்யிய என்னும் வினையெச்சம்' என்னும் சூத்திரத்தின் (நன்-சூ. 167) இலேசான் முடிக்க மயில் குறிஞ்சி நிலக் கருப்பொருளாதலின் 'கானமயில்' என்றார்; ஆயிரத்தெட்டண்டங்களையும் நூற்றெட்டு யுகம்வரை அரசு புரிந்த சூரனை வென்றவனாதலின் 'வீரன்' என்றார். கேளீர்-ஈர் ஏவற்பன்மை வினைமுற்று விகுதி. ஞானம்-பரோக்ஷம், அபரோக்ஷம், என்றும், பரம், அபரம் என்றும், பதி ஞானம், பசு ஞானம், பாச ஞானம், என்றும் பலதிறத்தாற் கூறப்படும் ஞானங்கள்.

மாணிக்க ரத்தினம் 'கல்' என்று வழங்கப்படுவதனாலேயே உலகத்திலுள்ள கற்களுக்கு ஒப்பாகுமோ? அது போலப் புகழ் என்று சொல்லப்படுவதனாலேயே பிறந்து இருந்து இறந்துபோகும் மானுடர் புகழ், பேரின்பப் பெருவாழ்வாகிய மோக்ஷ சாம்பிராச்சியத்தைத் தரும் முருகப் பெருமானது 'திருப்புகழ்' நூலுக்கு இணையாகுமோ? ஆகாது என்றபடி.

அரிச்சந்திரன், நளன் முதலியோர் புகழ்களைக் கூறும் அவ்வவர் புராணங்களையும் தாயவழக்கு, காமம் முதலியவற்றைக் கூறும் பாரதம், இராமாயணம் முதலிய இதிகாசங்களையுங் கேளார், முருகன் திருப்புகழைக் கேட்டோர் என்பார், 'பொல்லாக் கருப்புகழைக் கேட்குமோ கானமயில் வீரன் திருப்புகழைக் கேட்கும் செவி' என்றார். இதுபற்றியே சிவப்பிரகாச சுவாமிகளும் **பிரபுலிங்கலீலையில்,**

'கன்றிய வைரிகள் காந்தங் காதையும்
வன்றியர் மதனநோய் வளர்க்கு மாற்றமும்
புன்மொழி வினாவறும் பொழுது போக்கலும்
அன்றரு ளல்லமன் அமல லீலையே.'

என்று கூறியது காண்க.

'கேட்கும் செவி' என எதிர்காலத்தாற் கூறியது எக்காலத்தும் முருகன் புகழ் கேட்பதே செவிக்குரிய இலக்கணம் என்பது உணர்த்தற்கெனக்

'கேட்குஞ் செவி' என்று செவியையே கூறினாரேனும் 'ஒருமொழியொழி தன்னினங் கொளற் குரித்தே' என்னும் (நன்-சூ. 358) விதியினால் திருப்புகழைக் கூறும் நாவும் வேறொரு கருப்புகழைக் கூறாது என்பதும் கொள்க. இப்பாட்டுத் திருப்புகழின் சிறப்பைக் கூறுகின்றது. இஃது **அபியுக்தர்** ஒருவரால் பாடப்பட்டது.

கலிவிருத்தம்

2 திருப்புகழ் படிக்குமவர் சிந்தை வலுவாலே
ஒருத்தரை மதிப்பதிலை யுன்றனரு ளாலே

பொருப்பரை மிகப்பொருது வென்றுமயின் மீதே
தரித்தொரு திருத்தணிகை நின்றபெரு மாளே

(இ-ள்) பொருப்பரை - (வள்ளிநாச்சியாரை உடன் கொண்டு போகும்பொருட்டு) குறிஞ்சிநிலத்தே வாழும் வேடுவருடன், மிக பொருது - மிகவும் சண்டைசெய்து, வென்று - அவர்களை வெற்றிகொண்டு, மயில்மீது - மயில்வாகனத்தின்மேல், தரித்து - அமர்ந்து, ஒரு - ஒப்பற்ற, திருத்தணிகை - திருத்தணிகை என்னும் திருப்பதியில், நின்ற - நிலைபெற்ற, பெருமாளே - முருகக்கடவுளே!, திருப்புகழ் - திருப்புகழ் என்னும் நூலை, படிக்கும் அவர் - அன்போடு படிக்கின்றவர்கள், உன்றன் அருளால் - தேவரீரது கருணையினாலே, சிந்தை வலியால் - (தங்கட் குண்டாகும்) மனோபலத்தால், ஒருத்தரை - ஒருவரையும், மதிப்பது இலை - மதிக்கமாட்டார்கள் எ-று.

(வி-ரை) பெருமாள்-பெருமையை யுடையவன், னகரம் ளகரமாகத் திரிந்தது. பெருமாள் என்ற சொல் பெருமாள்கோயில் என வழக்கிடத்தும் வருதல் காண்க. சுந்தரப் பெருமாள் நாயனாரெனப் பிறவிடத்தும் வந்துள்ளது. 'பெருமணக் கோலப் பெருமாள் மறைப் பெருமாள் எமது குலதெய்வமா மால்' என்று காஞ்சிப்புராணத்துள் சிவஞானமுனிவர் சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் கூறியதும் காண்க. பெருமாளே என்பதிலுள்ள ஏகாரம் விளிவேற்றுமை யுருபு எனைய மூன்றும் அசைநிலைகள். சிந்தை-வடசொல்லின் திரிபு. ஒருத்தர் - ஒன்று என்பதன் திரிபாகிய

ஒரு என்பதனுடன அததுசசாரியையும பலாபல விகுதி
யும சோநது முடிநதது இலை - தொகுததல விகாரம்.
பொருபபு-மலை பொருதல-சணடைசெயதல அருளால-
ஆல, மூன்றும வேறறுமைக கருவிபபொருள

திருபபுகழைப படிபபோா முருகபபெருமானது திருவருளைப பெறறு மனேபல முடையராய விளஙகுவாராதலின அவா 'ஒருத்தரை மதி பதிலை' எனறா திருவருட் செலவததைப பெறறோா அரசனையும மதியாா. **வாகீச மூர்த்திகள்** பாடலிபுரததரசனாகிய பலலவா கோன ஏவலா வநது, அவன கட்டளையைத தமபால கூறியபோது,

'நாமாாககுங குடியலலோம நமனை யஞசோம்
நரகததில இடாபபடோம நடலை யிலலோம
ஏமாபபோம பிணியறியோம பணிவோம அலலோம்
இனபமே யெநநாளுந துனப மிலலை
தாமாாககுங குடியலலாத தனமை யான
சஙகரனற சஙகவெண குழையோா காதின
கோமாறகே நாமெனறு மீளா ஆளாயக
கொயமமலாச சேவடியிணையே குறுகி னோமே.'

எனறு அருளிச செயததூஉங காணக

முருகவேள வளளிநாயகியாரைக களவாக அழைத்துக் கொணடு செலலுகையில வேடா எதிாகக, அவாகள் அனைவரையும் வெனறு தமது உணமைவடிவததைக காட்டி, மயிலின் மீதேறித திருததணிகை சென்றமாநதனா ஆதலின், 'பொருபபரை .....பெருமானே' எனக கூறினர். திருததணிகை - தொண்டைநாட்டிலுள்ள சுபபிரமணிய

ஸ்தலம், அஃது அரககோணததுக்கு எட்டுக்கல் தூரததி லுள்ளது

திருபபுகழ படிபபோா மனததில முருகபபெருமான அருளமுறறி வளருமாதலின 'உனறனருளாலே' எனறா அருளையுடையாருககு அருமையான காரியம ஒனறுமிலலை

இதுவும திருபபுகழ படிபபோா பெருமையைப பிற காலததுச சானறோா ஒருவா பாடியது (2)

ஆசிரியச சநதவிருததம

3 ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொனறே
யீசனுடன ஞானமொழி பேசுமுக மொனறே
கூறுமடி யாாகளவினை தீாககுமுக மொனறே
குனறுருவ வேலவாஙகி நினறமுக மொனறே
மாறுபடு சூரரை வதைததமுக மொனறே
வளளியை மணமபுணர வநதமுக மொனறே
ஆறுமுக மானபொருள நீயருளல வேணடும
ஆதியரு ணாசலம அமாநத பெருமாளே

(இ-ள) ஆதி-புராதன க்ஷேததிரமாகிய, அருணாசலம-திருவணணாமலையினகண, அமாநத-எழுநதருளியிருககினற, பெருமாளே-முருகபபெருமானே!, ஏறுமயில - ஆணமயில மேல், ஏறி-ஆரோகணிதது, விளையாடும-(குன்றுதோறும) விளையாடுகின்ற, முகம ஒன்று-திருமுகம் ஒனறும், ஈச னுடன் - சிவபெருமானுடன, ஞானம் மொழி - பிரணவச சொலலை, பேசும முகம ஒனறு-கூறும் திருமுகம் ஒனறும், கூறும்-தன்புகழை எடுத்துச்சொல்லும், அடியாாகள வினை-

தொண்டர்களுடைய தீவினைகளை, தீர்க்கும் - ஒழிக்கின்ற, முகம் ஒன்று - திருமுகம் ஒன்றும், குன்று உருவ - கிரௌஞ்சகிரி பிளக்கும்படி, வேல் வாங்கி - வேற்படையைச் செலுத்தி, நின்ற முகம் ஒன்று - நிலைபெற்ற திருமுகம் ஒன்றும், மாறுபடு - தன்னைப் பகைத்த, சூரரை - சூரபத்மன் சிங்கமுகன் முதலிய சூரர்களை வதைத்த - கொன்ற, முகம் ஒன்று - திருமுகம் ஒன்றும், வள்ளியை - வள்ளி நாயகியாரை, மணம் புணர - திருமணஞ் செய்யும்படி, வந்த முகம் - ஏற்பட்ட திருமுகம் ஒன்றுமாக, ஆறுமுகம் ஆன - ஆறு திருமுகங்களையுடைய, பொருள் மெய்ப்பொருளாகிய நீ, அருள வேண்டும் - அடியேனுக்குத் திருவருள் செய்ய வேண்டும் எ-று.

(வி-ரை) ஏறுமயில் - ஆண்மயில் 'ஏற்றமை யும்' என்னும் பொதுச் சூத்திரத்தான் முடிக்க (தொல்-மரபியல்-558) ஏறுமயில் என்பதனை வினைத்தொகையாக்கியும் பொருளுரைப்பர். ஈசன் என்னும் வடமொழிக்கு எல்லா மேன்மையுமுடையவன் என்பது பொருள். அடியார்கள் - அடிமைத்திறத்தை யுடையார்கள். குன்று - கிரௌஞ்சகிரி. வேல் - வெல்வது என்னுங் காரணப்பொருட்டு. மாறுபடுதல் - பகைத்தல்.

பொருள் - செம்பொருள், உண்மைப் பொருள், சித்துப் பொருள்.

அருணாசலம் - சிவப்பு மலை, அருணம் + அசலம் என்னும் வடமொழி முடிபு.

முருகப்பெருமான் மயிலேறிக் குன்று தோறும் அருள் விளையாடலைப் புரிந்து வருகின்றார் ஆதலின் 'ஏறு மயிலேறி' ஒன்றே என்றார். சிவபெருமானே தமக்குள்ள ஈசானம், தற்புருஷம், வாமனம், அகோரம், சத்தியோசாதம் என்னும் ஐந்து திருமுகங்களும் அமையாதெனத் திருவுளங்கொண்டு ஆறு திருமுகங்களோடு முருகப்பெருமானாகத் தோன்றினார் என்று கந்தபுராணங் கூறுதல் காண்க.

விளையாடுதல் என்பதற்குப் பஞ்சகிருத்தியங்களை லீலாமாத்திரமாய்ச் செய்தல் என்றேனும் பாரமின்றி இலேசாய்ச் செய்தல் என்றேனும் கொள்க.

இவ்வாறு, 'குவலயமும் எல்லாமுங் காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி' என மாணிக்கவாசகசுவாமிகள் அருளிச் செய்ததூஉம் காண்க.

பிரணவத்தின் பொருளை அறியாது பிரமன் தியங்கி நிற்றலைக்கண்டு, அவனைத் தலையில் குட்டிச் சிறைப்படுத்திப் பின்னர்ச் சிவபெருமான் தமக்குப் பிரணவப்பொருளைக் கூறுமாறு முருகவேளைக் கேட்ப, அவர் பிரணவோபதேசஞ் செய்தனராதலின், 'ஈசனுடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே' என்றனர்.

உலகமெல்லாம் உய்யும்பொருட்டு வள்ளிநாயகியாரை மணந்தனராதலின் 'வள்ளியை ஒன்றே' என்றார். இறைவன் ஆன்மாக்கள் போகந் துய்க்கும்பொருட்டுப் போக கோலமும், யோகானுபவம் மிகுந்து வீட்டின்பம் அடை-

தற்பொருட்டு யோகக்கோலமும் கொள்வர் என்பது சாஸ்திர சம்மதமாதலின், 'ஞானமொழி பேசுமுக' மென் யோகக்கோலத்தையும் 'வள்ளியை மணம்புணர வந்தமுகம்' என்ப போகக்கோலத்தையும் கூறினர்.

'போகியா யிருந்துயிர்க்குப் போகத்தை அளித்த லோரார்
யோகியாய் யோக முத்தி யுதவுத லதுவு மோரார்'

என்வரும் **சிவஞானசித்தியார்** வாக்கியங்களைக் காண்க.

வள்ளி நாயகியார் முருகனுக்கு இச்சாசத்தி ஆதலினாலும் அவ்வம்மையாரைப் பெரிதும் காதலித்ததினாலும் அவரைக் கூறினர் இதனை,

'பமரமடுப்பக் கடாமெடுத் தூற்றுமோர் பகடு நடத்திப் புலோமிசைச் சூற்புயல் பருகியிட்ட கற்பகக்காட்டவிர்ப் பொலி பாவையிடைப் பம்மாதெனத் தோற்றிய, குமரி யிருக்கக் கலாமயிற் கூத்தயர் குளிர்புன மொய்த்திட்ட சாரலிற் போயச் சிறு குறவர் மகட்குச் சலாமிட்டுக் கேட்கக் குமரனை முத்துக் குமாரனைப் போற்றுதும்.'

என்வரும் **குமரகுருபரர்** வாக்கானும் உணர்க. முருகவேளுக்குக் கிரியாசத்தி தெய்வயானையார். வேல் ஞானசத்தி துஷ்ட நிக்கிரக சிஷ்டபரிபாலனஞ் செய்வோராதலின், 'சூரனை வதைத்த முகம்' என்றும், 'குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம்' என்றும், 'அடியார்கள் வினைதீர்க்கு முகம்' என்றும் அருளிச் செய்வாராயினர்.

ஆன்மாக்கள், உலகமெல்லாம் இறைவனாலே காரியப்பட்டு வரும் உண்மை உணர்ந்து, அவன் திருவடி ஞானத்

தைப் பெறுவதற்குப் பிரணவத்தின் பொருளைத் தெளிந்து, தமது பிராரத்துவத்தை ஒழித்து, பதிஞானத்தால் ஆணவ மலத்தை அகற்றி, அவ்விறைவனோடு ஒன்றுபட்டு முத்தி யடைதலே முடிவென்பார் இங்ஙனம் அருளிச்செய்தார் என்க.

முருகப்பெருமான் திருமுகங்கள் ஆறன் தொழில்கட்கும் பொருந்தப் பன்னிரண்டு திருத்தோள்களும் அமைந்துள்ளன என்பதைப் பின்வரும் திருமுருகாற்றுப்படை அடிகளால் அறிக.

‘மாயிருண் ஞாலம் மறுவின்றி விளங்கப்
பலகதிர் விரிந்தன் றொருமுக மொருமுகம்
ஆர்வல ரேத்த அமர்ந்தினி தொழுகிக்
காதலி னுவந்து வரங்கொடுத் தன்றே யொருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்வி யோர்க்குமே யொருமுகம்
எஞ்சிய பொருள்களை யேமுற நாடித்
திங்கள் போலத் திசைவிளக் கும்மே யொருமுகஞ்
செறுநர்த் தேய்த்துச் செல்சம முருக்கிக் [முகம்
கறுவுகொள் நெஞ்சமொடு களம்வேட் டன்றே யொரு
குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே ஆங்கம்
மூவிரு முகனும் முறைநவின் றொழுகலின்
ஆரந் தாழ்ந்த அம்பகட்டு மார்பிற்
செம்பொறி வாங்கிய மொய்ம்பிற் சுடர்விடுபு
வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்
விண்செலன் மரபின் ஐயர்க் கேந்திய தொருகை

உக்கஞ் சேர்த்திய தொருகை
நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை
அசைஇய தொருகை
அங்குசங் கடாவ வொருகை யிருகை
ஐயிரு வட்டமொடு எஃகு வலந்திரிப்ப வொருகை
மார்பொடு விளங்க வொருகை
தாரொடு பொலிய வொருகை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப வொருகை
பாடின் படுமணி யிரட்ட வொருகை
நீனிற விசும்பின் மலிதுளி பொழிய வொருகை
வானர மகளிர்க்கு வதுவை சூட்ட ஆங்கப்
பன்னிரு கையும் பாற்பட இயற்றி' (3)

விநாயகர் துதி

1 தத்தன தனதன தத்தன தனதன
தத்தன தனதன–தனதான

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியி லுறைபவ
கற்பக எனவினை கடிதேகும
மத்தமு மதியமும வைத்திடும அரனமகன
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிற்றனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில
முற்பட எழுதிய முதல்வோனே

முப்புரம் எரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புனம் அதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

(இ-ள்) கைத்தலம்-திருக்கரத்திலே, நிறை-நிறைந்த, கனி-பழங்களையும், அவல்-அவலையும், பொரி-பொரியையும், அப்பமொடு-அப்பத்தோடு, கபளிய - உண்கிற, கரிமுகன்-யானை முகத்தையுடைய விநாயகப்பெருமானுடைய, அடி-திருவடிகளை, பேணி-துதித்து, கற்றிடும் அடியவர்-தன்னுண்மையைத் தேர்ந்து தெளிந்து கொண்டவர்களது, புத்தியில்-மனத்தில், உறைபவ - தங்கியிருப்பவரே, கற்பக - தன்னை அடைந்தவருக்கு விரும்பிய பொருள்களைக் கொடுக்கும் கற்பக விருட்சத்தை ஒத்தவரே, என-என்று துதிசெய்ய, வினை-சஞ்சித பிராரத்துவ கன்மங்கள், கடிது ஏகும்-விரைவில் ஒழியும், முத்தமிழ் அடைவினை - மூன்றாகிய தமிழ் நூலின் முறையினை, முற்படுகிரிதனில்-மலைகளுக்கெல்லாம் முதன்மைபெற்ற மேருமலையினிடத்தே, முற்பட-முற்காலத்தில், எழுதிய-ஒரு கோட்டாலெழுதிய, முதல்வோனே-முதற் கடவுளே, முப்புரம்-திரிபுரங்களை, எரிசெய்த-எரித்த, அச்சிவன்-அப்பெருமையுடையசிவபெருமான், உறைரதம்-எழுந்தருளிய இரதத்தினது, அச்சு அது-அச்சை, பொடி செய்த முரியும்படி செய்த, அதிதீரா-மிகவும் தைரியமுடையவரே, அத்துயர் அது கொடு - (வள்ளிநாயகியாரை

மணந்துகொள்ள விரும்பியகாலத்து எவ்வாறு மயக்கலா மென்று) அத்துன்பத்துடன் சுப்பிரமணியப் பெருமான் போயிருந்த, அப்புனம் அதன் இடை-அந்தத் தினைப்புனத்தில், இபம் ஆகி-வெள்ளையானை வடிவங்கொண்டு, அக்குறமகளுடன்-அந்தக் குறப்பெண்ணாகிய வள்ளியுடனே, அச்சிறு முருகனை - அந்த இளமையானாகிய முருகவேளை, அக்கணம்-அந்த நேரத்திலேயே, மணம் அருள்-மணம் புரியும்படி திருவருள் புரிந்த, பெருமாளே-பெருமானே! (எனத் துதிசெய்து), மத்தமும் மதியமும் - ஊமத்த மலரையும் பிறைச்சந்திரனையும், வைத்திடும்-சடாமகுடத்தின்கண் அழகுறச் சூடுகின்ற, அரன் மகன்-சிவபெருமான் திருக்குமாராகிய, மல்பொரு - மல்லயுத்தம் செய்கின்ற, திரள் புயம்-திரண்ட தோள்களையுடைய, மத்தம் யானை - மும்மதங்களையுடைய யானைமுகத்தை யுடையவனை, மத்தளம் வயிறனை-மத்தளம்போலும் திருவயிற்றை யுடையவனை, உத்தமி புதல்வனை-உமாதேவியார் மகனை, மட்டு அவிழ்-தேன் விரிந்த, மலர்கொடு-பூக்களைக்கொண்டு, பணிவேன் - வணங்குவேன், ஏ-ஈற்றசை எ-று.

(வி-ரை) கைத்தலம் - கையாகிய இடம், ஸ்தலம் என்னும் வடமொழி தலம் என்றாயிற்று, பண்புத்தொகை அம்பம்-மோதகம், 'மோதக ஹஸ்தன்' என்பதும் நோ. கப்புதல்-உண்ணுதல். கரி-யானை, கரத்தையுடையது, கரம்-துதிக்கை, கருமையுடையதெனப் பொருள் கூறுதல், வடமொழியாதலின் பொருந்தாது.

அடி என்பது கிரியாசத்தி ஞானசத்திகளை. பேணுதல்-தொழுதல், 'கடவுட்பேணி' எனவரும் **குறிஞ்சிப்பாட்டுரை**யில் நச்சினார்க்கினியர் இவ்வாறே பொருளுரைத்தார். கற்றிடும் அடியவர்-கல்வி, இரண்டு இறைவன் இயல்பை அறியும் கல்வி கற்பவர் உள்ளத்தில் எக்காலத்தும் நீங்காது இறைவன் உறைவன் ஆதலின் 'கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ' என்றார் 'கற்பவர் விழுங்குங் கற்பகக் கனியை' என்று பெரியார் நம் பணித்தார் 'கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன்' என்றதும் இக்கருத்தே யாதல் காண்க. புத்தி-புந்தி-வலித்தல் விகாரம் சந்தம் நோக்கி வந்தது. கற்பகம்-உவமையாகு பெயர். கற்பகம் போன்று தன்னைச் சேர்ந்தாருக்கு அளிக்கத்தக்கவராதலின் இதனை, 'வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்' என்னும் **திருநாவுக்கரசுசுவாமிகள்** திருவாக்கானும், 'வேண்டத்தக்க தறிவோய் நீ வேண்ட முழுதுந் தருவோய் நீ' என்ற **மணிவாசகர்** திருவாக்கானும் உணர்க. வினை சஞ்சிதம், பிராரத்துவம், ஆகாமியம் என்னும் வினைகள்.

தன்னை ஏத்தும் மெய்யடியாரது வினைகளைக் கட்டறுக்க வல்லான் ஆதலின், 'மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித், தீராத வல்வினை நோய் தீர்த்தருள வல்லான்' என்ற பெரியார் திருவாக்கின்படி, 'வினை கடிதேகும்' என்றார்

தக்கன் சாபத்தால் கலை குறைந்த சந்திரனைச் சடையின்கண் தரித்துக் காத்தமையான் 'மதியமும் வைத்திடு மரன்' என்றார். தான் வாலறிவன் என்னும் உண்மையைத்

தெரித்தற்பொருட்டுச் சிவபெருமான் சந்திரனைத் தரித்தார் என்னுங் கருத்தைப் **பட்டினத்தடிகள்**, 'தூமதி சடைமிசைச் சூடுதல் தூநெறி ஆமதி யானென அமைத்தவாறே' எனக் கூறுமாற்றான் அறிக. அரன்-வடமொழித்திரிபு, இச்சொல் முடிவில் எல்லாவற்றையும் அழிப்பவன், மலத்தினை அழிப்பவன், உயிர்களை உயர்ந்த நிலையிற் போகச் செய்வோன் என்னப் பல பொருள்படும். பொருதல் - சண்டை செய்தல். மதம்-கன்னம், கும்பம், பீஜம் என்னும் மூன்று மதங்கள். மதத்தை யானைக்கு அடையாக்குக. இன்றேல் விநாயகர்க் கேற்றின் விநாயகருக்கு முகம் ஒன்றே யானை வடிவமாதலின் இருமதமாகக் கொள்க. இனி இச்சை, ஞானம், கிரியை என்ற மூன்றையும் மும்மதமாக விநாயகருக்கு ஏற்றிக் கூறுவாருமுளர். இதன்விரிவை **சிவஞானசித்தியாரில்** 'ஒருகோட்டன் இருசெவியன்' என்னுஞ் செய்யுளுக்குச் சிவஞான முனிவர் எழுதிய உரையிற் காண்க. விநாயகருக்கு இருமதத்தையே எடுத்துக் கூறினர். **ஞானாமிர்த** நூலார்; பிறரும் இவ்வாறு கூறினர் உளர். உலகம் எல்லாம் தன்னகத்தில் அடங்கி இருத்தலின் 'மதத்தளவயிறனை' என்றனர். உத்தமி-மேன்மையுடைய பெண். மலர்-மலர்தலையுடையது; காரணக் குறி. முத்தமிழ் - இயல், இசை, நாடகம் என்னும் மூன்று கூற்றையுடைய தமிழ். விநாயகர் தமிழுடைவினை மேருமலையில் எழுதினதாகக் கூறியதால் அத்தகைய வரலாறு ஒன்றுண்டு என்பது துணியப்படும். அருள்மேலீட்டால் தாமே தமது அருமைக்கொம்பை ஒடித்து நூலை எழுதிய பெரு

மான நான எடுத்துககொண்ட நூலை இடையூறினறி முடிப
பன எனபது கூறவேணடுவதிலலை எனபார 'எழுதிய முதல
வோனே' எனறார முதலவோன்-எலலாருககும முதற கட
வுள, எலலாக காரியததுககும முதலில வணஙகபபடுபவா
ஒவவொருவரும தாம் எடுததுககொணட காரியம இனிது
முடிதறபொருட்டு விநாயகரையே முதலில தொழுதல
வேணடும் எனனும வரததைச சிவபெருமானே அளிதத
னா பினனாத தாம திரிபுரதகனம செயயத தொடஙகுகை
யில விநாயகரைப பூசிகக மறநதமையால சிவபிரான ஏறி
வநத தேரின அசசு முரியுமபடி விநாயகா செயதனா. ஆத
லின, 'முபபுர .தீரா' எனறார அசசது, துயரது என
புழி அது இரணடும பகுதிபபொருள விகுதி, அகரம பண
டறி சுட்டு அழகாலும இளமையாலும செலவததாலும
சிறநத தெயவயானை பககததே இருபபவும், குறமகளுககாக
இததுணைப பெருநதுனப மெயதினை, சிறுவிளையாட்டுடை
யான எனபது தோனற, 'அககுற மக . ..முருகனே' எனறு
அருளிசசெயதார

இது விநாயககடவுள் வாழததது, ஆனறோ ரொழுக
கததைப பாதுகாததற பொருட்டும், மாணுக்கர்ககு அறி
வுறுததறபொருட்டும் எடுத்துககொணட நூல் இடையூறு
தீர்ந்தினிது முடிதறபொருடடும விநாயகவணககம கூறி
ஞர. வளளிநாயகியாரை முருகன் மணகக அருள்புரிந்தவா
அவன புகழைக கூறும் நூலுககும உதவி புரிவார எனபார
'அககண......பெருமாளே' எனறார. (1)

சுப்பிரமணியர் துதி

2 தத்தத்தன தத்தத் தனதன
தத்தத்தன தத்தத் தனதன
தத்தத்தன தத்தத் தனதன-தனதான

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர எனவோதும்

முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்துமு வர்க்கத் தமரரும் அடிபேணப்

பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில் இரவாகப்

பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத்துடன் ரட்சித் தருள்வது மொருநாளே

தித்தித்தெய ஒத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு கழுதாடத்

திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் திரிகடக எனவோதக்

கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை

கொட்புற் றெழ நட்பற் றவுணரை
வெட்டிப் பலியிட்டுக் குலகிரி
குத்துப் பட ஒத்துப் பொரவல பெருமாளே.

(இ-ள்) முத்தைத் தரு-முத்தை ஒத்த, பத்தி திரு நகை-வரிசையாகிய அழகிய பற்களையுடைய அத்திக்கு-தெய்வயானை அம்மையாருக்கு, இறை-தலைவனே, சத்தி-வேற்படையைத் தாங்கிய, சரவண-முருகனே, முத்திக்கு-மோக்ஷத்துக்கு, ஒரு வித்து-ஒப்பற்ற வித்தைப் போன்றவனே, குருபர-குருபரனே, என ஓதும்-என்று கூறுகின்ற, முக்கண் பரமற்கு-மூன்று திருக்கண்களையுடைய சிவபெருமானுக்கு, சுருதியின்-வேதத்திலே, முற்பட்டது-முதன்மையாகச் சொல்லப்பட்டதாகிய பிரணவ மந்திரத்தை, கற்பித்து-புகட்டி, இருவரும்-பிரம விஷ்ணுக்களாகிய இருவரும், முப்பத்து மூவர்க்கத்து அமரரும்-முப்பத்து முக்கோடி தேவர்களும், அடிபேண-திருவடிகளைத் தொழவும், தித்தித் தெய ஒத்த-தித்தித்தெய என்னும் ஒலிக்கு, இசைந்த பரிபுரம்-சிலம்புகளணிந்த, நிர்த்த பதம்-நடனம் செய்கின்ற திருவடிகளை, வைத்து-அடியிட்டு, பயிரவி-பைரவி என்னும் இராகம், திக்கு ஒக்க-திசைகளில் பொருந்த, நடிக்க-தாண்டவம் செய்யவும், கழுகொடு கழுது ஆட-கழுகுகளோடு பேய்கள் சேர்ந்து ஆடவும், திக்கு-திசைகளிலுள்ள, பரி அட்டப் பயிரவர்-உலகத்தைத் தாங்கும் அட்டப்பயிரவர்கள், சித்ரப் பவுரிக்கு-அழகிய கூத்துக்கு, தொகுத் தொகு தொகுத்த திரிகட என ஓத-தொகுத் தொகு தொகுத்த திரிகட என்னும் இவ்வோசையைக்

கூறவும், கொத்து பறை-பற்பல பறைகள், கொட்ட-
அடிக்கவும், களம் மிசை - போர்க்களத்தில், குக்குக
குகு குக்குக் குகுகுகு குகு என்னும் இவ்வோசையோடு,
முதுகூகை-முதிர்ந்த கோட்டான், குத்திப்புதை புக்கு பிடி
என-குத்திப்புதை புக்குப்பிடி என்று குழறவும், கொட்பு
உற்று-சுழன்று மேலேதாக்க, நட்பு அற்ற அவுணரை-பகை
வர்களாகிய அசுரர்களை, வெட்டி-கொன்று, பலி இட்டு-
பலியாக இட்டு, குலம் கிரி - மேன்மை பொருந்திய
கிரௌஞ்ச மலையானது, குத்துப்பட-குத்துப்படும்படி, ஒத்து
பொரவல-பொருந்தச் சண்டை செய்ய வல்ல, பெரு
மாளே—, பத்து தலை தத்த-பத்து தலைகளும் சிதற, கணை
தொடு-அம்பைச்செலுத்தி, ஒற்றை கிரி-மந்தரமலையாகிய,
மத்தை ; பொருது-மத்தால் திருப்பாற்கடலைக் கடைந்து,
ஒரு பட்டப் பகல்-நல்ல பகற்பொழுது, வட்டம் திகிரியில்-
உருண்டை வடிவாகிய தனது சக்கரத்தினால், இரவு
ஆக-இரவு ஆகும்படி செய்து, பத்தற்கு - அன்புடைய
வனாகிய அருச்சுனனுக்கு, இரத்தத்தை கடவிய - இரதத்
தைச் செலுத்திய, பச்சை புயல் - பசுமையான மேக
நிறம் பொருந்திய திருமால், மெச்சத்தகுபொருள் -
விரும்பத்தக்க பொருளாய உள்ளவனே, பட்சத்துடன் -
அன்புடனே, ரட்சித்தருளுவது-எம்மைக்காப்பாற்றியருள்வ
தாகிய, ஒருநாள்-ஒருநாளும் உண்டாகுமோ? என்று

(வி-ரை) முத்தைத்தரு என்பதில் 'தரு' உவமவாசகம்.
அத்தி-யானை; ஈண்டு தெய்வயானை அம்மையார். சத்தி-

வேற்படை, முருகப்பெருமான் திருவடியை அடைந்தார் முத்தி அடைதல் எளிதென்பார், 'முத்திக் கொருவித்து' என்றார். முக்கண்-சோமசூரியாக்கினிகள். சுருதியின் முற்பட்டது, பிரணவம். இருவர்-பிரம விஷ்ணுக்கள். திகிரி-சக்கரம். பத்தன் அருச்சுனன். பச்சைப் புயல்-பசுமையான மேகம், மேகமாண்டு மேகநிறமுடைய திரு மாலைக் குறித்தது. கழுது-பேய். கொட்பு-சுற்றசி. அவு ணர்-அசுரர்.

இறை-இயல்புவிளி. சரவண-அண்மைவிளி. முற்பட் டது-வினையாலணையும் பெயர். பிரணவம் எல்லாவற்றிற்கும் முற்பட்டதாகலானும் அதினின்றே எல்லா உலகங்களும் தோன்றின ஆதலானும் 'முற்பட்டது' எனப் பிரணவத் தைக் கூறினார். இருவரும் அமரரும் எனப்பிரி உம்மைகள் முற்றுப்பொருளன. 'பத்துத் தலை கணைதொடு' என்றது இராமாவதாரத்தில் இராவணனைக் கொன்றதைக் குறித் தது. காத்தற் கடவுளாகிய திருமால், தாம் அரியரின் அரியராகியும், அடியவனாகிய அருச்சுனன் பொருட்டு எளி யரின் எளியராகிச் சிறுதொழிலையுடைய பாகனாகவும் இருந் தார் என்பார், 'பத்தற் கிரதத்தைக் கடவிய பச்சைப்புயல்' என்றார்.

சிவபெருமானுக்குப் பிரணவோபதேசஞ் செய்ததும், திருமால், பிரமன் முதலிய தேவர்கள் வணங்குமாறு பெருமைபெற்றவனாதலின் முருகப் பெருமானே அனைவரி னும் மேம்பட்டவனென அவனது மாட்சியைப் புலப் படுத்தினார் எனக்

அவுணரை அழித்தது அவனுடைய மறக்கருணையே அன்றி வேறில்லை என்க. இறைவனுக்கு அருளே திருமேனியாகலின் அவன் ஒருவருக்கும் இன்னல் இயற்றான், அங்ஙனம் இன்னல் போல நமக்குக் காணப்படுஞ் செயல்களெல்லாம் கூர்ந்து நோக்கின் அருட்செயலேயாகும் என்பதைப் பின்வரும் **சிவஞான சித்தித் திருவிருத்தத்தானும்** அறிக.

'தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்கள் தஞ்சொல் ஆற்றின்
வந்திடா விடினுறுக்கி வளாரினால் அடித்துத் தீய
பந்தமும் இடுவர் எல்லாம் பார்த்திடின் அருளே ஆகும்
இந்தநீர் முறைமை அன்றோ ஈசனார் முனிவும் என்றும்' (2)

திருப்பரங்கிரி

3 தனத்தன தந்தன தனதன தனதன
தனத்தன தந்தன தனதன தனதன
தனத்தன தந்தன தனதன தனதன-தனதான.

அருக்கு மங்கையர் மலரடி வருடியு
கருத்த றிந்தபின் அரைதனி லுடைதனை
யவிழ்த்தும் அங்குள அரசிலை தடவியும் இருதோளுற்

றணைத்து மங்கையின் அடிதொறு நகமெழ
உதட்டை மென்றுபல் இடுகுறி களுமிட
அடிக்க ளந்தனின் மயில்குயில் புறவென மிகவாய்விட்

டுருக்கு மங்கியின் மெழுகென வுருகிய
சிரத்தை மிஞ்சிடு மனுபவ முறுபலம்
உறக்கை யின்கனி நிகரென இலகிய முலைமேல்வீழ்ந்

துருக்க லங்கிமெ யுருகிட அமுதுகு
பெருத்த வுந்தியின் முழுகிமெ யுணர்வற
வுழைத்தி டுங்கலை கலவியை மகிழ்வது தவிர்வேனோ

இருக்கு மந்திர மொழிவகை முனிபெற
உரைத்த சம்பிரம சரவண பவகுக
இதத்த இங்கித மிலகிய அறுமுக எழில்வேளென்

றிலக்க ணங்களு மியலிசை களுமிக
விரிக்கு மம்பல மதுரித கவிதனை
யியற்று செந்தமிழ் விதமொடு புயமிசை புனைவோனே

செருக்கு மம்பல மிசைதனி லசைவுற
நடித்த சங்கர ரழிவழி அடியவர்
திருக்கு ருந்தடி அருள்பெற அருளிய குருநாதா

திருக்கு ழந்தையு மெனவவர் வழிபடு
குருக்க ளின்திற மெனவரு பெரியவ
திருப்ப ரங்கிரி யுறைபவ சரவண பெருமாளே.

(இ-ள்) இருக்கு மந்திரம்-இருக்கு வேதமாகிய மந்திரங்களின், மொழிவகை-சொல்லின் வகையை, முனிபெற-அகத்திய முனிவர் அடையும்படி, உரைத்த-உபதேசித்தருளிய, சம்பிரம-வேகத்தையுடைய, சரவணபவ-சரவணப் பொய்கையில் அவதரித்தவனே!, குக-குகன் என்னும் திருநாமம் வாய்ந்தவனே!, இதத்த-நன்மையையுடையவனே!, இங்கிதம்-கருத்து, இலகிய-விளங்கிய, அறுமுக-ஆறுதிருமுகங்களுடையவனே!' எழில் வேள் என்று-அழகுபொருந்திய முருகவேளே என்று, இலக்கணங்களும் இயல் இசைகளும்-இலக்கணங்களும் இயற்றமிழ் இசைத்

தமிழ்களும், மிக விரிக்கும் மிக விரிந்த துறைகளும், அம் பல-அழகிய பலவகைப்பட்ட, மதுரித்த இனிமையான, கவி தனை பாட்டை, இயற்-செய்கின்ற. செந்தமிழ் விதமொடு-செந்தமிழ் நூல்களை விருப்பமாக, புயமிசை-திருத் தோள்களின்மேல், புனைவோனே-தரித்துக்கொண்டிருப்பவனே!, செருக்கும்-மேம்பாடுடைய அம்பலம் மிசை-பொன்னம்பலமாகிய ஞான சபையின்கண், அசைவுற-பிர பஞ்ச பஞ்சகிருத்தியம் நிகழும்படி, நடித்த சங்கரர்-நடனம் செய்தருளிய நடேசப்பெருமானது, வழி வழி அடியவர்-பாரம்பரியமாக வந்த அடியார், திருக்குருந்த-மேன்மை பொருந்திய குருந்தமரத்தடியிலே. அருள்பெற-திருவருளைப்பெறும்படி, அருளிய - அருள் புரிந்த, குருநாத-குருநாதனே!, திரு குழந்தையும் என-அழகிய குழந்தையென்றும், அவர் வழிபடு சிவபெருமான் வழிபடுகின்ற, குருக்களின் திறம் என - ஆசாரியக் கூறும் உடையவனெனவும், வரு-வருகின்ற, பெரியவ - பெரியவனே!, திருப்பரங்கிரி - திருப்பரங்கிரி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில், உறைபவ - வசிக்கின்றவனே!, சரவணப் பெருமாளே-முருகப் பெருமானே!, அருக்கும் - அருமையான, மங்கையர் -மங்கைப்பருவமுடைய பெண்களுடைய, மலர் அடி-தாமரை மலர்போன்ற திருவடிகளை, வருடியும்-தடவியும், கருத்து அறிந்தபின் - உள்ளக்கருத்தைத் தெரிந்த பிறகு, அரைதனில் - இடுப்பிற் கட்டியுள்ள, உடைதனை அவிழ்த்தும்- சேலையினை அவிழ்த்தும், அங்குஉள - அங்கே

இருக்கின்ற, அரசு இலை தடவியும்-அரசிலைபோன்ற அல்குலைத் தடவியும், இருதோள் உற்று - இரண்டு தோள்களைப் பொருந்தி, அணைத்தும் - அணைத்துக்கொண்டும், அங்கையின்-அழகிய கையினால், அடிதொறும்-ஒவ்வொரு இடத்திலும், நகம் எழ-நகக்குறி தோன்றவும், உதட்டை மென்று-உதட்டைக் கடித்து, பல இடு குறிகளும் இட-பல்லால் செய்யப்படும் அடையாளங்களையும் செய்ய, அடிக் களம் தனில்-கழுத்தின் கீழ்ப்பாகத்தில், மயில் குயில் புறா என-மயில் குயில் புறா என்று சொல்லும்படி, வாய்விட்டு-வாயை விட்டு ஒலிசெய்ய, உருக்கும் அங்கியின்-உருக்குகின்ற நெருப்பிலே, மெழுகு என உருகிய - மெழுகைப்போல் நெகிழ்ந்த, சிரத்தை மிஞ்சிடும்-விருப்பம் மிகுந்த, அநுபவம் உறுபலம்-சுகாநுபவத்தின் மிக்க பலமானது, உற-மிகும்படி, கையின்-கைகளிலே, கனி நிகர் என-பழத்துக்கு ஒப்பென்று சொல்லும்படி, இலகிய-விளங்கிய, முலைமேல் வீழ்ந்து-முலைகளின்மேலே விழுந்து, உருகலங்கி-உடம்பு கலக்கமடைந்து, மெய் உருகிட-அறிவு உருக, அமுது உகு-அமிர்தம் சொரிகின்ற, பெருத்த உந்தியின்-பெரிய உந்தியாகிய பூந்தடத்தில், முழுகி-அழுந்தி, மெய் உணர்வு அற-மெய்யுணர்ச்சி ஒழிய(பரவசமாக), உழைத்திடும்-வருந்தும், கன கலவியை-மிக்க புணர்ச்சியில், மகிழ்வது-விருப்பங்கொள்வதை, தவிர்வேனோ-நீங்குவேனோ.

(வி-ரை) அருக்குதல் - அருமையாதல். வருடல் - தடவல். அரசிலை, இங்கு அதுபோன்ற அவயத்தைக்

குறித்தலால் உவமையாகு பெயர். மங்கை-இங்குப் பருவத்தைக் குறித்தது. அகத்தியமுனிவருக்கு உபதேசஞ்செய்தவராதலின், 'இருக்கு மந்திரமொழிவகை முனிபெற உரைத்த சம்பரம சரவணபவ' என்றார். இருக்கு மந்திர வடிவமாக இருத்தலின், 'இருக்கு மந்திரம்' என்றார். சிவபெருமான் ஆன்மாக்களுக்கு ஐந்தொழில் இயற்றும் பொருட்டு அம்பலத்தே நடனஞ் செய்கின்றார் ஆதலின், 'அம்பலமிசைகளில் நடித்த சங்கரர்' என்றார். இக்கருத்தே பற்றி அருணந்திசிவாசாரியரும்,

உலகமே யுருவமாக யோனிகள் உறுப்ப தாக
இலகுபோ ரிச்சா ஞானக் கிரியையுட் கரண மாக
அலகிலா உயிர்ப்புலன்கட் கறிவினை யாக்கி ஐந்து
நலமிகு தொழில்க ளோடு நாடகம் நடிப்பன் நாதன்.

என்றருளிச் செய்ததூஉம் காண்க.

மாணிக்கவாசகருக்குத் திருப்பெருந்துறையிலே திருக்குருந்த மரத்தின் அடியிலே இறைவன் சிவஞானபோத வுண்மையை உபதேசித்தருளினமையின், 'அடியவர் திருக்குருந்தடி அருள்பெற அருளிய குருநாதா' என்றார்.

மாணிக்கவாசகர் அன்பின் பெருக்கைத் தெரிப்பார், 'வழி வழி அடியவர்' என அவரைச் சுட்டினார்.

திருப்பரங்கிரி-திருப்பரங்குன்றம்; மதுரைக்கு மூன்று கல்லில் உள்ள முருகன் திருப்பதி.

முருகப் பெருமான் அகத்தியருக்கு உபதேசித்தமையின் 'அகத்தியனுக்கு ஒத்துரைக்கும் குருளை' என்று பெரியாரும் கூறியது காண்க.

மாணிக்கவாசகர் தாம் உபதேசம் பெற்றமையைத் தாமே தமது திருவாசகத்தில்,

கிளிவந்த மொழியாள் கேழ்கிளரும் பாதியனை
வெளிவந்த மாலயனுங் காணரிய வித்தகனைத்
தெளிவந்த தேறலைச் சீரார் பெருந்துறையில்
எளிவந் திருந்திரங்கி யெண்ணரிய இன்னருளால்
ஒளிவந்தென் னுள்ளத்தின் உள்ளே ஒளிதிகழ
அளிவந்த அந்தணனைப் பாடுதுங்காண் அம்மானாய்

என்று அருளிச் செய்திருத்தல் அறிக (3)

4 தனத்தனந்தன தனதன தனதன
தனத்தனந்தன தனதன தனதன
தனத்தனந்தன தனதன தனதன—தனதான

கறுக்கு மஞ்சன விழியிணை அயில்கொடு
நெருக்கி நெஞ்சுற எறிதரு பொழுதொரு
கனிக்கு ளின்சுவை அமுதுகு மொழிசிறு நகையாலே

களக்கொ டுங்கலி வலைகொடு விசிறியெம்
மனைக்கெ ழுந்திரு மெனமன முருகவொர்
கவற்சி கொண்டிட மனைதனி லழைகொடு கொடுபோகி

நறைத்த பஞ்சணை மிசைதனின் மனமுற
வளைத்த ணைந்தலி னிணைமுலை யெதிர்பொர
நகத்த ழுந்திட வழுதிகழ் பருகிய மிடறாடே

நடித்தெ ழுங்குரல் குழுகுழு குழுவென
இசைத்து நண்பொடு மனமது மறுகிட
நழுப்பு நஞ்சன சிறுமிகள் துயரற அருள்வாயே

நிறைத்த தெண்டிரை மொகுமொகு மொகுவென
உரத்த கஞ்சுகி முடிநெறு நெறுவென
நிரைத்த அண்டமு கடுகிடு கிடுவென வரைபோலும்
நிவத்த திண்கழ னிசிசர ருரமொடு
சிரங்கொ டுங்குவை மலைபுரை தரவிழ
நிணக்கு ழம்பொடு குருதிகள் சொரிதர அடுதீரா
திறற்க ருங்குழ லுமையவ ளருளுறு
புழைக்கை மும்மத கயமுக மிகவுள
சிவக்கொ ழுந்தென கணபதி யுடன்வரும் இளையோனே
சினத்தொ டுஞ்சம னுதைபட நிறுவிய
பாற்கு ளன்புறு புதல்வநன் மணியுரு
திருப்ப ரங்கிரி தனிலுறை சரவண பெருமாளே.

(இ-ள்) நிறைத்த தெண்திரை-வரிசையாகிய தெளிந்த அலைகள், மொகுமொகுமொகு என - மொகுமொகு எனும் ஓசையைச் செய்யவும், உரத்த கஞ்சுகி - மாரபால் ஊர்ந்து செல்லும் பாம்பாகிய ஆதிசேடனது, முடி - கிரீடமானது, நெறுநெறு என - நெறுநெறு வென்று முறியவும், நிரைத்த அண்டமும்-வரிசையாகிய உலகங்களும், கிடுகிடுகிடு என-கிடுகிடுவென்று நடுங்கவும், வரை போலும்-மலையைப் போலும், நிவந்த-ஓங்கிய, திண்கழல்-உறுதியையுடைய வீரகெண்டை யணிந்த, நிசிசரர் - அசுரர்களுடைய, உரமொடு-மார்போடு சிரம்கொடும் குவை-தலைகளாகிய கொடிய கூட்டம், மலை புரை தர-மலைபோலக் குவிந்திருப்ப, இரு நிணம் குழம்பொடு-பெரிய கொழுப்பின் குழம்புடனே, குருதிகள்-மிக்க இரத்தம், சொரி தர-

சொரியவும், அடுதிறற் போரைச் செய்யும் தைரியமுடைய வனே! திறல்-வலிமைபொருந்திய, கரு குழல் உமையவளாகிய கூந்தலையுடைய உமாதேவியாரது, அருள் உற்ற-கருணையைப் பெற்ற, புழைக்கை-துளையையுடைய துதிக்கையையும், மும்மதம்-மூன்று மதங்களையுமுடைய, கயமுகம்-யானைமுகமானது, மிக உள-மிகவும் உண்டாகிய, கணபதியுடன்-விநாயகமூர்த்தியோடு, சிவகொழுந்து என-சிவக் கொழுந்தென்று சொல்லும்படி, வரும் இளையோனே-வருகின்ற இளையவனே! சினத்தொடும்-கோபத்தோடும், சமன் உதைபட-யமனும் உதைபடும்படி, நிறுவிய பாதர்க்கு-திருவடிகளைத் தூக்கியருளிய சிவபெருமானுக்கு, உள் அன்புஉற்ற-உள்ளன்பு பொருந்திய, புதல்வ-புதல்வனே! நவமணி உகு-நவ இரத்தினங்களைச் சொரிகின்ற, திருப்பரங்கிரிதனில்-திருப்பரங்கிரி என்னும் திவ்விய ஸ்தலத்தில்; உறை சரவணப்பெருமாளே-வாழ்கின்ற சரவணப் பொய்கையில் உதித்த பெருமானே! கறுக்கும் அஞ்சனம்-கருமையான மை தீட்டிய, விழி இணை-இரண்டு கண்களாகிய, அயில்கொடு-வேற்படையைக்கொண்டு, நெருக்கி நெஞ்சு உற-அருகிற் சென்று மனத்தில் பொருந்த, எறிதரு பொழுது-வீசுகின்ற காலத்தில், ஒரு கனிக்குள-ஒப்பற்ற கோவைப்பழத்தை ஒத்த இதழில், இனசுவை-இனிய சுவை பொருந்திய, அமுது உகு-அதராமிர்தத்தைச் சொரிகின்ற, ஒரு சிறு நகையால் - ஒப்பற்ற புன்னகையினால், கொடும் களம் கவி-வளைந்த கழுத்தின்கண் தோன்றுகின்ற ஓசை

யாகிய, வலைகொடு-வலையைக்கொண்டு, விசிறி-வீசி, எம்ம னைக்கு எழுந்திரும்-எமது வீட்டிற்கு எழுந்து வருவீர், என-என்று, மனம் உருக-மனம் நெகிழும்படியாகவும், ஓர் கவசிகொண்டிட-ஒரு கவலையை அடையவும், மனைதனில்-வீட்டில், அழகொடு-அழகாக, கொடுபோகி - அழைத்துக் கொண்டுபோய் நறை, தத-வாசனை பொருந்திய, பஞ்சஅணை மிசைதனில்-பஞ்சணையாகிய படுக்கையின்மேல், மனம் உற-ஆசைமிகும்படி, வளர்த்த-கழுத்தைக் கட்டி வளர்த்து, ஆனந்தவில- போகச்செருக்கில், துணைபுலை திரண்டு தனங் களும், எதிர்பொர-ஊடலாதாமாரவின் எதிரில் பொருந்த, நகத்து அழுந்திட-நகத்தில் அழுந்த, இதழ் அமுது பரு கிய-அதரபானஞ் செய்த, பட்டு உடை-கழுத்தினங்கள், நடுத்து எழும் குரல்-பாவையோடு உண்டாகும் குரல், குமு குமு குமு என-குமு குமு என்று, இசைத்து-ஒலி யைச் செய்ய, நன்கொடு-நன்றாக, மனம் அது மறுகிட-மனம் சுழற்சி அடைய, நழுப்பு-வஞ்சிக்கும், நஞ்ச அன-நஞ்சை ஒத்த, சிறுமிகள் துயர் அற-இளைய பெண்களது துன்பமானது எனக்கு நீங்கும்படி, அருள்வாய்-அடியே னுக்கு அருள் புரிவாயாக எ-று

(வி-ரை) தெண்டிரை மொகுமொகுவென . . . . கஞ் சுகி முடி நெறுநெறுவென அண்ட முகடு கிடுகிடு வென புரைதர சொரிதர அடுதீரா என வினைமுடிவு செய்க. கடல் ஆர்ப்பரிக்கவும் ஆதிசேடன் கிரீடம் நறுங்க வும் உலகங்கள் நடுங்கவும் அசுரர்களுடைய மார்புகளும

தலைகளும் மலைபோலக் குவியவும் இரத்தம் சொரியவும் போர் செய்கின்ற நீரென்னும்படி. நிறைத்த என்றதில் இடையின ரகரம் எதுகை நோக்கி வல்லின றகரமாயிற்று; '[illegible] மாட்டங்கும் மடப்பிள்ளைகள் தறையிற் கீறிடிற் றச்சருங் காய்வரோ' என்புழிப்போல. திரை-மடிந்து வரு தலையுடைப்பது என அலைக்குக் காரணப் பெயர். பாம்பு மாரியில் ஊர்ந்து செல்லுவதாகலின் 'உரத்த கஞ்சுகி' என்றார். கஞ்சுகி-பாம்பு. கஞ்சுளி என்னும் பாடத்திற்கு உரையின்மை அறிக. வரை-மலை, இருமடியாகு பெயர். வரைதற்று, அது கணுவையுடைய மூங்கிலை யுணர்த்திப் பின்னர் மூங்கில் வளர்ந்த மலையை உணர்த்திற்றாகலின் வரை போலும் நிசிசரர் எனக் கூட்டுக, மலைபோலத் தோற்றுஞ் சிறந்த அசுரர். நிவத்தல்-உயர்தல், நிவந்த என்றபாலது நிவந்த என்றானது விகாரம். நிசிசரர்-இரவிற் சஞ்சரிப்போர், அரக்கர். புரைதரல்-ஒத்தல்; ஒரு சொன்னீர்மைத்து. குருதிகள் என்று பன்மையிற் கூறினார் பல வேறுபட்ட இரத்தங்கள் உள்ளவாதல்பற்றி. திறல் என்பதை உடைமையவளுக்குக் கூட்டுக, ஆக்கல், காத்தல், அழித்தல் முதலிய எத்தொழிலுஞ் சத்தியின்றி அமையாதாகலின் திறலுடைமையவள் என்றார். 'சிவமெனும் பொருளுமாதி சத்தியுடன் கூடின் எத்தொழிலும் வல்லதாம்' என்று பெரியோர் கூறியதூஉங் காண்க. 'அவளால் வந்த ஆக்கம் இவ் வாழ்க்கை எல்லாம்' என்றார் **அருணந்திசிவமும்**. கொழுந்து-தளிர், மாதிற்குத் தளிர்போலச் சிவத்துக்குச் சுபிர

மணியர். கணபதி-கணங்களுக்குத் தலைவர். யமன் என்பது ஜமன் என்றாகி அது சமன் என்றாயிற்று. தன்னை உள்ளன்போடு அடைந்த மெய்யடியார்களுக்கு இறப்பைத் தவிர்த்து வீட்டை அருள்பவன் சிவபெருமான் ஆதலின், யமனை உதைத்து மார்க்கண்டரைக் காத்தனர். அத்தகைய பேராற்றலும் பேரருளுமுடைய பெருமானின் மகனாதலின், நீயும் அக்குணங்களுடையை என்பார், 'சமனுதைபட நிறுவிய பரன்குளன்புறு புதல்வ' என்றார். மலைகளில் பாம்புகள் இரத்தினம் உமிழ்வதாலும், யானை, பன்றி முதலியன முத்தை ஈனுவதாலும் 'நன்மணியுகு திருப்பரங்கிரி' என்றார். சரவணன் - சரவணப்பொய்கையில் அவதரித்தவன். சரவணபவன் என்பதன் மரூஉ. கறுக்கும் என்பதில் கறு-பகுதி, கோபி, கறு என ஏவல் 'கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள' 'நிறத்துரு வுணர்த்தற்கு முரியவென்ப' என்னுந் **தொல்காப்பிய சூத்திரங்களால்** கறுப்பு வெகுளியையும் கருமை நிறத்தையும் உணர்த்தல் காண்க. கண் கூரியதாக இருத்தலினாலும் சார்ந்தாரைத் துன்புறுத்துவதாலும் வேலுக்கு உவமையாயிற்று, உவமம் வடிவமும் தொழிலும் பற்றி வந்தது, இவ்வாறு வருதலுக்கு விதி 'விரவியும் வரூஉம் மரபின என்ப' என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தைக் காண்க. மைதீட்டிய வேல்போன்ற கண்களால் நோக்கியும், மனத்தின்கண் காமக் குறிப்பாகிய இனிய சுவை தோன்றும்படி தேவாமிர்தத்தை உண்டாலொத்த இன்பத்தைத் தருகின்ற ஒப்பற்ற புன்னகையினாலும் கண

டததொனியினலும மயககி, ஆடவரைத தம வீட்டிற்கு அழைததுச சென்று பரபல லீலைகளால மயககுகின்ற இளமபெணகளைக கூடுதறகு எண்ணும துனபம நீஙகுமபடி எனககு அருளசெயவாயாக எனபது கருதது. ‘திணணிய நெஞசபபறவை சிககக குழறகாட்டிற கணணிவைபபோர மாயங கட்ககுமநா ளெந்நாளோ’ என்றார் **தாயுமானசுவாமி களும.**

கருஙகுழற செவவாய வெண்ணகைக காரமயில
ஒருஙகிய சாயல நெருஙகியுள மதாதது
கசசற நிமிர்நது கதிரததுமுன பணைதது
எயததிடை வருநத எழுநது புடைபரநது
ஈர்ககிடை போகா இளமுலை மாதாதங
கூரதத நயனக கொளளையிற பிழைததும

என **மணிவாசகர்** அருளிச செயததூஉம காணக.

புட்குரல காட்டல, அதரபானஞ செயதல, நககுறி வைததல முதலியன கலவிககுறிபபுககளாம. (4)

5 தனதநதன தநதன தநதன
தனதந்தன தநதன தநதன
தனதநதன தநதன தநதன-தனதான.

சருவும்படி வநதன னிங்கித
மதனினறிட அமபுலி யுஞசுடு
தழலகொணடிட மஙகையர் கண்களில வசமாகி
சயிலஙகொளு மனறலபொ ருநதிய
பொழிலினபயில தென்றலு மொன்றிய
தடவஞசுனை துனறி யெழுந்திடு திறமான

இரவும்பக லந்தியு நினைறிடு
குயிலவந் திசைதந்தன வெனறிட
விருகண்கள தாயின்றிட வின்றியும மயலான
விலைனஞ்சு பதனபத னென்றிடு
மயலகொணடு வருந்திய வஞசக
னினியுனறன மலாந்தில குமபத மடைவேனோ
திருவொன்றி விளங்கிய அண்டாகள
மனையினத யிருண்டவ னெணடிசை
திகழும்புகழ கொணடவன வணடமிழ பயில்வோாபின்
திரிகினறவன மஞசுநி றமபுனை
பவனமிஞசுதி றங்கொள வெனறடல
செயதுஙக முகுநதன மகிழநதருள மருகோனே
மருவுஙகட லாநதமி யுஙகுட
முழுவஙகளகு மினகுமி னெனறிட
வயமொனறிய செநதிலில வநதருள முருகோனே
மதியுஙக திரும்புய லுநதின
மறுகுமபடி யணடமி லஙகிட
வளாகினற பரஙகிரி வநதருள பெருமாளே.

(இ-ள) திரு ஒன்றிய-செலவம பொருந்திய, அணடா கள்-இடையாகளது, மனையின தயிா உணட வன-மனையிலே தயிரை உணடவனும, எண்திசை-எட்டுத திககுககளிலும், திகழும் புகழ் கொணடவன - விளஙகும புகழ்கொணடவ னும், வண தமிழ-வளவிய தமிழ் மொழியை, பயில்வோர் பின-மேன்மேலுங கறபவாகளின பினனே, திரிகினறவன்- திரிகினறவனும், மஞ்சு நிறம் புனைபவன - மேகத்தின நிறத தைப பெறறவனும், மிஞசு திறம் கொள - மிகுநத வெறறித

திரம் தனக்குண்டாக, அடல் வென்று - போரில் பகைவர்களை அழித்து, செயந்தங்க முகுந்தன்-வெற்றியின் உயர்ச்சியைக் கொண்டவனுமாகிய திருமால், மகிழ்ந்தருள் மருகோனே-மகிழ்கின்ற மருகனே!, மருவும் கடல்-ஓசைபொருந்திய கடலைப்போல, துந்துமியும்-பேரிப்பறையும், குடமுழவங்கள் - குடம்போன்ற வடிவையுடைய மத்தளங்களும், குமின் குமின் என்றிட - குமின் குமின் என்ற ஓசையைச் செய்ய, வளம் ஒன்றிய-செழுமை பொருந்திய, செந்திலில்-திருச்செந்தூர் என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில், வந்து அருள் முருகோனே-வந்து வாழ்கின்ற முருகனே!, மதியும்-சந்திரனும், கதிரும்-சூரியனும், புயலும்-மேகமும், தினம் மறுகும்படி-நாடோறும் மயங்கும்படி, அண்டம் இலங்கிட-ஆகாயம் வரையில் விளங்கும்படி, வளர்கின்ற-ஓங்கியுயர்ந்த, பரங்கிரி - திருப்பரங்கிரி என்னும் திருத்தலத்தில், வந்து அருள் பெருமாளே - வந்து வாழ்கின்ற பெருமானே!, சருவும்படி-தழுவுவதற்கு, வந்தனன் - வந்து, இங்கிதம் மதன் நின்றிட-மனக்குறிப்பைப் புலப்படுத்தும் மன்மதன் இடையில் நிற்க, அம்புலியும் சுடுதழல் கொண்டிட - சந்திரனும் மிக்க நெருப்பைப்போலும் வெம்மையைக்கொள்ள, மங்கையர் - மங்கைப்பருவமுடைய பெண்களது, கண்களின் வசம் ஆகி-கண்களிலே வசப்பட்டு, சயிலங்கொளும்-பொதிய மலையிலுள்ள, மன்றல் பொருந்திய-வாசனை பொருந்திய, பொழிலின் பயில-சோலைகளிலே வீசுகின்ற, தென்றலும்-தென்றற்காற்றும், ஒன்றிய-குளிர்ச்சி பொருந்திய, தடம் சுனைதனை-

அகன்ற அழகிய கணைகளிலே, துன்றி எழுந்திட-நெருங்கி வர, திறம் ஆன - கூறுபாட்டையுடைய, இரவு பகல் அந்தியும் - இரவிலும் பகலிலும் அந்திப்பொழுதிலும், நின்றிடு குயில்-நிலைபெற்றுள்ள குயில், வந்து இசை - வந்து குரலை, தந்தன என்றிட-தந்தன என்று கூவ, இருகண்கள் -இரண்டு கண்களும், துயின்றிடல் இன்றியும்-தூங்குவதில்லாமலும், மயல் ஆன இவன் - காமப்பக்கத்தைக்கொண்ட எனது, நெஞ்சு-மனம், பதன்பதன் என்றிட-பதைப்பதைக்க, உடல் கொண்டு வருந்திய வஞ்சகன் - உடலைப்பெற்று வருந்திய வஞ்சகச் செயலுடையவனாகிய நான், இனி உன்றன்-இனிமேல் தேவரீருடைய, மலர்ந்து இலகும்-தாமரை மலரைப் போல விரிந்து விளங்கும், பதம் அடைவேனோ - திருவடிகளைப் பெறுவேனோ எ-று.

(வி-ரை) மயல் கொண்டவர்களுக்குச் சந்திரன் காய்தலும், தென்றல் வீசுதலும், குயில் கூவுதலும் அம்மயலைப் பெருக்கித் துன்பஞ் செய்யுமாதலின் 'சருவும்படி குயில் வந்திசை தந்தன வென்றிட' என்று கூறினார். ஆன்மாக்களுக்குக் காமத்தை விளைப்பவன் மன்மதன் என்பது புலவர் மரபு. சந்திரனைச் சுடுகின்றாயென்று கூறல் காமமிகுதி நோக்கி,

'செப்பிளங் கொங்கைமீர் திங்கட் சுடப்பட்டுக்
கொப்புளங் கொண்ட குளிர்வானை—இப்பொழுதும்
மீன்பொதிந்து நின்ற விசும்பென்பது என்கொலோ
தேன்பொதிந்த வாயால் தெரிந்து.'

என்று **புகழேந்திப்புலவர்** கூறியதூஉம் காண்க.

> கொள்ளை கொள்ளக் கொதித்தெழும் பாற்கடல்
> பள்ள வெள்ள மெனப்படருந் நிலா
> உள்ள முள்ளுற் றுயிரைத் தொடருமால்
> வெள்ளை வண்ண விடமுமுண் டாங்கொலோ
> கொடியை யல்லைநீ யாரையுங் கொல்கிலாய்
> வடிவி னன்னமுந் தத்தொடும் வந்தனை
> பிடியின் மென்னடைப் பெண்ணொடென் றுலெனைச்
> சுடுதி யோகடல் தோன்றிய திங்களே

என்னும் **இராமாயணச் செய்யுட்**களாலும் இக்கருத்தைச் செவ்விதின் அறிக.

தென்றல் பொதியமலையிற் பிறந்ததாகலான் அங்கேயுள்ள சந்தனமரங்களின் மணத்திலே தோய்ந்து, பொழில்களிற் சென்று ஆங்குள்ள நறுமலர்களின் மணங்களையும் நுகர்ந்து அழகிய சுனைகளிற் படிந்து, குளிர்ந்து வந்து வீசி மையலை மிகுக்கும் என்பார் 'சயிலங்கொளும் . எழுந்திடும்' என்றார்.

> 'மலயத் துதித்து மதுரையில் வளர்ந்து
> புலவர் நாவிற் பொருந்திய தென்றல்'

என்றார் **இளங்கோவடிகளார்**,

குயில் இசைத்தல் காமம் விளைத்தலை,

> 'ஊடினீரெல்லா முருவிலான் தன்னாணை
> கூடினீரென்று குயில் சாற்ற'

என்னுஞ் **சிலப்பதிகாரச் செய்யு**ளாலும் அறிக.

திருவடி அடைதலே வீடென்பார் 'பதமடைவேனோ' என்று கூறினார். 'சேவடி படருஞ் செம்மல் உள்ளம்' என்ற

திருமுருகாற்றுப்படை. அடிகளுக்கு நச்சினார்க்கினியர் இவ்வாறே உரைகூறி,

‘கேட்டாயோ தோழி கிறிசெய்த வாறொருவன்
தீட்டார் மதில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டித்
தாட்டா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி
நாட்டார் நகைசெய்ய நாமேலை வீடெய்த
ஆட்டான்கொண் டாண்டவா பாடுதுங்காண் அம்மானாய்’

என்னும் **மணிவாசகப் பெருமான்** திருவாக்கை எடுத்துக் காட்டியதூஉம் காண்க. திருவொன்றிய அண்டர்கள் என்றது தருக்க கண்ணபிரான் தம்மிடத்தே உள்ள புல்லிய தயிரை உண்டு விளையாடுதற்குரிய நல்வினையையுடைய இடையர் என்று பொருளுரைத்தலுமாம். நீலமேனியையுடையவன் ஆதலின், ‘மஞ்சுநிறம் புனைபவன்’ என்றார். முகுந்தன்—முத்தி கொடுப்பவன்.

‘வண்டமிழ் பயில்வோர் பின் திரிகின்றவன்’ என்றது திருக்கச்சித் தலங்களுள் ஒன்றாகிய திருவெஃகாவில் திருமழிசை ஆழ்வார் யோகஞ் செய்திருந்தனர். அக்காலை அவரைக் கணிகண்ணர் என்பவர் வழிபட்டுவந்தார். அப்போது வயது சென்ற பரத்தை ஒருத்தி ஆழ்வார் திருவுள முவப்பப் பணிவிடைகள்புரிந்து, அவர் கருணையினால் மீண்டும் இளமை அடைந்து அழகிற் சிறந்து விளங்கினாள். அவளது பொலிவைக் கண்டு, பல்லவராயன் என்னும் அரசன் மையல் கொண்டு அவளுடன்கூடி வாழ்ந்து வந்தான். அவ

னுக்கு மூப்புப்பருவம் எய்தியது அப்போது அவன் பரத்தை வாயிலாக அவளுக்கு இளமைவந்த வரலாற்றை உணர்ந்து, கணிகண்ணரை ஆழ்வாரைத் தன்னிடம் அழைத்து வரும்படி கூறினன் அவர் ஆழ்வார் ஒரிடத் திற்கும் எழுந்தருளமாட்டார் என்றனர். அங்ஙனமாயின் 'நீரேனும் நான் இளமை பெறும்படி எனமீது ஒருகவி பாடுக' என்று கேட்க, அவர் தாம் நரஸ்துதி செய்வதில்லை யென மறுத்தனர் அதுகேட்டு அரசன் கோபமடைந்து, 'நீர் நம ஊரை விட்டுப் போவீராக' என்றன அவரும் அதனை ஆழ்வாருக்கு விண்ணப்பித்தனர், ஆழ்வார் பெருமா ளிடத்தில் இதனை விண்ணப்பஞ் செய்து,

'கணிகண்ணன் போகின்றன காமரு பூங் கச்சி
மணிவண்ணா நீயிங் கிராதே—துணிவுடனே
செந்நாப் புலவனியான் செல்கின்றேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாயசுருட்டிக் கொள்'

என்ற பாட்டை அருளிச் செய்தார். இதனைக்கேட்ட பெருமாள் ஆழ்வார் சொன்னவண்ணமே அவரைப் பின் தொடர்ந்து சென்றார் கச்சிநகரம் பொலிவழிந்தது. அது கண்டு அரசன் கணிகண்ணரைப் பிரார்த்திக்க, அவர் ஆழ வாரைப் பிரார்த்திக்க ஆழ்வார்,

'கணிகண்ணன் போகொழிந்தான் காமருபூங் கச்சி
மணிவண்ணா நீயிங் கிருக்க—துணிவுடனே
செந்நாப் புலவனியான் செலவொழிந்தேன் நீயுமுன்
பைந்நாகப் பாயப்படுத்துக் கொள்' [ற்ன

என்று பாடி யருளினார். அதுபோன்றே திருமால் அத்தலத் தில் சயனத் திருக்கோலமாக எழுந்தருளினார் என்பது

இதனால் பெருமானுக்குச் சொன்னவண்ணஞ் செய்த பெருமாள் என்று ஒரு பெயர் வழங்குகின்றது. வடமொழியாளர் 'யதோக்தகாரி' என்பர். இதனைக் **குமரகுருபர சுவாமிகள்,** 'பணிகொண்ட துத்திப் படப்பாயல் சுருட்டுப் பணைத்தோ ளெருத்தத்திலிட்டுப் பழமறைகள் முறையிடப் பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங்கொண்டலே' என்று அருளிச் செய்தனர்.

6 தனத்தனந் தந்ததான
தனத்தனந் தந்ததான
தனத்தனந் தந்ததான – தனதான

வரைத்தடங் கொங்கையாலும்
வளைப்படுஞ் செங்கையாலும்
மதர்த்திடுங் கெண்டையாலும் அனைவோரும்

வடுப்படுந் தொண்டையாலும்
விரைத்திடுங் கொண்டையாலும்
மருட்டிடுஞ் சிந்தைமாதர் வசமாகி

எரிப்படும் பஞ்சுபோல
மிகக்கெடுந் தொண்டனேனும்
இனற்படுந் தொந்தவாரி கரையேற

இசைத்திடுஞ் சந்தபேத
மொழித்திடுந் தண்டைசூழும்
இணைப்பதம் புண்டரீகம் அருள்வாயே

சுரர்க்குவஞ் சஞ்செய்சூரன்
இளக்கிரௌஞ் சந்தனோடு
துளக்கெழுந் தண்டகோளம் அளவாகத்

துரத்தியன் றிந்த்ரலோகம்
அழித்தவன் சம்பிரதாயம்
சுடப்பிர சண்டவேலை விடுவோனே

செருக்கெழுந் தும்பர்சேனை
துளக்கவென் றண்டமூடு
தொனித்திடுஞ் சங்கபாணி மருகோனே

தினைப்புனஞ் சென்றுலாவு
குறத்தியின் அன்பராகுந்
திருப்பரங் குன்றமேவு பெருமாளே.

(இ-ள்) சுரர்க்கு - தேவர்களுக்கு, வஞ்சம் செய் - கொடுமைசெய்கின்ற, சூரன் இளைய கிரௌஞ்சன் தனனோடு - பதுமாசுரன் தன் தம்பியாகிய கிரவுஞ்சனோடு, துளக்க எழுந்து - அசையும்படி எழுந்து, அண்டகோளம் அளவு ஆக - ஆகாயம் வரையில், துரத்தி அன்று - துரத்திக்கொண்டு சென்று அக்காலத்தில், இந்த்ரலோகம் அழித்தவன் - இந்திரலோகத்தை அழித்தவனாகிய அவனது, சம்பிரதாயம் - பரம்பரையை, சுட - கொளுத்த, பிரசண்ட வேலை - பெரிய மிக்க வலிவுடைய வேலை, விடுவோனே - விடுபவனே!, உம்பர் சேனை - தேவர்களுடைய சேனையானது, செருக்கு எழுந்து - களிப்படைந்து, துளக்க என்று - ஊக்கங்கொண்டு அசையவேண்டி, அண்டம் ஊடு - ஆகாயத்தைப் பரவும்படி, தொனித்திடும் - ஒலிக்கின்ற, சங்கபாணி - பாஞ்சசன்னியம் என்னுஞ் சங்கைக் கையிலே தரித்த திருமாலுக்கு, மருகோனே - மருகனே!,

தினை புனம்-தினைக் கொல்லையிலே, சென்று உலாவு-போய்த் திரிகின்ற, குறத்தியின்-வள்ளி நாயகியின், அன்பா ஆகும்-காதலராகவுள்ள, திருப்பரம் குன்றம்-திருப்பரங் குன்றத்தில், மேவும்-வாசஞ்செய்யும், பெருமாளே-பெருமானே', வரை - மலைபோலும், தடம் கொங்கையாலும் - பருத்த தனங் களாலும், வளைபடும் - வளையல்களைத் தரித்த, செம் கையாலும்-சிவந்த கைகளாலும், மதர்த்திடும் கெண்டையாலும்-மகிழ்ச்சியையுடைய கெண்டைமீனை யொத்த கண்களாலும், அனைவோரும்-எல்லோரும், வடு செயும்-வடுவைச் செய்கின்ற, தொண்டையாலும் - கொவ்வைக் கனியை யொத்த இதழாலும், விரைத்திடும் கொண்டையாலும்-மணம் வீசுகின்ற கொண்டையினாலும், மருட்டிடும்-மயக்குகின்ற, சிந்தை மாதர்-பலவகைப்பட்ட எண்ணத்தை யுடைய மாதர்களின், வசம் ஆகி-வசப்பட்டு, எரிபடும் பஞ்சுபோல-நெருப்பிற் பட்ட பஞ்சைப்போல, மிக கெடும் தொண்டனேனும்-பெரிதும் கெடுகின்ற அடியேனும், இன்னல்படும் தொந்தவாரி - துன்பமடையும் ஆசையாகிய தொடர்ச்சியையுடைய பிறவிக்கடலினின்றும், கரை ஏற-முத்தியாகிய கரையைச் சேர, இசைத்திடும் சந்தபேதம்-புகழ்ந்து பேசப்படும் சந்த வேற்றுமைகளை, ஒலித்திடும்-ஒலிக்கின்ற, தண்டைசூழும்-தண்டைகளால் சூழப்பட்ட, இணைபதம்-இரண்டு திருவடிகளாகிய, புண்டரீகம்-தாமரை மலர்களை, அருள்வாய்-அருள் செய்வாயாக எ-று. ஏ-அசை நிலை.

(வி-ரை) மாதர்கள தமது அழகிற சிறநத அவயவங களால காமததை ஊடட மதிமயஙகி ஆசையுடபடடுப பல வகைபபடட தொடாபுணடு பிறவியாகிய கடலிற கிடநதுழ லும அடியேன வீடாகிய கரையிற சோவதறகு உன திரு வடிகளாகிய புணையை அருள செயயவேண்டும என்பது கருதது. வரை தனஙகளுககு வடிவததால உவமை மதாத தல-களிததல. கெணடை-கெண்டைமீன, கெணடைமீன வடிவததாலும பிறழசசியாலும கணகளுக குவமை. கோவைப பழததைப பிளநதாலொதத செம்மையையுடைய இதழ எனபாா 'வடுபபடுந தொணடன' எனறாா. சிநதை மாதா எனறது மாதா பலதிறபபடட எணணமுடையவா ஆதலையும அவரது எணணம அறியககூடாத தனமை யுடைததாதலையும் குறிததற கெனக

'அததி மலருமகுஙகாககை வெணணிறமுங
கததுபுனல மீனபதமுங கணடாலும—பிததரே
காணாதெரியற கடவுளருங காணபரோ
மாணா விழியாா மனம'

எனற ஆன்றோா வாககையும நோககுக

'எரிபபடும் பஞசு' எவவாறு தனககும பிறாககும் பய னின்றி அழியுமோ அதுபோல மாதாகளின தொடாபால எனககும பிறாககும் பயனினறி ஒழிநதே னெனபாா 'எரிப படும் பஞசுபோல மிகக் கெடுந தொண்டன்' என்றாா

'தவஞ்செயவாா தஙகருமஞ் செய்வார் மறறல்லாதாா
அவஞ்செய்வாா ஆசையுட் படடு' என்றாா வள்ளுவனாரும்.

காரணகாரியத் தொடர்ச்சியாய்க் கரையின்றி வருத லின் பிறவியைத் 'தொந்தவாரி' என்றார். பிறவியாகிய கடலைக் கடத்தல் இறைவனுடைய திருவடி இன்றியமையா தென்பார்,

'இணைப்பத புண்டரீகம் அருளவாயே' என்றார்.

'பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தவர்' என்ற திருக்குறளையுங் காண்க.

இவ்வாறே **மணிவாசகரும்,**

தனியனேன் பெரும்பிறவிப் பவ்வத் தெவ்வத்
தடந்திரையா லெற்றுண்டு பற்றொன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயா ரென்னுங் காலாற்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்
டினியென்னே யுய்யுமா றென்றென் றெண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை
முனைவனே முதலந்த மில்லா மல்லற்
கரைகாட்டி யாட்கொண்டாய் மூர்க்க னேற்கே

என்றருளிச் செய்ததூஉங் காண்க.

வஞ்சம்-கொடுமை (பிங்கல நிகண்டு) அண்டகோளம்-அண்டமாகிய உருண்டை.

திருமாலின் சங்கின் பெயர் பாஞ்சசன்னியம். இப்பி யாயிரஞ் சூழ்ந்தது இடம்புரி; இடம்புரி ஆயிரம் சூழ்ந்தது வலம்புரி; வலம்புரி ஆயிரம் சூழ்ந்தது சலஞ்சலம்; சலஞ் சலம் ஆயிரம் சூழ்ந்தது பாஞ்ச சன்னியம். (6)

7. தனனதந்த தத்தத்தத் தந்த
தனனதந்த தத்தத்தத் தந்த
தனனதந்த தத்தத்தத் தந்த-தனதான

கருவடைந்து பத்துற்ற திங்கள்
வயிறிருந்து முற்றிப் பயின்று
கடையில்வந்து தித்தித்த குழந்தை வடிவாகி
கழுவியங்கெ டுத்துச் சுரந்த
முலையருந்து விக்கக் கிடந்து
கதறியங்கை கொட்டித் தவழ்ந்து நடமாடி
அரைவடங்கள் கட்டிச் சதங்கை
யிடுகுதம்மை பொற்சுட்டி தண்டை
யவையணிந்து முற்றிக் கிளர்ந்து வயதேறி
அரியபெண்கள் நட்பைப் புணர்ந்து
பிணியுழன்று சுற்றித் திரிந்த
தமையமுன்கருப் பச்சித்த மென்று பெறுவேனோ
இரவியிந்தரன் வெற்றிக் குரங்கின்
அரசரென்றும் ஒப்பற்ற வுந்தி
யிறைவனெண்கி னக்கர்த்த னென்றும் நெடுநீலன்
எரியதென்றும் உருத்ரற் சிறந்த
அனுமனென்றும் ஒப்பற்ற அண்டர்
எவருமிந்த வர்க்கத்தில் வந்து புனமேவ
அரியதன்ப டைக்கர்த்த ரென்று
அசுரர்தங்கி ளைக்கட்டை வென்ற
அரிமுகுந்தன் மெய்ச்சற்ற பண்பின் மருகோனே
அயனையும் புடைத்துச்சி னந்து
வுலகமும்ப டைத்துப் பரிந்து
அருள்பரங்கி ரிக்குட் சிறந்த பெருமாளே.

(இ-ள்) இரவி இந்திரன-சூரியனும் இந்திரனும், வெற்றி குரங்கின-வெற்றிபொருந்திய குரங்குகளுக்கு, அரசர் என்றும்-அரசராகிய வாலி சுக்கிரீவர் என்றும், உந்தி இறைவன்-பிரமன், எண்கு இனம் காத்தன் என்றும்- கரடி முகச் சேனைகளுக்குத் தலைவனாகிய சாம்பவன் என்றும், எரி அது-அக்கினிதேவன், நெடு நீலன் என்றும்-நெடிய நீலன் என்னும் சேனாபதி என்றும், உருத்திரன - உருத்திர மூர்த்தி, சிறந்த அனுமன் என்றும்-சிறப்புப் பொருந்திய அனுமான் என்றும், ஒப்பு அற்ற அண்டர் எவரும்-உவமையில்லாத தேவர்கள் எல்லாரும், இந்த வர்க்கத்தில் வந்து-இந்த வானரக் கூட்டத்தில் வந்து, புனம் மேவ-பூலோகத்தை அடைய, அரிய தன்படை-அவர்களைத் தன்னுடைய அருமையான படைகட்கு, கர்த்தர் என்று - தலைவரென்று கொண்டு, அசுரர் தம்-இராக்கதர்களுடைய, கிளை கட்டை வென்ற-சுற்றமாகிய கூட்டத்தை வெற்றிகொண்ட, அரி முகுந்தன்-விஷ்ணுமூர்த்தி, மெச்சு உற்ற-புகழ்ந்து கொண்டாடிய, பண்பின - தன்மையையுடைய, மருகோனே - மருகனே!, அயனையும்-பிரமனையும், புடைத்து - குட்டி, சினந்து - கோபித்து, உலகமும் படைத்து - உலகத்தையும் சிருட்டித்து, பரிந்து-அதனைக் காத்து, அருள் பரங்கிரிக்குள் - அருளையுடைய திருப்பரங்கிரி என்னுந் திவ்வியஸ்தலத்தில், சிறந்த - சிறப்போடு வீற்றிருக்கும், பெருமாளே-பெருமானே!, கரு அடைந்து-கருப்பத்தைப் பொருந்தி, பத்து உற்ற திங்கள்-பத்துமாதம் வரையிலும்,

வயிறு இருந்து வயிற்றில் தங்கி, முற்றி பயின்று-முதிர்ந்து அங்கே வசித்து, கடையில் வந்து உதித்து - பத்துமாதமும் முடிந்தபின் வந்து தோன்றி, குழந்தை வடிவு ஆகி-குழந்தை வடிவத்தைப்பெற்று, கழுவி அங்கு எடுத்து-அதனைக்கழுவி அங்கே கையிலேந்தி, சுரந்தமுலை - பாலசுரந்த தனங்களை, அருந்துவிக்க-உண்பிக்க, கிடந்து-தரையின்மேற் கிடந்து, கதறி - அழுது, அங்கைகொட்டி - உள்ளங்கையைத்தட்டி, தவழ்ந்து நடம் ஆடி - தவழ்ந்து நடந்து, அரைவடங்கள்-அரையில் கட்டும் கயிறுகளை, கட்டி-அணிவித்து, சதங்கை இடு குதம்பை - சதங்கையையும் இடப்பட்ட குதம்பையையும், பொன் சுட்டி-பொன்னாலாகிய சுட்டியையும், தண்டை அவை அணிந்து-தண்டையையும் தரித்து, முற்றி கிளர்ந்து-முதிர்ந்து மேலோங்கி, வயது ஏறி - வயதடைந்து, அரிய பெண்கள்-விட்டுநீங்குதற்கு அருமையான பெண்களுடைய, நட்பை புணர்ந்து - நட்பிற் சேர்ந்து, பிணி உழன்று - காம நோயால் வருந்தி, சுற்றித் திரிந்தது - ஒரு நிலையின்றிச் சுற்றித் திரிந்தது, அமையும் - அடியேனுக்குப் போதும், உன் கிருபைச் சித்தம் - தேவரீருடைய திருவுள்ளக் கருணையை, என்று பெறுவேனோ-எக்காலத்தில் அடைவேனோ எ-று.

(வி-ரை) தாயின் வயிற்றில் பத்துத் திங்களும் தங்கிய பல துன்பங்களைநுகர்ந்தும், குழந்தைப்பருவத்திலும் வாலிபப்பருவத்திலும் துன்பங்களை அநுபவித்தும் வருகின்றேன்; இனியேனும் உன் திருவருளைப் பெறுவேனோ என்றார். கருவில்தோன்றிய நாள்தொடங்கி உயிர்போகும்வரை

பல துன்பமே என்பார், 'சுற்றித் திரிந்தது அமையும்' என்றார்.

'வேதநூற் பிராயம் நூறு மனிசர்தாம் புகுவ ரேனும்
பாதியு முறங்கிப் போகும் நின்றதில் பதினை யாண்டு
பேதைபா லகன தாகும் பிணிபசி மூப்புத் துன்பம்
ஆதலாற் பிறவி வேண்டேன் அரங்கமா நகரு ளானே'

என்ற ஆழ்வார் கருத்தும் ஈது.

தாய் வயிற்றில் உயிர் பத்துத் திங்களும் படும் துன்பத்தை மாதா உதரத்து,

'ஈனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்
ஒருமதித் தான்றியி னிருமையிற் பிழைத்தும்
இருமதி விளைவி னொருமையிற் பிழைத்தும்
மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்
ஈரிரு திங்களிற் பேரிருள் பிழைத்தும்
அஞ்சு திங்களின் உய்ஞ்சுதல் பிழைத்தும்
ஆறு திங்களின் ஊறலர் பிழைத்தும்
ஏழு திங்களில் தாழ்புவி பிழைத்தும்
எட்டுத் திங்களிற் கட்டமும் பிழைத்தும்
ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்துந்
தக்க தசமதி தாயொடு தான்படுந்
துக்கசாரத் துயரிடைப் பிழைத்தும்'

என்வரூஉம் **மாணிக்கவாசக சுவாமிகள்** திருவாக்கான் அறிக.

பத்துஉற்ற திங்கள்-பத்து என்னும் எண்ணைப்பொருந்திய திங்கள்; பத்துமாதம் பயின்று-பயில்பகுதி. குழந்தை-இளமைப்பொருளுணர்த்தும் குழவு என்னும் உரியடியாகப்

பிறந்த பெயர். 'மழவுங் குழவு மிளமைப்பொருள்' என்பது **தொல்காப்பியம்.**

அருந்துவி-பிறவினை அரைவடங்கள்-இடையில தரிக்கும் மாலைகள் முதலியன. சதங்கை-சிறுமணி; முகுந்தன-முத்தி கொடுப்பவன என்பது சொற்பொருள

சூரியன் வாலியாகவும் இந்திரன சுக்கிரீவனுகவும் பிரமன சாம்புவானுகவும அக்கினிதேவன் நீலனுகவும உருத்திரன் அனுமானுகவும தோன்றி இராமபிரானுக்கு இராவணனை அழிக்கத துணையாயினராதலின, 'இரவி ... வந்து' என்றருளிச செய்தார. முருகன பிரணவத்தின பொருளை அறியாத பிரமன சிரத்தில குட்டி . அவன படைப்புத தொழிலையும தாமே செயதருளும பேராற்றல உடையாராதலின 'அயனையும பெருமாளே' என்றனர அயனையும் என்பதிலுள்ள உம்மை உயர்வு சிறப்பு (7)

8 தந்தனந் தந்ததன தந்தனந் தந்ததன
தந்தனந் தந்ததன-தனதான.

மன்றலங் கொந்துமிசை தெந்தனந் தெந்ததென
வண்டினங் கண்டுதொடா குழலமாதா

மண்டிடுந் தொண்டையமு துண்டுகொண் டன்புமிக
வம்பிடுங் கும்பகன தனமாரபில்

ஒன்றஅம பொன்றுவிழி கன்றஅங் கங்குழைய
உந்தியெனு கின்றமடு விழுவேனை

உன்சிலம புங்கனக தண்டையுங கிண்கிணியும்
ஒண்கடம புமபுனையும அடிசேராய்

பன்றியங் கொம்புகமடம் புயங்க சுரர்கள்
பண்டையென் பங்கமணி பவர்சேயே
பஞ்சரங் கொஞ்சுகிளி வந்துவந் தைந்துகர
பண்டிதன் தம்பியெனும் வயலூரா
சென்றுமுன் குன்றவர்கள் தந்தபெண் கொண்டுவளர்
செண்பகம் பைம்பொன்மலர் செறிசோலை
திங்களுஞ் செங்கதிரு மங்குலுந் தங்குமுயர்
தென்பரங் குன்றிலுறை பெருமாளே.

(இ-ள்) பன்றி-பன்றியினுடைய, அம்-அழகிய, கொம்பு-கொம்பையும், கமடம் ஆமையோட்டையும், புயங்கம்-பாம்பையும், சுரர்கள்-தேவர்களுடைய, பண்டை என்பு-பழமையாகிய எலும்பையும், அங்கம் அணிபவர் - திருமேனியில் தரிக்கின்றவராகிய சிவபெருமானுக்கு, சேயே-திருக்குமாரனே!, பஞ்சரம்-கூட்டில், கொஞ்சு கிளி-கொஞ்சிப் பேசும் கிளிகள், வந்துவந்து-அடிக்கடி வந்து, ஐந்துகர பண்டிதன்-ஐந்து கரங்களையுடைய விநாயகமூர்த்தியின், தம்பி எனும்-தம்பியென்று கூறும், வயலூரா-வயலூர் என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தை உடையவனே!, சென்று-தினைப்புனத்துக்குப் போய், முன் குன்றவர்கள்-முற்காலத்தே குறவர்கள், தந்த பெண்-மணஞ் செய்துகொடுத்த வள்ளியம்மையாரை, கொண்டு-மனைவியாக ஏற்றுக்கொண்டருளி, வளர் ஓங்கி வளர்கின்ற, செண்பகம்-செண்பகச்செடியில், பைம்பொன்-பசுமையான பொன்னையொத்த மலர்பூக்கின்ற, செறி சோலை-மரங்கள் அடர்ந்த சோலையையுடைய, திங்களும்-சந்திரனும், செங்கதிரும்-சூரியனும், மங்குலும்-மேகமும்,

தயங்கும்-தயங்குகின்ற, உயர்-உயர்ந்த, தென்பரங்குன்றில் - தென்றிசையிலுள்ள திருப்பரங்குன்றிலே, உறை பெருமாளே-வாழ்கின்ற பெருமானே, மணம்-வாசனைபொருந்திய, கொந்தம் இசை-பூங்கொத்தின்மேல், தெந்தனந் தெந்தனென்ன-தெந்தனனென்னும் ஒலியுடன், வண்டு இனம்-வண்டின் கூட்டம், கண்டு தொடர்-பார்த்துத் தொடர்கின்ற, குழல் மாதர்-கூந்தலையுடையபெண்கள் மண்டிடும்-நெருங்கியுள்ள, தொண்டை அமுது உண்டு-இதழ்களாகிய கோவைக் கனியின் அமிர்தத்தை உட்கொண்டு, அன்புமிக-ஆசை அதிகரிக்க, மேல் இடும்-கச்சை அணிகின்ற, கும்பம்-யானைமத்தகத்தை ஒத்த, கனதன மார்பில்-பாரமான தனங்களுள்ள மார்பில், ஒன்ற-பொருந்தவும், அம்பு ஒன்று விழி-அம்பையொத்த கண்கள், கன்ற-பொலிவழியவும், அங்கம் குழைய-உடல் சோர்வையடையவும், உந்தி என்கின்ற மடுவிழுவேனை-தேர்த்தட்டை ஒத்த அல்குல் என்னும் மடுவில் விழுகின்றவனாகிய அடியேனை, சிலம்பும்-சிலம்புகளையும், கனக தண்டையும்-பொன்னாலாகிய தண்டைகளையும், கிண்கிணியும்-கிண்கிணியென்னும் ஆபரணத்தையும், ஒண்கடம்பும்-ஒளி பொருந்திய கடப்பமாலையையும், புனையும்-தரித்துள்ள, உன் அடிசேர-தேவரீரது திருவடிகளிலே சேர்த்தருளுவாயாக.

(வி-ரை) மணமெம் என்பதில், அம்சாரியை கொத்து கொந்தென மெலித்தல் விகாரம் பெற்றது. 'மாதர் காதல்' என்னுஞ் சூத்திரத்தால் மாதர் காதலுடையவர் என்பது போதரும். மண்டுதல்-நெருங்குதல், மிகுச் செல்லுதல்.

தொண்டை அமுது-அதரபானம். 'பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி, வாலெயி றூறிய நீர்' என அதரபானத் தின் சுவை மிகுதியைத் திருவள்ளுவ நாயனாரும் சிறப்பித் துக் கூறியது காண்க. தும்பா-துடமெனினும் அமையும். யானைமத்தகம் தனங்களுக்கு வடிவால் ஒப்புவமை. அம்பு-கண்ணுக்குக் கூர்மையால் உவமை. கலவியிலே கண் முத லிய உறுப்புக்கள் மாறுதல் இயற்கை ஆதலின், 'விழி கன்று அங்கம் குழைய' என்றார் 'வாயிற் சிவப்பை விழிவாங்கக் கண்ணின் வெளுப்பை வாய் வாங்கத், தோய்க் கலவி யமு தளிப்பீர் கடாப்பொற் கபாடந் திறமினோ' என்று **கலிங்கத் துப்பரணி யாசிரியரும்** உந்தி-தொத்தட்டு அஃது இங்கே அதனை யொத்த அல்குலை உணர்த்திற்று.

> 'கொங்கை இளநீரால் குளிர்ந்த இளஞ் சொற்கரும்பால்
> பொங்கு சுழியென்னும் பூந்தடத்தில்—மங்கைதன்
> கொய்தாம வாசக் குழல்நிழற்கீழ் ஆறேனோ
> வெய்தாம் காம விடாய்,

என்ற **புகழேந்திப் புலவர்** வெண்பாவில் சுழி என வருதலும் காண்க.

உம்மைகள் எண்ணுப்பொருளன. பன்றியின் கொம்பு ஆமையோடு, பாம்பு, எலும்பு முதலியவற்றைச் சிவபெருமான் அணிபவர் ஆதலின், 'பன்றி .. .. அணிபவர்' என் றார். இதனை 'செத்தார்தம் எலும்பு அணிந்து சேவேறித் திரி வீர்' என்றார். என்றும் 'நங்காயிதென்ன தவம் நரம்போ டெலும்பு அணிந்து கங்காளந் தோள்மேலே காதலித்தான்

காணேடி' என்றும் 'கங்கையும் மதியும் பாம்பும் கடுக்கையும் முடிமேல் வைத்த' என்றும், 'என்பணியாரம் பூண்ட இறைவன்' என்றும் வரும் திருவாக்குகளான் அறிக- செறி சோலை- மரங்களடர்ந்த சோலை 'வெயிலுழை பறியாக் குயிலுழை பொதும்பர்' என்றார் **மதுரைக்காஞ்சியிலும்.** தென்-அழகெனலுமாம் (8)

திருச்செந்தில்

9 தனன தானன தந்தன தந்தன
தனன தானன தந்தன தந்தன
தனன தானன தந்தன தந்தன-தனதான.

கமலமாதுடன் இந்திரை யுஞ்சரி
சொலவொணாதம டந்தையர் சந்தன
களப சீதள கொங்கையில் அங்கையில் இருபோதேய

களவுநூல்தெரி வஞ்சனை யஞ்சன
விழியில் மோகித கந்தசு கந்தரு
கரிய வோதியில் இந்துமு கந்தனில் . மருளாதே

அமல மாகிய சிந்தைய டைந்தகல
தொலைவி லாதஅ றம்பொரு ளின்பமும்
அடைய வோதியு ணர்ந்துவ ணந்தபின் அருள்தானே

அறியு மாறுபெ றும்படி யன்பினின்
இனிய நாதசி லம்பு புலம்பிடும்
அருண ஆடக கிண்கிணி தங்கிய அடிதாராய்

குமரி காளிப யங்கரி சங்கரி
கவுரி நீலிப ரம்பரை யம்பிகை
குடிலை மோகினி சண்டினி குண்டலி எமதாயி

குறைவி லாளுமை மந்தரி யந்தரி
வெகுவி தாகம சுந்தரி தந்தருள்
குமர மூஷிக முந்திய ஐங்கர கணராயன்
மமவிநாயகன் நஞ்சுமிழ் கஞ்சுகி
யணிக சானன விம்பமே ரம்புலி
மவுலி யானுறு சிந்தையு கந்தருள் இளையோனே
வளரும் வாழையு மஞ்சளு மிஞ்சியும்
இடைவி டாதுநெ ருங்கிய மங்கல
மகிமை மாநகர் செந்திலில் வந்துறை பெருமாளே.

(இ-ள்) குமரி-அழியாத தன்மையுடையவளும், காளி-கறுப்பு நிறமுடையவளும், பயங்கரி-தீமை செய்பவர்களுக்கு அச்சத்தைச் செய்பவளும், சங்கரி-ஆன்மாக்களுக்குச் சுகத்தை ஊட்டுகின்றவளும், கவுரி-பசுமைநிறமுடையவளும், நீலி-தூர்க்கையும், பரம்பரை-தேவியும், அம்பிகை-உலகத்துக்குத் தாயும், குடிலை-பிரணவமந்திரமாயிருப்பவளும், யோகினி-யோகத்தைச் செய்பவளும், சண்டினி-பாபத்தின்மேல் கோபமுள்ளவளும், குண்டலி-குண்டலிசத்தியாயுள்ளவளும், எமது ஆயி-எம்முடைய தாயாக உள்ளவளும், குறைவிலாள்-எக்குறைபாடுமில்லாதவளும், உமை-உமையென்று திருநாமந்தரித்தவளும், மந்தரி-மந்தமான இசையுடையவளும், அந்தரி-ஆகாயத்திலுள்ளவளும், வெகுவித ஆகம சுந்தரி-பலவகைப்பட்ட ஆகமங்களிலே பிரதிபாதிக்கப்பட்ட அழகுடையவளுமாகிய உமாதேவியார், தந்து அருள் - பெற்றருளிய, குமர - திருக்குமாரனே, மூஷிகம் - பெருச்சாளியை, உந்திய-செலுத்திய, ஐங்கரம் - ஐந்து கரங்களை

யுடைய, கணராயன-கணராஜனும், மமவிநாயகன்-நமது விநாயகப் பெருமானும், கஜானன விம்பன - அழகிய யானை முகத்தை யுடையவருமாகிய கணேசப் பெருமானுக்கும், நஞ்சு உமிழ் கஞ்சுகி - விஷத்தைக் கக்குகின்ற பாம்பை அணிந்தவனுமாகிய, ஓர் அம்புலி மவுலியான - சந்திரனை அணிந்த சடையுடையவராகிய சிவபெருமானும், உற்று சிந்தை உகந்து அருள்-மிக்க தமது மனத்தில் விரும்பியருளிய, இளையோனே-முருகனே!, வளரும் வாழையும்-வளர்கின்ற வாழைமரமும், மஞ்சளும்-மஞ்சட்செடியும், இஞ்சியும் - இஞ்சிச்செடியும், இடைவிடாது நெருங்கிய - இடைவிடாமல் நெருங்கியுள்ள, மங்கலம் - பொலிவுபெற்ற, மகிமை-பெருமையுடைய, மா நகர்-சிறந்த நகரமாகிய, செந்திலில் - திருச்செந்தூரில், வந்து உறை - வந்து தங்கிய, பெருமாளே - பெருமானே!, கமல மாது உடன் - செந்தாமரை மலரில் வசிக்கும் திருமகளும், இந்திரையும்-இந்திராணியும், சரிசொல ஒணு-ஒப்புச்சொல்லமுடியாத, மடந்தையர்-பெண்களது, சந்தனம் களபம்-சந்தனத்தையும் கலவைச் சாந்தையும் பூசிய, சீதள கொங்கையில்-குளிர்ச்சிபொருந்திய ஸதனங்களிலும், அம்கையில்-அழகிய கைகளிலும், இருபோது எய் - இரண்டு குவளைமலர்களை ஒத்த, களவு நூல் தெரி-களவைப்பற்றிச் சொல்லும் சாத்திரத்தைத் தெரிந்த, வஞ்சனை-பொய்யையுடைய, அஞ்சன விழியில்-மைதீட்டிய கண்களில், மோகித-மயக்கத்தைத்தருகின்ற, கந்த சுகம் தரு - வாசனையாகிய சுகத்தைக் கொடுக்

இன்ற, கரிய ஓதியில - கருநிறம் பொருந்திய கூந்தலினும், இந்து முகமதனில்-சந்திரனை ஒத்தமுகத்திலும், மருளாது-மயங்காமல், அமலம் ஆகிய - பரிசுத்தமான, சிந்தை அடைந்து-மனத்தைப் பெற்று, அகல-அகன்று, தொலைவு இலாத - முடிவில்லாத, அறம் பொருள் இன்பமும் - தர்மார்த்த காமமும், அடைய-அடைவதற்கு, ஓதி உணர்ந்து-கற்றுத் தெரிந்து, தணந்தபின்-முடிந்தபிறகு, அருள்-திருவருளை, அறியும் ஆறு - அறியும் ஞானத்தை, பெறும்படி-அடையும்படி, அன்பினின்-அன்பினாலே, இனிய நாத-இனிமையான ஒலியையுடைய, சிலம்பு புலம்பிடும் - சிலம்புகள் ஒலிக்கின்ற, அருண ஆடக-சிவந்த பொன்னாலாகிய, கிணிகிணி தங்கிய-கிண்கிணி பொருந்தியுள்ள, அடி தாராய்-திருவடிகளை அருள்செய்வாயாக என்று.

(வி-ரை) திருமகளும் இந்திராணியும் அழகாற் சிறந்தவர்களாதலின் அவர்களினும் மிக்க அழகுடையார் என்பார் 'கமல மாது ... மடந்தையர்' என்றனர்.

களபம்-கலவைச்சாந்து. ஆடவர்க்கு ஆசையை விளைத்துத் துன்பஞ்செய்யும் உறுப்புக்களிற் கொங்கைகளே முதன்மையுடையனவாதலின் அவைகளையே முற்கூறினார், 'கடாஅக் களிற்றின்மேற் கட்படாம் மாதர், படாஅமுலை மேற்றுகில்' என்று **திருவள்ளுவருங்** கூறுதல்காண்க. இக்கருத்தே பற்றி 'திருவளர் தாமரை' என்னுந் **திருக்கோவையார்** செய்யுள் உரையில், 'மகளிர்க்கு உறுப்பிற் சிறந்த உறுப்பாகிய முலைக்குவமையாகப் புணர்க்கப்பட்ட கோங்கிற்கு அடை

கொடுக்கக் கடவதன்றோ வெனின், அடை கொடுப்பிற் பிற வுறுப்புக்களுடன் இதனையும் ஒப்பித்ததாம். ஆகலான் இதற்கடை கொடாமையே முலைக்கேற்றத்தை விளக்கி நின்றது' என்று **பேராசிரியர்** உரைத்தார். பெண்கள் தமது கண்களின் இயக்கத்தாலே தமது உட்கருத்துக்களை அவ்வப்போது வெளிப்படுத்தும் பேராற்றல் வாய்ந்தவராதல் பற்றியும் அக்கண்களின் பார்வை சமயத்துக்கேற்றபடி அமிழ்தம் போலவும் நஞ்சுபோலவும் தோன்றி இன்பத்துன்பங்களை ஆக்கலானும் அவற்றின் பிறழ்ச்சியால் ஆடவர் மனம் பிணிக்கப்படுதலானும், 'களவு நூல் தெரி வஞ்சனை அஞ்சனவிழி' என்றார். இவ்வுண்மையினை, 'நாட்டம் இரண்டும் மதிப்புடம் படுத்தற்குக் கூட்டி யுரைக்குங் குறிப்புரை யாகும்,' என வரும் **தொல்காப்பிய** சூத்திரத்தானும், கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள் என்ன பயனுமில' 'கண்களவு கொள்ளுஞ் சிறுநோக்கங் காமத்திற், செம்பாகம் அன்று பெரிது' எனவரும் **திருக்குறட்களானும்** 'பிணியுமதற்கு மருந்தும் பிறழப் பிறழ மின்னும், பணியும்புரை மருங்குற் பெருந்தோளி படைக் கண்களே' எனவரும் **திருக்கோவைச்** செய்யுளின் அடிகளானும் உணர்க. ஓதி-கூந்தல். இந்துமுகம்-சந்திரனை ஒத்தமுகம் அமலமாகிய சிந்தை-பரிசுத்தமான மனம். அறத்தின் பாகுபாடு அளவிறந்தன எனப்பார், 'அகலத்தொலைவிலாத அறம்' என்றார். அறம் பொருளின்பங்களைக் கூறும் நூல்களை முறைப்படி மரபு நிலை திரியாத் தொல்லாணை நல்லாசிரியர்பால் கற்றுணர்ந்து

அறிவு நிரம்பிய பின்னரே இறைவன் அருளின் உண்மை இனிது விளங்குமாதலின் 'அறம் பொருள் . . . பெறும் படி' என்றருளிச்செய்தார். புலம்புதல்-ஒலித்தல். குடிலை என்றது பிரணவ மந்திரத்திற்கு உரியவளாய் இருத்தலின், யோகினி என்றார். 'எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்' என்றபடி இறைவன் யோகவடிவங் கொள்ளுங் கால் தானும் யோகவடிவங்கொண்டு ஆன்மாக்களுக்கு யோக ஞானத்தை உணர்த்துதலான். குண்டலி-பாம்புபோல மண்டலித்திருக்கும் சத்தி, இதுவே படைப்பைச் செய்வது. உலகத்துக்கெல்லாந் தாயாதலின் 'எமது ஆயி' என்றார். 'சந்ததம் எனக்கு மகிழ் தந்தை நீயுண்டு நின் தன்னிடத்து ஏமவல்லி தாயுண்டு' என்றார் பிற்காலத்தாராகிய **இராமலிங்கசுவாமி**களும். உமை என்பதற்குத் தவத்தினின்று தடுக்கப்பட்டவள் என்று பொருள், (மா-பெண்ணே, உ-வேண்டாம்) விநாயகன்-வி-இன்மை, நாயகன்-தலைவன், தனக்கொரு தலைவனில்லாதவன் என்பது பொருள்.

தக்கன் சாபத்தால் கலை குறையப்பட்ட சந்திரன் சிவபெருமானிடத்தே அடைக்கலம் புகுந்த, அவனைக் காப்பாற்றுநிமித்தம் சடையின்கண்ணே தரித்தாராதலின், 'அம்புலிமவுலியான்' என்று சிவபெருமானைக் குறித்தார். இறைவன் ஞானவடிவமான சந்திரனைச் சூடுதல் தமது பேரறிவுடைமையை விளக்கும் என்பதனை, 'தூமதி சடைமிசைச் சூடுதல் தூநெறி ஆமதி யானென அமைத்தவாறே' என்னும் **பட்டினத்தார்** திருவாக்கான் அறிக. (9)

10 தனனதன தந்த தந்தன
தனனதன தந்த தந்தன
தனனதன தந்த தந்தன-தனதான

இருகுழையெ றிந்த கெண்டைகள்
ஒருகுமிழ டர்ந்து வந்திட
இணைசிலைநெ ரிந்தெ ழுந்திட அணைமீதே
இருளளக பந்தி வஞ்சியின்
இருகலையு டன்கு லைந்திட
விதழமுத ருந்து சிங்கியின் மனமாய
முருகொடுக லந்த சந்தன
அளறுபடு குங்கு மங்கமழ்
முலைமுகடு கொண்டெ ழுந்தொறு முருகார
முழுமதிபு ரிந்த சிந்துர
அரிவைய ருடன்க லந்திடும்
அறிவிலன லம்பு ரிந்திட அருள்வாயே
எரிவிடநி மிர்ந்த குஞ்சியின்
நிலவொடுமி லைந்த கங்கையும்
இதழியொ டணிந்த சங்கரர் களிகூரும்
இமவரைத ருங்க ருங்குயில்
மரகதநி றந்த ருங்கிளி
யெனதுயிரெ னுந்த ரியமகை பெருவாழ்வே
அரைவடம லம்பு கிண்கிணி
பரிபுரநெ ருங்கு தண்டைகள்
அணிமணிச தங்கை கொஞ்சிட மயில்மீதே
அகமகிழ்வு கொண்டு சந்ததம்
வருகுமர முன்றி லின்புறம்
அலைபொருத செந்தில் தங்கிய பெருமாளே

(இ-ள்) எரிவிடம் - எரிகின்ற விஷமானது, நிமிர்ந்த குஞ்சியின்-ஓங்கியசடையில், நிலவொடு எழுந்த கங்கையும்-சந்திரப்பிறையுடனே ஆரவாரத்தோடு வந்த கங்கையையும், இதழியொடு அணிந்த சங்கரர்-கொன்றைமாலையுடனே தரித்துக்கொண்ட சிவபெருமான், களிகூரும் - மகிழ்ச்சி மிக்கொள்ளும், இமவரை தரும் கரும் குயில் - இமயமலை அரசன் பெற்ற கரிய குயில் போன்றவரும், மரகத நிறம் தரும் கிளி - பசுமை நிறத்தையுடைய கிளிபோன்றவரும், எனது உயிர் எனும் திரியம்பகி - என்னுடைய உயிரென்று சொல்லப்படும் மூன்று திருக்கண்களுடையவளுமாகிய உமா தேவியாரது, பெருவாழ்வே - பெரிய வாழ்வுபோன்ற திருக் குமாரனே!, அரை வடம் - அரையிலே அணியும் மாலையும், அலம்பு கிண்கிணி-சப்திக்கும் கிண்கிணியும், பரிபுரம்-சிலம்பும், நெருங்கு தண்டைகள் - நெருங்கிய தண்டைகளும், அணிமணி சதங்கை - அழகிய மணியாலாகிய சதங்கையும், கொஞ்சிட-மிழற்ற, மயிலேறி மயிலின்மேல், அகம் மகிழ்வு கொண்டு - மன மகிழ்ச்சியோடு, சந்ததம் - எப்போதும், வரு குமர - வருகின்ற முருகனே!, முன்றிலின் புறம் - திருக்கோயிலின் முற்றத்தில், அலை பொருத - அலைமோதுகின்ற, செந்தில் தங்கிய - திருச்செந்தூரென்னும் திவ்விய தலத்தில் எழுந்தருளியிருக்கின்ற, பெருமாளே - பெருமானே!, இருகுழை-இரண்டு குண்டலங்களையும், எறிந்த கெண்டைகள் - தாக்கிய கெண்டைபோன்ற விழிகள், ஒரு குமிழ் அடாது வந்திட-ஒரு குமிழ்போன்ற மூக்கை

நெருங்கி வரவும், இணைசிலை - இரண்டு வில்லையொத்த புருவங்களும், நெரிந்து எழுந்திட - நெரிப்புக்கொண்டு விளங்கவும், அணைமீது - படுக்கையின்மேல், இருள் அளகபந்தி- இருண்ட கூந்தலின் ஒழுங்கு, வஞ்சியின் - வஞ்சிக்கொடி போன்ற இடையிலே, இருகலையுடன் - தரித்த ஆடையுடனே, குலைந்திட - அவிழ்ந்துவிழவும், இதழ் அமுது - இதழினது அமிர்தத்தை, அருந்து சிங்குவை - பருகுகின்ற நாவினால், மனம் மாய - நெஞ்சு அழியவும், முருகொடு - பரிமளத்தோடு, கலந்த சந்தனம் - சேர்ந்த சந்தனமும், அளறுபடு - சேறாக உள்ள, குங்குமம் கமழ் - குங்குமம் மணக்கின்ற, முலை முகடு கொண்டு - முலையாகிய உச்சியைப்பற்றி, எழுந்தொறும் - எழும்போதெல்லாம், முருகு ஆர வாசனையை நுகர, முழுமதி - பூரண சந்திரனையொத்த முகத்திலே, சிந்துரம் புரிந்து - சிந்துரப்பொட்டை விருப்பத்துடன் அணிந்த, அரிவையருடன் - பெண்களுடன், கலந்திடும் - கூடி வாழ்கின்ற, அறிவிலன் - அறிவில்லாதவனாகிய அடியேனுக்கு, நலம்பிறந்திட - நன்மை உண்டாக, அருள்வாய் - திருவருள் செய்வாயாக.

(வி-ரை) குமிழ் என்றது குமிழம்போன்ற மூக்கை; உபமான வாசகத்தால் உபமேயம் சொல்லப்பட்டதால் இஃது உருவக உயர்வு நவிற்சியணி. கண்களின் நீட்சியையும் விரைந்து பாயும் நோக்கத்தையும் கூறுவார் 'குழை எறிந்த கெண்டைகள் குமிழடாந்து சந்திட' என்றார். இவ்வாறே அதிவீரராம பாண்டியரும்,

குமிழ்மிசை மறிந்து குழையெதிர் நடந்து
கொலைதொழில் மரபினைப் பயின்று
அமிழ்தினின் விளைந்துள நஞ்சினிற் கருகி
யையரிசி தறிமை தோய்ந்து
கமலமென மலரை வனம்புகுத் தியவேற்
கண்ணிணை மானமருணோக்கந்
தமதெனக் கவர்ந்து கொண்டவோர் மடமான்
தடங்கணின் செயல் கவர்ந்தனவோ,

என்று கூறியது காண்க. சிங்குவு-நாக்கு முருகு-பரிமளம். அரிவை என்றது ஈண்டுப் பருவப்பெயரன்று பகீரதன் வேண்டுகோளால் பூமியின்மேல் வந்த கங்கை செருக்குற்று உயிர்களை அழிக்கத் தலைப்படுகையில், சிவபெருமான் தமது சடையின்கண் அஃது ஒரு திவலையாக அடங்கச்செய்தனர். இதனை,

மலைமகளை ஒருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தால் அவன்தலையில் சாருமது என்னேடீ
சலமுகத்தால் அவன்தலையில் சாராளேல் உலகமெல்லாம்
பிலமுகத்தால் உகப்பாய்ந்து பெருங்கேடாம் சாழலோ.

என்னும் **மணிவாசகப் பெருமான்** திருவாக்கான் உணர்க. இதழி-கொன்றை. கொன்றைமாலையை இறைவன் சூடுதலை, 'கண்ணிகார் நறுங்கொன்றை, காமர் வண்ண மார்பிற் றாருங்கொன்றை' என்று **பெருந்தேவனார்** கூறுமாற்றான் அறிக. சிவபெருமானுக்குக் கொன்றை அடையாளப்பூ; அது பிரணவத்தின் வடிவமாய் இருத்தலின், அதனைச் சூடுவோர் பிரணவத்தால் அறியப்படும் பரம்பொருளாவார்

என்பது தோன்றுதல் காண்க. சங்கார ஆன்மாக்களுக்கு இன்பத்தைச் செய்பவர், சங்கார கருத்தர் எனினுமாம். சங்கார காரணனாகிய இறைவனை இன்பஞ்செய்பவன் என்று கூறுதல் பொருந்துமோ எனின்? பொருந்தும் என்னை? படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழிலுக்கும் இறைவர் இவரே ஆதலினாலும்; அயன், அரி முதலினோர் இவர் ஏவலினாலே படைத்தல் காத்தல்களைப் புரிவதன்றித் தாமே ஒரு தொழிலை இயற்றுதற்கு ஆற்றலிலராதலினாலும், அழித்தல் தொழில் ஆன்மாக்களுக்கு இளைப்பாற்றுதலேயன்றி வேறன்மையானும் இவ்வைந்து தொழில்களும் அருளாலே செய்யப்படுவனவேயன்றிப் பிறிதின்மையானும் என்பது இக்கருத்துப்பற்றி **உமாபதி சிவாசாரிய சுவாமிகள்** சிவப்பிரகாசத்தில்,

‘ஏற்றவிவை அரனருளின் திருவிளையாட்டாக இயம்புவர்கள்
அணுக்கள் இடர்க்கடனின்று மெடுத்தே
ஊற்றமிக அருள்புரிதலேதுவாக உரைசெய்வர்
ஒடுக்கமிளைப் பொழித்தல் மறைத்த
தோற்றமலபாகம்வரக் காத்தல் போகந் துய்ப்பித்தல்
திரோதாயி நிறுத்தலாகும்
போற்றலரும் அருளருளே யன்றி மற்றுப் புகன்றவையும்
அருளொழியப் புகலொணாதே’

என்று திருவாய்மலர்ந்தருளினார்.

‘இமையவர் தருங்கருங்குயில்’ என்று பாடமோதித் தெய்வயானை என்று கூறுவார் கூற்று, தெய்வயானை அம்மையாருக்குப் பசுநிறமின்மையானும் மூன்று விழிகளின்மை

யானும், 'சங்கரர்களிகூரும்' என்பதனோடு இயையாமையா னும், பொருந்தாமை காண்க. திரியம்பகி-மூன்று கண்களை யுடையவள் 'தம்பொருள் என்ப தம்மக்கள்' ஆதலின் 'திரியம்பகி பெருவாழ்வே' என்றார் (10)

11 தந்த தானன தானன தந்த தானன தானன
தந்த தானன தானன-தனதான.

வெஞ்ச ரோருக மோகடு நஞ்ச மோகய லோநெடு
விஞ்சு சாகர மோவடு வகிரோமுன்
வெந்துபோனபு ராதன சம்பராரிபு ராரியை
வென்ற சாயக மோகரு விளையோகணை
நஞ்ச மோயம தூதுவர் நெஞ்ச மோவெனு மாமத
சங்க மாதர்ப யோதர மிகமூழ்கி
சங்கையோவிரு கூதள கந்த மாலிகை தோய்தரு
தண்டை சேகழ லீவதும் ஒருநாளே
பஞ்ச பாதக தாருக தண்ட னீறெழ வானவர்
பண்டு போலம ராபதி குடியேறப்
பங்க யாசனர் கேசவ ரஞ்ச லேயென மாலவரை
பங்க நீறெழ வேல்விடும் இளையோனே
செஞ்ச டாடவி மீமிசை கங்கை மாமதி தாதகி
திங்கள் சூடிய நாயகர் பெருவாழ்வே
செண்ப காடவி நீடிய துங்க மாமதில் சூழ்தரு
செந்தில் மாநகர் மேவிய பெருமாளே.

(இ-ள்) பஞ்ச பாதக தாருக தண்டன் நீறு எழ- பஞ்சமகா பாதகங்களைச் செய்து வந்த தாருகாசுரனானவன் அழியவும், வானவர் - தேவர்கள், பண்டுபோல - முன்போ

லவே, அமராவதி குடி ஏற-தெய்வலோகத்திற்குக் குடிபுக வும், பங்கயாசனார்-தாமரை மலரை இருக்கையாகவுடைய பிரமதேவனும், கேசவா-திருமாலும, அஞ்சல என-தஞ்ச மென்று கூறிக் குறையிரப்பவும், மாலவரை - பெரிய கிரௌஞ்சகிரியை, பங்கம நீறு எழ-தோல்வியடைந்து சாம் பராகவும, வேல்விடும்-வேற்படையைச் செலுத்தும், இளை யோனே-இளையவனே! செமசடாவி மீமிசை-சிவந்த சடை யாகிய காட்டினமேல, கங்கை-கங்கையையும், மாமதி-சிறந்த சந்திரனையும, தாதகி-ஆத்தி மலரையும, திங்கள்-சந்திரனை யும், சூடிய- தரித்துள்ள, நாயகா-சிவபெருமானது, பெரு வாழ்வே-பெரிய செல்வமே!, செண்பகாடவி - செண்பகக் காடு, நீடிய- சிறந்த, துங்கம் மாமதில்-உயர்ந்த பெரிய மதில கள், சூழ்தரு-சூழ்ந்துள்ள, செந்தில் மாநகர்-திருச்செந்தூர் என்னும் திவ்விய தலத்தில, மேவிய-எழுந்தருளியுள்ள, பெருமாளே-பெருமானே!, வெம சரோருகமோ-விரும்பத் தக்க தாமரை மலரோ, கடுநஞ்சமோ-மிக்க ஆலகால விஷமோ, கயலோ - கயலமீனோ, நெடு இன்ப சாகரமோ - சிறந்த இன்பக்கடலோ, வடு வகிரோ-மாமபிஞ்சின் பிளவோ முனவெந்துபோன-முன்னொருகால் வெந்தழிந்த, புராதன- பழைய, சம்பராரியை-மன்மதனை, புராரி - சிவபெருமான, வென்ற - வெற்றிகொண்ட, சாயகமோ- அம்போ, கரு விளையோ - கருவிளைமலரோ, கண்-கண்கள், யமதூதுவர் நெஞ்சமோ-யமதூதருடைய மனமோ, எனும் மாமத - என்று சொல்லும் மிக்க மதத்தையுடைய, சங்க மாதர் -

சங்கு வளையல்களைத் தரித்த பெண்களுடைய, பயோதரம் அதில்-ஸ்தனங்களில், முழுகு-முழுகுகின்ற, சங்கை-அச்சம், ஓவ-நீங்க, இருகூந்தள கந்த மாலிகை-பெரிய கூந்தள மலராகிய வாசனை பொருந்திய மாலை, தோயதரு-அணிந்துள்ள, தண்டைசேர்-பரிசை தரித்த, கழல் ஈவது - திருவடிகளை எனக்கு தருவது, ஒரு நாள்-எந்நாளோ?

(வி-ரை) வெம்மை-விருப்பம் 'வெம்மை வேண்டல்' என்பது தொல்காப்பிய சூத்திரம் விரி கூடுங் குறிப்பை உணர்த்தாது சிறப்பு நோக்கத்தால் ஆடவருக்குப் பேரின்பம் பயத்தல் பற்றி அதனை 'இன்பசாகரம்' என்றார் மாமயிலின் சின்னமிளவு கண்ணை ஒத்திருத்தலின் அதனை கண்ணோடு ஒப்பித்தார் கண் பொது நோக்கத்தான் நோக்கப்பட்டாருக்குச் செய்யும் துன்ப மிகுதியினால் அதன் கொடுமையைச் சிறப்பிக்கக் கருதி அம்பென்று வாளாகூறாது 'வெந்து போன புராதன சம்பராரிபுராரியை வென்ற சாயகமோ' என்றார் மன்மதனைச் சிவபெருமான் நெற்றிக் கண்ணால் எரித்தாரென்பது உண்மையாயினும் அம்பால் எரித்தாரென்று கூறியது எடுத்துக்கொண்டபொருளைச் சிறப்பிக்கும் பொருட்டுக் கூறும் கவிமரபு புராரி-திரிபுரங்களை எரித்தவர். இரண்டனுருபைப் பிரித்துக் கூட்டுக இங்ஙனம் பிரித்துக் கூட்டுவதற்கு விதி பிரயோக விவேகந்திற் காண்க. 'மாதர் யமனும் அவர் தம்மைவிழியே வலைபாசம், பீந்தரும் அல்குற் பெருநரகம்' என்றார் சிதம்பரசுவாமிகளும். 'மாதர் பயோதரம் என்றதற்குக் காதலை விளைவிக்கும் தனங்கள்

என்றுரைப்பினுமமையும். மூழ்குதல்-மனஞ் செலுத்திப் பிறிதொன்றை நினையாதிருத்தல். சங்கை-அச்சம். கழல்- ஆகுபெயரான திருவடியை உணர்த்திற்று. கழல் - வீரக் கொண்டை, பஞ்சபாதகம்-பொய் சொல்லல், கள்ளுண்டல், களவு செய்தல், கொலை செய்தல், காமங் கொள்ளல். அமராவதி-இந்திரலோகம். பங்கயம் ஆசனர் - பங்கயாசனர். கேசவ -கேசி என்னும் அசுரனைக் கொன்றவர், அழகிய மயிரை உடையவர், சடாடவி, வடமொழிச்சந்தி. தாதகி- ஆத்தி, **வாதவூரடிகள்** புராணம் காண்க. (11)

12 தன்ன தனதன தனதன தனதன
தன்ன தனதன தனதன தனதன
தன்ன தனதன தனதன தனதன-தனதான.

களப மொழுகிய புளகித முலையினர்
கடுவு மமிர்தமும் விரவிய விழியினர்
கமழ்வு சரியழ கொழுகிய குழலினர் எவரோடும்

கலக மிடுகய லெறிகுழை விரகியர்
பொருளி லிளைஞரை வழிபடு மொழிகொடு
தளர விடுபவர் தெருவினி லெவரையும் நகையாடிப்

பிளவு பெறிலதி லளவள வொழுகியர்
நடையி லுடையினி லழகொடு திரிபவர் [வோடே
பெருகு பொருள்பெறி லமளியி லிதமொடு குழை

பிணமு மணைபவர் வெறிதரு புனலுணும்
அவச வனிதையர் முடுகொடு மணைபவர்
பெருமை யுடையவ ருறவினை விடவருள் புரிவாயே

அளையி லுறைபுலி பெறுமக வயிறு
பசுவி னிரைமுலை யமுதுண நிரைமகள்
வசவ னொடுபுலி முலையுண மலையுடன் உருகாநீள்

அடவி தனிலுள உலவைகள் தளிரவிட
மருள மதமொடு களிறுகள் பிடியுடன்
அகலவெளியுயர் பறவைக ணிலம்வர விரலசேரேழ்

தொளைகள் விடுகழை விரல்முறை தடவிய
இசைகள் பலபல தொனிதரு கருமுகில்
சுருதி யுடையவ னெடியவன் மனமகிழ் மருகோனே

துணைவ குணதர சரவண பவநம
முருக குருபர வளரறு முககுக
துறையி லலையெறி திருநக ருறைதரு பெருமாளே.

(இ-ள்) அளையில்-குகையில், உறைபுலி பெறுமகவு-வசிக்கின்ற புலி ஈன்ற குட்டி, அயிறுதரு பசுவின்-நீருண்ணும் பசுவினுடைய, முலை அமுது உண-முலையினின்று பொழியும் பாலைக் குடிக்க, நிரைமகள்-பசுவின் பெண் கன்று, வசவனொடு-ஆண்கன்றுடன், புலிமுலை உண-புலியின் முலையை ஊட்ட, மலையுடன் உருகா-மலையுடனே உருகுகின்ற, நீள் அடவிதனில் உள உலவைகள்-நீண்ட காட்டினகண் உள்ள மரங்கள், தளிர் விட-தளிர்க்க, களிறுகள் பிடியுடன் மதமொடு மருள-ஆண்யானைகள் பெண்யானைகளுடன் மதங்கொண்டு மருட்சி அடைய, அகலவெளி உயர் பறவைகள்-அகன்ற ஆகாயத்தே உயரப்பறக்கின்ற பறவைகள், நிலம் வர-பூமியில் வர, விரலசேர-விரலைச் சேர்க்கின்ற, ஏழ் துளைகள் விடுகழை-ஏழுதுளைகள் விட்ட புல்லாங்குழலை,

விரல்முறை தடவிய-விரலால் முறையே தடவின, இசைகள் பலபட்ட-பலவகைப்பட்ட இராகங்கள், தொனிதரு-சப்திக்கின்ற, கருமுகில்-கரிய மேகம் போன்ற திருமேனியை யுடையவனும், சுருதி உடையவன்-வேதங்களால் துதிக்கப் பட்டவனும், நெடியவன்-உலகமெல்லாம் நீண்டவனுமாகிய திருமால், மனம் மகிழ் மருகோனே-மனமகிழ்ச்சி அடைகின்ற மருமகனே!, துணைவ-எல்லோருக்கும் துணையா யிருப்பவனே!, குணதர - எண்குணங்களை உடையவனே!, சரவணபவ-சரவணப் பொய்கையில் அவதரித்தவனே!, நம முருக-வணங்கத்தக்க இளையவனே!, குருபர - மேன்மை பொருந்திய குருவாக இருப்பவனே!, வளர் அறுமுக-ஊழி தோறும் வளர்கின்ற ஆறு திருமுகங்களை உடையவனே!, குக-அடியார் மனக்குகையில் எழுந்தருளி யிருப்பவனே!, துறையில் அலை எறிதரு நகர் உறைதரு பெருமாளே-துறையிலே அலைகளை வீசுகின்ற அழகிய திருச்செந்தூர் என்னும் நகரத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமாளே!, களபம் ஒழுகிய புளகித முலையினர்-கலவைச்சாந்து பூசிய குமிழ்ப்பையுடைய முலைகளையும், கடுவும் அமிர்தமும் விரவிய விழியினர் -விஷமும் அமிர்தமும் கலந்த கண்களை யுடையவரும், கழுவு சரி புழுகு ஒழுகிய குழலினர்-தூய்மையான நல்ல மயிர்ச்சாந்து தடவிய கூந்தலை யுடையவரும், எவரோடும்-யாவரோடும், கலகமிடு கயல் எறி குழை விரகியர் -காமப் போரைச் செய்யும் கயல்மீனால் வீசப்பட்ட குண்டலங்களை அணிந்த தந்திர முடையவர்களும், பொருளில் இளைஞரை-பொருளில்லாத வாலிபர்களை, வழிகொடு மொழிகொடு

தளர விடுபவர்-சுழியைக்கொண்டு பல சொற்களைப் பேசித் தளரும்படி விடுபவரும், தெருவினில் எவரையும் நகையாடி-தெருவிலே எல்லாரையும் புன்னகை செய்து, பிளவு பெறில்-அந்நங்கையில் மைந்தர் மனம் வேறுபடுமாயின், அதில் அளவு அளவு ஒழுகியர்-அவர்கள் ஆசையின் அளவுக்கு ஏற்றபடி நடப்பவர்களும், நடையினில் உடையினில் - நடையாலும் உடையாலும், அழகொடு திரிபவர்-அழகுடனே உலாவுபவரும், பெருகு பொருள் பெறில்-மிக்க பொருளைப் பெற்றால், அமளியில்-படுக்கையில், இதமொடு குழைவொடு-மேன்மையுடனும் உருக்கத்துடனும், பிணமும் அணைபவர்-பிணத்தையும் தழுவுகின்றவர்களும், எறிதரும் புனல் உணும் அவச வனிதையர்-உமிழ்கின்ற எச்சிலை உண்கின்ற தன்வசமற்றவருமாகிய விலைமகளிரை, முடிகொடுமை அணைபவர்-விழைந்து சேர்கின்றவர்களாகிய, பெருமை உடையவர்-இகழ்ச்சியுடையவர்களது, உறவினை-நட்பை, விட அருள் புரிவாய்-கைவிடும்படி அருள் செய்வாயாக எ-று.

(வி-ரை) தம்மால் விரும்பப்பட்ட ஆடவர்களுக்கு இன்பத்தையும் விரும்பப்படாதவருக்குத் துன்பத்தையும் விளைத்தலைப் பற்றி விழிகளை 'கடுவும் அமிர்தமும் விரவிய விழியினர்' என்றார். அன்றிப் பொதுநோக்கால் கடுவையும் சிறப்பு நோக்கால் அமிர்தத்தையும் ஒத்திருத்தலின், இவ்விரண்டு பொருள்களின் தன்மையும் கலந்தன விழிகள் என்றுரைப்பினும் அமையும். கடு-விஷம். இக்கருத்தே பற்றித் திருத்தக்கதேவர்,

'சேலனைய சில்லரிய கண்டசிவந்து கருமணியும்
பால்கத்துட் பதித்தன்ன படியவாய முனிவரையும்
மாலுறுப்ப மகிழ்செய்வ மாண்பினஞ்சு மமிர்தமுமே [வே'
போலுணர்த்த பொருகயற்கண் செவியுறப் போந்தகன்றன

என்றருளிச் செய்வாராயினர் கண்களின் நீட்சியைச் சிறப்பிப்பார் 'கயலெறிகுழை' என்றனர். பொருள் அளிப்பவர் யாவராயினும் அவருக்குப் பொய்யன்பு காட்டி, அவரது அறிவை மயக்கிக் கூடிப் பின் பொருளற்றவுடன் துரத்துவோ ராதலின், 'உருவினை விடவருள் புரிவாயே' என்றனர். இத்தன்மையை,

இழிபவர் உயர்ந்தோர் மூத்தோர் இளையவர் கழியர் நோயாற்
கழிபவர் யாவரேனுங் கண்வலைப்பட்டு நெஞ்சம் [துகாட்டிப்
அழிபவர் பொருள்கொண் டெள்ளுக்கெண்ணெய்போலளந்
பழிபடும் போகம் விற்பார் ஆவணப் பண்பு சொல்வாம்

என வரூஉம் **திருவிளையாடற்புராணச்** செய்யுளானு மறிக. பெருமை, ஈண்டுச் சிறுமையைக் குறிப்பால் உணர்த்திற்று. குழலோசையின் இனிமையால் உருகித் தீயவிலங்குகளும் தம் பொல்லாங்கு ஒழிந்தன ஆதலின், 'புலிபெறு மக வயிற்று பசுவினிறை முலையமுதுண' என்றனர். மரங்கள் தளிர்த்தன என்றும் வானிற் செல்லும் பறவைகள் நிலத்தை நாடி வந்தன என்றும் கூறியது இசையின் சுவைமிகுதியை உணர்த்தற்பொருட்டெனக. களிறு - ஆண் யானை; மதக் களிப்பை யுடையது என்பது தாதுப்பொருள். பிடி-பெண் யானை. கருமுகில்-கரிய மேகம்போன்ற நிறத்தையுடைய திருமால்; அன்மொழித்தொகை. சரவணபவன்-சரவணம்

பவன்-நாணற்புல்லடர்ந்த காட்டில் அவதரித்தவன் என்பது பொருள். குகன்-அடியார் மனக்குகையில் தங்குபவன்; 'ஆருயிர்க் குகை தொறும் பதிதலாற் குகன்' என்றதூஉம் காண்க. மலைக்குகையில் உறைபவன், குறிஞ்சிநிலக் கடவுளாதலின் குகன் என்றார். (12)

13 தந்ததன தான தந்ததன தான
தந்ததன தான-தனதான.

கன்றிவரு நீல குங்கும படீர
கஞ்சமலர் மேவு முலைகாட்டிக்
கந்தலசெறி கேச நின்று குலையாமை
கண்களடை காட்டி விலைகாட்டி
நன்றுபொருளீது வென்றுவிலை பேசி
நம்பிவிடு மாத ருடனாட
நஞ்சுபுகு தேரை யங்கமது வாக
நைந்துவிடு மெய்கொ டருள்வாயே
குன்றிமணி போல செங்கண் வரிநாகங்
கொண்டபடம் வீசு மணிகூர்வாய்
கொண்டமயி லேறிக் குன்றியடி மோதிச்
சென்றுபொடி வேலைக் கொடுபோர்செய்
மன்றலகமழ் பூகந் தெங்குதிரள் சோலை
மண்டுபட வாவி புடைசூழு
மந்திநட மாடு செந்திலநகர் மேவு
மந்தசுர காலப் பெருமாளே.

(இ-ள்.) குன்றிமணிபோல-குன்றிமணியின் நிறத்தை ஒத்த, செம் கண் வரிநாகம்-சிவந்த கண்களையும் வரிகளையுமுடைய பாம்பு, கொண்ட படம் வீசும் - பெற்றுள்ள

படத்தை ஆட்டுகின்ற, மணிகூர்வாய-அழகிய கூர்மையான வாயை, கொண்ட மயில் ஏறி-உடைய மயிலின்மேல் ஆரோ கணித்து, குன்று இடிய மோதி-மலைகள் இடிந்து சரியும்படி தாக்கி, சென்ற வடிவேலை-குற்றம் நீங்கிய வடித்த வேற் படையை, கொடுபோர்செய-கொண்டு சண்டை செய்கின்ற, மன்றல் கமழ்-வாசனை மணக்கின்ற, பூகம் தெங்கு திரள் சோலை-பாக்கு மரங்களும் தென்னமரங்களும் திரண்ட சோலைகளும், வண்டுபடு வாவி புடைசூழ-வண்டுகள் தங்கு கின்ற குளங்களும் நான்குபக்கங்களும் சூழ்ந்திருக்க. மந்தி நடமாடும் செந்தில் நகர்-குரங்குகள் கூத்தாடுகின்ற திருச் செந்தூர்த் தலத்தில், அந்த அசுரகால பெருமாளே-அந்த அசுரர்களுக்கு எமன்போன்ற பெருமாளே, கன்றிவரும் நீலம்-மிக்க நீலநிறத்தையுடைய, குங்கும படீரம்-குங்கும மும் சந்தனமும் பூசிய, கஞ்சமலர் மேவும்-தாமரைமலரை ஒத்த, முலை காட்டி-ஸ்தனங்களைக் காட்டி, கங்குல் செறி கேசம்-இருட்டை ஒத்த கூந்தல், நின்று குலையாமை-நிலை பெற்று முடி குலையாதபடி, கண்கள் கடைகாட்டி-கண்களின் கடைகளைக் காட்டி, விலைகாட்டி-விலையை எடுத்துக் காட்டி, பொருள் நன்று தீது என்று விலை பேசி-இப்பொருள் நல்லது இப்பொருள் தீது என்று சொல்லி விலைபேசி, நம்பி விடும் மாதர் உடன்-விரும்பும் பெண்களுடனே, நாட்டம் நஞ்சுபுரி - அவர்கள் கண்களிலுள்ள விடம் போன்ற காமத்தை விரும்பி, தேரை அங்கம் அது ஆக-தேரையின் உடம்புபோல உடம்பு மெலிவடைந்து, நைந்து விடுவேனுக்கு

அருள்வாய்-வருந்துபவனாகிய அடியேனுக்குத் திருவருள் புரிவாய் எ-று.

(வி-ரை) மானைக்கண்ணையும் வெல்லத்தக்க விழியாலும், தாமரை அரும்பை ஒத்த தனங்களாலும், மேகத்தை ஒத்த செறிந்த கூந்தலாலும் அறிவை மயக்கும் மாதரை நம்பி அவரது புல்லிய நலத்தை விரும்பிய பாம்பின்வாய்த் தேரை போல வருந்தும் என்னை அருள் புரிந்து ஆண்டருள்வாய் என்பது கருத்து. கன்று-மரபுப்பெயர். கங்குல்-இருள். மங்குல்-மேகம். குலையாமை-வினையெச்சம். குலை, யாமை மலர் சூடுமதனால்' என்றார், தம்மைப் புணர்வதில் மிக்க வன்மையுடையார் என்பது தோன்ற. 'நன்று பெரிதாகும்' என்பது **தொல்காப்பியம்**. அறத்தையும் இன்பத்தையும் பயக்குஞ் சிறப்பிற்றென்பார், 'நன்று பொருள்' என்றார். இக் கருத்தே பற்றி, 'வடுவிலா வையத்து மன்னிய மூன்றுள், நடுவண தெய்தின் இருதலையு மெய்தும்' என்ற சான்றோர் செய்யுளையுங் காண்க. குமரேச-குமரனாகிய ஈசனே, அண்மைவிளி. பூகம் பாக்குமரம். 'வண்டு படுவாவி' என்றது மலர்கள் நிறைந்திருத்தல் பற்றி. நீலம், சிலீமுகத்தை உணர்த்திற்று. மனக்குறிப்பை உணர்த்துவதில் உடம்பினும் முகமும் முகத்தினும் கண்களும் கண்களினும் கடைகளும் சிறந்திருத்தலின், 'கண்கள் கடைகாட்டி' என்றார். இக் கருத்துப்பற்றியே **அருணந்திசிவனும்** 'ஏடுதரு மலர்க்குழலார் முலைத்தலைக்கே இடைக்கே எறிவிழியின் படுகடைக்கே' என்றார். (13)

14 தனத்தந் தானன தானன தானன
தனத்தந தானன தானன தானன
தனத்தந தானன தானன தானன-தனதான.

அனிச்சங் கார்முகம் வீசிட மாசறு
துவட்டபஞ் சானத டாகமவி டாமட
அனத்தின் தூவிகு யாவிய சேடி மடமானார்
அருக்கன் போலொளி வீசிய மாமர
கதப்பைம் பூணணி வார்முலை மேல்முகம்
அழுத்தும் பாவியை ஆவியி டேறிட நெறிதாராய்
வினைச்சண் டாளனை வீணனை நீணிதி
தனைக்கண் டாணவ மானநி மூடனை
விடக்கன் பாயநுகர் பாழனை யோமொழி பகராதே
விகற்பங் கூறிடு மோகவி காரனை
அறத்தின் பாலொழு காதமு தேவியை
விளித்துன் பாதுகை நீதர நானருள் பெறுவேனோ
முனைச்சங் கோலிடு நீலம கோததி
அடைத்தஞ் சாதஇ ராவண னீள்பல
முடிக்கன் றோகணை யேவுமி ராகவன் மருகோனே
முளைக்குஞ் சீதநி லாவொட ராவிரி
திரைக்கங் காநதி தாதகி கூவிள
முடிக்குஞ் சேகரர் பேரரு ளால்வரு முருகோனே
தினைச்செங் கானக வேடுவ ரானவர்
திகைத்தந் தோவென வேசணி யாகிய
திறற்கந் தாவளி நாயகி காமுறும் எழில்வேலா
சிறக்குந் தாமரை யோடையின் மேடையில்
நிறக்குஞ் சூல்வளை பால்மணி வீசிய
திருச்செந் தூர்வரு சேவக னேசுரர் பெருமாளே.

(இ-ள்) முனை சங்கு ஒலிடும்-முகத்தையுடைய சங்கு
கள் சப்திக்கின்ற, நீலம் மகோததி அடைத்து-நீலநிறம்
பொருந்திய பெரிய சமுத்திரத்தைக் கட்டி, அஞ்சாத
இராவணன்-யாருக்கும்பயப்படாத இராவணனுடைய, நீள
பலம் முடிக்கு-மிக்க வலிமையையுடைய முடியைக் கொய்யும்
பொருட்டு, ஓர் கணை ஏவும்-ஒப்பற்ற அம்பைச் செலுத்தும்,
இராகவன் மருகோனே-இராமபிரானுடைய மருமகனே!,
முளைக்கும் சீத நிலாவொடு-தோன்றுகின்ற குளிர்ந்த பிறை
யுடனே, அரா விரி-பாம்புகளையும், விரிதிரை கங்காநதி-
விரிந்த அலைகளையுடைய கங்கையாற்றையும், தாதகி கூவி
ளம்-ஆத்திமலரையும் வில்வத்தையும், முடிக்கும் சேகரா-
முடிக்கின்ற சிவபெருமானது, பேர் அருளால் வரு முரு
கோனே-மிக்க கருணையினால் தோன்றின முருகனே, தினை
செம் கானகம் வேடுவர் ஆனவர்-தினை விளைகின்ற சிவந்த
காட்டிலே வாழும் வேடர்கள், திகைத்து அந்தோ என-
மயங்கி ஐயோ என்று சொல்ல, கணி ஆகிய திரள் கந்தா-
வேங்கைமரமாகிய கந்தனே!, வளிநாயகி காமுறும் எழில்
வேலா-வள்ளிநாயகி விரும்பும் அழகையுடைய வேலனே!
சிறக்கும் தாமரை ஓடையில்-பூக்களில் உயர்ந்த தாமரை
பூத்த ஓடைகளிலும், மேடையில்-மேட்டு நிலங்களிலும்,
நிறக்கும் சூல்வளை-நிறம் பொருந்திய கருவுற்ற சங்குகள்,
பால்மணி வீசிய-வெள்ளிய முத்துக்களை வீசும், திருச்செந்
தூர் வருசேவகனே-திருச்செந்தூரில் எழுந்தருளியிருக்கும்
தொழிலையுடையவனே!, சுரர் பெருமானே-தேவர்களுக்கு

நாயகனே', அனிச்சம்-அனிச்சமலரின் மேலும், காமுகம் வீசிட-பஞ்சு கொட்டும் வில்லால் அடித்ததனால், மாசு அறு துகள் பஞ்சு-குற்றம் நீங்கிய தூளாகிய பஞ்சின்மேலும், ஆனை தடாகம் விடா-குளிர்ச்சியாகிய குளத்தைவிட்டு அகலாத, மட அன்னத்தின் தூவி-இளமை பொருந்திய அன்னத்தின் இறகின்மேலும், குலாவிய சிறு அடி-விளங்குகின்ற சிறிய அடியையுடைய, மடம் மாதர்-மடப்பம் பொருந்திய பெண்களுடைய, அருக்கன்போல் ஒளி வீசிய-சூரியனைப் போல ஒளி வீசுகின்ற, மா மரகதம் பைம்பூண்-சிறந்த மரகதத்தாலாகியபசுமையான ஆபரணம்விளங்குகின்ற, வார்முலை மேல்-கச்சணிந்த முலையின்மேல், முகம் அழுத்தும்பாவியை-முகத்தை அழுத்துகின்ற பாபச் செயலுடையவனும், ஆவி ஈடேறிட நெறிபாரா-உயிர் கடைத்தேறும்வழியைக் கவனியாத வினை சண்டாளனை-தீவினையுடையவனாகிய சண்டாளனும் வீணனை-பயனற்றவனும், நீள் நிதிதனை கண்டு-மிகுந்த செல்வத்தைப் பார்த்து, ஆணவம் ஆன பிரமூடனை-அகங்காரங்கொண்ட பெரிய மூடனும், விடக்கு அன்பாய நுகர் பாழனை-பிற உயிர்களின் இறைச்சியை அன்புடனே உண்ணும் பாழானவனும், ஓர்மொழி பகராது-ஒரு வார்த்தையும் எதிர் சொல்லாமல், விகற்பம் கூறிடு மோக விகாரனை-மனம் மாறுதலைச் சொல்லும் மோகவிகாரமுடையவனும், அறத்தினால் ஒழுகாத மூதேவியை-தருமத்தின் வகையில் நடவாத மூதேவியுமாகிய அடியேனை, நீ விளித்து-தேவரீர் அழைத்து, உன் பாதுகை தர-உனது மிதியடியைக்கொடுக்க, நான் அருள்பெறுவேனோ-நான் அருளை அடைவேனோ? எ-று.

(வி-ரை) மாதர் அடியின் மென்மையை உணர்த்தும் பொருட்டு 'அனிச்சம் சீறடி', என்றார். 'அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர் அடிக்கு நெருஞ்சிப் பழம்' என்றார் **திருவள்ளுவனாரும்**, 'தடாகம் விடா மடவனம்' என்றது அன்னத்தின் சிறப்பை உணர்த்தும் பொருட்டு என்க. சிறுமை + அடி = சீறடி என்பு புணர்ந்தது, பண்பின் ஈறு கெட்டு ஆதி நீண்டது 'ஈறுபோதல் இடையுகரம் இய்யாதல்' என்னுஞ் சூத்திரம் காண்க. மாதர்-பெண்கள் மாதர் உறுப்புகள் பலவற்றுள்ளும் முன்னர்த் தோன்றிக் கண்களை மயக்குவனவாதலப்பாறி, 'பூணணிவார் முலைமேல் முகம் அழுத்தும் பாவியை' என்றனர் இதனை **மணிவாசகப் பெருமான்,**

'பூணிப் பொலி கொங்கையாவியை
யோவியப் பொற்கொழுந்தைக்
காணிற் கழறலை கண்டிலை
மென்றோட் கரும்பினையே' என்றும்,

'நீங்கரும் பொற்கழற் சிற்றம் பலவர் நெடுவிசும்பும்
வாங்கிருந் தெண்கடல் வையமு மெய்தினும் யானறியேன்
தீங்கரும்பும் அமிழ்தும் செழுந்தேனும் பொதிந்து செப்புங்
கோங்கரும்புந் தொலைத் தென்னையுமாட் கொண்ட கொங்
[கைக்கே'

என்றும் அருளிச் செய்தமையாலும், 'விசும்பும் நிலனும் ஒருங்குபெறுவரினும் இக்கொங்கைகளை மறந்து அந்நலக்கண் முயங்குமா றில்லையெனத் தன்னினறி யமையாமை கூறிய வாறாயிற்று' என்று **பேராசிரியர்** கூறிய உரையாலும்

உண்டாக இட்டேறிட-விகாரம், ஏட்டேறிட வினைச்சண்டாளன்-தீவினைசெய்பவர். வீணன்-பொய்யின்பம் விரும்பி அறம் பொருளின்பம் வீடு என்னும் உறுதிப்பொருள்களை அடையாது கழிப்பவன்.

> 'தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார் மற்றல்லார்
> அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு'

என்று திருவள்ளுவரும் அருளிச் செய்தார்.

மிக்க செல்வம் உண்டாயவழி அறிவு மயங்குதல் இயல்பாதலின், 'நீணிதிதனைக் கண்டாணவமான நிர்மூடன்' என்று கூறினர். இக்கருத்தே பற்றி, 'செல்வமெனனும் அல்லலிற் பிழைத்தும்' என்றும், 'வாழ்வெனு மையல்' என்றும், 'செல்வம் வந்துற்றகாலை தெய்வமுஞ் சிறிது பேணார்' என்றும் பெரியோர் பலரும் கூறினர். 'விடக்கு அன்பாய் நுகர்பாழனை' என்றார், ஓருயிரின் இறைச்சியை உண்போர் இறைவன் அருளை இழத்தலின்

> 'தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்
> எங்ஙன மாளும் அருள்'

என்று **திருவள்ளுவ நாயனார்** திருவாய் மலர்ந்தருளியது காண்க. முதேவி-மூதேவி என்பதன் விகாரம். மகோததி-கடல், மகா உததி-வடமொழிச்சந்தி. இராகவன்-இரகுவமிசத்திற் தோன்றினவன்; தத்திதாந்த நாமம். முளைக்குஞ் சீத நிலா-இளம்பிறை.

'முளைக்குஞ் .....சேகரர்'—சிவபெருமான். கூவிளம்-வில்வம்; 'கங்கையு மதியும் பாம்புங் கடுக்கையும் முடிமேல

வைத்த அங்கணா' என்பதனாலும் பிறவற்றாலும் அறிக. சிவ பெருமான் தக்கன் சாபத்தால் கலைகுறைந்த சந்திரனைத் தம் சடைமுடியில் சூடிக்கொண்டு அருள்செய்தார் என்பது புராணவரலாறு. பிறையைச் சூடுதல் ஞானசொரூபன் என்னும் உண்மையை விளக்கும்பொருட்டு என்பர் பட்டினத் தடிகளார்.

'தூமதி சடைமிசைச் சூடுதல் தூநெறி
ஆமதி யானென அமைத்த வாறே'

கங்கையின் செருக்கை யடக்கி உயிர்களைக் காக்கும் பொருட்டு அதனை ஒரு சிறு திவலையாக்கிச் சடையி லணிந் தார். இதனை,

'மலைமகளை யொருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தா லவன்சடையிற் பாயுமது வென்னேடி
சலமுகத்தா லவன்சடையிற் பாயாளே லுலகெல்லாம்
பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாஞ் சாழலோ'

என வரூஉம் திருவாசகத்தானும் அறிக

கணி-வேங்கைமரம். கந்தன்-ஸ்கந்தன் என்னும் வட சொற்றிரிபு; வளி-வள்ளி, இடைக்குறை.

நிறக்கும்-நிறம் என்னும் பெயரடியாகப் பிறந்த பெய ரெச்சம். சுரா-சுராபானமுடையோர். (14)

திருப்பழநிமலை. (திருவாவினன்குடி)

15 தன்னதன தான தந்த தன்னதன தான தந்த
தன்னதன தான தந்த-தனதான.

கருவினுரு வாகி வந்து வயதளவி லேவ ளர்ந்து
கலைகள்பல வேதெ ரிந்து மதனாலே

கரியகுழல் மாதர் தங்கள் அடிசுவடு மார்பு தைந்து
கவலைபெரி தாகி நொந்து மிகவாடி
அரகரசி வாய வென்று தினமுநினை யாம லின்று
அறுசமய நீதி யொன்று மறியாமல்
அசனமிடு வார்கள் தங்கண் மனைகடலை வாசல் நின்று
அநுதினமு நாண மின்றி யழிவேனோ
உரகபட மேல்வ ளர்ந்த பெரியபெரு மாள ரங்கர்
உலகளவு மால்ம கிழ்ந்த மருகோனே
உபயகுல தீப வங்க விருதுகவி ராஜ சிங்க
உறைபுகலி யூரி லன்று வருவோனே
பரவைமனை மீதி லன்று இருபொழுது தூது சென்ற
பரமனருளால் வளர்ந்த குமரேசா
பகையசுரர் சேனை கொன்று அமரர்சிறை மீளவென்று
பழநிமலை மீதி னின்ற பெருமாளே

(இ-ள்) உரக படம் மேல் - ஆதிசேஷனது படத்தின் மேல், வளர்ந்த-திருக்கண்வளரும், பெரிய பெருமாள் அரங்கர்-பெரியபெருமாளாகிய அரங்கநாதப்பெருமானும், உலகு அளவு மால் - மூவுலகங்களையும் இரண்டு திருவடிகளால் அளந்தருளியவருமாகிய திருமால், மகிழ்ந்த-மகிழும், மருகோனே-மருகனே!, உபயகுல தீப-இரண்டு குலங்களுக்கும் விளக்குப்போன்ற, விருதுகவி ராஜ சிங்க-விருதைப்பெற்ற கவிராஜசிங்கம் என்பவர், உறை புகலியூரில்-வசித்த சீகாழியிலே, அன்று வருவோனே-அக்காலத்தில் ஞானசம்பந்தராக அவதரித்தவனே!, பரவை மனைமீதில் அன்று-பரவை நாச்சியாருடைய திருமாளிகையில் அக்காலத்தில், இரு

பொழுது - இரண்டுமுறை, தூதுசென்ற - சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பொருட்டுத் தூதாகச்சென்ற, பரமன் அருளால்-சிவபெருமானது திருவருளால், வளர்ந்த குமரேசா-வளர்ந்த குமரேசனே, பகை அசுரர்-பகைவர்களாகிய அசுரர்களுடைய, சேனை கொன்று-சேனைகளை அழித்து, அமரர் சிறைமீள-தேவர்கள் சிறையினின்று மீளும்படி, வென்று-வெற்றிகொண்டு, பழநிமலை மீதில் - பழநிமலைமேல், நின்ற பெருமாளே-நிலைபெற்றுத் தங்கிய பெருமாளே, கருவின் உருவாகி வந்து-தாயின் வயிற்றில் உருவத்தைப் பெற்று வெளிவந்து, வயது அளவிலே வளர்ந்து-வயது ஏறும் அளவிலே வளர்ந்து, கலைகள் பல தெரிந்து-கலைஞானங்கள் பலவற்றை உணர்ந்து, மதனாலே-மன்மதனாலே, கரிய குழல் மாதர்-கருமையான கூந்தலையுடைய பெண்கள், தங்கள் அடிசுவடு-தங்களது அடியினது தழும்பு, மார்பு உதைந்து-மார்பில் பொருந்தப்பெற்று, கவலை பெரிது ஆகி-வருத்தம் மிகுந்து, நொந்து-மனமழிந்து, மிகவாடி-அதிகமும் வாட்டமுற்று, அரகர சிவாய என்று-அரகர சிவாய என்று வாயாற் சொல்லி, தினமும் நினையாமல் நின்றும்-ஒருநாளும் எண்ணுதொழிந்தும், ஆறுசமய நீதி - ஆறுசமயங்களின் ஒழுக்கங்கள், ஒன்றும் அறியாமல்-ஒன்றும் தெரிந்துகொள்ளாமல், அசனம் இடுவார்கள் தங்கள் - சோறுதருவோருடைய, மனைகள்-வீடுகளின், தலைவாசல் நின்று-வாயில்களில் நின்றுகொண்டு, அனுதினமும்-நாடோறும், நாணம்இன்றி-வெட்கமில்லாமல், அழிவேனோ-அழிந்துபோவேனோ எ-று.

(வி-ரை) 'மாதர் தங்கள் அடிசுவடு மார்புதைந்து' என்றது ஊடல் காலத்து நிகழ்ச்சியை, ஊடுதல் இன்பத்தை மிகுத்தலின் மகளிர் ஊடுதல் இயல்பு. அஃதின்றேல் காமம் சிறவாது இது பற்றியே 'துனியும் புலவியு மில்லாயிற் காமங் கனியுங் கருக்காயு மற்று' என்றார் திருவள்ளுவரும். அறுசமயம்-ஆறுவகைப்பட்ட சமயங்கள். அவை அகச்சமயமாகிய சைவம், பாசுபதம், மாவிரதம், காளாமுகம், வாமமுகம், வைரவம் என்பன. புறச்சமயம், உலோகாயதம், பௌத்தம், ஆருகதம், மீமாஞ்சம், மாயாவாதம், பாஞ்சராத்திரம் என்பன.

உரகபட மேல் வளர்ந்த பெரியபெருமாள்-ஆதிசேஷன் மீது அறிதுயில் கொள்ளும் திருமால். வளர்ந்த - கண் வளர்ந்த, இறந்தகாலத்தாற் கூறியது வழுவமைதி. நீயே திருஞான சம்பந்தராக அவதரித்தனை என்பார் 'விருதுகவி ராஜசிங்கம் உரைபுகலி யூரிலன்று வருவோனே' என்றுரைத்தனர். பரவையின் ஊடல் தீர்க்கச் சிவபெருமான் தூது சென்ற வரலாற்றைப் பெரிய புராணத்துள் காண்க. அடியார் பொருட்டுச் செய்யத்தகாத செயலையும் செய்த பெருமான் மகனாதலின், 'நீ கருணை மிகவுடையை' என்பார், 'பரமனருளால் வளர்ந்த குமரேசா' என்றார். சிவபெருமான் தூது நடந்தமையை,

'நள்ளிருள் யாமத்து நாவலர் பெருமான்
தள்ளாக் காதல் தள்ளுற் கமம
ஒருகா லல்ல இருகால் நடந்தும்
எளியர்க் கெளிய ராயினர்.'

எனவரூஉம் **குமரகுருபர சுவாமிகள்** திருவாக்கான் உணர்க.

பழநி என்பது பொதினி என்பதன் மரூஉ (15)

16 தனதன தத்த தானன தனதன தத்த தானன
தனதன தத்த தானன-தனதான.

கதிரைபவி லகரு மாதர்கள் புதியவி ரதன பூஷண
கனதன வெற்பு மேனமிகு மயலான
கவலைம னத்த னாகிலு முனதுபா சித்த மாகிய
கனதன மொத்த மேனியு முகமாறும்
அதிபல வஜ்ர வாகுவும அயினுனை வெற்றி வேலதும
அரவுபி டித்த தோகையு முலகேழும்
அதிரவ ரற்று கோழியு மடியவர் வழுத்தி வாழ்வுறும்
அபிநவ பதும பாதமும் மறவேனே
இரவிகு லத்தி ராசத மருவியெ திர்த்து வீழ்கடு
ரணமுக சுத்த வீரிய குணமான
இளையவ னுக்கு நீள்முடி அரசது பெற்று வாழ்வுற
இதமொ டளித்த ராகவன் மருகோனே
பதினொரு ருத்தி ராதிகள் தபனம் விளக்கு மாளிகை
பரிவொடு நிற்கு மீசுர சுரலோக
பரிமள கற்ப காடவி யரியளி சுற்று பூவுதி
பழநிம லைக்குள் மேவிய பெருமாளே.

(இ-ள்) இரவி குலத்து-சூரிய குலத்துக்குரிய, இராசதம் மருவி-இராசத குணத்தைப் பொருந்தி, எதிர்த்து வீழ் கடு இரணமுக - பகைவரை எதிர்த்து விரும்புகின்ற மிக்க போர்முனையில், சுத்த வீரிய குணம் ஆன - சுத்த வீரிய

குணத்தைக் கொண்ட, இளையவனுக்கு-இளையவனாகிய பர
தனுக்கு, நீண் முடி-நீண்ட முடியையும், அரசு அது - அர
சாட்சியையும், பெற்று வாழ்வு உற-பெற்று வாழும்படி,
இதமொடு அளித்த-அன்புடன் கொடுத்த, ராகவன்-இராம
பிரானுடைய, மருகோனே-மருமகனே!, பதினொரு உருத்தி
ராதிகள்-பதினொரு உருத்திரர்களது, தபனம் விளங்கும்
மாளிகை-பிரகாசம் விளங்குகின்ற கோவிலில், பரிவொடு
நிற்குமாசுர - அன்போடு நின்றருளும் தலைவனே!, சுர
லோகம்-தெய்வலோகத்தில், பரிமள கற்பக அடவி-வாசனை
பொருந்திய கற்பகச்சோலையிலுள்ள, அரி அளி-வரிபொருந்
திய வண்டுகள், சுற்று பூ உதிர - சூழ்கின்ற மலர்கள் சொரி
கின்ற, பழநிமலைக்குள் மேவிய பெருமாளே - பழநிமலையில்
பொருந்திய பெருமாளே!, கதியைவிலக்கும்-மோக்ஷத்தைத்
தடுக்கின்ற, மாதர்கள்-பெண்களது, புதிய - புதுமையான,
இரத்ந பூஷண - இரத்தின ஆபரணங்கள் அணியப்பட்ட,
கனதன வெற்பு மேல்-பெரிய முலையாகிய மலைகளின்மேல்,
மிகு பயலான-மிக்க ஆசை மயக்கங்கொண்ட, கவலை மனத்
தன் ஆகிலும் - கவலையையுடைய நெஞ்சையுடையேனா
னும், உனது பிரசித்தமாகிய-தேவரீருடைய கீர்த்திபெற்ற,
கனதனம்-மாற்றுயர்ந்த பொன்னை, ஒத்த மேனியும் - ஒத்
திருக்கும் திருமேனியையும், முகம் ஆறும்-ஆறு திருமுகங்
களையும், அதிபலம்-மிக்க வன்மையையுடைய, வஜ்ரவாகு
வும்-வயிரமணிபோன்ற தோள்களையும், அயில் நுனை-கூரிய
முனையையுடைய, வெற்றிவேல் உம்-வெற்றிவேலையும், அரவு

பிடித்த-பாம்பைப்பற்றிய, தோகையும் - மயிலையும், உலகு ஏழும்-ஏழுலகங்களும், அதிர-அதிரும்படி, ஆர்த்து கோழியும்-ஒலிக்கின்ற சேவலையும், அடியார் வழுத்தி-அடியார்கள் துதித்து, வாழ்வுறும்-தங்கள் வாழ்வை அடைகின்ற, அபிநவம் பதம்பாதமும்-புதிய தாமரைமலரையொத்த திருவடிகளையும், மறவேன் ஒருகாலத்தும் மறக்கமாட்டேன் எ-று.

(வி-ரை) ஆடவரைத் தம்மயலில் அகப்படுத்தி, வீட்டைவதற்குரிய நல்வினைகளைச் செய்யவொட்டாமல் தடுத்து, அவர் பெறுதற்குரிய நற்கதியை இழக்கும்படி செய்வோர் மகளிராதலின், 'கதியை விலக்கு மாதர்கள்' என்றார்.

இது குறித்தே கல்வியிற் பெரிய **கம்பர்,**

> தூமகேது புவிக்கெனத் தோன்றிய
> காம மேகலை மங்கைய ராலரும்
> காம மில்லை யெனிற்கடுங் கேடெனும்
> நாம மில்லை நரகமு மில்லையே.

என்று கூறுவாராயினர்.

கனதன வெற்பு-மலைகளை யொத்த பாரமான ஸ்தனங்கள். கனதன மொத்த மேனி - மேன்மையான பொன்னை யொத்த மேனி. வஜ்ரவாகு - வைரம்போல உறுதியான தோள்கள். வேலதும் என்பதில் அது, பகுதிப் பொருள் விகுதி. தோகை-மயிலுக்கு ஆகுபெயர். அபிநவபத்மபாதம்-பார்க்குந்தோறும் புதுமையான அழகுடன் விளங்கும் தாமரைபோன்ற திருவடி. அன்றி அபிநவம் என்பதைத் தாமரைக்காக்கி அன்று பூத்த தாமரை எனலுமாம். 'பெறு

தனக்குரிய அரசபோகத்தை இளமையிலே தன் தம்பியாகிய பரதனுக்கு மிக்க மகிழ்ச்சியுடன் தந்தவன் என்பார், 'இளையவனுக்கு நீண்முடி அரசதுபெற்று வாழ்வுற இதமொடளித்த ராகவன்' என்றார்.

கற்பக + அடவி = கற்பகாடவி என்றாயது வடமொழித் தீர்க்கசந்தி. 'கற்பகாடவியாம் பொலிபதமாதென்றத் தோற்றிய குமரி' எனக் குமரகுருபரசுவாமிகள் கூறியதூஉங்காண்க. அரசது என்புழியும் அது பகுதிப்பொருள் விகுதி (16)

17 *தானனந் தனனத் தானனந் தனனத்
தானனந் தனனத்-தனதான

காரணிந் தவரைப் பாரடைந் துவினைக்
காதனெஞ் சயரத் தடுமாறிக்
கானரம் புதிரத் தோலவழும் புறப்பொய்க்
காயமொன் றுபெறத் தடியேனுந்
தாரணங் குகுழற் கூரணிந் தவிழிச்
சாபமொன் றுறுதற் கொடியாதந்
தாளப ணிந்தவா ரேளவி ரும்பிமிகத்
தானமெலிந் துவிடத் தகுமோதான்
சூரர்துண் டுபடப் போர்கடந் துதொழத்
தோயமுஞ் சுவறப் பொருவேலா
தூய்மைகொண் டகுறத் தோகைநின் றபுனச்
சூழ்பெருங் கிரியிற் றிரிவோனே
ஆரணன் கருடத் தாரணன் புகழ்தற்
காலமுண் டவருக் குரியோனே
ஆலயம் பழனச் சோலையின் புடைசுற்
றாவினன் குடியிற் பெருமாளே.

(இ-ள்) சூரர்துணடுபட-சூரர்கள் வெட்டுப்பட, போர் கடந்து-சண்டையில் வென்று, தொழ-அனைவரும் வணங்க, தோயமும் சுவற-கடலும் வற்றும்படி, பொரு வேல்-போர் செய்யும் வேற்படையை யுடையவனே, தூய்மைகொண்ட-பரிசுத்தம் வாய்ந்த, குறத்தோகை - குறப் பெண்ணாகிய வள்ளியம்மையார், நின்ற புனம்-வாழ்ந்திருந்த தினைப்புனம், சூழ்பெருங் கிரியில்-சூழ்ந்த பெரிய மலையில், திரிவோனே-திரிபவனே, ஆரணன்-பிரமனும், கருடத்தானை - கருடனைக் கொடியாகத் தரித்தவனாகிய திருமாலும், புகழ்தற்கு-தனைப் புகழும்பொருட்டு, ஆலம் உண்டவருக்கு-விஷத்தை உட்கொண்டவராகிய சிவபெருமானுக்கு, உரியோனே - உரிய திருக்குமாரனே, ஆலயம் கோயில், பழனம் சோலையின் புடை-வயல்களையுடைய சோலையின் பக்கத்தை, சுற்று-சுற்றிக்கொண்டிருக்கின்ற, ஆவினன் குடியின்-திருவாவினன்குடி என்னும் திருத்தலத்தே வீற்றிருக்கும், பெருமாளே-பெருமாளே, கார் அணிந்த-மேகத்தைத் தரித்த, வரை-மலைகளையுடைய, பார் அடைந்து-பூமியில் தோன்றி, வினை காதல்-இருவினையால் ஏற்பட்ட ஆசையினால், நெஞ்ச அயர் தடுமாறி-மனம் தளர்ந்து தடுமாறும் அடைய, கால் நரம்பு-காலையும் நரம்பையும், உதிரம் தோல் - இரத்தத்தையும் தோலையும், வழும்பு உற்று-நிணத்தையும்பொருந்த, பொய்காயம் ஒன்று-பொய்யான உடம்பு ஒன்றை, பொறுத்து-சுமந்து, அடியேனும்-அடியவனாகிய யானும், தார் இணங்கு குழல்-பூமாலை பொருந்திய கூந்தலையும், கூர் அணிந்த விழி - கூர்

மையை அழகாகப் பெற்ற கண்களையும், சாபம் ஒன்று நுதல் - வில்லையொத்த நெற்றியையும் உடைய, கொடியார் - பூங்கொடியை ஒத்த பெண்களுடைய, தாள்பணிந்து-பாதங்களை வணங்கி, பொன் தோள் விரும்பி - அழகிய தோள்களை விரும்பி, மிக மெலிந்துவிட - மிகவும் மெலிவடைவது, தகுமோ-பொருந்துமோ எ-று

(வி-ரை) 'கானரம் புதிரத் தோல் வழும்புறு பொய்க் காயம்' என்றார் தனித்தனியே பார்த்தால் அருவருக்கத் தக்க நரம்பு உதிரம் தோல் முதலியவற்றால் ஆக்கப்பட்டுச் சின்னாட்களில் அழிவதாதலின், இதனைத் தாங்குதல் மிக்க துன்பம் என்பார், 'பொறுத்து' என்றார். இதனை,

குடருங் கொழுவுங் குருதியு மென்பும்
தொடரு நரம்பொடு தோலும்—இடையிடையே
வைத்த தடியும் வழும்புமாம் மற்றிவற்றுள்
எத்திறத்த ளீர்ங்கோதை யாள்

என்னும் நாலடிச் செய்யுளாலும்,

'ஆறுலாமிந்த வுடம்போடிருத்தல் மிக்க வருவருப்பே'

எனவரும் பட்டினத்தார் திருவாக்காலும்,

'மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றார்க் குடம்பு மிகை'

என்னுந் திருவள்ளுவர் திருவாக்காலும் உணர்க.

இக்கருத்தைப் பற்றி யன்றே தாயுமானவரும்,

'காகமொடு கழுகலகை நாய்நரிகள் சுற்றுசோறிடு
துருத்தியைக்

காலிரண்டு நவவாசல் பெற்றுவளர் காமவேள்
நடன சாலையை
மோகவாசை முறிகட்டி விட்ட பெட்டியை மூலமலமிகுந்த
தொழுகு கேணியை
மொய்த்து வெங்கிருமி தத்துகும்பியை முடங்கலார்
கிடைசரக்கினை
மாகவிந்துதர தனு மின்னையொத்திலக வேதமோதிய
குலாலனார்
வனைய வெய்யதடி காரனார் யமனர் வந்தடிக்கு மொரு
மட்கலத்தை
மேகமான பொய்யை மெய்யெனக் கருதியைய வையமிசை
வாடவோ
தெரிவதற்கரிய பிரமமே அமல சிற்சுகோதய
விலாசமே'

என்று அருளிச்செய்வாராயினர்.

கொடியார் என்றசொல் பூங்கொடிபோல் மென்மையாகிய இயல்புடையவர் என்றும் கொடிய குணங்களையுடையார் என்றும் இருபொருள் படுமாறு காண்க. தாள் பணிதல்-அவர் தம்பால் அன்பு கொண்டு அவர் விரும்பிய எவற்றையும் தம் தகுதி நோக்காது செய்தல். பொற்றோள்-அழகிய தோள்; பொன்போலும் அருமையான தோள், பொன்னைப்போல் கட்கினிதாய மனத்தைக் கவரத்தக்க தோள் எனப் பலவழியாலும் பொருள் கொள்க. தகுமோ என்பதிலுள்ள ஓகாரம் எதிர்மறைப்பொருட்டு. 'தோயமுஞ்சுவறப் பொரும்வேலா' என்றது சூரபதுமன் முருகவேளுடன் போர்செய்ய மாட்டாது கடல்வடிவந் தாங்கி

நின்றபோது, அதனைத் தன் சக்தி வடிவினதாகிய வேலை ஏவிச் சுவறச்செய்தனர் என்றநிகழ்ச்சியை உட்கொண்டது.

மனமொழி மெய்களான தூய்மை யுடையவர் வள்ளி நாயகியாராதலின் 'தூய்மை கொண்ட குறத்தோகை' என் றருளிச் செய்தனர். தூயமனத்துடன் தம்பால் பேரன்பைச் செலுத்திநின்ற அம்மைக்கு அருள் செய்யவேண்டி அவர் வாழ்ந்திருந்த தினைப்புனத்தே பலகாலுஞ் சென்றுழன்று, தாம் அன்பு கனிந்த அடியவருக்கு எளியரின் எளியராதலை உணர்த்தினனென்பார், 'தோகைநின்ற புனச்சூழ் பெருங் கிரியிற் றிரிவோனே' என்றார். அரணன்-பிரமன், வேதங் களை யுணர்ந்தவன். கருடத்தாரணன் - கருடக் கொடியை யுடைய திருமால்.

தேவர்களும் அசுரர்களும் கூடி ஒருகாலத்தில் திருப் பாற்கடலைக் கடைய அமிர்தமும் விஷமும் பிறந்தன. விடம் மேலோங்கித் தேவர்களை அழிக்கத் தலைப்பட்டதை உணர்ந்த தேவர்கள் அஞ்சி நடுங்கிச் சிவபெருமான் திரு வடிகளில் விழுந்து பணிந்து நிற்க, அவர் அவ்விஷத்தை உடனே எடுத்து விழுங்கித் தேவர் துயரந் தீர்த்தனர். அது கண்ட பிரமன் திருமால் முதலிய அனைவரும் அவரது அளவிலாற்றலைப் புகழ்ந்து வாழ்த்தினர் என்பதாம். இதனை,

கோலால மாகிக் குரைகடல்வா யன்றெழுந்த
ஆலால முண்டா னவன்சதுர்தா னென்னேடீ
ஆலால முண்டிலனே லன்றயன்மா லுள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ.

என்னும் **மணிவாசகர்** அமுதவாக்கானும் அறிக. திருவாவி னன்குடி பழனி. (17)

திருவேரகம். (சுவாமிமலை)

18 தன்னதன தன்னதன தன்னு தனத்ததன
தன்னதன தன்னதன தன்னு தனத்ததன
தன்னதன தன்னதன தன்னு தனத்ததன - தன தானு

குமரகுரு பரமுருக குகனே குறச்சிறுமி
கணவசர வணநிருதர் கலகா பிறைச்சடையர்
குருவெனவு முரையுதவு மயிலா வெனத்தினமு முருகாதே

குயின்மொழியின மடவியர்கள் விழியா லுருக்குபவர்
தெருவிலன வரதமன மெனவே நடப்பர்நகை [வோருக
கொளுமவர்க ளுடைமை மனமுடனே பறிப்பவர்க ளனே

தமதுவச முறவசிய முகமே மினுக்கியர்கள்
முலையிலுறு துகிலசரிய நடுவீதி நிற்பவர்கள்
தனமிலியர் மனமுறிய நழுவா வுழப்பியர்கண் வலையாலே

சதிசெய்தவ ரவாமகிழ அணைமீது ருக்கியர்கள்
வசமொழுகி யவரடிமை யெனமாத ரிட்டதொழில்
தனிலுழலு மசடனையு னடியேவழுத்தவரு டருவாயே

சமரமொடு மசுரர்படை களநீ றெதிர்த்தபொழு
தொருநொடியி லவர்களபடை கெடவே லெடுத்தவனி
தனினிருதர் சிரமுருள ரணதூள் படுத்திவிடு செருநீதே

தவனமொடு மலைகைநட மிடவீர பத்திரர்கள்
அதிரநிண மொடுகுருதி குடிகாளி கொக்கரிசெய [கோடி
தசையுணவு தனினமகிழ விடுபேய நிரைத்திரைகள் பல

திமிதமிட நரிகொடிகள் கழுகா டரத்தவெறி
வயிரவர்கள் சுழலவொரு தனியா யுதத்தைவிடு
திமிரதின கரவமரர் பதிவாழ்வு பெற்றுலவு குருகோனே

திருமருவு புயனயனொ டயிராவ தக்குரிசில்
அடிபரவு பழநிமலை கதிர்காம முற்றவளர்
சிவசமய அறுமுகவ திருவேரகத்திலுறை பெருமாளே.

(இ-ள்) அசுரர் படை சமரமொடு களமீது எதிர்த்த பொழுது-அசுரர்களுடைய சேனை போர்க்களத்திலே எதிர்த்தபோது, ஒரு நொடியில் அவர்கள் படைகெட-ஒருகணப் பொழுதில் அவர்களுடைய சேனை அழியவும், வேல் எடுத்து-வேற்படையை எடுத்து, அவனி தனில்-பூமியில், நிருதர் சிரம் உருள-அவுணர்களுடைய தலைகள் உருண்டு விழவும், ரணதூளி படுத்திவிடு செருமீது-சண்டைக் களத்தில் தூள்களாக்கும் போர்மீது, தவனமொடு-தாகத்தோடு, அலகை நடமிட-பேய்கள் கூத்தாடவும், வீர புத்திரர்கள் அதிர-வாள் வீரர்கள் அதிரும்படி, கொக்கரி செய-கொக்கரிக்கின்ற, நிணமொடு குருதி குடிகாளி-கொழுப்புடனே இரத்தத்தைக் குடிக்கின்ற காளியானவள், தசை உணவுதனில் மகிழ-இறைச்சியாகிய ஆகாரத்தில் மகிழ்ச்சி அடைய, விடுபேய் நிரைதிரள்கள்-விடுகின்ற பேயின் கூட்டங்கள், பலகோடி-பலகோடிகள், திமிதமிட-கூத்தாட, நரி கொடிகள் கழுகு ஆட-நரிகளும் காகங்களும் கழுகுகளும் மாமிசத்தைத் தின்று ஆட, ரத்தவெறி வயிரவர்கள் சுழல-இரத்தவெறிகொண்டு வயிரவர்கள் சுழற்சியடைய, ஒரு தனி ஆயுதத்தைவிடு-ஓர் ஒப்பற்ற ஆயுதத்தைச் செலுத்தும், திமிரம் தினகர-ஆன்மாக்களது அக இருளை ஒழிக்கும் சூரியனே! அமரர்பதி-தேவேந்திரன்,

வாழ்வு பெற்று உலவும முருகோனே-வாழ்வடையுமபடி விளங்குகின்ற முருகனே!, திரு மருவு புயன்-திருமகளைச சேரும் தோளகளையுடைய விஷ்ணுமூாததியும், அயனொடு-பிரமதேவனுடன, அயிராவதம ஊரிசில-ஐராவதம எனனும் பட்டதது யானையையுடைய இநதிரனும, அடிபரவு-திருவடிகளை வணஙகுகினற, பழநிமலை கதிாகாமம உற்று-பழநிமலையிலும கதிாகாமததிலும பொருநதி, வளா சிவசமய-வளாகினற சைவசமயததுத தலைவனே!, அறுமுகவ-அறு திருமுகஙகளை யுடையவனே!, திருவேரகததில உறை பெருமாளே-திருவேரகததில தஙகுகினற பெருமானே!, குமர குருபர - குமரனே குருபரனே!, குகனே - குகனே!, குறசிறுமி கணவ - வளளிநாயகனே!, சரவண - சரவணனே!, நிருதா கலகா - அசுராகளுககுத துனபஞ செயபவனே!, பிறை சடையா - பிறையைத தரிதத சிவபெருமான, குரு என - குரு எனறு, நல உரை உதவும் மயிலா - நலல புகழசசி வாாததையைக கூறும் மயில வாகனனே!, என தினமும உருகாது-எனறு ஒவ்வொருநாளும மனமுருகாமல, குயில மொழி நனமடவியாகள்-குயிலைபபோனற இனிய மொழியையும் நலல மடபபததையும உடையவாகளும, விழியால உருககுபவா-கணகளால நெஞசைக கரைபபவாகளும, தெருவில அனவரதம அனம் என நடபபா-தெருவில எபபொழுதும் அன்னம போல நடபபவாகளும், நகைகொளும அவர்கள் உடைமை-சிரிககின்ற ஆடவர்களுடைய பொருளை, உடனே பறிபபவா

கள்-உடலினை அபகரிப்பவர்களும், அனைவோரும்-எத்தனை யோரும், தமது வசம் உற-தம் வசப்படும்படி, வசிய முகம் மினுக்கியர்கள்-வசீகரத்தையுடைய முகமினுக்கை யுடையவர்களும், முலையில் உற்ற துகில் சரிய-தனத்தின்மேல் தரித்திருக்கும் ஆடைவிழும்படி, நடுவீதி நிற்பவர்கள்-நடுத்தெருவில் நிற்பவர்களும், தன்மம் இலியர்-பொருளில்லாதவர்களுடைய, மனம் முறிய-மனம் முறியும்படி, நழுவா உழப்பியர்-நழுவவிட்டு உழப்புவர்களும், கணவலையால்-கண்ணுகிய வலையினால், சதி செய்து அயர் அவர் மகிழ-வஞ்சனை செய்து அவரவர் மகிழும்படி, அணைமீது உருக்கியர்கள்-பஞ்சணையின்மேல் உருக்குபவர்களுமாகிய விலைமாதர் களுடைய, வசம் ஒழுகி-வசத்தில் ஒழுகி, அவர் அடிமை என-அவர் அடிமை யென்று சொல்லும்படி, மாதர் இட்ட தொழில் தனில் உழலும்-பெண்கள் இட்ட தொழிலில் உழலுகின்ற, அசடனை-வீணனை, உன் அடிவழுத்த அருள் தாராய-உன் அடியை வாழ்த்த அருள் செய்வாய் எ-று.

(வி-ரை) முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானுக்குப் பிரணவோபதேசஞ் செய்த பெருமையுடையராதல் பற்றி, 'பிறைச்சடையர் குருவென நலுரையுதவு மயிலா' என்றருளிச் செய்தனர்.

அவ்வரலாறு முருகப்பெருமான் பிரமதேவனைப் பிரணவத்தின் பொருளைச் சொல்லும்படி கேட்க, அவன் அது தெரியாது மயங்கினன். அப்போது அவன் தலையில் குட்டி அவனைச் சிறைவைத்தனர். இதனை யறிந்த சிவ

பெருமான தமமகனாரை வருவிதது, 'பிரணவபபொருளை எனக்குத தெளியச சொலவாயாக' எனப பெருமானைக் கேட்டனா. அதறகு அவா, 'பிரணவம குரு சீட கிரமத் திலதான உபதேசிககபபடல வேணடும, அவவாறு நீரும் மாணவராக இருபபின, நாம ஆசிரியனாகி உபதேசிபபோ மென மொழிநதனா. அதறகுச சிவனா உடனபட்டு அஙஙனே பிரணவபபொருளைக கேட்டனா.

குயிலமொழி நன மடவியாகள-குயிலபோலும இனிய குரலையுடைய இலககண மமைநத இளமாதா. கணகளின அழகாலும பிறழசசியாலும ஆடவருடைய மனததை உருககுதலினாலும, கணகளைபபோல உடமபாட்டுக குறிபபை உணாததுவன வேறினமையானும அறிவு விளங் கித தோன்றும சிவநத உறுபபாதலினாலும கணகளே மனததை உருககும தனமையன ஆதலின, 'விழியா லுருககுபவா' என்று கூறினா இககருததுககளை, 'நாட்ட மிரணடும அறிவுடம படுததறகுக கூட்டி யுரைககுங குறிப் புரையாகும' என்று **தொலகாபபியனாரும்**, 'கணணொடு கண் ணிணை நோககொககின வாயசசொறகள என்ன பயனுமில' என்று **திருவளளுவரும**,

ஈசறகியான்வைத்த அனபினகனறவன் வாஙகியவென
பாசததிறகாரென்றவன் திலலையினொளி போன்றவன்தோ
பூசத் திருநீறென வெளுததாஙகவன் பூஙகழலயாம் [ள்
பேசத் திருவார்த்தையிற பெருநீளம் பெருங்கண்களே.

என்று **மாணிக்கவாசக சுவாமிகளும்** அருளிச்செய்த வாற்றான் அறிக.

திருமருவு புயன் - திருமால். ஐராவதக் குரிசில் - இந்திரன். கதிர்காமம், இலங்கையின்கண்ணுள்ள ஒரு சுப்பிரமணிய தலம். திருவேரகம் - சுவாமிமலை. (18)

19 தனனா தனத்த தனனா தனத்த
தனனா தனத்த - தனதான.

மருவே செறித்த குழலார் மயக்கி
மதனா கமத்தின் விரகாலே
மயலே யெழுப்பி யிதமே யருத்த
மலைநேர் முலைக்கு ளுறவாகி
பெருகாத லுற்ற தமியேனை நித்தல்
பிரியாது பட்ச மறவாதே
பிழையே பொறுத்து னிருதாளி லுற்ற
பெருவாழ்வு பற்ற அருள்வாயே
குருவா யரற்கு முபதேசம் வைத்த
குகனே குறத்தி மணவாளா
குளிர்கான மிக்க வளர்பூக மெத்து
குடகா விரிக்கு வடபால்வாழ்
திருமால் தனக்கு மருகா உமைக்கொர்
சிறுவா கரிக்கும் இளையோனே
திருவே ரகத்தி லுறைவா யரக்கர்
சிரமே துணித்த பெருமாளே.

(இ-ள்) குருவாய - ஆசாரிய மூர்த்தியாய், அரற்கும்-சிவபெருமானுக்கும், உபதேசம் வைத்த குகனே-உபதேசஞ் செய்தருளிய முருகனே', குறத்திமணவாளா-வள்ளியம்மையாரின் கணவனே', குடகாவிரிக்கு-மேற்கே யிருந்துவரும் காவேரி யாற்றுக்கு, வடபால வாழ - வடதிசையிலே வாழ்கின்ற, திருமால் தனக்கு மருகா - விஷ்ணுமூர்த்தியின் மருகனே', உமைக்கு ஓர் சிறுவா-உமாதேவியாருக்கு ஒரு புதல்வனே', கரிக்கும் இளையோனே யானை முகவராகிய விநாயகருக்கு இளையவனே', திருவேரகத்தில் உறைவாய-திருவேரகம் என்னும் ஊரில் வசிப்பவனே', அரக்கர் சிரம் துணித்த-அசுரர்கள் தலைகளை வெட்டிய, பெருமாளே-பெருமானே', மருவே செறித்த-வாசனை மிகுந்த, குழலார்-கூந்தலையுடைய பெண்கள், மயக்கின-காம மயக்கத்தால், மதன ஆகமத்தின-மன்மதனுக்குரிய நூலின், விரகாலே-தந்திரத்தாலே, மயல் எழுப்பி-ஆசையை உண்டாக்கி, இதழ் வாய் அருத்தி-நன்மையுடனே இதழமுதத்தை ஊட்ட, மலைநேர்-மலைபோன்ற, முலைக்குள்-ஸ்தனங்களுக்குள், உறவு ஆகி-பொருந்தி, பெருகாதல் உற்ற-பெரிய ஆசையைக் கொண்ட, தமியேனை-தனியவனாகிய என்னை, நித்தல்-தினந்தோறும், பிரியாத பட்சமுடனே-நீங்காத விருப்பத்தோடு, என் பிழை பொறுத்து-எனது குற்றங்களைப் பொறுத்தருளி, இருதாளின் உற்ற-இரண்டு திருவடிகளிலும் பொருந்திய, பெருவாழ்வு பற்ற-பெரிய வாழ்வை அடைவதற்கு, அருள்வாய-அருள் செய்வாயாக எ-று.

(வி-ரை) மதனகமம்-இன்பநூல். இதழருந்தல்-அதரபானஞ் செய்வித்தல். மலை, தனங்களுக்கு வடிவால் உவமை. பெருங்காதல் என்பாலது பெருகாதல் என ஆயிற்று எதுகை நோக்கி. குளிர்கா - குளிர்ச்சி பொருந்திய சோலை. குடகாவிரி - மேற்றிசையிலுள்ள காவிரியாறு. மாதர்பால் வைத்த ஆசையை ஒழித்து, உன் திருவடி வாழ்வைப் பெறுதற்கு அருள்புரிவாய் என்பார், 'பிழையே பொறுத்து இருதாளிலுற்ற பெருவாழ்வு பற்ற அருள்வாய்' என்றார். இருதாளிலுற்ற பெருவாழ்வு - திருவடியில் இரண்டறக் கலத்தலாகிய பேரின்பப் பெருவாழ்வு. கரி-யானை, ஈண்டு யானை முகத்தையுடைய விநாயகரைக் குறித்தது, ஆகுபெயர்.

திருமால் மருகன் என்றது முருகப்பெருமான் தேவிமாராகிய தெய்வயானையாரும் வள்ளிநாயகியாரும் திருமாலின் புதல்வியராதலைப்பற்றி, இதனைப் பின்வரும் **தணிகைப்புராணச்** செய்யுளானும் அறிக

செந்திரு மணந்த கேள்வ னுயிர்த்தரு டெய்வக் கற்பிற்
சுந்தரி யமுத வல்லி யென்பவர் சுடர்வேற் செங்கை
மைந்தனை மணப்ப வுன்னி மலர்விரி சரவணத்து
முந்துறுந் தவங்க ளாற்ற முருகனுங் கண்டிக் கூறும் (19)

20 தானன தத்தன தத்தன தத்தன
தானன தத்தன தத்தன தத்தன
தானன தத்தன தத்தன தத்தன-தனதான

கோமள வெற்பினை யொத்த தனத்தியர்
காமனை யொப்பவர் சித்தமு ருக்கிகள்
கோவை யிதழ்க்கனி நித்தமும் விற்பவர் மயில்காடை

கோகில நூபுர வத்திடு குக்குட
ஆரணி யப்புள வைக்குர லக்குவார்
கோலவி ழிக்கடை யிட்டும ருட்டிகள் விரகாலே

தூம மலர்ப்பளி மெத்தைப டுப்பவர்
யாரையு மெத்தி மனைக்கு ளழைப்பவர்
சோலைவ னக்கிளி யொத்தமொ ழிச்சியர் நெறிகூடா

தூசுநெ கிழத்தரை சுற்றியு டுப்பவர்
காசுப றிக்கம றித்துமு யக்கிகள்
தோதக வித்தைப டித்தந டிப்பவர் உறவாமோ

மாமர மொத்துவ ரிக்குள் நெருக்கிய
சூரனை வெட்டிநி ணக்குட லைக்கொடி
வாரண மெச்சவ ளித்தஅ யிற்குக கதிர்காம

மாமலை யிற்ப ழநிப்பதி யிற்றணி
மாகிரி யிற்றணி கைக்கிரி யிற்பரி
மாகிரி யிற்கிரி சுற்றிவ ளைத்திடு மலைவாயில்

ஏமவெ யிற்பல வெற்பினி னற்பதி
ஞானல கத்தினி லுற்றுறு பத்தர்கள்
ஏத்துநி னைத்தது மெத்தவ ளித்தரு ளிளையோனே

ஏரக வெற்பெனு மற்புத மிக்கசு
வாமிம லைப்பதி மெச்சிய சித்தஇ
ராசத லட்சண வுத்தமி பெற்றருள் பெருமாளே.

(இ-ள்) மாமரம் ஒத்து - மாமரத்தை ஒத்த வடிவங் கொண்டு, உவரிக்குள் - கடலினுள் ஒளித்து, நெருக்கிய சூரனை - துன்பப்படுத்திய சூரனை, வெட்டி நிணம் குடலை-

வெட்டிக் கொழுப்பு வாய்ந்த குடலை, கொடி வாரணம் மெச்சும் - கொடியாகிய கோழி பாராட்டும்படி, அளித்த அயில் குக-கொடுத்தருளிய வேற்படையையுடைய குகனே!, கதிர்காம மாமலையில் - கதிர்காமத்தின் சிறந்த மலையிலும், பழநி பதியில்-பழனித்தலத்திலுள்ள, தனி மா கிரியில்-ஒப்பற்ற பெரிய மலையிலும், தணிகை கிரியில்-தணிகை மலையின் மேலும், பரமா கிரியில் - திருப்பரங் குன்றத்திலும், திரை சுற்றி வளைத்திடும் அலைவாயில்-அலைகள் சுற்றிச் சூழ்ந்துள்ள திருச்செந்தூரிலும், ஏமம் எயில் பல வெற்பினில் - பாதுகாவலையுடைய மதில்கள் பல சூழ்ந்த மலைகளின்மேலும், நல பதினாலு உலகத்தினில்-நல்ல பதினான்கு உலகங்களிலும், உற்று உறு பத்தர்கள் - பொருந்தி வாழும் அடியார்கள், நினைத்தது எதும் - எண்ணிய எல்லாவற்றையும், மெத்த அளித்தருள் இளையோனே-மிகவும் கொடுத்தருளும் இளையவனே!, ஏரகம் வெற்பு எனும் - திருவேரகமலை யென்று சிறப்பித்துச் சொல்லப்படும், அற்புதமிக்க சுவாமிமலை பதி-வியப்பு மிகுந்த சுவாமிமலை என்னும் க்ஷேத்திரத்தை, மெச்சிய-விரும்பிய, சித்த - திருவுள்ள முடையவனே!, இராசத லக்ஷண உத்தமி பெற்றருள் பெருமாளே-இராஜ லக்ஷணங்களையுடைய உமாதேவியார் பயந்தருளிய பெருமாளே!, கோமளம் வெற்பினை ஒத்த தனத்தியர் - இளைய குன்றையொத்த ஸ்தனங்களை யுடையவரும், காமனை ஒப்பவர் சித்தம் உருக்கிகள் - மன்மதனை ஒத்த அழகுடைய ஆடவர்களின் மனத்தை உருக்கிறவர்களும், கோவை இதழ்க்கனி

நித்தமும் விற்பவர்-கோவைப்பழத்தை நிகர்த்த அதரத்தை ஒவ்வொருநாளும் விற்பவர்களும், கோகிலம்-குயிலும், நல் புறவதனொடு-நல்ல புறவும், குக்குடம்-கோழியும், ஆரணியப்புள்-காட்டிலுள்ள பறவைகளும் ஆகிய இவற்றின், வகை குரல் - வகைப்பட்ட குரல்களை, கற்பவர் - கற்றவர்களும், கோலம் விழி கடையிட்டு மருட்டிகள்-அழகிய கடை விழியினால் மயக்குகின்றவர்களும், மா விரகால் - தந்திரச் செயலால், தூமம் மலர் பளி மெத்தை படுப்பவர்-வாசனைப் புகையூட்டிய மலர்கள் பரப்பிய படுக்கையாகிய மெத்தையில் படுப்பவரும், யாரையும் எத்தி மனைக்குள் அழைப்பவர்-எப்படிப்பட்டவர்களையும் ஏமாற்றி வீட்டுக்குள் அழைப்பவர்களும், சோலை வனம் கிளி ஒத்த மொழிச்சியர்-சோலையிலே வாழும் அழகிய கிளியையொத்த சொல்லையுடையவர்களும், நெறிகூடா தூசு நெகிழ்த்து-செவ்வையாகக் கட்டப்படாத ஆடையைத் தளர்த்தி, அரை சுற்றி உடுப்பவர்-இடுப்பைச் சுற்றிக் கட்டுபவரும், காசு பறிக்க மறித்து முயக்கிகள்-பொருளை அபகரிக்க மீண்டு மீண்டும் அணைபவர்களும், தோதகம் வித்தை படித்து நடிப்பவர் உறவு ஆமோ - வஞ்சகத்தை ஒரு வித்தையாகக் கற்றுப் பழகி நடிக்கின்றவர்களுமாகிய விலைமாதரது சம்பந்தம் ஆகுமோ? (ஆகாது) எ-று.

(வி-ரை) கோமளம் - இளமை. காமனை ஒப்பவர் என்றது அவனைப்போலக் கண், முகம், நகை முதலியவற்றால் நெஞ்சத்தை உருக்கி மயலை யூட்டுபவர் ஆதலின் என்க. கோவை இதழ்க் கனி - கோவைக் கனிபோன்ற இதழ்;

கோவைப் பழம் செந்நிறத்தால் இதழுக்குவமை; ஆதலின் வண்ணவுவமை 'வினைபயன் மெய்யுரு' என்ற நான்கின் உருவின்கண் அடங்கும். ஒவ்வொருநாளும் ஒவ்வொருவருக்கு விற்று மீண்டும் தம்முடையதாகக் கொள்பவராதலின், 'நித்தம் விற்பவர்' என்றார். புட்குரல் எழுப்பல் கலவிக் குறிப்பென இன்ப நூலோர் கூறுதலின், 'மயில்காடை . . . . ஆரணியப் புள்வகைக் குரல் கற்று' தேர்ந்தனர் எனக. தூம மலர்ப் பள்ளி மெத்தை - வாசனைப் புகையூட்டி மலரிதழ் பரப்பிய படுக்கை, அதிலும் பொருள் வருவாய் இருந்தாலன்றிப் படுத்துக் கண்ணுறங்குதலுஞ் செய்யார் என்பது தொனிக்கப் 'படுப்பவர்' என்றார்.

'சோலையினக் கிளியொத்த மொழிச்சியர்' என்றார் கிளி போலும் இனிய சொற்களைப் பேசுவதாலும், கிளி சொற்கள் கற்றுப் பேசுதல்போல மரபுக் கேற்றபடி சொற்களைக் கற்றுச் சொல்லுவதாலும், கிளியின் மொழிகள் பொருள் பயவாது உள்ளீடில்லாவாறு அவை மெய்ம்மையில்லாத பொய்யுரையாதலானுமெனக. கொடி-காகம். அடியார்கள் நினைந்த வடிவோடு விரைந்து சேர்ந்து, அவர் வேண்டுவனவற்றை வேண்டியவாறு அளித்தருளும்பொருட்டுப் பல மலைகளிலும் எழுந்தருளி யிருப்பவராதலின், 'கதிர்காம மாமலையில் . . . அளித்தருள் இளையோனே' என்றார்.

இராசத லக்ஷண உத்தமி - இரஜோகுண வடிவான சத்தி என்னலுமாம்; சூரனை யழிக்கும்பொருட்டு அச்சத்திற்கு மகனாய்த் தோன்றினார் என்க. (20)

குன்றுதோருடல்

21 தநதன தானதான தநதன தானதான
தநதன தானதான-தனதான

வஞ்சக லோபமூடர் தமபொருளூர்கள்தேடி
மஞ்சரி கோவைதூது பலபாவின்
வண்புகழ் பாரிகாரி யென்றிசை வாதுகூறி
வந்தியர் போலவீணி லழியாதே
செஞ்சர ணாதகீத கிண்கிணி நீபமாலை
திண்டிறல் வேல்மயூர முகமாறும்
செந்தமிழ் நாளுமோதி யுய்ந்திட ஞானமூறு
செங்கனி வாயிலோர்சொ லருள்வாயே
பஞ்சவ னீடுகூனு மொன்றிடு தாபமோட
பைந்தமிழ் வாதுகூறு சமணமூகர்
பண்பறு பீலியோடு வெங்கழு வேறவோது
பண்டித ஞானநீறு தருவோனே
குஞ்சர சாலமேவு பைம்புன மீதுலாவு
குன்றவர் சாதிகூடி வெறியாடி
கும்பிடு நாடுவாழ்வு தந்தவ ரோடுவீறு
குன்றுதொ ருடனமேவு பெருமாளே.

(இ-ள்) பஞ்சவன்-பாண்டியனது, நீடு கூனும்-நீண்ட முதுகின் வளைவும், ஒன்றிடு தாபம்-பொருந்திய சுரபிணியும், ஓட-ஒழியவும், வாதுகூறு-வாதஞ் செய்கின்ற, சமண் மூகர் - சமணர்களாகிய ஊமைகள், பண்பு அறு-குணமற்ற, பீலியோடு மயிலிறகோடு, வெங்கழு ஏற-கொடியகழுவிலே ஏறவும், பைந்தமிழ் - செழுமையான தமிழ்ப் பாசுரங்களை,

ஓது பண்டித-திருவாய்மலர்ந்தருளிய பழுத்த புலமையுடையவனே!, நீறு தருவோனே - திருவெண்ணீற்றைத் தருபவனே!, குஞ்சரம் சாலை மேவும் - யானைகள் வாழும் சாலைகள் கூடிய, பைம்புனம் மீது - பசுமையான கொல்லை நிலங்களில், உலாவு குன்றவர் சாதி - திரிகின்ற வேடர் கூட்டங்கள், கூடி வெறி ஆடி - சேர்ந்து வெறியாட்டம் ஆடி, கும்பிடும்-வணங்க, நாடு வாழ்வு தந்து-உலகவாழ்வை அளித்து, அவரோடு-அவர்களுடன், வீறு - பெருமையாற் சிறக்கும், குன்று தோறு ஆடல் மேவும்-மலைகளி லெல்லாம் திருவிளையாட்டைச் செய்யும், பெருமாளே-பெருமானே!, வஞ்சகம் லோபம் மூடர்-வஞ்சகமும் கொடாமையும் உடைய, மூடர்-மூடர்களுடைய, பொருள்-பொருளுக்காக, ஊர்கள் தேடி-ஊர்களைத் தேடி, மஞ்சரி கோவை தூது - மஞ்சரி கோவை தூது என்னும் பிரபந்தங்களை, பலபாவின-பலவகைப்பட்ட பாட்டுக்களினால், வண்புகழ்-வளவிய புகழையுடைய, பாரி காரி என்று-பாரியென்றும் காரியென்றும், இசைவாது கூறி-புகழை வாதித்துச் சொல்லி, வந்தியர் போல - புகழ் பாடுவோர்போல, வீணில் - வீணாக, அழியாது - அழியாமல், செம் சரண-சிவந்த திருவடிகளையும், நாத கீத கிண்கிணி-ஓசையையுடைய கிண்கிணியையும், நீல மாலை - நீலோற்பல மாலையையும், திண் திறல் வேல்-உறுதியும் வலிமையுமுடைய வேலையும், மயூரம்-மயிலையும், முகம்-ஆறும்-ஆறு திருமுகங்களையும், செந்தமிழ்-செழுமையான தமிழ்ப்பாட்டுக்களால், நாளும்-ஒவ்வொரு நாளும், ஓதி உய்ந்திட பாடிப் பிழைக்க,

ஞானம் ஊற்-மெய்யுணர்வு சுரக்கும், செங்கனி வாயில்-சிவந்த கோவைக் கனியை ஒத்த திருவாயால், ஓர் சொல்-ஒரு சொல்லை, அருள்வாய்-அருளிச் செய்வாயாக. எ-று.

(வி-ரை) மஞ்சரி-மாலை. ஒரு தலைவனைக்குறித்து ஒழுங்காகப் பாடப்படும் ஒரு வகை நூல். கோவை-அகப்பொருட் டுறைகளை யுடைத்தாய்ப் பல கிளவிக் கொத்துக்களுடன் நானூறு கட்டளைக் கலித்துறைச் செய்யுட்களால் ஒரு தலைவன்மேல் பாடப்படும் ஒருவகை நூல். தூது-தூதுரைப்பதாக அன்னம், நாரை, கிளி முதலியவற்றை முன்னிலைப் படுத்திப் பாடப்படுவது. வண்புகழ்-வளவிய புகழ்; மிக்க புகழ் என்றபடி, பாரி-கடையெழுவள்ளல்களில் ஒருவன்; வள்ளல்-வரையாது கொடுப்பவன், வள்ளியல்பு இன்ன தென்பதைப் பின்வரும் கல்லாடத்தாலு முணர்க

'வாட்டமில் அருளுங் கேட்டமில் குணனும்
அசையா நிலையும் நசையா மனனும்
வெகுளாப் பண்பும் விடாப்பே ரன்பும்
செவ்வியின் மரீஇ யெவ்வெவர் எவ்வகை
வேட்டனர் அவ்வகை விருப்பொடு குறிப்பின்
வரையா தீதல் வள்ளல் தன்மை'

பாரி கொடையின் பெருமையினை,

'நல்லவுந் தீயவு மல்ல குவியிணர்ப்
புல்லிலை யெருக்க மாயினு முடையவை
கடவுள் பேணே மென்னா வாங்கு
மடவர் மெல்லியர் செல்லினுங்
கடவன் பாரி கைவண் மையே' என்ற **கபிலர்** பாட்டானும்,

'பாரியே என்று கூறினுங் கொடுப்பாரிலை' என்ற **சுந்தரமூர்த்தி நாயனார்** திருவாக்கானும் உணர்க.

காரி-கடையெழு வள்ளல்களில் ஒருவன். இவன் ஔவையாரால் பேரன்பு வாய்ந்தவன். இவன் புகழை,

> 'கடல் கொளப்படா அடலுநர் ஊக்கார்
> கழல்புனை திருந்தடிக் காரிநின் னாடே
> அழல் புறந்தரூஉ மந்தணர் அதுவே
> வீயாத் திருவின் விறல் கெழுதானை
> மூவரு ளொருவன் துப்பா கியரென
> ஏத்தினர் தரூஉம் கூழே நுங்குடி
> வாழ்த்தினர் வரூஉம் இரவலர் அதுவே
> வடமீன் புரையுங் கற்பின் மடமொழி
> அரிவை தோள் அளவு அல்லதை
> நினதென இலைநீ பெருமிதத்தையே.'

என்ற **கபிலர்** திருவாக்கானும் அறிக.

ஔவையார் பாடிய வெண்பா

> பாரி பறித்த பறியும் பழயனூர்க்
> காரி கொடுத்த களைக்கட்டும்—சேரமான்
> வாராயோ எனவழைத்த வாய்மையும் இம்மூன்றும்
> நீலச்சிற் றாடைக்கு நேர்

வஞ்சகர், உலோபிகள், மூடர்கள் ஆகிய இவர்களிடம் சென்று அவர்களுக்கு இல்லாத குணங்களையும் உள்ளன வாகப் புனைந்தும், மிக்க புகழுடைய பாரியென்றும் காரி யென்றும் பொய்யாகப் புகழ்ந்து பஞ்சரி, கோவை, தூது என்னும் பலவகைப்பட்ட நூல்களைக் கூறியும் வீணே

யழிந்து போகாதபடி நீர் ஒரு சொல்லருள் செய்வீராக என்று வேண்டினரெனக் இம்மானுடரைப் புகழ்ந்து இம்மைப்பொருள் தானும் இல்லாமலும் மறுமைப்பயனு மில்லாது ஒழிவதினும் உன் திருவடியை ஏத்தித் தொழுவேனாயின் இம்மை மறுமை வீடு பேறுகளை அடைதல் திண்ணமென்பார் 'வீணி லழியாதே ஓர் சொல்லருள்வாயே' என்றருளிச் செய்தார் அங்ஙனம் நான் செய்வதற்கு உன் திருவருள் இன்றியமையா தென்பார் 'ஓர் சொல்லருள்வாய்' என்றார்.

பாண்டியன் கூனுடன் சுரநோய் தீர்ந்துய்யவும் சமணர் கழுவேறவும் திருநீற்றைத் தந்தருளும் பெருமானே என்றார், திருஞான சம்பந்த சுவாமிகள் முருகப்பெருமான் அவதாரமே என்பது உணர்த்தற் பொருட்டெனக். மதுரையில் அரசு புரிந்து வந்த கூன்பாண்டியன் சமணர் சொல்வலையிற் சிக்கிச் சைவசமயத்தை விட்டுச் சமணசமயம் புகுந்து அச்சமய வொழுக்கத்தைக் கைப்பற்றி வருவானாயினன் அது காணப்பொறாத கோப்பெருந்தேவி மங்கையாக்கரசியார் ஞானசம்பந்தரை மந்திரி குலச்சிறையார் வாயிலாக வருவித்தனர். அச்சம்பந்தர் அடியார் கூட்டத்துடன் எழுந்தருளியிருந்த மடத்தில் சமணர் தீக்கொளுவினர் அதுகண்ட **சம்பந்தர்**,

'செய்யனே திருவாலவாய் மேவிய
ஐயனே யஞ்சலென்றருள் செய்யெனைப்
பொய்யரா மமணர் கொளுவுஞ் சுடர்
பையவே சென்று பாண்டியற் காகவே.'

என்னுந் தொடக்கத்தை யுடைய ஒரு பதிகம் பாடி அத்தீப பாண்டியனைச் சுரநோயாகப் பற்றும்படி செய்தனர். பாண்டியன் சுரத்தின் வெம்மையைப் பொறாது சமணரை வருவித்து மணி மந்திர மருந்து வகைகளையும் பிரயோகிக்கச் செய்தனன். அப்போதும் அந்நோய் தீராமையால் தன் மனைவியார் சொற்படி ஞானசம்பந்தரை வருவித்து, அவர் அருளை வேண்டினன். அவர்,

‘மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் றிருவால வாயான் றிருநீறே’

என்னு முதற் செய்யுளையுடைய திருநீற்றுத் திருப்பதிகம் கட்டளையிட்டார். உடனே சுரநோய் ஒருபக்கம் தீர்ந்து பாண்டியன் இன்புற்றான். மற்றொருபக்கம் நோய் நீங்கும்படி சமணர் எத்தனைய பாடுபட்டும் முடியவில்லை. பின்னர் வேந்தன் வேண்டுகோட்கு இரங்கி மற்றொரு பக்கமும் நோய் நீங்கும்படி அருள் புரிந்தார். நோய் முற்றும் நீங்கப்பெற்றுப் பாண்டியன் இன்பமடைந்தான். பின் சமணர் சம்பந்தப்பெருமானுடன் வாதுபுரிந்து தோற்றுக் கழு வேறினர். இதன் விரிவைத் **திருத்தொண்டர் புராணத்துட்** காண்க.

வெறியாடுதல் வேடர்கள் ஒருங்கு கூடி முருகவேள் அருள் சுரக்கும்படி வழிபாடு செய்து, தெய்வம் வந்ததாக

ஆடுதல் இதனை, 'வெறியயர் வெங்களத்து வேன்மகன்' என்றதானும்'

'வேலனை றைஇய வெறியயர் களனும்' எனவரும் திருமுருகாற்றுப் படையானும் அறிக.

அரிபிரமாதி தேவர்கட்கும் அரியவனாய் இருந்தும் இழிகுலமும் இழிதொழிலும் உடையவராய வேடர்கட்கும் எளிவந்து அருள்புரியும் பெருங்கருணையுடையன் என்பார்

'கும்பிடநாடிவாழ்வ தந்தவரோடுவீற்று'

என்றனர்.

குன்றுதோறாடல்-மலைகள்தோறும் அருள் விளையாட்டைப் புரிதல். அருள் விளையாட்டு-பஞ்சகிருத்தியம் (21)

தென்கடம்பன்றுறை

22 தனனதன தந்தனந் தந்தனந் தந்தனந்
தனனதன தந்தனந் தந்தனந் தந்தனந்
தனனதன தந்தனந் தந்தனந் தனதான

புணரியு மனங்கனும் புஞ்சரும் புங்கருங்
கயலினொடு கெண்டையுஞ் சண்டனுங் கஞ்சமும்
புதுநிலவு ருந்தியுந் துஞ்சுநஞ் சும்பொருப் பெறிவேலும்

பொருவெனவி கன்றகண் றங்குமிங் குஞ்சுழன்
றிடந்தகடை சிந்துவஞ் சம்பொதிந் திங்கிதம்
புவியிளைஞர் முன்பயின் றம்பொனின் கம்பிதக் குழைமோதிக்

குணலையொடு மிந்தரியஞ் சஞ்சலங் கணிடும்
படியமாபு ரிந்தருஞ் சங்கடஞ் சந்ததம் [பால்
கொடுமைசெய்து சங்கொடுஞ் சிங்கிதங் குங்கடைக்கணினார்

குலவுபல செநதனந தநதுதந தினபுறுந
தரிவிதநர ணஙநளுங கநதநின செமபதங
குறுகுமலைகை யநதியுஞ சநதியுந தொநதமற றமைமேவேனோ

துணாவிரிக டமபமென தொஙகலும பமபுறும்
புழுகுமச லமபகஞ சநதனங குஙகுமந [ளுந்
தொகுகளப முநதுநைநதெனறுநன கொனறுபத திருதோ

தொலைவில்சண முகஙகளுந தநதரமந தரஙகளும
பழநிமலை யுமபாங குனறமுஞ செநதிலுந [வாய்
துதிசெயு மெயனபா தஞசிநதையும சென்றுசெயபபதிவாழ

கணபணபு யஙகமுங கஙகையுந திஙகளுங
குரவுமறு குஙகுறுந துமபையுங கொனறையுங
கமழசடிலடசபபுவுங குமபிடும பணபுடைக குருநாதா

கனகுடகில நினறகுன றநதருஞ சஙகரன
குறுமுனிக மணடலங கொணடுமுன கணடிடுங
கதிசெயநதிவநதுறுந தெனகடமபனறுறைட பெருமாளே

(இ-ள்) துணாவிரி - கொத்தாக விரிந்த, கடம்பம் மென் தொங்கலும் - மென்மையாகிய கடப்பமாலையும், பம்பு உறும் புழுகும் - நெருங்கியுள்ள புனுகும், அசலம் பசுமை சந்தனம் - பொதியமலையினின்று தரப்பட்ட சந்தனமும், குங்குமம் தொகு களபமும் - குங்குமமும் வாசனைப் பொருள்கள் பலவற்றின் தொகுதியையுடைய கலவைச்சாந்தும், துதைந்து - நெருங்கியுள்ள, நன்கு ஒன்று - நன்மை பொருந்திய, பத்து இருதோளும் - பன்னிரண்டு திருத்தோள்களையும், தொலைவு இல் சண்முகங்களும் - எக்காலத்தும் அழிவில்லாத ஆறு திருமுகங்களையும், தந்த்ரம் மந்தரங்களும் - தந்திர மந்திரங்களை

யும், பழநிமலையும்-பழநிமலையிலும், பரங்குன்றும் - திருப்பரங்கிரியையும், செந்திலும் - திருச்செந்தூரையும், துதி செயும் செய் அன்பர் தம் சிந்தையும் சென்று-தோத்திரஞ் செய்யும் உண்மை அடியார்களுடைய மனங்களில் அவருக்கு அருள்புரிவதற்குக் காட்சி கொடுத்து, செயப்பதி வாழ்வாய் - வயலூரில் வாழ்பவனே!, கண்பணை புயங்களும் - திரண்ட பட்டத்தையுடைய பாம்பையும், கங்கையும் திங்களும்-கங்கையையும் பிறைச்சந்திரனையும், குரவும் அறுகும் குறுந்துமம்பையும் கொன்னையும்-குரவமலரும் அறுகம்புல்லும் சிறிய தும்பைமலரும் கொன்றைமலரும், கமழ் சடிலம் சம்புவும்-மணக்கின்ற சடையையுடைய சிவபெருமானும், கும்பிடும் பண்பு உடை குருநாதா - வணங்குகின்ற குணம் வாய்ந்த குருநாதனே!, கன குடகில் நின்ற-பெருமைபொருந்திய குடகு நாட்டில் நிலைபெற்ற, குன்று மதரும்-குடகு மலையினின்றும் உற்பத்தியாகின்றதும், சங்கரன்-சிவபெருமானும், குறுமுனி கமண்டலம் கொண்டு முன் கண்டிடும்-அகத்தியமுனிவர் கமண்டலத்தால் முன்னே கண்டருளிய, கதிசெய நதி-வேகத்தை யுடைய காவிரி நதி, வந்து உறும் தென்கடம்பந்துறைப்பெருமாளே! - வந்து பாயும் தென்கடம்பந்துறையில் தங்கும் பெருமானே!, புணரியும்-கடலும், அனங்கன் அம்பும்-மன்மதன் கணையாகிய குவளையும், கரும்பும்-வண்டும், கரும் கயலின்ஒடு கெண்டையும் - கருமையாகிய கயல் மீனுடன் சென்டைமீனும், கண்டனும்-இயமனும், கஞ்சமும்-தாமரை மலரும், புதுநிலவு அருந்தியும்-புதிய சக்கரவாகப்பறவை

யும், தஞ்சநஞ்சம்-தங்கியவிஷமும், பொருப்பு எறிவேலும், கிரௌஞ்சகிரியைப் பிளந்த வேற்படையும், பொரு என-ஒப்பென்று சொல்லும்படி, இகன்று-அவற்றோடு போராடி, அங்கும் இங்கும் சுழன்று-அங்கும் இங்கும் பிறழ்ந்து, இடை கடை சிவந்து-நடுவிலும் கடைப்பாகத்துஞ் சிவப்பு நிறங்கொண்டு, வஞ்சம் பொதிந்து-வஞ்சகம் நிறைந்து, இங்கிதம் புவி இளைஞா முனப்பயின்று-பலவகைக் குறிப்புக்களை இளையவருக்கு முன் பழகி, அம்பொனின் கம்பிதம் குழை மோதி-அழகிய பொன்னுற் செய்யப்பட்ட அசைவையுடைய குண்டலங்களுடன் தாக்கி, குணலையொடும் - கூத்துடன், இந்திரியம் சஞ்சலம் கண்டிடும்படி-அறிவு வருந்தும்படி, அமர் புரிந்து சண்டையிட்டு, அரும் சங்கடம் சந்ததம் கொடுமைசெய்து-மிக்க சங்கடத்தையும் கொடுமையையும் எப்போதும் செய்து, சங்கொடும் சிங்கி தங்கும்-வெண்மையுடனே விஷம் தங்குகின்ற, கடைக் கணாபால-கடைக் கணையுடைய பெண்களிடத்தில், குலவு பல செம் தனம் தந்துதந்து-விளங்குகின்ற பலசிவந்த பொன்னைக்கொடுத்துக் கொடுத்து, இன்புறும்-இன்பமடைகின்ற, திரிவித கரணங்களும்-மனம், வாக்குக் காயமென்னும் மூவகைப்பட்ட கரணங்களும், மனம் வாக்குக் காயமென்னும் மூவகைப்பட்ட கரணங்களும், கந்த - கந்தனே[1], நின செம்பதம் குறுகும் வகை - தேவரீருடைய சிவந்த திருவடிகளை அடையும் விதத்தை, அந்தியும் சந்தியும்-மாலையிலும் சந்திவேளைகளிலும், தொந்தம் அற்று-உலகப்பற்று ஒழிந்து, அமைவேனோ-பொருந்துவேனோ? எ-று.

(வி-ரை) புணரி-கடல், புணர்தலையுடையது எனக் காரணக்குறி. புணரி முதலாயின கண்களுக்குவமை அனங்கன்-மன்மதன்; அங்கமில்லாதவன். சண்டன்-யமன், யமனைப் போல நோக்கப்பட்டார் உயிரைக் கவருதலின் யமனை என்றார். இங்கிதம்-குறிப்பு. சிங்கி-விஷம், குழை-குண்டலம். தளிர் என்றதன் பெயர் பண்டைக்காலத்தே மாதர் தளிரைத் தங்கள் காதில் தரித்துக்கொள்வது இயல்பாகையால் காதில் தரித்துக்கொள்ளும் ஆபரணம் எல்லாவற்றிற்கும் பெயராயிற்று. திரிவித்கரணம்-மனம் வாக்கு காயங்கள். தொங்கல்-மாலை, தொங்குதலையுடைமையால் காரணப்பெயர். தந்திரம்-சாத்திரங்கள். செய்ப்பதி-வயலூர்.

கண் பண புயங்கம்-திரண்ட படத்தையுடைய பாம்பு

சம்பு-சுகஞ்செய்பவன்

சங்கரன்-ஆன்மாக்களுக்கு இன்பத்தைச் செய்பவன்.

'குறுமுனி கமண்டலங் கொண்டு முன் கவிழ்த்திடுங் கதி செய் நதி' காவேரி. அதன் வரலாறு அகத்தியமுனிவர் தமது கமண்டலத்திலிருந்த காவிரியைக் காந்தனென்னும் மன்னவன் வேண்டுகோளுக்கு இசைந்து நிலத்தில் பெருகி யோடும்படி செய்தனர் என்பதாம். இதனை,

> 'கஞ்ச வேட்கையிற் காந்தமன் வேண்ட
> அமர முனிவன் அகத்தியன் தனாது
> கரகங் கவிழ்த்த காவிரிப் பாவை'

என வரூஉம் **மணிமேகலை அடிகளாலும்** அறிக (22)

திரிசிராமலை

23 தனன தானன தானன தானன
தனன தானன தானன தானன
தனன தானன தானன தானன-தநததான.

தறையின மானிட ராசையி னுமட
லெழுது மாலருண மாதர்கள தோதக
சரசமா யமல ரோதியி னலிரு கொங்கையாலும்

தளர்மி னேரிடை யாலுடை யானடை
யழகி னுன மொழியால விழியா னமருள
சவலை நாயடி யேனமி கவாடிம யங்கலாமோ

பறவை யானமெய ஞானிகண மோனிக
ளணுகொ ணாவகை நீடுமி ராசிய
பவன பூரக வேகிக மாகிய விந்துநாதம்

பகரொ ணாதது சேரவொ ணாதது
நினைவொ ணாதது வான தயாபர
பதிப தானசு மாதிம னோலயம் வந்துதாராய்

சிறைவி டாதநி சாசரர் சேனைகண
மடிய நீலக லாபம தேறிய
திறலவி நோதசு மேள தயாபர அம்புராசி

திரைகள போலலை மோதிய சீதள
குடக காவிரி நீளலை சூடிய
திரிசிரா மலை மேலுறை வீரகு றிஞ்சிவாழும்

மறவர் நாயக ஆதிவி நாயக
இளைய நாயக காவிரி நாயக
வடிவி னாயக வானைதன் நாயக எங்கண்மானின்

மகிழு நாயக தேவாக ணாயக
கவுரி நாயக னாகுரு நாயக
வடிவதாமலை யாவையு மேவிய தம்பிரானே.

(இ-ள்) சிறைவிடாத-சிறைகளைத் தவிர விட்டு நீங்காத, நிசாசரர் சேனைகள் - அசுரர்களுடைய சேனைகள், மடிய-இறக்கும்படி, நீலகலாபம் அது ஏறிய-நீலநிறம் பொருந்திய மயிலின்மேல் ஆரோகணித்த, திறல் விநோத சமேள- வல்லமையும் விநோதமும் பொருந்தியவரே, தயாபர-கருணையுடையவரே! அம்புராசி-கடலினது, திரைகள்போல-அலைகளைப்போல, அலை மோதிய-அலைகள் மோதுகின்ற, சீதள குடகாவிரி - குளிர்ச்சி பொருந்திய குடகுமலையினின்று வரும் காவேரியாற்றின, நீள் அலை சூடிய-நீண்ட அலைகளைப் பொருந்திய, திரிசிராமலை மேல உறை வீர-திரிசிராமலையின் மேலே வசிக்கின்ற வீரரே! குறிஞ்சி வாழும-மலைப்பிரதேசத்தில வாழ்கின்ற, மறவர் நாயக-வேடர்கள் தலைவனே! ஆதி விநாயகர்-முதற் கடவுளாகிய விநாயகக்கடவுளுக்கு, இளைய நாயக-இளையனாகிய நாயகனே!, காவிரி நாயக-காவேரிக்குத் தலைவனே! வடிவின நாயக-அழகிய நாயகனே! ஆனைதன் நாயக-தெய்வயானை அம்மைக்குத் தலைவனே!, எங்கள் மானின மகிழும் நாயக-எங்களது தேவியாராகிய வள்ளியம்மையாரிடத்தில் மகிழ்ச்சி அடையுந் தலைவரே!, கவுரி நாயகனார்- உமாதேவியார் கணவராகிய சிவபெருமானுக்கு, குருநாயக-குருவான தலைவனே!, வடிவு அது ஆம்-அழகு பொருந்திய, மலையாவும் மேவிய-மலைகள் எல்லாவற்றையும விரும்பிய,

தம்பிரானே - தலைவனே!, தரையினில் மானிடா - பூமியில் வாழும் ஆடவா, ஆசையினால் மடல் எழுதும் - தம்மேல் கொண்ட ஆசையால் மடலேறுவதற்கு வடிவத்தை எழுதுகின்ற, மால் அருள் மாதர்கள் - மயக்கத்தைத் தருகின்ற பெண்களாகிய, தூர்த்தக சரசர் - வஞ்சகமான காமச் செயலுடையாரது, மா மலர் - சிறந்த பூக்களைச் சூடிய, ஓதியினால் - கூந்தலினாலும், இரு கொங்கையாலும் - இரண்டு ஸ்தனங்களாலும், தளர் மின் நேர் இடையால் - சோர்ந்த மின்னலை யொத்த இடையாலும், உடையால் - ஆடையாலும், நடை அழகினால் - நடையின் அழகினால், மொழியால் - சொற்களாலும் விழியால் - கண்களாலும், மருள் சவலை நாயடியேன், மயங்குகின்ற பலவீனனாகிய நாயிற் கடைப்பட்ட அடியேன் மிக வாடி மயங்கல் ஆமோ - மிகவும் வருந்த முற்று மயக்க மடைதல் கூடுமோ?, பறவையான மெய்ஞ்ஞானிகள் - ஓரிடத்தே தங்காது பறந்து பறவைபோலத் திரியும் உண்மை ஞானிகளும், மோனிகள் - மௌன விரதியரும், அணுக ஒணா வகை - சேர்வதற்கு முடியாதவண்ணம், நீடும் - மிக்க, இராசியம் - இரகசியமானதும், பவன பூரக ஏகம் - பிராண வாயுவை ஒடுக்கிச் செய்யும் யோகத்தில், ஆகிய விந்து நாதர் - ஒன்றுபட்ட விந்துநாதங்களால், பகர ஒணாதது - சொல்ல முடியாததும், சேர ஒணாதது - சேர முடியாததும், நினையொணாதது - நினைக்க முடியாததுமான, தயாபர பதியது ஆன - அருளோடு கூடிய, சமாதி மனோலயம் - மனம் இலயப்படுவதாகிய சமாதியை, வந்து தாராய் - எழுந்தருளி வந்து அடியேற்கு அளிப்பாய். எ-று

(வி-ரை) தறை-எதுகை நோககி வலலின ரகரம பெற்றது மடல எழுதல-பனைமடலிலே தாம விரும்பிய மடவாருடைய வடிவததை எழுதுதல. பண்டைககாலததே ஆடவர தாம விருமபிய மடவாரை எயதுமபொருட்டு மடல் எழுதுதல இயலபு

இராசியம்-இரகசியம.

சமாதி மனோலயம-மனோலய சமாதி.

பறவையான மெயஞ்ஞானிகள மோனிகள் அனுகொணுவகை நீடும் இராசியம-ஓரிடமென்று நில்லாது பறந்து திரியும் பறவைபோலிருககின்ற பறறற உண்மைஞானிகளும மௌனிகளும கிட்டிக கொளளாவண்ணம மிகக இரகசியமானதும

அமபுராசி-கடல. குடககாவிரி-குடகமலையில தோன்றும் காவேரி. திரிசிராமலை-திரிசிராபபளளியிலுளள மலை. வடிவதாம் மலை எனபதில அது-பகுதிப பொருள் விகுதி. (23)

திருப்போரூர்

24 தனத்தா தானதநத தனத்தா தானதந்த
தனத்தா தானதநத தனதான.

உருககாா வாணிகண்கள பொருபபாா வாரதனஙக
ளுரைத்தேன் வாலசந்த்ர நுதனூலாம்

உருச்சேர் நீண்மருங்குல் பணைத்தோ ளோதிகொண்ட
லுவப்பார் மேல்விழுந்து திரிவோர்கள்

அருக்கார் மாதர் தங்கள் வரைக்கே யோடியின்ப
வலைக்கே பூணுநெஞ்சன் அதிபாவி

அசட்டால் மூடுகினா மயக்கால மாயுமிந்த
அவத்தா லீனமின்றி அருள்வாயே

எருக்கார் தாளிதும்பை மருச்சேர் போதுகங்கை
புனைச்சூ டாதிநம்பர் புதல்வோனே

இருக்கா லேநினைந்து துதிப்பார் நாவினெஞ்சி
லிருப்பா யானைதங்கு மணிமார்பா

செருக்கா லேமிகுந்த கடற்சூர் மாளவென்று
திறற்சேர் வேலைகொண்ட முருகோனே

தினைக்கோர் காவல்கொண்ட குறத்தேன் மாதுபங்க
திருப்போ ரூரமர்ந்த பெருமாளே.

(இ-ள்.) எருக்கு ஆர் தாளி தும்பை-எருக்கு, ஆத்தி, கூதாளி, தும்பை என்னும் இவற்றின், மருச்சேர்-மணம் பொருந்திய, போது-மலர்களையும், கங்கையினை-கங்கையையும், சூடு ஆதி நம்பர்-சூடுகின்ற ஆதியாயுள்ள சிவபெருமானுக்கு, புதல்வோனே-குமாரனே!, இருக்காலே-இருக்கு வேதத்தாலே, நினைந்து துதிப்பார்-எண்ணி வாழ்த்துவோர், நாவில் நெஞ்சில் இருப்பாய்-நாவிலும் மனத்தினும் இருப்பவனே!, யானை தங்கும் மணிமார்பா-தெய்வயானை தங்குகின்ற அழகிய மார்பை உடையவனே!, செருக்காலே மிகுந்த-அகங்காரம் அதிகரித்த, கடல் சூர்-கடல் வடிவங்

கொண்ட சூரன், மாளவென்-இறக்கும்படி வெற்றி கொண்ட, திறல் சேர் வேல்-வலிமையுடைய வேலை, கைகொண்ட-திருக்கரத்தில் தாங்கிய, முருகோனே-முருகனே!, தினைக்கு ஓர் காவல் கொண்ட-தினைப்புனத்தில் காவலாக இருந்த, குறத்தேன்-குறவர் மகளாகிய, மாதுபங்க-வள்ளி நாயகியாரைப் பக்கத்தில் உடையவனே! திருப்போரூர் அமர்ந்த பெருமாளே-திருப்போரூர் என்னுந் தலத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமாளே!, உருக்கு ஆர்-உருக்குதல் பொருந்திய, வாளி-அம்பை ஒத்த, கண்கள்-கண்களாலும், பொருப்பு ஆர்-மலையை ஒத்த, வார் தனங்கள்-கச்சையணிந்த முலைகளாலும், உரை தேன்-சொல்லும் அமுது கொப்பளிக்கும், வால் சந்திரன்-பிறைச்சந்திரனை ஒத்த, நுதல்-நெற்றியையும், நூல் ஆம்-நூலையொத்த, உருசேர்-அழகு பொருந்திய, நீள் மருங்குல்-நீண்ட இடையையும், பணை தோள்-மூங்கிலையொத்த தோளையும், கொண்டல் ஓதி-மேகத்தை யொத்த கூந்தலையும் கொண்டு, உவப்பா-மகிழ்ச்சியாக, மேல் விழுந்து-முறபட்டு வந்து, திரிவோர்கள்-திரிகின்றவர்களாகிய, அருக்கு ஆம்-அருமையையுடைய, மாதர் தங்கள்-பெண்களுடைய, வரைக்கு-இடத்திற்கு, ஓடி இன்ப வலைக்கு ஓடிச்சென்று இன்பமாகிய வலைக்கு, பூணும் நெஞ்சன்-விரும்புகின்ற மனத்தையுடையவனும், அதிபாவி-மிக்க பாவத்தைச் செய்பவனுமாகிய யான், அசட்டால்-குற்றத்தாலும், மூடுகின்ற மயக்கால்-மூடப்பட்ட மயக்கத்தாலும், மாயும்-அழி

யும், இந்த அவத்தால்-இந்தத் துன்பத்தால், ஈனம் இன்றி-குற்றமில்லாமல், அருள்வாய்-கருணை புரிவாயாக எ-று.

(வி-ரை) உரைத்தேன் பாலசந்திரன் என்பதற்கு உவப்பார் வாலசந்திரன் என்றும்பாடம் இதற்கு உயர்வுபொருந்திய பாலசந்திரன் என்று பொருள். இருக்கு என்றது ஈண்டு உபலக்கணத்தால் ஏனை யசுர், சாமம், அதர்வணம் என்னும் வேதங்களையும் குறிக்கும். இதற்கு விதி 'ஒரு மொழி யொழி தன்னினங் கொளற் குரித்தே' என்பது (நன்னூல் சூத்-358) இருக்காலே நினைப்பார் நெஞ்சிலும் துதிப்பார் நாவிலுமென எதிர் நிரனிறையாகக் கொள்க. யானை-தெய்வயானையார். கடற்சூர்-கடல் வடிவங் கொண்ட சூரன், குறத்தேன் வள்ளிநாயகி. திருப்போரூர்-செங்கற்பட்டு 24-மைல் தூரத்திலுள்ள ஒரு சுப்பிரமணிய ஸ்தலம். நம்பர்-சிவபெருமான், விரும்பப்படுபவர்.

சிவபெருமான் பஞ்சாக்கரத்தைச் செபித்துத் தோத்திரஞ் செய்வோர் மனத்திலும் நாவிலும் தங்கி யிருப்பான் என்பார்,

'இருக்காலே நினைந்து துதிப்பார் நாவில் நெஞ்சில் இருப்பார்' என்றருளிச்செய்தனர். இருக்கு-இருக்குவேதம், மந்திரம் என இரட்டுற மொழிந்து கொள்க. (24)

25 தான தானன தானன தான தானன தானன
தான தானன தானன-தனதான.

சீருலாவிய வோதிம மானமா நடை மாமயில்
சேயசாயல்க லாமதி முகமானார்

தேனுலாவிய மாமொழி மேருநேரிள மாமுலை
சேனுலாவிய கூர்விழி ... குமிழ்நாசி
தாருலாவிய நீள்குழல் வேயளாவிய தோளியர்
சாயலிலே திரி வேனைநின ... அருளாலே
சாமவேதியர் வானவ ரோதி நாண்மலர் தூவிய
தாளிலவீழ்நி னைதருள ... புரிவாயே
காருலாவிய நீள்புன வேடர் மால்வரை மீதுறை
காவல்மாதினொ டாவல்செய ... தணைவோனே
காணவாகம வேதபு ராணநூல்பல வோதிய
காரணாகரு ணாகர ... முருகோனே
போருலாவிய சூரனை வாரிசேர்வெழ வேலவிடு
பூபசேவக மாமயில ... மிசையோனே
போதன மாதவன மாதுமை பாதியாதியு மேதொழு
போரிமா நகர மேவிய ... பெருமாளே

(இ-ள்) கார் உலாவிய-மேகம் உலவுகின்ற, மால்வரை மீது உறை-பெரியமலையின்மேல் வசிக்கின்ற, வேடர்-வேடர்களது, நீள்புனம்-நீண்ட புனத்திலே, காவல் மாதினொடு-காவலைச் செய்த வள்ளி நாயகியாரோடு, ஆவல் செய்து-மிக்க விருப்பங்கொண்டு, அணைவோனே-தழுவுகின்றவனே!, காண-ஆன்மாக்களை உண்மை ஞானத்தை அடையும்படி, வேத புராண நூல்-வேத புராணங்களாகிய சாத்திரங்கள், பல ஓதிய-பலவற்றைத் திருவாய்மலர்ந்தருளிய, காரணா-எல்லாவற்றிற்கும் காரணமானவனே!, கருணாகர - அருள் வடிவானவனே!, முருகோனே - முருகனே!, போர் உலா

விய - சண்டைமேற் சென்ற, சூரனை - சூரபதுமனை, வாரி சேறு எழ-கடலிலே சேறு எழும்படி, வேல் விடு-வேலை விடு கின்ற, பூப-தலைவனே', சேவகம் மா மயில்-அதிகாரத்தைச் செய்யும் சிறந்த மயிலின், மிசையோனே-மேலேஎழுந்தருளி யிருப்பவனே', போதன்-பிரமனும், மாதவன்-திருமாலும், மாது உமை - அழகிய உமாதேவியார், பாதி ஆதியும்-பாதி வடிவமாகவுள்ள சிவபெருமானும், தொழு-வணங்கு கின்ற, போரிமாநகர்-திருப்போரூர் என்னும் திவ்வியக்ஷேத் திரத்தில், மேவிய-திருக்கோயில் கொண்டருளிய, பெரு மானே-பெருமானே', சீர் உலாவிய-அழகு பொருந்திய, ஓதிமம் ஆன-அன்னத்தை ஒத்த, மாநடை-சிறந்த நடையி னையும், மாமயில்-சிறந்த மயிலை, சேய-ஒத்த, சாயல்-மென் மையையும், கலாமதி-கலைகள்நிறைந்த சந்திரனை ஒத்த, முகம் மானார்-முகத்தையு முடையவரும், தேன் உலாவிய-தேனை ஒத்த,மாமொழி-இனியசொல்லையும், மேருநேர் - மேருமலை யைஒத்த, இளமாமுலை-இளையபெருத்ததனங்களையும், சேல் உலாவிய கூர்விழி-சேற்கெண்டையை ஒத்த கூர்மையான கண்களையும், குமிழ் நாசி-குமிழம்பூப்போன்ற மூக்கையும், தார் உலாவிய-மாலையைத்தரித்த, நீள்குழல்-நீண்ட கூந்தலை யும் உடைய, வேய் அளாவிய தோளியர்-மூங்கிலை ஒத்த தோளையுடையவருமாகிய பெண்களுடைய, சார்பில்-பற்றுக் கோட்டில், திரிவேனை-அலைகின்றவனாகிய அடியேனை, நின் அருளாலே- தேவரீருடைய திருவருளால், சாமவேதியர்-சாமவேதத்தை ஓதும் பிராமணர்களும், வானவர்-தேவர்க

ளும், ஓதி-மந்திரங்களைச்சொல்லி, நாண்மலர்-புதிய பூக்களை, தூவிய-சிதறிய, தாளில்-திருவடிகளில், வீழ-வணங்கும்படி, நினது அருள் புரிவாய்-உன்னுடைய கருணையைச் செய்வாய் எ-று.

(வி-ரை.) ஓதிமம்-அன்னம். சாயல்-மென்மை விஞு-அறிவு. காவல் மாது-காவல் காத்துவந்த வள்ளியம்மையார். சாமவேதியர்-சாமவேதங்களைப் பாடுபவர்.

ஆகமம்-சிவபெருமானால் அருளிச்செய்யப்பட்ட ஞான நூல்கள். அத்தகைய ஆகமங்கள் இருபத்தெட்டு அவை சிவபெருமானையே சிறப்பாகக் கூறுதலின் சிறப்பு நூல்கள் எனப்படும் வேதம் எல்லாக் கடவுளரையுங் கூறுவதால் பொதுநூல் எனப்படும் வேதம்-அறிதற் கருவியாக உள்ளது என்பது காரணக்குறி.

புராணம்-பழமை வேதாகம புராணாதிகளை இறைவன் அருளிச் செய்தாரென்றார் அவை எக்காலத்தும் உள்ளனவாதலினாலும் முதல் நடுவீறு காணமுடியாமையாலும் என்க. (25)

திருச்செங்கோடு

26 தந்தா தனந்த தந்தா தனந்த
தந்தா தனந்த-தனதான.

பந்தாடி யங்கை நொந்தார் பரிந்து
பைந்தார் புனைந்த குழன்மீதே
பண்பார்சு ரும்பு பண்பாடு கின்ற
பங்கேரு கங்கொள் முகமீதே

மந்தார மன்றல் சந்தார மெனமாறி
வன்பாத கஞ்செய் தனமீதே
மண்டாசை கொண்டு விண்டாவி நைந்து
மங்காம லுன்றன் அடிதாராய்
கந்தா அரன்றன் மைந்தாவி ளங்கு
கன்றாமு குந்தன் மருகோனே
கண்டோர் புகழ்ந்த நன்கார் மடந்தை
கந்தா வரம்பை மணவாளா
செந்தா தடர்ந்த கொந்தார் கடம்பு
திண்டோள் நிரம்ப அணிவோனே
திண்கோ டரங்கள் வெண்கோ டுறங்கு
செங்கோ டமர்ந்த பெருமாளே

(இ-ள்) கந்தா அரன் தன் மைந்தா-கந்தனே! சிவபெருமானுக்குத் திருக்குமாரனே!, விளங்கு கன்று ஆ முகுந்தன்-விளங்குகின்ற கன்றையுடைய பசுக்களைக் காத்த திருமாலுக்கு, மருகோனே-மருமகனே!, கண்டோர் புகழ்ந்த-பார்த்தோர் யாவரும் புகழும், நன்கு ஆர் மடந்தை-அழகு நிறைந்த தெய்வயானையாருக்கு, கந்தா - பற்றுக்கோடாக உள்ளவனே!, அரம்பை மணவாளா-அரம்பைபோல அழகு வாய்ந்த வள்ளிநாயகியாரின் கணவனே!, செம் தாது அடர்ந்த-சிவந்த மகரந்தப் பொடிகள் நெருங்கியுள்ள, கொத்து ஆர் கடம்பு - கொத்துக்கள் நிறைந்த கடப்ப மாலையை, திண்தோள் நிரம்ப அணிவோனே - உறுதியையுடைய தோள்கள் நிரம்பும்படி தரிப்பவனே!, திண்கோடரங்கள் வலிமையுடைய குரங்குகள், எண்கோடு உறங்கு-

காடிகளுடன் தூங்குகின்ற, செங்கோடு - திருச்செங்கோடு என்னுந் திருப்பதியில், அமர்ந்த பெருமாளே - தங்கிய பெருமாளே!, பந்தாடி அங்கை நொந்தார் - பந்தாட்டமாடி அங்கை வருந்திய மாதர்கள், பரிந்து - விரும்பி, பைம் தார் புனைந்த - பசுமையான மாலையை அணிந்த, குழல்மீது - கூந்தலின் மேலும், பண்பு ஆர் - நன்மை நிறைந்த, சுரும்பு பண்பாடுகின்ற - வண்டுகள் இராகத்தைப் பாடுகின்ற, பங்கேருகம் கொள் முகம் மீது - தாமரையை ஒத்த முகத்தின் மேலும், மந்தாரம் மன்றல் - செவ்வந்தியின் வாசனையோடு, சந்து ஆரம் - சந்தனமும் மாலையும், ஒன்றிய - பொருந்திய, வன்பாதகம் செய் தனம் மீது - கொடிய பாவங்களைச் செய்யும் முலைகளின் மேலும், மண்டு ஆசை கொண்டு - மிக்க விருப்பத்தைக் கொண்டு, ஆவி விண்டு நைந்து - உயிர் விட்டு வருந்தி, மங்காமல் உன்றன் அடி தாராய் - அழியாமல் உன்னுடைய திருவடிகளைத் தருவாயாக என்று.

(வி-ரை) குழல்மீது, முகமீது, தனமீது என்புழி எண்ணும்மைகள் விகாரத்தாற்றொக்கன. அகம் + கை = அங்கை என்றாயிற்று, 'அகமுனர்ச் செவிகை வரின் இடையன கெடும்' என்பது நன்னூல்.

பரிந்து-விரும்பி. பைந்தார்-பசுமையான மாலை, பசுமை என்பது ஈறுகெட்டு அடி அகரம் ஐயாயிற்று. ஈறுபோதல் என்னும் சூத்திரம் காண்க. சுரும்பு-வண்டு, சுரும்பின் ஒலியைப் பாடுதலாகக் கூறினார். பங்கேருகம்-தாமரை, வடசொல்; மலர்ச்சியினாலும், செந்நிறத்தாலும், அழகினாலும்

தாமரை முகத்துக்கு உவமை. தாமரை ஈண்டு செந்தாமரை. மனாலை-வாசனை சந்து-சந்தனப்பூச்சு. ஆரம்-முத்துமாலை. சந்தனத் தேய்வையும் முத்துமாலையும் பொருந்தி வன்மை யான பாவத்தொழிலாகிய காமத்தை யூட்டுகிற ஸ்தனங்கள் என்க. ஆடவருக்கு இயல்பாகவே மோகத்தை விளைவிக் கும் ஸ்தனங்கள் திட்பமான சந்தனத்தையும் ஒளிய முத்துமாலையையும் தரித்திருப்பின் மோகத்தை மிகுதியும் விளைவிக்கு மென்பார், 'சந்தாரமொன்றி வன்பாதகஞ் செய் தனம்' என்றார். கண்டாருக்கு உண்டாகும் மோகத்தைப் பொருள் செய்தனவாக உபசரித்துக் கூறினார். காமம் பாத கங்கள் எல்லாவற்றினும் மிகக் கொடிதாதலின் 'வன்பாத கம்' என்றார். இதனை,

'எரிதலைக் கொண்ட காமத்தினைப் நீர்ப்புள்ளியற்ற
பிரிவின் கட்பிறந்த துன்பம் பெருங்கட லனையதொன்று
ஒருங்கிநைந் துடம்பு நீங்கினிம் மையோடும்மை யின்றி
யிருதலைப் பயனுமெய்தா ரென்றியாங் கேட்டுமன்றே.'

என்னும் **சீவகசிந்தாமணிச்** செய்யுளாலும்,

'தீமையுள்ளன யாவையுந் தந்திடுஞ் சிறப்புந்
தோமில் செல்வமுங் கெடுக்குநல் லுணர்வினைத் தொலைக்கு
மேமநன்னெறி தடுத்திருளுய்த்திடு மிதனாற்
காம மன்றியே யொருபகை யுண்டுகொல் கருதில்.'

என்னுங் **கச்சியப்ப சிவாசாரியர்** கூற்றானும்,

'காமமே கொலைகட்கெல்லாங் காரணங் கண்ணோடாத
காமமே களவுக்கெல்லாங் காரணங் கூற்றமஞ்சுங்

காமமே களனுண்டாற்கும் காரண மாதலாலே
காமமே நரகபூமி காணியாக கொடுப்பதென்றான.'

என்னும் பரஞ்சோதிமுனிவர் திருவாக்கானும்,

'தூமகேது புவிக்கெனத் தோன்றிய
வாமமேகலை மங்கையரால் வருங்
காமமில்லை யெனின் கருங்கேடெனும்
நாமமில்லை நரகமு மில்லையே'

எனனும் கம்பர் உரையானும் உணர்க.

'ஆவிவிண்டு நைந்து' என விசைக்க உன்னருளைப் பெறேனாயின் பிறப்பு இறப்புக்களை மீண்டும் மீண்டும் பெறு வேன், ஆதலின் நான் அத்தகைய பெருந் துன்பத்திற்கு ஆளாகாமல் உன் திருவருளை எனக்குத் தருவாய் என்றார். பிறப்பு துன்பந்தருதலையும் பிறவாமை இன்பந்தருதலையும், 'பிறந்தார் குறுவது பெருகிய துன்பம் பிறவாருறுவது பெரும் பேரின்பம்' எனவரும் மணிமேகலை அடிகளால் அறிக. இறைவன் திருவருள் இன்றிப் பிறப்பு அறாது என் னுங் கருத்தை,

'உயிராவண மிருந்துற்று நோக்கியுள்ளக்
கிழியினுருவெழுதி
உயிராவணஞ் செய்திட்டுன் கைத்தந்தா லுணரப்
படுவாரோ டொட்டிவாழ்தி
அயிராவணமேறாது தானே றேறியமரர் நாடாளாதே
யாரூராண்ட
அயிரா வணமே யெனனம்மானே நின்னருட்கண்ணா
னோக்காதாரல்லாதாரே.'

என்னும் **அப்பர்** அமுதவாக்கான் அறிக. கன்று - கன்று ஆ - கன்றையுடைய பசு; வலித்தல் விகாரம் பெறாமல் நின்றது கன்று கோபித்தது; செய்யா எனும் வாய்பாட்டு வினையெச்சம் விலங்கல்-மலை, குறுக்கிட்டுக் கிடப்பது எனக் காரணக்குறி. கந்தா, மணவாளா என்ற இரண்டும் கணவனென்னும் பொருளில் வந்தன. கொந்து-மெலித்தல் விகாரம். திணடோள்-திணமை என்னும் பண்புப்பெயரின் ஈறு கெட்டு வருமொழி முதலில் தகரம் வர 'ணனவல்லினம் வரட்டறவும்' என்னும் விதியினால் வருமொழி தகரம் டகரமாகத் திரிந்தது. கடம்பு முருகனுக்குத் திருவடையாள மாலை. கோடரங்கள் - குரங்குகள் எண்கு - கரடி, குரங்குகளும் கரடிகளும் தங்குகின்ற மலையாதலின் திண்கோடரங்கள் எண்கோடுறங்கு செங்கோடென்றார். திருச்செங்கோடு என்னும் திவ்விய ஸ்தலம் சேலம் ஜில்லாவிலுள்ளது (26)

பழமுதிர்சோலை

27 தனதன தானதான தனதன தானதான
தனதன தானதான-தனதான.

இலவிதழ் கோதி நேதி மதகலை யார வார
இளநகை யாட ஆடி மிகவாதுற்
றெதிர்பொரு கோர பார ம்ருகமத கோல கால
இணைமுலை மார்பி லேறி மதராசன்
கலவியி லோடி நீடு வெகுவித தாக போக
கரணபர தாப யாப மடமாதர்

கலவியின் மூழ்கி யாழறி விழிதொழி லேனு நீது
  கருதிய ஞான போத மருள்வேனோ
கொலைபுரி காளி சூலி பயிரவி நீலி மோடி
  குலிசகு டாரி யாயி மகமாயி
குமரிவ ராகி யோகி பகவதி யாதி சோதி
  குணவதி யால வூணி யபிராமி
பலிகொள்க பாலி யோகி பரமகல் யாணி லோல
  பதிவிரதை வேத ஞானி புதல்வோனே
படையொடு சூரன் மாள முடுகிய சூர தீர
  பழமுதிர் சோலை மேவு பெருமாளே.

(இ-ள்) கொலை புரி காளி-மகிடாசுரனைக் கொன்ற காளியும், சூலி - திரிசூலப் படையுடையவளும், பயிரவி-பைரவியும், நீலி-நீலநிறமுடையவளும், மோடி-துர்க்கையும், குலிச குடாரி-வஜ்ஜிராயுதத்தையும் கோடரியையும் உடைய வளும், ஆயி மகமாயி-உலகமாதாவும் பெரிய மாயையுடைய வளும், குமரி வராகி யோகி-இளமையுடையவளும் வராகியும் யோகினியும், பகவதி - ஐசுவரியம், செல்வம், புகழ், ஞானம், வீரியம், அழகு முதலிய குணங்களையுடையவளும், ஆதி-எல்லாவற்றிற்கும் முதலாக வுள்ளவளும், சோதி சோதி சொரூபமானவளும், குணவதி-சிறு குணங்கள் உடையவளும், ஆல ஊணி-விஷத்தை ஊணாகக் கொண்டவளும், அபிராமி-அழகுடையவளும், பலிகொள கபாலி-பலியைக் கொள்ளும் கபாலியும், யோகி-தியானிக்கத்தக்கவளும், பரம கல்யாணி-மிக்க கல்யாண குணங்களுடையவளும், லோல - விளை

யாட்டை உடையவளும், பதிவிரதை-கற்புடையவளும், வேத ஞானி-வேதத்தை அறிந்தவளுமாகிய உமாதேவியாருக்கு, புதல்வோனே-திருக்குமாரனே!, படையொடு-சேனைகளோடு சூரன் மாள-பதுமாசுரன் இறக்கும்படி, முடுகிய சூர தீர-மேவிச்சென்ற சூரனே தீரமுடையவனே!, பழமுதிர சோலை மேவு பெருமாளே-பழமுதிர்சோலை என்னும் தலத்தில் எழுந்தருளிய பெருமானே!, இலவு இதழ கோதி-இலவ மலரை ஒத்த இதழைக்கோதி, நேதி மதகலை-நியதியை யுடைய காமநூல்களை, ஆர ஆய-மிகுதியும் செய்ய, இள நகை ஆட ஆடி-புன்னகைசெய்ய விளையாடி, மிக வாது உடற்றி-மிகவும் வாதுசெய்து எதிர்பொரு-எதிரில் பொருவு கின்ற, பேராம பாரம-கொடுமையை யுடைய பெரிய, மருக மத கோலகால-கஸ்தூரி அணிந்த திரட்சிபொருந்திய காலத் தில் தோன்றிய, இணைமுலை-ஒன்றுகொன்றொத்த இரண்டு தனங்களும், மார்பில் ஏற-மார்பில் பொருந்த, மதராஜன் கலவியில் ஓடி-மன்மதனது போகத்தில் சென்று, நீடு வெகு வித தாக போக-மிக்க பலவிதமான ஆசையைக்கொண்டு, கரண மிருதாபம-பற்பல செய்கை விகற்பங்களாகிய பொரு மையையுடைய, பாபம மடம மாதர-பாபச செயலையுடைய இளம்பெண்களுடைய, கலவியில முழுகி-போகமாகிய கட லில முழ்கி, ஆழும் இழிதொழிலேனும் - அழுந்துகின்ற தாழ்ந்த செயலையுடைய அடியேனும், மீது கருதியஞானம் போதம அடைவேனோ-மேன்மையாக எண்ணப்பட்ட ஞான போதத்தையப் பெறுவேனோ. எ-று.

(வி-ரை) இலவிதழ்-இலவம்பூவை யொத்த இதழ், உவமைத் தொகையிலேத் தொடர். நேதி-நியதி. மதகலை-காம நூலில் சொல்லிய பல கலவிநுட்பம், ஆர ஆர என்ற அடுக்கு மிகுதிபற்றியது. இளநகை-மந்தகாசம், புன்சிரிப்பு. கோரம்-கொடுமை, வட்டில் என்ற பொருள் கூறிக்கொண்டு கிண்ணத்தை யொத்த ஸதனமென் றுரைப்பினும் பொருந்தும். மிருகமதம்-கஸ்தூரி. பிரதாபம்-புகழ். கரணம்-செயல், இதழ் கோதுதல்-உதட்டைப் பற்களால் கடித்தல், இது காமக் குறிப்பு. மாதர் போகத்தில் அழுந்திக் கிடப்போர்க்கு ஞானமுண்டாதல் அருமை என்பார், 'இழிதொழிலேனும் ஞானபோத மடைவேனு' என்றார். ஆல ஊணி-நஞ்சை உணவாகக் கொண்டவள் என்றது, சிவபெருமானுக்கு உள்ள செயல்களையுஞ் சிறப்புகளையும் உமாதேவியாருக்கும் ஏற்றிக் கூறுதல் புலவர் மரபு ஆதல்பற்றி என்க. பகவதி-பகவன் என்பதின் பெண்பால். பகவன் ஆறு குணங்களுடையவன். பகம்-ஆறு. ஆறு குணங்களாவன திரு, ஞானம், வைராக்கியம், ஐசுவரியம், வீரியம், புகழ். யோகி, என்பது தமிழில் பெண்பாலுக்காகி வந்தது. வடமொழியில் யோகினி என வரும்.

பகவன் என்பதற்குக் கேவல ஞானமுள்ளவன் என உரை கூறினர் அடியார்க்கு நல்லார். (27)

சோலைமலை

28 தானதன தந்த தந்த தானதன தந்த தந்த
தானதன தந்த தந்த-தனதான.

வாரணமு கங்கிழிந்து வீழவும ரும்ப லார்ந்து
மாலவரைய சைந்த னங்கள் முடிசாய
வாளகிரி யண்ட ரண்ட கோளமுற நின்றெ ழுந்து
மாதவம றந்து றந்த நிலைபேர
பூரணகு டங்க டந்து சீதகள பம்பு னைந்து
பூசலைவி ரும்பு கொங்கை மடவார்தம்
போகசய னந்த விர்ந்து னுட்கப தம்ப ணிந்து
பூசனைசெய் தொண்ட னென்ப தொருநாளே
ஆரணமு ழங்கு கின்ற வாயிர மடந்த வங்க
ளாகுதியி டங்கள் பொங்கு நிறைவீதி
ஆயிரமு கங்கள்கொண்ட நூபுர மிரங்கு கங்கை
யாறமர வந்தலம்பு துறைசேர
தோரணம லங்கு துங்க கோபுரநெ ருங்குகின்ற
சூழ்மணிபொன் மண்ட பங்கள் ரவிபோலச்
சோதியின்மி குந்த செம்பொன் மாளிகைவி ளங்குகின்ற
சோலைமலை வந்து கந்த பெருமாளே.

(இ-ள்) ஆரணம்முழங்குகின்ற-வேதங்கள் ஒலிக்கின்ற, ஆயிரம் மடம் தவங்கள்-ஆயிரக் கணக்கான மடங்களும், தவஞ் செய்யும் இடங்களும், ஆகுதி இடங்கள்-யாகஞ்செய்யும் இடங்களும், பொங்கும் நிறை வீதி-மிகுந்து நிறைந்த தெருக்களில், ஆயிரம் முகங்கள் கொண்ட ஆயிரம் முகங்களையுடைய, நூபுரம் இரங்கு - சிலம்பொலியைப்போல ஒலிக்கின்ற, கங்கை ஆறு-கங்கை நதியானது, அமர வந்து அலம்பு-பொருந்த வந்து ஒலிக்கின்ற, துறை சேர-துறைகளில் அடைய, தோரணம் அலங்கு-தோரணங்கள் அசை

கின்ற, துங்கம் கோபுரம்-உயர்ந்த கோபுரங்கள், நெருங்குகின்ற சூழ்மணி-நெருங்குகின்ற இரத்தினங்களால் சூழப்பட்ட, பொன் மண்டபங்கள்-பொன்னாலாகிய மண்டபங்கள், ரவிபோல் சூரியனைப்போல, சோதியில் மிகுந்த- ஒளியினால் சிறந்துள்ள, செம்பொன் விளங்குகின்ற - சிவந்த பொன் விளங்கும், சோலைமலை வந்து உகந்த பெருமாளே- சோலைமலையிலே வந்து விரும்பி இருக்கும் பெருமானே', வாரணம் முகம் கிழிந்து வீழவும்-யானையினது மத்தகம் துண்டுபட்டு விழவும், அரும்பு அலர்ந்து-அரும்பும் மலரவும், மால்வரை அசைந்து-பெரியமலை அசையவும், அனங்கனை முடிசாய-மன்மதனது கிரீடம் சாய்தலை அடையவும், வாள்கிரி-சக்கரவாளகிரி, அண்டரண்டகோளம்-ஆகாயத்தின்மேலாகாய மண்டலத்தில், உற நின்று எழுந்து-பொருந்தும்படி நிலைபெற்று ஓங்கவும், மாதவம் அறம் துறந்து நிலைபோ-சிறந்த தவமும் தருமமும் நீங்கிச்செல்லவும், பூரண குடம் கடிந்து-நிறைந்த குடத்தைக்கோபித்து, சீதம் களபம் புனைந்து - குளிர்ச்சி பொருந்திய கலவைச்சாந்தை அணிந்து, பூசலை விரும்பி-காமச்சண்டையை விரும்புகின்ற, கொங்கை மடவார் தம் - ஸ்தனங்களையுடைய பெண்கள், போக சயனம் தவிர்ந்து-போகசயனத்தினின்று நீங்கி, உன் ஆடகம் பதம் பணிந்து-உனது பொன்போன்ற சிறந்த திருவடிகளை வணங்கி, பூசனைசெய்தொண்டன் என்பது-பூசைசெய்கின்ற அடியேன் என்று சொல்வதாகிய, ஒரு நாள்-ஒரு நாள் உண்டாகுமோ? எ-று.

நூபுரம் இரங்கு கங்கை-சிலம்போசைபோன்று ஒலிக்கின்ற கங்கையாறு. இதுபோல கம்பராமாயணத்துள்,

'வரங்கள் மாசறத் தந்து செய்தோர்களவாய்
புரங்கள் நேரிலா நகரம் நீங்கிப்போய்
அரங்கி னடிவார் சிலம்பி னன்னதின்
றிரங்கு வாரிபுனற் சரயு வெய்தினார்'

என வருவது காண்க (28)

சீபுருடமங்கை

29 தானதனதந்த தானதனதந்த
தானதனதந்த-தனதான.

வேனின் மதனைந்து பாணமவிட்டெய்து
வீதிதொறுநின்று மடவார்பால்

வேளையெனவந்து தாளினில்வீழ்ந்து
வேடைகெடநண்பு பலபேசித்

தேனினுமணந்த வாயமுதமுண்டு
சீதளதனங்க ளினினைமுழ்கித்

தேடியதனங்கள் பாழ்படமுயன்று
சோகதியதின்றி யுழல்வேனோ

ஆனிரைதுரந்து மாநிலமளந்தே
ராலிலையிலன்று துயின்மாயன்

ஆயாமனைசென்று பாலதயிறளைந்த
ஆரணமுகுந்தன் மருகோனே

வானவர்புகழ்ந்த கானவர்பயந்த
மாதொடுவிளங்கு மணிமார்பா

மாமறைமுழங்கு சீபுருடமங்கை
மாநகரமர்ந்த பெருமாளே.

நூபுரம் இரங்கு கங்கை-சிலம்போசைபோல ஒலிக்கின்ற கங்கையாறு. இதுபோல **ஸ்ரீராமாயணத்துள்,**

'வரங்கள் மாசறத் தருஞ்செய்தோர்களைப்
புரங்கள் நேரிலா நகரம் நீங்கிப்போய்
அரங்கி னாடுவார் சிலம்பி னன்னதின்
றிரங்கு வார்புனற் சரயு வெய்தினார்'

என வருவது காண்க (28)

சீபுருடமங்கை

29 தானதன தந்த தானதன தந்த
தானதன தந்த-தனதான.

வேனின் மதனைந்து பாணமலர்தொடுந்து
வீதிதொறுநின்று படையாயால்
வேலையெனவந்து காலினில்விழுந்து
வேடைகெடநண்பு பலபேசித்
தேனினுமணைந்த வாயமுதமுண்டு
சீதளதனங்க ளினினமூழ்கித்
தேடியதனங்கள் பாழ்படமுயன்று
சோகதியதினறி யுழல்வேனோ
ஆனிரைபுரந்து மாநிலமளந்து
ஆலிலையிலன்று துயின்மாயன்
ஆயர்மனைசென்று பால்தயிறருந்த
ஆரணமுகுந்தன் மருகோனே
வானவர்புகழ்ந்த கானவர்பயந்த
மானொடுவிளங்கு பணிமார்பா
மாமறைமுழங்கு சீபுருடமங்கை
மாநகரமர்ந்த பெருமாளே.

(இ-ள்) ஆன நிரை துரந்து - பசுக்கூட்டங்களினின்று
நீங்கி, மாநிலம் அளந்து - பெரிய உலகத்தை ஓரடியாலே
அளந்து, ஓர் ஆல் இலையில் - ஓர் ஆல் இலையின்மேல், அன்று
துயில் மாயன் - அந்நாளில் அறிதுயில் அமர்ந்த அதிசயச்
செயலுடையவனும், ஆயர் மனை சென்று - இடையர்கள் வீடு
தோறும் போய், பால் தயிர் அளைந்த - பாலையும் தயிரையும்
குழைத்துண்ட, ஆரணம் முகுந்தன - வேதங்களாலே புகழப்
பட்டவனுமாகிய திருமாலுக்கு, மருகோனே - மருகனே!,
வானவர் புகழ்ந்த - தேவர்களாலே புகழப்பட்ட, கானவர்
பயந்த - வேடர்கள் பெற்ற, மானொடு விளையாடும் - வள்ளியம்
மையாரோடு விளையாடுகின்ற, மணி மார்பா - அழகிய மார்பை
உடையவனே!, மாமறை முழங்கு - சிறந்த வேதங்கள் மிக்கு
ஒலிக்கின்ற, சீபுருடமங்கை மாநகர் - சீபுருடமங்கை என்னுந்
திருப்பதியிலே, அமர்ந்த பெருமாளே - விரும்பி வசிக்கும்
பெருமானே!, வேனில் மதன் - கோடைக்காலத்துக்குரிய
மன்மதன், ஐந்து பாணம் விட நொந்து - ஐந்து பூவாலாகிய
அம்புகளை விடுதலால் வருந்தி, வீதிதொறும் நின்று - தெருக்
கள்தோறும் நின்று, மடவார் பால் - பெண்களிடத்தில், வேளை
என வந்து - காமத்தைத் தீர்க்கும் சமயம் இதுவே என்று
சொல்லிப்போய், தாளினில் விழுந்து - அவர் இசையும்படி
கால்களின்மேல் விழுந்து, வேட்கை கெட - காமவெப்பம் ஒழிய,
நண்பு பல பேசி - நட்புக்குரிய பல வார்த்தைகளைச்சொல்லி,
தேனின் மணந்த - தேன்கலந்த, வாய் அமுது உண்டு - வாயி
லேயுள்ள அமுதத்தைப்பருகி, சீதளம் தனங்களின் மூழ்கி-

குளிர்ச்சிபொருந்திய முலைகளில் முழுகி, தேடிய தனங்கள் பாழ்பட முயன்று-வருந்தித் தேடியபொருள்களை பாழாகும்படி முயற்சிசெய்து, சோகித்து அது இன்றி உழலவேனோ- அடையத்தக்க நலம் ஒன்றுமில்லாமல் துன்பமடைவேனோ? எ - று.

(வி-ரை) மன்மதன் செயலாகிய காம உணர்ச்சி மிகுதியும் விளைதற்கு உரிய காலம், வேனிற்காலமாதலின் 'வேனில் மதன' என்றார் இப்பாற்றியே,

'ஆரமும் ஆரச் சேறும் அரும்பனி நீரும் பூவும்
ஈரவெண் மதி நிலாவும் இதம்புரி தென்றற் காலும்
ஓருயிர் இரண்டு மெய்யாய் உருகுவார் உருகும் வண்ணம்
மாரனை மகுடஞ் சூட்ட வந்தது வசந்த காலம்'

என வில்லிபுத்தூராரும்,

'மன்னன் மாரன் மகிழ்துணை யாகிய
வின்னிள வேனில் வந்த திவணென
விளங்கெழு பொதியின் மாமுனி பயந்த
விளங்கால் றூத னிசைத்தன னாதலின்
மகர வெல்கொடி மைந்தன் சேனை
புகரறு கோலங் கொள்ளுமென் பதுபோற்
கொடிமிடை சோலைக் குயிலோ னென்னும்
படையுள் படுவோன் பணிமொழி கூற
மடலவிழ் கானற் கடல்விளை யாட்டினுட்
கோவல னூடக் கூடா தேகிய'

என இளங்கோவடிகளும் கூறுதல் காண்க

மன்மதன் பஞ்சபாணங்கள் முல்லை, அசோகு, குவளை, தாமரை, மாம்பூ இவற்றின் செயல் உன்மத்தம், மதனம், மோகம், சந்தாபம், வசீகரணம் என்பன.

இவற்றிற்கு அவத்தை ஐந்து. அவை

சம்பிரயோகம்-பேச்சும் நினைவும், விப்ரயோகம்-பெருமூச்செறிந்துவருந்துதல், சோகம்-வெதும்பும் உணவுவெறுத்தலும், மோகம்-அழுதலும் பிதற்றலும், மரணம்-மயக்கமும் அயர்ச்சியும், தேனினும் மணந்த வாயமுதுண்டு என்ற கருத்து 'பாலொடு தேன் கலந்தற்றே பணிமொழி வாலெயிறூறிய நீர்' என்ற திருக்குறளிலும் வந்திருத்தல் காண்க. இதன் சிறப்பை,

'வண்டுமொய்த்த தனைய கூந்தல் மதனபண் டார வல்லி
கெண்டையோடொத்த கண்ணாள் கிளிமொழிவாயினூறல்
கண்டுசர்க்கரையோ தேனோ கனியொடு கலந்த பாகோ
அண்டமா முனிவர்க்கெல்லா மமுதெனவளிக்கலாமே.'

என்பதிலும் காண்க. அது பகுதிப்பொருள் விகுதி. உழல்வேனோ என்பதில்-ஓகாரம் எதிர்மறைப் பொருட்டு. ஆனிரை துறந்து என்பதனால் கிருஷ்ண அவதாரத்தையும், மாநில மளந்து என்பதனால் திரிவிக்கிரம அவதாரத்தையும் குறித்தார். ஆலிலையில் துயில்தல்-ஊழி முடிவில் உலகமெல்லாம் அழியத் தான்மட்டும் நிலைபெற்று அறிதுயில் அமர்தல். இடையர் மனைதோறுஞ் சென்று பால் தயிர் திருடி உண்டானேனும் வேதங்களால் புகழப்படும் சிறப்புடையன் என்பார், 'ஆயர் மனைசென்று பால் தயிர் அளைந்த ஆரணமுகுந்தன்' என்றார். கானவர் பயந்தமான்-வள்ளிநாயகி. (29)

பழனி

30 தனனதந்தன தநதனதன
தனனதந்தன தந்தனதன
தனனதந்தன தநதனதன-தநததான

கனககும்பமி ரண்டுநேர்மலை
யெனநெருங்குகு ரும்பைமாமணி
கதிர்சிறந்தவ டங்குலாவிய முந்துசூதம

கடையினின்றுப ரந்துலாவொடு
மிளிர்கிளிஞ்சிலை யுந்தகோமள
களபகுங்கும கொங்கையானையை யிம்பபாரக

யிணைவரும்கொடு மென்றுமேலவிலை
யிடுமடந்தையர் தங்கள்போதகம்
அதின்மருண்டுதி வண்டவாசையில லைந்துபூபால

அவசமுங்கொடு மின்பசாகர
முழுகும்வஞ்சக நெஞ்சையேயொழி
தருபதங்கதி யெம்பிரானருள் தந்திடாதோபார

தனனதந்தன தந்தனவென
டிகுகுடிங்குகு டிங்குபேரிகை
தகுதிதிகதித திந்தசோவென உந்துதாளந

டமரசஞ்சலி சஞ்சலாவென
முழவுடுண்டுடு டுண்டுடூவென
தருணகிண்கிணி கிணகிணாமுழு முந்துபேர்வாத்தம

பணிபதங்கய வெண்டிசாமுக
கரியடங்கலு மண்டகோளகை
பதறிநின்றிட நின்றுதாதக வென்றுதோகை

பவுரிகொண்டிட மண்டியேவரு
நிசிசரன்கிளை கொன்றவேலவ
பழனியங்கிரி யின்கண்மேவிய தம்பிரானே.

(இ-ள்) தனன தநதன தநதன என டுகுகு டுங்குகு டுங்கு பேரிகை-இத்தகைய ஓசையையுடைய பேரிகையும், தகுதி திந்திகு திந்திமி தா என உந்துதாளம்-இவ்வோசையுடன் அடிக்கும் தாளமும், தமர சஞ்சலி சஞ்சலா என-த்தொனியையுடைய சஞ்சலி சஞ்சலா என ஓசையைச் செய்ய, முழவு-மத்தளம், டுண்டுடு டுண்டுடு என-இவ்வோசையைச் செய்ய, தருணம் கிணிகிணி-சிறிய கிணி கிணி, கிணிகிண் ஆரமும் கிணிகிண ஓசையையுடைய மணிவடங்களும், முந்த ஓதும்-முன்பு துதிக்கின்ற, பணிபதம்-யாவரும் வணங்கத் தக்க பதவியும், கயம் எண் திசாமுக கரி அடங்கலும்-இவைபொருந்திய எட்டுத் திக்குயானைகளெல்லாம், அண்டகோளகை பதறி நின்றிட-அண்டங்களெல்லாம் பதறி நிற்க, நின்று நோக்க என்று-நின்று தொகுதியை உடையவனே என்று, தோகை பவுரி கொண்டிட-மயில் கூத்தாட, மண்டி வரு நிசிசரன்கிளை-நெருங்கிவந்த அவுணர் சுற்றத்தை, கொன்ற வேலவ-கொன்ற வேற்படையை உடையவனே', பழனி அங்கிரியின்கண் மேவிய தம்பிரானே-பழனியாகிய அழகிய மலையில் வசிக்கின்ற தம்பிரானே', கனகம் கும்பம் இரண்டும் நேர்-பொற்குடம் இரண்டும் ஒப்பாகுமென்றும், மலை என-வடிவத்தால் மலைகளுக்கு ஒப்பாகுமென்றும், நெருங்கு குரும்பை - ஒன்றோடொன்று நெருங்கியுள்ள

தென்னம் பிஞ்சுகளென்றும் சொல்லப்படும், மாமணி கதிர சிறந்த வடம்-சிறந்த முத்துக்கள் மிகுந்த மாலை, குலாவிய-விளங்கிய, முந்து சூதம்-அழகிற் சிறந்த மாந்தளிர் போன்ற மேனியானது, பரந்து நாள்தொறும் இலகி-பரவித் தினந்தோறும் மேன்மையாகி, விஞ்சி எழுந்த-மேம்பட்டுத் தோன்றிய, கோமளப் களபம் குங்குமம் கொங்கை யானையை-இளைய கலவைச் சாந்தையும் குங்குமத்தையும் பூசிய ஸ்தனங்களாகிய யானைகளை, இன்பம் ஆக-இன்பமாகப் பொருந்தும்படி, அனைவரும் கொளும் என்று-எல்லாரும் பெறுமாறாக என்று, கடையில்-வாயிலில், நின்று விலையிடு மடந்தையர்-தாங்கள் நின்றுகொண்டு விலைபேசும் பெண்களுடைய, தோதகம் அதில் மருண்டு-வஞ்சனையில் மயங்கி, நவரூட ஆசையில்-மனத்துள்ளாசைப் படைந்த ஆசையினை, நைந்து-வருந்தி, பாயல் அவசம் கொளும்-படுக்கையில் பரவசப் படும், இன்பம் சாகரம் மூழ்கும்-இன்பமாகிய கடலில் முழுகும், வஞ்சகம் நெஞ்சை ஒழித்து-வஞ்சகமுடைய மனத்தை ஒழிக்கின்ற, பதம் கதி-மேல் பதவியாகிய மோக்ஷத்தை, எம்பிரான்-எம்பெருமானே!, அருள் தந்திடாயோ-அடியேனுக்கு அருள்செய்வாயோ என்-று.

(வி-ரை) கொங்கையை யானை என்றது-பருமையானும் பெருமிதத்தானும் வினைமிகுதியும் கூறுதற்கு உரிய கவர்ச்சி உடைமையானும் என்க. கொங்கைகளே மகளிர்க்குச் சிறந்த அவயவமாதலின் அவற்றான் வரும் மயக்கத்தையே மிகுத்துக் கூறினாரென உணர்க. பெண்கள்பால் வைத்த ஆசையை

ஒழிந்து இறைவனிடத்தில் அவர்கள்மேல் வைத்த ஆசையில் ஒரு கூறு வைக்கினும் பெருங்கதி யடையலாமாதலின், ஆசிரியர் பாட்டுத்தோறும் இவ்வாறு அருளிச்செய்வாராயினர்.

> 'தந்தையுங்களையர் தங்கள்மேல் வைத்த
> தயாவை நூறாயிரங் கூறிட்டு
> அத்திலங்கொரு கூறுன் னடிமலர் மிசைவைக்கின்
> அமருல களிக்கும் நின்பெருமை
> பித்தனென் றொருகால் பேசுவரேனும்
> பிழைத்தவை பொறுத்தருள் செய்யும்
> கைத்தல மடியேன் சென்னியில் வைத்த
> கங்கைகொண்ட சோளேச சரத்தானே.'

என்னுந் திருவாக்கானும்,

> 'மங்கையர்கள் யோனிமிசை வைத்திருக்கு மாசையினைப்
> பங்குசெய்து நூற்றிலொரு பங்கெடுத்து—கங்கையணி
> வேணியரன் பாதார விந்தத்தில் வைத்தக்கால்
> காணலாங் காணுங் கதி'

என வருஉஞ் செய்யுளானு மறிக.

பெண்கள்பால் வைத்த பற்றை ஒழித்தற்கும் அதனை இறைவன் பாற் செலுத்தற்கும், இறைவன் அருளே இன்றியமையாதென்பார், 'எம்பிரான் அருள் தந்திடாயோ' என்றார். இதனை "அவனருளாலே யவன்றாள் வணங்கி" என்ற திருவாசகத்தானும்,

'மனமெனு மயமா என்வயப் படாமல்
மயங்குறும் ஐம்புலவீதி, மறிபடாதோடுகின்றது முறையோ

மறித்தவை நிறுத்தி யெனையாண்டரு
ளினைய லதுதவு வாரிலை'

எனனும் **சிவப்பிரகாச சுவாமிகள்** திருவாக்கானும் உணர்க.

எண் திசாமுக்கரி-அஷ்டதிக்கஜங்கள் தொகை - ஆகு பெயர். நிசிசரன்-இரவில் சஞ்சரிப்பவன், அசுரன். எம்பி ரான்-இயல்பு விளி. வேலவ-அண்மைவிளி. (30)

திருவேங்கடம்

31 தனதாந்தன தானன தானன
தனதாந்தன தானன தானன
தனதாந்தன தானன தானன-தனதான.

வரிசேர்ந்திடு சேல்கய லோவெனு
முழைவார்ந்திடு வேலையு நீலமும்
வடுவாம்பிடு வாள்விழி மாதர்கள் வலையாலே

வளர்கோங்கிள மாமுகை யாகிய
தனவாருசை யிலேமுக மாயையில்
வளமாந்தளிர் போனிற மாகிய வடிவாலே

இருள்போலிடு வார்குழ லீழையில்
மயல்சேர்ந்திடு பாயலின் மீதுற
இனிதாங்கனி வாயமு தூறல்கள் பருகாமே

எனதாந்தன தானவை போயற
மலமாங்கடு மோகவி காரமும்
இவைநீங்கிட வேயிரு தாளுமல ரருள்வாயே

கரிவாம்பரி தேர்திரள் சேனையு
முடனாந்துரி யோதன னாதிகள்
களமாண்டிட வேயொரு பாரத மதிலேகிக்

கனபாண்டவர் தேர்தனி லேயெழு
　　பரிதூண்டிய சாரதி யாகிய
　　கதிரோங்கிய நேமிய னாரி　　　　ரகுராமன்

திரைநீண்டிரை வாரியும் வாலியு
　　நெடிதோங்கும ராமர மேழொடு
　　தெசமாமுசிர ராவண னார்முடி　　　　பொடியாகச்

சிலைவாங்கிய நாரண னார்மரு
　　மகனாங்குக னேபொழி லேசூழ்தரு
　　திருவேங்கட மாமலை மேவிய　　　　பெருமாளே.

(இ-ள்) கரி வாம்பரி தேர் திரள் சேனையும்-யானைப் படையும், தாவுகின்ற குதிரைப்படையும், தேர்ப்படையும் திரண்ட காலாட் படையும், உடன் ஆம் துரியோதனன் ஆதிகள்-ஒன்றுகப் பொலிந்திய திரியோதனன்முதலியோர், களம் மாண்டிட - போர்க்களத்திலே இறந்தொழிய, ஒரு பாரதம் அதில் ஏகி-பாரதப்போரில் சென்று, கனம் பாண்டவர் தேர் தனில்-பெருமை தங்கிய பாண்டவர்கள் தேரிலே, எழுபரி தூண்டிய-கட்டப்பட்ட மேற்செல்லும் குதிரைகளைச் செலுத்திய, சாரதி ஆகிய-சாரதியான, கதிர் ஓங்கிய நேமியன்-ஒளிசிறந்த சுதரிசன மென்னும் சக்கரத்தையுடையவனும், அரி ரகுராமன்-அரியும் ரகுராமனும், திரை நீண்டு இரை-அலைகள் மிகுந்து ஒலிக்கின்ற, வாரியும்-கடலும், வாலியும்-வாலி என்னும் குரங்கரசனும், நெடிது ஓங்கு மராமரம் ஏழொடு-மிக்கு வளர்ந்த ஏழுமராமரங்களும், தெசமாம் சிர ராவணனார்-பத்துத் தலைகளையுடைய இராவ

ணனுடைய, முடி-கிரீடமும், பொடியாக-பொடிபடும்படி, விலை வாங்கிய-விலையை விளைத்த, நாரணனார்-திருமாலுடைய, மருமகன் ஆம் குகனே-மருமகனாகிய முருகனே!, பொழில் சூழ்தரு-சோலைகள் சூழ்ந்த, திருவேங்கட மாமலைமேவிய-திருவேங்கடமாகிய சிறந்த மலையில் வாழ்கின்ற, பெருமாளே-பெருமானே!, வரி சேர்ந்திடு சேல்-செவ்வரி படர்ந்த சேல் மீனை, கயல் எனும்-கயல்மீனை என்று சொல்லப்படும், உழை-மானையும், வார்ந்திடு வேலையும்-வடித்துச் செய்யப்பட்ட வேலையும், நீலமும்-நீலோற்பல மலரையும், வடு-மாம் பிஞ்சினையும், வாங்கிடு வாள்-பகைவரை அழிக்கும் வாளையும் ஒத்த, விழி மாதர்கள்-கண்களையுடைய பெண்கள், வலையால்-ஆடவர் மனத்தைக் கவரும்படி வீசும் மோகவலையாலும், வளர் கோங்கு-வளர்கின்ற கோங்கினது, இளமா முகை ஆகிய தனம் வாஞ்சையில்-இளமை பொருந்திய சிறந்த அரும்பை ஒத்த ஸ்தனங்களின்மேல் வைத்த ஆசையாலும், முகம் மாயையில்-முகத்தினது மயக்கத்தாலும், வள மாந் தளிர்போல்-செழுமையான மாமரத்தினது தளிரைப் போல, நிறம் ஆகிய வடிவால்-நிறம் பொருந்திய வடிவினாலும், இருள் போன்றிடு-இருளையொத்த, வார்குழல் நிழலில்-நீண்ட கூந்தலின் நிழலிலே, மயல் சேர்ந்திடு பாயலின் மீது உற-மையல் கொண்ட படுக்கையின்மேல் பொருந்த, இனிது ஆம்-இனிமையுடையதாகிய, கனிவாய் அமுது ஊறல்கள்-கொவ்வைக் கனிபோன்ற வாயிலுள்ள தேவாமிர்தத்தை ஒத்த ஊறலை, பருகாமே-உண்ணாமல்,

எனது ஆம் தனது ஆனவை - என்னுடைய பற்றுக்களா னவை அகன்று நீங்க, மலம் ஆம் கடுமோக விகாரமும்- மலத்தாலே உண்டாகிய மிகுந்த மோகவிகாரமும், இவை நீங்கிட-ஆகிய இவைகள் நீங்க, இருதாள் மலர் அருள்வாய்- இரண்டு திருவடிகளாகிய தாமரை மலர்களை அருளிச்செய் வாய் எ-று.

(வி-ரை) மாதர்-அழகு, காதல்-அழகையுடையவரென் றேனும் காதலிக்கத் தக்கவரென்றேனும் கொள்க, 'மாதர் காதல்' **தொல்காப்பிய சூத்திரம்** வடு-மாம்பிஞ்சு. விழியை 'வலை' என்றார் ஆடவர் மனமாகிய பறவைகள் அகப்படுத் தப்படுதலின். உள்ளக்குறிப்பை யுணர்த்தும் சிறப்புடைய தாதலபற்றி விழியை விதந்து கூறினார் இவ்வாறே,

'மண்ணிற் சிறந்த புகழ்த்தஞ்சை வாணன் மலயவெற்பில்
பெண்ணிற் சிறந்தவிப் பேதைதன் பார்வை பெருவினையேன்
உண்ணிற் சிறந்த இருநோய்தனக் கினி மருந்தாய
கண்ணிற் சிறந்த உறுப்பில்லை யாவதுங் காட்டியதே'

என்று **பொய்யாமொழிப் புலவரும்**,

'இருநோக்கு இவளுண்கண் உள்ளது ஒருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து'

'கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில'

எனத் தெய்வப்புலமைத் **திருவள்ளுவ நாயனாரும்**,

'அணியும் அமிழ்தும் என் னாவி மாயவன் தில்லைச் சிந்தா
மணியும் பராவறியா மறையோனடி வாழ்த்தலரிற்
பிணியும் அதற்கு மருந்தும் பிறழப் பிறழ மின்னும்
பணியும் புரை மருங்குற் பெருந்தோளி படைக்கண்களே'

என **மணிவாசகப் பெருமானும்** அருளிச் செய்தமை காண்க.

இளமைச் செவ்வியின் அருமை தோன்ற, 'வளர் கொங்கு இளமாமுகை' என்றார். முகமாயை என்றார் மயக்குதலின்.

'கொங்கை இளநீரால் குளிர்ந்திளஞ் சொற்கரும்பால்
பொங்கு சுழியென்னும் பூந்தடத்தில்—மங்கையர்தம்
கொய்தாம வாசகக் குழலிழை நீழ லாறினோம்
வெய்தாம் அக்காம விடாய்'

எனப் **புகழேந்திப் புலவரும்** கூறுதல் காண்க.

* நிழல்-நீழல் என நீட்டல் விகாரம் பெற்றது.

மயல் சோர்ந்திடு பாயல் என்றார், மெல்லிய தூய மலர்கள் தெளிக்கப்பட்டு அன்னத்தின் தூவி முதலிய மென்மைப் பொருள்களிட்டுச் செய்யப்பட்ட அணை முதலியவற்றை யுடையதாய நோக்கினவளவில் காமத்தீயை விரைய மூட்டுதலின். பாயல்கள் எனப் பன்மையாற் கூறியது. கலவி விகற்பத்தாற் பற்பல காலங்களில் உண்ணுமவற்றை யெல்லாம் குறித்தற்கெனக்.

வாம்பரி-தாவுங் குதிரை, பெயரெச்சம் குறைந்தது. கரி-கரத்தை யுடையது, யானை; கரம்-துதிக்கை, கருமை யுடையது என்பாருமுளர்; அது, வடசொல்லாதலின்

பொருந்தாத துரியோதனனாதிகள் - துரியோதனன் தம்பியர், கன்னன் சகுனி முதலியோர். பாரதம - இங்கு பாரத வமிசத்தவராலே செய்யப்பட்ட யுத்தம். கன பாண்டவர்- பெருமை பொருந்திய பாண்டவர் அவருக்குப் பெருமை யாவது,

'எல்லாம் ஒறுக்கும் மதுகை யுடையாளன்
பொறுக்கும் பொறையே பொறை.'

என்றபடி பொறுமையும், வாய்மை பிறழாமையும, ஒழுக்கம் முதலியனவுமாம், நேமியன-சக்கரப்படையை யுடையவன். ஆம் - அசை நீண்டு எனபது குறிப்புப்பெயரெச்சத்து அகரம் தொக்கது இரைவாரி-ஒலிக்கின்ற கடல

இராமாவதாரத்தில வாலியையும், ஏழு மராமரங்களையும் இராவணனையும கோதண்டத்தால கொலை செய்தவன் என்பார், 'திரை நீண்டிரை . ராவணனார்' என்றார். இராவணனார்-ஆர் உயர்வுப்பொருள் விகுதி. தசமாஞ்சிரம்-பத்துத்தலை வில்லின் தொழில வன்மையைக் குறிப்பால் 'சிலைவாங்கிய' என்றார். திருவேங்கட மாமலை என்பது திருப்பதி; அது வட ஆர்க்காடு ஜில்லாவிலுள்ளது (31)

திருவானைக்கா

32 தான தத்தன தத்தன தத்தன
தான தத்தன தத்தன தத்தன
தான தத்தன தத்தன தத்தன-தன தான

ஆலம் வைத்த விழிச்சிகள் சித்தச
னாகமக்கலை கற்றச மர்த்திக
ளாரமுற்றதனத்தை மெத்தவிலைப்பகர்வார் தெருவூடே

யார வட்டமு லைக்குவி லைப்பணை
மாயி ரக்கல மொட்டிய ளப்பினு
மாசை யப்பொரு ளொக்கக் கொடுப்பவ ருடனமாலாய்

மேவி ளைப்புமு சிப்பும வத்தையு
மாயெ டுத்தகு லைப்பொடு பித்தமு
மேலகொ ளத்தலை யிட்டவி திப்படி யதனாலே

மேதி னிக்குள பத்தனெ னப்பல
பாடு பட்டுபு ழுக்கொள்ம லக்குகை
வீடு கட்டியி ருக்குமெ னக்குநி னருடாராய்

பீலி மிக்கம யிற்றுர கத்தினி
லேறி முட்டவ ளைத்துவ குத்துடல
பீற லுற்றவு பத்த களத்திடை மடியாத

பேர ரக்கரெ திர்த்தவ ரத்தனை
பேரை யுக்ரக ளப்பலி யிட்டுயா
பேய்கை கொட்டிந டிப்பம ணிக்கழு குடனாட

ஏலம் வைத்தபு யத்தில ணைத்தருள்
வேலெ டுத்தச மர்த்தை யுரைப்பவ
ரேவ ருக்கும னத்தினி னைப்பவை யருள்வோனே

ஏழி சைத்தமி ழிற்பய னுற்றவெ
ஞாவ லுற்றடி யிற்பணி லுத்தம
னீசன் முக்கணி ருத்தன ளித்தருள் பெருமாளே.

(இ-ள்) பீலி மிக்க - தோகை மிகுந்த, மயில துரகத்தினில்-மயிலாகிய குதிரையின் மேல், ஏறி-ஊர்ந்து, முட்ட வளைத்து - முழுவதும் சுற்றி, வகுத்து-வியூகங்கள் வகுத்து, உடல்பிறல்உற்ற-உடம்புசிதைவுபட்ட, உபத்தகளத்திடை-

போர்க்களத்தில், மடியாத-இறவாத, பேர் அரக்கர் - பெருமையுடைய அரக்கர்களுள், எதிர்த்தவர் அத்தனை பேரை- எதிர்த்தவர்கள் அவ்வளவு பேரையும், உக்ரம் களம் பலி இட்டு - கோபம் மிகுந்த களத்துக்குப் பலியாக இட்டு, உயர் பேய் கை கொட்டி நடிப்ப - உயர்ந்த பேய்கள் கைகளைக் கொட்டிக் கூத்தாடவும், மணிகழுகு உடன் ஆட-மணிநிறம் பொருந்திய கழுகுகள் சேர்ந்து விளையாடவும், ஏலமணைவைத்த புயத்தில்-சாந்து பூசிய தோளில், அணைத்தருள் - அணைத்தருள்கின்ற, வேல எடுத்த சமர்த்தை- வேற்படையைத் தாங்கிய சாமர்த்தியத்தை, உரைப்பவர் எவர்க்கும்-கூறுவோர் எல்லோருக்கும், மனத்தில் நினைப்பவை அருள்வோனே-அவ்வவர் மனத்தில் நினைக்கின்ற எல்லாவற்றையும் அருள் செய்பவனே', ஏழ் இசை தமிழில் பயன் உற்ற-ஏழிசையையுடைய தமிழ்ப் பாசுரங்களால் பயனைப்பொருந்திய, வெண் நாவல் உற்று அடியில் பயில்- வெண்ணாவல் மரத்தை விரும்பி அதனடியில் கோயில் கொண்டிருக்கும், உத்தமன் ஈசன்-நன்மையுடைய ஈசனும், முக்கண்-மூன்று திருக்கண்களை உடையவரும், நிருத்தன்- பஞ்சகிருத்திய நடனம் புரிபவருமாகிய சிவபெருமான், அளித்தருள் பெருமாளே-பெற்ற பெருமானே', ஆலம் வைத்த விழிச்சிகள்-விஷத்தையுடைய கண்களுடையவரும், சித்தசன் ஆகமம் கலைகற்ற சமர்த்திகள்-மன்மதனுடைய ஆகமத்தின் கலைகளில் கற்றுத்தேர்ந்த வன்மையுடையவர்களும், ஆர் மனதையும் - எப்படிப்பட்டவர்கள் நெஞ்சை

யுய், எத்தி வளைப்பவர்-ஏமாற்றித் தங்கள் வசப்படுத்து வோரும், தெரு ஊடு-தெருவின் நடுவில், ஆரம் வட்டம் முலைக்கு-முத்துமாலை தரித்த வட்டமான ஸ்தனங்களுக்கு, விலை பணம் ஆயிரம் கலம்-விலையாகப் பணத்தை அதிகக்கல மாக, கொட்டி அளப்பினும்-கொட்டி அளந்தாலும், ஆசை அப்பொருள் ஒக்க-ஆசையானது கொடுத்த அந்தப் பொருளின் தொகைக்குப் பொருந்த, நடிப்பவர் உடன் மாலாய-பொய்யாகக் காட்டுகின்றவர்களுமாகிய விலைமாதர்களோடு காம மயக்கங்கொண்டு, மேல இளைப்பும் முசிப்பும் அவத்தையு மாய-அதனுகை இளைப்பும் முசிப்பும் அவத்தையும் உண்டாகி, எடுத்த குலைப்பொடு பித்தமும்-மிகுந்த இருமலும் பித்தமும், மேல்கொள-மிகுந்து, தலையிட்ட விதிப்படி அதனலை-தலையில் எழுதிய விதியின்படி, மேதினிக்கு உள-பூமியில், பத்தன் என-அடியவனென்று, பல பாடு பட்டு-பலவகையான துன்பங்களை அநுபவித்து, புழு கொள மலம் குகை-புழுக்கள் செறிந்த மலக்கூடாகிய, வீடு கட்டி இருக்கும்-வீட்டைக் கட்டியிருக்கின்ற, எனக்கு-அடியேனுக்கு, நின அருள் தாராய்-தேவரீருடைய அருளைத் தருவாய் எ-று.

(வி-ரை) ஆலமவைத்த விழிச்சிகள்-நஞ்சைத் தன்னகத்தேயுடைய கண்களையுடைய பெண்கள். காமத்தை மூட்டலின் இவ்வாறு கூறினார். "மாதர்யமனும் அனாதம் மைவிழியே வன்பாசம்" என்று சிதம்பரசுவாமிகளும்,

"உருகி உடல்கருகி யுள்ளீரல் பற்றி
எரிவ தவியாதென் செய்வேன்—வரியரவ

> நஞ்சிலே தோய்ந்த நளினவிழிப் பெண்பெருமாள
> நெஞ்சிலே யிட்ட நெருப்பு"

என்று **அம்பிகாபதியும்** கூறுதல் காண்க.

சித்தசன ஆகமம்-மதனநூல். பொருளின் அளவாக போகத்தைத் தருவோரென்பார், 'ஆசை அப்பொருள் ஒக்க கடிப்பவர்' என்றார். இக்கருத்தே பற்றி ஆசிரியர் **திருவள்ளுவநாயனார்,**

> "பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்
> ஏதில பிணந்தழீஇ யற்று." என்றும்

> 'இழிபவ ருமாந்தர் முந்தோர் கிளையவர் கழியர் நோயர்
> கழிபவர் யாவரேனுங் கண்வலைப் படுநெஞ்ச [நத்துகாட்டிப்
> மழிபவர் பொருள்கொண் டெள்ளுக் கெண்ணெய்போ [லள
> பழிபடு போகம் விற்பார் ராவணப் பண்பு சொல்வாம்"

என்று **பரஞ்சோதி முனிவரும்** கூறினார்.

"புழுக்கொள் மலக்கூட்டை வீடு" என்றது தேகத்தை; இதன் அபாசத்தை.

> "கமனியக் கட்டமேயாயினும் பலவீத் தங்குறின்
> விழைந்தரும் பற்றா
> ரமிழ்தமே யானுந் துய்ப்புறிற் பலவீயாக்கு
> மிவ்வுடற் புகரறிந்த
> மிமிழ்தரப் பறுமடவருக் குரைத்துமென்
> பயன்றீர்ந்து மாடிடினு
> முமிழ் முடையாக்கை சுசியுறு திறைவனுண்மை
> தேர்ந்துயிர் சுத்தியுறுமே."

என்று **தணிகைப்புராணம்** கூறுமாற்றானுந் தெளிக.

இறைவன் அன்பர்கள் மனத்தில நினைத்த பொருள்களை அருள செய்பவன என்பார், 'வேலெடுத்த சமர்த்தை யுரைப்பவர் எவருக்கும் மனத்தில நினைபபவை அருள் வோனே' என்றருளிச செய்தார். 'வேண்டுவார் வேண்டு வதே யீவான கண்டாய்' என அப்பரும, 'வேண்டத்தக்க தறிவோய் நீ' 'வேண்ட முழுதும் தருவோய நீ' என மணி வாசகரும் அருளிச செயதது காண்க. வெணணாவலுற் றடியிற பயிலுத்தம ஈசன-வெணநாவல மரத்தின்கீழ பொருந்தி வாழும் மேன்மையுடைய சிவபெருமான். திருவானைக்கா திருசசிராபபள்ளிக்கு சமீபததிலுள்ள ஒரு பெரிய சிவஸ்தலம். இங்கே அப்புலிங்கம் உள்ளது. நிருத்தன்-நடனஞ் செய்வோன், நடனம-பஞ்ச கிருத்தியம், இதனை.

வெண்பா

'தோற்றந் துடியதனிற் றோயுந் திதியமைப்பிற்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்-ஊற்றமாம்
ஊன்று மலர்ப்பதத்தே உற்றதிரோ தமுத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.'

என வரும் உண்மை விளக்கச் செய்யுளால் உணர்க. (32)

திருக்கற்குடி

33 தனத்தத் தனத்தத் தனத்தத் தனத்தத்
தனத்தத் தனத்தத-தனதான.

குடத்தைத் தகர்த்துக் களிறனைத் துரத்திக்
குவட்டைச் செறுத்துக் ககசாலக்

குலத்தைக் குமைத்துப் பகட்டிச் செருக்கிக்
குருத்தத் துவசத்துத் தவாசோரப்
புடைத்துப் பிணித்துப் பெருக்கக் கதித்துப்
புரட்டிட் டகச்சுத் தனமாதர்
புணர்ச்சிச் சமுத்ரத் திளைப்பற் றிருக்கப்
புரித்துப் பதத்தைத் தருவாயே
கடத்துப் புனத்துக் குறத்திக் கு(மெ)த்தக்
கருத்திச் சையுற்றுப் பரிவாகக்
கனக்கப் பிரியப் பட்டுக் கப்பட்டு மைக்கட்
கடைப்பட்டு நிற்கைக் குரியோனே
தடத்துற் பவித்துச் சுவர்க்கத் தலத்தைத்
தழைப்பித்த கொற்றத் தனிவேலா
தமிழ்க்குக் கவிக்குப் புகழ்ச்செய்ப் பதிக்குத்
தருக்கற் குடிக்குப் பெருமாளே.

(இ-ள்) கடத்து-காட்டிலுள்ள, புனத்து-கொல்லை நிலத்தில் ஆயலோட்டிக் கொண்டிருந்த, குறத்திக்கு-வள்ளி நாயகிக்கு, மெத்த கருத்து இச்சை உற்று-மிகவும் மனத்தில் ஆசைகொண்டு, பரிவு ஆக-அன்புடனே, கனக்க பிரியப்பட்டு-மேன்மேலும் மோகங்கொண்டு, மைக்கண் கடைப்பட்டு-மைதீட்டிய கட்கடையில் அகப்பட்டு, நிற்கைக்கு-ஏக்கமுற்று நிற்பதற்கு, உரியோனே-உரியவனே, தடத்து - சரவணப் பொய்கையில், உற்பவித்து-தோன்றி, சுவர்க்கம் தலத்தை-வானுலகத்தை, தழைப்பித்த - தழையச் செய்தருளிய, கொற்றம் தனிவேலா-வெற்றியையுடைய ஒப்பற்ற வேலை

யுடையானே?, தமிழ்க்கு - தமிழ் மொழிக்கும், கவிக்கு - பலவகைப்பட்ட பாடல்களுக்கும், புகழ் செய பதிக்கு - புகழ்ச்சியையுடைய வயலூருக்கும், தருகறகுடிக்கு - மரங்கள ஓங்கிய கற்குடிக்கும், பெருமாளே - பெருமானே', குடத்தை தகாதது - குடத்தை அழித்தும, களிறுறைதூரத்தி - ஆனையாளையைத் துரத்தியும், குவட்டை செறறது - மலையின் சிகரத்தைக கோபிததும, ககசாலம் குலத்தை குமைத்து - சக்ரவாகப பறவைக கூட்டத்தை அழித்தும், பகட்டி செருககி - மருட்டிக களிப்புக்கொண்டு, குருககத துவத்துததவா சோர - குரு உபதேசததின் உண்மைக்கடைப் பிடிதத முனிவரும் சோரவடைய, புடைத்து பணைத்து - பககம் திரண்டு பருத்து, பெருகக கதிதது - பொருந்து எழுந்து, புறபபட்ட - வெளிததோனறிய, கசுதமாம் மாதர் - கசசைத தரிதத ஸதனங்களையுடைய பெண்கள், புணாசசி சமுததிரதது - போகமாகியகடலில், திளைபபுறு இருகக - திளைபபிலலாமல எழுமபடி, புரிநது - விரும்பி, பதத்தை - திருவடிகளை, தருவாய் - அளிததருளவாய் எ-று

(வி-ரை) முருக பெருமான் சரவண பொயகையில அவதரித்துச சுவாக்கலோகததைச சூரன துயரினின்று பாதுகாத்தருளினார் ஆதலின், 'தடத்துற்பவித்துச் சுவாக்கத் தலத்தைத் தழைப்பிதத கொற்றத்தனிவேலா' எனறார். அகத்தியமுனிவருக்குத் தமிழ்ச்செவி யறிவுறுத்திய பெருமான் என்பார், 'தமிழ்க்குக கவிககுப் பெருமாளே' என்றார்; தமிழ் என்னும் சொல இனிமை என்னும் பொருட்டு 'தமிழ்

தழீஇய சாயலவர்' எனச் **சிந்தாமணியினும்** 'பரிவண்டு தமிழ்ப்பாட்டிசைக்குந் தாமரையே' என **இராமாயணத்தி லும்**, இச்சொல் இப்பொருளில் ஆளப்பட்டிருத்தல் காண்க; இவ்வாறன்றித் 'தமிழ்' என்பது தனித்த ழகரப்பேற்றை யுடையதென்றும், திராவிடம் என்னும் வடசொல்லே திரிந்து தமிழென்றாயிற்றென்றும் பலவாறு கூறுவாருமுளர். அவர் கூற்றெல்லாம் பொருந்தாமையைத் **திராவிடப் பிரகாசிகை** முதலிய நூல்களால் உணர்க.

இனித் 'தமிழ்' என்னுஞ் சொல்லில் வல்லினம் மெல்லினம் இடையினம் என்னும் மூன்றும் பொருந்தி யிருத்தலையும், முதலில் அகரம் அமைந்திருத்தலையும், இடையிலே இம் என்னும் எழுத்துக்கள் இருத்தலையும், இது பிரித்துப் பார்க்குமிடத்து ஓங்கெழுத் தாதலையும், எடுத்துக் காட்டி, முதலிலே நின்ற தகரமெய் தகராலயமாகிய இருதய புண்டரீகத்தை உணர்த்துமென்றும் ஆதலின் தமிழ் தெய்வமொழி யென்று கூறுவாருமுளர். (33)

திருமயிலை

34 தனன தானன தந்தன தந்தன
தனன தானன தந்தன தந்தன
தனன தானன தந்தன தந்தன-தனதான.

அளக பாரம லைந்துகு லைந்திட
வதன மேர்வுது லங்கிற லங்கிட
அவச மோகம்வி ளைந்துத ளைந்திட— அணைமீதே

அருண வாயநகை சிந்திய சம்பரம
அடாந காநுதி பஙகவி தனுசெய்து
அதர பானம ருந்திம ருங்கிற முலைமேலவிழ்ந்
துளமும மேவுறு படுமபடி யொன்றிடு
மகளிர் தோதக இன்பின முயங்குதல
ஒழியு மாறுதெ ளிந்துள மன்பொடு சிவயோகத்
துருகு ஞானப ரமபர தந்திர
அறிவி னோககரு தஙகொள சிலமபணி
அபய சீதள பஙகய மெனகழல தருவாயே
இளகி டாவளா சந்தன குஙகும
களப பூரண கொஙகை நலமபுனை
பிரதி வேளபணி தந்தையும அந்தண மறையோனும்
இனிது றுதெதி ரிந்திர னணடரு
பரக ராசிவ சஙகர சஙகர
வெனமி காவரு நஞ்சினை யுண்டவ ரருளபாலா
வளாபி சாசரா தங்களசி ரமபொடி
படவி ரோதமி டுங்குல சம்டரம
மகர வாரிக டைந்தநெ டும்புயல மருகோனே
வளரும் வாழைபு மிஞ்சியு மஞசளும
இடை விடாது நெருஙகிய பஙகள
மகிமை செந்திலில வந்துறை பெருமாளே.

(இ-ள்.) இளகிடா-இளகி, வளர்-வளர்கின்ற, சந்தனம் குஙகுமம் களபம்-சந்தனத்தையும் குங்குமத்தையும் கல

வைச்சாரந்தையும் பூசியுள்ள, பூரண கொங்கை நலம் புனை-ந்திருந்த அவயவங்களின் அழகு அலங்கரிக்கப் பேசப்படும், இரதிவேள்-இரதி நாயகனாகிய மன்மதன், பணி-வணங்குகின்ற, தந்தையும் - தந்தையாகிய திருமாலும், அந்தணன் மறையோனும் - அழகிய கருணையுடையவனாகிய பிரமனும். இனிமையுறாது-மகிழ்ச்சியில்லாமல், எதிர் இந்திரன் அண்டரும் பகைவரை எதிர்க்கின்ற இந்திரனும் தேவர்களும், அரஹரா சிவசங்கர சங்கர-அரஹரா சிவசங்கரா சங்கரா', எனப் பகர் வருந்து திசை உடையவர் - என்று ஓலமிட மேலே ஓங்கிவிடும் ஆலகால விஷத்தை உட்கொண்டருளிய சிவ பெருமான், அருள் பாலா-பெற்ற திருக்குமாரனே', வளர் நிசாசரர் தங்கள்-வளர்கின்ற அரக்கர்களுடைய, சிரமபொடிபட-தலைகள் தூளாகும்படி, விரோதமிடும் - பகைக்கின்ற, குலம் சாமிராமன்-குலத்தின் பெருமையுடையவனும், மகரம் வாரி கடைந்த - சுறாமீனையுடைய கடலைக் கடைந்த, நெடும் புயல்-திரிவிக்ரம அவதாரம் எடுத்த மேகம்போலும் கருநிறமுடைய விஷ்ணுமூர்த்திக்கு, மருகோனே - மருமகனே', வளரும் வாழையும் - செழுமையாக வளர்கின்ற வாழையும், மஞ்சளும் இஞ்சியும் இடைவிடாது நெருங்கிய - மஞ்சட் கிழங்கும் இஞ்சிக்கிழங்கும் இடைவிடாமல் நெருங்கி வளர்ந்துள்ள, மங்களம் மகிமை மாநகர்-மங்கலம் பொருந்திய பெருமையையுடைய சிறந்த நகரமாகிய, செந்திலில் வந்து உறை பெருமாளே - செந்தூர்ப் பதியில் வந்து பொருந்தி வாழும் பெருமானே', அளகம் பாரம் அலைந்து குலைந்திட-கூந்தலா

கிய பாரம் அலைந்து சரியவும், வதனம் வேர்வு துலங்கி நலங்கிட - முகத்தில் வேர்வை விளங்கி அழகு கெடவும், அவசம் மோகம் விளைந்து-பரவசமாகும் மோகம் உண்டாகி, தளர்ந்திட-கட்டுவிட, அணைமீது-படுக்கையின் மேல், அருணம் வாய நகை சிந்திய - சிவந்த வாயிலே நகையைச் செய்த, சம்பிரமம்-வேகத்தையுடைய, அடர்ந்த நுதிபங்கம் விதம் செய்து-அடர்ந்த நகத்தின் நுனியால் குறிகள் அழுந்தும்படி பலவிதம் செய்து, அதரபானம் அருந்தி-இதழூறலை உண்டு, மருங்கு இற-இடை முறியும்படி, முலைமேல் வீழ்ந்து-தனங்களின்மேல் விழுந்து, உளமும் வேறுபடும்படி-மனமும் வேறாக, ஒன்றிடு மகளிர்-சேரும் பெண்களுடைய, தோதகம் இன்பில் முயங்குதல் - வஞ்சகத்தையுடைய இன்பத்திலே பொருந்துதல், ஒழியும் ஆறு-நீங்கும்படி, தெளிந்து உளம் அன்பொடு-தெளிவுற்று மனம் அன்போடு, சிவயோகத்து உருகு ஞானம்-சிவயோகத்திலே மனமுருகுகின்ற மெய்ஞ்ஞானத்தையுடைய, பரமபரம - மேன்மையான, தந்திரம் அறிவினோர்-ஆகம சாத்திரங்களிலே சென்ற அறிவினையுடையவர்கள், கருது - தியானிக்கின்ற, அம்கொள - அழகைக் கொண்ட, சிலம்பு அணி-சிலம்பைத் தரித்த, உபய சீதளம்-இரண்டாகிய குளிர்ச்சி பொருந்திய, பங்கயம்மென் கழல் தருவாய - தாமரைமலரை ஒத்த மென்மையான திருவடிகளைத் தந்தருளுவாய் எ-று.

(வி-ரை) அருணவாய-செவ்வாய். இரதி வேள் பணி தந்தை-திருமால். அந்தண மறையோன்-பிரமன். சிவம்

என்னும் சொல்லுக்கு மங்களம் என்று பொருள். எககாலத்தும் அழியாதவா சிவபெருமானே யாதலின அவருக்குச் சிவம் என்னும் பெயர் எயதியது. "சிவனெனுமப் பெயர் தமககே யுடைய செம்மேனி யெமமான்" என அப்பர் அருளிச்செய்தது காண்க.

திருமால, அயன, இந்திரன முதலிய தேவாகள கடலில விஷம் பிறந்தகாலதது அதற்கு அஞ்சி யோடிச சிவ பெருமானிடதது அபயம புக, அவா அதனை வாரி யுண்டு அவர்களுககு அருள புரிநதாா ஆகலின, "இளகிடாவளா .... நஞ்சினை யுண்டவர்" எனறாா.

மகர வாரி கடைநத நெடும்புயல்-சுறாமீன வாழும் திருபபாற கடலைக கடைநத உஙகளவும நீண்ட மேகம் மோனற திருமேனியையுடைய திருமால.

ஒருகாலதது திருமால திருபபாறகடலை மநதரமலையை மத்தாகவும், வாசுகியை நாணாகவும் கொண்டு ஒருபுறம் அசுரரும், மறெறாரு புறம சுரரும் இழுககக கடைவித்தார். அபபோது அதில அமுதம் பிறந்தது, அதனபின் ஆலகால விஷமும் பிறநதது. அவவிஷததுக்கு அஞ்சி ஓடிய தேவர்களுக்கு அபயமளித்துச சிவபெருமான் அவர்களைக காத்தருளினாா். தேவர் அமுதமுண்டு பிணி மூபபுச சாக்காடு ஒழிந்தாா என்பது புராண வரலாறு. செந்தில்-திருசசெந்தூா. இதறகுச திருசசீரலைவாய் என்றும் பெயர் வழங்கும். (34)

திருவருணை

35 தனன தனனத தனன தனனத
தனன தனனத-தனதான

அருமா மதனைப பொருவாள கயலகுத
தபிலா நயனக் கொடியாரத
மருகார புளகப புழுகார சயிலத
தனையா வலிகெட் டுடலதாழ
இருமா நடைபுக குறைபோ யுணாவற
றிளையா வுளமுக குயிர்சோர
எரிவாய நரகிற புகுதா தபடிக
கிருபா தமெனக் கருள்வாயே
ஒருமால வரையைச சிறுதூள படவிட
டுரமோ டெறிபொற கதிர்வேலா
உமைமா னடவிக குறமா மகளுக
குருகா விருபொற புயவீரா
திருமால கமலப பிரமா விழியிற
றெரியா வரனுக கரியோனே
செழுநீர வயலசூற றருணை புரியிற
றிருவீ தியினிற பெருமாளே.

(இ-ள்) ஒரு மாலவரையை-ஒப்பற்ற பெரிய கிரவுஞ்ச மலையை, சிறுதூள்பட-சிறிய தூளாகும்படி, உரமோடு விட்டு எறி-மார்பினோடு விட்டு வீசுகின்ற, பொன் கதிர் வேலா-அழகிய ஒளிவீசும் வேற்படையை உடையவனே!, மான் உறை அடவி-மான்கள் வாழும் காட்டிலுள்ள, குறமா

மகளுக்கு-குறவருடைய மாமை நிறம் பொருந்திய பெண்ணாகிய வள்ளிநாச்சியாருடைய காதலனுக்கு, உருகா-உருகுகின்ற, இருபொன் புயம வீரா-இரண்டு அழகிய தோள்களையுடைய வீரனே', திருமால கமலம் பிரமா - திருமாலுக்கும் தாமரை மலரில் தங்கும் பிரமனுக்கும், விழியில தெரியா ஆரனுக்கு அரியோனே-கண்களில் தெரியாத சிவபெருமானுக்கும் அருமையானவனே', செழுநீர வயல்சூழ்-செழுமையான நீரையுடைய வயல்கள் சூழ்ந்துள்ள, அருணைபுரியின திருவீதியினில பெருமாளே-திருவண்ணாமலையின் அழகிய தெருக்களில் வலம் வரும பெருமானே', அருமாமதனே-அருமையான சிறந்த மன்மதனோடு, பொரு காமப் போராச செய்யும், வாள கயல குத்து அயில ஆர-வாளையும் கயல மீனையும் குத்துகின்ற வேலையும் ஒத்த, நயனம கொடியார் தம்-கண்களையுடைய கொடிய பெண்களுடைய, அழகு ஆர-அழகு நிறைந்த, தனம நல புழுகு ஆர சயிலத்து-ஸ்தனங்களாகிய நல்ல புழுகு நிறைந்த மலைகளில், அணையா வலிகெட்டு உடல தாழ-சோர்ந்து வலிமை அழிந்து உடம்பு தாழ்வடைந்து, இருமா - இருமி, நடைபுக்கு - தள்ளாடி நடந்து, உரை போய்-சொல ஒழிந்து, உணர்வு அற்று-அறிவு அழிந்து, இளையா-இளைத்து, உளம உக்கு உயிர் சோர-மனமுடைந்து உயிர் சோர்வடைய, எரிவாய நரகில-நெருப்பையுடைய நரகத்தில், புகுதாதபடிக்கு-சேராதபடி, இருடாதம்-இரண்டு திருவடிகளை, எனக்கு அருள்வாய்-அடியேனுக்குத் தருவாயாக எ-று.

(வி-ரை) அழகார் புளக புழுகார் சயிலம் - அழகு பொருந்திய புளகத்தையுடைய புனுகு பூசப்பெற்ற மலை போன்ற ஸ்தனங்கள். சயிலம்-உவமையாகுபெயரால் ஸ்தனங்களை உணர்த்திற்று. அலையா-அலைந்து, செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். இருமா-இருமி. இறைவன் திருவடியை வழுத்தாது வாழ்நாளெல்லாம் ஆசையுட்பட்டு மயங்கித் திரிகின்ற நான் பிணி மூப்புச் சாக்காட்டை யடைந்து மறுமையில் எரிவாய் நரகத்துக்கு ஆளாவேன்; அவ்வாறு ஆளாகாதபடி உய்யவேண்டுமாயின் தேவரீரது இரண்டு திருவடிகள் இன்றியமையாதென்பார், 'எரிவாய் நரகிற் புகுதாதபடி இருபாதமெனக் கருள்வாயே' என்றார். மால் வரை-பெரிய மலை, கிரௌஞ்சகிரி. உரம்-மார்பு, உறைமான் என்பதை மான் உறை என இயைக்க. கமலப்பிரமா-தாமரை மலரில் தங்கும் பிரமதேவன். திருமால் விழியில் பிரமா விழியில் எனக் கூட்டுக. திருமாலாலும் பிரமனாலும் அறியப்படாத சிவபெருமானுக்கும் அருமையுடையவன் ஆதலின், உனது பெருமை பேசற்பாலது அன்று என்னும் கருத்தால் 'திருமால் கமலப் பிரமா விழியில் தெரியா அரனுக் கரியோனே' என்றார். அருணை புரி-திருவண்ணாமலை. அருணம் - சிவப்பு. செழுநீர் வயல் சூழ் அருணைபுரியென இவ்வாசிரியர் கூறியதுபோல,

'அன்னவயல் சூழருணை அண்ணாமலையார் மேல்
மன்னு கலம்பகப்பா மாலைக்கு—துன்னியசீர்
மொய்க்காட்டு மேருவெனும் வெள்ளேட்டினமீதெழுதும்
கைக்கோட்டு வாரணமே காப்பு.'

எனச் சைவ எல்லப்ப நாவலரும், கூறியது காண். (35)

பொது

36 தனனதான தானான தனனதான தானான
தனனதான தானான-தனதான.

அதலசேட னாராட அகிலமேரு மீதாட
அபினகாளி தானாட அவளோடன்
றதிரவீசி வாதாடும் விடையிலேறு வாராட
அருகுபூத வேதாள மவையாட
மதுரவாணி தானாட மலரில்வேத னாராட
மருவுவானு ளோராட மதியாட
வனசமாமி யாராட நெடியமாம னாராட
மயிலுமாடி நீயாடி வரவேணும்
கதைவிடாத தோள்வீம னெதிர்கொள்வாளி யாலநீடு
கருதலார்கள் மாசேனை பொடியாகக்
கதறுகாலி போய்மீள விசையனேறு தேர்மீது
கனகவேத கோடூதி யலைமோது
முததிமீதி லேசாயு முலகமூடு சீர்பாத
வுவணமூர்தி மாமாயன் மருகோனே
யுதயதாம மார்பான ப்ரபுடதேவ மாராஜ
னுளமுமாட வாழ்தேவர் பெருமாளே.

(இ-ள்) அதலம்-பாதலத்திலே வாழும், சேடனார் ஆட- ஆதி சேஷன ஆடவும், அகிலம்-பூமியும், மேரு - மேருமலை யும், மீது ஆட-மேலே ஆடவும், அபினம் காளி தான் ஆட- வேற்றுமையில்லாத காளி ஆடவும், அவளோடு-அக்காளி யுடன், அன்று-அந்நாளில், அதிர வீசி-அதிரும்படி திரு

வடியைத் தூக்கி, வாதாடும-வாது செய்கின்ற, விடையில ஏறுவார ஆட-இடபவாகனத்தின்மேல ஆரோகணிக்கும் சிவபெருமான் ஆடவும், அருகு அவா அருகில, பூத-பூதங்களும், வேதாளம் அவை ஆட - வேதாளங்களும் ஆடவும், மதுரம் வாணி - இனிமையையுடைய சரஸ்வதியார், தான் ஆட-ஆடவும், மலரில வேதனா ஆட - தாமரை மலரிலே பிரமதேவா ஆடவும், மருவு வானுளோர ஆட-கூட்டமாகிய தேவாகள் ஆடவும், மதி ஆட-சந்திரன் ஆடவும், வனசம் மாமியார ஆட-செந்தாமரை மலரில வசிக்கும் இலக்குமி அம்மை ஆடவும், நெடிய மாமனா ஆட-மிகக சிறப்புப் பொருந்திய திருமால ஆடவும், உதயம தாமம - ஒளி பொருந்திய மாலையையுடைய, மாாபு ஆன-மாாபையுடைய, பிரபுட தேவமாராஜன் - திருவண்ணாமலையை ஆண்டுவந்த பிரபுட தேவன் என்னும் பேரரசனது, உளமும் ஆட-மன மும் களிப்படையவும், மயிலும ஆடி நீயும ஆடி-மயிலும்ஆடி நீயும் ஆடி, வரவேணும-எமமை மக காததருளவரவேண்டும், கதைவிடாத தோள் வீமன்-தண்டாயுதம நீங்காத தோளை யுடைய வீமன, எதிரகொள வாளியால்-தன்னை நோக்கி வருகின்ற அம்பினாலே, நீடு கருதலாாகள-மிகக பகைவரது பெரிய படை, பொடியாக-அழியவும், கதறுகாலி - கன்றை எண்ணிக கதறுகின்ற பசுக்கள், போய் மீள-தத்தம் இடங் களிற்போய்ச் சேரவும், விஜயன் ஏறு-அருச்சுனன் ஏறும், தேர்மீது-தேரின்மேல் நின்று, கனகம வேதி - பொன்மய மான துளைக்கப்பட்ட சங்கை ஊதினவரும், அலை மோதும்-

அலைகள் மோதுகின்ற, உததி மீதிலே-கடலினமேல், சாயும-சாய்ந்து கிடக்கும், உலகம் மூடு-உலகத்தைத் அளந்துமூடிய, சீர்பாதம்-அழகிய பாதங்களையுடைய, உவணம் ஊர்தி மாமாயன்-கருடவாகனருமாகிய திருமாலினது, மருகோனே-மருமகனே', வாழ்தேவர் - அழியாது வாழ்கின்ற தேவர்களது, பெருமாளே-நாயகனே', எ-று.

(வி-ரை) மருகோனே, பெருமாளே, ஆடி வரவேணும என விணைமுடிவு செய்க பிரபுட தேவமாராஜன் உளமுமாட என்பது முன்னே கூட்டி உரை செய்யப்பட்டது சேடன்-ஆதிசேஷன்; ஆர்-உயர்வுப பொருளையுடைய விகுதி. அபின்னம்-அபின்னமென்றுயிற்று காளி உமாதேவியாரின அம்சமாதலின் சிவபெருமானுக்கு அபின்னசக்தி என்பார், 'அபினகாளி' என்றா பூதம் என்றதற்கு ஐம்பூதமென்றுரைப்பினும் அமையும. வேதாளமவை எனபதில அவை பகுதிப்பொருள விகுதி காளி-கருநிறமுடையவள் வாணி-சொல்லப்படுபவள். மலர் - தாமரை மலர், 'பூவிற்குத் தாமரையே' என்றும் 'பூவினுக்கருங்கலம் பொங்கு தாமரை' என்றும், 'பூவெனப் படுவது பொறிவாழ் பூவே' என்றும் வரும ஆன்றோர் வாக்குக்களால, மலரென்று வாளா கூறின் தாமரையையே குறிக்குமென உணர்க. விஷ்ணுமூர்த்தியின் புதல்வியாகிய வள்ளி நாயகியாரை மணந்து கொண்டமையான் அவரை மாமனார் என்றும், இலக்குமிதேவியை மாமியார் என்றும் கூறினர். நெடிய மாமனார் என்றதற்குத் திரிவிக்கிரம அவதாரம் கொண்டவ

ரென்று கூறினும் பொருந்தும். வீமன் தன்னை நோக்கி வரும் அம்புகளாலேயே எதிரிகளைக் கொன்றுவிடும் பராக்கிரமம் படைத்தவன் என்பது தோன்றக் 'கதை விடாத தோள்வீமன் . . . பொடியாக' என்றனர். 'கதறு' 'காலி என்றார் கன்றை நினைந்துருகுவது பசுவிற்கு இயல்பாதலின்; 'கன்றுநினை குரல் மன்று வழிப்பட' என்றார் மணிமேகலை நூலாசிரியரும். வாளி-அம்பு, கூர்மையுடையது என்பது காரணப்பொருள். கருதலார்கள்-பகைவர்கள். மாயன்-திருமால், மாயன் என்னுஞ் சொல்லுக்கு மாயமுடையவன், அதிசயமான செயலுடையவன், கருநிறமுடையவன், என்பல பொருள் கூறுவர் அருணகிரிநாதர் காலத்துத் திருவண்ணாமலையை ஆண்டுவந்த அரசன் பிரபுடதேவன் ஆதலின் அவனைக் குறித்தார். இங்ஙனமே ஒட்டக்கூத்தர் குலோத்துங்கனையும் புகழேந்திப்புலவர் சந்திரன் சுவர்க்கியையும் கூறுதல் காண்க

'தாளுடிலை தன் தசை யாடும்' என்னும் பழமொழிக்கிணங்க நீடியாடினால் இவ்வுலகமெல்லாம் பஞ்சகிருத்தியப்படும் என்பார் இவ்வாறு கூறினார். முருகவேளும் சிவபெருமானும் ஒருவரே ஆதலின், இங்ஙனம் கூறியது பொருந்தும் எனக். முருகவேளையும் சிவபெருமானையும் வேறுபடுத்திக் கூறுவது கற்பபேதமெனவறிக. சிவபெருமானுடைய விடை தருமமேயாகும். இக்கருத்தேபற்றி 'அறனுருவாகிய ஆனேறு ஏறுதல் இறையவன் யானென இயற்றுமாறே' என்றார் பட்டினத்துப்பிள்ளையாரும். உலக

முழுவதையும் ஒருகாலத்தில் விஷ்ணுமூர்த்தி இரண்டடிகளால் அளந்து விட்டாராதலின் 'உலகமுடு சீர்பாதம்' என்றார். கருடன் திருமாலுக்குப் பெரியதிருவடி என்றும், அனுமன் சிறிய திருவடி என்றும் வழங்குவர். சிவபெருமானே முருகன் என்பதைப் பின்வரும் கந்தபுராணச் செய்யுள்களால் தெளிக

'ஈசனே அவனுடலால் மதலையாயினன் காண
ஆசிலா அவனறு முகத்துணைமையா லறிநீ
பேசிலாங்கவன் பரனொடு பேதகனல்லனை
தேசுலாவகன் மணியிடைக் கதிருதித்திடும்போல்'

'ஆதலின் நமது சத்தி அறுமுகன் அவனும் யாமும் பேதக மன்றால்' (36)

யாழ்ப்பாணம்

37 தாததா தானந தததன தனதன
தாததா தானந தததன தனதன
தாததா தானந தததன தனதன-தனதான.

பூததா ரூடுங் கொத்தலர் குழலியர்
பார்த்தால் வேலுங் கட்கமு மதனவிடு
போர்க்கா நீடுங் கட்சர மொடுநமன் விடுதூதும்

போறருய் நாளும் கைப்பொரு ளுடையவர்
மேற்று ளாதம பற்றிடு ப்ரமையது
பூட்டா மாயங் கற்றமை விழியினர் அமுதூறல்

வாய்த்தார் பேதஞ் செப்புபொய் விரகியர்
நூற்றேய் நூலின் சிற்றிடை யிடர்பட
வாட்டாய வீசுங் காப்புர ம்ருகமதம் அகிலார

மாயப்பூ ணாரங் கச்சணி முலையினர்
வேட்பூ ணாகங் கெட்டெனை யுனதுமெய்
வாக்கான ஞானம் பெற்றினி வழிபட அருளாயோ

ஆத்தாள் மால்தங் கச்சிக னிகையுமை
கூத்தா டானந் தச்சிவை திரிபுரை
யாட்பேய் பூதஞ் சுற்றிய பயிரவி புவனேசை

ஆக்கா யாவும் பற்றியெ திரிபுர
நோக்கா லேதஞ் செற்றவள் திருவிளை
யாட்டா லீசன் பக்கம துறைபவள் பெறுசேயே

ஏத்தா நாளுந் தாப்பண செபமொடு
நீத்தார் ஞானம் பற்றிய குருபர
யாப்பா ராயுஞ் சொற்றமிழ் முருகரு முருகோனே

ஏற்போர் தாம்வந் திசைசையின மகிழ்வொடு
வாய்ப்பாய் வீசும் பொற்பரை நெடுமதி
ளாழ்ப்பா ணாயன பட்டின மருவிய பெருமாளே.

(இ-ள்.) ஆத்தாள் - உலகத்துக்குத் தாயும், மால் தங்கச்சி - திருமாலுக்குத் தங்கையும், கனிகை - கன்னிகையும், உமை - உமாதேவியும், கூத்தாடு ஆனந்தம் சிவை - நடனம் செய்கின்ற ஆனந்தத்தையுடைய சிவையும், திரிபுரையாள் - திரிபுரையும், பேய் பூதம் சுற்றிய பயிரவி - பேயும் பூதமுஞ் சூழ்ந்த பயிரவியும், புவனேசை - புவனேசையும், யாவையும் ஆக்கா - எல்லாவற்றையும் படைத்து, பற்றி - காப்பாற்றி,

எதிரி புரம்-பகைவர்களுடைய முப்புரத்தை, ஏதும்நோக்கா செற்றவள்-ஒன்றையும் கவனியாமல் அழித்தவளும், திரு விளையாட்டால்-அழகிய விளையாட்டால், ஈசன் பக்கம் அது உறைபவள்-சிவபெருமான் இடப்பக்கத்தில் தங்குபவளுமாகிய அம்மையார், பெறு சேயே-பெற்றருளிய புதல்வனே!, நித்தர்-துறவிகள், நாளும்-நாடோறும், தாபணம் செபமொடு-தர்ப்பணங்களுடனும் செபத்தோடும், ஏத்தா-தோத்திரம் செய்து, ஞானம் பற்றிய-உண்மை அறிவைப்பெற்ற, குருபர-குருபரனே!, யாப்பு ஆராயும்-யாப்பிலக்கணத்தை ஆராய்கின்ற, சொல்தமிழ் அருள்தரு-புகழையுடைய தமிழ் மொழியை அகத்தியனாருக்கு அருளிச்செய்த, முருகோனே-முருகனே!, ஏற்போர் தாம் வந்து-இரப்பவர் வர, இச்சையின் மகிழ்வொடு - விருப்பம் பொருந்திய மகிழ்ச்சியுடன், வாய்ப்பாய-அவர்கட்குப் பேறாய், வீசும் பொன்பிரபை-வீசுகின்ற பொன்னினது ஒளியையுடைய, நெடுமதிள் - நீண்ட மதிலையுடைய, யாழ்ப்பாணயன்பட்டினம்-யாழ்ப்பாணயன் பட்டினத்தை, மருவிய சேர்ந்து எழுந்தருளியிருக்கும், பெருமாளே-பெருமானே!, பூத்தார் சூடும்-பூமாலையை சூடிய, கொத்து அலர் குழலியர் - கொத்தாகிய மலர்களையுடைய கூந்தலையுடையவர்களாய, பார்த்தால்-நோக்கினால், வேலும் கட்கமும்-வேலும் வாளும், மதன் விடு - மன்மதன் விடுகின்ற, போர் கார் நீடும் கணை சரமொடு-போரைச் செய்யும் கரிய சிறந்த கண்ணையுடைய அம்பும், நமன்விடுதூதும்-இயமன் விடுகின்ற தூதுவனும், போல-போல, தாய்-தாவி,

நாளும்-எப்பொழுதும், கைப்பொருள் உடையவர் - கைப்பொருளுடையவர்களின், மேல்தாளார்-மேலே தமது அடிகளை நீட்டுகின்றவர்களும், தம பற்றிடு பிரமை அது - தம்மைப் பற்றிக் கொள்ளும் ஆசையை, பூட்டா மாயம் கற்ற-பூட்டும் மாயவித்தைகளைத் தெரிந்த, மைவிழியினார்-மை தீட்டிய கண்களுடையவர்களாய், அமுது ஊறல் - அமுதத்தை ஒத்த சுவையையுடைய ஊறலை, வாயத்தார்-வாயகப்பெற்றவர்களாய், பேதம் செப்பு பொய் விரகியர் - வேற்றுமைபட்ட பேசும் பொய்யையும் தந்திரத்தையும் உடையவர்களாய், நூல்-ஆடையணிந்த, தேய நூலின் சிறு இடை இடர்பட-மெலிவிய நூலையொத்த சிறிய இடை வருந்த, வாட்டாய வீசும்-பக்கமாக மணம் வீசும், காப்புரம் மிருகமதம் அகில் ஆரம்-கர்ப்பூரமும் கஸ்தூரியும் அகிலும் சந்தனமும் பூசிய, மாபூண் ஆரம் கச்சு அணி முலையினர்-பெரிய ஆபரணமாகிய முத்துமாலையையும் கச்சையையும்அணிந்த ஸ்தனங்களையுடைய பெண்களின்மேல், வேள் பூண் எனை-விருப்பங்கொண்ட அடியேனுடைய, ஆகம் கெட-பாசவுடம்பு நீங்க, உனது மெய்வாக்கால் - தேவரீருடைய உண்மை வாக்கால், ஞானம் பெற்று-மெய்ஞ்ஞானத்தை அடைந்து, இனி வழிபட - இனிமேலேனும் துதித்தொழுக, அருளாய் - அருள் செய்வாய் எ-று.

(வி-ரை) கண்களை நமனை விடுதூது என்றார் நோக்கினார் உயிரை வவ்வுதலின், 'கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல் நோக்கம் இம்மூன்றும் உடைத்து' என்பது திருக்

குறளும் அதற்கு **பரிமேலழகர்** கூறிய உரையும் இங்கு நோக்கற்பாலன.

'கூற்றமோ - என்னை வருத்துதலுடைமையாற் கூற்றமோ, கண்ணோ-என்மேலோடுதலுடைமையாற் கண்ணோ, பிணையோ-இயல்பாக வெருவுதலுடைமையாற் பிணையோ, அறிகின்றிலேன், மடவரல்நோக்கம்இம்மூன்றுமுடைத்து- இம்மடவரல் 'கண்களின்நோக்கம் இம்மூன்றன் தன்மையையு முடைத்தாயிரா நின்றது.'

பிரமையது என்பதில், அது பகுதிப்பொருள் விகுதி. பூட்டா-செய்யா என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம் பல வகைப்பட்ட பொய்க் கருத்துக்களைக் கண்கள் வாயிலாகத் தெரிவித்து ஆடவரை மயக்கலின் 'மாயங் கற்றமை விழியினா' என்றார் 'சொல்லு மாடுப கண்ணினானே' என்வரும் **குறுந்தொகையடியையும்** 'நாட்டமிரண்டும் அறிவுடம் படுத்தற்குக் கூட்டி யுரைக்குங் குறிப்புரை யாகும்' என்ற **தொல்காப்பிய சூத்திரத்தையும்** நோக்குக. மெய் வாக்கு-உண்மை வாசகம் சிவபெருமானுக்குரிய செயல்களெல்லாம் உபசாரத்தால் உமாதேவியாருக்கும் ஏற்றிக் கூறப்பட்டன. யாப்பு பாட்டு. மதில்-மதிள் என்ப போலியாயிற்று. யாழ்ப் பாணயன் பட்டினம் என்பது நடுநாட்டில் விருத்தாசலத்துக்கு சமீபத்திலுள்ள திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் திரு அவதார ஸ்தலமாகிய புலி எருக்கத்தம் புலியூராக இருக்கலாமெனத் திருப்புகழ் பதிப்பாசிரியர் ஊகிக்கின்றார்.

பொது

38 தனதனன தனதனன தானான தானதன
தனதனன தனதனன தானான தானதன
தனதனன தனதனன தானான தானதன-தந்ததான.

உறவின்முறை கதறியழ வூராரு மாசையுற
பறைதிமிலை முழவினிசை யாகாச மீதுமுற
வுலகிலுள பலரரிசி வாய்மீதி லேசொரியு மந்தநாளில

உனதுமுக கருணைமல ரோராறு மாறிருகை
திரளபுயமு மெழிலபணிகள வாகாது நீளவிழியு
முபயபத மிசைகுலவு சீரேறு நூபுரமு மந்தமாயும்

மறையவரை யமராதரு பூமாரியே சொரிய
மதுவொழுகு தாவிலமணி மீதேமு நாலொளிர
மயிலினமிசை யழகுபொலி யாளாயமு னடியா வந்துகூட

மறலிபடை யமபுரமு மீதோட வேபொருது
விருதுபல முறைமுறையி லேயூதி வாதுசெய்து
மதலையொரு குதலையடி நாயேனை யாளவிவண் வந்திடாயோ

பிறையெயிறு முரணசுரா போராது பாரிலவிழ
அதிரவெழு பவிபுலக மீரேழு மோலமிட
பிடிகளிறி னடலநிரைகள் பாழாக வேதிசையி னிறநாகம்

பிரியநெடு மலையிடிய மாவாரி தூளியெழ
பெரியதொரு வயிறுடைய மாகாளி கூளியொடு [தீரா
பிணநிணமு முணவுசெய்து பேயோடு மாடல்செய வென்ற-

குறமகள் கொடியடிகள் கூசாது போய்வருடக்
கரடிபுலி திரிகடிய வாரான கானின்மிகு
குளிர்கதிரி னிளமாம தேயாகி நீடியுயர் குன்றுலாவி
கொடியபொரு முயலகனிற் றோடு வாருடைய
வொருபுரம துறவளரு மாதாபொ ருவருள்செய்
குமரகுரு பரகுமர வாறுடா பேணவருள் தம்பிரானே.

(இ-ள்) பிறை எயிறு - பிறைச்சந்திரனை யொத்த பற்களையுடைய. முரண் அசுரர் - போர்செய்யும் அவுணர்கள், பேராது-நிலைபெயராமல், பாரில் விழ-பூமியில் விழவும், எழு புவி அதிர-எழு உலகங்களும் நடுங்கவும், உலகம் என ஏழும் தலமிட-பதினாலுலகமும் ஒட்டமிடவும், பிடி களிறின்-பெண்ணும் ஆணுமாகிய யானைகளின், அடல் நிரைகள்-போரிலேயுள்ள அணிகள், பாறாக-பாறாகவும், திசையில் நின்ற-திசைகளில் நிலைபெற்றுள்ள, நாகம் பிரிய-அஷ்ட கஜங்கள் உடல் பிரியவும், நெடுமலை இடிய-உயர்ந்த மலைகள் இடியவும், மாவாரி-பெரிய கடலில், தூளி எழ-புழுதி யெழும்பவும், பெரியது ஒருவயிறு உடைய - பெரிய வயிற்றையுடைய, மாகாளி-பெருமை பொருந்திய காளிதேவி, கூளியொடு-பூதங்களோடு, பிணம் நிணமும் உணவு செய்து-பிணத்தின் கொழுப்பையுண்டு, பேயோடும் ஆடல்செய்-பேயோடு கூத்தாடவும், வென்று-வெற்றிகொண்ட, தீரா-அஞ்சாத வன்மையுடையவனே!, குறமறவர் கொடி-வேடர்கள் பெற்ற பூங்கொடிபோன்ற வள்ளிநாயகியாரது, அடிகள் - திருவடிகளை, கூசாது-நாணமில்லாமல், போய் வருட-போய்த் தடவுதற்கு, கரடி புலி-கரடியும் புலிகளும், திரி-திரிகின்ற, கடிய-

கடுமையான, வார் ஆனகானில்-நீண்டகாட்டில், மிகு-சிறந்த குளிர்-குளிர்ந்த, கனி இன-வேங்கையினது இனிய, இளம் மரம் அது ஆகி-இளமை வாய்ந்த மரமாகி, நீடி-சிறந்து, உயர் குன்று உலாவி-உயர்ந்த குன்றுகள் தோறும் உலாவி, கொடியது ஒரு-கொடுமையையுடைய ஒரு, முயலகனின் மீது ஆடுவார் உடைய-முயலகன் என்னும் பூதத்தின்மேல் நடனஞ் செய்கின்ற சிவபெருமானது, ஒரு புறம் அது-ஒரு பக்கம், உற வளரும்-பொருந்த வளர்கின்ற, மாதா-உமாதேவியார், பெறு-பெறுதுபெற்று, அருள் செய-அருள்செய்கின்ற, குமரகுருபர-குமரனாகிய குருபரனே!, அமரர் வான் நாடர்-இறவாமையை யுடைய தேவர்கள், பேண அருள்-தொழ அருள் செய்கின்ற, தம்பிரானே-தலைவனே!, உறவின் முறை-சுற்றத்தார், கதறி அழ-ஓலமிட்டு அழவும், ஊரரும் ஆசை அற-ஊரிலுள்ளவர்களுடைய ஆசை நீங்கவும், பறை திமிலை முழவின் இசை-பறை சல்லரி தம்பட்டங்களினுடைய ஓசை, ஆகாசம் மீது உற-ஆகாயமளவும் கேட்க, உலகில் உள பலர்-உலகத்திலுள்ள பலர், அரிசி வாய்மீதில் சொரியும்-அரிசியை வாய்மீதிலே பெய்கின்ற, அந்த நாளில்-அந்த நாளில், உனதுமுகம்-தேவரீரது முகங்களாகிய, கருணை மலர்-அருளாகிய மலர்கள், ஓர் ஆறும்-ஆறுடனும், ஆறு இரு கை - பன்னிரண்டு கைகளுடனும், திரள் புயமும்-திரண்ட தோள்களுடனும், எழில் பணி கொள்-அழகிய குண்டலத்தை அணிந்த, வார் காதும்-நீண்ட திருச்செவிகளுடனும், நீள் விழியும்-நீண்ட கண்களுடனும், உபய பதம்

மிசை-இரண்டு திருவடிகளிலும், குலவு சீர் எறு நூபுரமும்-ஒளிவிளங்கும் சிறப்புமிக்க சிலம்புகளுடனும், அந்தம் மார்பும்-அழகிய மார்புடனும், மறை அறைய-வேதங்கள் கோஷிக்க, அமரர் தரு-தேவர்கள் கற்பகத்தருவினின்று, மது ஒழுகு-தேன் ஒழுகுகிற, பூமாரி சொரிய-பூவாகிய மழையைப் பொழிய, உதரவில்-உதர பந்தனமாகிய ஒளியைக் கொண்ட, மணிமீது-மணி வடத்தின்மேல், முந்நூல் ஒளிர-முப்புரி நூல் விளங்க, மயிலின் மிசை-மயிலின்மேல், அழகு பொலி ஆளாய-அழகு விளங்குகின்றவராய், முன-முனனே, ஆர் அடியார் வந்து கூட-அரிய சிவனடியார் வந்து சேர, மறலி படை-யமனுடைய படைகள், எமபுரம்மீது ஓட-யமபட்டணத்துக்கு ஓடும்படி, பொருது-சண்டையிட்டு, விருது பல வெற்றிச் சங்கு பலவற்றை, முறை முறையிலே ஊதி-முறை முறையே ஊதி, வாதுசெய்து-தாக்கித்து, மதலை-சிறுவனும், குதலை-அறிவில்லாதவனுமாகிய, அடி நாயேனை-தாழ்ந்தவனாகிய என்னை, இங்ஙன-இவ்வாறு, ஆள-ஆளுவதற்கு, வந்திடாயோ-வரமாட்டாயோ? எ-று

(வி-ரை) திமிலை-சல்லரி முழவு-மத்தளம் மணி-ஆபரணம். நூபுரம்-சிலம்பு. உதரம-வயிறு. வில்-ஒளி. குதலை-அறிவிலான் கணி-வேங்கைமரம். முயலகன் - ஒருபூதம். ஆணவமலத்தைக் குறிக்கும். 'கானில் மிகு குளிர் கணியின் இள மரமதே யாகி' என்றது முருகப் பெருமான் வள்ளி நாயகியாரைக் காதலித்த ஞான்று வேடர்களுக்கஞ்சி வேங்கைமரமாக நின்ற செய்தியைக் குறித்தது. தேவர்களுக்குத்

தேவனாகிய முருகப்பெருமான் ஒரு வேடச்சிறுமியை விழைந்தது தன் பெருமைக்குத் தக்கதன்றென்று, சிறிதும் நினையாமல் அவளது அழகிய கால்களைக் கூசாது வருடினான் என்பது தொனிக்கக் 'குறமகள் கொடியடிகள் கூசாது போய் வருடி' என்றார்.

உமாதேவியார் வாமபாகத்தில் அமர்ந்தருள்பவராகச் சிவனை 'ஒரு புறமது உறவளரும நாதர்' என்றார். பெற்றுப் பெற்ற அற்புதத் தெய்வக் குழவி எனப்பாடி, 'மாதா பெற அருள் செய் குமர குருபர' என்றார். பெற என்பதன் வினையெச்ச விகுதி விகாரத்தால் தொக்கது. குமர குருபர- அண்மை விளி. புறமது, அது-பகுதிப் பொருள் விகுதி. உயிர் போகின்ற காலத்தில் தேவரீரது திவ்வியதரிசனத்தை அடியேனுக்குக் கொடுத்தல் வேண்டும் என வேண்டினார்.

இவ்வாறே பட்டினத்துப்பிள்ளையார்,

'கல்லா யெனக்கு மனுவொன்று தந்தருள் ஞானமில்லாப்
பொல்லா வெனைக்கொன்று போடும் பொழுதில் பூசைசெய்
சொல்லா நற்கோயில் நியமம் பலவகைத் தோத்திரமும்
எல்லாம் முடித்தபின் கொல்லுகண் டாயகச்சி யேகம்பனே.

என்றருளிச் செய்ததையும், திருஞானசம்பந்தர்,

'புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
யறிவழிந்திட் டைம்மேலுந்தி
அலமந்த போதாக வஞ்சேலென் றருள
செய்வான் அமருங்கோயில்

வலம்வந்த மடவார்கள் நடமாட
  முழவதிர மழையென் றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
  முகில்பார்க்குந் திருவை யாறே.'

என்று கட்டளை யிட்டருளியதையுங் காண்க (38)

திருப்பழனிமலை

39 தனனத தனனத தனனத தனனத
தனனத தனனத தனனத தனனத
தனனத தனனத தனனத தனனத-தனதான

கடலைச் சிறைவைத் துமலைப் பொழிலிற்
பரமத் தையுடற் பொறியிட் டுமடுக்க
கமலத் தைமலர்த் திவிடத் தைவிரட் — பலருக்

கருதிச் சருவிக் கயலைக் கயமுட
படுவித் துழையைக் கவனத் தடைசிக்
கலையைக் கடைவித் துவடுத் தலையுப் — பிணிமேவி

அடலைச் செயலைத் தியையக் கினியிற்
புகுவித் தயபப் பயபுள்வைத் துகைவித்
தரிகட் கம்விதிர்த் துமுறித் தமதித் — நசகோர

மலைப் பணிரத் நமணிக் குழையைச்
சிலுகிட் டுமையிட் டொளிவிட் டுமருட்
டுதலுற் றொறிசிப் பியாகட் கடையிற் — படுவேனோ

சடிலத் தவனிட் டவிசிட் டகுலத்
தொருசெட் டியிடத் திலுதித் தருளித்
தகருத் ரஜனைப் பெயர்செப் பியிடப் — பரிவாலே

சனகற் குமகத் யபுலஸ்த் யசனற்
குமாரர்க் குமனுக் ரகமெய்ப் பலகைச்
சதுபத் துநவப் புலவர்க்கும் விபத் திலின்ஞான

படலத் துறலக் கணலக்ய தமிழ்த்
த்ரயமத் திலகப் பொருள் வ்ருத்தியினைப்
பழுதற் றுணர்வித் தருளவித் தகசற் குருநாதா

பவளக் கொடிசுற் றிபொற் கமுகிற்
றலையிற் குலையிற் பலமுத் துதிர்செய்ப்
பழநிப் பதிவெற் பினிலுற் குமரப் பெருமாளே.

(இ-ள்) சடிலத்தவன்-சடையையுடைய சிவபெருமான், இட்ட-கொடுத்த சாபத்தால், விசிட்டம் குலத்து-சிறந்த குலத்தில், ஒரு செட்டி இடத்தின் உதித்து அருள-ஒரு செட்டியின் வீட்டில் தோன்றி யருளிய. விக்ரகம் ருத்ர ஜன்மன் பெயர் செப்பிட-ஞானத்திற் சிறந்த உருத்திர சன்மன் என்னும் பெயரைச் சொல்லி, பரிவால்-அன்பால், சனகர்க்கும் அகஸ்திய புலஸ்திய சனற்குமாரர்க்கும்-சனகர் முதலாகிய நால்வருக்கும், அநுக்கிரக-அருள்புரிந்த, மெய் பலகை-சங்கப் பலகையை, சதுபத்து நவப் புலவர்க்கும்-சங்கப்புலவர் நாற்பத்தொன்பது பேருக்கும், விபத்தி இல் ஞானம் படலத்து உற-வேற்றுமையில்லாத ஞான படலத்திலே பொருந்திய, லக்கண லக்ய-இலக்கண இலக்கிய செறிவையுடைய, தமிழ் த்ரயம் அதில்-இயல் இசை நாடகம் என்னும் மூவகைப்பட்ட தமிழில், அகப்பொருள் வ்ருத்தியினை-அகப்பொருளின் விரிவை, பழுது அற்று-குற்றம்

நீங்க, உணர்வித்தருள-புலப்படுத்தியருளும், வித்தக சற்குரு நாதா-ஞானத்தையுடைய உண்மைக் குருநாதனே!, பவளம் கொடி சுற்றிய-பவளக்கொடியால் சூழப்பட்ட, பொன் கமுகின் தலையில் குலையில்-அழகிய பாக்குமரத்தின் உச்சியின் குலைகளிலே, பலமுத்து உதிர்-பல முத்துக்கள் உதிர்கின்ற-செய் பழநிபதி-வயல்களையுடைய பழநி என்னுந் திருப்பதியிலுள்ள, வெற்பினில் - மலையின் மேல்வாழும், நலகுமரன் பெருமானே-நல்ல முருகனாகிய பெருமானே!, கடலை சிறைவைத்து - கடலைச் சிறையிலிட்டு, மலர் பொழிலில் - பூக்களையுடைய சோலையில், பிரமரத்தை உடல பொறியிட்டு - வண்டுகளை உடம்பிலே முத்திரையிட்டு, மடு கமலத்தை மலர்த்தி - மடுவிலேயுள்ள தாமரை மலர விரியும்படி செய்து, விடத்தை இரப்பவன் ஊணு கருதி-விஷத்தைப் பிச்சை எடுப்பவனுக்கு இரையாகும்படி எண்ணி, சருவி கயலை-பிறழுங் கயல்மீனை, கயம் உறப்படுவித்து-குளத்துள் புகும்படி செய்து, உழையை கனத்து அடைசி-மானை விரைவாகஓடும்படி செய்து, கணையை கடைவித்து-அம்பைக் கடையும்படி செய்து, வடுதனை உப்பினில் மேவி - மாம்பிஞ்சின் பிளவை உப்பில் போட்டு, அடலை செயல் சத்தியை-போர்த்தொழிலையுடைய வேலை, அக்கினியில் புகுவித்து-நெருப்பில் புகும்படிசெய்து, யமப்ரபுவை துகைத்து-யமனுடைய பிரபுவை உதைபடச் செய்து, அரி கட்கம்-பகைவர் உடலைவெட்டும் வாளை, விதிர்த்து முறித்து-சிதறும்படி முறித்து, மதித்த சகோரம் - மேன்மையாகக்

கீருதப்பட்ட சகோரப்பறவை, அலற-அலறும்படி, பணி ரத்ந மணி குழையை-தாழ்ந்த ரத்நம் இழைந்த அழகிய குண்டலத்தை, சிலுகிட்டு-துன்பஞ்செய்து, மை இட்டு-மை எழுதி, ஒளி விட்டு மருட்டுதல் உற-ஒளியை வீசி மயக்குதலையுடைய, பொறிச்சியர் கண்கடையில்-காமப்பொறிகளையுடைய பெண்களின்கடைக் கண்ணில், படுவேனோ-அகப்படுவேனோ? எ-று.

(வி-ரை.) இங்குக் கூறப்பட்ட கண்வருணனை மிகவும் சமத்காரமாகவும் நயமிருந்தும் உள்ளது. கண்ணுக்கு அழகினால் தோற்ற கடல் வேல் முதலிய பொருள்கள் ஒவ்வொரு வகையாகத் தண்டிக்கப்பட்டன என்று கூறும் சதுரப்பாடு மகிழ்ச்சி பயக்கத்தக்கது. கண்ணுக்குத் தோற்ற கடல் சிறையிலே வைக்கப்பட்டும், வண்டுகள் உடம்பிலே விலங்கிடப்பட்டும், தாமரை மலர் மலர்த்தப்பட்டும், நஞ்சு உண்ணப்பட்டும், கயல்மீன் குளத்துட் படுத்தப்பட்டும், மான் ஓட்டிவிக்கப்பட்டும், அம்பு கடைவிக்கப்பட்டும், மாம்பிஞ்சு உப்பிட்டப்பட்டும், வேல் நெருப்பில் காய்ச்சப்பட்டும், இயமன் சிவபெருமானால் உதையுண்டும், கடகம் முறிக்கப்பட்டும், சகோரம் அலறும்படி செய்தும், தண்டிக்கப்பட்டன என்று சொல்நயந் தோன்றக் கூறினார்.

சிறைவைத்தல்-சிறையில் வைக்கப்படுதல்; ஒரு பக்கமாக அமைக்கப்படுதல். உடல் பொறி யிடல் - உடம்பில் விலங்கிடப் பெறுதல்; உடம்பில் வரி பெற்றிருத்தல்; மலர்த்தல்-மலரும்படி செய்தல்; விரியும்படி செய்தல், அதாவது

துன்பத்தினால் உடம்பு கிழியுண்டு விரிதலாம். விடத்தைத் இரப்பவன் ஊணாகக் கருதி - நஞ்சைச் சிவபெருமானுடைய உணவாகும்படி எண்ணி, கயம் உட்படுவித்து - குளத்துள் வாழுதல், குளத்துள்ளே அமிழ்வித்தல். உழையைக் கவனத்து அடைசி-மானை விரைந்தோடும்படி அடைவித்தது; மான் விரைந்தோடுதல் இயல்பு. கணையைக் கடைதல்-கணை செய்யப்படுங் காலத்துக் கடையப்படுதல், தோற்றதனால் கடையப்படுதல். வடு-மாம்பிஞ்சு, உப்பினில் மேவல்-உப்பிடுதல், உப்பிட்டுத் துன்பப்படுதல். சத்தியை அக்கினியிற்புகுவித்தல், வேல் வடித்துச் செய்யப்படுங் காலத்து நெருப்பிற் காய்ச்சப்படுதல். தோற்றமையான் நெருப்பிலிடுதல் எமப் பிரபுவைத் தகைவித்து-எமனைச் சிவபெருமானால் உதையுண்ணும்படி செய்தல். கடகம்-வாட்படை, அதனை முறித்தலாவது ஒடித்தலும், வளைத்தலுமாம் சகோரம் அலறல்-சகோரப் பறவை துன்ப மிகுதியால் அலறுதலென்றும். இயற்கையாகக் கூவுதலென்றுங் கொள்க. பொறிச்சியர்-பொறியை யுடையவர்; பொறி-கட்பொறி, இயந்திரம். கட்கடை என்றது நோக்கம். கட்கடையில் மிகுதியும் வெளிப்படுதல் நோக்கி இவ்வாறே **மணிவாசகப் பெருமானார்,**

> பஞ்சாய வடிமடவார் கடைக்கண்ணா லிடர்ப்பட்டு
> நெஞ்சாய துயர்கூர நிற்பேனுன் னருள்பெற்றே
> னுய்ஞ்சேனா னுடையானே யடியேனை வருகவென்
> றஞ்சேலென் றருளியவா றார்பெறுவா ரச்சோவே.

எனக் கடைக்கண்ணை விதந்து எடுத்தோதுதல் காண்க.

முருகப்பெருமான் வணிகர் குலத்தில் சிவபெருமான் திருவாணையின்படி உதித்தருளி உருத்திரசன்மர் என்னும் திருநாமத்துடன் விளங்கினார். ஆதலின், 'சகலத்தலைவனிட்ட விசிட்டகுலத்து ஒரு செட்டியிடத்தின் உதித்து அருள வித்தக உருத்திரசன்மப் பெயர் செப்பியிட' என்றருளிச் செய்தார். இவ்வரலாற்றை இறையனார் அகப்பொருளுரையின் கண்ணும் காண்க.

உருத்திரசன்மன்-உருத்திரனுக்குப் பிறந்தவன், சன்மம் என்பதைச் சருமன் எனத் திருத்திப் பொருளில் முரண்பட்டு இடர்ப்படுவாருமுளர். மெய்ப் பலகை-சங்கப் பலகை; புலமை யுள்ளவருக்குமட்டும் இடந்தரலால். சதுபத்து நவப் புலவர் - சங்கப்புலவர் நாற்பத்தொன்பதின்மர். விபத்தி-வேற்றுமை, தமிழ்த்திரயம்-முத்தமிழ், அதாவது இயல் இசை, நாடகம். பழுதற்று என்னும் வினையெச்சம் சொல் பிரியினும் பொருள் பிரியா வினைக்குறை என்னும் விதியின்படி திரித்துப் பொருளுரைக்கப்பட்டது. தமிழுக்கு முருகப்பெருமான் ஓர் ஆசிரியர் ஆதலானும், முதற் சங்கத்திலிருந்து அதனை ஆராய்ந்தமையாலும், 'தமிழ்த் திரயமத்தில் அகப்பொருள் விருத்தியினைப் பழுதற்றுணர்வித்தருள் வித்தகச் சற்குருநாதா' என்றருளிச்செய்தனர். (39)

40 தததததத் தததததத்தன
தததந்தத தததததததன
தத்ததத்த தததததததன-தனதான

முத்துக்குச் சிட்டிகைக்குப்பிழ
டித்துச்சுக் கைப்பிச் சுற்றிய
முற்பக்கத் திப்பொற் புற்றிட நுதலமீதே

முகய்யப்பச் சைப்பொட்டிட்டணி
ர்நரசுட் டிப்பொற்புற்றிட
முசசட்டைச சிதரக்கட்டழ கெழிலாடத்

திததிக்கச சொற் சொற்ரபரிதழ்
நசசரக்கட கறபுசசொக்கியா
செப்புக்கொக் கககசசுப்பெற தனமேரு

திட்டத்தைப் பற்றிப்பபல
லசசைக்குட் பட்டுத்தொட்டுயிர
சிக்கிச்சொக் கியகெட்டிப்படி யுழலவேனோ

மெத்தத்தாக் கத்தைத்தித்திமி
ஙிசசித்தத்தி பத்தரதொடு
மெசசிசசொாக கத்தி சி ரம அருளவாயே

விதநதைக்குக் காததருத்தற்பர
முகட்சித் தாக்குப்புத்திர
விசசித்ரச் செசசைக்கத்திமை புணையோனே

விதயக்கப் பக்க சித்தாக
ளொட்டுத்திய குக்குட்பட்டவ
ஙிஷ்டைக்கப் புறப்பத்தாகள அமரோரும்

கெட்டுக்குப் புட்பத்தைக்கொடு
முற்றுதற சசிக்கப்பழ
நிககுப்பட் டத்துக்குற்றமை பெருமாளே.

(இ-ள்) விதநதைக்கு காததிரு-சகலகலை ஞானங்கட்கும் கர்த்தாவும், தற்பரம் முகக்கண் சித்தர்க்கு புத்திர-தனக்குத் தானே பரமானவரும் மூன்று கண்ணையுடைய சித்தருமாகிய சிவபெருமானுக்குப் புதல்வனே!, விசித்திரம் செச்சை

கத்திகை புனைவோனே - அழகிய வெட்சிமாலையை அணி பவனே', நித்தியம கற்பத்தில சித்தர்கள - நித்திய கற்பத்தி லுள்ள சித்தபுருஷர்களும், எட்டு திக்குள்ளவர்-எட் டுத்திசைகளிலும் வசிப்பவர்களாகிய, நிஷ்டைக்கு அற்பு உற்ற பத்தர்கள் - நிஷ்டானுபூதியை விரும்பிய அன்பர் களும், அமரரும்-தேவர்களும், நெட்டுக்கு - மனவுறுதி யுடன், புட்பத்தை கொடு - மலர்களைக்கொண்டு, முற் றத்து உற்று - கோயில் முற்றத்துச் சென்று, அர்ச்சிக்க- அருச்சனை செய்ய, பழனிக்குள் - பழனிமலைக்குள், பட் டத்துக்கு உற்று உறை பெருமானே - சிங்காசனத்துக்குப் பொருந்தி உறைகின்ற பெருமானே', முத்துக்குச்சு இட்டு- முத்துக்குச்சு என்னும் ஆபரணத்தைத்தரித்தும், குப்பி முடித்து-குப்பிமுடித்தும், சுக்கை-மாலையை, பின் சுற்றியும்- பின்னே சூழவிட்டும், முன் பக்கத்தில - முன்பக்கத்தில, பொற்பு உற்றுட-அழகு பொருந்த, நுதல்மீது-நெற்றியின் மேல், முக்கிய பச்சை பொட்டு இட்டு-முக்கியமான மரகத திலகம் தீட்டியும், அணி-அழகிய, ரத்நம சுட்டி-இரத்தி னம் வைத்திழைத்த சுட்டி யென்னும் ஆபரணம், பொற்பு உற்றிட-பொலிவுபெற்று விளங்கவும், முச்சட்டை-ஒழுங் காகவுள்ள, சித்ரம கட்டு அழகு எழில ஆட-சித்திரவேலை கள் செய்த ஆடையில அழகும் தோற்றமும் விளங்கவும், தித்திக்க-இனிக்கும்படி, சொல்சொல-சொல்லுகின்ற சொல் லையும், துப்பு இதழ்-பவளம்போன்ற இதழையும், நஞ்சுகண்- விஷம்பொருந்திய கண்ணையும் உடைய, கற்பு சொக்கியர்-

கற்பனைகள் தெரிந்து ஆடவரை மயக்குகிறவர்களாகிய பெண்களுடைய, செப்புக்கு ஒக்க - கலசத்துக்கு ஒப்பென்று சொல்லும்படி வட்டமாகத் திரண்டு, கச்சு பெற்றதனம் மேரு-கச்சைத் தரித்த ஸதனமாகிய மேருமலைகளின் திட்டத்தைப்பற்றி தொட்டு-மேட்டைப் பிடித்துத் தொட்டு, பல பல்லசாரக்கு உட்பட்டு-பலவகையான நாணமுடைய செயல்களுக்கும் மனம்பொருந்தி, உயிர் சிக்கி சொக்கி-உயிர் அகப்பட்டு மயங்கி, கெட்டு இப்படி உழலவேனோ - அறிவுகெட்டு இவ்விதமாக வருந்துவேனோ?, மெத்த துக்கத்தை-மிக்க துயரத்தை திருத்தி-சரிசெய்து, இனி சித்தத்தில் - இனிமேல் மனத்தில், பக்தியொடு முயற்சியோடு, மெச்சி சொக்கத்தில்-பாராட்டிச் சொக்கலோகத்தில், சிற்பரம் அருள்வாய்-ஞானத்தின் மேம்பாட்டை அருள்செய்வாய் எ-று.

(வி-ரை) சுக்கை-பூமாலை. பொற்பு-அழகு. நச்சுக்கண்-நஞ்சையொத்த கண்; வலித்தல் விகாரம் பெற்றது. தன மேரு திட்டம் - மேருவின் அளவையொத்த ஸ்தனங்கள். சொக்குதல்-மயங்குதல். சிற்பரம் - மேன்மையாகிய ஞானம், முக்கட் சித்தர் என்றார் பஞ்சகிருத்தியங்களையும் ஒரு சித்துப்போல செய்தலின். கொச்சை கச்சிகை-வெட்சிமாலை அற்பு-அன்பு; வலித்தல் விகாரம் பெற்றது. (40)

41 தனதன தனதன தனதன தனதன
தனதன தனதன-தனதான.

கடலைபொரியவரை பலகனி கழைநுகர்
கடினகுடவுதர விபரீத

காடத டமுமத நளினசி றுநயன
கரிமுக வரது துணைவோனே
வடவரை யின்முகடு அதிரவொ ருநொடியில
வலம்வரு மரகத மயில்வீரா
மகபதி தருசுதை குறமினொ டிருவரு
மருவுச ரசவித மணவாளா
அடலசு ரர்கள்குல முழுதும டியவுய
ரமரர்சி றையவிட வெழிநீறு
மருணகி ரணவொளி யொளிரும யிலைவிடு
மரகர சரவண பவலோலா
படலவு டுபதியை யிதழிய ணிசடில
பசுபதி வரநதி யழகான
பழநிம லையருள்செய மழலைமொ ழிமதலை
பழநிம லையில்வரு பெருமாளே.

(இ-ள்) கடலை பொரி அவரை-கடலையையும் பொரியையும் அவரையையும், பல கனி-பலவகைப்பட்ட பழங்களையும், கழை-கரும்பையும், நுகர்-உண்கின்ற, கடின குட உதரம்-வன்மையான குடம்போன்ற வயிற்றையும், விபரீத கரடம்-வேறுபட்ட மதம்பாயும் சுவட்டையும், தடம் மும்மதம-மிகுதியான மும்மதங்களையும், நளினம் சிறு நயன-தாமரை மலர்போன்ற சிறிய கண்களையுமுடைய, கரிமுகவரது-யானைமுகத்தையுடைய விநாயகரது, துணைவோனே-சகோதரனே!, வடவரையின்-வடக்கேயுள்ள மேருமலையின், முகடு அதிர-சிகரம் நடுங்கும்படி, ஒரு நொடியில்-ஒரு

நொடிப்பொழுதில், வலம்வரு உலகத்தைச் சுற்றிவந்த, மரகதம் மயில்வீரா-பச்சை மயிலையுடைய வீரனே, மகபதி தரு-இந்திரன் பெற்ற, சுதை புதல்வியாகிய தெய்வயானை அம்மையாரை, குறமின்னொடு-குறவர் மகளாகிய வள்ளிநாயகியாரோடு, இருவரும்-இருவரையும், மருவ-சேர்கின்ற, சரச வித-லீலை வகைகளைச் செய்யும், மணவாளா - நாயகனே, அடல் அசுரர்கள் வலிமை மிக்க அசுரர்களுடைய, குலம் முழுதும் மடிய-கூட்டம் முழுவதும் ஒழியவும், உயர் அமரர் சிறைமை விட-சிறந்த தேவர்களுடைய சிறையை ஒழிக்கவும் எழில் கூறும்-அழகு மிகுந்த, அருணகிரணம் ஒளி-ஒளிரும் சூரியகாந்திபோலும் ஒளி விளங்கும், அயிலைவிடு - வேற்படையை விடுகின்ற, சரவணபவ - சரவணப்பொய்கையில் தோன்றி, அபகாரலோலா-வினைமை அரிக்கும் ஆசைப் பெருக்கை உடையவரே, படர் உடுபதியை - கூட்டமான நட்சத்திரங்களுக்குத் தலைவனான சந்திரனையும், இதழி அணி சடிலம்-கொன்றை மாலையையும் அணிந்த, பசுபதி-சிவபெருமானும், சுர நதி-கங்காதேவியும், அழகான பழமலை-அழகானவரும் பழைமையானவருமாகிய உமாதேவியாரும், அருள்செய் - பெற்றருளிய, மழலைமொழி மதலை மழலைச் சொற்களைப்பேசுங் குழந்தையே, பழநி மலையில் வரு பெருமாளே - பழனி மலையில் எழுந்தருளியுள்ள பெருமானே. எ-று.

(வி-ரை) கடினகுட உதரம் வன்மையான குடம் போன்ற வயிறு. விபரீத கரடம்-வேறுபாடான மதம்பாய்

சுவடு தடம் மிகுதி மும்மதம்-கன்னமதம், கும்பமதம், கோசமதம். இவை இச்சாஞான சக்திகளைக் குறிக்கும். சத்து, சித்து, ஆனந்தம் என்னலுமாம். யானைகளுக் கண் சிறிதாதலப் பற்றிச் சிறுநயனம் என்றார். கரிணி பெண்யானை; ஈன்ற யானை யென்றவளில் நிலாது விநாயகக்கடவுளும் சுப்பிரமணியக்கடவுளும் சிவபெருமானின்று வேறாகாது, மணியும் அதன் ஒளியும்போலப் பிரிவின்றி நிற்கும் அவருடைய இரண்டுசத்திகளாம். சிவபெருமானினின்றும் தோற்றிய சத்திகளாகையால் அவரது குமாரர்கள் எனப்படுவர். வடவரை-வடக்கின் கண்ணுள்ள மேருமலை. மகபதி-யாகங்களுக்குத் தலைவனாகிய இந்திரன், மகம்-யாகம்; பதி-தலைவன். சுதை-தெய்வயானை; தெய்வயானை அம்மையாரும் வள்ளி நாயகியாரும் முருகப்பெருமானுக்கு ஞானசத்தியும் கிரியா சத்தியுமாவர், இவ்வாறன்றித் தெய்வயானை அம்மையாரை இச்சாசத்தியாகக் கொண்டு வேற்படையை ஞானசத்தியாகக் கொள்ளுதலும் உண்டு. சரவணபவன்-சரவணப் பொய்கையில் உற்பவித்தவன். படலம்-கூட்டம்; உடுபதி-நட்சத்திரங்களுக்குத் தலைவனாகிய சந்திரன்; உடு-நட்சத்திரம். இதழி-கொன்றைமாலை. பசுபதி- ஆன்மாக்களுக்குத் தலைவனான சிவபெருமான். பசு - ஆன்மாக்கள். பசுபதி என்னும் பெயரே சிவபெருமான் தலைமைப்பாட்டை விளக்கும் என்பர். 'பசுபதிப் பெயரிய தனிமுதற் கடவுள்' என்றார் பிறரும். வரநதி-கங்கைநதி, அதாவது கங்காதேவி. முருகப்பெருமான் இளைய பிள்ளையாராதலின் மழலை

மொழிப் பதலை என்றார் சிவபெருமான் எக்காலத்தில் உள்ளரோ வக்காலத்தே யவரோடு பிரிவின்றித் தாதான்மியமாய் இருக்கும் பெரியாள் என்பார் 'பழநிமலை அருள்செய் மழலை' என்றார்.

பழநி மலை - ஆதிசக்தி (41)

42 தனனத் தனதன தனதன தந்தத
தனனத் தனதன தனதன தந்தத்
தனனத் தனதன தனதன தந்தத-தனதான

புடவிக் கணிதுகி லெனவள ரந்தக்
கடலிட் டடையுமொர் குடிமுநி யென்கட்
புநிதச் சரதத னிலைகொள் சயம்புச் சதுர்வேதன்

புரமட் டெரிபெய் விழிக்கனல் சிந்திக்
கடிமலர்த் தொடுசிலை சிறுநகைக் கொண்டற்
பதயுகத் தரகர பரசிவ னிந்தத் தனிமூவர்

நிடலச் சதுமுநிமை தெளிவுறவும்பொற்
செவியுட் பிரணவ ரகசிய மனுபுக்
றிடவுற் றனமொழி யுரைசெய் குழந்தைக் குருநாதா

வெதிருற் றசுரர்கள் படைகொடு சண்டைக்
கிடமைத் திடவவர் குலமுழு தும்பட்
டிடவக் கிரமொடு வெகுளிகள் பொங்கக் கிரியாவும்

பொடிபட் டுதிரவும் விரிவுறு மண்டச்
சுவரிட் டதிரவு முகடுகி ழிந்தப்
புறமப் பரவெளி கிடுகிடெ னுஞ்சத் தமுமாக

பொருதுக் கையிலுள வயினிணை முண்கக்
குருதிப் புனலெழு கடலினு மிஞ்சப்
புரவிக் கனமயி னடவிடும் விந்தைக் குமரேசா

படியிற் பெருமிதத் தகவுயர் செம்பொற்
கிரியைத் தனிவலம் வரவர னந்தப்
பலனைக் கரிமுகன் வசமரு ளும்பொற் பதனாலே

பரவைக் கெட்கிட வுளமிக வும்வெகுண் டக்
கனியைத் தர்க்கிலை யெனவருள் செந்திற்
பழநிச் சிவகிரி தனிலுறை கந்தப் பெருமாளே.

(இ-ள்) புடவிக்கு - பூமிக்கு. அணிதுகில் என-தரிக்கின்ற ஆடையென்று சொல்லும்படி, வளர் - வளர்கின்ற, அந்த கடல் எட்டையும் - எட்டுத்திசையிலுமுள்ள அந்த ஏழுகடலையும், அற்ற தண்ணீர் வற்றும்படி குடிமுனி- குடித்த அகத்தியமுனிவரும், எண்கண-எட்டுத்திருக்கண்களையுடைய, புனித - பரிசுத்தமான, சத்தள நிலைகொள் - நூறு இதழ்களையுடைய. தாமரைமலரிலே வசிக்கும், சயம்பு சதுர்வேதன் - தானே தோன்றிய நான்குவேதங்களுக்குந் தலைவனாகிய பிரமதேவனும், விழிக்கனல் சிந்தி-கண்களிலே நெருப்பைச் சொரிந்து, கடினத்தொடு-கடினத்துடனே, எரிஎழ- நெருப்புண்டாகச் சிலசிறுநகைகொண்டு-மிகச்சிறிய புன்னகை புரிந்து, புரம் அட-முப்புரங்களையும் அழித்த, அற்புத கர்த்தா-வியப்பான தொழிலையுடைய தலைவரும், அகரம் பரசிவன் - பிரணவப்பொருளாக இருக்கும் மேலான சிவ பெருமானும் ஆகிய, இந்த தனிமூவர் இட-இந்த ஒப்பற்ற மூவருடைய, சித்தமுந் நிறை தெளிவு உற-மனங்களும் நிறைந்த தெளிவை அடைய, பொன் செவியுள் - அழகிய காதுகளில், பிரணவ ரகசியம் - பிரணவத்தினுடைய உண்

அருளும்-விருப்பப்பட்டுக் கொடுத்த, பொய்ப்பு அகறலை-தன்மையினால், பரன் ஒட்கிட-சிவபெருமான் நாணமடையும்படி, மிகவும் வெகுண்டு-மிகவும் கோபித்து, அக் கனியை தராதிலை என-அந்தப் பழத்தை எனக்குக் கொடுக்கவில்லையென்று, அருள் செந்தில் பழநி சிவகிரிதனில்-அருளையுடைய செந்தூரிலும் பழநியிலுள்ள சிவகிரியிலும், உறை கந்தப் பெருமாளே - எழுந்தருளியிருக்கும் கந்தப்பெருமானே', எ - று.

(வி-ரை) கடல் பூமியைச் சுற்றி இருத்தலின் 'புடவிக் கணி துகில்' எனக் கூறினார், அந்தக் கடல் எட்டு-அதாவது எட்டுத் திக்குகளிலுள்ள கடலும். கடல் குடி முனி-அகத்திய முனிவர், அகத்திய முனிவர் ஒரு காலத்தில் கடலின் நீரை உழுந்தளவாகச் செய்து பருகினார் என்பது புராணம். கடல் என்றது ஈண்டு கடல் நீரைக் குறித்தது. சததளம்-நூறிதழ். எண்கண்-எட்டுக் கண்கள். நான்கு தலையை உடையனாதலின் எண் கண்களாயின. புரம்-முப்புரம் 'புரமட்டு . பரமசிவன்' இதில் அடங்கிய கதை சிவபெருமான் முப்புர மெரித்த வரலாறு —

தாரகாசுரன் புதல்வர்களாகிய வித்துன்மாலி, தாரகாக்ஷன், கமலாக்ஷன் என்னும் மூவரும் சிவபெருமானைப் பூசனை செய்த பயத்தால் பொன், வெள்ளி, இரும்பு ஆகிய இவற்றால் வானத்தில் பறக்கத்தக்க கோட்டைகளை அமைத்துக்கொண்டு அவற்றோடு ஆங்காங்குச் சென்று தேவரைப்

அருந்தும்-விரும்பி உட்கொண்ட கொடுந்த. பொய் அற்றவ-தன்மையினை, பரம வெட்டி-சிவபெருமான நன்மையை-யுடைய, மிகவும் வெகுண்டு-மிகவும் கோபித்து, அக்கினியை தரழுலே ஏவ-அந்தப் புரத்தை எரித்துக் கொடுக்கவில்லையென்று, அருள் செந்தில் பழநி சிவகிரிகளில்-அருளையுடைய செந்தூரிலும் பழநியிலுள்ள சிவகிரியிலும், உறைகின்ற பெருமானே - எழுந்தருளியிருக்கும் கந்தப்பெருமானே', எ-று.

(வி-ரை) கடல் பூமியைச் சூழ்ந்திருத்தலின் 'புடவிக் கணி நகில்' எனக் கூறினர், அந்தக் கடல் எட்டு-அதாவது எட்டுத் திக்குகளிலுள்ள கடல். கடம்ப குடிமுனி-அகத்திய முனிவர், அகத்திய முனிவர் ஒரு காலத்தில் கடலின் நீரை முற்றளவாகச் செய்து பருகினர் என்பது புராணம். கடல் என்றது ஈண்டு கடல் நீரைக் குறித்தது. சததளம்-நூறிதழ் எண்கண்-எட்டுக் கண்கள். நான்கு தலையை உடையனாதலின் எண் கண்களாயின. புரம்-முப்புரம் 'புரம் அட்டு. பரமசிவன்' இதில் அடங்கிய கதை சிவபெருமான் முப்புரம் எரித்த வரலாறு —

தாரகாசுரன் புதல்வர்களாகிய வித்துன்மாலி, தாரகாட்சன், கமலாட்சன் என்னும் மூவரும் சிவபெருமானைப் பூசனை செய்த பயத்தால் பொன், வெள்ளி, இரும்பு ஆகிய இவற்றால் வானத்தில் பறக்கத்தக்க கோட்டைகளை அமைத்துக்கொண்டு அவற்றோடு ஆங்காங்குச் சென்று தேவரைப்

பெரிதும் வருந்தி வந்தனர். இவர்தம துன்பத்தைப் பொறாத தேவர் சிவபெருமானிடம் முறையிட அவர், திருமால் வழியாக அம்மூவருக்கிருந்த சிவபத்தி சிதைய, பூமியைத் தேராகவும், சூரிய சந்திரர்களைத் தேருருளைகளாகவும், மேருமலையை வில்லாகவும், வாசுகியை நாணாகவும், வேதங்களைக் குதிரைகளாகவும் பிரமனைச் சாரதியாகவும், விஷ்ணு மூர்த்தியைப் பாணமாகவும் கொண்டு அவரை அழிக்கச் செல்லுகையில் விஷ்ணுமூர்த்தி தமது துணையைக் குறித்துச் சிறிது செருக்குற்றனர். அதுகண்ட இறைவன் உடனே சிரிக்க, முப்புரங்களும் எரிந்து சாம்பராயின என்பதாம்.

பிரணவ ரகசியம்-பிரணவத்தின் உண்மை. பிரணவமானது மூலமொழி எனவும், ஒருமொழி எனவும், ஓங்காரம் எனவும், குடிலை எனவும், உத்கீதை எனவும், சுத்தமாயை எனவும்படும். அது சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் பீடமாயும், மறைத் தேவர்களுக்கெல்லாம் பிறப்பிடமாயும், எல்லா மந்திரங்களுக்கும், வேதங்களுக்கும் மூலமாயும் உள்ளது. சிவன் ஓங்கார மூலப்பொருளெனப்படுவர். பிரணவம் சமஷ்டிப் பிரணவம், வியஷ்டிப் பிரணவம், என இருவகைப்படும். சமஷ்டிப் பிரணவம் 'ஓம் காரம் என நிற்பது' வியஷ்டிப் பிரணவம் அகார, உகார, மகார விந்து நாதம் என நிற்பது. பொருந்துக கையிலுள்ள என்புழி வல்லெழுத்து சந்த இன்ப நோக்கி மிக்கது. செம்பொற் கிரி மேருமலை; மேருமலையை வலம் வந்த வரலாறு:—

ஒருகால் சிவபெருமான் தமது கரத்தில் ஒரு கனியை ஏந்திக்கொண்டு தமது புதல்வர்களை நோக்கி, 'இப்பூமண்டலத்தைச் சுற்றிக்கொண்டு முன்னே வருவோருக்கு இக்கனி தரப்படும்' எனத் திருவாய் மலர்ந்தருளினார். அது கேட்ட குமரக் கடவுள் தமது மயில்மேலமர்ந்து மேருமலையை ஒரு நொடிப்போதிற் சுற்றிவந்தனர், என்பதாம்.

அக்கனி-பண்டறி சுட்டு. (42)

43 தனதன தந்தத தனத்த தானன
தனதன தந்தத தனத்த தானன
தனதன தந்தத் தனத்த தானன-தனதான.

மலரணி கொண்டைச் சொருக்கி லேயவள்
சொலுமொழி யின்பச் செருக்கி லேகொடு
மையுமடர் நெஞ்சத் திருக்கி லேமுக மதியாலே

மருவுநி தம்பத் தடத்தி லேநிறை
பரிமள கொங்கைக் குடத்தி லேமிக
வலியவும் வந்தொத் திடத்தி லேவிழி வலையாலே

நிலவெறி யங்கக் குலுக்கி லேபழி
வளைபுனை செங்கைக் குலுக்கி லேமன
நிதிபறி யந்தப் பிலுக்கி லேசெயு மொயிலாலே

நிதமிய லுந்தூக் குணத்தி லேபர
வசமுட னன்புற் றிணக்கி லேயொரு
நிமிடமி ணங்கிக் கணத்தி லேவெகு மதிகேடாய்

அலையநி னைக்கற் பனத்தி லேயுற
இனிமிகு மென்சொற் பனத்தி லேவரு
வறிவும ழிந்தற் பனத்தி லேநித முலைவேனோ

அசடனை வஞ்சக மாத்த னாகிய
கசடனை யுனசிற் றடைக்க லேழையு
மனமொடு நினபொற் பதத்தை யேதொழ வருடாராய்

பலபல பைம்பொற் பதக்க மாரமு
மடிமைசொ லுஞ்செந் தமிழ்ப்பா பனீரொடு
பரிமள மிஞ்சக் கடப்ப மாலையு மணிவோனே

பதியினில் மங்கை கதித்த பாமலை
யொடுசில குன்றி றரித்து வாழ்வுயர்
பழனியி லப்புற் றிருக்கும் வானவர் பெருமாளே.

(இ-ள்) பலபல பைம்பொன் பதக்கமும் - பலபலவாகிய பசுமையான பொன்னால் செய்யப்பட்ட பதக்கங்களையும், ஆரமும் - முத்துமாலையையும், அடிமை சொலும் செந்தமிழ் - அடிமைத் திறத்தைச்சொல்லும் செம்மை பொருந்திய புலவர்களால் பாடப்பட்ட பாமாலையையும், பனீரொடு பரிமளம் மிஞ்ச கடப்பமாலையும் அணிவோனே - பன்னீருடன் வாசனைமிகும்படி கடப்பமாலையையும் தரித்துக் கொண்டிருப்பவனே!, பதியினில் - க்ஷேத்திரங்களிலும், மங்கை கதித்த பாமலையொடு - வள்ளிமலையோடு, சில குன்றில் தரித்து - சிலமலைகளில் தங்கி, வாழ்வு உயர் பழநியில் - செல்வமிகுந்த பழனித்தலத்தில், அப்பு உற்று இருக்கும் - அப்பு பொருந்தி வாழும், வானவர் பெருமாளே - தேவர்களுக்குப் பெருமானே!, மலர் அளி நாணடை செருக்கில் - பூக்கள் தரித்துள்ள வண்டுகள் மொய்க்கும் கொண்டையின் செருக்கிலும், அவள் சொலும் மொழி இன்பம் செருக்

கில-அவள் சொல்லுகின்ற சொல்லினது இன்ப மிகுதியி
லும், கொடுமையும் அடா நெஞ்சம் திருக்கில் - கொடுமை
நெருங்கிய மனத்தினது மாறுபாட்டிலும், முகம் மதியால்-
சந்திரனை ஒத்த முகத்தாலும், மருவு நிதம்பம் தடத்தில்-
சேர்கின்ற நிம்பத் தடத்திலும், நிறை பரிமளம் கொங்கை
குடத்தில்-வாசனை நிறைந்த தனங்களாகிய குடத்தாலும்,
மிக வலியவும் வந்து ஒத்து இடத்திலே-மிகவும் வலிய வந்து
உடம்பைப்பொருந்தும் இடத்தாலும், விழிவலையால்-கண்க
ளாகிய வலையாலும், நிலவு எறி அங்கம் குலுக்கில்-ஒளி
வீசும் உடம்பின் குலுக்காலும், எழில் வளை புனை-அழகிய
வளையல்கள் தரித்த, செம் கை கிலுக்கில்-சிவந்த கைகளின்
அசைவாலும், கனம் நிதிப்பறி அந்த பிலுக்கில்-மிக்க செல்
வத்தை அபகரிக்கும் அந்த பிலுக்காலும், செயும் ஒயிலால்-
செய்கின்ற ஒழுங்காலும், நிதம் இயலும் நாகத்துணத்தில்-
தினந்தோறும் பழகுகின்ற தீயகுணத்தாலும், பரவசமுடன்
அன்பு உற்று இணக்கில்-பரவசத்தோடு அன்பு பொருந்தும்
கலவியினாலும், ஒரு நிமிஷம் இணங்கி-ஒரு நிமிஷம் பொருந்தி,
கணத்தில் வெகுமதி கேடாய-க்ஷணநேரத்தில் மிக்க அறிவு
கெட்டு, அலைய நினைந்து-அலைய எண்ணி, உபயனத்தில்-
தோற்றத்தில், அனுதினம் - தினந்தோறும், மிகும் என்
சொப்பனத்தில் வர-மிக்க எனது கனவில் வர, அறிவும்
அழிந்து-அறிவும் ஒழிந்து, அற்பன் அயத்தில் - கீழ்மை
யுடையவனாகிய யான் அந்தக் கலவியில், நிதம் உலைவேனோ-
எப்போதும் வருந்துவேனோ, அசடனை-குற்றமுடையவனை,

வஞ்சம் சமர்த்தன ஆகிய கசடனை-வஞ்சகமாகிய சாமார்த்தியத்தை உடைய கீழ்மகனை, உன சித்த கடைக்கண்ணாடி-தேவரீரது ஞானம் மிக்க கடைக்கண்ணால் பார்த்து, அலர்கொடு-பூக்களைக்கொண்டு, நின் பொன் பதத்தையே-நினது அழகிய திருவடிகளையே, தொழ-வணங்க, அருள் தாராய்-கருணையைத் தருவாயாக எ-று.

(வி-ரை) மொழி இன்பச் செருக்கு-சொல்லிலே உண்டாகும் இன்பத்தின் வளமை. நெஞ்சத்திருக்கு-மனக் கோட்டம். தடம்-உயர்ந்த இடம். 'அகன்கின்ற கொங்கைத் தடமது' என்றார் மணிவாசகரும். பரிமள கொங்கைக் குடம்-வாசனைப் பொருள்கள் பூசப்பட்ட ஸ்தனமாகிய குடம். கனநிதி-மிக்கபணம். நாள்தோறும் தீக்குணங்களிலே பழகுவார் என்பார், 'நிதம் இயலும் துர்க்குணத்திலே' என்றார். உற்பனம்-தோற்றம். நனவின்கண் மிக்கது கனவிலும் தோன்றுமாதலின் என் 'சொப்பனத்திலேவர அறிவுமயங்கி' என்றார்.

திருச்செந்தில்

44 தந்தந்தந தந்தன தானன
தந்தந்தந தந்தன தானன
தந்தந்தந் தந்தன தானன-தனதான

வஞ்சங்கொண் டுந்திட ராவண
னும்பந்தென் திண்பரி தேர்கரி
மஞ்சின்பண் புஞ்சரி யாமென வெகுசேனை
வந்தம்பும் பொங்கிய தாகவெ
திர்ந்தந்தன் சம்பிர தாயமும்
வம்புந்தும் புப்பல பேசியு மெதிரேகை

மிஞ்சென் றுஞ் சண்டைசெய போதுகு
ரங்குந் துஞ் சங்கனல போலவெ
குண்டுங்குன் றுங்கர டாமர மரமவீசி
மிண்டுந் துங் கங்களி னலெதி
காந்தங்கங் கங்கர மாரொடு
மீனசந்துஞ் சிந்திரி சாசரா வகைசேர
வுஞ்சண்டன றெனறிசை நாடிவி
ழுந்தங்குஞ் செனமேம தூதாக
ளுந்துந்துந் தெனறிட வேதசை நிணமூளை
யுணடுங்கண் டுஞ்சில கூளிகள
டிணடிண்டென றாங்குதி போடவு
பாந்தம்புங் கொண்டுவெல மாதவன மருகோனே
தஞ்சந்தஞ் சஞ்சிறி யேன்மதி
கொஞ்சங்கொஞ் சந்துரை யேயருள
தந்தென்றின் பந்தகு வீடது தருவாயே
சங்கங்கஞ் சங்கயல சூழ்தட
மெங்கெங்கும் பொங்கம காபுனி
தந்தங்குஞ் செந்திலில வாழ்வுயா பெருமாளே.

(இ-ள்) வஞ்சம் கொண்டு-வஞ்சகச் செயலைக்கொண்டு, திடராவணனும்-வலிமைபொருந்திய இராவணன், பந்து என் கட்டுடையதென்று சொலலத்தக்க, திண்பரி தேர் கரி-உறுதியான குதிரை தேர் யானைப்படைகள், மஞ்சின் பண்பும் சரி ஆம் என-மேகத்தினது தன்மைக்கு ஒப்பென்று சொல்லும்படி, வெகு சேனை-அநேக சேனைகள், வந்து அம்பும் பொங்கியது ஆக எதிர்ந்து-மேலெழுந்துவந்து அம்புகளை மிகுதியாகச் செலுத்தி எதிர்த்து, தன் சம்பிரதாயம்-

தன் மேலாடையையும், மெய்ப்பும் தூபமும் பசிப்பசியும்-வீணை வையும் இகழ்ச்சியானவையுமான பல வார்த்தைகளைப் பேசிக்கொண்டும், எதிராகை மிருதி எனச் சண்டை செய் போது-எதிரிலே முன்னேதாக்கு என்று சொல்லிச் சண்டை செய்கின்ற பொழுது, குரங்கும் - அனுமானும், நெருப்புக் கனல்போல-அடங்கியிருந்த நெருப்புப்போல, வெகுண்டுக்- கோபித்தும், குன்றும்- மலைகளையும், காடு ஆமா மதவும் வீசி-மதம்பாய்கின்ற சுவட்டையுடைய பெரியமரம்போன்ற யானைகளையும் எடுத்தெறிந்து, மிண்டும்-நெருங்கிய, துங்கக் கறிரினால்-மலைகளினால், தகர்ந்து-பிளந்து, அங்கம் கம் கரம் மார்பொடு-உறுப்புகளையும் தலையையும் கையையும் மார் போடு, மினசந்தம்-ஒளிபொருந்திய சந்தனமரங்களையும். சிந்தி-அழிந்து, பிசாசக் கைகை சேரவும்-அரக்கர்கூட்டம் சேரவும், சண்டன்-யமனுடைய, தென்றிசைநாடி-தென்றி சையை நோக்கி, விழுந்து அங்குமசென்று விழுந்துபோய், எமதூதர்கள் வந்து உந்து என்றிட-எமதூதர்கள் தள்ளுந் தள்ளு என்று கூற, தசை மிண்டம் மூளை-தசையையும் கொழுப்பையும் மூளையையும், உண்டும் கண்டும் - உண்டும் பார்த்தும், சில கூளிகள்-சில பேய்கள், டிண் டிண்டு என்று- டிண்டிணென்று, குதிபோட-கூத்தாட, உயர்ந்து-சிறந்து, அம்பும் கொண்டு-அம்பையும் கைக்கொண்டு, வெல் மாத வன்-வெல்லுகின்ற விஷ்ணு மூர்த்தியினுடைய,மருகோனே- மருகனே', சங்கம் கஞ்சம் கயல - சங்குகளும் தாமரை மலர்களும் கயல்மீன்களும், சூழ்தடம்-சூழுகின்ற குளங்கள் ,

எங்கு எங்கும் பொங்க - எல்லா இடங்களிலும் மிகுந்து விளங்க, மகா புனிதம் தங்கும்-மிக்க பரிசுத்தம் பொருந்திய, செந்திலில் வாழ்வு உயர் பெருமாளே - திருச்செந்தூரில் வாழ்வு சிறந்து விளங்கும் பெருமாளே, மேலை-மேலானவனே', சிறியேன்-சிறியவனாகிய அடியேன் தஞ்சம் தஞ்சம்-தேவரீருக்கு அடைக்கலம் அடைக்கலம், மதி கொஞ்சம் கொஞ்சம்-எனக்கு அறிவு சிறிது சிறிது, அருள் தந்து-ஆதலால் கருணை செய்து, இன்பம் தரு வீடு அது - அழியாத பேரின்பத்தைக் கொடுக்கும் முத்தியை, என்று தருவாய்-எனக்குக் கொடுத்தருளுவாய் எ-று.

(வி-ரை) மஞ்சு-மேகம். சம்பிரதாயம்-விதி. வம்பு தும்பு-பயனில் சொற்கள். கைமிஞ்சல் - சண்டை தொடங்குதல். கனல்போல வெகுண்டு - நெருப்பைப்போலக் கோபித்து, 'எரிதள னிறலெர வெகுண்டான்' என்றார் பெரியாரும். மரமது-அது பகுதிப்பொருள் விகுதி. சண்டன் - இயமன், தஞ்சம் தஞ்சம்-அடுக்குத்தொடர், அச்சத்தின்கண் வந்தது. கொஞ்சம் கொஞ்சம் - அடுக்கு இழிவில் வந்தது. இன்பந் தரு வீடு-நித்திய நிரதிசய இன்பத்தைத் தரும் மோக்ஷம். சங்கம் கஞ்சம் கயல்சூழ் தடம் - சங்குகளும் தாமரையும் மீனும் சூழ்கின்ற குளம். (44)

45 தன்ன தனதன தனதன தனதன
தன்ன தனதன தனதன தனதன
தன்ன தனதன தனதன தனதன-தனதான.

நெடிய வடகுவ டடியவு பெருகிரி
நெறநெ றெனநெரி யவுமுது பணிபதி
நெளிய முடிகிழி யவுநில மதிரவும் விளையாடும்

நிகரில கலபியும் ரவியுமிழ துவசமும்
நினது கருணையு முறைதரு பெருமையும
நிரமு மிளமையும் வளமையு மிருசர ணமுநீப

முடியு மபிநவ வனசரர் கொடியிடை
துளர ளாவன மிரகமத பரிமள
முகுள புளகித தனகிரி தழுவிய திரடோளும்

மொகுமொ கெனமது கரமுரல குரவணி
முருக னறுமுக னெனவரு வனபெயர
முழுது மியலகொடு பழுதற மொழிவது மொருநாளே

கொடிய படுகொலை நிசிசர ருரமொடு
குமுகு மெனவிசை யுடனிசை பெறமிகு
குருதி நதிவித சதியொடு குதிகொள விதியோடக்

குமுறு கடல்குடல் கிழிபட வடுமர
மொளமொ ளெனவடி யொடலறி விழவுயர
குருகு பெயரிய வரைதொளை படவிடு சுடரவேலா

இடியு முழைமலி குலிசமு மிலகிடு
கவள தவளவி கடதட கனகட
விபமு மிரணிய தரணியு முடையதொர தனியானைக்

இறைவ குருபர சரவண வெகுமுக
ககன புனிதையும் வனிதைய ராறுவரு
மெமது மகவென வுமைதரு மிமையவர் பெருமாளே.

(இ-ள்) கொடிய படுகொலை - கொடுமையான மிக்க கொலைத் தொழிலையுடைய, நிசிசரர் உரமொடு-அவுணர்கள் மார்புடன், குமுகுமு என விசையுடன் இசைபெற - குமு

குமுவென்று விரைவுடன் ஒலிபெறும்படி, மிகு குருதிநதி-மிக்க இரத்தமாகிய ஆறு, விதசதியொடு குதிகொள - பல விதமான தாளத்தோடு குதித்தெழுந்து, விதி ஓட - ஒழுங்காக ஓடவும், குமுறு கடல குடல கிழிபட - சப்திக்கின்ற கடலினது குடலானது கிழிபடவும், வடுமரம் மொளுமொளு என அடியோடு அலறிவிழ - மாமரம் மொளுமொளென்று வேருடன் அரற்றிவிழவும், உயர்குருகு பெயரிய வரை துளைபட-உயர்ந்த பறவையின் பெயரைப் பெற்ற கிரவுஞ்சமலை துளைபடவும், விடுசுடர்வேலா-எறிகின்ற ஒளியையுடைய வேலையுடையவனே', இடியும் முனைமலி குலிசமும்-இடியேற்றையும் வெறுக்கின்ற மிக்க வஜ்ஜிரப்படையையும், இலகிடு கவள-விளங்குகின்ற கவளத்தைக்கொண்ட, துவள விகட தட - வெண்மையான அழகிய அகன்ற, கனகட-மிகுந்த மதத்தையுடைய, இபமும் இரணிய தரணியும் உடையது-மரக்கொம்பையும் பொன்மயமான மலையையும் உடையதாகிய, ஓர் தனி யானைக்கு இறைவ - ஓர் ஒப்பற்ற யானைக்குத் தலைவனே', குருபர-குருபரனே', சரவண-சரவணப் பொய்கையில் தோன்றினவனே', வெகுமுக ககனம் வனிதையும் - ஆயிர முகங்களையுடைய ஆகாய கங்கையும், வனிதையர் அறுவரும் - கார்த்திகை முதலிய ஆறு பெண்களும், எமது மகவு என - எம்முடைய குழந்தை என்று சொல்ல, உமைதரு இமையவர் பெருமாளே-உமாதேவியார் பெற்றருளிய தேவர்கள் பெருமானே', நெடிய வட குவடு இடியவும்-நீண்ட வடக்கின்கண் உள்ளதாகிய மேருமலை இடி

யவும், எழுகிரி நெறுநெறு என நெரியவும் - ஏழுமலைகளும் நெறு நெறுவென நெரியவும், முதுபணிபதி சிரம் முடி இழியவும் - பெரிய படத்தையுடைய ஆதிசேடனுடைய இரத்தினச் செறிவையுடைய கிரீடம் சிதறவும், நிலம் அதிரவும் விளையாடும் - பூமி அதிரும்படியும் விளையாடுகின்ற, நிகர் இல் கலபியும் - ஒப்பற்ற மயிலையும், ரவி உமிழ் சேவலும் கதிரைக் கக்குகின்ற கொடியையும் உடைய. நினது கருணையும் - தேவரீருடைய திருவருளையும், முதுக்குரு பெருமையும் - முறைமையால் வருகின்ற பெருமையையும், நிறமும் இளமையும் - சிவந்த நிறத்தையும் இளமையையும், வளமையும் எண்குணச் செழுமையையும், இருசரணமும் - இரண்டு திருவடிகளையும், நீபம் முடியும் - கடப்பமாலை தரித்த மகுடமும், அபிநவ வஞ்சர கொடி இடை - புதிய வேடர்களுடைய கொடியை ஒத்த இடையையுடைய மகளாகிய வள்ளி நாயகி, தளர வளர - தளரும்படி ஓங்கி வளர்கின்ற, வனம் மிருக மதம் பரிமளம் - அழகிய கஸ்தூரி யணிந்த வாசனையையுடைய, முகுளம் புளகிதம் தனகிரி - தாமரை அரும்பை ஒத்த குமிழ்ப்பை உடைய ஸ்தனங்களாகிய மலைகளை, தழுவிய திரள் தோளும் - திரண்ட தோள்களையும் உடைய, மொகுமொகு எனமதுகரம் முரல - மொகுமொகு வென்று வண்டுகளொலிக்கின்ற, குரவு அணி முருகன் - குராமலையைத் தரித்த முருகனென்றும், அறுமுகன் என - ஆறுமுகனென்றும், வருவன பெயர் முழுதும் - வருவனவாகிய பெயர்கள் முழுவதையும், இயல்கொடு பழுது அற - அழகோடு குற்றம்

நீங்க, மொழிந்தும் [illegible] எடுத்துக்கூறும் நானும் உணர்ந்திட்டேனோ? என்று

(வி-ரை) முதுபணிபதி-ஆதிசேடன். வெகுமுக ககன வனிதை-கங்காதேவி. குருகு பெயரிய வரை - பறவையின் பெயருள்ள மலை, கிரவுஞ்சம். இங்ஙனமே பரிபாடலில், 'குருகெறி வேலோய்'.

என்புழிக் குருகு அருப்பெயரான கிரவுஞ்சகிரியை உணர்த்தல் காண்க.

கலாபி-மயில். வனிதையர் அறுவர்-கார்த்திகைப் பெண்கள். இதனைப் பின்வரும் கந்தபுராணச் செய்யுளால் உணர்க.

'தீர்த்திகைக் கங்கைதன்னிற் பிறந்திடு வண்ணத் திலங்க
மூர்த்திகைக் குழவியேபோல் முருகனைப் பாடலேத்தி
ஆர்த்திகை யுருகவுள்ளத் தரிமுக வமராயாருங்
கார்த்திகை நெறிமைமாரை விளித்திவை கழறலுற்றான்.

'சாற்றருஞ் சரவணத்திற் சண்முகத் தொருவ னாகி
வீற்றிருந் தருளுந் தினம் விமலன்றன் குழவி போலத்
தோற்றினன் அவனுக் குங்கள் துணைமுலை யமுத மூட்டிப்
போற்றுதிர் பாலனு மென்ன நன்மொழி புகன்று வந்தார்.' ()

திருத்தணிகை

46 தனான தந்த னத்த தான தந்த னத்த
தனான தந்த னத்த-தனதான

ஈளைய டைக்க குட்ட விலைமி குந்த பித்த
மெரிவ ழங்கு வெப்பு வலிபேசா

திகழி னின்ப லைகளு முயல கன்று லைபொ
    ருருமனின்றி ரைகளு மிவையோடே

மனைகள் பெண்டிர் மக்கள் தமைநி னைந்து சுத்த
    மதிம யங்கி விட்டு மடியாதே

மருவி யின்றெ னக்கு மரக தஞ்சி றக்கு
    மயிலில் வந்து முத்தி தரவேணும்

நினைவ ணங்கு பத்த ரனைவ ருந்த ழைக்க
    நெறியில் நின்ற வெற்றி முனைவேலா

நிலைபெ றுந்தி ருத்த ணியில்வி ளங்கு சித்ர
    நெடிய குன்றி னிற்கு முருகோனே

தினைவி ளங்க லுற்ற புனயி ளங்கு றத்தி
    செயல றிந்த ணைக்கு மணிமார்பா

திசைமு கன்றி கைக்க வசுர ரமாற வுடைத்த
    சிறைதி றந்து விட்ட பெருமானே

(இ-ள்) நினை வணங்கு பத்தர் - தேவரீரை வணங்குகின்ற அடியார்கள், அனைவரும் - எல்லாரும், தழைக்க - செழுமையடையும்படி, நெறியில் நின்ற - அவர்கள் பத்திமார்க்கத்துக்கு எளிவந்த, வெற்றி முனை வேலா - வெற்றியையுடைய போரைச் செய்யும் வேலை உடையவனே, நிலைபெறும் திருத்தணியில் - எக்காலத்தும் அழியாது நிலைபெற்ற திருத்தணிகை என்னும் ஸ்தலத்தில், விளங்கு சித்ரம் நெடிய குன்றில் - விளங்குகின்ற அழகிய நீண்ட மலையில், நிற்கும் முருகோனே - எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமானே,

தினை விளங்கல் உற்ற - தினைகள் மிகுந்து விளைகின்ற, புனம் இளம் குறத்தி - புனத்திலே அயலோட்டியிருந்த இளைய குறப்பெண்ணாகிய வள்ளிநாயகி, செயல் அறிந்து - பக்தி ஒழுக்கத்தைத் தெரிந்து, அணைக்கும் மணிமார்பா - சேர்கின்ற அழகிய மார்பையுடையவனே!, திசைமுகன்-பிரமதேவன், திகைக்க - திகைக்கும்படி, அசுரர் - அசுரர்கள், அன்று - அக்காலத்தில், அடைத்த சிறை - தேவர்களை அடைத்து வைத்த சிறைச்சாலையை, திறந்து விட்ட பெருமாளே-திறந்து வெளிவிட்ட பெருமானே!, எனை அடைந்த - என்னைச் சேர்ந்த, குட்டம் - குட்டநோயும், வினைமிகுந்த-தீவினைமிகுந்ததாலாகிய, பித்தம்-பித்தநோயும், எரி வழங்கு வெப்பு-எரிவு பொருந்திய சுரநோயும், வலி பேசா-ஒன்றுக்கொன்று வலிமையைப் பேசிக்கொண்டு, இகலி நின்று அலைக்கும்-பகைத்து நின்று துன்பப்படுத்தும், முயலகன்-முயலகன் நோயும், குலைப்பொடு நடுக்கத்தோடு, இருமல் என்று உரைக்கும்-இருமல் என்று சொல்லுகின்ற, இவையோடு-இவைகளோடு, மனைகள்-வீடுகள், பெண்டிர்-மனைவிமார், மக்கள்-பெற்ற பிள்ளைகள், தமை நினைந்து-இவர்களை எண்ணி, சுத்தம் மதிமயங்கி விட்டு - தூய்மையான அறிவு மயக்கங்கொண்டுவிட்டு, மடியாது - அழியாமல், மருவி-என்னறிவிற் கலந்து, இன்று எனக்கு-இப்பொழுது அடியேனுக்கு, மரகதம் சிறக்கும் மயிலில் - பசுமை நிறஞ் சிறந்த மயில்மேல், வந்து முத்திதரவேணும்-வந்து மோட்சத்தை அளித்தருளவேண்டும் எ-று.

(வி-ரை) குட்டம்-குஷ்டரோகம். பேசா-பேசி, செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். இகலி-இகல் பகுதி; பகைத்து முயல்கின்ற-ஒருநோய் பெண்டிர் - இர் பலர்பால் விகுதி. இந்திரிய வயப்பட்டுப் பெண்டு பிள்ளை பண்டு பதார்த்தங்களிற் பற்றுவைத்து உழல்வோர் இறப்பையே முடிவாக அடைவர் ஆதலின் 'மனைகள் பெண்டிர் மக்கள் தமைநினைந்து சுத்தமதி மயங்கிவிட்டு மடியாதே' என்றருளிச் செய்தார். இக்கருத்தே பற்றி **மாணிக்கவாசகரும்,**

> 'இந்திரிய வயமயங்கி யிறப்பதற்கே காரணமா
> யந்தரமே திரிந்துபோ யருநரகில் வீழ்வேனைச்
> சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
> அந்தமிலா வானந்த அணிகொடில்லை கண்டேனே'

என்றருளிச் செய்வாராயினர்.

மரகதம் சிறக்கு மயில்-பச்சை மயில்.

சூரபன்மனால் சிறை வைக்கப்பட்ட தேவேந்திரனை அதினின்று மீட்பது தேவர் எல்லார்க்கும் அரிதாயிருப்பவும் தாம் மீட்சிசெய்த காரணத்தால் 'திசைமுகன் திகைக்க அசுரரன்றடைத்த சிறை திறந்துவிட்ட பெருமானே' என்றார். (46)

திருச்செந்தில்

47 தந்தன தந்தனத் தந்தன தந்தனத்
தந்தன தந்தனத்-தனதான.

பங்கமேவும் பிறப்பந்தகாரந்தனிற்
பந்தபாசந்தனிற் றடுமாறிப்

பஞ்சபா ணம்படப் புண்படா வஞ்சகப்
　　பண்பிலா டம்பரப் பொதுமாதர்
தங்களா லிங்கனக் கொங்கையா கம்படச்
　　சங்கைமால் கொண்டிளைத் தயராதே
தண்டைசூழ் கிண்கிணிப் புண்டரீ கந்தனைத்
　　தந்துநீ யன்புவைத் தருள்வாயே
அங்கைவேல் கொண்டரக் கன்ப்ரதா பங்கெடுத்
　　தண்டவே தண்டமுட் படவேதான்
அஞ்சவே திண்டிறற் கொண்டலா கண்டலற்
　　கண்டலோ கங்கொடுத் தருள்வோனே
திங்களார் கொன்றைமத் தந்துழாய் துன்றுபொற்
　　செஞ்சடா பஞ்சரத் துறைதோகை
சிந்தையே தென்றிசைத் தென்றல்வீ சும்பொழிற்
　　செந்தில்வாழ் செந்தமிழ்ப் பெருமாளே.

(இ-ள்) அங்கை வேல்கொண்டு-உள்ளங்கையிலே வேற்படையைக் கொண்டு, அரக்கன் பிரதாபம் கெடுத்து - சூரபதுமனுடைய வீரத்தை ஒழித்து, அண்டம் வேதண்டம் உட்பட-உலகமும் திசையும் எல்லாம், அஞ்ச-பயப்படும்படி, திண் திறல்-உறுதியான வலிமையுடைய, கொண்டல் ஆகண்டலற்கு-மேகவாகனமுடைய இந்திரனுக்கு, அண்டர் லோகம்-தெய்வலோகம், கொடுத்து அருள்வோனே - தந்தருள்பவனே!, திங்கள்-பிறைச் சந்திரனும், ஆர் - ஆத்தி மலரும், கொன்றை-கொன்றைமலரும், மத்தம்-ஊமத்த மலரும், துழாய்-துளவமலரும், துன்று-நெருங்கியுள்ள, செம்

சடா பஞ்சரத்து-சிவந்த சடையாகிய கூட்டில், உறுதோகை-தங்கியுள்ள மயில்போன்ற கங்காதேவியாருடைய, சிந்தையே-கருத்தில் இருப்பவனே!, தென் திசை - தென் திசையிலேயுள்ள, தென்றல் வீசும்-தென்றற்காற்று வீசுகின்ற, பொழில்-சோலையையுடைய, செந்தில்வாழ்-திருச்செந்தூரில் வாழ்கின்ற, செந்தமிழ் பெருமாளே-செந்தமிழுக்குரிய பெருமாளே, ஸங்கம மேவும்-குழும பொருந்திய, பிறப்பு அந்தகாரம் தனில்-பிறப்பாகிய இருட்டிலே, பந்தபாசம் தனில்-கட்டாகிய வினைகளில், தடுமாறி-தடுமாற்றமடைந்து, பஞ்சபாணம் பட-காமனுடைய ஐந்து அம்புகள் தைக்க, புண்பட-மனம் புண்பட்டு, வஞ்சகம் - வஞ்சகத்தையுடைய, பண்பு இல் நற்குணமில்லாத, ஆடம்பரம் பொதுமாதர்-பகட்டையுடைய பொதுமாதர், தங்கள் - தங்களுடைய, ஆலிங்கனம் கொங்கை-தழுவுகின்ற ஸ்தனங்களை, ஆகம்பட-மார்பில் பொருந்த, சங்கைமால் கொண்டு இளைத்து-சந்தேகமும் மயக்கமும் கொண்டு தேகம்வாடி, அயராது-வருந்தாமல், தண்டை-தண்டையும், கிண்கிணி-கிண்கிணியும், சூழ்-சூழ்கின்ற, புண்டரீகம் தனை-தாமரை மலர்போன்ற திருவடிகளை, தந்து-கொடுத்து, நீ அன்பு வைத்து அருள்வாய்-தேவரீர் அன்பை வைத்து அருள்செய்வீராக.

(வி-ரை) தன்னையும் தன் தலைவனையும் ஆன்மா உணராதபடி மறைக்கப்பட்டிருப்பது பிறப்பின் கண்ணே என்பார் 'பிறப்பந்தகாரம்' என்றார். பந்தபாசம் - தொடர்பையுண்டாக்கும் ஆணவம், கன்மம், மாயை என்னும் வினைகள்.

இவற்றின் இயல்பைப் பின்வரும் சிவப்பிரகாசத் திருவிருத் தத்தாலறிக.

'ஏகமாய்த் தவகால எல்லைகளின் மீளும எண்ணரிய
 சத்தியதாய் இருளொளிர இருணட
மோகமாய்ச்செம்பிலுறு களிம்பேய்ப் நசித்துமூலமலமாய
 முழுதினையு மறைக்கும் [றிவு
பாகமாம் வகைநின்று திரோதாயி சத்திபண்ணுதலான்
 மலமெனவும் பகர்வரது பரிந்து
நாகமா நதிமதியம் பொதிசடையா னடிகள் நணுகும்வகை
 கருணைமிக நயக்குந் தானே'

பஞ்சபாணம்-இவை என்பதும் அவற்றின் செயலையும் முன்னாகக் கூறினோம்.

ஆலிங்கனங் கொங்கை - தழுவுதற்குரிய கொங்கை. ஆடம்பரம்-செருக்கு, பெருமகிழ்ச்சி. அயாதல-இளைத்தல. புண்டரீகம் தாமரை; இங்குத் திருவடிகளுக்காயிற்று. கொண்டல் - மேகம் கடலின் நீரைக் கொள்வது என்க் காரணப்பொருள்; கொள் + தல. ஆகண்டலன்-இந்திரன் மத்தம - ஊமத்தைமலர். கங்கையைத் தோகை என்பதற்கு ஏற்பச் சடையைப் பஞ்சரம என்றார். பொன்மயமாய்ச் சிவந்த நிறத்துடன் கூடும்போலும் மிருத்தலின்.

அகத்தியருக்குத் தமிழைச் செவியறிவுறுத்தியதனோடு ஆம் முதற்சங்கத்தில், புலவராய் வீற்றிருந்து தமிழ்ஆராய்ந் தமையாலும் 'செந்தமிழ்ப் பெருமானே' என்றார். (47)

குமரகோட்டம்

48 தனனதாத் தத்ததந்த தனனதாத் தத்ததந்த
தனனதாத் தத்ததந்த-தனதான

அறிவிலாப் பித்தருன்ற னடிதொழாக் கெட்டவஞ்ச
ரசடர்பேய்க் கத்தர்நன்றி யறியாத
அவலர்மேற் சொற்கள்கொண்டு கவிகளாக் கிட்டுபுகழ்ந்
தலைவரா மத்தித்திரிந்து பொருள்தேடிச்
சிறிதுகூட் டிக்கொணர்ந்து தெருவுலா வித்திரிந்து
தெரிவைமார்க் குருகிச்செரிந் தவமேயான்
திரியுமாக் கத்துநிந்தை யதனைமாற் றிப்பரிந்து
தெளியமோட் சத்தையென்று அருள்வாயே
இறைவர்மாற் றற்றசெம்பொன் வடிவம்வேற் றுப்பிரிந்து
இடபமேற் கச்சிவந்த வுமையாடன்
இருளைநீக் கத்தவஞ்செய் தருகுநோக் கிற்குழைந்த
விறைவர்கேட் கத்தகுஞ்சொ லுடையோனே
குறவர்கூட் டத்தில்வந்து கிழவனாய்ப் புக்குநின்று
குருவியோட் டித்திரிந்த தவமானைக்
குணமதாக் கிச்சிறந்த வடிவுகாட் டிப்புணர்ந்த
குமரகோட் டத்தமர்ந்த பெருமாளே.

(இ-ள்.) இறைவர்-சிவபெருமானது, மாற்று அற்ற செம்பொன் - மாற்றுக் காணமுடியாத சிறந்த சிவந்த பொன் போன்ற, வடிவம் வேறுபிரிந்து - திருவுருவத்தினின்றும் வேறுபட்டுப் பிரிந்து, இடபம் மேல் - இடபவாகனத்தின் மேலூர்ந்து, கச்சிவந்த உமையாள்தான் - காஞ்சிபுரத்துக்கு

வந்த உமாதேவியாருடைய, இருளை நீக்க - மாயையை
ஒழிக்க, தவம் செய்து அருள - தவத்தைச் செய்து முடிக்க,
நோக்கி குழைந்த - அத்தவச் செயலைக்கண்டு உருகிய, இறை
வர் கேட்க தரும் - சிவபெருமான் கேட்கத் தக்க, சொல்
உடையோனே - உபதேசமொழியை உடையவனே, குறவர்
கூட்டத்தில வந்து - குறவருடைய கூட்டத்திலே சென்று,
கிழவனாய்ப் புக்கு நின்று - கிழவனாகப் போய் நின்று, குருவி
ஓட்டி திரிந்த - குருவியைக் கவணக் கல்லால் ஓட்டிப் புன
மெல்லாம் திரிந்திருந்த, தவம மானை - பல பிறப்புகளிலே
செய்த தவத்தை யுடைய மான் போன்ற இயல்புடைய
வள்ளிநாயகியை, குணம் அது ஆக்கி - தனது கருத்துக்கு
இசையும்படி செய்து, சிறந்த வடிவு காட்டி - தன்னுடைய
மேன்மையான உண்மை வடிவத்தைக் காட்டி, புணர்ந்த -
சேர்ந்த, குமரகோட்டத்து அமர்ந்த பெருமாளே - குமர
கோட்டத்தில் எழுந்தருளிய பெருமானே, அறிவு இலா
பித்தர் - அறிவில்லாத பித்தர்கள், உன்தன் அடிதொழா -
உன்னுடைய திருவடிகளை வணங்காத, கெட்ட வஞ்சர் -
தீயகுணமுடைய வஞ்சகர்கள், அசடர் - குற்றமுடையவர்,
பேய்க் கத்தர் - பேய்போன்ற பொய்யர், நன்றி அறியாத அவ
லர்மேல - ஒருவர் தமக்குச் செய்த நன்மையை உணராத
வீணர் ஆகிய இவர்களின்மேல், சொற்கள் கொண்டு - அரிய
சொற்களைத் தெரிந்தெடுத்து, கவிகள் ஆக்கி - பாட்டுக்க
ளாகப் புனைந்து, புகழ்ந்து - வியந்து, அவரை வாழ்த்தி
திரிந்து - அவரை வாழ்த்தித் திரிந்து, பொருள் தேடி -

பொருளைச் சம்பாதித்து, சிறிது கூட்டி கொணர்ந்து-சிறிது தொகை சேர்த்துக் கொண்டுபோய், தெரு உலாவி திரிந்து-தெருக்களிலே உலாவித் திரிந்து, தெரிவை மார்க்கு சொரிந்து - விலைமகளிருக்கு அளவற்ற தொகையாகக் கொட்டிக்கொடுத்து, அடியேன்-வீணாக நான். திரியும மார்க்கத்து - திரிகின்ற தீயவழியிலுள்ள, நிந்தை அதனை மாற்றி-பழிப்பையொழித்து. பரிந்து-அன்புகொண்டு, தெளிய-தெளிவடையும்படி. மோக்ஷத்தை வீட்டின்பத்தை, என்று அருள்வாய்-எக்காலத்திலே அருளசெய்வாய்? எ-று

(வி-ரை) நினை வணங்காதார்மேல் கவிபாடுதல் பொருந்தாத சொற்களைக் கொண்டு கவிகள்போலச் செய்யப் படும் போலிக்கவிகளை என்பார் 'சொற்கள் கொண்டு கவிகளாக்கி' என்றார் கடவுளை வணங்காதார் வீடுபேறு அடையாராய்ப் பிணி மூப்புப்பட்டு இறப்பாராதலின் அவர் பிறவி பயனற்றதென்பார் 'அவலர்' என்றார் இவ்வாறே **ஸ்ரீமத் அப்பர்சுவாமிகளும்** கூறுதல் காண்க

'சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
  தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவா ரவர்செல்வம் மதிப்போ மல்லோம்
  மாதேவர்க் கேகாந்த ரல்லாராகில்
அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோயரா
  யாவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகி
  லவர்கண்டீர் நாமவணங்குங் கடவுளாரே.'

புகழ்த் தகாதாரைப் புகழ்ந்து அவர் கொடுக்கும் சிறு தொகையை ஒன்றாகக் கூட்டிச் சேர்த்துப் பெண்களுக்கு மொத்தமாகக் கொடுக்கின்றேன் என்பது தோன்ற, 'சிறிது கூட்டிக் கொணர்ந்து தெரிவைமார்க்குச் சொரிந்து' என்றார். கொணர்ந்து என்பதற்குக் கொணர் பகுதி. சொரிதல்-மிகுதியாகக் கொடுத்தல். இறைவர்-சிவபெருமான். அவர் வடிவம் பொன்வடிவமாதலின் 'இறைவர் மாற்றறு செம்பொன் வடிவம்' என்றார். இதனை 'பொன்போல மிளிர்வதோர் மேனியினீர்' 'பொன்னார் மேனியனே' 'பொன் வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் மேனி பொலிந்திலங்கும்' என்று வரும் திருவாக்குகளால் அறிக. உமாதேவியார் சிவபெருமானை நோக்கிக் காஞ்சிபுரத்தின்கண் தவஞ்செய்த காலத்துச் சிவபெருமான் அவரை யாட்கொள்ளத் திருவுளங்கொண்டு வேகவதியாற்றில் நீர் பெருகும்படி செய்ய, அதனைக்கண்ட உமாதேவியார் தாம் புதிதாகப் பிரதிட்டித்துப் பூசித்த சிவலிங்கப்பெருமானுக்கு ஊறு வருமென்றெண்ணி அவரைத் தமது ஸ்தனங்களாரத் தழுவினார். அதனால், அப்பெருமான் திருமேனி குழைந்து, அம்மையார் முலைச்சுவட்டையும் வளைச்சுவட்டையும் பொருந்தினன் என்பது **காஞ்சிப் புராணம்.**

இறைவர் கேட்கத் தகுஞ்சொல் என்றது பிரணவச் சொல்.

முருகப்பெருமான் வள்ளிநாயகியார் அன்பைப்பெறும் பொருட்டு முது[illegible] திருவிளையாடல்கள்புரிந்த

வரலாற்றைக் கூறுமுகத்தான் அவரது அன்புக்கு எளிவரும் பெருமையை எடுத்துக் கூறினார்.

குறவர் குலத்தில் பிறந்தாரேனும் முற்றவப்பேறுடையவராய்த் திருமாலின் திருமகளாகச் சிறந்தாராதலின் வள்ளிநாயகியாரைத் 'தம்மான' என்றார்.

சிறந்த வடிவு தனது மை வடிவம் குமரன் + கோட்டம் என்பது 'சில விகாரமாம் உயர்திணை' (நன்-சூத். 159) என்ற விதியினால் குமரகோட்டம் எனப் புணர்ந்தது. (48)

சோலைமலை

49 தனனதந்த தத்தான தனனதந்த தத்தான
தனனதந்த தத்தான-தனதான.

களவுகொண்டு கைக்காசின் அளவறிந்து கர்ப்பூர
களபதுங்க வித்தார முலைமீதே
கலவியின்பம் விற்பார்கள் எவ்வியல்பங்களைப்பாடு
கவிதெரிந்து கற்பார்கள் சிலர்தாமே
உளநெகிழ்ந்த சத்தான வுரைமறந்து சத்தான
உனையுணர்ந்து கத்தூரி மணநாறும்
உபயபங்கயத்தாளில் பயமென்றுனைப்பாடி
யுருகிநெஞ்சு கற்றேதில் இழிவாமோ
அளவில்வன்கவிச்சேனை பரவவந்த சுக்ரீவ
அரசுடன்கடற்றாவி எழுவேபோய்
அடலிலங்கை சுட்டாடி நிசிசரன்த சகரீவ
மறவொரம்பு தொட்டார்தம் மருகோனே
வளருமந்தரச்சோலை மலையுகந்த முற்பாலை
வனசர்கொம்பினைத்தேடி ஒருவேட

வடிவுகொண்டு பித்தாகி யுருகிவெந்த ழறகானில
மறவர்குன்றி னிற்போன பெருமாளே.

(இ-ள்) அளவு இல் வன கவிசேனை-அளவில்லாத வலிமையுடைய குரங்காகிய சேனை, பரவ - பரவும்படி, வந்த சுகரீவ அரசுடன்-தன்னைவந்துசேர்ந்த சுக்ரீவ மன்னனுடன் கடல தூளி எழ போய - கடலிலே தூள் உண்டாகும்படி அதனைக் கடந்துசென்று, அடல இலங்கை சுட்டு ஆடி-வலிமையான அரண்கள் பொருந்திய இலங்கையை எரித்துச் சண்டையாகிய விளையாட்டைச்செய்து, நிசிசரன-அரக்கனாகிய இராவணனுடைய, தசம கிரீவம் அற - பத்துத் தலைகளும் அறுபடும்படி, ஓர அம்பு-ஒப்பற்ற கணையை, தொட்டார்தம மருகோனே-விட்டவராகிய இராமபிரானுடைய மருகனே!, வளரும மந்தரம் சோலைமலை - ஆகாயத்தை அளாவி வளர்கின்ற மந்தரமலையையும சோலைமலையையும், உகந்த-விருமபி எழுந்தருளியிருக்கும், முன் பாலை முன்னொருகாலத்தில பாலைநிலத்தில், வனசர கொம்பினை தேடி-வேடர்மகளாகிய வள்ளியம்மையாரைத் தேடி, ஒருவேடன் வடிவுகொண்டு-ஒப்பற்ற வேடனுடைய உருவத்தைத் தாங்கி, பித்து ஆகி உருகி-காம மயக்கங்கொண்டு மனங்கரைந்து, வெம் தழல கானில-வெம்மையையுடைய நெருப்புப்போலும் சுடுகின்ற காட்டில், மறவர் குன்றினில் போன பெருமாளே-வேடர் வாழ்கின்றமலைச்சாரலிற் சென்ற பெருமானே!, களவுகொண்டு-வஞ்சகமான தொழில தெரிந்தும், கைகாசின் அளவு அறிந்து-கையிலேயுள்ளபொருளின்

அளவை யுணர்ந்தும், கர்ப்பூரம் களபம் துங்கம்-கர்ப்பூரமு கலந்த கலவைச் சாந்தைப் பூசிய உயர்ந்த, வித்தார முலை மீது-பெரிய தனங்களின்மேலே, கலவி இன்பம் விடயர்கள்-போகமாகிய இன்பத்தை விரும்புவோர்களாகிய பொதுமகளிருடைய, அவயவங்களை-உறுப்புக்களை, பாடுகவி தெரிந்து கற்பார்கள்-பாடுகின்ற பாட்டுக்களை அறிந்து கற்றுக்கொள்வார்கள், சிலர் தாம்-சிலர், உளம் நெகிழ்ந்த- மனம் உருகிய, அசத்தான உரை மறந்து-பயனற்ற சொல்லை மறந்து, சத்தான உனை உணர்ந்து-உண்மைப் பொருளாகிய தேவரீரை மெய்ஞ்ஞானத்தால் அறிந்து, கத்தூரி மணம் நாறும்-கத்தூரியின் மணம்வீசுகின்ற, உபயம் பங்கயம் தாளில்-இரண்டாகிய தாமரை மலரை ஒத்த திருவடிகளில், அபயம் என்று உனைப்பாடி-அபயமென்று தேவரீரைக் குறித்து, நெஞ்சு உருகி-உள்ளம்நெகிழ்ந்து, சற்று ஓதில்-சிறிது கவி பாடித் துதிப்பார்களாயின், இழிவு அமோ - அவர்களுக்கு இகழ்ச்சி உண்டாகுமோ? எ-று.

(வி-ரை) பொதுமாதர் பொருளளவாகப் போகத்தைத் தருவாராதலின் 'கைக்காசின் அளவறிந்து' என்றார் இவரைப் பொருட்பெண்டிர் என்பதும் அதுபற்றியே என்க. அத்தகைய மாதர்களது உறுப்புக்களைப் புகழ்ந்து கவிபாடுவோர் தேவரீரது திருவடியைப் பாடுவாராயின் அவருக்கு இழிவாகுமோ என்று அவர்தம் புன்செயலை இகழ்ந்து கூறினர். உரைமறந்து - சொல்லற்று. கவிசசேனை - குரங்குச் சேனை. தசக்கிரீவன்-இராவணன்; பத்துத் தலையையுடைய

வன், கிரீவம்-கழுத்து தொட்டார் - விட்டவர். வஞ்சர் - வேடர். மாதர்மேல் மையலை வைத்து அவரைப் பாடிப் புகழ்ந்து பெறுவது சிறிதுகாலம் நிற்பதாகிய சிற்றின்பமே என்னும் அதனைக் கண்கூடாகத் தெரிந்துவைத்தும் அவரைப் புகழ்வோரும் உள்ளோரென்றும் அன்னார் எக்காலத்தும் எவ்விடத்தும் அநுபவிப்பதாகிய பரிபூரண சுகத்தை அடைய வேண்டுமாயின் தேவரீருடைய திருவடிப் புகழ்ச்சியையே கூற வேண்டும் என்றுங் கூறினார். இக்கருத்துப்பற்றியே,

'தந்தையுங் கிளையார் தங்கள்மேல் வைக்குந்
தயாவை நூறாயிரங் கூறிட்டு
அதிலங் கொருகூறுன் னடிமிசை வைத்தியேல்
அமருலகளிக்குநின் பெருமை'

என்றருளிச் செய்தார் **கருவூர்த்தேவரும்**. இவ்வாறே,

'மங்கையர்கள் மேனிமிசை வைத்திருக்கும் ஆசையிலோர்
பங்குசெய்து நூற்றிலொரு பங்கெடுத்துக—கங்கையணி
வேணியரன் பாதார விந்தத்தே வைத்தக்கால்
காணலாங் காணாக் கதி'

என ஒரு பழம்பாட்டு வருதலும் காண்க. (49)

பொது

50 தத்த தனதன்ன தான தானதன
தத்த தனதன்ன தான தானதன
தத்த தனதன்ன தான தானதன-தனதான.

எத்தி இருகுழையை மோதி மீனமதின்
முட்டி இடறியம தூதர் போலமுகில்
எட்டி வயிரகர வாளை வேலமுனையை எதிர்சீறி

எத்தி சையினுமொரு காய ராஜனமிக
 வெற்றி அரசுதனை ஆள வீசி அடல
 எற்றி இளைஞருயிர் கோலு நீலவிழி மடமாதர

வித்தைதனிலுருகி ஆசை ஆகி அவர
 கைக்குள மருவுபொரு ளான ஆகுமவை
 மெத்தைதனிலுருகி மோகமாகிவிட அதனமேல

வெட்க மிலைநடவு மேகு மேகுமினி
 வற்றா வரை அழைபு மாதரெனமுனி
 விட்ட படிதிகட மநேச ஆசைகெட அருளவாயே

ஒத்த வரிகமுகு வாளை தாவுபுனல
 அத்தி நகரமர சான வாளநிருபன
 ஒக்க நினைவுமுனி லாமல வாகுபெல நிலைகூர

உற்ற தருமனொடு வீமன வேலவிசயன
 வெற்றி நகுலசக தேவர தோதனிலும
 ஒத்து முடுகிவிடு பாகன மாளமரில அசுரேசன்

பத்து முடிகளது களாக வாகுஇரு
 பத்து மொருகணையில வீழ நேரவுணர
 பட்டு மடியஅமர மோது காளமுகில மருகோனே

பச்சை மயிலவரு வீர வேலமுருக
 சுட்ட நிருதர்குல கால வானவர்கள
 பத்தி உடனடியில வீழ வாழ்வுதவு பெருமாளே.

(இ-ள்) வரி ஒத்த கமுகு-கீற்றுக்கள் ஒன்றற்கொன்று இடை வெளியால் ஒத்துள்ள கமுகமரத்தை, வாளை தாவு புனல்-வாளைமீன் தாவுகின்ற நீர் வளமுடைய, அத்திநகரம் அரசு ஆன வாள்நிருபன்-அஸ்தினபுரிக்கு வேந்தனை வாட்

போரிற் சிறந்த துரியோதனனுக்கு, ஒக்கும் நினைவுமுன் நிலாமல்-தன் உதவியைப்பெற வேண்டுமென இசைந்த எண்ணத்துக்கு முரண்பட்டுத் தோன்றாமல், வாக்குபொலம் நிலைகூற-அவனுடைய தோள்வலியின் நிலைமையினை வீம னுக்கு எடுத்துச் சொல்லி, உற்ற தருமன் அடலவீமன்- சாந்தம் பொருந்திய தருமநந்தனனுக்கும் போரைச் செய் யும் வீமசேனனுக்கும், வேல்விசயன் - படைத்தொழிலில் வல்ல அருச்சுனனுக்கும், வெற்றிநகுல சகதேவர்-வெற்றியை யுடைய நகுலனுக்கும் சகதேவனுக்கும், தேர்தனில் ஊர்ந்து முடுகி விடுபாகன-தேரிலே மனமகிழ்ந்து செலுத்துகின்ற சாரதியும், வாள் அமரில் அசுரேசன்-வாட்போரிற் சிறந்த வலிய இராவணனுடைய, பத்துமுடிகள் தூள் ஆக பத்து முடிகளும் பொடியாகவும், வாகு இருபத்தும ஒருகணையில வீழ-இருபது தோள்களும் ஒப்பற்ற அம்பொன்றினால் நிலத்திலே விழவும், நேர அவுணர் பட்டுமடிய - போரில் எதிர்த்துவந்த இராக்கதர்கள் அம்பாலே தாக்கப்பட்டு இறக்கவும், அமர் மோது காளமுகில மருகோனே-சண்டை யில் தாக்குகிற கரிய மேகம்போலும் நிறத்தையுடைய திரு மாலுக்கு மருமகனே!, பச்சைமயிலில் வருவீர-பச்சை மயி லின்மேல ஊர்ந்துவரும் வீரனே!, வேல முருக-வேற்படை யையுடைய முருகனே!, துட்டநிருதர் குலகால-தீயோரா கிய அரக்கர் கூட்டத்துக்கு யமனைப் போன்றவனே!, வானவர்கள் பக்தியுடன் அடியில வீழ-தேவர்கள் அன்போடு திருவடிகளிலே வணங்க, வாழ்வு உதவு பெருமாளே-

பேரினபப பெருவாழவைத தந்தருளும் பெருமானே', இரு குழையை எதிர்மோதி-இரண்டு குண்டலங்களையும் தாக்கி, மீனம அதில முட்டி இடறி-சேலமீனின் மேல வீழ்ந்து முட்டி அதனைத்தள்ளி, யமதூதர்போல, முகில எட்டி-யம தூதுவர்போலக் கோபமிருந்து மேகம்போன்ற கூந்தலின் அருகு சென்று, வயவர் கரம் வாளை-வீரர்கரத்தே வைத்த திருக்கும வாளையும், வேல் முனையை-வேலின் நுனியையும், எதிர் சீறி எதிரே கோபித்து, எத்திசையினும் - எல்லாத் திக்குகளிலும, ஒரு காமராஜன் மிக வெற்றி அரசு தனை ஆள ஒப்பற்ற மனமதன வெற்றியோடு கூடிய தனது அரசாட்சியைச் செலுத்தும்படி, வீசி அடல எற்றி-வீசிச் சண்டையிலகொன்று, இளைஞர் அருமை உயிர் கோலும்-மைந்தர்களுடைய அரிய உயிரை வளைத்துக் கொள்ளும், நீலம விழி மடம் மாதர்-நீலநிறம் பொருந்திய கணகளையுடைய மடப்பம பொருந்திய பெணகளுடைய, விதத்தனில உருகி-மாயவிதங்களில மனமுருகி, ஆசை ஆகி-ஆசை மிகுந்து, அவர் கைக்கு உள-அவருடைய கைக்குள சிக்கி, மருவு பொருள ஆன அதும்வரை - கையில் பொருந்திய பொருள் முடியும வரையில, மெத்தைதனில உருகி மோகம ஆகிவிட அதன்மேல-மெத்தையின்மேல மனமுருகி மோகம மிகுதலினால, வெட்கம இலை நடவும் ஏகும் ஏகும் - பொருளிலாமல இங்கே இருக்கின்றீரே உமக்கு வெட்கமில்லையா நடவுங்கள்; போங்கள்; போஙகள், இனி மறறவரை அழையும் மாதரே என - இனிமேல பொருளுள்ள மற்றவர

களை அழையுங்கள் மாதர்களே என்று சொல்லி, முன்விட்ட படிறிகள் தம-முன்னே தெருவிலே விட்ட வஞ்சகிகளின் மேலுள்ள, நேசம ஆசைகெட அருளவாய-மிக்க ஆசையானது அழிய எனக்கு அருளபுரிவாய எ-று.

(வி-ரை) வயவா-வீரா. முகில-கூந்தல. அடல-போர். கோலுதல-கொள்ளுதல. மடமாதா - மடபபததையுடைய பெணகள. மடபபம - நொளுததககொணடு கொணடது விடாமை. விதசை-பொயயாகக காட்டும செயலகள. ஏகும் ஏகுமென்ற அடுக்கு விரைவுப பொருளில வநதது படிறிகள்-வஞ்சனையுடையவாகள. வரிகமுகு-கீறறையுடைய பாக்குமரம நீாவளம் மிகுதி கூறுவாா 'வரிகமுகு வாளை தாவுபுனல' என்றாா

'வெள்ளத்தடங காசசினைவாளை வேரிககமுகின் மீதேறி
துள்ளி முகிலைக கிழிதது மழைததுளியோ டிறங்குமசோணாடா'

என்று பிறருங் கூறியது காணக.

நிருபன-அரசன. வாகுபெல நிலை - தோள்வலியின் தன்மை. மலயுததத்தில சிறநதவனாதலின 'அடலவீமன' எனறும், படைக்கலப பயிறசியில மிககோனாதலின 'மேலவிசயன' எனறும, கூறினா. அாசசுனன தேரிலேயன்றி நகுல சகாதேவா தோகளிலேயும் பாகனாக அமாநது தேரைச் செலுத்தினது அவனது பெருங்கருணையே என்பாா, 'நகுல சகதேவா தோதனிலும ஒருங்குமுடுகிவிடும பாகன்' என்றாா. உம்மை இழிவுசிறப்பு. முடிகள் என்புழி முற்றும்மை விகாரததாற றொக்கது. சந்தம் நோக்கி வாகிரு எனப

புணர்ப்பாலது வாகு-இரு என புணராது நின்றது. காள முகில்-கருமேகம்; இங்கு அந்நிறமுடைய இராமபிரானைக் குறித்தது. நிருதர் குல காலன்-அரக்கருடைய குலத்துக்கு இயமனைப் போன்றவன். (50)

பொது

51 தனத்ததன தனத்ததன தனத்ததன தனத்ததன
தனத்ததன தனத்ததன-தனதான.

குறிப்பரிய குழற்குமதி நுதற்குமுருவ விற்குமிரு
குழைக்குமவடு விழிக்குமெழு குமிழாலும்
கொடிப்பவள இதழுக்குமிரு சுடர்த்தரள நகைக்குமமு
தினுக்குமிக உறத்தழுவு குறியாலும்
அறப்பெரிய தனக்குமன நடைக்குமினி னிடைக்குமல
ரடிக்குமிள நகைக்குமுளம் அயராதே
அகத்தியனொ டுரைத்தபொரு ளளித்தருளி அரிபிரம
ரளப்பரிய பதக்கமலம் அருள்வாயே
கறுத்தடரு மரக்கரணி கருக்குலைய நெருக்கியொரு
கணத்திலவர் நிணத்தகுடல் கதிர்வேலால்
கறுத்தருளி அலக்கணுறு சுரர்க்கவர்கள் பதிக்குரிமை
அளித்திடரை அறுத்தருளும் அயில்வீரா
செறுத்துவரு கரித்திரள்கள் திடுக்கிடவல மருப்பையரி
சினத்தினொடு பறித்தமர்செய் பெருகானில்
செலக்கருதி அரக்கொடிய சிலைக்குறவர் கொடித்தனது
சிமிழ்த்தனமு னுறத்தழுவு பெருமாளே.

(இ-ள்) கறுத்து அடரும் அரக்கர் அணி-கோபித்துப் போரில் நெருங்குகின்ற இராக்கதருடைய கூட்டம், கருகுலைய நெருக்கி-ஒருங்குகெடும்படி துன்புறுத்தி, ஒரு கணத்தில-ஒரு கணப்பொழுதினுள், அவர் நிணத்தகுடல-அவருடைய கொழுப்புள்ள குடலை, கதிர்வேலால்-ஒளியையுடைய வேற்படையினால், கறுத்து அருளி - கோபித்தருளி, அலக்கண் உறு சுரர்க்கு-அவரது தீய செயலினால் துன்பப்படுகின்ற தேவர்களுக்கு, அவர் பதிக்கு உரிமை அளித்து-அவர்கள் தலைவனாகிய இந்திரனுக்கு அமராவதியின் அரசுரிமையைத் தருதலால், இடரை அறுத்தருளும் மயில்வீரா-வருத்தத்தை ஒழித்தருளும் மயில்வீரனே!, செறுத்து வரு கரி திரள்கள் திடுக்கிட-கோபித்துவரும் யானைக்கூட்டங்கள் திகிலடைய, வலமருப்பை அரிசினத்தினொடு பறித்து-வலிய கொம்புகளைக் கோபத்தினோடு ஒடித்து, அமர் செய் பெரு கானில் செல கருதி-போர் செய்கின்ற பெரிய காட்டிலே போக நினைத்து, அக்கொடிய சிலை குறவர்-மிகவும் கொடிய தொழிலையுடைய வில்லைத் தாங்கிய வேடர்களுக்கு, கொடியனது சிமிழ தனம்-மகளாகிய கொடிபோலும் மேன்மையுடைய வள்ளிநாயகியாரின் கச்சைக் கட்டிய ஸ்தனங்களை, முன்உற தழுவு பெருமாளே-முன்னே சென்று தழுவுகின்ற பெருமானே!, குறிப்பு அரிய குழற்கும் - உவமை இன்னதென்று குறித்துச் சொல்லுதற்கு அருமையான கூந்தலாலும், மதிநுதற்கும்-பிறையை ஒத்த நெற்றியாலும், புருவம் விலுக்கும்-வில்போன்ற புருவத்தாலும், இரு குழைக்கும்-

இரண்டு குண்டலங்களாலும், வடு விழிக்கும் - மாம்பிஞ்சை யொத்த கண்களாலும், எழு குமிழாலும் - தோன்றுகின்ற குமிழம்பூப் போன்ற மூக்காலும், கொடிபவளம் இதழ்க்கும்- கொடியாகப் படரும் பவழம்போலும் சிவந்த இதழாலும், மிகு சுடர் தரளம் நகைக்கும்-மிகுந்த ஒளியையுடைய முத்தைப்போன்ற பற்களாலும், அமுதினுக்கும் மிகஉற்ற குழவு குறியாலும்-அமுதத்தினுக்கும் சுவையில் மிகுந்த புணர்ச்சிக் குறிப்பாலும், அற பெரிய தனக்கும்-மிகவும் பெரிய ஸ்தனங்களாலும் அன்ன நடைக்கும்-அன்னம்போன்ற நடையாலும், மின்னின் இடைக்கும்-மின்னலையொத்த இடையாலும், மலர் அடிக்கும்-தாமரை மலரை நிகர்த்த அடிகளாலும், இளமை நகைக்கும் - புன்னகையாலும், உளம் அயராது- மனம் சோர்வடையாமல், அகத்தியனொடு உரைத்த பொருள் அளித்தருளி-அகத்திய முனிவனுக்கு உபதேசித்த பிரணவப் பொருளை உபதேசித்தருளி, அரி பிரமர் அளப்பு அரிய பதம கமலம் அருள்வாய்-திருமாலுக்கும் பிரமனுக்கும் அளவிடமுடியாத பெருமையையுடைய திருவடித் தாமரைகளை எனக்கு அருள் செய்வாய் எ-று.

(வி-ரை) மதி இரண்டு பிறை. வடுவிழி-மாம்பிஞ்சின் பிளவையொத்த கண். குமிழ்-மூக்கு; ஆகுபெயர். தரள நகை-முத்துப்போல வெண்மையான பல். அமுது-இதழூறல். தனக்கும் என்புழி அத்துச் சாரியை விகாரத்தால் தொக்கது. மின்னின் இடை-மின்னலைப்போல் தோன்றி மறையும் இடை. இடை மிகநுண்ணியதாக இருத்தலின் உண்டோ இல்லையோ

என்று ஐயங் கொள்ளுமாறு மின்னற் கொடிபோல ஒருகால் தோன்றியும் பிறிதொருகால் தோன்றாமலும் இருக்கும் என்பது பற்றி மின்னலை மகளிர் இடைக்கு உவமையாகக் கூறுவது புலவர் மரபு. இதுபற்றியே **நிருதுங்கதேவரும்**,

'அங்கைபோல் வயிறணிந்த வலஞ்சுழிய பைங்கொடியும்
கங்கையின் சுழியலைக்குங் கண்கொள்ள வுடங்கிடையை
யுண்டென்று தமர் மதிப்பர் நோக்கினார் பிறரெல்லா
முண்டில்லை யென்னைய மல்லதென வுணர்வரிதே'

எனக் கூறுவாராயினர்

அகத்தியனொடு உரைத்தபொருள் - அகத்தியருக்கு உபதேசித்த பிரணவப்பொருள் 'அகத்தியனுக்கு ஒத்து உரைக்கும் குருவே' என்றருளிச் செய்தார் **அருணகிரி சிவாசாரியரும்.** கறுத்தல்-கோபித்தல்; கறுப்பு என்னும் உரிச்சொல்லடியாகப் பிறந்த தொழிற்பெயர், கறுப்பும் சிவப்பும் வெகுளிப்பொருள (தொல்) அலக்கண்-துன்பம் செறுத்து வரு கரித்திரள்கள் - கோபித்து வரும் யானைக்கூட்டங்கள் அரிசினம்-கோபம் 'அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும்' என்ற **ஆழ்வார்** திருவாக்கினும் அரிசினம் இப்பொருட்டாதல் காண்க. அறக்கொடிய சிலைக்குறவர்-மிகவும் கொடிய வில்லையுடைய குறவர். கொடிய சிலைக்கு என்றது உடையான தொழில் உடைமையின்மேல் ஏற்றிக் கூறப்பட்ட உபசாரவழக்கு. சிமிழ் ஸ்தனம் - சிமிழை ஒத்த ஸ்தனம். உறத்தழுவுதல் பொருந்த அணைத்தல். (51)

வேளூர் (வைதீசுவரன் கோயில்)

52 தனந்த தத்தன தானான தானன
தனந்த தத்தன தானான தானன
தனந்த தத்தன தானான தானன-தநததான.

நிறைந்த துப்பிதழ் தேனூறல் நேரென
மறந்த ரித்தக ளாலால நேரென
நெடுஞ்சு ருட்குழல் சீமூத நேரென நெஞ்சினமேலே

நெருங்கு பொற்றன மாமேரு நேரென
மருங்கு நிட்கள ஆகாச நேரென
நிதம்ப முக்கணர் பூணார நேரென நைந்துசீவன்

குறைந்து திம்பட வாய்பாடி யாதர
வெழுந்த மைத்துனை மேல்வீழு மாலொடு
குமண்டை யிட்டிடை சோராவி டாயில மைந்துநாபி

குடைந்து ளேபுகு மாமாய வாழ்வருள்
மடந்தை யாகமொ ருகோமள மாகிய [வேன்
குரங்கை பொத்தழ லேயேனை யேலயமென்று சேர்

மறைந்த சுக்ரிப போராட வேயொளி
யிருந்து நற்றுய வாய்மீள வேயவன்
மனங்க ளித்திட மாமேரு நேரெனு நெஞ்சவாலி

மதஞ்செ குத்திட வீரான தோர்கணை
வளைந்த விற்சர மீதேவ வானரம்
வளைந்து சுற்றினு மேயோடி யாடிய ணாங்கிமேவ

அறைந்த மைத்தநு மாறோடு மாகடல்
வரம்ப டைத்ததின் மேலேறி ராவண
னரங்கு லைத்தெதிர் போராடு நாரணன மைந்தனான

அநங்கன் மைத்துன வேளே கலாபியின்
விளங்கு செய்ப்பதி வேலா யுதாவிய
னலங்கை யப்பதி வாழ்வான தேவர்கள் தம்பிரானே.

(இ-ள்) மறைந்த சுக்ரீபர் போராட-வாலிக்கு முன்னிற்கலாற்றாது மறைந்த சுக்ரீபன் சண்டை செய்யவும், ஒளி இருந்து நலத்தயவாய் மீள - ஒளித்திருந்து சிறந்த இராமபிரான் கருணை தனக்குண்டாக மீளவும், அவன் மனம் களித்திட-அவனுடைய மனம் மகிழ்ச்சி அடையவும், மாமேரு நேர் எனும் நெஞ்சம் வாலி-பெரிய மேருமலைக்கு நிகரென்று சொல்லும் நிலைகலங்காத மனத்தையுடைய வாலியினுடைய, மதம் செகுத்திட - செருக்கை அழிக்க, வீறு ஆனது ஓர் கணை-மேன்மைபொருந்திய ஒப்பற்ற அம்மை, வளைந்த வில் சரம்மீது ஏவ-வளைந்த வில்லினது போக்கிலே விட, வானரம் வளைந்து சுற்றினும் ஓடி ஆடி வணங்கி மேவ-குரங்குகள் வளைந்து சுற்றிக்கொண்டும் ஓடியும் ஆடியும் வணங்கிக்கொண்டு இருப்ப, அறம் தழைத்து-தருமமானது செழிக்க, அநுமானோடு மாகடல் வரம்பு அடைத்து-அநுமானுடன் பெரிய கடலின் கரையைக்கட்டி, அதின்மேல் ஏறி-அக்கரையின் மீது சென்று, இராவணன் அரண் குலைத்து-இராவணனுடைய காவல்களை அழித்து, எதிர்போராடு நாரணன்-எதிர்த்துச் சண்டைசெய்யும் திருமாலின், மைந்தன் ஆன அனங்கன் மைத்துனன் வேளே-மன்மதனுக்கு மைத்துனனான முருகனே!, கலாபியின் விளங்கு செய்ப்பதி வேலாயுதா-மயிலின்மேல் விளங்குகின்ற

வயலூரிலவாழும வேலவனே', வியன் நலம் கயம்பதிவாழ்வு ஆன தேவர்கள் தம்பிரானே-அகன்ற நன்மையுடைய திருவானைக்காவில் வாழ்வுபெற்றுநதிய தேவர்கட்குத்தலைவனே', நிறைந்த துப்பு இதழ ஊறல-செம்மை முற்றுப்பெற்ற பவளத்தை ஒத்த உதட்டினது ஊறல். தேன நேர் என-தேனுக்கு ஒப்பாகுமென்றும், மறம தரித்தகண் - கொலையைத் தமயிடத்தே பெற்றுள்ள கணகள், ஆலாலம் நேர் என-ஆலகால விஷத்துக்கு ஒப்பாகுமென்றும், நெடும்சுருள் குழல-நீண்ட சுருண்ட கூந்தல், சீமூதம் நேர் என-நீருண்ட மேகத்தை ஒக்குமென்றும், நெஞசினமேல நெருஙகு பொனதனம்-மார்பின்மேலே ஒன்றோடொன்று நெருக்கமாக வளர்ந்துள்ள பொலிவுமை வாயநத ஸ்தனஙகள், மாமேரு நேர் என-பெரிய மேருமலையை ஒககுமென்றும், மருஙகு நிட்கனம் ஆகாசம் நேர் என இடை அருவமாகிய ஆகாயத்தை ஒக்குமென்றும, நிதமபம் முககணா பூணாரம் நேர் என-கடித்டபிரதேசம்மூனறுதிருககண்களையுடைய சிவபெருமான் சூடியுள்ள ஆபரணமாகியபாம்மை ஒக்குமெனறும் புகழ்ந்து சொலலி, சீவனைநைநது-உயிர் வருந்தி, குறைந்துஇதம்பட-ஊக்கம் குறைநது இன்பம் உணடாக, வாய் பாடி-வாயால் பாடி, ஆதரவு அழிந்து-ஆசை கெட்டு, அழைத்து அணைமேல் வீழ்ப் மாலொடு - அழைத்துப் படுக்கையின் மேல் விழுகின்ற மையலுடன், குமண்டை இட்டு - மண்டியிட்டு,உடைசோரா-ஆடைநெகிழ்ந்து, விடாயில்அமைந்து-இளைதது, காபி குனடந்து இளைப்புஉறும் மாமாயம்வாழ்வு

அருள்-வலிமையுள்ள உந்தியென்னும் மடுவில் திளைத்து இளைப்பை அடைகின்ற பெரிய மாயமான வாழ்வைக் கொடுக்கின்ற, மடந்தையாகரு-பெண்களுக்கு, ஒரு கோமாளம் ஆகிய குரங்கை ஒத்து உழலவேனோ - ஒரு பரிகாசமுடைய குரங்கைபோல வருந்துவேனோ? மனோலயம் என்று சேர்வேன்-மனோலயத்தை என்று அடைவேன் எ-று.

(வி-ரை) ஆலாலம்-ஆலகாலவிஷம் மரம் தரித்தகண்-கொலைத்தொழிலை பூண்டுள்ள கண், நோக்கினோர்க்குத் துன்பஞ் செய்தலால் இவ்வாறு கூறினார். நெடுஞ்சுருள் குழல்-நீண்ட சுருண்ட கூந்தல் சீமூதம்-நீருண்ட மேகம். பொற்றனம் - பொன்போன்ற நிறத்தையுடைய ஸதனம். மருங்கு நீட்கள ஆகாசம் இடை நுண்மையினால் கண்களுக்கு புலப்படாமையால், இவ்வாறு கூறினார். பூணாரம் என்றது-பாம்பைக் குறித்துப் பின் ஆகுபெயரால் படத்தை உணர்த்திற்று. மாதா மயலில் சிக்கி கைப்பொருள் இழந்து, இம்மை யின்பமுங்கெட்டு அலைவேனோ எனபார், 'குரங்கை ஒத்துழலவேனோ' என்றார். மனோலயம்-மனம் செயலற்று ஒடுங்கும் நிலை. இதனை இவ்வாசிரியரே கந்தரனுபூதி என்னும் நூலின்கண்,

> 'தூசா மணியுந் துகிலும் புனைவாள்
> நேசா முருகா நினதன் பருளால்
> ஆசா நிகளந் துகளா யினபின்
> பேசா வனுபூ திபிறந் ததுவே'

என்றருளிச் செய்தது காண்க.

அனங்கன்-மன்மதன. கலாபி-மயில. கயபபதி-திரு வானைக காவுககு யானை பூசிதத காரணததால இபபெயா வந்தது. இது திருசசிராபபளளி ஜிலலாவி லுளளது. (52)

திருவருணை

53 தான ததத தந்த தான தத்த தநத
தான தத்த தநத-தனதான.

தோத கம்பெ ரும்ப யோத ரததி யஙகு
தோகை யாக்கு நெஞ்சம அழியாதே
சூலை வெபப டாந்த வாத பிதத மெனறு
சூழ்பி ணிகக ணஙகள அணுகாதே
பாத கசச மனதன மேதி யிறபு குநது
பாசம் விடடெ றிநது பிடியாதே
பாலொ லுறகிரஙகி நாவ லாககி சைந்த
பாடல மிகக செஞ்சொல தரவேணும்
வேதம மிகக விநது நாத மெயகக டமப
வீர பதர கந்த முருகோனே
மேரு வைபபி ளநது சூர னைகக டிநது
வேலை யிறறு ழைநத கதிரவேலா
கோதை பொற்கு றிஞ்சி மாது கசச ணிந்த
கோம ளககு ரும்பை புணர்வோனே
கோல முற்றி லஙகு சோண வெறபு யாநத
கோபு ரத்த மர்ந்த பெருமாளே.

(இ-ள்) வேதம மிகக விந்து நாத-வேதத்தாலே மிகுத்துச் சொல்லப்பட்ட விந்துநாத தத்துவங்கட்குத் தலைவரே', மெய் கடம்ப-உடம்பிலே கடப்பமாலை தரித்த, வீரபத்திர

மனத்துணிவும் சிரேட்டமு முடையவனே!, கந்த முருகோனே-கந்தனாகிய இளையோனே!, மேருவை பிளந்து-மேருமலையை வெட்டி, சூரனை கடிந்து-சூரனைக் கொன்று, வேலையில் துளைந்த கதிர்வேலா - சமுத்திரத்தில் முழுகிய ஒளியையுடைய வேற்படையை உடையவனே!, கோதை போன குறிஞ்சி மாது-பூமாலைபோலும் அழகுவாய்ந்த குறிஞ்சிநிலப் பெண்ணாகிய வள்ளிநாயகியின், கச்சு அணிந்த கோமளம் குரும்பை-கச்சைத் தரித்த மிருதுவான தென்னம் பிஞ்சை ஒத்த ஸ்தனங்களை, புணர்வோனே - தழுவுபவனே!, கோலம் உற்று இலங்கு-அழகுபெற்று விளங்குகின்ற, சோணவெற்பு-சோணமலையின்கண், உயர்ந்த கோபுரத்து அமர்ந்த பெருமாளே-உயர்ந்த கோபுரத்தில் எழுந்தருளியுள்ள பெருமானே!, தோதகம் பெருமை பயோதரத்து - வஞ்சகமுள்ள பெரிய ஸ்தனங்களோடு, இயங்கு தோகையார்க்கு-நடமாடும் பெண்களுக்கு, நெஞ்சம் அழியாது-மனமுடையாதபடிக்கும், சூலை வெப்பு-சூலையும் சுரமும், அடர்ந்த வாதம் பித்தம்-மிகுந்த வாதநோயும் பித்தமயக்கமும், என்று-என்றுசொல்லுகின்ற, சூழ்பிணி கணங்கள்-சூழ்ந்த நோயின் கூட்டங்கள், அணுகாது-சேராதபடிக்கும், பாதக சமன்-கொடியவனாகிய யமன், தன் மேதியில் புகுந்து-தனது எருமைக்கடாவின்மேலேறி, பாசம் விட்டு எறிந்து பிடியாது-கயிற்றை விட்டு வீசிப் பிடியாதபடிக்கும், பாவலர்க்கு இரங்கி நக்கீரதேவருக்குமனமிரங்கி, நாவலர்க்கு இசைந்த-நாவில் வல்ல அவர்க்குப் பொருத்தமாக அருள்

செய்த, பாடல மிகக செம் சொல்-பாடலகளில சுவை மிருநத செவவிய சொறகளை, தரவேணும் - அருள்புரிய வேண்டும் எ-று.

(வி-ரை) பயோதரம-ஸ்தனம. பிணிககணஙகள-4448 நோய்களும பலவகைக கூட்டஙகளாக இருததலின் பிணிக் கணஙகளெனறார. பிணி, மூபபு, சாககாட்டை ஒழிகக எனககுப பிரணவசசொலலை உபதேசிககவேண்டும என பார, பாதகசசமன. . செஞசொல தரவேணும்' எனறார். விந்து-சுத்தமாயை.

குரும்பை-ஆகுபெயரால ஸதனததை உணாத்திறறு()

சோலைமலை

54 தானதனத் தானதனத தானதனத தானதனத்
தானதனத தானதனத்-தனதான.

சேலையடாத தாலமிருத தேயுமைழயைச சிறிவிதாத
தூறுசிவட பேறுவிழிக கடையாலே

தேனிரதத தேமுழுகிப பாகுநிகாத தாரமுதத்
தேறலெனக கூறுமொழிச செயலாலே

ஆலிலையைப போலும்வயிற றுலளகத தாலதரத்
தாலிரதத் தாலும்வளைப பிடுவோாமேல

ஆசையினைத் தூரவிடுத் தேபுகழ்வுற றேபரியநற்
றுளிணையைச சேரஎனக கருள்வாயே

காலனைமெய்ப பாதமெடுத தேயுதைபிட் டேமதனைக்
காயஎரித் தேவிதியிற றலையூடே

காசினியிற் காண இரப் போன்மதியைச் சூடியெருத்
தேறிவிரித் தூருதிரைக் கடலமீதில
ஆலமிடற் றானையிபத் தோலையுடுத் தீமமதுற்
றாடியிடத் தேயுமைபெற் றருள்வாழ்வே
ஆழியினைச் சூரனையெற் பேழயிலதொட் டாவிதுணித்
தாதிதிரு சோலைமலைப் பெருமாளே.

(இ-ள்) காலனை-யமனை, மெய் பாதம் எடுத்து-உண்மை வடிவான திருவடியைத் தூக்கி, உதையிட்டு - உதைத்து, மதனை காய எரித்து-மன்மதனைச் சுடும்படி நெற்றிக் கண்ணால் எரித்து, விதியின் தலை ஊடு-பிரமனது தலையோட்டில், காசினியில்-பூமியில், காண இரப்போன்-யாவரும் பார்க்கும்படி பலியை இரப்பவனும், மதியை சூடி-பிறைச்சந்திரனைத் தரித்தவனும், எருத்து ஏறி - எருதின்மேலேறினவனும், விரித்து ஊருதிரைக் கடல மீதில் விரித்து தவழ்கின்ற அலையையுடைய கடலிலுண்டாகிய, ஆலம் மிடற்றானை - விஷத்தையுடைய கண்டத்தையுடையவனும், இபம் தோலை உடுத்து-யானையின்தோலை அணிந்து, ஈமம் அது உற்று ஆடி-சுடலை இடத்துச்சேர்ந்து ஆடுகின்றவருமாகிய சிவபெருமானிடத்து, உமை பெற்றருள் வாழ்வே-உமாதேவியார் பெற்றருளிய செல்வமே!, ஆழியினை-கடலையும், சூரனை-சூரனையும், ஏழ்வெற்பு-ஏழுமலைகளையும், அயில் தொட்டு-வேலை விட்டு, ஆவி துணித்து உயிரைக் கொன்று, ஆதி திரு சோலை மலை பெருமாளே-பழைய அழகிய சோலைமலையில் வாழும் பெருமானே!, சேலை அடர்த்து-சேலமீனை வென்றும், ஆலம்

மிருத்து விஷத்தினும் சிறந்தும், உழையை சீறி - மானைக் கோபித்தும், விதிர்த்து-அரிகள் சிதறி, ஊறு சிவப்பு ஏறு விழி கடையால் - மிகுந்த சிவப்பையுடைய கண்களின் கடைப் பார்வையாலும், தேன் இரதத்து முழுகி-தேனின் சுவையில் முழுகி, பாகு நிகர்த்து பாகை ஒத்த, அமுதம் தேறல் என-அரிய ஆர் அமிர்தத்தை ஒத்த தேனென்று கூறும் மொழி செயலால்-சொல்லுகின்ற சொல்லின் சொல் வகையாலும், ஆல் இலையை போலும் வயிற்றால்-ஆலிலையை ஒத்த வயிற்றாலும், அளகத்தால்-கூந்தலாலும், அதரத்தால்-உதட்டாலும், இரத்தத்தால்-இரத்தத்தை ஒத்த அல்குலாலும் வளைப்பிடுவோர்மேல்-ஆடவர் மனங்களைக் கவர்வோராகிய பெண்களின்மேல், ஆசையினை தூரவிடுத்து-ஆசையை அகல வோட்டி ஒழித்து, புகழ் உற்று-புகழைப் பெற்று, பிரிய நல தாள் இணையை சேர எனக்கு அருள்வாய்-அன்பையுடைய அழகிய இரண்டு திருவடிகளையும் சேரும்படி எனக்கு அருள் செய்வாய் எ-று.

(வி-ரை) நற்றாள் என்றார் பிறவிக்கடலுக்கு மருந்தாகலின்; 'கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅ ரெனின்' என்னும் திருக்குறளுக்குப் பரிமேலழகர் இவ்வாறு பொருளுரைத்தல் காண்க.

சிவபெருமான் யானையை யுரித்து அதன் தோலை உடுத்துக் கொண்டாராதலின் 'ஆனையுரித் தோலை யுடுத்து' என்றார். உலகமெல்லாம் அழிந்து சுடுகாடாயினபின் மீண்டும் உலகத்தைத் தோற்றுவிக்கப் பஞ்சகிருத்திய நடனம் சிவ

பெருமான் செய்வார் ஆதலின் 'ஈம மதுற்றடி' என்றார். இதனை,

'கோயில் சுடுகாடு கொல்புலித்தோ னல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான்றனியன் காணேடீ
தாயுமிலி தந்தையிலி தான்றனிய னாயிடினுங்
காயி னுலகனைத்துங் கற்பொடிகாண் சாழலோ'

எனவரும் திருவாசகத்தானும் அறிக.

ஈமமது-அது பகுதிப்பொருள் விகுதி. (54)

பொது

55 தனதன தானத தனந்த தனதன தானத தனந்த
தனதன தானத் தனந்த தனதான.

பழுதற ஓதிக் கடந்து பகைவினை தீரத் துறந்து
பலபல யோகத் திருந்து மதராசன்
பரிமள பாணத் தயர்ந்து பணைமட லூர்தற் கிசைந்து
பரிதவி யாமெத் தநொந்து மயல்கூர
அழுதழு தாசைப் படுங்க ணபிநய மாதாக கிரங்கி
அவர்விழி பாணத் தநெஞ்சம் அறைபோயின்
றழிவது யானமுற பயந்த விதிவச மோமமையுன்ற
னருள்வச மோஇப ரமந்தெ ரிகிலேனே
எழுதரு வேதத் தமன்றி முழுதினு மாயநிற் குமெந்தை
எனவொரு ஞானக் குருந்தா உளமேவும்
இருவுரு வாகித் துலங்கி ஒருகன தூணிற் பிறந்து
இரணியன் மார்பைப் பிளந்த தனியாண்மை
பொழுதிசை யாவிக் ரமனதன் மருகபு ராரிக்கு மைந்த
புளகப டீரக் குரும்பை உடன்மேவும்

புயலகிரி வாழசை சிலம்பின் வனசர மானுக் குகந்து
புனமிசை ஓடிய புகுந்த பெருமாளே.

(இ-ள்) எழுதரு வேதத்தும்-எழுதுவதற்கு அருமையான வேதங்களிலும், அன்றி முழுதினுமாய் நிற்கும் என்றை என-அல்லாத எல்லாப் பொருள்களிலும் அப்பொருள்களே தானென்று சொல்லும்படி இருப்பான என் தந்தையாகிய பரம்பொருளென்று சொல்லிய, ஒரு ஞானம் குருந்தா-ஒப்பற்ற ஞானத்தின் கொழுந்துபோன்ற பிரகலாதருடைய, உளம் மேவும்-நெஞ்சில் அமர்ந்து வாழும், இரு உருவு ஆகி துலங்கி-மனிதனும் சிங்கமுமாகிய இரண்டு வடிவங்களோடு விளங்கி, ஒரு கன தூணில் பிறந்து-ஒரு பெரிய தூணிலே உற்பவித்து, இரணியன் மார்பை பிளந்த - இரணியனது மார்பைக் கூறுசெய்த, தனி ஆண்மை-ஒப்பற்ற ஆண்தன்மையையுடைய, பொழுது இசையா-சூரியனும் ஒப்பாகாத, விக்ரமன் தன் மருகோனே - வீரனாகிய திருமாலின் மருமகனே!, புராரிக்கு மைந்த-சிவபெருமானுக்கு மைந்தனே!, புளகம் படீரம் குரும்பை உடன் மேவும்-அரும்பிய சந்தனம் பூசிய ஸ்தனங்கள் பொருந்திய, புயலகிரி வாழ-தேவசேனையார் வாழ்ந்திருப்பவும், சிலம்பின் - மலைச்சாரலில் (வசித்திருந்து), வனசரமானுக்கு உகந்து - வேடப் பெண்ணை விரும்பி, புனம்மிசை ஓடி புகுந்த பெருமாளே - கொல்லை நிலத்தில் விரைந்துசென்ற பெருமானே!, பழுது அற-ஐயந் திரிபென்னும் குற்றந் தீரும்படி, ஓதி கடந்து-கற்று அறியாமையினின்றும் நீங்கியும், பகைவினை தீர துறந்து-பகைத்

தொழிலினை முற்றும ஒழித்தும, பலபல யோகத்து இருந்து-பற்பல முயற்சிகளிலே இருந்தும், மதராசன் பரிமளம் பாணத்து அயர்ந்து-மன்மதனுடைய புஷ்பபாணத் தால் இளைத்தும, பனிமடல் ஊர்தற்கு இசைந்து-பனிமட லின்று செய்த மாவினைச செலுத்தற்கு விரும்பியும், பரித வியா மெத்த நொந்து - பரிதவித்தும் மிகவும் வருந்தியும், மயல்கூர-ஆசையானது அதிகரிக்க, அழுது அழுது ஆசைப் படும் கண்-அழுது அழுது ஆசைப்படுகின்ற கண்ணையுடைய, அபிநயம் மாதர்க்கு - அபிநயத்தைச் செய்கின்ற பெண்க ளுக்கு, இரங்கி அவர் விழி பாணத்து-மனமிரங்கி அவர்க ளுடைய கண்ணாகிய அம்பினால நெஞ்சம அறாபோயி னறு-மனம கீழறுப்போகி நின்று, அழிவது-பயனின்றி அழிந்துபோவது, யான்முன்பயந்த விதிவசமோ-அடியேன முன்னாளில் செய்த விதியின செயலோ? மற்றை உனதன் அருளவசமோ - அன்றித தேவரீருடைய கருணையின செயலோ?, இ பிரமம தெரிகிலேன-இம்மயக்கம் இன்ன தென்று தெரியவில்லை எ-று.

(வி-ரை) பழுது-ஐயம திரிபு முதலிய குற்றங்கள். ஐயம் இதுவோ அதுவோவென சந்தேகித்தல்; திரிபு- ஒன்றை மற்றொன்றாகக் கொள்ளுதல்.

'கண்டபொருளை யிரண்டுறவே கருதலையந் திரியவே
கொண்ட திரிவாம'

என்பது சிவஞானசித்தியார்.

மடலூர்தல்-ஒரு பெண்ணின்மேல் காமங்கொண்ட ஒருவன் அப்பெண்ணை அடைதற்கு அவளைப்போல ஒரு உருவத்தை பனைமடலில் எழுதிப் பின் பனைமட்டைகளால் செய்யப்பட்ட குதிரையின்மேல் ஊர்ந்துவர, அப்போது அவன் உடம்பினின்றும் காமநீர் வெளிப்படுமாயின் அவனால் காதலிக்கப்பட்ட அப்பெண்ணை மணஞ் செய்வித்தலும், அவ்வாறன்றி அவன் உடம்பில் உதிரம் வெளிப்படுமாயின் அவனைக் கொல்லுதலும் ஆகிய வழக்கு. இவ்வழக்கைப் பற்றிய செய்யுள்கள் கோவைநூல்களில் வருதல் காண்க.

அறைபோதல்-ஊடறுக்கப்படுதல் 'அறிவறைபோகிய' என வரும் **சிலப்பதிகாரத்தால்** அறிக.

எழுதருவேதம்-எழுதுவதற்கு அருமையாகிய வேதம். எழுதப்படாமையினால் வேதத்திற்கு எழுதாக்கிளவி என்னும் பெயர். பிரகலாதர்-பிரகலாதாழ்வார். 'நீ சொல்லும் அக்கடவுள் எங்கே உள்ளன் எனக்குக் காட்டுக' என்ற போது 'அவன் எங்கும் இருக்கின்றான். தூணிலும் உளன் துரும்பிலுமுளன்' என்று கூறிய செய்தியை, உள்ளிட்டு 'எழுதருஞானக் குருந்தர்' என்றார். ஞானக்குருந்தர்-பிரகலாதர்; குருந்து-இளமையைக் குறித்தது. இருவுரு-நரசிங்க வடிவம். புராரி-சிவபெருமான், திரிபுரம் தகனஞ் செய்தவர். (55)

பெரும்பற்றப்புலியூர் (சிதம்பரம்)

56 தனந்தத் தத்தன தானன தானன
தனந்தத் தத்தன தானன தானன
தனந்தத் தத்தன தானன தானன—தனதான.

விடுங்கைக் கொத்தக டாவுடை யானிடம்
மடங்கிக் கைச்சிறை யானது நேகமும்
விழுங்கப் பட்டற வேயற லோதியர் விழியாலே

விரும்பத் தக்கன போகமு மோகமும்
விளம்பத் தக்கன ஞானமு மானமும்
வெறுஞ்சுத் தச்சல மாய்வெளி யாயுயிர் விடுநாளில்

இடுங்கட் டைக்கிரை யாஅடி யேனுடல்
கிடந்திட் டுத்தம ரானவர் கோவென
இடுங்கட் டிச்சுடு காடுபு காமுன மனதாலே

இருந்திட் டுப்பெற லேகதி யாயினும்
இருந்திட் டும்பெற வேமதி யாயினும்
இரண்டிற் றொக்கதொ ரூதியம் நீதர இசைவாயே

கொடுங்கைப் பட்ட மராமர மேழுடன்
நடுங்கச் சுக்ரிவ னோடம ராடிய
குரங்கைச் செற்றும கோததி தூளெழ நிருதேசன்

குலங்கட் பட்டழி சாசரர் கோவென
இலங்கைக் குட்டழ லேயெழ நீடிய
குமண்டைக் குத்திர ராவண னார்முடி அடியோடே

பிடுங்கத் தொட்டச ராதிப னாதி
பரியங் கொட்டகன் மாமரு காவியல்
பரபஞ்சத் துக்கொரு பாவல னேயென விருதூதும்

பிரசண்டசொற் சிவ வேதசி காமணி
பிரபந்தத் துக்கொரு நாதசதாசிவ
பெரும்பற் றப்புலி யூர்தனில் மேவிய பெருமாளே

(இ-ள்.) கொடுங்கை பட்ட மராமரம் ஏழுடன் - கொடுங்கைகள் உண்டாகிய ஏழுமராமரங்களுடன், நடுங்க - நடுங்கும்படி, சுக்ரீவனோடு அமர் ஆடிய - சுக்ரீவனோடு சண்டை செய்த, குரங்கை செற்று - வாலியைக் கொன்று, மகோததி தூள் எழ - சமுத்திரத்தில் தூள் உண்டாகும்படி, நிருதேசன் - இராவணனது, குலங்கள் பட்ட - குலத்திலே சேர்ந்த, நிசாசரர் - அரக்கர்கள், கோவென - கோவென்றலறும்படி, இலங்கைக்குள் - இலங்கையிலே, தழல் ஓன எழ - அக்கினி தோன்ற, நீடிய - பலத்தால் சிறந்த, குமண்டை - செல்வச் செருக்கையுடைய, குத்திர ராவணனார் - வஞ்சனையையுடைய இராவணனது, முடி அடியோடு பிடுங்க - முடிகள் பத்தையும் பறிக்கும்படி, தொட்டசரர் அதிபனார் - விட்ட கணைக்குத் தலைவராகிய இராமபிரான், அதிப்ரியம் கொள்ளத்தக்க - மிக்க விருப்பம் கொள்ளுதற்கு உரிய, நல் மருகா - நல்ல மருமகனே!. இயல் பிரபஞ்சத்துக்கு - அழகிய உலகத்துக்கு, ஒரு பாவலனார் என - ஒப்பற்ற பாவலர் என்று, விருது ஊதும் - வெற்றிச்சங்கை ஊதுகின்ற, பிரசண்டசொல் சிவவேதசிகாமணி - பெருமையுடைய சொல்லையுடைய மங்களகரம் பொருந்திய வேதத்தின் தலைபிற சூடும் இரத்தினம் ஒப்பவனே!, பிரபந்தத்துக்கு ஒரு நாத - தமிழ் நூலுக்கு நாதனே!, சதாசிவ - என்றும் மங்களம் உடையவனே!, பெரும்பற்றப் புலியூர்தனில் மேவிய பெருமாளே - சிதம்

பாத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமானே!, விடும் கைக்கு ஒத்த கடா உடையானிடம் - கைக்கொத்த எருமைக் கடாவையுடையவனாகிய யமனிடம், மடங்கி - அடங்கி, கைச் சிறையான அநேகமும் - கைவசத்தில் இருக்கின்ற எல்லாமும், விழுங்கப்பட்டு அற - கவளீகரிக்கப் பட்டு மிகுதியும், அறல் ஓதியார் விழியால் - கருமணலை ஒத்த கூந்தலையுடைய பெண்களின் கண்களால், விரும்பத்தக்கன போகமும் மோகமும் - விரும்பத்தக்கனவாகிய போகமும் ஆசையும், விளம்பத் தக்கன ஞானமும் - சொல்லத்தக்கனவாகிய அறிவும் ஞானமும், வெறும் சுத்த சடம் ஆய் - வெறும் பொய்யாகி, வெளியாய் விடும் நாளில் - உடலைவிட்டு வெளிப்பட்டு உயிர்விடும்பொழுதில், இடும் கட்டைக்கு இரையாய் - அடுக்குகின்ற கட்டைக்கு இரையாகி, அடியேன் உடல் கிடந்திட்டு - அடியேனுடைய தேகம் பூமியிற் கிடந்து, தமர் ஆனவர் கோவென - சுற்றத்தார் கோவென்றலற, இடம் கட்டி - பாடை கட்டி, சுடுகாடு புகாமுன் - சுடுகாட்டைச் சேர்வதற்கு முன்பு மனத்தால் செய்து, பெற கதியாயினும் - கதி பெறுவதற்காவது, இருந்திட்டு மதிபெற ஆயினும் - மனத்தோடிருந்து நல்லறிவை பெறுதற்காயினும், இரண்டில் - இவ்விரண்டு தன்மைகளில், தக்கது ஓர் ஊதியம் - பொருந்தியதாகிய ஓர் இலாபத்தை, நீ தர இசைவாய் - நீ எனக்குக் கொடுப்பதற்கு மனம் பொருந்துவாயாக என்றவாறு.

(வி-ரை) கடாவுடையான் - இயமன் அவனிடம் மடங்கலாவது - அவன் கைக்குள் படுதல். கைச்சிறை - கைத்தலம்.

அறல் ஒதி-அறுக்கப்பட்ட மணலைப்போல் கருமையும் பாகுபாடுமுடைய கூந்தல். அறு-பகுதி, அல்-விகுதி. 'வெறுஞ் சுத்த சலமாய வெளியாய' என்றார் மிக விரைவில் அழிந்து போதலின்,

'மையாடு கண்ணியு மைந்தரும் வாழ்வு மனையுஞ்செந்தீ
யையா நின்மாயை யுருவெளித் தோற்ற மகிலத்துள்ளே
மெய்யா யிருந்தது நாட்செல நாட்செல வெட்டவெறும்
பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய்மெல்லப் போனதுவே'

என்றார் பட்டினத்துப் பிள்ளையாரும்,

தாரா-சுபத்தார், தம அடியாகப் பிறந்த பெயர். சுடுகாடு - வினைத்தொகை. உயிர் விடுவதன்முன் செய்யக் கடவனவாகிய செயல்களைப் புரிந்து, பின்னர் வீடுபேற்றை அடைவதாகிய தன்மையையேனும் உயிருடனிருந்து சீவன் முத்தராய் இருப்பதற்குரிய தன்மையையேனும் அருள் புரியவேண்டும் என்று வேண்டிக்கொண்டார் இவ்விரண்டு நிலையில் தமக்குத் தக்கது இன்னதென அறியவில்லை இறைவரே என்பார் 'இரண்டிற் றக்கதோர் ஊதியம் நீதர இசைவாயே' என்றார்.

சுக்கிரீவனோடு மாறாடிய குரங்கு-வாலி. மகோததி-மகா உததி; பெருங்கடல், குணசந்தி குமண்டை செருக்கு குத்திரம்-வஞ்சகம் சாதிப்பன - இராமபிரான் சர அதிபன- சரத்திற்கு அதிபன்; தீர்க்கசந்தி சரம்-அம்பு. கொட்டக்க-கொள்ளத்தக்க கொள்-தக்க. பெரும்பற்றப்புலியூர்-சிதம்பரம், புலியூர்-வியாக்கிரபாத முனிவர் பூசித்த ஸ்தலம் (56)

பொது

57 தனத்த தானன தானன தநதன
தனத்த தானன தானன தந்தன
தனத்த தானன தானன தநதன - தந்ததான.

கறுத்து நீவிடு கூர்வேலி னுங்கடை
சிவத்து நீடிய வாயமீனம ஒண்குழை
கடக்க ஓடிய ஆலால நஞ்சன வஞ்சநீடு

கயற்க ணாகனி வாயூற லுண்டளி
கழுத்து மகமு மேகிப வங்கொடு
கலக்க மாயபக பாடீர குங்கும கொங்கைமீதே

உறுத்து மாரமு மோகாவ டங்களு
மறுத்து நேரிய கூர்வாளர கம்பட
உடுத்த ஆடையும் வேருயு ழன்றாக ழன்றுவீழ

உருக்கு நாபியின ழுழகா மருங்கிடை
செருக்கு மோகன வாராத ரங்களை
ஒழிக்க ஓர்வகை காணேனு றாநதுணை ஒன்றுகாணேன்

நிறத்த நூபுர பாதார விந்தமு
முடுத்த பீலியும் வாராத னங்களும்
நிறத்தி லேபடு வேலான கணைகளும் வண்டுபாட

நெறித்த ஓதியு மாயான்ம னமபரி
தவிக்க மால்தர லாமோ கலந்திட [வாய்
நினைக்க லாமென வேலவேடா கொம்புடன நண்புகூர்

மறித்த வாரிதி கோகோவெ னும்படி
வெறுத்த ராவணன் வாளுளை அம்பினில
வதைத்த மாயனு மேவார்பு ரங்களல மண்டமேரு

வளைத்த தாதையு மாறான குன்றமு
மனைத்து லோகமும் வேதாக மங்களும்
மதித்த சேவக வானரு மும்பர்கள் தம்பிரானே.

(இ-ள்) நிறைந்த நூபுர பாதாரவிந்தமும்-ஒளிபொருந்திய சிலம்புகளை அணிந்த திருவடிகளாகிய தாமரை மலர்களும், உடுத்த பீலியும் - உடுக்கப்பட்ட மயில்தோகையும், வார் ஆர் தனங்களும்-கச்சை அணிந்த ஸ்தனங்களும், நிறத்தில் படுவேல் ஆன கண்களும்-ஒளிவீசுகின்ற வேற்படையை ஒத்த கண்களும், வண்டு பாட நெறித்த ஓதியும் ஆய-வண்டுகள் ஒலி செய்யும் வகிர்ந்த கூந்தலும் உடையவளாயுள்ள, வேடர் கொம்புடன் - வள்ளிநாயகியோடு, யான் மனம் பரிதவிக்கலாமோ - நான் மனம் வருந்தலாமோ, கலந்திட நினைக்கலாமோ-கலவி செய்ய எண்ணலாமோ, என நண்பு கூர்வாய்-எனக்கூறி நட்புச் செய்பவனே!, மறித்த வாரிதி-மடங்கி வருகின்ற அலைகளையுடைய கடலை, கோ கோ எனும்படி-கோவென்றலற, வெறுத்த ராவணன் வாழ்நாளை-வலுமிகுந்த இராவணனுடைய வாழ்நாட்களை, அம்பினில் வதைத்த - பாணத்தால் கொன்ற, மாமனும் - மாமனாகிய இராமனும், மேவார் புரம் கனல் மண்ட - பகைவர்களுடைய முப்புரங்களிலும் நெருப்புப் பற்ற, மேரு வளைத்த தாதையும் - மேருமலையை வளைத்த தந்தையாகிய சிவபெருமானும்,* ஆறு ஆன குன்றமும் - ஆறு மலைகளும், அனைத்துலோகமும்-எல்லா உலகங்களும், வேதாகமங்களும்-வேதம் ஆகமம் முதலிய சாஸ்திரங்களும், மதித்த சேவக-

மிகக்கொண்ணும் தொழிலையுடையவனே', வான் ஆளும் உம்பர்கள் தம்பிரானே - சுவர்க்கத்தை ஆள்கின்ற தேவர்களின் தலைவனே', கறுத்து - கருநிறம்பெற்று, நீவிடு கூர்வேலினும் கடை சிவந்து-வடிக்கின்ற கூரிய வேலைக்காட்டிலும் கடைப் பாகம் சிவந்து, நீடிய வாய்-நீண்டு, மீனம் ஒண்குழை கடக்க ஓடிய-சுறுமீனின் வடிவமாகச் செய்யப்பட்ட ஒளிபொருந்திய குண்டலங்களைக் கடக்கும்படி ஓடிய, ஆலாலம் நஞ்சு ஆன-ஆலகாலவிஷத்தை ஒத்த, வஞ்சம் நீடும் கயல் கணூர்-வஞ்சக மிகுந்த கயலை ஒத்த கண்ணையுடைய பெண்களினது, கனிவாய ஊறல் உண்டு-கோவைப்பழத்தை ஒத்த வாயினூறலை உட்கொண்டு, அணி கழுத்தும் ஆகமும் - அழகிய கழுத்தும் மார்பும், ஏகபாவம் கொடு கலக்க - ஒரே தன்மையைக்கொண்டு சேர, மார்பகம் பாடீரம் குங்குமம் கொங்கைமீது - மார்பினகண்ணுள்ள சந்தனமும் குங்குமமும் பூசிய ஸ்தனங்களின்மேல், உறுத்தும் ஆரமும்- உறுத்துகின்ற முத்துமாலையும், ஓகாபடங்களும் - கண்களுக்கு ஓகையை ஊட்டும் மாலைகளும், அறுத்து - அறுத்தெறிந்து, கூர்வாள் நகம்பட - கூரிய ஒளிபொருந்திய நகக்குறி தோன்ற, உடுத்த ஆடையும் வேறாய் - கட்டிய ஆடையும் வேறாகி, உழன்று கழன்று வீழ - தடுமாறி அவிழ்ந்து விழ, உருக்கும் நாபியின் மூழ்கா - மனத்தை உருக்குகின்ற உந்தியில் முழுகி, மருங்கிடை செருக்கும் - பக்கங்களிலே மிகுந்த, மோகன ஆர ஆதரங்களை - மயக்குகின்ற பெருகிய ஆசைகளை, ஒழிக்க ஓர்வகை காணேன் - ஒழிப்பதற்கு ஒரு

வழியில்லை, உற்ற துணை ஒன்று காணேன்-மிக்க உதவியும் ஒன்றும் எனக்குத் தோன்றவில்லை எ-று.

(வி-ரை) ஏகீபவம்-ஒன்றாந் தன்மை பட்டம்-சந்தனம், நீட்டும் வழி நீட்டல். மூழ்கா-மூழ்கி, செய்யா எனும் வாய்பாட்டு வினையெச்சம். நூபுரம்-சிலம்பில் ஒருவகை. பாதாரவிந்தம்-பாதமாகிய தாமரை வார்-கச்சு. நெறித்த ஓதி-வளைவையுடைய கூந்தல். வாழ்நாள்-வாணாள், இதற்கு விதி வீரசோழியத்தில் காண்க. மேவார்-பகைவர். புரம்-திரிபுரம். சிவபெருமான் திரிபுரமெரித்த வரலாற்றை எமக்குக் குறித்தார் புரம் என்பதைச் சரீரமாகக் கொண்டு உள்ளுறை கூறுதலுமாம் இதனை,

'அப்பணி செஞ்சடை ஆதிபுராதனன்
முப்புர மெரிசெய்தான் என்பர்கள் மூடர்கள்
முப்புர மாவது மும்மல காரியம்
அப்புர மெய்தமை யாரறி வாரே.

எனும் திருமூலர் திருவாக்கானு மறிக. (57)

58 தனதத்த தனத்த தனத்தன
தனதத்த தனத்த தனத்தன
தனதத்த தனத்த தனத்தன-தனதான.

புருவத்தை நெறித்து விழிக்கயல்
பயிலிட்டு வெருட்டி மதித்திரு
புதுவட்டை மினுக்கி அளிக்குலம் இசைபாடும்
புயலைச்சற்று விரித்து நிரைத்தொளி
வளைஇட்ட கரத்தை அசைத்தகில்
புனைமெத்தை படுத்த பளிக்கறை தனிலேறிச்

சரசதந்தை விளைத்து முலைக்கிரி
புளகிக்க அணைத்து நகக்குறி
தனைவைத்து முகத்தை முகத்துடன் உறமேவித்
தணிவித்தி ரதத்த தரத்துமிழ்
அமுதத்தை அளித்து உருக்கிகள்
தருபித்தை அகற்றி உனைத்தொழ முயல்வேனோ
பரதத்தை அடக்கி நடிப்பவர்
திரிபுரத்தை எரிக்க நகைப்பவர்
பரவைக்குள் விடத்தை மிடற்றிடு பவர்தோகப்
பரையுற்ற கரத்தர் மிகப்பகி
ரதியுற்ற சிரத்தர் பிறைத்துயர்
பரவத்தர் பொருப்பி லிருப்பவர் உமையாளர்
சுராசுத்தர் மனத்துறை வித்தகர்
பணிபத்தர் பவத்தை அறுப்பவர்
சுடலைப்பொ டியைப்ப ரிசிப்பவர் விடையேறும்
துணையொத்த பதத்த ரெதிர்த்திடு
மதனைக்க டிமுத்தர் கருத்தமர்
தொலைவற்ற கருணைக்கு ளுதித்தருள் பெருமாளே.

(இ-ள்) பரதத்தை அடக்கி நடிப்பவர்-பரதசாத்திரத்தைத் தமது திருவடிக்குள் அடக்கி நடனஞ் செய்பவரும், திரிபுரத்தை எரிக்க நகைப்பவர்-முப்புரங்களை எரிப்பதற்காகச் சிரிப்பவரும், பரவைக்குள் விடத்தை-சமுத்திரத்திலே பிறந்த விஷத்தை, மிடற்று இடுபவர்-கழுத்திலே தரிப்பவரும், தோகப்பரை உற்ற கரத்தர்-பலியைப் பெறுகின்ற பிரமகபாலமாகிய பாண்டம் பொருந்திய கையை உடையவரும், மிக பகிரதி உற்ற சிரத்தர்-கங்கை மிகவும்

பொருந்திய தலையை உடையவரும், சிறந்து உயர் பரவத்தர்-ஒளியால் சிறந்த பாவஸது ஆனவரும், பொருப்பில் இருப்பவர்-கைலாசமலையில் வீற்றிருப்பவரும், உமை ஆளர்-உமாதேவியாரைப் பாகத்தில் உடையவரும், சுரர் சுத்தர் மனத்து-தேவர்கள் பரிசுத்தவான்களாகிய இவர்களுடைய மனத்தில், உறை வித்தகர்-வசிக்கின்ற ஞானியாரும், பணி பத்தர் பவத்தை அறுப்பவர்-தம்மை வணங்குகின்ற அடியார்களது பிறப்பை ஒழிப்பவரும், சுடலை பொடியை பூசிப்பவர்-சுடுகாட்டுச் சாம்பலைப் பூசுபவரும், விடை ஏறும் துணை ஒத்த பதத்தர்-எருதின்மேலேறும் ஒன்றுக்கொன்று ஒத்த திருவடிகளையுடையவரும், எதிர்த்திடு மதனை கடிமுத்தர்-எதிர்த்து வந்த மன்மதனைக் கோபித்த பாசங்களினின்று நீங்கியவரும் ஆகிய சிவபெருமான், கருத்து அமர்-திருவுள்ளத்தில் பொருந்திய, தொலைவு அற்ற கிருபைக்குள-அளவில்லாத கருணையினால், உதித்த அருள் பெருமாளே-திருவவதாரம் செய்த பெருமானே!, புருவத்தை நெறித்து - புருவத்தை நெறித்தும், விழிகயல் பயிலிட்டு-கண்களாகிய கயல்மீன்களைப் பழக்கிவிட்டு, வெருட்டி-அஞ்சும்படிசெய்து, மதித்து இது புதுவடை மினுக்கி-எண்ணி இரண்டு புதிய சூதாடு கருவியை ஒத்த ஸ்தனங்களை மினுக்கி, அளிகுலம் இசைபாடும் - வண்டின கூட்டங்கள் ரீங்காரம் செய்யும், புயல் சற்று விரித்து - மேகத்தை ஒத்த கூந்தலைச் சிறிது விரித்து, நிரைத்து ஒளிவளை இட்ட கரத்தை அசைத்து - வரிசையாகி ஒளிபொருந்திய வளையல்

அணிந்த கைகளை அசைத்து, அகில புனை மெத்தை படுத்த-அகில மணம் ஊட்டப்பட்ட மெத்தை இட்ட, பளிக்கு அறைதனில் ஏறி-பளிக்குப்போல வெண்மையாகிய பள்ளி யறையிற் சென்று, சரசத்தை விளைத்து-பலவகைப்பட்ட சரசங்களைத் தோற்றுவித்து, முலைகிரி புளகிக்க அணைத்து-முலைகளாகிய மலைகள் மயிர்க்கூச் செறியும்படி சேர்த்து, நகம் குறிதனை வைத்து - நகக்குறிகளை யிட்டு, முகத்தை முகத்துடன் உறமேவி-முகத்தை முகத்தோடு பொருந்தச் செய்து, தணிவித்து - காமவெப்பத்தை அடக்குவித்து, இரதத்து அதரத்து உமிழ் அமுதத்தை - இனிமையை யுடைய உதட்டு உமிழ்கின்ற அமிர்தத்தை ஒத்த ஊறலை, அளித்து உருக்கிகள் -கொடுத்து மனத்தை உருக்கும் பெண்கள், தருபித்தை-அளிக்கும் மயக்கத்தை, அகற்றி-ஒழித்து, உனை தொழ முயல்வேனோ-உன்னை வணங்க முயற்சி செய்வேனோ எ-று.

(வி-ரை) விழிக்கயல-கண்ணாகிய கயல்மீன அளிக்குலம் - வண்டினது கூட்டம், ஆறும் வேற்றுமை ஒன்றன் கூட்டத்துக் கிழமை புயல-மேகம். இங்கு உவமையாகு பெயராய்க் கூந்தலை உணர்த்திற்று, நகக்குறி

அதரம்-உதடு, சிவபெருமான் திரிபுரத்தைச் சிரித்தெரித்தா ராதலின் 'திரிபுரத்தைச் சிரிக்க எரித்தார்' என்றார்.

திருப்பாற்கடலில் மந்தரகிரியை நாட்டி வாசுகியை நாணுக்கோத்துச் சுரர் ஒருபுறமும், அசுரர் மற்றொரு

புறமுமாகப் பற்றி இழுத்தபோது கடைந்த காலத்தில் அமுதத் தோடு பிறந்த ஆலகாலவிஷத்துக் கஞ்சித் தேவர்கள் சிவ பெருமான்பால் அபயம்புக அவர்களுக்கு அபயாஸ்தம் அளித்தருளி அக்கொடிய விடத்தைத் தாமுண்டு கண்டத் தில் நிறுத்தினார் ஆதலின் 'பரவைக்குள் விடத்தைத் மிடற்றிடுபவர்' என்றார்.

கப்பரை-பிரமகபாலம். பகிரதி-கங்கை. பொருப்பு-கைலாயமலை. சிவபெருமான் மாசற்ற மனத்தையுடையவர் உள்ளத்தில் எக்காலும் வீற்றிருப்பவராதலின், 'சுத்தர் மனத்துறை வித்தகர்' என்றார்.

'கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானைக் கரவார்பால்
விரவாடும் பெருமானை விடையேறும் வித்தகனை
அரவாடச் சடைதாழ அங்கையினில் அனலேந்தி
இரவாடும் பெருமானை யென்மனத்தே வைத்தேனே'

சுடலைப்பொடி-திருநீறு. பரிசிப்பவர்-பூசுபவர். மன்மதனை எரித்தது, தமக்குக் காமமின்மையை உணர்த்தினார் ஆதலின் 'எதிர்த்திடும் மதனைக் கடிமுத்தர்' என்றார். (58)

பழனி

59 தனன தனதன தனன தனதன
தான தானன-தனதான.

குவளை பொருதிரு குழையை முடுகிய
கோல வேல்விழி மடவார்தங்

கொடிய மருகமத புளக தனகிரி
கூடி நாடொறு மயலாகிச்

துவள உருகிய சரச விதமது
சோர வாரிதி அலையூடே
சுழலு மெனதுயிர் மவுன பரமசு
கோம கோகதி படியாதோ
கவள கரதல கரட விகட க
போல பூதர முகமான
கடவுள் கணபதி பிறகு வருமொரு
காரணா கதிர் வடிவேலா
பவள மரகத கனக வயிர க
பாட கோபுர அரிதேரின்
பரியு மிடறிய புரிசை தழுவிய
பாகை மேவிய பெருமாளே

(இ-ள்) கவளம் கரதலம்-கவளத்தையுடைய துதிக்கையையும், கரடம் விகடம் கபோலம் பூதரம் முகம் ஆன-மதம் பொழிகின்ற அழகிய கன்னத்தையும் மலைபோன்ற முகத்தையுமுடைய, கடவுள் கணபதி பிறகு வரும் ஒரு காரணா-தெய்வமாகிய விநாயகருக்குப் பின் தோன்றிய ஒப்பற்ற காரணப்பொருளே!, கதிர் வடிவேலா - ஒளிபொருந்திய வடித்த வேற்படையை உடையவனே!, பவளம் மரகதம் கனகம் வயிரம் கபாடம் கோபுரம் - பவளம், பச்சை, பொன், வயிரம் முதலியவற்றையுடைய கதவுகள் பொருந்திய கோபுரங்களையுடைய, அரி தேரின் பரியும் - சூரியனுடைய குதிரையும், இடறிய புரிசை தழுவிய - உயர் மிகுதியினால் தடைபட்டுச் செல்லும் மதில்களையுடைய, பாகைக்

மேவிய பெருமாளே - பாகை என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் அமர்ந்திருக்கும் பெருமானே!, குவளை பொருது - நீலோற்பல மலர்களோடு சண்டைசெய்து, இருகுழையை முழுகிய - இரண்டு குண்டலங்களை விசையுடன் தாக்கிய, கோலம் வேல்விழி மடவார்தம் - அழகிய வேற்போன்ற கண்களையுடைய பெண்களினது, கொடிய மிருகமதம் புளகம் தனம் கிரி - கொடுமையான கஸ்தூரி யணிந்த புளகத்தை யுடைய ஸ்தனமாகியமலைகளை, கூடிநாள்தொறும் மயல் ஆகி - அணைந்து தினந்தோறும் மூளாகின்ற ஆசையுடையவனாகி, துவள உருகிய சரசவிதம் - சோரும்படி உருகியசரசங்களின் பகுதிகளை யுடைய, மதுசோர - இன்பமான தேன் மிக, வாரிதி அலை ஊடு - யோகமாகிய சமுத்திரத்தின் அலைகளின் நடுவில், சுழலும் எனது உயிர் மவுனம் பரமசுகம் மகோததி படியாதோ - சுழல்கின்ற என்னுடைய உயிர் மவுனமாகிய மிக்க சுகமாகிய பெரிய கடலில் படிந்திடாதோ? எ-று.

(வி-ரை) கோலம்-அழகு. வாரிதி-கடல். மவுன பரம சுக மகோததி-மவுனமாகிய மேலான இன்பமாகிய பெருங்கடல். கவளகரதல கரட விகட கபோல பூதர முகமான கடவுள்-கவளத்தையுடைய துதிக்கையையும் மதம் பொழிகின்ற அழகிய கன்னத்தையும் மலைபோன்ற முகத்தை முடைய விநாயகர். கடவுள-மனமொழி மெய்களைக் கடந்த பொருள்; கட-பகுதி. உள்-தொழிற்பெயர் விகுதி; எல்லாவற்றையும் இயக்குகின்ற பொருளென்று கூறலுமாம்.

கணபதி-கணங்களுக்குக் கடவுள், மூவருக்கும் காரணமாக முருகப்பெருமான் உளனென்பார் 'காரணா' என்றார்.

பரியும் என்புழி-உம்மை சிறப்பு. மதில்களின் உயர்ச்சி கூறுவார் 'அரி தேரின் பரியு மிடறிய புரிசை' என்றார். அரி-சூரியன் (59)

சிதம்பரம்

60 தனனந் தனத்த தந்த தனனந் தனத்த தந்த
தனனந் தனத்த தந்த தனதான

மதவெங் கரிக்கி ரண்டு வலுக்கொம் பெனத்தி ரண்டு
வளருந் தனத்த ணிந்த மணியாரம்
வளைசெங் கையிற்சி றந்த வொளிகண் டுநித்தி லங்கு
வரருந் திகைத்தி ரங்க வருமானார்
விதவிங் கிதப்ப ரியங்கள் நகைகொஞ் சுதற்கு ணங்கள்
மிகைகண் டுரக்க லங்கி மருளாதே
விடுசங் கையற்று ணர்ந்து வலம்வந் துனைப்பு கழ்ந்து
மிகவிஞ் சுபொற்ப தங்கள் தருவாயே
நதியுந் திருக்க ரந்தை மதியுஞ் சடைக்க ணிந்த
நடநம் பருற்றி ருந்த கயிலாய
நகமங் கையிற்பி டுங்கு மசுரன் சிரத்தொ டங்கம்
நசுங் கரத்த முந்து திரடோளுஞ்
சிதையும் படிக்கொ ரம்பு தனைமுன் தொடுத்த கொண்டல்
திறல்செங் கணச்சு தன்றன் மருகோனே
தினமுங் கருத்து ணர்ந்து சுரர்வந் துறப்ப ணிந்த
திருவம் பலத்த மர்ந்த பெருமாளே.

(இ-ள்) நதியும திரு காநதை மதியும்-கஙகையையும் அழகிய காநதை மலரையும் சந்திரனையும், சடைககு அணிந்த-சடையிலே தரிதத, நடம் நம்பா - பஞ்சகிருததிய நடனம புரியும் சிவபெருமான, உறறு இருந்த கயிலாயம் நகம்-பொருநதியிருந்த கயிலாயமலையை, அம் கையில பிடுங் கும் அசுரன-அழகிய கையால பறிக்கும இராவணன, சிரத தொடு அஙகம - தலைகளோடு உடம்பும, நவதுஙகம ரதநம் முநது திரள தோளும் - ஒனபதுவகைபபட்ட உயாநத ரத்நஙகள இழைககபபட்ட ஆபரணஙகள விளஙகுகின்ற திரணட தோளகளும, சிதையுமபடிககு-அறும்படி, ஓா அம்பு தனை ஓா அமபை, முனதொடுதத கொண்டல்-முன ஒருகாலததில விட்ட மேகநிறம் பொருநதிய, தி ல செங்கண் அசசுதனதன் - வலிமையுடைய சிவநத கணகளை யுடைய திருமாலுககு, மருகோனே-மருமகனே!, தினமும் கருத்து ஊா நது - நாடோறும திருவுளளததைத தெரிநது கொண்டு, சுரா வந்து தேவாகள வநது, உற பணிந்த-தாங் கள் வாழுமபடி வணஙகிய, திரு அம்பலதது - அழகிய பொன்னம்பலததிலே, அமாந்த பெருமாளே-வீறறிருககும் பெருமானே!, மதம் வெம் கரிககு-மததையுடைய கொடிய யானைககு, இரணடு வலு கொம்பு என-இரண்டாகிய வலிய கொம்புகள எனறு சொலலுமபடி, திரண்டு வளரும தனதது அணிந்த-திரண்டு வளர்கின்ற ஸ்தனஙகளில தரிதத, மணி ஆரம் - ரத்நமாலையினும், செம் கையில் சிறந்த - சிவந்த கைகளில மிககு விளங்கும், வளை ஒளி கண்டு - வளையல்களி

லேயும் உள்ள ஒளியைப் பார்த்து, நீத்து இலங்கு வாரும் - உலகப்பற்றைத் துறந்து தவவொழுக்கத்தால் விளங்குகின்ற முனிசிரேட்டர்களும், திகைத்து இரங்க வரும் மாதர் - திகைத்து மனமிரங்கும்படியாகிய பெண்களினுடைய, வித இங்கிதம் பிரியங்கள் - பலவகைப்பட்ட குறிப்புக்களையும் ஆசையை விளைக்கும் செயல்களையும், நகை கொஞ்சுதல் குணங்கள் - புன்சிரிப்பையும் கொஞ்சலையும் பிற குணங்களையும், மிகைகண்டு - மிகுதியாகப் பார்த்து, உற கலங்கி மருளாது - மிகவும் கலங்கி மயங்காமல், சங்கை விடு அற்று உணர்ந்து - சந்தேகத்தைவிட்டுப் பொருளினுள்ள பற்றொழிந்து அறிந்து, வலம் வந்து உனை புகழ்ந்து - உன்னைச் சுற்றிவந்து புகழ்ந்து, மிக விஞ்சு பொன்பதங்கள் தருவாய் - மிகவும் மேன்மையுடைய அழகிய திருவடிகளை அளிப்பாய் எ-று.

(வி-ரை) அழகு மிகுதி கூறுவார், 'நீத்திலங்கு வாரும் திகைத்து இரங்க வருமாதர் என்றார்.' நீத்திலங்கு-குறுக்கல் விகாரம் பெற்றது. வாரும் என்புழி உம்மை சிறப்பு. 'விழைவுவிடுத்த விழுமியோருள்ளமும் விழைவின்கட்டாழ' என்றும்,

'தலைபபடு சாலபினுக்குத் தளரேன சித்தம பிததவென்று
மலைத்தறி வாரில்லை யாரையுந் தேற்றுவன் எததுணையுங்
கலைசசிறு திங்கள் மிலைத்த சிற்றம் பலவன்கயிலை
மலைசசிறு மான்விழி யாலழி வுற்று மயங்கினனே' என்றும்,

நடந்தா ளொருகன்னி மாராச கேசரிநாட்டிற்கொங்கைக்
குடந்தா னைசைய லையிலா யதுகண்டு கொற்றவரும் [லாம்
தொடர்ந்தாசங் யாசியாயோ கமவிட்டார் சுத்த சைவரெல்
மடந்தா னடைத்தாச சிவபூசை யுங்கட்டி வைத்தனரே'

என்றும் வருவனவற்று ளறிக.

இங்கிதம் - குறிப்பு, சங்கை நீங்கிய காலத்தல்லது உணர்ச்சி சிறவாமையின் 'விடுசங்கை யுற்றுணர்ந்து' என்றார்.

'ஐயமில் பத்தித் தனிவித்து' என்றார் பெரியாரும். என்னும் திருச்சாழல் திருப்பாவானு மறிக

நகம்-மலை. கைலாயம் நகம் அங்கையிற் பிடுங்கும் அசுரன்-இராவணன்

இவ்வரலாற்றை,

'போர்த்தா யங்கொரானை யினீருரி
தோலபுங் காடரங்க நடமாட வல்லாய்
ஆர்த்தானரக் கன்றனை மால்வரைக்கீழ்
அடர்த்திட்டருள் செய்த வதுகருதாய்
வேர்த்தும் புரண்டும் விழுந்தும்
மெழுந்தாலென் வேதனையான விலக்கி யிடாய்
ஆர்த்தார் புனல்சூழ் திகைக்
கெடில வீரட்டானத் துறை யம்மானே'

என்னும் தேவாரத்தானும் அறிக.

அசுதன் - அறிவிலாதவன் அம்பலம்-சபை. இங்கே பொற்சபை இதற்கு ஞானசபை என்றும் பெயருண்டு.

சிதம்பரம் என்னும் பெயரும் அப்பொருட்டு சிதம்பரத்தின் பெருமையைப் பின்வரும் பாட்டா லறிக.

> 'கரத்தால் தொழுதிடினுங் கண்டிடினு நெஞ்சி னாலுஞ்
> சிரத்தால் வணக்கஞ் செயினும்-உரைத்திடினுந்
> தில்லைக்கப் பால்நின்று சேவித்தா னுஞ்சன்மம்
> எல்லைக்கப் பாலநிற்கு மே' (60)

61 தானனா தந்தனா தானனா தந்தனா
தானனா தந்தனா-தனதான

காதல்மோ கந்தருங் கோதைமார் கொங்கைசிங்
காரநா கஞ்செழுங் கனிவாய்கண்
காளகூ டங்கொடுங் காலனும் பம்பொருங்
காமபா ணஞ்சுரும் பினம்வாழும்
ஓதிகார் செஞ்சொல்மென் பாகுதே னென்றியார்
தோதமோ கந்தனா றுரையாதே
ஊசலா டும்புலன் தாரியே சென்றுநின்
றேயுமா றென்னையுங் கருதாதோ
தாதகி சண்பகம் பூகமா கந்தரந்
தாரமவா சந்திசந் தனநீடு
சாமவே தண்டெங்கு கோடகந் தண்டசந்
தானமா தெங்கள்பைம் புனமேவும்
நீதிலா வஞ்சியங் கீசபா தம்படுஞ்
சேகரா தண்டையங் கழல்பேணித்
தேவிபா கம்பொருந் தாதிநா தன்தொழுந்
தேசிகா வும்பர்தம் பெருமாளே.

(இ-ள்) தாதகி சண்பகம் - ஆத்திமரமும் சண்பகமரமும், பூகம் ஆர கந்தம மந்தாரம் - பாக்குமரமும் நிறைந்த மணமுடைய மந்தாரமரமும், வாசந்தி சந்தனம்-குருக்கத்தியும் சந்தனமரமும், நீடுசாமம வேதண்டம்-ஓங்கி வளரும் கரிய நிறத்தையுடைய மலையிலே வாழும், வெம்கோபம் கோதண்டம் சந்தானம - கொடிய கோபத்தையுடைய வில் வேடர்களது பரம்பரையில் வந்துதித்த, மாது எங்கள் பைம்புனம மேவும் - பெண்மணியும் எமது பசுமையான கொல்லைப்புனத்தில் தங்குபவளும், தீது இலா வஞ்சி-குற்றமில்லாத வஞ்சிக்கொடியை ஒத்தவருமாகிய வள்ளிநாயகியாரது, அம சீதம பதமபடும சேகரா - அழகிய குளிர்ச்சி பொருந்திய திருவடிகள் பொருந்தும் சிரோபூஷணத்தை உடையவனே!, தண்டை அம கழலபேணி - தண்டைகளைத் தரித்த அழகிய திருவடிகளை விரும்பி, தேவிபாகம் பொருந்து-உமாதேவியார் இடப்பாகத்தில் விரும்பி யுறைகின்ற, ஆதிநாதன தொழும் தேசிகா - முதற்கடவுளாகிய சிவபெருமான் வணங்குகின்ற ஆசாரியனே!, உம்பர் தம் பெருமாளே - தேவர்களுடைய பெருமானே!, காதல் மோகம் தரும கோதைமார் - ஆசையையும் மோகத்தையும் கொடுக்கும் பெண்களுடைய, கொங்கை சிங்கார நாகம்-ஸ்தனங்கள் அலங்காரமுள்ள மலைகளை ஒப்பாகுமென்றும், வாய செழும கனி - வாய செழுமையான கொவ்வைக் கனியை ஒக்குமென்றும், கண காளகூடம் கொடும் காலரூபம - கண்கள் ஆலகால விஷத்தையும் கொடிய

யமனுடைய வடிவத்தையும், பொரும காமபாணம்-சண்டைசெய்யும் மன்மதன் அம்பையும ஒபபாகுமென்றும், சுரும்பு இனம் வாழும் ஓதி கார்-வண்டுகளின கூட்டம் வாழ்கின்ற கூந்தல மேகத்தை ஒக்குமென்றும, சொல மென்பாகு தேன்-நோமையான சொறகள மென்மையான பாகையும் தேனையும் ஒபபாகும் என்றும, அயாநது-சொலலித் தளாந்து, ஓம் நமோ கந்த என்று உரையாது - ஓம் நமோ கந்த என்று தோத்திரம் செய்யாமல, ஊசல ஆடும புலன்-ஒருவழி நிலலாமல இஙகும அஙகும அலைகின்ற புலனகள், தாரியே சென்று நின்று - அவற்றின வழியே சென்று நிலைபெற்று, ஓயும் ஆறு ஒன்றையும கருதாதோ-அடங்கும் விதம் ஒன்றையும எண்ணுதோ எ-று.

(வி-ரை) நாகம - மலை. கனி - கொவவைக்கனி. கானகூடம் - ஆலகாலவிஷம. காலரூபம - யமனுடைய வடிவம். ஓதி-கூந்தல. ஓம் நமோ கந்த - என்பது மந்திரம ஓம் நமகுமாரய-சரவணபவ எனபனபோல இதுவும் மநதிரமாதலை வடமொழி நூலகளில் காணக.

புலன் ஒருவழிச செல்லாது பலவகைபபட்ட பொருள்களின் மேலுஞ் சென்று சென்று மீளுதலின் 'ஊசலாடு புலன்' என்றூா. ஓயதல்-செயலறறு நிற்றல. தாதகி-ஆத்தி. பூகம்-கமுகு. வாசந்தி-குருக்கத்தி. வேதணடம்-மலை.

'எங்கள் பைம்புனம்' என்றூா, பூ வுலகத்தில் மானிடவடிவந்தாங்கிய வள்ளிநாயகியாா வீற்றிருந்த புனம் ஆத

வினை. எங்கள் என்பதை மாது என்பதுடன் இயைத்து எம் பொருட்டு மானுட மாதராய் மண்ணுலகில் அவதரித்த காரணத்தால் எம்மையெல்லாம் ஆட்கொண்ட அம்மையார் ஆதலின், அவ்வுரிமை நோக்கிக் கூறினார் என உரைத்தலுமாம். கொலைத்தொழிலேயுடைய குறவர் குலத்துப் பிறந்தும் குற்றமொன்று மில்லாத குணமுடையா ராதலின் 'தீதிலா வஞ்சி' என்றார். சேகரர் என்பதைப் பெயராகக் கொள்க. கலவிக் காலத்து ஊடிய மகளிர் அடிகள் தலைவர் சென்னியிற்படுதல் இயற்கை என்பார், 'அஞ்சித பாதம் படுஞ் சேகரர்' என்றார்.

சிவப்பிரகாச சுவாமிகளும் பிரபுலிங்கலீலையில்

'ஆதிபகவன் றன்றூடல் தணிப்பான் பணிய வவ்விறைவன்
பாதமிறைஞ் சுமந்தாங்கு நெற்றிப்பகையு மல்குற் பகையுமாஞ்
சீதமதியு மரவும் விழுஞ் செயற்கு முவகை செய்யாமலே
மாதுபணியு மதற்குமனம் மகிழுமுமையை வணங்குவாம்.'

எனக் கூறியது காண்க.

தேவிபாகம் பொருந்த ஆதிநாதன்-சிவபெருமான்.

சிவபெருமான் உமாதேவியாரை இடப்பாகத்தே வைத்துக்கொண்டிருப்பது உலகத்தில் ஆன்மாக்கள் போகம் நுகரவேண்டியே என்பர். போகநுகர்ச்சி யின்றேல் ஆணவ மலம் நீங்குதலும் முத்திப்பேறு அடைதலும் அரிதாகும். இக்கருத்துக்களை,

'தென்பா லுகந்தாடுந் தில்லைச் சிற்றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பா லுகந்திலனேற் பேதா யிருநிலத்தோர்
விண்பாலி யோகெய்தி வீடுவர்காண் சாழலோ'

எனவரும் **திருவாசகத்** திருமறையானும்,

'போகியா யிருந்து யிர்க்குப் போகத்தைப் புரித லோரார்
யோகியா யோகமுத்தி யுதவுத லதுவு மோரார்
வேகியா றுபோற் செய்த வினையினை வீட லோரார்
ஊகியா மூடரெல்லா முமபரி னொருவ னென்பர்'

எனவரூஉம் **சிவஞானசித்தித்** திருவிருத்தத்தானும் அறிக. ()

62 தான தாத்த தனதன தான தாத்த தனதன
தான தாத்த தனதன - தனதான

ஆலமேற்ற விழியினர் சாலநீட்டி யழுதழு
தாகமாயக்க முறைமுறை பறைமோதி
ஆடல்பார்க்க நிலையெழு பாடைகூட்டி விரையம
யானமேற்றி யுறவினர் ரயலாகக்
காலமாச்சு வருகென வோலைகாட்டி யமபடர்
காவலாக்கி யுயிரது கொடுபோமுன்
காமவாழ்க்கை பொடிபட ஞானம்வாய்த்த கழலிணை
காதலாற்க ருதுமுணர் தருவாயே
வேலகீர்த்தி விதரண சீலவாழ்த்து சரவண
வியாழகோதர மருவிய முருகோனே
வேடர்நாட்டில் விளைபுன ஏனல்காத்த சிறுமியை
வேடமாற்றி வழிபடு மிளையோனே

ஞாலமேத்தி வழிபடு மாறுபேர்க்கு மகவென
நாணல்பூத்த படுகையில் வருவோனே
நாதபோற்றி யெனமுது தாதைகேட்ப வநுபவ
ஞானவார்த்தை யருளிய பெருமாளே.

(இ-ள்) வேல்-வேற்படையை உடையவனே!, கீர்த்தி விதரண-மிக்க புகழையுடைய கொடையுள்ளவனே!, சீலர் வாழ்த்து சரவண-ஒழுக்கமுடையோர் வாழ்த்துகின்ற சரவணப்பொய்கையில் அவதரித்தவனே!, வியாழ கோத்ரம் மருவிய முருகோனே - வியாழ கோத்திரத்தைச் சேர்ந்த முருகனே!, வேடர் நாட்டில் - வேடர்களுடைய நாட்டில், புனம் விளை ஏனல்-புனத்திலே விளைகின்ற தினையை, காத்த சிறுமியை-காத்துவந்த வள்ளியை, வேடம் மாற்றி வழிபடும் இளையோனே - தனது வேடத்தை மாற்றி வணங்குகின்ற இளையவனே!, ஞாலம் ஏத்தி வழிபடும் - உலகம் வாழ்த்தி வணங்கும், ஆறுபேர்க்கும் மகவு என-கார்த்திகை முதலிய ஆறு பெண்களுக்கும் குழந்தை என்று சொல்லும்படி, நாணல் பூத்த படுகையில் வருவோனே - நாணல் பூத்துள்ள படுகையில் வருபவனே!, நாத போற்றி என-குருநாதனே போற்றி என்று, முதுதாதை கேட்க - முதிர்ந்த தந்தை கேட்கும்படி, அநுபவம் ஞானம் வார்த்தை அருளிய பெருமாளே - அநுபவமுள்ள ஞானமொழியை அருள்செய்த பெருமானே!, ஆலம் ஏற்ற விழியினார்-விடத்தை ஒத்த கண்களுடையவரும், சால நீட்டி - மிகவும் குரலை உயர்த்தி, அழுது அழுது ஆகம் மாய்க்க - மேன்மேலும் அழுது உடம்பை மாய்க்க, முறை முறை பறைமோதி - முறையே

பறையை அடித்து, ஆடல் பார்க்க - ஆட்டத்தைப் பலரும் பார்க்கும்படி, நிலை எழு பாடைகூட்டி-பூமியின்மேல் பிணம் ஏறிச்செல்லும் பாடையைக்கூட்டி, விரைய மயானம் ஏற்றி-விரைவில் சுடுகாட்டில் சேர்த்து, உறவினர் அயல் ஆக-சுற்றத்தார் பக்கத்திலே நின்று, காலம் ஆச்சு வருக என-உமது வாழ்நாள் முடிந்துவிட்டது வருவீராக என்று, ஓலைகாட்டி-வாழ்நாள் முடிந்தபடியைத் தெரிவிக்கும் ஓலையைக் காட்டி, யமன் படர் - யமன் தன்னுடைய ஏவலாளர்களை, காவல் ஆக்கி காவலாக வைத்து, உயிர் அது கொடு போம் முன் - உயிரைக் கொண்டுபோவதற்கு முன்னர், காமம் வாழ்க்கை பொடிபட - ஆசைமிகும் வாழ்க்கை அழியும்படி, ஞானம் வாய்த்த கழல் இணை-ஞானம் மிகுந்த இரண்டு திருவடிகளையும், காதலால் கருதும் உணர்தருவாய் - அன்பால் நினைக்கின்ற உணர்ச்சியை அளிப்பாய் எ-று.

(வி-ரை) வருகென, வருக என்பதின் ஈற்றகரம் தொகுத்தல். 'ஓலை காட்டி' என்றது. உலகவழக்கைக் குறித்து நின்றது. எமபடர்-எமதூதர். உயிர் அது-அது பகுதிப்பொருள் விகுதி. கொடுபோமுன்-கொண்டுபோகு முன். பொடிபட - முற்றும் அழிய. ஞானம்பொருந்திய திருவடிகளை நினைத்தலினாலேயே வீடுபேறு கூடுமாதலின், அவற்றை நினைக்கின்ற உணர்ச்சியே அமையு மென்பார், 'ஞானம் வாய்த்த கழலிணை காதலாற் கருது முணர் தருவாயே' என்றருளிச் செய்தார். உணர்-உணர்வு, முதனிலைத் தொழிற்பெயர்.

'வேடமாற்றி வழிபடும் இளையோனே' என்றார் வேங்கை மரமாகவும், முதிய முனிவராகவும் வடிவங்கொண்டு எளியராயினார் ஆதலின் ஞாலம்-இடவாகுபெயர் மக்களைக் குறித்தலின். ஆறுபேர்-கார்த்திகை முதலிய பெண்கள்.

நாணல் பூத்த படுகை - சரவணப்பொய்கை. நாத-அண்மைவிளி. போற்றி-இகர ஈற்று வியங்கோள். முது தாதை-சிவபெருமான். எல்லாருக்கும்முன்னேயுள்ள முதல்வராதலின் சிவபெருமானை 'முதுதாதை' என்றார்.

'முன்னைப் பழம் பொருட்டு முன்னைப் பழம் பொருளே' என்றார் **மணிவாசகரும்**

அருமறை ஞான வாழ்த்தை-பிரணவமொழி (62)

சோணாசலம் (திருவருணை)

63 தனதன தானதன தனதன தானதன
தனதன தானதன-தனதான.

விடமத வேள்வாளியின் விசைபெறு மாலாகல
விழிகொடு வாபோவென வுரையாடும்

விரகுடனாருயிர் மனமுடைமா பாவிகள்
மிருகமத கோலாகல முலைதோய

அடையவு மாசாபர வசமுறு கோமாளியை
அவனியு மாகாசமும் வசைபேசும்

அசடஅ நாசாரனை அவலனை ஆபாசனை
அடியவ ரோடாள்வது மொருநாளே

வடகுல கோபாலர்த மொருபதி னாறாயிரம்
வனிதையர் தோள்தோய்தரு மபிராமன்

மரகத நாராயணன் மருமக சோணசல
மகிப சதாகாலமும இளையோனே
உடுபதி சாயாபதி சுரபதி மாயாதுற
உலகுய வாராகலி வறிதாக
உயரிய மாநாகமு நிருதரு நீறுயவிழ
ஒருதனி வேலேவிய பெருமாளே

(இ-ள்) வடகுல கோபாலா தம - வடக்கிலே வாழ்ந்த திருந்த இடையர்களுடைய, ஒரு பதினாறு ஆயிரம வனிதையர் தோள்-ஒப்பற்ற பதினாறாயிரம பெண்களுடைய தோள்களை, தோய தரும அபிராமம மரகதம் நாராயணன மருமக-சோகின்ற அழகிய மரகதரத்தினத்தை ஒத்த திருமாலுக்கு மருமகனே!, சோணசலம் மகிப - திருவண்ணாமலைக்குத தலைவரே!, சதாகாலமும இளையோனே-எக்காலமும் இளமையோடிருப்பவனே!, உடுபதி சாயாபதி சுரபதி-சந்திரனும் சூரியனும் இந்திரனும, மாயாது உற-அழியாது வாழ்வைப பொருந்தவும, உலகு உய-உலகம் வாழவும, வார ஆர கலி வறிது ஆக - நீண்ட கடல வீணாகவும, உயரிய மாநாகமும்-உயர்ந்த மாமரத்தின் வடிவுகொண்ட சூரபதுமனும் கிரவுஞ்சமலையும, நிருதரும் நீறு ஆய் விழ-இராக்கதர்களும் சாம்பராய அழிய, ஒரு தனிவேல் ஏவிய பெருமாளே-ஒரு ஒப்பற்ற வேற்படையைச செலுத்திய பெருமானே!, மதவேள் விடுவாளியின் - மன்மதன் செலுத்தும் அம்பினது, விசைபெறும் ஆலாகலம் விழிகொடு-வேகத்தையுடைய விஷத்தை ஒத்த கண்களைக்கொண்டு, வாபோ என

உரையாடும்-வா போ என்றுசொல்லும், விரகு உடன்-தந்தி ரத்தோடு, நூறு ஆயிர மனம் உடைமாபாவிகள் - லக்ஷம் விதமாகச் சிந்தையை உடைய பாவச்செயலையுடைய பெண்களின், மிருகமதம் கோலாகலம் முலைதோய-சந்தனம் பூசி புகழ்ந்து பேசப்படும் ஸ்தனங்களிலே சேர, அடைய வும் ஆசா பரவசம் உறு கோமாளியை - முழுவதும் ஆசை யிலே பரவசமடையும் பரிகாசத்தொழிலுடைய என்னை, அவனியும் ஆகாசமும்-பூமியும் தெய்வலோகமும், வசை பேசும் - பழியைக்கூறும், அசட அநாசாரனை - பயனற்ற ஒழுக்கமில்லாதவனும், அவலனை ஆபாசனை-வீணனவனும் நல்லவர்போ லிருப்பவனுமாகிய என்னை, அடியவரோடு ஆள்வதும் ஒருநாளே - அடியார்களோடு ஆட்கொள்ளுவ தாகிய ஒருநாளும் உண்டோ? எ-று.

(வி-ரை) விடுவாளி எனக் கூட்டுக. ஆலாகலம் - பாற் கடல் கடைந்த காலத்துத் தோன்றிய விஷம். கண்ணினாலே மனக் குறிப்பனைத்தும் விளங்கத் தெரிவிக்கும் தந்திரமுடை யார் என்பார், 'விழிகொடு வாபோ என வுரையாடும் விர குடன்' என்றார். அவர் மனம் பேதிப்பட்டுப் பலவழிச் சேறலின் நூறாயிரம் மனமுடை மாபாவிக ளென்றார்.

இதனை,

'வெம்புவாள் விழுவாள் பொய்யே
மேல்விழுந் தழுவாள் பொய்யே
தம்பலந் தின்பாள் பொய்யே
சாகிறே னென்பாள் பொய்யே

அம்பினுங் கொடிய கண்ணாள்
 ஆயிரஞ் சிந்தை யாளை
நம்பின போக மெல்லாம்
 நாயினுங் கடையா வாரே

என்று ஆன்றோர் வாக்கானும் அறிக

'அத்தி மலரும் அருங்காக்கை வெண்ணிறமும்
கத்துபுனல் மீன்பதமுங் கண்டாலும்—பித்தரே
கானார் தெரியற் கடவுளருங் காண்பரோ
மானார் விழியார் மனம்'

வனிதையர்-கோபியர் மரகத நாராயணன் - பச்சை நிறமுடைய திருமால்

'பச்சைமா மலைபோல்மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரரேறே ஆயர்தங் கொழுந்தே யென்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே,

என்றார் தொண்டரடிப்பொடி ஆழ்வாரும்,

மருமக - அண்மைவிளி 'சதாகாலமும் இளையோனே' என்றார், என்றுங் குமரனாயிருக்கும் இயல்பு நோக்கி. இது பற்றி யன்றே ஆசிரியர் நக்கீரனார்

'குன்ற மெறிந்தாய் குரைகடலிற் சூர்தடிந்தாய
புன்றலைய பூதப் பொருபடையாய்—என்றும்
இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே
உளையாய்என் உள்ளத் துறை.

என அருளிச் செய்வாராயினர்.

உடுபதி - சந்திரன்; உடு - நக்ஷத்திரம்; பதி-தலைவன்; நக்ஷத்திரங்கள் இருபத்தேழும் சந்திரனைச் சுற்றி வருதலின் அவைகளுக்குச் சந்திரன் நாயகனெனக் கூறுதல் மரபு. சாயாபதி-சூரியன்; சாயா - நிழல், சாயையைச் சாயாதேவி என உருவகப்படுத்திச் சூரியனுக்கு மனைவியார் எனக் கூறுதலும் மரபு. ஆகலி-கடல் நிருதர்-அசுரர். மாநாகம்-ஈண்டுக் கிரௌஞ்சகிரி.

சத்தி வடிவமாகிய தனது வேற்படையை விடுத்துக் கிரௌஞ்சமலை வடிவமாக நின்ற அசுரனையும், அசுரர் பிறரையும் கொன்றார் ஆதலின் 'நீறாய் விழ ஒரு தனி வேலைவிடு பெருமாளே' என்றார். (63)

சோணாசலம்

64 தன்னதத்தன தானன தன்னதத்தன தானன
தன்னதத்தன தானன-தனதான

இடருக்கிடராகிய கொடுமைக்கணை மேலவரு
மிறுதிச்சிறு காலவரு மதனாலே

இயலைத்தரு கானக முயலைத்தரு மேனியி
லெரியைத்தரு மாமதி நிலவாலே

தொடரக்கொடு வாதையி லடையக்கரை மேலலை
தொலைபத்தனி வீசிய கடலாலே

துணைபற்றலி பூமல ரணையிற்றனி யேனுயிர்
துவளத்தகு மோதுயர் தொலையாதோ

வடபொற்குல மேருவின் முடுகிப்பொரு சூரனை
மடியச்சுட ஏவிய வடிவேலா

மறவர்குல மாமொரு குறமெய்த்திரு மாமகள்
மகிழப்புன மேவிய மயில்வீரா

அடரப்படர் கேதகை மடலிற்றழை சேர்வய
லருணைத்திரு வீதியி லுறைவோனே

அவனித்திரு மாதொடு சிவனுக்கிமை யாவிழி
அமரர்க்கர சாகிய பெருமாளே.

(இ-ள்) வடபொன் குலம் மேருவின்-வடக்கின்கண் உள்ளதாகிய பொன்மயமான சிறந்த மேருமலையைப்போல, முடுகி பொரு சூரனை - மேலெழுந்து சென்று சண்டைசெய்யும் சூரனை, மடிய சுட ஏவிய வடிவேலா-மடியும்படியும் சுடுவதற்கும் செலுத்திய வடித்த வேலையுடையவனே', மறவர் குலம் ஆம் ஒரு குற மெய் திருமாமகள்-வீரர் குலமாகிய 'ஒப்பற்ற' குறவருடைய அறிவையுடைய அழகிய சிறந்த வள்ளிநாயகியார், மகிழ புனம் மேவிய மயில்வீரா-மகிழும்படி புனத்திலே சென்ற மயில்வீரனே', அடர படர் கேதகை மடலில்-நெருக்கமாகப்படர்ந்த தாழையின் மடலில், தழைசேர் வயல்-இலைகள் சேர்கின்ற வயலையுடைய, அருணை திரு வீதியில் உறைவோனே-திருவண்ணாமலையின் அழகிய தெருவில் தங்குபவனே', அவனி திருமாலொடு-பூமியில் விஷ்ணுமூர்த்தியுடனும், சிவனுக்கு - சிவபெருமானுக்கும், இமையா விழி அமரர்க்கு-இமைத்தலில்லாத கண்களையுடைய தேவர்களுக்கும், அரசு ஆகிய பெருமாளே-தலைவராகிய பெருமானே', இடருக்கு இடர் ஆகிய - முன்னரேயுள்ள துன்பத்துக்குமேல் துன்பமாகிய, கொடுமை

கணை-கொடிய அம்போடும், மேலவரும் இறுதி சிறுகால்-மேலே வீசும் துன்பத்துக்கு இறுதியைத்தரும் தென்றற் காற்றோடும், வரும் மதனுல-வருகின்ற மன்மதனுலும், இயலை தரு கானகம் முயலை - அழகையுடைய காட்டு முயலை, தரு மேனியில-உடைத்தாயிருக்கின்ற உடம்பிலே, எரியைதரும் மாமதி நிலவால - நெருப்பைக் கொடுக்கின்ற சிறந்த சந்திரனுடைய கிரணங்களாலும், தொடர கொடு வாதையில அடைய-துன்பம் தொடர்ந்து மிக்க வருத்தத்தைச் சேர, கரைமேல அலைதொலைய - கரையின்மேல அலைகெடும்படி, தனி வீசிய கடலால - தனியாக வீசிய கடலாலும், துணை அற்று - துணையின்றி, அணி பூமலா அணையில - அலங்கரித்துள்ள பூக்கள் மலர்ந்த படுக்கையில, தனியேன உயிா-தனியேனுகிய எனது உயிா, துவளத தருமோ-தளர்தல் தருதியோ, துயாதொலையாதோ-துன்பம் ஒழியாதோ எ-று.

(வி-ரை) சிறுகால-தென்றல்; மந்தமாருதம் என்ற வட நூல வழக்கங் காணக சந்திரனிடத்துள்ள களங்கத்தை முயலெனக் கூறுதல மரபு.

வடபொற்குலமேரு-வடக்கின்கண் உளதாகிய அழகிய சிறப்புப்பொருந்திய மேருமலை; இன-ஐந்தனுருபு; ஒப்புப் பொருளில வந்தது. இமையாவிழி அமரா;-இமையாத கண்களையுடையதேவா; இமைத்தல்-மூடுதல; ஒவற இமைக்கும், விளங்கவிரொளி' எனனும் திருமுருகாற்றுப் படையிலும், 'நுதலது இமையா நாட்டம்' எனவரூஉம் அகநானூறு அடியிலும் இமைத்தல் இப்பொருளில் வருதல் காண்க அரசு-சொல்லால் அஃறிணை பொருளால உயர்திணை. (64)

சுவாமிமலை

65 தான தனதன தான தனதன
தான தனதன-தனதான

பாதி மதிநதி போது மணிசடை
நாத ரருளிய குமரேசா
பாகு கனிமொழி மாது குறமகள்
பாதம வருடிய மணவாளா
காது மொருவிழி காக முறஅருள
மாய னரிதிரு மருகோனே
கால னெனையணு காம லுனதிரு
காலில வழிபட அருளவாயே
ஆதி யயனொடு தேவர் சுரருல
காளும வகையுறு சிறைமீளா
ஆடு மயிலினி லேறி யமரர்கள்
சூழ வரவரும இளையோனே
சூத மிகவளர் சோலை மருவுசு
வாமி மலைதனில உறைவோனே
சூர னுடலற வாரி சுவறிட
வேலை விடவல பெருமாளே.

(இ-ள்) ஆதி அயனொடு-மேன்மையுள்ள பிரமதேவனு டன், தேவர் சுரர் உலகு ஆளும் வகை உறு - தேவர்களும் சுவர்க்க லோகத்தை அரசாளும்படி, சிறைமீளா - அவர்கள் அடைந்த சிறையை மீட்டு, ஆடும் மயிலினில் ஏறி-நடனம் செய்கின்ற மயிலின்மேல் ஆரோகணித்து, அமரர்கள் சூழ

வர வரும் இளையோனே-தேவர்கள் சூழ்ந்து வர வரும் இளையவனே!, சூதம் மிகவளர் சோலை-மாமரங்கள் மிகவும் வளர்கின்ற சோலைகள், மருவு சுவாமி மலைதனில் உறைவோனே-சூழ்ந்துள்ள சுவாமிமலையில் வசிப்பவனே!, சூரன் உடல் அற-சூரனுடைய உடம்பு அறும்படியும், வாரி சுவறிட-கடல்நீர் வற்றிப்போகவும், வேலைவிடவல்ல பெருமாளே-வேலைச் செலுத்துவதற்கு வல்ல பெருமானே!, பாதிமதிநதி போதும் அணி சடை-பிறைச் சந்திரனையும் கங்கையையும் கொன்றை மலரையும் சூடுகின்ற சடையையுடைய, நாதர் அருளிய குமரேசா-சிவபெருமான் பெற்ற குமரேசனே!, பாகு கனிமொழி மாது குறமகள்-பாகையும் கனியையும் ஒத்த சொல்லையுடைய வள்ளிநாயகியாரது, பாதம் வருடிய மணவாளா-திருவடிகளைத் தடவிய மணவாளனே! காதும் ஒரு விழி காகம் உற அருள-கெடுக்கப்பட்ட ஒரு கண்ணைக் காகம் அடையும்படி செய்த, மாயன் அரி திருமருகோனே-மாயச் செயலுடையவனாகிய திருமாலுக்கு அழகிய மருமகனே!, காலன் எனை அணுகாமல்-யமன் என்னைச் சேராதபடி, உனது இருகாலில் வழிபட அருள்வாய-தேவரீருடைய இரண்டு கால்களிலும் வணங்க அருள் செய்வாய் எ-று.

(வி-ரை) பாதிமதி-இளம்பிறை. நதி-கங்கை. போது-கொன்றைமாலை. மாது-வள்ளிநாயகியார். வருடுதல்-தடவுதல். காதும் ஒருவிழி காகம் உற அருள்-கெடுக்கப்பட்ட ஒரு கண்ணைக் காகம் அடையும்படி அருள்செய்த. 'இராம

ரும் சீதாபிராட்டியாரும் ஓரிடத்திருந்தபோது காகாசுரன் என்பவன் சீதையைத் தாக்கிய காரணத்தால் இராமர் பிர யோகித்த தருப்பைப் புல்லாகிய அம்பினால் ஒரு கண்ணி ழந்து பின்னர் அவர் சகாயத்தால் அதனைப் பெற்றான் என் பது இராமாயணக் கதை.'

சிறைமீள-சிறையை மீட்டு மீளா - செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். சூதம் - மாமரம். வாரி - கடல். வேலை விட்டவல பெருமாள்-உக்கிர குமார பாண்டியன் ஆடு மயில்-நடனஞ் செய்யும் மயில். சுவாமிமலை - திருவேரகம்; இது கும்பகோணத்துச் சமீபத்திலுள்ள முருகன் திருப்பதி களில் ஒன்று. முருகன் திருவடிகளில் வழிபட்டார் மரணத் தினின்று நீங்கி வீடுபெறுவாராதலின் 'காலனெனை அணு காமலுன திருகாலில் வழிபட அருள்வாயே' என்றார். (65)

திருத்தணிகை

66 தனதந் தனதத் தனதந தனதத
தனதந தனதத-தனதான.

குயிலொன் றுமொழிக் குயினின் றலையக்
கொலையின் பமலர்க் கணையாலே

குளிருந் தவளக் குலசந் திரவொளிக்
கொடிகொங் கையினற் றனலாலே

புயலவந் தெறியக் கடலின் றலறப்
பொருமங் கையருக் கலராலே

புயமொன் றமிகத் தளர்கின் றதனிப்
புயம்வந் தணையக் கிடையாதோ

சயிலங் குலையத் தடம்பொரு தகரச
சமனின் றலையப் பொருவீரா

தருமங் கைவனக் குறமங் கையைமெய்த்
தனமொன் றியமணித் திருமார்பா

பயிலுங் ககனப் பிறைதண் பொழிலிற்
பணியுந் தணிகைப் பதிவாழ்வே

பரமன் பணியப் பொருளன் றருளிற்
பகர்செங் கழநிப் பெருமாளே.

(இ-ள்) சயிலம் குலைய தடம்பும் தகர - கிரவுஞ்சமலை நிலைகெட்டுப் பக்கங்களால் உடைபட்டழியவும், சமன் நின்று அலைய பொரும் வீரா - யமனை நிலைத்துத் துன்புறுத்தும்படி சண்டைசெய்யும் வீரனே!. அம் கை தரும - அழகிய கையைத் தருகின்ற, வனம் குற மங்கையா - காட்டிலே வாழும் குறப்பெண்ணாகிய வள்ளிநாயகியின், மெய்த்தனம் ஒன்றும் மணி திரு மார்பா - பர அபர ஞானங்களாகிய ஸ்தனங்கள் பொருந்துகின்ற அழகிய மேன்மைபொருந்திய மார்பை உடையவனே!, ககனம் பயிலும் பிறை - ஆகாயத்திலே சஞ்சரிக்கும் பிறைச்சந்திரன், தண் பொழில் பணியும் தணிகைப்பதி வாழ்வே - குளிர்ந்த சோலையில் வணங்குகின்ற திருத்தணிகை யென்னுந் திருப்பதியில் கோயில் கொண்டிருப்பவனே!, பரமன் பணிய பொருள் அன்று அருளில் பகர் செங்கழநி பெருமாளே - சிவபெருமான் வணங்கப் பிரணவத்தின் பொருளை அக்காலத்துக் கருணையினால் சொல்லியருளிய செங்கழநீர்ப் பெருமானே!, குயில்

ஒன்று மொழி - குயிலை ஒத்த இனிமையான சொல்லை யுடைய தலைவி, குயில் நின்று அலைய - குயில் நின்று தன் குரலோசையினால் துன்பஞ் செய்யவும், கொலை இன்பம் மலர் கணையாலும்-கொலைவினை செய்யும் இன்பமான பூங் கணையாலும், குளிரும் தவளம் குலவு சந்திரன் ஒளி - குளிர்ச்சி பொருந்திய வெண்மையான உயர்ந்த சந்திரனது ஒளியாலும், கொங்கையின் கொடி முத்து அனலால் - ஸ்தனங்களில் பொருந்திய ஒழுங்காக உள்ள முத்துமாலை யின் நெருப்பாலும், புயல்வந்து எறிய - மேகம் வந்து வீச வும், கடல் நின்று அலற-கடல் நிலைபெற்று அலறவும், புயம் வந்து அணைய கிடையாதோ-தோளிலே வந்து பொருந்தக் கிடைக்காதோ எ-று.

(வி-ரை) குயிலொன்று மொழி-குயிலையொத்த மொழி யையுடைய தலைமகள். தவளம்-வெண்மை. குயில்-சந்திரன் முதலிய பொருள்கள் தலைவரைப் பிரிந்த நங்கையருக்கு மயலை விளைத்தலின் அவர் அவற்றைப் பழித்தலாகக் கூறு தல் கவி மரபு. சந்திரனைப் பழித்தலைப் பின்வரும் நைடதச் செய்யுளானறிக.

நைடதம்

'கன்று குணிலாக் கனியுகுத்தோன்
கடலி னமுதங் கடைந்தெடுப்பக்
குன்ற மிடலுங் கலையணைந்து
தகர்ந்துள் ளாவி குறைந்திலையே
துன்று கதிர்வெண் கலைமதியே
சுலவு திரைநீர்க் கடல்குடித்த

அன்று கலச முனிவயிற்றி
லுற்று யெனனி லுழலாயே.'

குயிலைப் பழித்தலைப் பின்வரும் பிரபுலிங்கலீலைச் செய்யுளானறிக.

பிரபுலிங்கலீலை

'உயிர்த்த பொழுதே நின்குரல் கேளா
முன்னமே யோடிற் றீன்றதாய்
நயத்தின் வளர்த்த தாய்க்குரல்
கேட்டலுமே நடுங்கத் துறந்தாற்
பயத்தமலர்ப் பூங்காவகத்தி லிருந்து
பல்காற் கூவினாற்
செயிர்த்து நின்னைக் குயிலே நான்
வெறுத்தல் செய்யவேண்டுமோ.'

முத்துக்கு அனல் பிறந்தது கொங்கைகளால் என்க. புயல்-மேகம். அலர்-பழிச்சொல், தலைவி மங்கையர் சொல்லும் அவர் மொழிக்கு ஆற்றாது வருந்துகின்றாளாதலின் 'அலரால் தளர்கின்ற' என்றார். புயம், புஜம் என்னும் வடசொல்லின் திரிபு. சைலம்-மலை. தடம்-கடல். ககனம்-ஆகாயம். தணிகைப்பதியிலுள்ள சோலைகள் வானுற வோங்கி வளர்ந்துள்ளன ஆதலின் 'பயிலுங்ககனப் பிறைதண் பொழிலிற் பணியுந் தணிகைப்பதி' என்றார். செங்கழுநி-செங்கழுநீர் என்பதன் மரூஉ. இச்செய்யுள் ஆன்மாவைத் தலைமகளாகவும் இறைவனைத் தலைமகனாகவும் வைத்துப் பாடப்பட்டது. இவ்வாறு வருதலை,

‘சொல்மாலை பயிலுகின்ற குயிலினங்காள் சொல்லீரே
பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்
முன்மாலை நகுதிங்கள் முகிழ்விளங்கு முடிச்சென்னிப்
பொன்மாலை மார்பனென் புதுநலமுண் டிகழ்வானோ.’

எனும் அப்பர் தேவாரத்தினுங் காண்க. (66)

பொது

67 தந்த தானன தந்த தானன
தந்த தானன-தன தான.

கண்டு போல்மொழி வண்டு சேர்குழல்
கண்கள் சேல்மதி முகம்வேய்ந்தோள்
கண்டு பாவனை கொண்டு தோள்களி
லொண்டு காதலி லிருகோடு
மண்டி மார்பினில் விண்ட தாமென
வந்த கூர்முலை மடவார்தம்
வஞ்ச மாலதில் நெஞ்சு போய்மடி
கின்ற மாயம தொழியாதோ
கொண்ட லார்குழல் கொண்டை போல்விழி
கொண்டு கோகில மொழிகூறுங்
கொங்கை யாள்குற மங்கை வாழ்தரு
குன்றில் மால்கொடு செலும்வேலா
வெண்டி மாமன மண்டு சூர்கடல்
வெம்ப மேதினி தனில்மீளா
வென்று யாவையு மன்றி வேலையும்
வென்று மேவிய பெருமாளே.

(இ-ள்) கொண்டல் ஆர் குழல் - மேகத்தை ஒத்த கூந்தலையும், கெண்டைபோல் விழி கொண்டு - கெண்டை மீனை யொத்த கண்களையுங் கொண்டு, கோகில மொழி கூறும்-குயில்போன்ற இனிய சொற்களைப் பேசும், கொங்கையாள்-தமக்குத்தாமே ஒப்பாகிய ஸ்தனங்களை யுடையவளும், குற மங்கை - குறவர் பெண்ணுமாகிய வள்ளிநாயகி, வாழ்தரு குன்றில் - வாழ்கின்ற மலையில், மால்கொடு செலும் வேலா-மயக்கங்கொண்டு செல்லும் வேற்படையை உடையவனே!, கெண்டி மாமனம் மண்டு சூர்கடல் - பெரிய மனம்பொருந்திய சூரனாகிய கடல், வெம்ப-வாட, மேதினிதனில்-பூமியில், மீளா-மீண்டு, யாவையும் வென்று-எல்லாவற்றையும் வெற்றி கொண்டதுமன்றி, வேளையும் வென்றுமேவிய பெருமாளே-மன்மதனையும் வெற்றிகொண்டு விளங்கிய பெருமானே!, கண்டுபோல் மொழி - கற்கண்டைபோலும் சொற்களையும், வண்டு சேர் குழல்-வண்டுகள் சேர்ந்த கூந்தலினையும், கண்கள் சேல்-சேல்போன்ற கண்களையும், மதிமுகம் - சந்திரனை ஒத்த முகத்தையும், வேய்தோள்-பச்சை மூங்கிலைப்போன்ற தோள்களையும், கண்டு பாவனை கொண்டு-பார்த்து எண்ணங் கொண்டு, தோள்களில் ஒண்டு காதலில்-தோள்களில்பொருந்திய காதலினால், இருகோடு மண்டி - இரண்டு கொம்புகள் நெருங்கி, மார்பினில் விண்டது ஆம் என-மார்பினில்பொருந்தியன என்று சொல்லும்படி, வந்த கூர் முலை மடவார் தம்-மேலெழுந்து தோன்றிய கூரிய ஸ்தனங்களையுடைய பெண்களின், வஞ்சம் மால் அதில்-வஞ்சமுள்ள காம மயக்கத்தில்,

தியன நெஞ்சுபோய-மனம் அழிந்து, மடிகின்ற மாயம் அது ஒழியாதோ - ஒழிகின்ற பொய்யொழுக்கம் நீங் காதோ. எ-று

(வி-ரை) கண்டு - கற்கண்டு. கோடு - யானைக்கொம்பு. வஞ்சமால் - பொய்யாகிய மயக்கம் கொண்டல் - மேகம்; நீரைக்கொள்ளுதல் காரணக்குறி. கோகிலம்-குயில். மால் கொடு செலும் வேலா-ஆசை மயக்கங்கொண்டு செல்லு கின்ற வேற்படையை யுடையோனே, மீளா-செய்யா என் னும் வாய்பாட்டு வினை யெச்சம். வென்று - வெல் பகுதி; உ-வினையெச்ச விகுதி, ற்-இறந்தகால இடைநிலை, ல் ன் ஆனது சந்தி யாவையும் என்புழி உம்மை முற்றுப் பொரு ளது. வேள-மன்மதன், விரும்பத்தக்க அழகுடையவன். கட்டழகு-கட்டிளமை என்பனவற்றால் முருகன் மன்மத னினுஞ் சிறத்தலின் 'வேளையும் வென்று' கூறினார் (67)

குருகிரி (சுவாமிமலை)

68 தனதன தத்தத தத்தன தத்தத
தனதன தத்தத தத்தன தத்தத
தனதன தத்தத தத்தன தத்தத-தனதான.

தலைமயிர் கொக்குக் கொக்கந ரைத்துக்
கலகலெ னப்பற் கட்டது விட்டுத்
தளர்நடை பட்டுத் தத்தடி யிட்டுத் தடுமாறித்

தடிகொடு தத்திக் கக்கலு பெருத்திட்
டசனமும் விக்கிச் சத்தியெ டுத்துச
சளியுமி குத்துப் பித்தமு முற்றிப் பலகாலும்

திலதயி லத்திட் டொக்கவெ ரிக்கத்
திரிபலை சுக்குத் திப்பிலி யிட்டுத்
தெளியவ டித்துற் றியைத்துட லத்திட் டுயிர்போமுன்

திகழ்தமிழ் சற்றுச் சொற்கள் பயிற்றித்
திருவடி யைப்பற் றித்தொழு துற்றுச்
செனனம றுக்கைக் குப்பர முத்திக் கருள்தாராய்

கலணைவி சித்துப் பக்கரை யிட்டுப்
புரவிசெ லுத்திக் கைக்கொடு வெற்பைக்
கடுகந டத்தித் திட்டென எட்டிப் பொருசூரன்

கனபடை கெட்டுத் தட்டற விட்டுத்
திரைகட லுக்குட் புக்கிட எற்றிக்
களிமயி லைச்சித் ரத்தில்ந டத்திப் பொருகோவே

குலிசன்ம கட்குத் தற்பர மற்கக்
குறவர்ம கட்குச் சித்தமும் வைத்துக்
குளிர்தினை மெத்தத் தத்துபு னத்திற் றிரிவோனே

கொடியபொ ருப்பைக் குத்திமு றித்துச்
சமரமி லைத்துத் தற்பர முற்றக்
குலகிரி யிற்புக் குற்றுறை யுக்ரப் பெருமாளே.

(இ-ள்) கலணை விசித்து-சேணத்தைக் கட்டி, பக்கரை இட்டு-அங்கவடியை இட்டு, புரவி செலுத்தி-குதிரையைச் செலுத்தி, கைக்கொடு வெற்பை - கையையுடைய கொடிய மலையை ஒத்த யானையை, கடுக நடத்தி - விரைவாகச் செலுத்தி, திட்டென எட்டி பொருசூரன் - திடுமென நெருங்கிச் சண்டைசெய்யும் சூரன், கனம் படை கெட்டு-பெரிய படை அழிய, தட்டு அறவிட்டு - தடுக்க முடியாத

படி கைவிட்டு, திக்கு[illegible]லுககுள் புககிட-அலைகின்ற கடலி னுள் புக, ஏறறி க[illegible]ககிச செருக்கையுடைய மயிலே, சிதரத்தில நடத்தி பொருகோவே - அழகாக நடத் திச சணடையிடும் தலைவனே', குலிசனமகட்கு தபபியும்- இந்திரன மகளாகிய தெயவயானைககுப பிழைததும், மறறு அ குறவர் மகட்கு-அந்த இழிவான குறபெண் ணுகிய வள்ளிககு, சிததமும வைத்து - மனம கொணடு, குளிர் தினை மெதத ததது-குளிாநத தினை மிகவும் வளா கினற, புனததில திரிவோனே-கொலலை நிலததில திரிகினற வனே, கொடிய பொருபபை குததி முறிதது-கொடுமை யான கிரவுஞ்ச மலையைககுததி அழிதது, சமரம் விளைதது- சணடையை உணடாககி, தறபரம உறறு-தானே மேலான பொருளாகப பொருநதி, குலகிரியில புககு உறறு சிறநத மலையிற சென்று அமாநது, உறை உகரம பெருமாளே- வசிககினற கோபததையுடைய பெருமானே', தலைமயிா கொக்குக்கு ஒக்க நரைதது-தலைமயிா கொக்கின நிறததைப பொருந்த வெளுததும், கலகலென பல கடடு அறுது விட்டு- கலகலென்று பறகள் கடடு அழிநதும, தளா நடைபட்டு- தளாந்த நடை உணடாகியும், தத்து அடி இட்டு தடுமாறி- தத்துகின்ற அடிவைததுத தடுமாறமடைநதும, தடிகொடு தத்தி-தடியைக்கொணடு ததது நடநதும், ககக்கல பெருத் திட்டு-இருமல மிகுநதும, அசனமும் விக்கி-உணவும விககி யும், சத்தி எடுத்து சளியும மிகுத்து-மேன்மேலும் இருமிச் சளியும் அதிகரிக்தும், பித்தமும் முறறி பலகாலும் - பித்த

மும் முதிர்ந்து பலமுறையும், தில்ம தயிலத்து இட்டு-எண்ணெயில் போட்டு, ஒக்க எரிக்க-ஒத்துப்போகும்படி எரிக்க, திரிபலை சுக்கு திப்பிலி இட்டு-கடு, நெல்லி, தான்றி, சுக்கு, திப்பிலி ஆகிய இச்சரக்குகளை இட்டு, தெளிய வடித்துற்று-தெளிவாக வடித்தெடுத்து, உய்த்திட்டு - வாயக்குள் செலுத்தி, உடல் செத்திட்டு உயிர் போமமுன - உடல் அழிந்து உயிர் நீங்குவதற்கு முன்னர், திகழ புகழ் கற்று-விளங்குகின்ற தேவரீரது புகழைத் தெரிந்து, சொற்கள் பயிற்றி - அப்புகழ்க்குரிய சொற்களில் பழகும்படி செய்து, திருவடியைப் பற்றி - அழகிய அடிகளைப் பற்றிக் கொண்டு, தொழுது உற்று - வணங்கி, சனனம் அறுக்கைக்கு - பிறப்பை ஒழிப்பதற்கு, பரமுத்திக்கு அருள் தாராய் - மேலான மோக்ஷத்துக்குத் திருவருள் தருவாயாக எ-று.

(வி-ரை) தலைமயிர் கொக்குக்கு ஒக்க நரைத்தல-தலைமயிர் கொக்கின் நிறத்திற்கு ஒப்பாகும்படி அத்துணை வெண்மையாதல் இதுபோல,

'குயிலொத் திருள்குஞ்சி கொக்கொத் திருமல
பயிலப் புகாமுன்ன நெஞ்சே—மயிலைத்
திருப்புன்னை யங்கானல் சித்தியா யாகி
லிருப்பின்னை யங்காந் திளைத்து.'

எனப் பதினோராந் திருமுறையில் வருதல் காண்க.

பலகட்டு - பல்லினது உறுதி. தளர் நடை - வினைத்தொகை. கலகலென-ஒலிக்குறிப்பு. அசனம்-சோறு. தில

தையிலம்-எண்ணெய். சித்தமும் என்புழி உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை. திரிபலை - கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய். உய்த்து-செலுத்தி. பயிற்றி-பயில என்னும் தன்வினைப்பகுதி பயிற்று எனப் பிறவினையாகி இகர விகுதியைப் பெற்று உகரங்கெட்டு முடிந்தது. திருவடியே பிறவிக்கடல் நீந்துதற்குரிய தோணியாதலின் 'திருவடியைப் பற்றி' என்றார்.

திருவடியைப் பற்றி ஆசையிற் பற்ற வேண்டுதலின் அவ்வாறு கூறினாரென்னலுமாம். திருவடியின் பெருமையை

'அரவணையான் சிந்தித் தரற்றுமடி
அருமறையான் சென்னிக் கணியாமடி
சரவணத்தான் கைதொழுது சாருமடி
சார்ந்தார்கட் கெல்லாஞ் சரணாமடி
பரவுவார் பாவம் பறைக்குமடி
பதினெண் கணங்களும் பாடுமடி
விரவுநீர்த் தெண்கெடில நாடன் அடி
திருவீரட் டானத்தெம் செல்வனடி'

என வரூஉம் **திருநாவுக்கரசு சுவாமிகள்** திருவாக்கானறிக.

பரமுத்தி என்றார் அபரமுத்திகள் உண்மையின். திரைகடல்-வினைத்தொகை. குலிசன் மகள்-தேவேந்திரன் மகளாகிய தெய்வயானையம்மையார். தெய்வயானையம்மையார் அறியாவண்ணம் வள்ளி நாயகியாரிடம் சேறல் அருமை என்பார் 'குலிசன் மகட்குத் தப்பியும் மற்றைக் குறவர் மகட்குச் சித்தமும் வைத்து' என்றார். அகரச்சுட்டு இழிவு குறித்து நின்றது. பொருப்பு-மலை. சமரம்-சண்டை.

69 தன்னதன தன்னதன தன்னதன தன்னதன
தன்னதன தன்னதன-தனதான.

அளகநிரை குலையவிழி குவியவளை கலகலென
அமுதமொழி பதறியெழ அணியாரம்
அழகொழுகு புளகமுலை குழையஇடை துவளமிக
அமுதநிலை அதுபரவ அதிமோகம்
உளமுருக வருகலவி தருமகளிர் கொடுமையெனு
முறுகபட மதனிலமதி யழியாதே
உலகடைய மயிலினமிசை நொடியளவில வலம்வருமு
னுபயநறு மலரடியை அருள்வாயே
வளையுமலை கடலசுவற விடுபகழி வரதனிரு
மருதினொடு பொருதருளு மபிராமன்
வரியரவின மிசைதுயிலும் வரதசய மகளகொழுநன்
மருகஅமர முடுகிவரு நிருதேசர்
தளமுறிய வரைதகர அசுராபதி தலைசிதற
தகனமெழ முடுகவிடு வடிவேலா
தரளமணி வடமிலகு குறவாதிரு மகள்கணவ
சகலகலை முழுதும்வல பெருமாளே.

(இ-ள்) வளையும அலைகடல சுவற-பூமியைச சுற்றியுள்ள அலைநிறை கடலின் நீர்வற்றிப் போம்படி, விடு பகழி வரதன்-அம்பைச் செலுத்தும வரதனே!, இருமருதினொடு பொருதருளும் அபிராமன் - பெரிய மருதமரத்தினுடன் போரைசசெய்யும் அழகனும், வரிஅரவின் மிசைதுயிலும்-வரிகளையுடைய ஆதிசேஷன்மேல அறிதுயிலஅமரும், வரத

சயமகள கொழுநன்-வரஙகளைததரும் ஜயலக்ஷ்மியின் கண வனுமாகிய திருமாலுக்கு, மருக - மருமகனே, அமா முடுகி வரு நிருதேசா - சண்டைககு விரைநது வருகின்ற அவுண ருடைய, தளம் முறிய - சேனைகள தோளவியடையவும், வரைதகர - கிரவுஞசமலை சிதறவும், அசுரா பதிதலை சிதற- அவுணா தலைவனுகிய சூரபதுமனுடைய தலை துண்டுபடவும், தகனம எழ - நெருபபுணடாகவும், முடுகவிடு வடிவேலா- விரைவாகச செலுததுகின்ற வடிதத வேலையுடையவனே!, தாளம் மணி படம இலகு - முததுமாலையும இரத்தினமாலை யும் விளஙகுகின்ற, குறவா திருமகள் கணவ - வளளிநாயகி யின கணவனே!, சகலகலை முழுதுமவல பெருமாளே - எல லாக கலைகளிலும் முழுதும் வலலவனுகிய பெருமானே!, அளகம நிரை குலைய-கூந்தலினது வரிசை அழியவும், விழி குவிய-கண்கள் மூடவும, வளை கலகலென - வளையலகள் கல கலென ஒலிக்கவும், அமுதம் மொழி பதறி எழ-தேவாமிர்த த்தை ஒதத சொறகள பதறித தோனறவும், அணி ஆரம் - அழகிய முத்துமாலை யணிநத, அழகு ஒழுகு புளகம முலை- குழைய அழகு வடிகின்ற புளகததைையுடைய ஸ்தனங்கள் சோர்வை யடையவும், இடை துவள - இடை தளரவும், அமுதம்நிலை அது மிக பரவ - அமுதநிலை மிகவும் பரவவும், அதிமோகம்-மிகுந்த ஆசையால, உளம் உருக-மனமானது உருகவும், வரு கலவி தருமகளிர - ஏறபடும் புணர்சசியைக் கொடுக்கும் பெண்களுடைய, கொடுமை எனும்-கொடுமை என்று சொல்லப்படும், கபடம் அதனில் மதி அழியாது-

வஞ்சகத்தில் அறிவு அழியாமல், உலகு அடைய மயிலின் மிசை-உலக முழுவதும் மயிலின்மேல், நொடி அளவில் வலம் வரும்-நொடிப்பொழுதில் சுற்றி வருகின்ற, உன் உபயம் நறுமலர் அடியை அருள்வாய் - தேவரீருடைய இரண்டாகிய வாசனை பொருந்திய தாமரை மலரை ஒத்த திருவடிகளை அளிப்பாயாக எ-று

(வி-ரை) அளகநிரை-கூந்தலாகிய வரிசை; வளை-வளையல். ஆரம்-முத்துமாலை அமுதநிலை-பெண்களுக்குக் கலவிக்காலத்து அமுதம் பிறக்குமென்பர்.

உலகடைய - உலகம் முழுவதும் நொடி - நொடிப்பொழுது, சிட்டிகைப் போடும் நேரம். உபய நறுமலரடி- இரண்டாகிய மணம் வீசும் தாமரைமலர்போன்ற திருவடி. பகழி-அம்பு மருது-மருதமரம், வரியரவு-ஆதிசேஷன்

ஜயமகள்-வெற்றித்திரு கொழுநன் - என்பதில் நகரம் பெயரிடைநிலை. மருக-அண்மைவிளி தளம்-சேனை, தரளமணி வடம்-முத்தாகிய இரத்தினத்தாலாகிய மாலை. (69)

திருவாரூர்

70 தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன-தனதான

கரமு முளரியின் மலர்முக மதிகுழல்
கனம தெனுமொழி கனிகதிர் முலைநகை
கலக மிடுவிழி கடலென விடமென மனதூடே

கருதி யனநடை கொடியிடை யியலமயில
கமழு மகிலுட னிளகிய மருகமத
களப புளகித கிரியினு மயலகொடு திரிவேனும்

இரவு பகலற இகலற மலமற
இயலு மயலற விழியினி ரிழிவர
இதய முருகியெ யொருகுள பதமுற மடலூடே

யெழுத அரியவள் குழமக ளிருதன
கிரியில முழுகிய இளையவ னெனுமுரை
யினிமை பெறுவது மிருபத மடைவது மொருநாளே

சுரபி மகவினை யெழுபொருள வினவிட
மனுவி னெறிமணி யசைவுற விசைமிகு
துயரில செவியினி லடிபட விசைவுமி ழகிதீது

துணிவி லிதுபிழை பெரிதென வருமனு
வுருகி யரகர சிவசிவ பெறுமதொர
சுரபி யலமர விழிபுனல் பெருகிட நடுவாகப்

பரவி யதனது துயரொடு நடவிய
பழுதின மதலையை யுடலிரு பிளவொடு
பருய ரதமதை நடவிட மொழிபவ னருராளா

படியி லறுமுக சிவசுத கணபதி
யிளைய குமரநி ருபபதி சரவண
பரமை முறையிட அயிலகொடு நடவிய பெருமாளே.

(இ-ள்) சுரபி-பசுவானது, மகவினை எழு பொருள விாவிட - தனது கன்று உயிர பிழைக்கின்ற தன்மையைக் கேட்கும் பொருட்டு, மனுவின் எறி மணி அசைவுற-மனு வேந்தனது அடிக்கப்படும் ஆராய்ச்சி மணி அசைகின்ற,

அ இசை-அந்த ஓசையானது, மிகுதுயரில-மிக்க துன்பத்தோடு, செவியினில் அடிபட-காதினில் கேட்க, அதிதீது வினவுமின-(மந்திரிகளை நோக்கி அரசன் இப்பசுவுக்குற்ற) மிக்க குற்றம் இன்னதெனக் கேளுங்கள் என்று சொல்லி அவர்களால் இன்னதெனத் தெரிந்து, துணிவில் இது பிழை பெரிது என்வரும்-நிச்சயமாக இச்செயல் பெருங்குற்றமென்று நினைத்த, மனு உருகி-மனுவேந்தன் பசு கன்றிழந்த துன்பத்தை எண்ணி மனமுருகி, பெறும் அது ஓர் சுரபி அலமர - இத்துன்பத்தை அடைந்த பசு சுழற்சி அடைதலைப் பார்த்து, விழி புனல் பெருகிட-கண்களினின்று நீர் பெருக, நடுவு ஆக-தனது செங்கோன்மை தவறாமல் இருக்க வேண்டுமென, அரகர சிவசிவ பரவி - அரகர சிவ சிவ என்னும் நாமங்களைச் சொல்லிச் சிவனை வாழ்த்தி, அதனது துயர்கொடு - இப்பசுவினது கன்றிழந்த துயரத்தைத் தானும் தனக்கு நேர்ந்ததாகக்கொண்டு, நடவிய பதில மதலையை-பசுக்கன்று இறக்கும்படி தேரைச் செலுத்திய குற்றமில்லாத தனது ஒரே புதல்வனை, உடல் இரு பிளவொடு படிய-அவனது உடம்பு இரண்டு பிளவுபடும்படி, படிய ரதம் அதை நடவிட-மார்பிலே சக்கரம் பொருந்தும்படி இரதத்தைச் செலுத்துக என்று, மொழிபவன - மந்திரிகளுக்குக் கட்டளையிட்ட மனுவேந்தனது, அருள் ஆரூர் பதியில் அறுமுக-அருள் நிறைந்த திருவாரூரின்கண் எழுந்தருளிய ஆறுமுக முடையவனே!, சிவசுத-சிவபெருமானுக்குக் குமாரனே!, கணபதி இளைய-விநாயகப் பெருமானுக்கு

இளையவனே', குமர-இளமையுடையவனே', நிருப பதி-அரச சாக கரசனே', சரவண-சரவணப் பொய்கையில் அவதரித்தவனே', பரவை முறையிட அயில்கொடு நடவிய பெருமானே-கடல் முறையிடும்படி வேலைக்கொண்டு செலுத்திய பெருமானே', கரம் முளரியின் மலர்-கைகள் தாமரை மலர்களையும், முகமதி-முகம் சந்திரனையும், குழல் கனம்-கூந்தல் மேகத்தையும், எனும்மொழி கனி-மென்மையாகக் கருதப்படும் சொல் பழத்தினது சுவையையும், கதிர்முகை நகை-ஒளிபொருந்திய நகை முல்லை அரும்பையும் ஒக்குமென்று புகழ்ந்து கூறியும், கலகம் இடும் விழி கடல் என விடம் என-காமமாகிய யுத்தத்தைச் செய்யும் கண்கள் கடலென்றும் விஷமென்றும் சொல்லியும், மனது ஊடு-மனத்தில், கருதி-எண்ணி, அனம் நடை-அன்னம் போன்ற நடையிலும், கொடி இடை-காமவல்லிபோன்ற இடையிலும், மயில் இயல்-மயில்போன்ற சாயலிலும், கமழும் அகிலுடன் இளகிய மிருகமதம் களபம் புளகிதகிரியிலும்-வாசனை வீசுகின்ற அகிலோடு இளகிய கஸ்தூரி கலவைச் சாந்து முதலியவற்றைப் பூசிய புளகம்கொண்ட மலை போன்ற ஸ்தனங்களிலும், மயல் கொடு திரிவேனும்-ஆசை கொண்டு திரிபவனாகிய அடியேனும், இரவு பகல் அற-இரவு பகல் என்பது ஒழியவும், இகல் அற மலம் அற-பகையும் மலமும் ஒழியவும், இயலும் மயல் அற-பயின்றுள்ள ஆசையின் மயக்கம் நீங்கவும், விழியின் நீர் இழிவர-கண்களின் நீர்வடிய, இதயம் உருகி-மனம் நெகிழ்ந்து, ஒரு

குளம் பதம் உற-ஒரு சர்க்கரைப் பாகுபோலாகவும், மடல் ஊடு எழுத அரியவள் - மடலினிடத்து எழுதுவதற்கு அருமையான அழகையுடையவளும், குறமகள் - குறவருக்குத் திருமகளுமாகிய வள்ளிநாயகியினது, இருதனகிரியில் முழுகின இளையவன் - இரண்டு ஸ்தனங்களாகிய மலைகளில் பொருந்திய குமரனே, என்னும் உரை இனிமைபெறுவதும்- என்னுடைய சொல்லினது இனிமையைப் பெறுவதும், இரு பதம் அடைவதும்-இரண்டு திருவடிகளைச் சேர்வதும், ஒரு நாள்-ஒருநாளில் கிடைக்குமோ? எ-று

(வி-ரை) முளரி-தாமரை கனம்-மேகம் விடம்-விஷ மென்னும் வடசொல்லின் திரிபு மனது - மனஸ் என்னும் வடசொல்லின் திரிபு களபபுளகிதகிரி-ஸ்தனம். திரிலோகத்தும் என்பதிலுள்ள உம்மை இழிவு சிறப்பு நீர் என்பது குறு கிறது குளம்-சர்க்கரை பேரழகால் சிறந்தவள் என்பார் மடலூடே எழுத அரியவள் என்றார் அழகின் மிகுதியை நோக்கி ஓவியம் வல்லோர் எழுதத் துணிவாராயினும் அவ ளால் எழுதலாகாது என்பதாம் இக்கருத்தை,

'யாழு மெழுதி யெழிலு மெழுதி யிருளின் மென்பூச்
சூழு மெழுதியொர் தொண்டையுந் தீட்டி யென்றோ பிறவி
யேழு மெழுதாவகை சிதைத்தோன் புலியூரிளமாம் [வே.
போழுமெழுதிற்றொர் கொம்பருண்டேற் கொண்டுபோதுக

என வரூஉம் திருக்கோவையாரானும் உணர்க.

திருவாரூர் சிறப்புக் கூறுவார் மநுமுறைகண்ட வர லாற்றை விரித்துக் கூறினார்.

அலமர-அலமரல் பகுதி. 'அலமரல் தெருமரல் ஆயிரண்டும் சுழற்சி' என்பது தொல்காப்பியம். எறி மணி-ஆராய்ச்சி மணி. புத்தி பூர்வகமாகக் கொலைசெய்ததானால் என்பார் 'பழுதிலமதலை' என்றார்.

தேர்ச் சக்கரத்தில் தெரியாது அகப்பட்டு உயிர்துறந்த பசுக்கன்றின் பொருட்டு அத்தேருருட்டிச் சென்ற தன் ஒரே மகனின் மார்பின்மீது தேரைச் செலுத்தும்படி கட்டளையிட்ட அரசனது செங்கோன்மை சிறந்த ஆறு என்றார்.

இதனை,

'ஒருமைந்தன் தன்குலத்துக் குள்ளானென் பதும்உணரான்
தருமந்தன் வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன்
மருமந்தன் தேராழி யுறவூர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி அரிதோமற் றெளிதோதான்'

என்னும் சேக்கிழார் சுவாமிகள் திருவாக்கினுங் காண்க. (70)

பழனிமலை

71 தனத்த தனனத்த தனத்த தனனத்த
தனத் தனனத் தனத்த தனனத்த
தனத் தனனத்த தனத்த தனனத்த-தனதான.

குறித்தமணிப் பணித்துகிலைத்
திருத்தியுடுத் திருட்குழலைக்
குலைத்துமுடித் திலைச்சுருளைப் பிளவோடே

குதட்டியதுப் புதட்டைமடித்
தயிற்பயிலிட் டழைத்துமருட்
கொடுத்துணர்வைக் கெடுத்துருக்கக் குறியாலே

பொறித்த தனத்த தணைத்து மனச்
செருக்கினாகைப் பொருட்கவரப்
புணர்ச்சி தனிற் பிணிப்படுவித் திடுமாதர்
புலத்தலையிற் செலுத்து மனப்
ப்ரமத்தை யறப் பரித்தமுறப்
புரிந்தருளித் திருக்கழலைத் தருவாயே
பறித்த தலைத் திருட்டமணக்
குருக்கள் சடக் குருக்களிடைப்
பழுக்களுகக் கழுக்கள்புகத் திருநீறு
பரப்பியதத் திருப்பதிபுக்
கனற்புனலிற் கனத்தசொலைப்
பதித்தெழுதிப் புகட்டதிறற் கவிராசா
செறித்த சடைச் சசித்தரியத்
தகப்பனமதித் துகப்பனெனச்
சிறக்கவெழுத் தருட்கருணைப் பெருவாழ்வே
திகழ்ப்படுசெய்ப் பதிக்குளணைந்
தடுத்தடிமைப் படுத்தஅருட்
டிருப்புழுகிக் கிரிக்குமரப் பெருமாளே.

(இ-ள்) பறித்த தலை திருட்டு அமண குருக்கள்-மயிர் நீங்கிய தலையையுடைய வஞ்சகத் தொழிலையுடைய சமணர்களின் ஆசாரியர்களின், அசட்டு உருக்களிடை - குற்றமுடைய உடம்புகளினிடையில், பழுக்களுக கழுக்கள்புக-விலாவெலும்புகள் முறியும்படி கழுவிலேற, திருநீறு பரப்பிய-திருநீற்றின் உண்மையை விளக்கிய, தத்திருப்பதி புக்கு-அத்தலமாகிய மதுரையிலே சென்று, கனல் புனலில-நெருப்பினும் நீரிலும், கனத்த சொலை பதித்து எழுதி

புகட்ட - பெருமைபொருந்திய திருப்பாசுரங்களை ஓலையில் எனக்கெழுதிவிட்ட, திறல் கவிராசா - வன்மையையுடைய மாவேந்தனே', செறிந்த சடை - நெருங்கிய சடையினில், சசிதரி அத்தகப்பன - பிறையைத் தரித்த பெருமை வாய்ந்த தந்தையாகிய சிவபெருமான், மதித்து உகப்பன் என - நன்கு மதித்து மகிழ்வான் என்று, சிறக்க எழுத்து அருள் கருணை பெருமை வாழ்வே - சிறப்பாகப் பிரணவோபதேசஞ் செய்த கிருபையையுடைய பெரிய வாழ்வாயுள்ளவனே', திகழ்படு செய்பதிக்குள் - விளங்குகின்ற செய்பதியினில், எனை தடுத்து அடிமைப்படுத்த அருள் - அடியேனைத் தடுத்து அடிமை கொள்ளக் கருணை செய்த, திரு பழநிகிரி குமர பெருமாளே - அழகிய பழநிமலையில் வாழும் குமரனாகிய பெருமானே', குறித்த மணி பணி துகிலை திருத்தி உடுத்து - ஆராய்ந்து நன்றென எடுத்த இரத்தினங்களை இழைத்த சித்திரமுள்ள ஆடையை ஒழுங்குபடுத்தித் தரித்தும், இருள் குழலைக் குலைத்து முடித்து - இருள்போன்ற கூந்தலை அவிழ்த்து முடித்தும், இலை சுருளை பிளவோடு - வெற்றிலைச் சுருளைப் பாக்குப்பிளவையுடன், குதட்டிய துப்பு உதட்டை அடித்து - குழைத்த பவளம்போற் சிவந்த இதழை மடித்தும், அயில் பயில இட்டு அழைத்தும் - வேல்போல் கூரிய கண்களின் நோக்க விகாரங்களால் அழைத்தும், மருள் கொடுத்து உணர்வை கெடுத்து - காம மயக்கத்தைத் தந்து அறிவைக் கெடுத்தும், நகம் குறியால் பொறித்த தனத்து அணைத்து - நகக்குறியால் அழுத்தப்பட்டுள்ள ஸ்தனங்களில் அணைத்

தும், மனம் செருக்கினார் கைப்பொருள் கவர - மனம் ஆசையால் அதிகரிக்கப்பட்டவர்களுடைய கையிலுள்ள பொருளை அபகரித்தற்கு, புணர்ச்சிதனில் பிணிப்படுவித்திடும் மாதர் - போகத்தில் கட்டுப்படுத்திவிடும் பெண்களுடைய, புலம் தலையில் செலுத்தும் - அறிவைத் தலையில் செலுத்துகின்ற, மனம் பிரமத்தை அற - மனத்தின் மயக்கம் ஒழியவும், பிரசித்தம் உற - பெருமை அடையவும், புரிந்து அருளி - விரும்பி அருள்செய்து, திரு கழலை தருவாய் - அழகிய திருவடிகளை அருள்செய்வாய் எ-று.

(வி-ரை) இலை-வெற்றிலை பிளவு-பாக்கு துப்பு-பவளம் அயில் - வேல், இங்குக் கணைக் குறித்தது மனச்செருக்கு-உள்ளப்பிருதி. பிணிப்படுவித்து பிணிப்படுவி-பகுதி. பிணி படு என்னும் இரண்டு - சொற்கள் சேர்ந்து பிணிப்படு என ஒரு சொல்போல நின்றது. பறித்த தலை-மயிர் நீங்கிய தலை 'திருட்டமண் குருக்கள்" என்றது கொல்லாவிரதம் பூண்டோமெனத் தருக்கித் திரிந்து பலர்க்கும் தீமை இழைத்தலின். திருநீறு பரப்புதலாவது-சமண சமயத்தைச் சார்ந்திருந்த கூன்பாண்டியனுக்கு நேர்ந்த சுரப்பிணியைத் திருநீற்றுப் பதிகம் கட்டளையிட்டு அதன் மேன்மையை யாவரும் உணரும்படி செய்ததாம். திருப்பதி-மதுரை. "கனற் புனலிற் கனத்த சொலைப் பதித்தெழுதிப் புகட்ட திறற்கவி ராஜர்" என்பது **திருஞானசம்பந்த சுவாமிகள்** மதுரைமாநகரில் சமணரோடு செய்த அனல்வாதம் புனல்வாதம் என்னும் இரண்டையும் குறித்ததாம்.

கனத்த சொல் - பொருட்பேறுடைய திருப்பாசுரம். புகட்ட-புக்விட்ட. சசி-சந்திரன். எழுத்து-பிரணவம். சப்தப் பிரபஞ்ச முழுவதும் பிரணவத்தின்கண் பிறந்து விரிதலின் மிகச்சிறப்புடைய எழுத்தென்பார் அடைகொடாது எழுத்தென ...ளாது கூறினார் (71)

திருவாவினன்குடி

72 தனதான தந்தனத் - தனதானா.

அபசார நிந்தைபட் டுழலாதே
    அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
    உனைநானி னைந்தருட் பெறுவேனோ
இபமாமு கன்றனக் கிளையோனே
    இமவான்ம டந்தையுத் தமிபாலா
செபமாலை தந்தசற் குருநாதா
    திருவாவி னன்குடிப் பெருமாளே.

(இ-ள்) இபமாமுகன் தனக்கு இளையோனே-யானையினது பெருமை பொருந்திய முகத்தையுடைய விநாயகப் பெருமானுக்கு இளையவரே', இமவான் மடந்தை உத்தமி பாலா-பர்வதராஜனுடைய புதல்வியாகிய மேன்மைக்குணம் பொருந்திய உமாதேவியாருக்குத் திருக்குமாரரே', ஜப மாலை தந்த சற்குருநாதா-உருத்திராக்கமாலையைத் திருநாம மந்திரத்தை ஜபிக்கும் பொருட்டு அடியாருக்கு அளித்தருளிய உண்மையான குருநாதரே', திருவாவினன்குடிப் பெருமாளே - திருவாவினன் குடி என்னும் திருப்பதியி லெழுந்

தருளியிருக்கும் பெருமாளே', அபசார நிந்தைபட்டு உழ லாதே - தீயொழுக்க முடையனென்னும் இகழ்ச்சியாகிய மொழிக்கு ஆட்பட்டு அலைந்து திரியாமலும், அறியாத வஞ்சரைக் குறியாது - அறிவில்லாத கபடிகளைக் கருதா மலும், உபதேச மந்திரப் பொருளாலே - தேவரீர் அடி யேனுக் குபதேசித்த மந்திரத்தைக் கொண்டு, உனை நான் நினைந்து அருட்பெறுவேனோ-தேவரீரை அடியேன் தியா னஞ்செய்து திருவருளைப் பெறுவேனோ எ-று.

(வி-ரை) உழலாதே, குறியாதே என்பவற்றிலுள்ள ஏகாரங்கள் அசைநிலைப் பொருளில் வந்தன. உபதேச மந்திரம்-சடாக்ஷர மந்திரம். பெறுவேனோ என்பதிலுள்ள ஓகாரம் வினாப்பொருளது இடம்-யானை. திருவாவினன் குடி-திரு + ஆ + இனன் + குடி திரு - இலக்குமி, ஆ-பசு; இனன்-சூரியன், இலக்குமியும் பசுவும் சூரியனும் பூசை செய்த ஸ்தலம். (72)

திருப்பிரமபுரம்

73 தனதனதனதன தநததானன
தனதனதனதன தந்ததானன
தனதனதனதன தந்ததானன-தநததான.

கனைகடல்வயிறுகு ழம்பிவாய்விட
வடதமணியகிரி கம்பமாய்நட
கணபணவிபரித கந்தகாளப யங்கராஜன
கயிறெனஅமரர் னநதகோடியு
முறைமுறையமுதக டைந்தநாளொரு
கதியறவுலகைவி ழுங்குமேக ஒழுங்குபோல

வினைமதகரிகளு மெண்டிசாமுக
கிரிகளுமுருகிட அண்டகோளகை
வெடிபட எவரையும விருசிமேலிடு நஞுசுபோல

விடுகுழையளவும ளாநதுகாமுக
ருயிர்பலிகவாவுறு பஞுசபாதக
விழிவலைமகளிரொ டனபுகூரவெதா ழிநதிடாதோ

முனைபெறவளைய அணைநதமோகர
நிசிசராகடகமு றிநதுதூளெழ
முகிலெனவுருவமி ருண்டதாருகன அஞுசமீனம்

முழுகியதிமிரத ரஙகசாகர
முறையிடஇ மையவர் தஙகளூர்புக
முதுகிரியுருவமு னிநதசேவக செமபொனமேரு

அணையகனவித சணடகோபுர
அருணையிலுறையும ருநதுணுமுலை
அபிநவவனிதைத ருஙகுமாரநெ ருங்குமாலகொண்

டடவியில்வடிவுக ரநதுபோயொரு
குறமகள் பிறகுதி ரிநதகாமுக
அரியரபிரமபு ரநதராதியா தமபிரானே.

(இ-ள்) முனைபெறவளைய அணைநத-போர்க்களத்தைச் சுற்றிச்சேர்ந்த, மோகரம நிசிசரர் - ஆரவாரத்தையுடைய அரக்கருடைய, கடகம் முறிந்து தூள் எழ - சேனைகள் தோற்கப் பூமியில் தூளி எழும்பவும், முகில் என உருவம் இருண்ட தாருகன் அஞ்ச-மேகம்போல வடிவம் கறுத்த-

தாருகாசுரன் பயப்படவும், மீனம் முழுகிய திமிரம் தரங்கம் சாகரம் முறையிட-மீன வடிவான அசுரன் முழுகியுள்ள இருண்ட அலைகளையுடைய கடல் முறையிடவும், இமையவர் தங்கள் ஊர் புக-தேவர்கள் தங்கள் இடங்களுக்குச் செல்லவும், முதுகிரி உருவமுனிந்த சேவக-பழைய கிரவுஞ்சமலை தூள்படும்படி கோபித்த தொழிலை யுடையவனே!, செம்பொன் மேரு அனையன-சிவந்த பொன்மயமான மேருமலையை ஒத்தனவாகிய, கனவித சண்டகோபுரம-பெருமையையுடைய பலவகைப்பட்ட பெரிய கோபுரங்களையுடைய, அருணையில் உறையும் மருந்து - திருவண்ணாமலையில் தங்கும் தேவாமிர்தம் போன்றவராகிய, உண்ணமுலை அபிநவம் வனிதை தரும் குமார-உண்ணமுலை என்னும் பெயரையுடைய அழகிய அம்மையார் பெற்ற புதல்வனே!, நெருங்குமால் கொண்டு-மிகுந்த ஆசைகொண்டு, அடவியில் வடிவு கரந்து போய-காட்டில் உருவத்தை மறைத்துச் சென்று, ஒரு குறமகள் பின்பு திரிந்த காமுக-ஒப்பற்ற வள்ளிநாயகிக்குப் பின்னாகத் திரிந்த காமுகனே!, அரி அரன் பிரமன் புரந்தரன் ஆதியர் தம்பிரானே-திருமால், சிவபெருமான், பிரமன், இந்திரன் முதலான தேவர்களுக்குத் தலைவனே!, கனைகடல் வயிறு குழம்பி வாய்விட-ஒலிக்கின்ற கடலின் வயிறு சேறாகி வாய்விடவும், வடதமனிய கிரி கம்பம் ஆய்-வடக்கேயுள்ள பொன்மலையாகிய மேருமலை அசையவும், நட கண பண விபரீத கந்த சாள புயங்கராஜன்-நடனத்தையுடைய வட்டமான படத்தையுடைய

வேறுபாட்டையுடைய மிக்க விஷத்தையுடைய வாசுகியை, கயிறு என அமரர் அனந்த கோடியும் - கயிறென்று தேவர்கள் எல்லாரும், முறை முறை அமுது கடைந்த நாள்-முறை முறையாகத் தேவாமிர்தத்தைக் கடைந்த தினத்தில், ஒரு கதி அற உகைக்கு விழுங்கும் மேகம் ஒழுங்குபோல-ஒரு கதி ஒழிய உலகத்தை அழிக்கும் மேகத்தின் ஒழுங்கைப்போல, விளைமதம் கரிகளும் - கொலைத்தொழிலையும் மதத்தையுமுடைய யானைகளும், எண் திசாமுக கிரிகளும் உருகிட-எட்டுத் திக்கிலுமுள்ள மலைகளும் உருகவும், அண்டம் கோளகை வெடி பட-ஆகாயம் பிளக்கவும், எவரையும் விஞ்சி - எல்லாருக்கும் மேற்பட்டு, மேல் இடு நஞ்சுபோல-மேலே வருகின்ற விஷத்தைப்போல, இடு குழை அளவும் அளந்து - தரிக்கப்பட்டுள்ள குண்டலம் வரையில் நீண்டு சென்று, காமுகர் உயிர் பலி கவர்வுறு - காமுகர்களுடைய உயிரைப் பலியாகக் கொள்ளும், பஞ்சபாதக விழி வலை மகளிரொடு - பஞ்ச மகா பாதகங்களில் செலுத்தும் கண் வலையையுடைய பெண்களிடத்தில் அன்பு கூர்ந்து ஒழிந்திடாதோ-ஆசை மிக்க கொள்வது ஒழியாதோ எ-று

(வி-ரை) ஆலை கடல்-ஒலிக்கின்ற கடல், வினைத்தொகை. வடதமனியகிரி-வடக்கிலேயுள்ள மேருமலை. புயங்கராஜன்-வாசுகி. படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலையும் இயற்றும் மூவர்க்கும் இந்திரன்முதலிய தேவர்கட்கும் தலைவனாதலின், 'அரியயபிரம புரந்தராதியர் தம்பிரானே' என்றருளிச் செய்தார். (73)

பொது

74 தையதன தானத்-தன தான.

துள்ளுமத வேள்கைக் கணையாலே
தொல்லைநெடு நீலக் கடலாலே
மெள்ளவரு சோலைக் குயிலாலே
மெய்யுருகு மானைத் தழுவாயே
தெள்ளுதமிழ் பாடத் தெளிவோனே
செய்யகும ரேசத் திறலோனே
வள்ளல்தொழு ஞானக் கழலோனே
வள்ளிமண வாளப் பெருமாளே.

(இ-ள்) தெள்ளுதமிழ் - தெளிந்த தமிழ்ப்பாடல்களை, பாட தெளிவோனே-அடியார்கள்பாட அவற்றின் உண்மைப்பொருளைத் தெளிபவனே', செய்ய குமரேசன் திறலோனே - சிவந்த திருமேனியையுடைய குமரேசனாகிய வண்மையுடையவனே', வள்ளல் தொழுஞானம் கழலோனே-வரையாது கொடுக்கும் சிவபெருமானும் வணங்கும் திருவடியை உடையவனே', வள்ளி மணவாளன் பெருமாளே - வள்ளிக்கு நாயகனாகிய பெருமானே', துள்ளும் மதவேள்-துள்ளுகின்ற மன்மதனுடைய, கை கணையால்-கையினின்று விடும் அம்பாலும், தொல்லை நெடும் நீலம் கடலால் - துன்பத்தைத்தரும் நீண்ட நீலநிறம் பொருந்திய கடலாலும், மெள்ளவரு சோலை குயிலால்-மெதுவாக வருகின்ற சோலையில் வாழும் குயிலாலும், மெய் உருகும் மானை தழுவாய்-உடம்பு உருகுகின்ற மான்போன்ற என் பெண்ணைத் தழுவுவாயாக. எ-று.

(வி-ரை) வள்ளல்-வரையாது கொடுப்போன். மெய்யுருகு மான - உடம்பு உருகுகின்ற மானபோன்ற விழியையுடைய என்மகள். இது செவிலித்தாய் தலைமகனை நோக்கிக் கூறியதாகப் பாடப்பட்டது ஆன்மாவைத் தலைவியாகவும் கடவுளைத் தலைவனாகவும் அமைத்துச் செய்யுள் செய்தல் ஆன்றோர் மரபு திருக்கோவையார் திருவிருத்தம் முதலிய நூல்கள் இம்முறையிலே அமைந்திருத்தல் காண்க. இத்தகைய பத்திமார்க்கம் சன்மார்க்கம் என்று கூறப்படும். இம்மார்க்கத்திலே நின்றவர் சைவ சமயாசாரியர் நால்வருள் மாணிக்கவாசக சுவாமிகள் அன்றியும் கடவுளைத் தலைவியாக்கிச் செய்யுள் இயற்றுதலும் உண்டு அவ்வாறு வரும் ஆன்றோர் செய்யுட்களும் பல இக்கருத்தே பற்றி வரும்,

'பேரின்பமான பிரமக்கிழத்தியோடு
ஓரின்பத் துள்ளாமென்றுந் தீபற
உன்னயாது மாயையென்றுந் தீபற'

என்னுந் திருவுந்தியார் திருப்பாட்டை நோக்குக. தெள்ளு தமிழ் என்றார். சங்கத்தாராலே ஆராய்ந்து செப்பஞ் செய்யப்பட்ட தாதலின். (74)

நிம்பபுரம்

75 தந்ததன தான தந்ததன தான
தந்ததன தான-தனதான.

அஞ்சுவித பூத முங்கரண நாலு
மந்திபகல யாதும் அறியாத

அந்தநடு வாதி யொன்றுமில தான
 அந்தவொரு வீடு பெறுமாறு
மஞ்சுதவழ் சார லஞ்சயில வேடர்
 மங்கைதனை நாடி வனமீது
வந்தசர ணார விந்தமது பாட
 வண்டமிழ்வி நோதம் அருள்வாயே
குஞ்சரக லாப வஞ்சியபி ராமி
 குங்குமப டீர வதிரேசக
கும்பதன மீது சென்றணையு மார்ப
 குன்றுதடு மாற இகல்கோப
வெஞ்சமர சூர னெஞ்சுபக வீர
 வென்றிவடி வேலை விடுவோனே
விஞ்சமதில் சூழு நிம்பபுர வாண
 விண்டலம கீப பெருமாளே.

(இ-ள்) குஞ்சர கலாப வஞ்சி - தேவயானையென்னும் கலாபம் போன்ற கூந்தலையுடைய அம்மையாரின், அபிராமம் குங்குமம் படீரம் அதிரேசம் - அழகிய குங்குமமும் சந்தனமும் திமிர்ந்த மேன்மையுடைய, கும்பம் தனம்மீது சென்று அணையும் மார்ப - குடத்தை ஒத்த ஸ்தனங்களைச் சென்று பொருந்தும் மார்பை உடையவனே!, குன்று தடுமாற இகல்கோப - கிரவுஞ்சமலை தடுமாற்றத்தை அடையும்படி பகைக்கின்ற கோபத்தை உடையவனே!, வெஞ்சமரம் சூரன் நெஞ்சு பக-கொடிய போரைச்செய்யும் சூரனுடைய மார்பு பிளக்கும்படி, வீரம் வென்றி வடிவேலை

விடுவோனே-வீரமும் வெற்றியும் பொருந்திய வடித்த வேற்படையைச் செலுத்துபவனே!, விம்மும் மதில் சூழும்-சாயையுடைய மதில்களால் சூழப்பட்ட, நிம்பபுரம் வாண - வேப்பூரில் வாழ்பவனே!, விண்டலை மகிபா பெருமாளே-தேவலோகத்துத் தலைவர்களுக்குப் பெருமானே!, அஞ்சுவித பூதமும் நாலுகரணமும்-ஐவகைப்பட்ட பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் பூதங்களும் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நான்கு கரணங்களும், அந்தி பகல் யாதும் அறியாத - அந்தி பகலெனும் பொழுதும் மற்றப் பொருளும் தெரியாத, அந்தம் நடுவு ஆதி ஒன்றும் இலது ஆன-முடிவும் நடுவும் முதலும் என்னும் ஒன்றும் இல்லாததாகிய, அந்த ஒரு வீடு பெறுமாறு-அப்படிப்பட்ட சிறந்த ஒப்பற்ற வீடுபேற்றை அடையும்படி, மஞ்சு தவழ் சாரல்-மேகங்கள் தவழ்கின்ற சாரலையுடைய, அம் சயிலம் வேடர் மங்கைதனை - அழகிய மலைகளில் வசிக்கும் வேடர்களின் பெண்ணாகிய வள்ளிநாயகியினை, நாடி வனம் மீது வந்த-விரும்பிக் காட்டுக்கு வந்த, சரணாரவிந்தம் பாட - திருவடிக் கமலங்களைப் பாடுவதற்கு, வண்தமிழ் விநோதம் அருள்வாய்-வளப்பம் பொருந்திய தமிழ்ப்புலமை அருள் செய்வாயாக. என்று.

(வி-ரை) அஞ்சுவிதபூதம் - ஐந்துவகைப்பட்ட பூதங்கள் அவை, மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம். கரணம் நாலு-மனம், புத்தி, சித்தம், அகங்காரம். பூதங்கள் கரணங்கள் ஆகிய தத்துவங்கள் எல்லாம் கடந்து, முதல

நடு முடிவு என்னும், ஒன்றும் இல்லாததாய்ச் சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாதலின் வீடுபேற்றை, 'அஞ்சுவிதபூத......வந்த வொருவீடு' என்றார். வீடு பேற்றை அடையக் கருதிய அவர் மிகவிழிந்த பேடர் பெண்ணினுக்கு இரங்கி அருள் புரிந்த அழகிய சேவடியைப் பாடுதல் வேண்டினார். அங்ஙனம் பாடுதற்கு இசைந்தது தமிழ் மொழியே என்பார், 'பாடவண்டமிழ் விநோதம் அருளவாய்' என்றார். தடம்-உயர்ந்தவிடம்; 'கொங்கைத் தடம்' எனபுழிப் பேராசிரியர் தடம் என்பதற்கு இங்ஙனம் பொருளுரைத்ததைக் காண்க. சரணாரவிந்தம் - வடமொழிச்சந்தி. (75)

76 தன்னதனதத்த தனந்தனந்தன
தன்னதனதத்த தனந்தனந்தன
தன்னதனதத்த தனந்தனந்தன-தனதான.

முகமுமி னுக்கிப் பெருங்க ருங்குழல்
முகிலைய விழ்த்துச் செருந்தி சண்பக
முடியமு டித்துத் ததும்பி வந்தடி முன்பினுக

முலையைய சைத்துத் திருந்த முன்றரி
கலையைநெ கிழ்த்துப் புனைந்து வஞ்சக
முறுவல்வி ளைத்துத் துணிந்து தங்கொரு முன்றிலூடே

மகளிர்வ ரப்பிற் சிறந்த பந்தியின்
மதனனு நிற்கக் கொளுந்து வெண்பிறை
வடவையெ றிக்கத் திரண்டு பண்டனை வண்டுபாட

மலயநி லத்துப் பிறந்த தென்றலும்
நிலைகுலை யத்தொட் டுடம்பு புண்செய
மயலை யளிக்கக் குழைந்து சிந்தைம யங்கலாமோ

பகலவன மட்கப புகுந்து கந்தா
ககனமு கட்டைப பிளந்து மந்தர
பருவரை யொக்கச சுழனறு பின்பு பறந்துபோகப

பணமணி பட்சத துரங்க முனதனி
முடுகிந டத்தக் கிழிந்து விந்தெழு
பரவைய ரற்றப பரபஞ்ச நின்றுப யந்துவாடக்

குகனென முக்கட் சயம்பு வும்பரிய
மிகஅசு ராகக் குரமடைய வந்தரு
குறஅமா குதிப பொருங்கொ டும்படை வென்றவேளே

குழைசயை யொப்பற் றிருந்த சங்கரி
கவுரியெ டுத்துப பரிந்து கொங்கையில்
குணவமு தூட்டித தெளிந்து கொண்டருள தம்பிரானே.

(இ-ள்) பகலவன் மட்க புகுந்து-சூரியனது ஒளி மழுங்கும்படி சென்று, கந்தரம் ககனம் முகட்டைபிளந்து-மேகங்கள் தவழும் ஆகாய உச்சியைப் பிளந்து, மந்தரம் பருவரை ஒக்க சுழன்று - மந்தரமாகிய பெரிய மலைக்கு ஒப்பாகச் சுழன்று, பின்பு பறந்து போக - பின்னே பறந்து செல்ல, பணம அளி-பாம்பின் படத்தைக் கவிக்கொண்டிருக்கும், பட்சம் துரங்கம் - அன்புள்ள மயிலை, தனி முடுகி நடத்தி-தனியாக விரைந்து செலுத்தி, கிழிந்து விந்து எழு பரவை அரற்ற-உடல் அறுந்து நீர்த்துளி எழுகின்ற கடல் அலறவும், பிரபஞ்சம் நின்று பயந்து வாட-உலகம் அசைவற்றுப் பயந்து வாட்டமடையவும், முக்கண சயம்பும் - மூன்று திருக்கண்களையுடைய சிவபெருமானும், குகன் என பிரியம்

மிக - குகனென்று சொல்லி அன்பு மிகவும், அசுரர்க்கு குரம்பை வந்து அருகு உற - அசுரர்களுக்கு முடிவுக்காலம் வந்துசமீபிக்கவும், அமர் குத்தி-போரைச்செய்து, பொரும்-கொடுமை படைகொன்றமேலோனே-எதிரேவந்து சண்டைசெய்யும் கொடிய அசுர சேனைகளைவென்ற முருகனே!, குழை-குண்டலங்களை அணிந்த, சயை - வெற்றியுடையவளும், ஒப்பு அற்று இருந்த சங்கரி - தனக்கோர் ஒப்பில்லாமல் இருந்த சங்கரியும், கவுரி - கௌரியுமாகிய அம்மையார், எடுத்து பரிந்து கொங்கையில்-கையிலேந்தி மனம் விரும்பி ஸ்தனங்களில், குணம் அமுது உய்க்க-சிறந்த பாலை ஊட்ட, தெளிந்துகொண்டு அருள் தம்பிரானே-எல்லாப் பொருள்களையும் தெளிந்துகொண்ட பெரியவனே!, முகம் மினுக்கி-முகத்தை மினுக்கியும், பெரு கரு குழல் முகிலை அவிழ்த்து-பெரிய கரிய மேகம்போன்ற கூந்தலை அவிழ்த்து, செருந்தி சண்பக முடிய நிறைந்து-செருந்தியையும் சண்பகமலரையும் முழுவதும் சூடி, ததும்பி வந்து அடி முன் பின் ஆக-நிரம்பிவந்து அடிமுன்னும்பின்னுமாக, முலையை அசைத்து-ஸ்தனங்களை அசைத்து, திருந்த முன்தரி துகிலை நெகிழ்த்து - திருத்தமாக முன்னே உடுத்திருந்த ஆடையைத் தளர்த்தி, புனைந்து-மீண்டும் உடுத்து வஞ்சகம் முறுவல் விளைத்து-வஞ்சகமான சிரிப்பை உண்டாக்கி, துணிந்து தம் தெருமுன்றில் ஊடு - மனத்துணிவுகொண்டு தமது தெருக்களின் முற்றத்தில், மகளிர் வரப்பில் - பெண்கள் நின்றுகொண்டிருக்கும் இடத்தில், சிறந்த பந்தியில் மதன

னும் நிற்க - சிறந்த வரிசையில் மன்மதனும் நின்றுகொண் டிருக்கவும், கொளுந்து வெண்பிறை வடவை எரிக்க - எரிக் கின்ற வெள்ளிய சந்திரன் வடவாமுகாக்கினியை வீசவும், திரண்டு பண்தனை வண்டு பாட-ஒருங்கு கூடி வண்டுகள் ரீங் காரம் செய்யவும், மலயம் நிலத்து பிறந்த தென்றலும்- பொதிய மலையில் தோன்றிய தென்றற்காற்றும், நிலைகுலைய தொட்டு உடம்பு புண்செய - நிலைகுலையும்படி வீசி உடம் பைப் புண்படுத்தவும், மயலை அளிக்க-ஆசையைக் கொடுக்க, சிந்தை குழைந்து மயங்கல் ஆமோ - மனம் உருகி மயங்கக் கூடுமோ? எ-று.

(வி-ரை) மகளிர் என்பதில் இர் பலர்பால் விகுதி. கொளுந்துதல்-எரிதல். மலயநிலம் - பொதியமலை; தென் கோடியில் இருத்தலில் தென்றலை ஆண்டுப் பிறந்ததாகக் கூறினார், அன்றியும் அது தேவருக்கும் முனிவருக்கும் பொதுவில்லாதல் பற்றிய 'பொதியில்' எனப் பெயர்பெற் றுச் சிறத்தலானும், அருந்தமிழ்க் குரவுபூண்ட பெருந்தவ அகத்தியனார்க் குறைவிடமாதலானும் அப்பெருமைகள் நோக்கியும் இனிதாகிய தென்மலை மலயத் துதித்தமையாகக் கூறினார் என்னலுமாம். இங்ஙனமே புலவர் புராண முடை யாரும்,

'சந்தனமும் செந்தமிழும் தாமுமர
மகளிர்குழற் சவரிக்காடும்
அந்தகனை வென்றசித்தர் ஆகமுநதோய்
தருசிறுகால் அதனை யேவி

மைந்தருடற் பிணிமுழுதும் ஆற்றிவிடக்
கடற்பருகும் வடவைத் தீயை
எந்தமலை அவிப்பதுவோ அந்தமலை
சொந்தமலை யெமக்கு மாதோ'

என்று கூறினார்.

சுயம்பு-தானே தோன்றிய மூர்த்தி.

குணவமுது என்றது பரஞானத்தைப் பெற்றிருக்கும் தன்மையால் அம்மையார் அளித்த திருமுலைப்பாலால் எல்லா உண்மைகளும் தெளிவுறப்பெற்ற பெருமான் என்பார். 'குணவமுது உய்க்கத் தெளிந்து கொண்டருள் தம்பிரானே' என்றார். (76)

திருவருணை

77 தனதனத் தானனத் தனனதத் தானனத்
தனதனத் தானனத்-தனதான.

கயல்விழித் தேனனைச் செயலழித் தாயெனக்
கணவகெட் டோடெனப் பெறுமாது
கருதுபுத் ராஎனப் புதல்வரப் பாஎனக்
கதறிடப் பாடையிற் றலைமீதே
பயில்குலத் தாரழப் பழையகட் பாரழப்
பறைகள்கொட் டாவரச் சமனாரும்
பரியகைப் பாசம்விட் டெறியுமப் போதெனைப்
பரிகரித் தாவியைத் தரவேணும்
அயிலறச் சேவலைக் கினிதரத் தோகையுற்
றருணையிற் கோபுரத் துறைவோனே

அமரரத் தாசிறுக குமரிமுத தாசிவத
தரியசொற பாவலாக கெளியோனே
புயலிளைப பாறுபொற சயிலமொயச சாரலிற
புனமடப பாவையைப புணாவோனே
பொடிபடப பூதரத தொடுகடற சூரனைப
பொருமுழுச சேவகப பெருமாளே.

(இ-ள்) அயில் அறச சேவல - வேலையும் தருவடிவ மாகிய சேவலையும், கைககு இனிதர-திருககரததில இனி தாககொண்டு, தோகை உறறு அருணையில கோபுரதது உறைவோனே-மயிலமேல பொருநதித திருவருணைக கோபு ரததில வாழ்பவனே!, அமரா அததா-தேவாகடகுத தலை வனே!, சிறு குமரி முததா - இளைய வளளிநாயகிககு முத தபபோன்றவனே!, சிவதது அரிய சொல பாவலாககு எளியோனே - மஙகளகரமான அருமையான சொல்லை யுடைய புலவாகட்கு எளிமையானவனே!, புயல இளைபபு ஆறு-மேகங்கள் இளைபபாறுகின்ற, பொன் சயிலம் மொய் சாரலில-அழகிய மலையின நெருஙகிய சாரலில, புனம மடம் பாவையைப புணாவோனே-கொலலைநிலத்தைக் காததுவந்த வேடர் பெண்ணுகிய வளளியைச சோபவனே!, பொடிபட பூதரத்தொடு-தூளாகுமபடி மலையுடனும், கடல சூரனை பொரு-கடலில ஒளிததிருநத சூரனுடன போா செய் கின்ற, முழுசேவகம் பெருமாளே - மிகக தொழிலையுடைய பெருமானே, கயலவிழிதேன - கயலமீன் போனற கண்ணை யுடைய பெண்ணே!, என்ன செயல ஒழிததாய என-

என்னை நீ இழந்தாய என்று சொல்ல, கணவகெட்டேன் எனப் பெறும்-கணவனே நான கெட்டேன் என்று சொல்லப்பெறும், மாது-மனைவியும், கருது புதரா என-மேன்மையாக எண்ணுகின்ற புத்திரனே என்றழைக்க, புதல்வர் அப்பா என கதறிட-மைந்தா அப்பா என்று சொல்லிக் கதற, பாடையின் தலைமீது - பாடையாகிய இடத்தின் மேல, பயில குலத்தார அழ-பழகிய சுற்றத்தார புலம்பவும், பழைய நட்பார அழ-பழமையான நண்பாகள அழவும், பறைகள கொட்டி வர - பறைகளை அடித்துக்கொண்டு வரவும, சமனும் பரிய கைபாசம் விட்டு எறியும்போது-யமனும் பருத்த கையிலுள்ள கயிற்றைவிட்டு வீசும் அவ்வேளையில என்னை பரிகரித்து ஆவியை தரவேணும்-எனது மரணதுன்பத்தை ஒழித்து உயிரைக கொடுக்கவேண்டும். எ-று.

(வி-ரை) கணவன், கண + அவன என பிரித்து மனைவிக்குப் பற்றுக்கோடாக உள்ளவன என அவயவப்பொருள் காண்க. புதரன-புத என்னும் நரகினின்றும் விடுவிப்பவன். குலத்தார-சுற்றத்தார. 'பழைய நட்பார' என்றார பழமை பாராட்டுதல அவாகண்ணே இருத்தலின். 'ஆவியைத் தரவேணும்' என்றது என உயிர என் வயப்பட்டு ஆன்ம போதத்தைப் பெற்று நான் வாழவேண்டும் என்பதாம். இதனையே தாயுமானவரும,

'அன்னைபோல அருண்மிகுந்து மன்னு ஞானவரதனே
என்னையே எனக்களித்த நின்னை யானும் மறவேனே'

என்றருளிச் செய்தார். ஆன்மதரிசனம் செய்த பின்னரே சிவதரிசனம் சித்திக்கும் என்பது கருத்து இக்கருத்தே பற்றிய பட்டினத்தடிகளாரும்,

'மாயப் படலங் கிழித்துத்தூய
ஞான நாட்டம் பெற்றனன் பெற்றலும்
என்னையுங் கண்டேன் உன்னையுங் கண்டேன்
நின்னிலை அனைத்துங் கண்டேன் என்னை
நினைக்க காணு மாந்தர்
தன்னைக் காணுத் தன்மை யோரே.'

என்றருளியது காண்க. பூதரம்-மலை. (77)

78 தானதன தானத்த தானதன தானதத
தானதன தானதத-தனதான.

ஆலுமயில போலுற தோகையர்க ளேமெத்த
ஆரவட மேலிட்ட முலைமீதே
ஆனதுகி லேயிட்டு வீதிதனி லேநிற்க
ஆமவரை யேசற்று முனையாதே
வேலுமழகார் கொற்ற நீலமயில் மேலுற்று
வீறுமுன தாரபத்ம முகமாறும்
மேவியிரு பாகதலும் வாழுமனை மார்தக்க
மேதகவு நானித்க முறையேனு
நாலுமுக வேதாகு மாலிலைபில மாலுக்கு
நாடவரி யார்பெற்ற ஒருபாலா
நாணமுடை யாள்வெற்றி வேடர்குல மீதொக்க
நாடுகுயில் பாமிக்க எழில்மாது

வேலைவிழி வேட்சி யார்க்கணவ னேமத்த
வேழமுக வோனுக்கும் இளையோனே
வீரமுட னேயுற்ற சூரனணி மாபத்து
வேலைமிக வேவிட்ட பெருமாளே.

(இ-ள்) நாலுமுக வேதாக்கும் - நான்கு முகங்களையுடைய பிரமனுக்கும், ஆல் இலையில் மாலுக்கும் - ஆலிலையின்மேல் பள்ளிகொள்ளும் திருமாலுக்கும், நாட அரியார் பெற்ற ஒரு பாலா - தேடியறிவதற்கு அரிய சிவபெருமான் பெற்ற ஒப்பற்ற பாலகனே', நாணம் உடையாள் - நாணம் உடைய வளும், வெற்றி வேடர் குலம் மீது - வெற்றியையுடைய வேடர் குலத்தில், ஒக்க நாடு குயில் - எல்லாரும் ஒன்றாகத் தேடும் குயில் போன்றவளும், பார் மிக்க எழில் மாது - பூமியில் மிகுந்த அழகையுடைய பெண்ணும், வேலைவிழி வேட்சி யார் கணவனே - கடல்போலும் பரந்த கண்ணையுடைய வள்ளிநாயகிக்குக் கணவனே', மத்தம் வேழம் முகவோனுக்கு இளையோனே - மதத்தையுடைய யானைமுகத்தை யுடைய விநாயகப் பெருமானுக்கு இளையவனே', வீர முடனே உற்ற சூரன் அணிமா பத்து - வீரத்தோடு எதிர்த்து வந்த சூரனுடைய அழகிய மாவில், வேலைமிக விட்ட பெருமாளே - வேலை மிக நன்றாகச் செலுத்திய பெரு மானே', ஆலும் மயில்போல் - அகவுகின்ற மயிலைப்போல, உற்ற தோகையர்கள் - சாயல்கொண்ட பெண்கள், மெத்த ஆரவடம்மேல் இட்ட முலைமீது - மிகவும் முத்துமாலை தரித்த ஸ்தனங்களின்மேல், ஆன துகில் இட்டு வீதிதனில்

நிற்க-மென்மையான ஆடையைப் புனைந்து தெருவில் நிற்க, ஆம் அவரை சற்றும் உரையாது-வீணான அவர்களைச் சிறிதும் புகழாமல், வேலும்-வேற்படையையும், அழகு ஆர் கொற்றம் நீலமயில்மேல்-அழகு நிறைந்த வெற்றியையுடைய நீல்நிறம் பொருந்திய மயிலின்மேல், உற்று வீற்றும் உனது ஆர் பதுமம் முகம் ஆறும்-ஆரோகணித்துச் சிறக்கும் தேவரீருடைய பெருமை நிறைந்த தாமரை மலரை ஒத்த ஆறு முகங்களையும், மேவி இருபாகத்தும் வாழும்-பொருந்தி இரண்டு பக்கங்களிலும் வாழ்கின்ற, அன்னமார் தங்கள் மேதகவும்-தாயமார்களின் தகுந்த மேம்பாட்டையும், நான் நித்தம் உரையேனோ-நான் நாடோறும் புகழமாட்டேனோ எ-று.

(வி-ரை) ஆரவடம் - முத்துமாலை. ஆலிலையில் மால்-ஆலிலையின்மீது பள்ளிகொள்ளும் திருமால் நட்டவரியார்-சிவபெருமான். மார்பத்து-மார்பினிடத்து, இன சரியை தொகுக்கும் வழித் தொகுத்தல். கொற்றம்-வெற்றி. பதும முகம்-செந்தாமரை மலரை யொத்த திருமுகம் அன்னமார்-வள்ளி தேவயானையார் மால் வெற்பு-உயர்ந்த மலை. (78)

திருவண்ணாமலை

79 தானதன தானத தானதன தானத்
தானதன தானத-தந்ததான.

ஆலவிழி நீண்ட தாலதர பான
தாலளக பாரக் கொண்டலாலே

ஆரநகை யால்விற் போருநுதலி னால்வித்
தாரநடை யால்நற் கொங்கையாலே

'சிறுகா பெருகா முறைபிறழ்ந்து வாரா
வுறுகாலத் தூற்றாகா வாமிடத்தே—யாகுஞ்
சிறுகாலைப் பட்ட பொறியு மதனா
லிறுகாலத் தென்னை பரிவு.'

போதமலர்-ஞானமாகிய மலர். பாடுவோர்களுக்குத் தோழன் பரமன் எனப்பார் 'பாடுமவர் தோழத் தம்பிரானே' என்றார்.

பொது

80 தானன தனதன தானன தனதன
தானன தனதன-தனதான.

தீயும் பவனமும் நீருந் தரணியும்
வானுஞ் செறிதரு பசுபாசத்
தேகந் தனிநிலை யேயென் றிருவினை
தீருந் திறலினை அறியாதே
ஓயும் படியறு நூறும் பதினறாம்
நூறும் பதினிரு பதுநூறும்
ஓடுஞ் சிறுவுயிர் மீளும் படிநல
யோகம் புரிவது கிடையாதோ
வேயுங் கணியும் விளாவும் டடர்புன
மேவுஞ் சிறுமிதன் மணவாளா
மீனம் படுகட லேழுங் கழலபட
வேதங் கதறிய ஒருநாலு
வாயுங் குலகிரி யாவுந் தளைபட
மாகந் தரமதில மறைசூரன்
மாயுந் துணையுறு தோளுந் துணிபட
வாள்கொண் டமர்செய்த பெருமாளே.

(இ-ள்) வேயும் கணியும் விளாவும் படுபுனம் - மூங்கிலும் வேங்கைமரமும் விளாமரமும் வளர்கின்ற புனத்தை, மேவும் சிறுமி தன் மணவாளா - விரும்புகின்ற வள்ளிநாயகியாரின் கணவனே!, மீனம் படுகடல் ஏழும் - மீன்கள் வாழ்கின்ற ஏழு கடல்களிலும், தழல் பட - நெருப்புண்டாகவும், வேதம் கதறிய ஒரு நாலு வாயும் - வேதங்களை அருளிச்செய்த நான்கு வாய்களையுடைய பிரமனும், குலகிரியாலும் - சிறந்த கிரவுஞ்சகிரியின் பகுதியும், தளைபட - சிறைபடவும், மாகம் தர மதில் மறை சூரன் - ஆகாயத்தை அளாவியிருக்கும் மதிலிலே மறையும் சூரனுடைய, மார்பும் துணையுறும் தோளும் துணிபட - மார்பும் இரண்டு தோள்களும் வெட்டுப்படவும், வாள்கொண்டு அமர்செய்த பெருமாளே - வாளைக்கொண்டு போரைச்செய்த பெருமாளே!, தீயும் பவனமும் நீரும் தரணியும் - நெருப்பும் காற்றும் நீரும் நிலமும், வானும் செறிதரு பசு பாசம் தேகமதனை - ஆகாயமும் என்னும் ஐம்பூதங்களின் சேர்க்கையாலாகிய ஆன்மா வினையினால் எடுத்த உடம்பை, நிலை என்று இருவினை தீரும் திறல்வினை அறியாது - நிலையென்று நினைத்து இரண்டு வினைகளும் ஒழிக்கும் வலிய நல்வினையை அறியாமல், ஓயும்படி அறுநூறும் பதினூழ் நூறும் பதினிருபது நூறும் ஓடும் சிறுவுயிர் - இருபத்தோராயிரத்து அறுநூறு சுவாசங்களை நாளொன்றுக்கு உடைய சிற்றுயிர், மீளும்படி - இறப்பினின்று மீட்சியடையுமாறு; நல்யோகம் புரிவது - நல்ல யோகத்தைச் செய்வது, கிடையாதோ - அடியேனுக்குக் கிடைக்கமாட்டாதோ? எ-று.

(வி-ரை) பவனம் - காற்று. பஞ்சபூதக் கூட்டரவே தேகம் என்பார் 'தீயும் பவனமும் நீரும் தரணியும் வானுஞ் செறிதரு பசுபாசத் தேகம்' என்றார். நாளொன்றுக்கு இருபத்தோராயிரத்து அறுநூறு சுவாசங்கள் செல்லுகின்றன என்றும், அவற்றை அடக்கின் இறப்பொழியும் என்றும் அவ்வாறு அடக்குதற்கு உரிய வழி யோகம் புரிதலேயாகும் என்றும் யோகநூல்கள் முழங்கும். சிறு + உயிர் = சிற்றுயிர் எனப் புணருமேனும் சந்த வின்பம் நோக்கிச் 'சிறுவுயிர்' என்றாயிற்று. யோகம் - தியானம், கூட்டம், இதனை,

'பயில்புறக் கரண மனைத்தையும் விளங்கு
 முட்கரணத் திட்டுப் படுத்தி
மயலுறு மனனைப் புறக்கலனிடத்தி லொடுக்கி
 மேலியங்கு சட்பாவம்
இயற்று சட்டரங் கோச மோராறு
 மியைந்திடாப் புறக்கலன் றனனை
உயர்வுற உயர்ந்த பரம்பொரு ளதனிற்
 கூட்டுதல் யோகமென் றுரைப்பார்'

எனவரும் காசிகாண்டச் செய்யுளான் அறிக. (80)

பொது

81 தன்ன தாத்தன தன்ன தாத்தன
 தன்ன தாத்தன-தந்ததான.

பொதுவதாய்த்தனிமுதல தாய்ப்பக
 விரவு போய்ப்புகல் இன்றுவேதப

பொருள தாயபபொருள முடிவ தாயபபெரு
வெளிய தாயபபுதை வின்றிஈறில்
கதிய தாயககரு தரிய தாய-பரு
கமுத மாயாபபுலன் ஐநதுமாயக்
கரண மாயததெனை மரண மாறறிய
கருணை வாாதைதயி ருநதவாறென்
உததி கூப்பிட நிருத ராாபபெழ
உலகு போறறிட வெஙகலாப
ஒருப ராகாம துரக மோடடிய
உரவ கோககிரி நணபரோனோர்
முதல்வ பாாபபதி புதலவ காாததிகை
முலைகள தேககிட உணடவாழ்வே
முளரி பாாகடல சயில மோபயில
முதிய மூாததிகள தமபிராளே.

(இ-ள) உததி கூபபிட நிருதா ஆர்பபு எழ-கடல் கதறவும் அசுரருடைய ஆரவாரம உணடாகவும, உலகு போறறிட-உலகததாா வாழ்ததவும், வெம்கலாப ஒரு பராக கிரமம துரகம ஓடடிய உரவ-ஒபபறற வீரமுளள மயிலைச செலுததிய வலிமையுடையவனே', கோகிரி நணப-சிறந்த மலைகளுககுத தலைவனே', வானோா முதலவ-தேவாகளுககுக் காரணமானவனே', பாாபபதி புதலவ-உமாதேவிககுக குமாரனே', காாத்திகை முலைகள தேககிட உணடவாழவே-காாததிகையினுடைய ஸதனஙகளைத தெவிட்டும்படி பருகிய வாழ்வானவனே', முளரி பாாகடல சயிலம்மேல பயில்-

தாமரைமலர் திருப்பாற்கடல் வெள்ளிமலை ஆகிய இவற்றின்மேல் வாழ்கின்ற, முதிய மூர்த்திகள் தம்பிரானே-பழமையான மும்மூர்த்திகளுக்குந் தலைவனே', பொதுவதாய-எல்லாச் சமயத்தாருக்கும் பொதுவான பொருளாயும், தனிமுதலாய - ஒப்பற்ற காரணப்பொருளாயும், பகல் இரவுபோய்-பகல் இரவு ஒழிந்து, புகலகின்ற வேதம் பொருளதாய-புகழப்படுகின்ற வேதங்களில் சொல்லப்படும் பொருளாயும், பொருள் முடிவதாய-எல்லாப் பொருள்களின் முடிவாயும், பெரு வெளியதாய - பெரிய வெளியாயும், புதைவு இன்றி ஈறு இல் கதியதாய் - மறைவும் அழிவு மில்லாத நிலையையுடையதாயும், அரியதாய்-நினைப்பதற்கு அரியதாயும், பருகு அமுதமாய - உண்ணுகின்ற தேவாமிர்தமாயும், புலன் ஐந்தும் மாய கரணம் மாய்த்து-ஐம்புலன்களும் அழியவும் நான்கு கரணங்களையும் ஒழித்து, ஜன மரணம் மாற்றிய-ஜனன மரணத்தினின்றும் மாற்றிய, கருணை வார்த்தை இருந்த ஆறு என - அருள் மொழிகள் இருந்தபடி என்ன? எ-று.

(வி-ரை) மரணமாற்றிய கருணை வார்த்தை-இறப்பை ஒழிக்கத்தக்க உபதேசமொழி. அஃதாவது 'சும்மாவிரு சொல்லற' என்று அறுமுகப் பெருமான் இந்நூலாசிரியருக்கு அருளிச் செய்தது. அதனை இவர் தாம் பாடியருளிய **கந்தரநுபூதி** என்னும் நூலின்கண்,

'செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்

சுமமா இருசொல லறவென றலுமே
அமமா பொருளே துமறிந திலனே'

கூறியிருத்தல காண்க.

உலகு-உயாநதோா, ஆகுபெயா மேகாககிரி - சிறந்த மலை. முளரி - பாறகடல. சயிலமேறபயில முதிய மூர்த்தி கள்-தாமரை மலா, திருபபாறகடல, கயிலாயகிரி இவை களினமேல தஙகியிருககும் ஆதிமூாததிகளாகிய மூவா. (81)

திருப்பரங்குன்றம்

82 தனதததா தந்தனாந தனதததா தந்தனாந
தனதததா தந்தனந்-தனதான.

தடககைப பங்கயங கொடைககுக கொணடலதண்
டமிழ்க்குத் தஞ்சமென றலகோரைத்

தவித்துச சென்றிரந் துளததிப புணபடுந
தளாசசிப பமபரந தலைபூசற்

கடத்தைத துன்பமண் சடததைத துஞ்சிடுங
கலத்தைப பஞ்சஇந் த்ரியவாழ்வைக்

கணத்திற் சென்றிடந் திருத்தித் தண்டையங
கழறகுத் தொண்டுகொண் டருளவாயே

படைக்கப பங்கயன் துடைககச சஙகரன்
புரக்கக கஞ்சைமன் பணியாகப்

பணித்துத் தம்பயந் தணித்துச சந்ததம்
பரத்தைக் கொண்டிடுந் தனிவேலா

குடக்குத் தென்பரம் பொருப்பிற் றஙகுமங்
குலததிற் கங்கைதன் சிறியோனே

குறப்பொற் கொம்மைமுன் புனத்திற் செங்கரங்
குவித்துக் கும்பிடும் பெருமாளே.

(இ-ள்) படைக்கப் பங்கயனைத் துடைக்கச் சங்கரன் புரக்கக் கஞ்சைமன்-படைப்பதற்குப் பிரமனையும் அழிப்பதற்குச் சிவபெருமானையும் காப்பதற்கு லக்ஷ்மீநாயகனாகிய விஷ்ணுவையும், பணியாகப் பணித்து-அவரவர் செய்யும் தொழிலாகச் செய்யும்படி நியமித்து, தமயம் தணித்து - அவ்வப்போது அவர்கட்குப் பலவகையால் உண்டாகும் அச்சங்களை ஒழித்து, சந்தம் பரத்தைக் கொண்டிடும் தனிவேலா-எப்பொழுதும் எல்லார்க்கும் மேம்பட்ட தன்மையைப் பெற்று விளங்கும் ஒப்பற்ற வேற்படையை உடையவனே! குடக்குத் தென்பரம் பொருப்பில் தங்கும்-மதுரைக்கு மேற்றிசையிலுள்ள அழகிய திருப்பரங்குன்றத்தில் வாழும்; அம் குலத்திற் கங்கை தன் சிறியோனே - அழகிய குலத்தில் உதித்த நங்கை தேவியின் புதல்வனே! குறப்பெண் கொம்மை முன் புனத்தில் செங்கரம் குவித்துக் கும்பிடும் பெருமாளே - குறமகளாகிய பொன்கொடியை ஒத்த வள்ளியை முன்னொருகாலத்தில் தினைப்புனத்தில் சிவந்த கைகளைக்கூப்பி வணங்கும் பெருமானே!, தடம் கை பங்கயம் - அகன்ற கைகள் தாமரைமலரை ஒக்குமென்று, கொடைக்குக் கொண்டல் - ஈகையில் மேகத்தை ஒப்பாவீர்களென்றும், தமிழ்க்குத் தஞ்சம் என்று-தமிழுக்கு அடைக்கலப் பொருளாவீர்களென்றும் சொல்லி, உலகோரைத் துதித்துச் சென்று இரந்து உள்ளத்தில் புண்படும் - உலகத்

தோகையைப் பிரிந்துபோய் யாசித்து மனத்தில் துயரத்தை அடையும், தளர்ச்சி பம்பரமதனை - தளர்கின்ற பம்பரத்தை, ஊசல் கடத்தை-ஊசலாடும் கடத்தை, துன்பம் மண் சட்டத்தை-துன்பத்தைத் தரும் மண்ணாலாகிய அழியும் பொருளை, துஞ்சிடும் கலத்தை-மரணமடையும் குடத்தை, பஞ்சம் இந்திரியம் வாழ்வை - ஐந்து புலன்களோடு கூடி வாழும் பொருளை, கணத்தில் சென்று இடம் திருத்தி-ஒரு க்ஷணப்பொழுதில் அடைந்து இடத்தைச் செம்மைப் படுத்தி, தண்டை அம் கழற்கு தொண்டு கொண்டு அருள்வாய் - தண்டைகள் தரித்த அழகிய திருவடிகளுக்குத் தொண்டாகும்படி அருள்புரிவாய். எ-று.

(வி-ரை) துண்டித்தல் - அழித்தல். கஞ்சைமன் - திருமகள் கேள்வனாகிய திருமால். குடக்கு-மேற்கு. தமிழ் மெல்லோசை இன்பம் வாய்ந்து, செவிக்கு இனிமை பயத்தலின் 'தண்டமிழ்' என்றார். கடம்-காடு. பஞ்ச இந்திரியவாழ்வு என்றார் ஐந்து பொறிகளின் வழிச்சென்று போகநுகர்ந்து வாழும் வாழ்க்கையாதலின். ஐம்புலனிற் பற்றறுலன்றி அவன் கழற்குத் தொண்டுபூணுதல் அருமையென்றும், அங்ஙனம் பற்றறுப்பதற்கும் அறுத்த வழியும் வேறுபிற கடவுளர்பால் தொண்டுபூணாது அவனுக்கே அடிமையாதலும் அப்பெருமான் தன்னாலே ஆகற்பாலதென்றும் உணர்த்துவார், 'பஞ்ச இந்திரிய வாழ்வைக் கணத்திற் சென்றிடந்திருத்தித் தண்டையங்கழற்குத் தொண்டு கொண்டருள்வாயே' என்றார். (82)

திருவருணை

83 தனனதன தான தத்த தனனதன தான தத்த
தனனதன தான - தனதான

முழுகிவட வாமு கத்தி னெழுகனலி லேபிறகு
முழுமதியி லாவினுக்கும் வசையாலும்
மொழியுமட மாதருக்கு மினியதனி லேயிசைக்கு
முதியமத ராஜனுக்கு மழியாதே
புழுகுதிகழ் நீப மதி லழகியகு ராநிரைத்த
புதுமையினி லாறிரட்டி புயமீதே
புணரும்புகை தானிணைத்த துணரும்வகை நீல சித்ர
பொருமயிலி லேறிநித்தம் வரவேணும்
எழுமகர வாவி சுற்று பொழிலருணை மாநகர்க்கு
ளெழுதரிய கோபுரத்தில் உறைவோனே
இடைதுவள வேடுவச்சி படமசைய வேகனத்த
இளமுலைவி டாதசித்ர மணிமார்பா
செழுமகுட நாக மொய்த்த ஒழுகுபுனல் வேணிவைத்த
சிவனைமுத லோதுவித்த குருநாதா
திசைமுகன்மு ராரி மற்று மரியபல தேவருற்ற
சிறையடைய மீளவிட்ட பெருமாளே

(இ-ள்) எழும் மகரம் வாவி சுற்று பொழில் அருணைமாநகர்க்குள்-மேலே தோன்றுகின்ற சுறாமீன்கள் வாழும் பொய்கைகள் சூழ்ந்த சோலைகளையுடைய திருவருணையென்னும் சிறந்த பதியில், எழுது அரிய கோபுரத்தில் உறைவோனே - சித்திரிப்பதற்கு முடியாத அவ்வளவு அழகுவாய்ந்த கோபுரத்தில் தங்குபவனே', வேடுவச்சி-

வள்ளிநாயகியினது, இடைதுவள-இடை சோர்வையடைய வும், படம் அசைய-ஆடை அசையும்படியும், கனத்த இள முலை-பருத்த இளைய ஸதனங்கள், விடாத சித்திரம மணி மார்பா - நீங்காத சந்தனக்கோலத்தையுடைய அழகிய மார்பையுடையவனே!, செழும மகுடம நாகம மொய்த்த-செழுமையான படங்களையுடைய பாம்புகள நெருங்கியுள்ள, ஒழுகு புனல வேணி வைத்த சிவனை - ஒழுகுகின்ற கங்கையைச சடையினகண தரித்த சிவபெருமானுக்கு, முதல ஓதுவித்த குருநாதா - காரணமாகிய பிரணவத்தை உப தேசித்த குருநாதனே!, திசைமுகன முராரி மற்றும அரிய பல தேவர்-நானமுகனும விஷ்ணும மற்றுமுள்ள அருமையான தேவர்கள் பலரும, உற்ற சிறை அடைய மீளவிட்ட பெருமாளே - தாங்கள அடைக்கப்பட்ட சிறையினின்று முழுவதும் மீளும்படிசெய்த பெருமானே!, வடவாமுகத்தின் முழுகி-வடவாமுகாக்கினியில முழுகி, எழு கனலிலே பிறக்கும - எழுகின்ற நெருப்பிலே உதிக்கின்ற, முழுமதி நிலாவினுக்கும்-பூரண சந்திரனுடைய கிரணங்களுக்கும், வசையாலும்-ஆடவர் மனத்தை வளைகின்ற செயலகளுக்கும, மொழியும் மடம மாதருக்கும்-இனிமையாகப் பேசும் மடப்பம் பொருந்திய பெண்களுக்கும், இனிய தனிவேய் இசைக்கும் - இனிமையான ஒப்பற்ற புல்லாங்குழலின் இசைக்கும், மதராஜனுக்கும் - மனமதனுக்கும், அழியாது-மனம் அழியாமல, புழுகு நிகழ நீபம் அத்தில - புனுகு விளங்குகின்ற கடப்பமாலையைத் தரித்திருத்தலால், அழகிய

குராநிரைத்த - அழகாக விளங்குகின்ற குராமலர்களை வரிசையாகச் சூட்டிய, புதுமையினில் ஆறு இரட்டி புயமீதே - புதிது புதிதாகத் தோன்றும் பன்னிரண்டு திருத்தோள்களின் மேலும், புணரும் வகை தான் நினைத்து உணரும் வகை - சேரும் வகையை எண்ணி அவற்றை உள்ளவாறு அறியும்படி, நீலம் சித்ரம் - நீலநிறம் பொருந்திய அழகிய, பொருமயிலில் - சண்டைசெய்யும் மயிலின் மேல், ஏறி நித்தம் வரவேணும் - ஆரோகணித்துத் தினந்தோறும் அடியேன் முன் வரவேண்டும் எ-று.

(வி-ரை) மையலுறாகத் தம்மையலை வளர்த்தற்குக் காரணமாய் இருத்தலின் முழுமதியை, 'முழுகி வடவா முகத்தின் எழு கனலிலே பிறக்கும் முழுமதி' என்றார். 'இனிய தனிவேய இசை' என்றார், குழலிசை எல்லாவற்றினும் இனிதாதலின், திருவள்ளுவரும் இது குறித்தே, 'குழலினிது யாழினிது' எனக் குழலை முன் வைத்தது காண்க. எழுதரிய கோபுரம் - எழுதுவதற்கு அருமையான சித்திர வேலைகள் பொருந்திய கோபுரம் - கனத்த-பருத்த. முராரி-திருமால், முராசுரனைக் கொன்றவர். ஓதுவித்த - ஓதும்படி செய்த (83)

உத்தரமேரூர்

84 தானதத தனதான தானதத தனதான
தானதத் தனதான-தனதான.

நீள்புயா குழலமாதா பேரிணிற கருடையாகி
நேசமுபறடியேனு நெறிகேடாய்

நேமியிற் பொருள்தேடி யோடியெய்த் துளம்வாடி
    நீதியிற் சிலவாழ்வை நினையாதே
பாழினுக் கிரையாய நாமம்வைத் தொருகோடி
    பாடலுற் றிடவேசெய் திடுமோச
பாவியெப் படிவாழ்வ னேயகட் குளதான
    பாவைசெற் றருளோடு பணியாயோ
ஆழியிற் றுயில்வோனு மாமலர்ப் பிரமாவு
    மாகமப் பொருளோரு மனைவோரும்
ஆனைமத் தகத்தோனும் ஞானமுற் றியல்வோரு
    மாயிரத் திருநூறு மறையோரும்
வாழுமுத் தரமேரூர் மேவியற் புதமாக
    வாகுசித் திரத்தோகை மயிலேறி
மாறெனப் பொருசூர னீறெழப் பொரும்வேல
    மானமகட் குளனான பெருமாளே.

(இ-ள்) ஆழியில் துயில்வோனும் - திருப்பாற்கடலின்கண் அறிதுயில் செய்யுந் திருமாலும், மாமலர்ப் பிரமாவும் - சிறந்த தாமரை மலரில் வாழும் பிரமதேவனும், ஆகமப் பொருளோரும் - சிவாகமங்களைக் கற்றுத் தேர்ந்தவர்களும், அனைவோரும் - மற்றுமுள்ளாரெல்லாரும், ஆனை மத்தகத்தோனும் - ஆனை முகத்தையுடைய விநாயகக்கடவுளும், ஞானம் உற்று இயல்வோரும் - ஞான பாகத்தைத் தெரிந்துகொண்டு அதன்படி ஒழுகுவோர்களும், ஆயிரத்து இருநூறு மறையோரும் - ஆயிரத் திருநூறு பிராமணர்களும், வாழும் உத்தரமேரூர் - வாழ்கின்ற உத்தரமேரூர், மேவி அற்புதல் ஆக - பொருந்திய ஆச்சரியமாக, வாகு சித்திரம்

தோகை மயில் ஏறி - அழகிய சித்திரமான உருவத்தை யுடைய மயிலின்மேல் ஆரோகணித்து, மாறு என பொரு சூரன - பகை என்று வந்து சண்டைசெய்யும் சூரனவனை, நீறு எழ பொரும்வேல-நீறாகப் போம்படி சண்டைசெய்யும் வேற்படை யுடையானே', மான்மகட்கு உள்ளஆன பெருமாளே-மான் பெற்ற மகளாகிய வள்ளிநாயகிக்கு மணவாளனாக உள்ள பெருமானே', நீளப்புயல் குழல்மாதர் பேரினில் கிருபை ஆகி-நீண்ட மேகம்போன்ற கூந்தலையுடைய பெண்களின்மேல் கருணைகொண்டு, நேசம் உற்று அடியேனும் நெறிகேடாய-ஆசைபொருந்தி அடியேன் நல்வழிவிட்டுத் தீநெறியிற் சேர்ந்து, நேமியில் பொருள் தேடி-பூமியில் பொருளைத்தேடி, ஓடி எய்த்து உளம் வாடி - ஓடி யிளைத்து மனம் வருந்தி, நீதியில் சிவவாழ்வை நினையாது - நன்னெறியிலுள்ள மங்களகரமான சைவவாழ்க்கையை எண்ணாமல், பாழினுக்கு இரை ஆய நாமம் வைத்து-பாழ்போன்ற வயிற்றுக்கு ஆகாரமாகக்கூடிய ஒரு பெயரை இட்டு, ஒரு கோடி பாடல் உற்றிட செய்திடும் மோசம் பாவி - ஒரு கோடி பாடல் தோன்றும்படி பாடும் வஞ்சகச் செயலையுடைய பாவியான நான், எப்படி வாழ்வன்-எவ்வாறு பரிசுத்தமான ஞான வாழ்வை அடைவேன்? நேயர்கட்கு உளது ஆன பார்வை - அன்பர்களுக்கு உரிமையாக உள்ள அருட் பார்வை, சற்று அருளோடு பணியாய் - அடியேனுக்கும் கிடைக்கும்படி சிறிது கருணையுடனே பணித்தருள் வாள். எ-று.

(வி-ரை) நேமி-பூமி. எய்த்தல-இளைத்தல. சிவவாழ்வு-மங்கலமான வாழ்வு; சிவம் - மங்கலம் பாழ் - பாழ் நிலம். நேயர் கட்டுள்ளதான பார்வை - அன்பர்க்கருளும் அருட் பார்வை ஆகமப் பொருளோர்-ஆகமத்துக்கும் பொருளா யுள்ளவராகிய சிவபெருமான், 'அருளினா லாகமத்தே யறிய லாஞ் சிவனை' என்றார் பெரியாரும். 'ஆனை மதத்தவோன' என்றார் முகமொன்றே ஆனைவடிவிற்றாதலின் மறையோர்-வேதியர். உத்தரமேரூர் - ஒரு ஸ்தலம், செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ளது. மானமகள்-வள்ளி நாயகியார் (84)

திருவேரகம்

85 தனதனன தான தத்த தனதனன தான தத்த
தனதனன தான தத்த-தனதான

சரணகம லால யத்தை அரைநிமிஷ நேர மட்டில்
தவமுறைதி யானம் வைக்க அறியாத

சடகசட மூட மட்டி பவவினையி லேசனித்த
தமியன்மிடி யால்ம யக்கம் உறுவேனோ

கருணைபுரி யாதி ருப்ப தெனகுறையி வேளை செப்பு
கயிலைமலை நாதர் பெற்ற குமரோனே

கடகபுய மீதி ரத்ந மணியணிபொன் மாலை செச்சை
கமழுமண மார்க டப்பம் அணிவோனே

தருணமிதை யாமி குத்த கனமதுறு நீள்ச வுக்ய
சகலசெல்வ யோக மிக்க பெருவாழ்வு

தகைமைசிவ ஞான முத்தி பரகதியு நீகொ டுத்து
தவிபுரிய வேணும் நெய்த்த வடிவேலா

அருணதள பாத பத்ம மதுநிதமு மேத்து திக்க
அரியதமிழ் தான ளித்த மயிலவீரா
அதிசயம நேக முற்ற பழநிமலை மீது தித்த
அழகதிரு வேர கத்தின் முருகோனே.

(இ-ள்) கயிலைமலை நாதா-கயிலைமலைக்குத் தலைவராகிய சிவபெருமான், பெற்ற குமரோனே-பயந்தருளிய குமரனே, கடகபுயம் மீது - கங்கணம் அணிந்த தோள்களின் மேல், இரத்ந மணி அணி - இரத்நம் பதித்த ஆபரணத்தையும், பொன் மாலை செச்சை-பொன் மாலையையும் வெட்சிப் பூவையும்; கமழும் மணம் ஆர் கடப்பம்-வீசுகின்ற மணம் பொருந்திய கடப்பமாலையையும், அணிவோனே-தரித்துக் கொண்டிருப்பவனே, நெய்த்த வடிவேலா - நெய் பூசிய கூர்மையான வேலையுடையவரே, அருணதள பாத்ம பத்மம் அது-மிகவும் சிவந்த இதழ்களையுடைய தாமரை மலரை ஒத்த திருவடியை, நிதமுமே துதிக்க-நாடோறும் வாழ்த்த, அரிய தமிழ்தான் அளித்த - அருமையான தமிழ்க் கல்வியைத் தந்தருளிய, மயில வீரா - மயில் வாகனத்தையுடைய வீரனே, அதிசயம் அநேகம் பல அற்புதங்கள், உற்ற பழநி மலைமீது - பொருந்திய பழநிமலையின் மேல், உதித்த அழக- உற்பவித்த அழகனே, திருவேரகத்தின் முருகோனே- திருவேரகம் என்னும் திவ்விய ஸ்தலத்தில் எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமானே, சரண கமல ஆலயத்தை- பாதாரவிந்தமாகிய கோயிலை, அரை நிமிஷம் நேரமட்டில்-அரைநிமிஷநேரம் வரையில், தவம் முறை தியானம்-

தவத்தின் முறையாகிய தியானம், வைக்க அறியாத-வைப்ப தற்குத் தெரிந்துகொள்ளாத, சட சகட மூடமட்டி - வஞ்ச கத்தையும் குற்றத்தையு முடைய மயக்கம் நிறைந்த மடைய னும், பவம் வினையிலே-பிறவிக்கு ஏதுவாகிய வினையினாலே, சனித்த-பிறந்த, தமியன-தனியானவனுமாகிய அடியேன, மிடியால் தரித்திரத்தால், மயக்கம் உறுவேனோ-மயக்கத்தை அடைவேனோ, கருணைபுரியாது இருப்பது-அடியேனுக்கு அருள் செய்யாமல் இருப்பதற்கு ஏற்பட்ட. எனகுறை-என்ன குறைசெய்தேனோ? இவ்வேளை செப்பு-இப்பொழுது சொல்லி அருளுவீராக, ஐயா-ஐயனே!, தருணம் இது-இதுவே தக்கசமயம், மிகுத்த கனம் அது உறு - மிக்க பெருமை வாய்ந்த, நீள சவுக்கியம்-அதிக சௌக்கியத்தை யும், சகல செல்வம் யோகம்-எல்லாச் செல்வங்களும் கூடிய, மிக்க பெருவாழ்வு - மிகுந்த பெரிய வாழ்வையும், தகைமை சிவஞானம் - பெருமை பொருந்திய சிவஞானத்தையும், முத்தி பரகதியும் - மோக்ஷமாகிய மேலான நிலையையும், நீ கொடுத்து - தேவரீர் எனக்குத் தந்து, உதவி புரிய வேணும்-உதவி செய்யவேண்டும் என்று.

(வி-ரை) கமலாலயம்-தாமரை மாளிகை. மிடியால் மயக்கம் உறுவேனோ என்றது, மிடி-அறிவு முதலியவற்றை அழிப்பதாகலின்,

'நெருப்பினுள் துஞ்சலு மாகும் நிரப்பினுள்
யாதொன்றுங் கண்பா டரிது' என்றார்

வள்ளுவரும் செயதத - மினுமினுபபுள்ள. அருணம்- சிவபபு, தளம் - இதழ். அதிசயம் - அதிசயப்படத்தகக பொருள்களை. (85)

கதிர்காமம்

86 தனதததா தனதததா தனத்தா தனத்தா
தனத்தா தனத்தா-தனதான.

சரதத்தே யுதித்தா யுரத்தே குதித்தே
சமாத்தா யெதிர்த்தே வருஞ்சூரச
சரிப்போ னமட்டே,விடுத்தா யடுத்தாய
தகாததா யுடற்றுன் இருகூறுச்
சிரத்தோ டுரத்தோ டறுத்தே குவித்தாய்
செகுததாய் பலத்தா விருதாகச்
சிறைசசே வலபெறுய வலக்கார முற்றுய
திருத்தா மரைததாள அருள்வாயே
புரத்தா வரத்தா சரசசே கரத்தார்
பொரத்தா னெதிர்த்தே வருபோது
பொறுத்தா பரித்தா சிரிததா எரிததா
பொரித்தார் நுதற்பார வையிலேபின்
கரித்தோ லுரித்தா விரித்தா தரிததார்
கருத்தா மருத்தூர மதனுரைக்
கரிக்கோ லமிட்டா கணுககா னமுத்தே
கதிர்க்காம முற்ருர் பெருமாளே.

(இ-ள) புரததார்-திரிபுராதிகள், வரத்தார் - தாஙகள் பெற்ற சிறந்த வரங்களின் வல்லபத்தால், சரம் சேகரத்தா- அம்புகளைச சேர்த்துக்கொண்டவராய், பொர எதிர்த்து

வருபோது-சண்டை செய்ய எதிர்த்த காலத்தில், பொறுத்தார் புரித்தார்-பொறுத்துக்கொண்டும் தாங்கிக்கொண்டும் இருந்து, சிரித்தார் எரித்தார்-சிரித்து அம்முப்புரங்களையும் எரித்து, பொரித்தார் - பொரியாகும்படி செய்தவரும், நுதல் பார்வையில்-நெற்றிக்கண்ணின் விழிப்பினுல், பின் கருத்து ஆர் மருத்து ஊர் மதனை கரிகோலம் இட்டார்-பின்னொரு காலத்தில் உலகத்தாருடைய கருத்தில் பொருந்திய தென்றற்காற்றுத் தேராக ஊரும் மன்மதனை அழித்தவரும், கரித்தோல் விரித்தார் தரித்தார் - யானையினது தோலை உரித்து விரித்து ஆடையாகத் தரித்துக்கொண்டவருமாகிய சிவபெருமானுடைய, கண்ணுக்கு ஆனமுத்தே-கண்களுக்கு விருப்பந்தரும் முத்துப் போன்றவனே', கதிர்க்காமம் உற்று ஆர் - கதிர்க்காமத்தில் பொருந்தி வாழும், முருகோனே-முருகப்பெருமானே', சரத்தே உதித்தாய் - சரவணப்பொய்கையில் தோன்றினவனே', உரத்து குதித்து சமர்த்தாய் எதிர்த்து வரு சூரை-திடத்துடன் குதித்துக்கொண்டு சாமர்த்தியமாய் எதிர்த்துவந்த சூரனை, சரிப்போனமட்டு விடுத்தாய் அடுத்தாய் - அவர்கள் வழியிலே சென்றவரையில் விட்டுப் பின்னவர்களைப் போர்க்களத்தில் சேர்ந்தாய், தகர்த்தாய்-அவர்களை அழித்தவனே!, உடல்தான் இரு கூறு ஆக-உடம்பு இரண்டு பிளவாகும்படி, சிரத்தோடு உரத்தோடு அறுத்து குவித்தாய் - தலைகளோடும் மார்போடும் அறுத்துச்சேர்த்தவனே', செகுத்தாய்-அவர்களை அழித்தவனே', பலத்தார் விருது ஆக சிறை

சேவல் பொருாய-பலத்தையுடைய அசுரர்களைக் கொன்றதற்கு அடையாளமாகச் சிறகுகளையுடைய சேவலைக் கொடியாகப் பெற்றவனே', வலக்காரம் உற்றாய்-மிக்க வெற்றியைக் கொண்டவனே', திருத்தாமரை தாள் அருள்வாய்-அழகிய செந்தாமரை யொத்த திருவடிகளை அடியேன் பெறும்படி கருணை செய்வாயாக எ-று

(வி-ரை) சூர்-சூரன். செகுத்தல்-அழித்தல். வலக்காரம் வெற்றி. மறைத்தாள்-வேதங்களால் போற்றப்படும் திருவடி. வரதத்தார் - வரப்பிரசாதம் பெற்றவர். நுதற் பார்வை - நெற்றிக்கண். மருத்து-காற்று. மருத்தூர் மதன- தென்றலைத் தேராகவுடைய மன்மதன். கணுக்கான்-கணுக்கான், விக்ரம கதிர்காமம்-இலங்கைத் தீவிலுள்ள ஒரு சுப்பிரமணிய ஸ்தலம் (86)

திருப்புலியூர்

87 தனன தனதன தனன தனதன
தனன தனதன தனன தனதன
தததத தததன தததத தததன
தததத தத்தன தததத தததன தனதான.

மருவு கடலமுகி லனைய குழலமதி
வதன நுதலசிலை பிறைய தெனும்விழி
மச்சப் பொற்கணை முகக்குப்பொற்குமி
ழொப்பக் கத்தரி யொத்திட்டச்செவி
குமுத மலரித ழமுத மொழிநிரை
தரள மெனுநகை மிடறு கமுகென

வைத்துப பொறபுய பசசைத தட்டையொ
டொப்பிட் டுககம லககைப பொற்றகிர்

வஙகய விரலொடு கிளிகள் முகநக
மெனவு மிகலிய குவடு மிணையென

வட்டத் துததிமு கிழ்பபச சக்கரம்
வைததுப பொற்குட மொததிட் டுததிகழ்
முலைமேவும்

வடமு நிரைநிரை தரள பவளமொ
டசைய பழுமர இலைவ யிறுமயி

ரற்பத திககிணை பொறபுத தொபபுளும்
அப்புக குட்சுழி யொத்துப பொறகொடி

மதன னுருதுடி யிடையு மினலென
அரிய கடிதட மமிாத கழைரச

மட்டுப பொரகம லததிற சககிரி
துசதிப பைகதொரு மிததுப டநிடை

மருவு துடையிணை கதலி பாடுகொள
கணையு முழவென கமட மெழுதிய

வட்டப புததக மொத்துப பொசர
ணத்திற பிறபு மெததுத் ததமநகள்
மயில்போலத

தெருவில முலைவிலை யுரைசெய தவரவா
மயிலகொ டணைவர மருள்செய தொழிலகொடு

தெட்டிப பரபல சொக்கிட டுபபொருள்
பறிக கட்டில ணைகழகொப பிபபுணா

திலத மழிபட விழிகள் சுழலிட
மலாக ளணைகுழ லிடைகொள துகிலபட

தித்தித தப்பிதழ் வைததுக் கைக்கொடு
கட்டிக குத்துமு லைக்குட் கைபபட

திரையி லமுதென கழையில ரசமென
பலவில சுளையென வுருக வுயாமயல

சிக்குப பட்டுடல கெட்டுச சிதசமும்
வெடகித தாக்கமு முறுக கொககென

நரைமேவிச

செவியொ டொளிவிழி மறைய மலசல
மொழுக பலவுரை குளற தடிகொடு

தெத்திப பிததமு முறறித தடசெய
லறறுச சிசசியெ னததுக கபபட

சிலாகள முதுவுடல் இனவு பொழுதினி
இரவி நிமுடை நமனு முயிரகொளச

செபபற் றுபபிணை மொபபித் துபபெய
ரிட்டுப பொறபறை கொட்டச செபபிடு

சென்ன மிதுவென அழுது முகமிசை
அறைய அணைபவ ரெடென சுடலையில

சிறறிக குககிரை யிட்டிட் டிபபடி
நிததத் துககமெ டுததிட் டுசசட

முழலவேனோ

குறவி னுருவென அருள்செய் துறையினில்
குதிரை கொளவரு நிறைத வசிதலை

கொறறப பொறபதம் வைத்திட் டருபுத
மெறறிப பொற்பொரு ளிட்டுக் கைககொளு

முதலவ ரிளகலை மதிய மடைசடை
அருண வுழைமழு மருவு திருபுயர்

கொட்டத் துப்புரா கெட்டுப் பொட்டெழ
விட்டத் திக்கணை நக்காக கரபுத

குமர னெனவிரு தொலியு முரசொடு
வளையு மெழுகட லதிர முழவொடு

கொட்டத் துட்டரை வெட்டித் தடக்கட
லொப்பத் திக்குட டுதைத்துத் தத்திட

அமரமேவிக

குருகு கொடிசில் குடைகள மிடைபட
மலைகள் பொடிபட வுடுக ளுதிரிட

கொத்திச் சக்கிரி பற்றுப் பொற்பரி
எட்டுத் திக்குமெ டுத்திட் டுக்கு ல்

குமர குருபர குமர குருபர
குமர குருபர எனவெ தமரர்கள்

கொட்டப் புட்பமி றைத்துப் பொற்சர
ணத்திற் கைச்சிரம் வைத்துக் கும்பிட

குலவு நரிசிறை கழுகு கொடிபல
கருட னடமிட குருதி பருகிட

கொற்றப் பத்திர மிட்டுப் பொற்புக
ணத்தைச் சித்தமி ரட்சித் துக்கொளு

மயில்வீரா

சிரமொ டிரணிய னுடலகி ழியவொரு
பொழுதி னுகிர்கொடு அரியெ னடமிடு

சிற்பத் திண்பதம் வைத்துச் சக்கர
வர்த்திக் குச்சிறை யிட்டுச் சக்கிரன்

அரிய விழிகெட இருபத முமுலை
கடைய நெடியவர் திருவு மழகியர்

தெற்குத் திக்கில ரக்கர்க் குச்சின
முற்றுப் பொற்றசரத தற்குப் புத்திரன்
செயமுறு மனைவலி சிலைகை கொடுகர
மிருப துடைகிரி சிரமொர் பதும்விழ
திக்கெட் டைக்கக னத்தர்க் குக்கொடு
பச்சைப் பொற்புய லுக்குச் சித்திர
மருகோனே
திலத மதிமுக அழகி மரகத
வடிவி பரிபுர நடனி மலர்ப்பதம்
சித்தர்க் குக்குறி வைத்திட் டுத்தனை
முத்துப் பொற்கிரி யொத்துச் சித்திர
சிவங்கொள் திருநட னதி வெருவித
சொருபி முதுனிய நிமலி யியல்கொடு
செட்டிக் குச்சுக முற்றுத் தத்துவ
சித்திற் சிற்பதம் வைத்துக் கற்புறு
திரையி லமுதென மொழிசெய் கவுரியி
னரிய மகனென புகழ்பு விநகரில்
செப்புப் பொற்றனை முற்றப் பொற்குற
தத்தைக் குப்புள கித்திட் டொப்பிய
பெருமாளே

(இ-ள்) குருவின் உரு என - குருவின் வடிவம் என்று சொல்லுமாறு, அருள் செய் - அருள் புரிந்த, துறையினில் - திருப்பெருந்துறையில், குதிரை கொளவரும் - குதிரைகளை வாங்கவந்த, நிறைதவசி - நிறைந்த தவத்தையுடைய மாணிக்க வாசக சுவாமிகளினது, தலை - தலையின்மேல், கொற்றம் பொற் பதம் வைத்திட்டு - வெற்றிபொருந்திய பொன்

போன்ற திருவடிகளைச் சூட்டி, அற்புதம் எற்றி-அற்புத மான செயல்களைச் செய்து, பொற் பொருளிட்டு-பொன்னு லாகிய பொருளைத் திருப்பணியிலே செலவிட்டு, கைக் கொளும் - கைக்கொண்டருளிய, முதல்வர் - முதற்பொரு ளும், இளமை கலை மதியம் - இளமைபொருந்திய கலைகளை யுடைய சந்திரனை, அடை சடை - அடையும் சடையை உடையவரும், அருணை உழை மழு மருவு திருபுயர் -சிவந்த மானும் மழுப்படையும் பொருந்தியுள்ள அழகிய கைகளை யுடையவரும், கொட்டத் துப்புரர் செருக்கையுடைய திரி புராதிகள், கெட்டு பொட்டு எழவிட்ட - அழிந்து பொடி யாகும்படி விட்ட, தீக்கணை-நெருப்பையொத்த அம்பை யுடைய, நக்கர்க்கு - சிவபெருமானுக்கு, அற்புத குமரன் என-ஆச்சரியமான புதல்வன் என்று சொல்லும், விருது ஒலியும் முரசொடு-வெற்றி முழக்கும் முரசவாச்சியத் துடன், வளையும் எழுகடல் முழவொடு அதிர-சங்கும் மத் தளமும் எழு கடல்களின் ஒலியைப்போல முழங்க, கொட் டத் துட்டரை வெட்டி-செருக்குள்ள கொடிய அசுரர்களை வெட்டி, தடக்கடல் ஒப்ப-அகன்ற கடலை ஒக்கும்படி, திக்கு மடுத்துத் தத்திட-எட்டுத் திக்குகளிலும் சேர்ந்து தடுமாறும் படி, அமர்மேவி - போரைச்செய்து, குருகு கொடி-சேவற் கொடியும், சிலை குடைகள் மிடைபட-விலவும் குடைகளும் நெருங்கவும், மலைகள் பொடிபட - மலைகளெல்லாம் பொடி யாகவும், உடுகள் உதிரிட-நட்சத்திரங்கள் உதிரவும், கொத் திச் சக்கிரி பற்றி-கொத்திப் பாம்பைப் பற்றிக்கொள்ள,

பொன்பரி எட்டு திகரும் எடுததிட்டு குரல் - அழகிய மயிலானது எட்டுத திகருகளிலும் எடுத்துக்கொண்டுகூவ, குமர குருபர குமரகுருபர குமரகுருபர என ஓது அமரர்கள் - குமரகுருபரா குமரகுருபரா குமரகுருபரா என்று வாழ்த்தும் தேவர்கள், புட்பம இறைதது - மலர்களைத தூவி, பொன சரணத்தில - அழகிய திருவடிகளில, கை சிரம் வைத்து கும்பிட - கைகளைச சிரமேல வைததுககொண்டு கும்பிட, நரி சிறை கழுகு கொடி பல கருடன் நடம் இட - நரிகளும் சிறகுகளையுடைய கழுகுகளும் காக்கைகளும் பல வகைபட்ட பருநதுகளும் கூததாடவும், குருதி பருகிட - இரத்தத்தைக குடிககவும, கொறறம பத்திரம் இட்டு - வெறறியையுடைய வேலைச செலுத்தி, பொன் ககனத்தை - அழகிய தேவலோகததை, சிதம் இரக்ஷிததுக் கொளளும் - ஆசைவைதது காததருளிய, மயிலவீரா - மயில்வீரனே!, சிரமொடு இரணியன உடல கிழிய - தலையுடன இரணியனது உடல கிழியும்படி, ஒரு பொழுதின் உகிர் கொடு - ஒரு நாளில் நகஙகளைக் கொண்டு, அரியென் நடம் இடு - சிஙகமெனத தோன்றி நடனஞ் செய்த, சிறப்பத் திண் பதம் வைத்து - அழகிய வலிமையுள்ள திருவடிகளை வைத்தும், சக்கரவாததிக்கு சிறை இட்டு - மஹாபலிச சககிரவாத்தியைச் சிறையில் இட்டும், சககிரன் அரிய விழி கெட - சுக்கிரனுடைய அருமையான கணகள் கெடவும, இருபதமும் உலகு அடைய - இரண்டு திருவடிகளும் ஈருலகங்களையும் அடையவும், நெடியவர் - திரிவிக்ரம வடிவத்தைக் கொண்டவரும்,

திருவும் அழகியா-திருமகளது அழகார் சிறந்தவரும், தெற்கு திக்கில-தென்திசையில, அரக்கர்க்கு சினம் உற்று-அரக்கன் மீது கோபமடைந்து, பொன் தசரதற்கு - அழகிய தசரத சக்கிரவர்த்திக்கு, புத்திரன்-திருப்புதல்வனானவரும், செயமும மனவலி கை சிலை கொடு-வெற்றியையும மன வல்லமையையும் கரத்தில் வில்லையும கொண்டு, காம் இருபது உடை-இருபது கைகளையுடைய, கிரி சிரம் ஓர்பதும விழ மலையை ஒத்த பத்து தலைகளும் அறுபட்டுவிழ, திக்கு எட்டைக் கனத்தார்க்கு கொடு-எட்டுத் திசைகளையும் தேவர்களுக்குக் கொடுத்தருளியவருமாகிய, பச்சை பொன் புயலுக்கு-பசுமை நிறமுள்ள அழகிய மேகவண்ணனாகிய திருமாலுக்கு, சித்திர மருகோனே!—அழகு பொருந்திய மருமகனே!, திலத மதிமுக அழகி - திலதமிட்ட சந்திரன் போன்ற முக அழகை யுடையவளும, மரகதவடிவி - மரகத ரத்நம் போன்ற திருவுருவத்தை யுடையவளும், பரிபுர நடனி-பரிபுரம என்னும ஆபரணத்தைத் தரித்துக்கொண்டு நடனஞ் செய்பவளும், மலர்பபதம் - தாமரை மலர்போன்ற திருவடிகளை யுடையவளும, சித்தர்க்கு குறிவைத்திட்டு-சிவபெருமானுக்குக் குறியைவைத்து, முத்து-முத்துவடத்தை யணிந்த, தனம்-கொங்கைகள், பொன் கிரி ஒத்து - பொன் மலைகளுக்கு ஒப்பாகக்கொண்ட, சித்திரம் - அழகிய, சிவம் கொள்-மங்களகரமான, திரு சரசுவதி பெருவித சொருபி முதுவிய கிழவி-திருமகள் முதலிய பலவகை வடிவத்தை யுடைய தேவதைகளுடைய, இயலகொடு - இயலபைக்

கொண்டு, செட்டிக்குச்சுகம் உற்று - முருகனுக்கு நன்மையை வைத்து, தத்துவசித்தில்-தத்துவஞானத்தில், சிற்பதம் வைத்து - ஞானபதத்தை வைத்து, கற்பு உற்ற - கற்பின் தன்மை பொருந்திய, திரையில் அமுது என-கடலில் பிறந்த அமுதம்போன்ற, மொழி செய - வார்த்தைகளைக் கூறும், கௌரியின்-உமாதேவியின், அரிய மகன் என-அருமைப் புதல்வன் என்று, புகழ்புலி நகரில் - புகழ்படுகின்ற திருப் புலியூரில், செப்பு மானதனம் உற்ற-கலசத்தையொத்த அழகிய முலைகளையுடைய, பொன் குறத்தைக்கு-அழகிய குறப்பெண்ணாகிய கிளிக்கு, புளகித்திட்டு ஒப்பிய பெருமாளே - மயிர்க்கூச்செறிய மனம் ஒப்பிய பெருமானே', மருவு கடல் முகில் அனைய குழல் - பொருந்திய கடலிலே தோன்றும் மேகத்தைப்போன்ற கூந்தலையும், மதிவதனம்-சந்திரனைப்போன்ற முகத்தையும், நுதல் சிறு பிறை-வில்லையும் பிறையையும் ஒத்த நெற்றியையும், விழி மச்சம் பொன் கணை-மீனையும் அழகிய அம்பையும் ஒத்த கண்களையும், முகக்கு பொருள்குமிழ் ஒப்ப-குமிழையொத்த நாசியையும், கத்தரி ஒத்திட்ட செவி-கத்தரியைப் போன்ற காதுகளையும், குமுதமலர் இதழ்-குமுத மலரைப் போன்ற இதழையும், அமுதமொழி - அமுதம்போன்ற வார்த்தையையும், நிரை தரளம் எனும் நகை-வரிசையாகிய முத்துக்கள் போன்ற பற்களையும், மிடறு கமுகு என - கமுகமரத்தைப் போன்ற கழுத்தையும், வைத்து - பெற்று, பொன்புயம் - பொன் போன்ற தோள்களை, பச்சை தட்டையொடு ஒப்பிட்டு-

பச்சை மூங்கிலோடு ஒப்பிட்டுப் பார்த்து, கமலகை பொன் துகிர் அனைய - தாமரை மலர்போன்ற கைகளிலுள்ள அழகிய பவளத்தை நிகர்த்த, விரலொடு-விரலோடு, கிளிகள் முக நகம் எனவும் - கிளிகளின் முகத்தை யொத்துள்ளன நகம் எனவும், இகலிய குவடும் இணை என-கோபித்த குன்றும் இணையென்று கூற, வட்டத் துத்தி முகிழ்ப்ப - வட்டமான தேமல்கள் அரும்ப, சக்கரம் வைத்து - சக்கரவாகப் புள்ளை ஒத்து, பொற்குடம் ஒத்திட்டு-பொற்குடத்தையும் நிகர்த்து, திகழ் முலை மேவும் - விளங்குகின்ற கொங்கைகளின்மீது பொருந்திய, வடமும் நிரை நிரைதரள பவளமொடு அசைய - வரிசையாகிய முத்து ஆரம் பவள ஆரம் இவைகள் அசைபவும், பழு மர இலைவயிறு பழுமரத்திலுள்ள இலையைப்போன்ற வயிறும், மயிர் அற்புதத்துக்கிணை-சிற்றெறும்பை ஒத்த மயிரொழுங்கும், பொற்பு தொப்புளும் அப்புக்குள் சுழி ஒத்து-அழகிய நாபியும் நீர்க்குள் சுழியை ஒத்து, பொன் கொடி - பொன் கொடியையும், மதனன் உரு துடி மின்னல் எனும் இடையும்-உடுக்கையையும் மன்மதன் உருவத்தையும் மின்னலையும் போன்ற இடையும், அரிய கடி தடம் - சொல்வதற்கு அரிய நிதம்பமும், அமிர்தம்-அமுதத்தையும், கழை ரசம்-கரும்பு ரசத்தையும், மட்டு-தேனையும் ஒத்த சுவை யமைந்து, பொன் கமலத்தில்-அழகிய தாமரைமலரைக் காட்டினும், சக்கிரி துத்திபைக்கு ஒருமித்து-பாம்பினுடைய பொறியுள்ள படத்தை ஒத்து, பட்டு உடை-பட்டாடை, மருவு துடை இணை

கதலி-பொருந்திய வாழையை நிகர்த்த இரண்டு துடைகளை யும், பரடு கொளகணையும் முழவு என-பரடு என்று சொல் லப்படும் முழங்காலும் மத்தளம் என்று கூற, கமடம்-ஆமையையும், வட்ட புத்தகம் ஒத்து - வட்டமாகிய புத்த கத்தை நிகாத்து, பொன சரணத்தில்-பொன்போன்ற கால் களின், பின்புறம் - பின்புறத்தில், எத்து - ஏமாற்றுகின்ற, தத்தைகள் - கிளிகளைப்போலவும், மயில்போல-மயில்களைப் போலவும், தெருவில் வீதியில், முலை விலை உரைசெய்து-கொங்கைகளின் விலையைச் சொல்லி, அவா அவர்-அவரவர் கள், மயலகொடு-மையலைக்கொண்டு, அணைவர அருள் செய் தொழிலகொடு - அணைந்து கருணை செய்கின்ற தொழிலைக் கொண்டு, தெட்டி-ஏமாற்றி, ப பல சொக்கு இட்டு-பலபல விதமாகச் சொக்குப்பொடி போட்டு, பொருள்பறி பொரு ளைப் பறித்துக்கொண்டு, கட்டில அணைக்கு ஒப்பி-கட்டிலில் சயனத்துக்கு ஒத்துக்கொண்டு, புணா - சேர்கின்ற, திலதம் அழிபட - திலதம் அழியவும், விழிகள் சுழலிட - கண்கள் சுழலவும, மலர்கள் இணைகுழல இடைகொள் - மலர்கள் முடித்த கூந்தலை இடையில கொண்ட, துகில்பட-ஆடை நழுவவும், தித்தி துப்பு இதழ் வைத்து-மதுரமான பவளம் போன்ற இதழ்வைத்து, கைகொடு-கையைக்கொண்டு, கட்டி குத்து முலைக்குள் கைபட - அணைத்துக் குத்துகின்ற ஸ்தனங்களில் கைகள் பொருந்த, திரையில் அமுது என-கடலின் அமுதம் போலும், கழையில் இரசம் என - கரும் பின் இரசம்போலும், பலவின் சுளை என - பலாக்கனியின்

சளையைப்போலவும், உருக - மனம் உருக, உயர் மயல் சிக்குப்பட்டு-சிறந்த மையலிலே அகப்பட்டு, உடல் கெட்டு-உடம்பு கெட்டு, சித்தமும் வெட்கி - மனமும் வெட்கமடைந்து, துக்கமும் உற்று-விசனமும் உண்டாகி, கொக்கு என நரை மேவி-கொக்கின் நிறத்தைப்போன்ற நரைத்து, செவியொடு ஒளிர் விழி மறைய-செவி கேளாமலும் ஒளியுள்ள கண்கள் தெரியாமலும், மலசலம் ஒழுக - மல மூத்திராதிகள் ஒழுகவும், பல உரை குழற - பலவிதமான வார்த்தைகளைக் குழறவும், தடிகொடு தத்தி - தடியைக் கையில் பிடித்துத் தத்தி நடந்து, பித்தமும் முற்றி-பித்தமும் முதிர்ந்து, தற்செயல் அற்று-சுபாவமான செயல்கள் நீங்கி, சிச்சி என துக்கப்பட-சிச்சி என்று வருத்தப்பட, சிலர்கள்-சிலபேர்கள், முது உடல் இனவு பொழுதினில் - பழைய உடம்பைச் சூழ்கின்ற போது, உவர் நிறம் உடை-கரிய நிறத்தையுடைய, நமனும் உயிர் கொள - யமனும் உயிரைப் பற்ற, செப்பு அற்று-வார்த்தை யொழிந்து, பிணம் ஒப்பித்து பெயர் இட்டு பிரேதம் என்னும் பெயரிட்டு, போன பறை கொட்ட - அழகிய பறையை அடிக்க, செப்பிடு சனனம் இது என அழுது நாம சொல்லும் பிறப்பின் லக்ஷணம் இதுவேயென்று புலம்பி, முகம்மிசை அறைய - முகத்தின் மீது அறைந்துகொண்டு, அணைபவர் எடு என-வந்தவர்கள் எடுங்கள் என்று சொல்ல, சுடலையில் - மயானத்தில், சிற்றீக்கு இரை இட்டிட்டு-சிறிய தீக்கு இரையாக்கி, இப்படி-இவ்வாறு, நித்தம்-ஒவ்வொரு நாளும், துக்கம் எடுத்திட்டு-

துக்கம் கொண்டாடி, சட்ட உழலவேனோ - உடம்பால் துன்பமுறுவேனோ? எ-று.

(வி-ரை) முகக்கு முகக்கு எனக் குறுகியது செய்யுள் விகாரம். கத்திரி செவிக்கு வடிவத்தால் உவமை ஆதலின் உருவுவமை. தட்டை - மூங்கில். கிளிமுகம் - நகத்துக்குச் சிவந்து வளைந்திருத்தலின் ஒப்பாகும். துத்தி - தேமல். பழுமரம் - ஆலமரம். மதனனுரு இடைக்கு உவமையாயது கண்ணால் காணமுடியாத நுண்மை உடைமையால் என்க. கடிதடம் - நிதம்பப் பிரதேசம். கழை - மூங்கில். மட்டு - தேன். சக்கிரி - பாம்பு. கமடம் - ஆமை, ஆமை முழங்காலுக்கு உவமை. திரையில் அமுது - திருப்பாற் கடலிலே கடைந்தெடுத்த தேவாமிர்தம். இரவு பொழுது - சூழ்கின்ற வேளை. உவரி நிறமுடை நமன் - கடலைப்போலக் கருநிறமுடைய இயமன்.

'குருவினுருவென அருள் செய்துறை'—சிவபெருமான் குருந்தமரத்தின் கீழிலே ஆசாரிய மூர்த்தியாய் எழுந்தருளி மாணிக்கவாசக சுவாமிகளுக்கு உபதேசஞ் செய்தருளிய திருப்பெருந்துறை. இது தஞ்சாவூர் ஜில்லாவில் அறந்தாங்கி புகைவண்டி நிலயத்துக்கு எட்டுக்கல் தூரத்திலுள்ளது.

'குதிரை கொளவரும் நிறை தவசி, அரிமர்த்தன பாண்டியன் கட்டளைப்படி பொற்களஞ்சியத்தினின்றும் பெருந்தொகையான பொருளைக் கொண்டுபோய்க் குதிரைகள் வாங்கச்சென்ற நிறைந்த தவத்தையுடைய மணிவாசகப்

பெருமான். அவர் கொணர்ந்த தொகையனைத்தையும் இறைவன் திருப்பணியில் செலவிடுமாறு செய்ததும், அதனால் விளைந்த செயல்களும் எல்லாம் அவனருள் விளையாட்டே என்பார், 'அற்புதம் எற்றி பொற்பொருளிட்டுக் கைக்கொளும் முதல்வா' என்றார் 'கொற்றப் பொற்பதம் வைத்திட்டு'—திருவடி மலரைச் சூட்டி. திக்கணை-தீக்கணை; குறுக்கல் விகாரம். வளை-சங்கம். குப்பிட-கும்பிட, வலித்தல் விகாரம். கொடி-காகம். பத்திரம்-வாள்.

சுக்கிரன் விழி கொண்டது: வாமனனாக வந்து மூன்றடி மண் இரப்பவன் திருமாலே என்றும் அவன் வஞ்சகத்தால் தன் வாழ்வு அழியும் என்று வற்புறுத்தியும் கேளானாய், மாபலி தன் உரைப்படியே மூன்றடி மண் தாரைவார்த்துக் கொடுப்பச் செல்ல, அவன் ஆசிரியராகிய சுக்கிராசாரியர் அத்தாரையொழுக்கை அடைத்து நிற்க, பலியும் கையால் அடைப்பை நீக்க முயலுகையில் சுக்கிரன் கண்ணிழந்தான் என்பதாம்.

சிவபெருமான் முலைத்தழும்பு கொண்டது: காஞ்சிபுரத்தில் உமையம்மையார் இறைவனை நோக்கிக் கம்பையாற்றில் மணலைக் குவித்துச் சிவலிங்க வடிவமாக அமைத்துப் பூசனை புரியாநிற்ப, அவ்வம்மையாருடைய உண்மை யன்பைத் தேர்ந்து தெளிவிக்க ஏகம்பநாதர் கம்பாநதியிலே வெள்ளம் புரண்டு வரச்செய்ய, அவ்வெள்ளப் பெருக்கு சிவலிங்கப் பெருமானை அழிக்க வரலும் அம்மையார் அஞ்சி நடுநடுங்கி, அப்பனின் திருமேனியைக் கட்டி யணைத்துக்

கொண்டமையால் அவரது வளைத்தழும்பும் முலைத்தழும்பும் இறைவன் பெற்றான் என்பது இதனைப் பின்வரும் பெரியபுராணச் செய்யுட்களாலும் உணர்க.

'நாதரும்பெரு விருப்பொடு நயந்து நங்கை
யர்ச்சனை செய்யுமப் பொழுதிற்
காதல் மிக்கவோர் திருவிளையாட்டிற்
கனங்குழைக் கருள்புரிந்திட வேண்டி
ஓதமார் கடலேழு மொன்றாகி யோங்கி
வானமு முட்டப் பரந்து
மீது செல்வது போல்வரக் கம்பை
வெள்ளமாந் திருவுள்ளமுஞ் செய்தார்'.

'அண்ணலாரருள் வெள்ளத்தை நோக்கி
அங்கயற் கண்ணிதம் பெருமான்மேல்
விண்ணெலாங் கொள்ளவரும் பெருவெள்ளமீது
வந்துறுமென வெருக்கொண்டே
உண்ணிலாவிய பதைப்புறு காதலுடன்
றிருக்கையாற் றடுக்க நில்லாமை
தண்ணிலா மலர் வேணியினாரைத் தழுவிக்
கொண்டனள் தன்னையே யொப்பாள்.'

'மலைக்குலக் கொடிபரிவுறு பயத்தான் மருவின
மேவிய தேவர் நாயகரை
முலைக்குவட் டொடுவளைக் கையால் நெருக்கி
முறுகு காதலால் இறுகிடத் தழுவச்

சிலைத்தனித் திருநுதல திருமுலைகருஞ்
செந்தளிர்க் கரங்களுக்கு மெதமெனவே
கொலைக்களிற் றுரிபுனைந்த தம்மேனி குழைந்து
காட்டினார் விழைந்த கொள்கையினார்'

இழிந்த குலத்திலே பிறந்த வள்ளிநாயகியாரையும் அவ ருடைய அன்பைநோக்கி ஆட்கொண்டான் என்பார், 'பொற்குன்றத்தைக் குப்புளகித்திட் டொப்பிய பெரு மாளே' என்றார். (87)

பொது

88 தத்தனத் தான தத்தனத் தான
தத்தனத் தான-தனதான.

சுட்டபோ லாசை விட்டுலகா சார
துக்கமிலா ஞான சுகமேவிச
சொற்கரணா தீத நிர்க்குணமூ டாடு
சுத்தநிரா தார வெளிகாண
மொட்டலர்வா ரீச சக்ரசடா தார
முட்டவுமீ தேறி மதிமீதாய்
முப்பதுமா றாறு முப்பதும்வே றான
முத்திரையா மோனம் அடைவேனோ
எட்டவொணா வேத னத்தொடு கோகோவே
னப்பிரமா ஓட வரைசாய
எற்றியவா ழாழி வற்றிடமா றாய
எத்தனையோ கோடி அசுரேசர்

பட்டொருசூர் மாள விக்ரமவே லேவு
  பத்திருதோள் வீர தினைகாவல
பத்தினிதோள் தோயு முத்தமமா றாது
  பத்தி செய்வா னாடர் பெருமாளே.

(இ-ள்) எட்ட ஒணா-தாங்கமுடியாத, வேதனைத்தொடு-வருத்தத்தோடு, பிரமா - பிரமதேவன், கோகோ என ஓட-கோவென்று கதறியோடவும், வரை - அஷ்டகுல பர்வதங்கள், சாய-சாய்ந்து விழவும், எற்றிய ஏழ் ஆழி-அலை மோதுகின்ற ஏழுசமுத்திரங்கள், வற்றிட-வற்றிப்போகவும், மாறு ஆய-தன்னோடு மாறுபட்ட, எத்தனையோ கோடி அசுரேசர்-எவ்வளவோ கோடிக்கணக்கான அசுரத் தலைவர்கள் பட்டு-இறந்து, ஒரு சூர் மாள - ஒப்பற்ற சூரபத்மன் இறக்கவும், விக்ரம வேல்-மிக்க வீரம்பொருந்திய வேற்படையை, ஏவு-விடுகின்ற, பத்து இருதோள் வீர-பன்னிரண்டு புயங்களையுடைய வீரனே, தினைகாவல - தினைப்புனத்தைக் காவல் செய்திருந்த, பத்தினிதோள் - வள்ளிநாயகியாரது தோள்களை, தோயும்-சேர்கின்ற, உத்தம-உத்தமனே, மாறாது-எக்காலமும் மாறாமல், பத்திசெய-அன்பு செய்கின்ற, வானாடர் பெருமாளே-தேவர்களுக்குப் பெருமானே, சுட்டது போல்-சுட்ட பொருளைக் கைவிடுதல் போல, ஆசைவிட்டு-ஆசையை ஒழித்து, உலக ஆசாரம் - உலக வொழுக்கமும், துக்கம் இலா-துக்கமும் இல்லாத, ஞானசுகம் மேவி-ஞானத்தால் வரும் இன்பத்தை யடைந்து, சொல் கரண அதீத-வாக்கு மனங்களுக்கு எட்டாத, நிர்க்குணம் ஊடாடும்-

நிர்க்குணம் பொருந்திய, சுத்த நிராதாரவெளி - சுத்தமான ஆதாரமற்ற வெளியாகிய துவாதசாந்தத்தை, காண-காண்பதற்கு, மொட்டு அலர் வாரிசம் - அரும்பு மலர்ந்த தாமரைகளையும், சக்கரசட ஆதாரம்-சக்கரங்களையுமுடைய ஆறு ஆதாரங்களையும், முட்டவும்-பொருந்தி, மீது ஏறி - அதன் மேற் சென்று, மதிமீது ஆய - சந்திர மண்டலத்திற் பொருந்தி, முப்பதும் ஆறும் முப்பதும்-தொண்ணூற்றாறு தத்துவங்களுக்கும், வேறு ஆன-வேறுபட்ட, முத்திரையாம் மோனம் - சின் முத்திரையாகிய அத்துவித மௌனநிலையை, அடைவேனோ-பெறுவேனோ? எ-று.

(வி-ரை) ஆசாரம் - ஒழுக்கம். 'சுட்டதுபோ லாசை விட்டு' என்றது ஒருபொருள் சுட்டவுடன் அதை உடனே கை நழுவ விடுவதுபோல ஆசையை அது அனுபந்தஞ் செய்த பொழுதே விடவேண்டும் என்பதாம், 'சுட்டுப் பட்டது கைவிட்டது' என வழங்கும் பழமொழியையுங் காண்க. கரணாதீதம் - கரணங்கள் எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டது, வாக்கு மனத்துக் கெட்டாதது, சுத்த நிராதார வெளி-துவாதசாந்தம். சட் ஆதாரம்-ஆறாதாரம், அவையாவன மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை. 'வாரிச சக்ர சடாதாரம்' என்றார் கமலங்களையும் சக்கரங்களையு முடையனவாதலின், முப்பதும் ஆறும் முப்பதும்-தொண்ணூற்றாறு தத்துவங்கள் முத்திரையாம் மோனம் - சின்முத்திரையாகிய அத்துவித மௌனநிலை. மௌனநிலை எல்லாத் தத்துவங்களும் கடந்த

நிலை என்பார் 'முப்பதும் ஆறும் முப்பதும் வேறான .. .. மோனம்' என்றார். (88)

திருக்குறட்டி

89 தானதன தத்ததான தானதன தத்ததான
தானதன தத்ததான-தனதான.

நீரிழிவு குட்டமீளை வாதமொடு பித்தமூலம்
நீள்குளிர்வெ துப்புவேறு முளநோய்கள்
நேருறுபு ழுக்களகூடு நான்முக னெடுத்தவீடு
நீடியவி ரத்தமூளை தசைதோல்சீ
பாரியந வத்துவார நாறுமும லத்திலாறு
பாயபிணி யியற்றுபாவை நரிநாய்பேய்
பாறெருடுக ழுக்கள்கூகை தாமிவைபு சிப்பதான
பாழுடலெ டுத்துவீணி லுழல்வேனோ
நாரணிய றத்திநாரி ஆறுசம யத்திபூத
நாயகரி டத்துகாமி மகமாயி
நாடகந டத்திகோல நீலவரு ணத்திவேத
நாயகியு மைச்சிநீலி திரிசூலி
வாரணிமு லைச்சிஞான பூரணிக லைச்சிநாக
வாணுதல ளித்தவீர மயிலோனே
மாடமதில் முத்துமேடை கோபுர மணத்தசோலை
வாகுளகு றட்டிமேவு பெருமாளே.

(இ-ள்) நாரணி-துர்க்கையும், அறத்தின்நாரி-தருமத்தின் செல்வியும், ஆறு சமயத்தி-அறுவகைப்பட்ட சமயத்

நோக்கும் அவ்வவர் கொண்ட முதற்பொருளாய் நிற்ப வளும், பூதநாயகர் இடத்துகாமி - சிவபெருமானிடத்து விருப்பமுள்ளவளும், மகம் ஆயி-யாகமுதல்வியும், நாடகம் நடத்தி-நடனஞ் செய்பவளும், கோல நீலவருணத்தி-அழகு பொருந்திய நீல நிறமுடையவளும், வேதநாயகி - வேதங் களுக்குத் தலைவியும், உமைசசி-பிரகாசமுள்ளவளும், நீலி-நீலியும், திரிசூலி - திரிசூலப் படையை உடையவளும், வார் அணி முலைசசி-கச்சை அணிந்த ஸ்தனங்களை உடையவளும், ஞானபூரணி - நிறைந்த ஞானமுடையவளும், கலைசசி-அறு பத்து நான்கு கலை ஞானங்களையும் உணர்ந்தவளும், நாக வாள் நுதல - இமயமலையரையன் திருமகளாகித் தோன்றிய ஒளிபொருந்திய நெற்றியை உடையவளுமாகிய உமாதேவி யார், அளித்த-பெற்றருளிய, வீர-வீரனே! மயிலோனே-மயிலவாகனத்தை உடையவனே!, மாடம் மதில்-மாடங்களை யும் மதில்களையும், முத்துமேடை - முத்துமேடைகளையும், கோபுரம் - நகரவாயில்களையும் உடைய, மணத்த சோலை-வாசனைபொருந்திய சோலைசூழ்ந்த, வாகு உள குறட்டி-அழகிய குறட்டி என்னும் தலத்தில், மேவும் பெருமாளே, தங்கியிருக்கும் பெருமாளே!, நீரிழிவு-நீரிழிவும், குட்டம்-குஷ்டரோகமும், ஈளை - இருமலும், வாதமொடு பித்தம்-வாதரோகங்களோடு பித்தரோகங்களும், நீர் குளிர் வெதுப்பு - மிக்க குளிரையுடைய சுரமும், வேறும் உள நோய்கள்-இவற்றிற்கு வேறாக உள்ள மற்ற நோய்களும், நேர் உறு பொருந்திய புழுக்கள் கூடு - புழுக்கள் வசிக்கின்ற

கூண்டும், நான்முகன் - பிரமதேவன், எடுத்த வீடு-கட்டிய வீடும், நீடிய இரத்தம் மூளை - மிக்க இரத்தமும் மூளையும், தசை தோல்சீ - தசையும் தோலும் சீயுமாகிய, பாரிய நவத் துவாரம் நாறும் - பெரிய ஒன்பது வாயில்களும் நாறுகின்ற, மும்மலத்தில - மும்மலங்களாகிய, ஆறு பாய-ஆறு பெருக கெடுந்து, பிணி இயற்று-நோயை உண்டாக்குகிற, பாவை-பதுமையும், நரி நாய் பேய்-நரியும் நாயும் பேயும், பாறொடு கழுக்கள்-பருந்துகளோடு கழுகுகளும், கூகை தாம்-ஆந்தைகளும், இவை புசிப்பது ஆன - இவைகளால் புசிக்கப்படுவதான, பாழ் உடல் எடுத்து - பயன்படாத உடலைப் பெற்று, வீணில் உழலவேனோ-வீணாகத் தேவரீரது திருவருளுக்குப் பாத்திரனாகாமல் வருந்துவேனோ? என்று.

(வி-ரை) வெதுப்பு-சுரம். நவத்துவாரம்-கண், காது, மூக்கு, வாய், குதம், குய்யம். பாறு பருந்து.

அறத்தின் நாரி-உமாதேவியார்; தருமத்தின் செல்வி; முப்பத்திரண்டு அறங்களையும் வளர்ப்பவள். ஆறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய் விளங்குவாள் என்பார் 'ஆறு சமயத்தி' என்றார். பூதநாயகர்-சிவபெருமான். கலைச்சி-அறுபத்து நான்கு கலைஞானங்களையும் அறிந்தவள். நாகமலை குட்டி-ஒரு ஸ்தலம். 'புழுக்கள் கூடு' 'நான்முகன் எடுத்தவீடு' 'பிணியியற்று பாவை' முதலியன உடம்பின் இழிந்த இயல்பை நன்கெடுத்து விளக்கு முகத்தான் அதன்மாட்டுச் செய்யும் பற்றுச் செய்வன. இங்குப் பட்டினத்தடிகளார் வாக்கு உணர்றபாலது.

அங்கோ டிங்கோ டலமருங் களவர்
ஐவர் கலகமிட் டலைக்குங் கானகம்
சலமலப் பேழை இருவினைப் பெட்டகம்
வாதபித் தங்கோ ழைகுடி புகுஞ் சிற்றூர்
ஊற்றைப் புன்றோல் உதிரக் கட்டளை
நாற்றப் பாண்டம் நான்முழத் தொன்பது
பீற்றற் றுண்டம் பேசசுமைத் தோட்டம்
அடலைப் பெரிய சுடலைத் திடருள்
ஆசைக் கயிற்றில் ஆடும் பம்பரம்
ஓயா நோய்க்கிடம் ஓடும் மரக்கலம்
மாயா விகாரம் மரணப் பஞ்சரம்
சோற்றுத் துருத்தி தூற்றும் பத்தம்
காற்றிற் பறக்குங் கானப் பட்டம்
விதிவழித் தருமன் வெட்டுங் கட்டை
சதுர்முகப் பாணன் தைக்குஞ் சட்டை
ஈமக்கனலில் இடுசில விருந்து
காமக்கனலிற் கருகுஞ் சருகு
கிருமி கிண்டுங் கிழங்குகஞ் சருமி
பலகொழுந் தேறுங் கவைக்கொழு கொம்பு
மண்மாய நடக்கும் வடிவின் முடிவிற்
பிணமாய்க் கிடக்கும் பிண்டப் பிண்மே
ஊரிற் கிடக்க வொட்டா வுபாதி
காரெதிர் குவித்த பூளை காலைக்
கதிர்காப் பட்ட கடும்பனிக் கூட்டம்
அந்தரத் தியங்கும் இந்திர சாபம்
அதிரும் மேகத் துருவின் அருநிழல்
நீரிற் குமிழி நீர்மேல் எழுத்து
கண்டுயில் கனவிற் கண்ட காட்சி
அதனினும் பொல்லா மாயக் களங்கம். (89)

பொது

90 தனதன தானத தானன தனதன தானத் தானன
தனதன தானத தானன-தனதான.

முருகம யூரச் சேவக சரவண ஏனற் பூசரி
முருகுளப டரக் கோமள முலைமீதே
முழுகிய காதற காமுக பதிபசு பாசத தீவினை
முதியபு ராரிக் கோதிய குருவேன
உருகியு மாடிப் பாடியு மிருகழல நாடிச சூடியு
முணர்விரோ டிக கூடியும வழிபாடுற
உலகினு ராசைப் பாடற நிலைபெறு ஞானத தாலினி
உனதடி யாரைச் சேர்வதும் ஒருநாளே
மருகனெ னுமற் சூழ்கொலை கருதிய மாமப பாதகன்
வரவிடு மாயப் பேய்முலை பருகாமேல்
வருமத யானைக் கோடவை திருகிவி ளாவிற காய்கனி
மதுரையில் வீழச சாடிய சதமாபுட்
பொருதிரு கோரப பாரிய மருதிடை போயப போதொரு
சகடுதை யாமற் போரசெய்து விளையாடிப்
பொதுவியர் சேரிக் கேவளா புயல்மருகா வஜராயுத
புரமதில் மாபுத தேவிகள் பெருமாளே.

(இ-ள்) மருகன் எனுமல சூழ் கொலை கருதிய-தன் மருகன் என்றும் பாராமல் உபாயத்தோடு செய்யும் கொலையை எண்ணிய, மாமன் பாதகன் வரவிடும் - மாமனாகிய பாவி போகும்படி ஏவிய, மாயம்பேய் முலைபருகா-மாயமானபேய் வடிவங்கொண்ட பூதகியின் முலையை

உண்டு, மேலவரும் மதம்யானை கோடு அவைதிருகி-மேல எதிர்த்து வரும் மும்மதங்களையுடைய யானையின் கொம்பு களை உடைத்து, விளாவில காய கனி மதுகையில வீழச சாடிய - விளாமரத்திலுள்ள காயகனிகளை வன்மையினால விழும்படி வீசிய, சதமா புள் பொருது-நூறு கணக் கான வண்டுகளுடனும பறவைகளுடனும் சண்டைசெய் தும், இரு கோரம் பாரிய மருது இடை போய - இரண்டு கோரமான பெரிய மருதமரத்தின இடைசசென்று, அப போது ஒரு சகடு உதையா - அபபோது ஒரு சக்கர வடிவாக வந்த அசுரனை உதைதது, மலபோரசெயது விளையாடி - மலயுததத்தைசசெய்து விளையாடிககொண்டும், பொதுவியா சேரிககு வளா புயல மருகா - இடையா சேரியில வளாந்து வந்த மேகம்போன்ற நிறத்தையுடைய திருமாலுககு மரு மகனே!, வஜராயுதபுரம அதில - வஜராயுதநகரததில வாழ் கின்ற, மா புத்தேளிாகள பெருமானே-சிறந்த தேவாகளுக் குத தலைவனே!, முருக மயூரம் சேவக சரவண-முருகனே! மயிலின்மேல் ஏறிசசெல்லும் தொழிலை யுடையவனே! சரவணபபொய்கையில் அவதரிததவனே!, எனல பூதரி-தினைவளாகின்ற மலையில வாழும வளளிநாயகியினது, முகு ளம் படரம் கோமளம் முலைமீது - அரும்பையொத்த சந்த னம் பூசிய இளைய ஸ்தனஙகளில், முழுகிய காதல காமுக-முழுகியுள்ள காதல மிகுந்த காமுகனே!, பதிபசு பாசம் தீா வினை-பதிபசுபாசத்தின துணி பொருளை, முதிய புரா ரிக்கு ஓதிய குருவே - பழமையான சிவபெருமானுக்கு

உபதேசஞ்செய்த குருவே', என்று உருகியும் ஆடிப் பாடியும்-என்று சொல்லி உருகியும் ஆடியும் பாடியும், இருகழலை நாடி சூடியும் - இரண்டு திருவடிகளையும் விரும்பிச் சூடியும், உணர்வினொடு ஊடி கூடியும் - ஞானவுணர்ச்சியினொடு ஊடியும் கூடியும் வழிபாடு உற்று - வழிபாடு பொருந்தி, உலகினர் ஆசைப்பாடு ஆசைப்பாடு அற - உலகத்தார் ஆசைப்படுதல் ஒழிய, நிலைபெறு ஞானத்தால்-நிலைபெற்ற பேருணர்வினால், உனது அடியாரைச் சேர்வதும் ஒருநாளே-தேவரீருடைய அடியாரைச் சேர்வதாகிய ஒருநாளும் உண்டோ? எ-று.

(வி-ரை) பதிபசுபாசத் தீர்வு - பதிபசுபாசங்களின் இயல்பு. அதனைப் பிரணவ வாயிலாக உணர்த்தியது, பிரணவத்தில் இம்முப்பொருளின் இயல்பும் அடங்கியுள்ளது ஆதலின் இவ்வாறு அருளிச்செய்தார். அடியவரைச் சார்ந்தொழுகின் வீடுபேறு எளிதில் சித்திக்குமாதலின் அவர்தம் கூட்டுறவைக் கொள்ளுதலே அமையும் என்பார் 'உனதடியரைச் சேர்வதும் ஒருநாளே' என்றார்.

நிலைபெறுஞானம் - எவ்வாற்றானும் மாறாத மெய்யுணர்வு. அடியவர் பெருமையை,

'அன்பர்பணி செய்யவென்னை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே.'

என வரூஉம் **தாயுமானவர்** திருவாக்கானும்

'ஈசனுக் கன்பிலார் அடியவர்க் கன்பிலார்
எவ்வுயிர்க்கும் அன்பிலார் தமக்கும் அன்பில்லார்

பேசுவதென் அறிவில்லாப் பிணங்களை நாம் இணங்கிற்
பிறப்பினிலும் இறப்பினிலும் பிணங்கிடுவர் விடுநீ
ஆசையொடும் அரனடியார் அடியாரை அடைந்திட்
டவர்கருமம் உன்கருமமாகச் செய்து
கூசி மொழிந்தருள் ஞானக் குறியில் நின்று
கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரியே.'

உணர்வரும் அருணந்தி சிவம் திருவாக்கானும் அறிக. (90)

திருவாலங்காடு

91 தனதன தானந் தாத்த தனதன தானந் தாத்த
தனதன தானந் தாத்த-தனதான.

வடிவது நீலங் காட்டி முடிவுள காலன் கூட்டி
வரவிடு தூதன் கோட்டி விடுபாசம்

மகனொடு மாமன் பாட்டி முதலுற வோருங் கேட்டு
மதிகெட மாயந் நீட்டி யுயிர்போமுன்

படிமிசை தாளுங் காட்டி யுடலுறு நோய்பண் டேற
பழவினை பாவந் தீர்த்துன அடியேனைப்

பரிவொடு நாளுங் காத்து விரிதமி ழாலங் கூர்த்த
பரபுகழ் பாடென ஆட்கொ டருள்வாயே

முடிமிசை சோமன் சூட்டி வடிவுள ஆலங் காட்டில்
முதிர்நட மாடுங் கூத்தர் புதல்வோனே

முருகவிழ் தாருஞ் சூட்டி பொருதனி வேழங் கூட்டி
முதலமற மானின சோககை மயல்கூர்வாய

இடியென வேகங் காட்டி நெடிதரு சூலந் தீட்டி
யெதிர்பொரு சூரன் தாக்க வரஅஞ்சி

இலகிய வேலகொண் டார்த்து உடலிரு கூறன ளாக்கி
இமையவ ரேதந் தீர்த்த பெருமாளே.

(இ - ள்) முடிமிசை சோமனை சூடி - திருமுடியின்மேல் பிறைச்சந்திரனை அணிந்துகொண்டு, வடிவு உள ஆலங்காட்டில் - அழகுபொருந்திய திருவாலங்காடு என்னுந் திருத்தலத்தில், முதிர நடம் ஆடும் கூத்தர் புதல்வோனே - ஆனந்த மிகுந்த நடனத்தைச் செய்கின்ற சிவபெருமானுக்கு மகனே! முருகு அவிழ்த்தாரும் சூடி - வாசனையை விரிக்கின்ற மாலையைத் தரித்தும், ஒரு தனி வேழம் கூட்டி - ஓர் ஒப்பற்ற யானையைக் காணும்படி வருவித்தும், முதல் மறம் மானின் சேர்க்கை மயல் கூர்வாய - முதலாகிய மாறுபாட்டைச் செய்த மான்போன்ற வள்ளிநாயகியின் புணர்ச்சிக்கு ஆசை மிகுபவனே!, இடி என வேகம் காட்டி - இடியென்று சொல்லும்படி வேகத்தைக் காட்டியும், நெடி தரு சூலம் நீட்டி - நீண்ட சூலத்தை நீட்டிக்கொண்டும், எதிர் பொரு சூரன் தாக்கவர - எதிரே சண்டைசெய்யும் சூரன் தாக்குதற்கு வர, ஏகி இலகிய வேல்கொண்டு ஆர்த்து - எதிரே சென்று விளங்கிய வேலைக்கொண்டு ஆரவாரித்து, உடல் இருகூறு அன்று ஆக்கி - உடலை இரண்டு கூறாக அவனை இல்லையாம்படி செய்து, இமையவர் ஏதம் தீர்த்த பெருமாளே - தேவர்களது துன்பத்தை ஒழித்த பெருமானே!, வடிவு அது நீலம் காட்டி - நீலநிறம் பொருந்திய உருவத்தைக் காட்டி, முடிவு உள காலன் - ஆயுள் முடியுங் காலத்தில் உள்ளவனாகிய இயமன், கூட்டி வரவிடு தூதன் - என உயிரைக் கட்டிக்

கொண்டு வரும்படி அனுப்பும் தூதன், கோட்டிவிடு பாசம்-வளைத்துச் செலுத்தும் கயிற்றை, மகனொடு மாமன் பாட்டி முதல உறவோடும் - மகனொடு மாமன் பாட்டி முதலான சுற்றத்தாரும், கேட்டு மதிகெட மாயம் தீட்டி உயிர் போம் முன - கேட்டு அறிவுகெட மாயத்தைச் செய்து உயிர் போவ தன் முன்பு, படிமிசை தாளும் காட்டி - பூமியின்மேல் அடியேனுக்குத் திருவடியைக் காட்டியருளி, உடல் உறு நோய் - உடம்பிலே சேர்ந்த நோயையும், பண்டு வரு பழவினை பாவம் - முன்னமே செய்துகொண்ட பழவினையால் வரும் பாவத்தையும், தீர்த்து உன அடியேனை - ஒழித்து உன அடியனாகிய என்னை, பரிவொடு நாளும் காத்து - அன்போடு எந்நாளும் காத்தருளிச்செய்து, விரி தமிழால் - பல துறைகளாக விரிந்த தமிழ் மொழியினாலே, அமர்த்த பரம் புகழ்பாடு என்று ஆள்கொடு அருள்வாய் - அழகு மிகுந்த சிறந்த புகழைப் பாடுவாய் என்று ஆட்கொண்டருளுவாயாக. எ-று ஏ - அசை.

(வி-ரை) கோட்டி - கோஷ்டி; கூட்டம். ஆலங்காடு - திருவாலங்காடு என்னும் திவ்ய க்ஷேத்திரம்; அரக்கோணத்துக்கு அருகேயுள்ளது. திருவாலங்காட்டில் சிவபெருமான் காளியோடு தாண்டவஞ் செய்தனர். அங்கே இரத்தின சபை உள்ளது. இத்தலத்திலேதான் காரைக்காலம்மையார் திருநடனங்காணும் பெருவாழ்வு பெற்றது. இதன் பெருமையை 'வீடு நமக்குத் திருவாலங்காடு' எனக் கூறிய பட்டணத்துப்பிள்ளையார் திருவாக்கானும் உணர்க. முருகு - வாசனை.

பழநிமலை

92 தனன தனன தனன தனன
தனன தனன -தனதான

தமரு மமரு மனையு மினிய
தனமு மரசு மயலாக

தறுக ணறலி முறுகு கயிறு
தலையை வளைய எறியாதே

கமல விமல மரக தமணி
கனக மருவு மிருபாதம்

கருத அருளி யெனது தனிமை
கழிய அறிவு தரவேணும்

குமர சமர முருக பரம
குலவு பழநி மலையோனே

கொடிய பகடு முடிய முடுகு
குறவர் சிறுமி மணவாளா

அமர ரிடரும் அவுண ருடலும்
அழிய அமர்செய் தருளவோனே

அறமு நிறமும் அயிலு மயிலும்
அழகு முடைய பெருமாளே.

(இ-ள்) குமர சமர முருக பரம குலவு பழநி மலையோனே-குமரனே', சண்டைசெய்யும் முருகனே-மேலானவனே பெருமை விளங்கும் பழநிமலையை இருப்பிடமாகக் கொண்டவனே', கொடிய பகடு முடிய முடுகு குறவர் சிறுமி

மணவாளா - மதம் பொழிகின்ற யானைகள் மாறும்படி அம்பை விரையச் செலுத்தும் வேடமகளாகிய வள்ளி நாயகிக்கு மணவாளனே', அமரர் இடரும் அவுணர் உடலும் அழிய அமர் செய்து அருள்வோனே - தேவர்களுக்கு உற்ற துன்பமும் அசுரர்களுடைய உடம்புகளும் ஒருங்கு கெடும்படி போரை செய்தருள்பவனே', அறமும் நிறமும் அயிலும் மயிலும் அழகும் உடைய பெருமானே - தருமத்தையும் ஒளியையும் வேலையும் மயிலையும் அழகையும் உடைய பெருமானே' தமரும் அமரும் மனையும் இனிய தனமும் அரசும் அயல் அக - சுற்றத்தாரும் வாழும் வீடும் இன்பத்தைத் தரும் பொருளும் ஆளும் அரசும் வேறுபட்டுப் பிரிந்து நீங்க, தறுகண் மறலி முறுக்கு கயிறு தலையை வளைய எறியாது - அஞ்சாமையையுடைய யமன் தன்னுடைய முறுக்கு விட்ட கயிற்றைத் தலையைச் சுற்றி வீசாதபடி, கமலம் விமலம் மரகதம் மணி கனகம் மருவும் இருபாதம் - செந்தாமரை மலரை ஒத்த பரிசுத்தமான மரகத ரத்தினத்தின் ஒளியையும் பொன்னின் ஒளியையும் பொருந்துகின்ற இரண்டு திருவடிகளையும், கருத அருளி எனது தனியுள் அறிய அறிவு தரவேணும் - தியானஞ் செய்வதற்கு அருள்செய்து எனது தனியுயிர் இருக்குந் தன்மை அறிய மெய்யுணர்வைத் தரவேண்டும் எ-று.

(வி-ரை) 'தறுகண் மறலி' என்றார் எத்துணை பெரியராயினும் கருதாது உயிர் வௌவுதலானும் 'பெட்பின்றிப் பிள்ளையைத் தாயலறக் கோடலானும்' என்பது

'கமல விமல மரகதமணி கனக மருவும் இருபாதம்' என்றது செந்தாமரை மலரையொத்த தூய்மையான வள்ளி நாயகியாரும், தெய்வயானை அம்மையாரும் சேரும் இரண்டு திருவடிகள் என்பதாம். மரகதமணி வள்ளிநாயகியார்; அவர் நிறம் மரகதம் போன்றிருத்தலை காண்க. கனகம்-பொன், தெய்வயானை அம்மையார் நிறம் பொன்வடிவிற்று என்க. (92)

திருக்குராவடி

93 தனதத தானன தனதன-தனதான.

மருகது லாவிய மலரணை கொதியாதே
வளர்தக தாயதமா வசையது மொழியாதே
கருக்கு லாவிய அயலவர் பழியாதே
கடபட மாலையை யினிவர விடவேணும்
கருகது லாவிய கொடியிடை மணவாளா
சமர்த்தனே மணி மரகத மயில்வீரா
திருக்குராவடி நிழல்தனில் உறைவோனே
திருக்கை வேல்வடி வழகிய பெருமாளே.

(இ-ள்) கருகுலாவிய கொடி இடை மணவாளா-கற்பக விருட்சத்தைச் சுற்றிப் படர்ந்துவிளங்கும் காமவல்லிபோல நுணுகிய இடையை உடைய தேவயானையாருக்கு மணவாளனே! சமர்த்தனே மணி மரகதம் மயில்வீரா-சாமர்த்தியம் உடையவனே! நீலம் மரகதம் என்னும் இரத்தினங்களின் ஒளியை உடைய மயில் வாகனத்தை யுடைய

வீரனே', திருகுரா அடி நிழலதனில உறைவோனே - அழகிய குராமரத்தின் அடிநிழலில கோயிலகொண் டெழுந்தருளி இருபபவனே', திருகைவேல அழகிய வடிவு பெருமாளே-அழகிய கையில வேறபடையை தாஙகிய அழகிய உருவதனைதயுடைய பெருமானே', மருகுலாவிய மலர் அணை கொதியாது -மணம விளங்குகின்ற பூககள பரப்பிய படுககை வெபபமடையாமலும், வளாதத தாய் தமா வசை மொழியாது-பெற்று வளாத்த தாயும் சுறறத்தாரும் பழிச் சொலலைக கூறுமலும், கரு குலாவிய அயலவா பழியாது- கொடுமைக் குணஙகள் விளங்கும ஏதிலாா பழிக்காமலும், கடபபமாலையை இனி வரவிடவேணும் - கடப்ப மாலையை இபபொழுதே எனக்குச சேரும்படி அனுப்ப வேண்டும். எ-று.

(வி-ரை) பிரிவால விளையும் காமமிகுதி உணர்த்துவார் 'மருக்குலாவிய மலரணை கொதியாதே' என்றாா. வசை- இவனால இவள இறந்து பட்டாள் என்னும் வசைமொழி. தலைவி தலைவன அணிந்துள்ள மாலையைக் கேட்பதாகப் பாடபபடடது இசசெய்யுள் இதுபோல வரும்,

'வேம்பாகிலும் இனிய சொல்லுக்கு நீபுனைந்த
வேமபா கிலுமுதவ வேண்டாவோ—மீன்பாயும்
வேலையிலே வேலைவைத்த மீனவா நின்புயத்து
மாலையிலே மாலைவைத்தாள மான்'

என்னுந் தனிப்பாடலையும் காண்க. (93)

பொது

94 தனதன தந்ததத்த தனதன தந்ததத்த
தனதன தந்ததத்த-தனதான

மொழியநி றங்கறுத்து மகரவி னங்கலக்கி
முடியவ ளைந்தரற்று கடலாலும்
முதிரவி டம்பரப்பி வடவைமு கந்தழற்குள்
முழுகியெ ழுந்திருக்கு நிலவாலும்
மழையளகந் தரித்த கொடியிடை வஞ்சியுற்ற
மயல்தணி யும்படிக்கு நினைவாயே
மரகத துங்கவெற்றி விகடந டங்கொள்சித்ர
மயிலினி லெந்துமுற்றி தரவேணும்
அழகிய மென்குறத்தி புளகித சந்தனத்தி
னமுதத னம்படைத்த திருமார்பா
அமராபு ரந்தனக்கு மழகிய செந்திலுக்கு
மருணைவ ளம்பதிக்கும் இறையோனே
எழுபுவ னம்பிழைக்க அசுரர்சி ரந்தெறிக்க
எழுசயி லந்துளைத்த சுடர்வேலா
இரவிக ளந்தரத்தர் அரியர பங்கயத்தர்
இவர்கள்ப யந்தவிர்த்த பெருமாளே.

(இ-ள்) அழகிய மென்குறத்தி-அழகையுடைய மென்மைத் தன்மை வாய்ந்த வள்ளிநாயகியினது, புளகித சந்தனத்தின் அமுததனம் - புளகத்தையுடைய சந்தனம் பூசிய தேவாமிர்தம்போல் அடைதற் கருமையான ஸ்தனங்களால்,

படைத்த திருமார்பா - தழுவப்படும் அழகிய மார்பை உடையவனே!, அமராபுரம் தனக்கும் - தேவலோகத்திற்கும், அழகிய செந்திலுக்கும்-அழகிய திருச்செந்தூ ரென்னுந் தலத்திற்கும், அருணை வளம்பதிக்கும் இறையோனே - அருணையாகிய வளப்பமான நகரத்திற்கும் தலைவனே!, எழு புவனம் பிழைக்க-ஏழு உலகங்களும் உய்தற்கும், அசுரர் சிரம் தெறிக்க - அசுரர்களுடைய தலைகளெல்லாம் சிதறியொழியவும், எழு சயிலம் துளைத்த சுடர் வேலா - ஏழு மலைகளையும் துளைத்த ஒளிபொருந்திய வேற்படையை உடையவனே!, இரவிகள் அந்தரத்தர் - சூரியர்கள், தேவர்கள், அரி அரன் பங்கயத்தன்-திருமால், சிவன், பிரமன் என்னும், இவர்கள்-இவர்களுடைய, பயம் தவிர்த்த பெருமாளே - அச்சத்தை ஒழித்தருளிய பெருமானே!, மொழிய நிறம் கறுத்து - சொல்லுகின்ற அந்நிறமானது கறுத்து, மகரம் இனம் கலக்கி-மகரமீன்களின் கூட்டங்களால் கலக்கப்பட்டு, புடிய வளைந்து-பூமி முழுவதும் சுற்றிக்கொண்டு, அரற்று கடலாலும் - சப்திக்கின்ற கடலினாலும், முதிரவிடம் பரப்பி - முதிரும்படி விஷத்தைப் பரப்பி, வடவை முகந்து - வடவாமுகாக்கினியை மொண்டு கொண்டு, அழற்குள் முழுகி எழுந்திருக்கும் நிலவாலும்-முழுகி எழுந்திருக்கின்ற சந்திரனாலும், மழை அளகம் தரித்த - மேகம்போன்ற கூந்தலையுடைய, கொடி இடை வஞ்சி - கொடிபோன்ற இடையை உடைய என் பெண்ணுக்கு, உற்ற மயல் தணியும்படிக்கு நினைவாய-உண்டாகிய

ஆசை மயக்கம் தீரும்படி திருவுளங் கொள்வாய், மரகதம் துங்கம் வெற்றி - பசுமை நிறம் பொருந்திய சிறந்த வெற்றியையுடைய, விகடம் நடம் கொள் சித்திர மயிலினில் - அழகிய நடனத்தைச் செய்கின்ற சித்திரமான உருவத்தை யுடைய மயிலின்மேல், வந்து முத்தி தரவேணும் - எழுந்தருளிவந்து அடியேனுக்கு மோக்ஷத்தைக் கொடுத்தருள வேண்டும் எ - று.

(வி - ரை) கடலோசை தலைவரைப் பிரிந்திருக்கும் மகளிருக்கு மயலை விளைத்தலின் அதனைக் கூறினார். அம்மையால் பிருதிவியை விளக்குவார் கடவுளுக்குச் செய்கை புணர்த்தோதினார். இவ்வாறே நிலவிற்குங் காண்க. வடவை-வடவாமுகாக்கினி. மழையளகம் - மேகம்போல இருண்ட கூந்தல். அளகம்-பெண்பால் மயிருக்கு ஆகும். அமுத தனம - அமுதம்போல இனிமை பயக்கும் ஸ்தனங்கள். அமரர்புரம-தேவலோகம். எழுபுவனம்-எழுலகம். அசுரர் களைக் கொன்றமையால் அவர்களால் அமரர் முதலிய யாவருக்கும் விளையுந் தீங்கை ஒழித்தாராதலின் 'எழுபுவனம் பிழைக்க' என்றார், இரவிகள-பன்னிரு சூரியர்; அவர்கள் பெயர் தாத்துரு, சக்கரன், அரியமன், மித்திரன், வருணன், அஞ்சுமான், இரணியன், பகவான், திவசுவான், பூடன், சவித்துரு, துவட்டா என்பன.

அரியர பங்கயத்தர் - திருமால், சிவன், பிரமன் ஆகிய மூவர். (94)

திருவருணை

95 தனன தனதன தனன தனதன
தனன தனதன-தனதான

இறுகு மணிமுலை மருவு தரளமு
மெரியு முமிழ்மதி நிலவாலே
இரவி யெனதுயி ரவர வருகுழ
லிசையி லுறுகடல் அலையாலே
தறுகண் ரதிபதி மதனன விடுகொடு
சரமி லெளியனும் அழியாதே
தருண மணிபொழி லருணை நகருறை
மயில மிசையினில வரவேணும்
முறுகு திரிபுர மறுகு கனலெழ
முறுவ லுடையவர் குருநாதா
முடிய கொடுமுடி யசுரர் பொடிபட
முடுகு மரகத மயிலவீரா
குறவர் மடமகள் அமிர்த கனதன
குவடு படுமொரு திருமார்பா
கொடிய சுடரிலை தனையு மெழுகடல்
குறுக விடவல பெருமாளே.

(இ-ள்) முறுகு திரிபுரம் - பாவம் மிகுந்த முப்புரங்களை, மறுகு கனல் எழ-சுழலுகின்ற நெருப்புண்டாகும்படி,

முறுவல் உடையவர்-சிரிப்பை உடையவராகிய சிவபெருமானுக்கு, குருநாதா-ஆசாரியனே, முடிய-முழுவதும், கொடுமுடி அசுரர் பொடிபட-வளைந்த கிரீடத்தை யுடைய அசுரர்கள் தூளாகும்படி, முடுகும் மரகதம் மயில்வீரா-செலுத்தும் பச்சைமயில் வீரனே, குறவர் மடமகள்-குறவருடைய மடப்பம் பொருந்திய மகளாகிய வள்ளிநாயகியினது, அமிர்தம் கனம் தனம் குவடுபடும் ஒரு திருமார்பா - அமிர்தம் நிறைந்த பெரிய ஸதனங்களாகிய மலைகள் பொருந்துகின்ற ஒப்பற்ற அழகிய மார்பை உடையவனே, கொடிய சுடர் இலைதனை - பகைவருக்குத் தீங்கைச் செய்யும் பிரகாசம் பொருந்திய இலைவடிவமாக உள்ள வேற்படையை, எழு கடல் குறுக விட்டவல பெருமாளே-ஏழுகடல்களையும் சேரும்படி செலுத்த வல்லவனாகிய பெருமானே, இறுக்கு மணி முலை மருவு தரளமும் - திண்மையான அழகிய ஸ்தனங்களில் தரித்துள்ள முத்துமாலையாலும், எரியும் மதி உமிழ் நிலவால் - பிரகாசிக்கின்ற சந்திரன் விடுகின்ற கிரணங்களாலும், இரவி எனது உயிர் கவர - வருத்தி எனதுடைய உயிரை அபகரிப்ப, வருகுழல் இசையில் உறு கடல் அலையால்-செவியிற்படும் குழலிசையாலும் மிக்க கடலின் அலையாலும், தறுகண் ரதிபதி மதனன்-அஞ்சாமையை உடைய ரதிக்கு நாயகனாகிய மன்மதன், விடுகொடு சரமதில்-செலுத்துகின்ற வளைந்த அம்பினாலும், எளியனும் அறியாது - எளியேனும் அறியாமல், தருணம் அணிபொழில்-இளமையை யுடைய வரிசையாகவுள்ள சோலைசூழ்ந்த,

அருணைநகர் உறை சயிலம் மிசையினில வரவேணும்- திருவருணை நகரத்திலே உள்ள மலையின்மேல் வரவேண்டும். எ-று.

(வி-ரை) இறுகுமுலை-வினைத்தொகை. தாளம்-முத்து மாலையை உணர்த்தலின் ஆகுபெயர். இரவி - இராவி, வருத்தி. சுடரிலை-என்றது வேற்படையை. எழுகடல்-ஏழு கடல்கள்; பண்புத்தொகை. 'எளியன்' என்றார் அறிவு புலன் வழிச் செல்லுமாறு விடுத்துத் துன்புறும் அதனை மீட்டு நிறுத்தும் வன்மை இன்மையான். அத்தகையேனும் தேவரீர் தரிசனம் வாய்க்கப்பெறின் உய்வேன் என்பார், 'அருணை நகருறை சயிலமிசையினில் வரவேணும்' என்றார். வேண்டும் என்பது வேணும் என மருவியது. (95)

திருவருணை

96 தனதனத் தத்தத் தனத்தத் தனதன
தனதனத் தத்தத் தனத்தத் தனதன
தனதனத் தத்தத் தனத்தத் தனதன-தனதான.

கமலமொட் டைக்கட் டறுத்துக் குமிழியை
நிலைகுலைத் துப்பொற் குடத்தைத் தமனிய
கலசவர்க் கத்தைத் தகர்த்துக் குலையற இளநீரைக்

கறுவிவட் டைப்பிற் றுரத்திப் பொருதப
சயம்விளைத் துச்செப் படித்துக் குலவிய
கரிமருப் பைப்புக் கொடித்துத் திறல்மதன் அபிஷேகம்

அமலர்நெ றிக்கட் டழுக்குப் பொடிசெய்து
அதிகசக் ரபட் பறக்கக் கொடுமையி
னடல்படைத் தச்சப் படுத்திச் சபதமொ டிருதாளம்

அறைதல்கப் பித்துப் பொருப்பைப் பரவிய
சிறகறுப் பித்துக் கதிர்த்தப் புடைபடு
மபிநவச் சித்ரத் தனத்தித் திருடிகள் உறவாமோ

தமரமிக் குத்திக் கதிர்க்கப் பலபறை
தொகுதொகுக் குத்தொத் தொகுகுத் தொகுதொகு
திரிகிடத் தத்தத் தரிகத் தரிகிட எனவோதிச

சவுற்பப் பக்கப் பழுவொத் திப்புகையெழ
விழிகளுடச் செக்கச் சிவத்துக் குறளிகள்
திசைகள்பட் சித்துக் களிக்கக் கழுதொடு கழுகாட

அமலையு றக்கொக் கரித்துப் படுகள
அசுரரத் தத்திற் குளித்துத் திமியென
அடிநடித் திட்டிட் டிடித்துப் பொருதிடு மயிலோனே

அழகுமி கச்சித் ரபச்சைப் புரவியி
னுலவுமெய்ப் பரத்ய [illegible] சுற குருபர
அருணையிற் சிந்தித் தெனக்குத் தெளிவருள் பெருமாளே.

(இ-ள்) தமரம மிக்கு திக்கு அதிர்க்க - ஓசைமிகுந்து திசைகள் எல்லாம் அதிர்ச்சி கொள்ளவும், பலபறை - பலவாச்சியங்கள், தொகு தொகுக்கு தொத்தொகுக்கு

தொகுதொகு தரிகிட தத்தத் தரிக்க தரிகிட என ஒதி - தொகுதொகுக்கு என்னும் ஓசையைச் செய்யவும், சவடு உற பக்க பழு ஒத்தி - பக்கத்துப் பழுவெலும்புகள் நெரிய முடக்கிய கைகளை ஒத்தித் துணங்கைக் கூத்தாடியும், புகை எழ - புகை எழும்புமாறு, விழிகள் உள் செக்கச் சிவந்து - கண்கள் உள் நன்றாகச் சிவந்தும், குறளிகள் தசைகள் பட்சித்து களித்து கழுதொடு கழுகு ஆட - பூதங்கள் இறைச்சிகளைத் தின்று மிக்க மகிழ்ச்சி கொள்ளவும் பேயோடு கழுகுகள் ஆடவும், அமலை உற்று கொக்கரித்து - ஓலசமிக்க கொக்கரித்து, படுகளம் அசுரர் ரத்தத்தில் குளித்து - போர்க்களத்தில் மடிந்த அசுரர்களுடைய உதிரத்திலே முழுகி, திமி என அடி நடித்து இட்டு இடு பொருந்திடும் அயிலோனே - திமி என்னும் ஓசை உண்டாம்படி அடியை எடுத்திட்டு நடனஞ்செய்து சண்டையிடும் வேற்படையை உடையவனே! அழகு மிக்க சித்ரம் பச்சை புரவியின் - அழகு மிகுந்த பலவித நிறம் பொருந்திய பசுமையான மயிலின் மேல், உலவு மெய்ப் பிரத்யக்ஷம் நலச ''குருபர - ஏறிச் செல்லுகின்ற உண்மையான கண்ணுக்கு நேரே தோன்றுகின்ற நல்ல உண்மையான குருபரனே!, அருணையில் சிந்தித்து எனக்கு தெளிவு அருள் பெருமாளே - திருவண்ணாமலையில் எனக்கு மனம் பொருந்தித் தெளிவை அருள் செய்யும் பெருமானே!, கமலம் மொட்டை கட்டழித்து - தாமரையின் அரும்பின் அழகை ஒழித்தும் குமிழியை நிலைகுலைத்து - குமிழியின் தன்மையை நீக்கியும்,

பொன்குடத்தை-பொன்னாற் செய்த குடத்தையும், தமனியம் கலசம் வாக்கத்தைத் தந்து-பொன்னாற்செய்த கலசக் கூட்டங்களை உடைத்தும், குலை அறா இளநீரை நறுவி-குலையினின்று நீங்கும்படி இளநீரைக் கோபித்தும், வட்டைப் பின் துரத்தி-சூதாடுங் கருவியைப் பின்வாங்கும்படி துரத்தியும், பொருது அபசயம் விளைத்து-சண்டையிட்டுத் தோல்வியை உண்டாக்கியும், செப்பு அடித்து - செப்பை அடித்தும், குலவிய கரிமருப்பை புக்கு ஒடித்து-விளங்கிய யானையின் கொம்பைப் புகுந்து ஒடித்தும், திறல் மதன் அபிஷேகம் - வெற்றி பொருந்திய மன்மதனுடைய கிரீடத்தை, அமலர் நெற்றிக்கண் தழற்குள் பொடிசெய்து - சிவபெருமானது நெற்றிக் கண்ணின் நெருப்புக்குள் பட்டு நீறும்படி செய்தும், அதிகம் சக்ரப்புள் பறக்கக் கொடுமையின் அடல் படைத்து அச்சப்படுத்தி - சிறந்த சக்ரவாகப்பறவை பறக்கும்படி கொடுமையாகப் போர்செய்து பயப்படுத்தியும், சபதமொடு இருதாளம் அறைதல் கற்பித்து-சபதத்துடன் இரண்டு தாளங்கள் சப்திக்கும்படி புகட்டியும், பொருப்பை பாவிய சிறகு அறுப்பித்து-மலைகளைப் பரந்துள்ள சிறகுகளின்கண் அறுப்பித்தும், கதித்து புடைபடும் அவிர்நவம் சித்ரம் தனத் திருடிகள் உறவு ஆமோ - ஒளிமிகுந்து பக்கந் திரண்டுள்ள புதிய அழகு பொருந்திய ஸ்தனங்களையுடைய வஞ்சனை மிகுந்த பெண்களின் நேசம் எனக்கு இருப்பது நன்றோ எ-று (அஃது ஒழியும்படி திருவருள் செய்வாய் என்பது குறிப்பெச்சம்.)

(வி-ரை) ஸ்தனங்களுக்கு அழகு மிகுதி கூறுவார் அவற்றோடு ஒப்பிக்கத்தக்க பொருள்களையெல்லாம் எடுத்துக்கொண்டு அவை தோற்றுவிட்டன என்றும் தோற்ற காரணத்தானே பலவாறு தண்டிக்கப்பட்டன என்றுங் கற்பித்துச் சிலேடை அணி தோன்றக்கூறிய சதுரப்பாடு பாராட்டத்தக்கது.

கமலமொட்டைக் கட்டழித்தல்-மலர்தல், கட்டுக்குலைதல். பொற்குடத்தைத் தகர்த்தல்-பொற்குடம் உடைக்கப்படுதல். கரி மருப்பைப் புகவொடித்தல் - யானைக்கொம்பை ஒடித்தல். அபிஷேகம்-கிரீடம். சக்ரபுள் - சக்ரவாகம், அது தோற்றுப் பறந்தது என்றார். இருதாளம் 'அறைதல் கற்பித்து - இரண்டு தாளங்களும் ஓசையுடையனவாயின. பொருப்பைப் பரவிய சிறகறுப்பித்து-மலைகளின் இறகுகளை இந்திரனைக்கொண்டு அறுப்பித்து 'திருடிகள்' என்றார் பொய்யும் வஞ்சமும் களவும் குடிகொண்டோராதலின். குளிகள்-பூதங்கள். (96)

பொது

97 தனதத்தத் தானத தனதான
தனத்தத தானத-தனதான

கருப்பத் தூறிய பிறவாதே
கனக்கப் பாடுற் றுழலாதே
திருப்பொற் பாதத் தநுபூதி
சிறக்கப் பாலித் தருள்வாயே

பரப்பற் றவருக் குரியோனே
  பரத்தப் பாலுக் கணியோனே
திருக்கைச் சேவற் கொடியோனே
  செகத்திற் சோதிப் பெருமானே.

(இ-ள்) கருப்பத்து ஊறி - கருப்பத்திலே தங்கி, பிறவாது - பிறவாமலும், கனக்க பாடு உற்று - மிகவும் வருத்தமடைந்து, உழலாது - துன்பமடையாமலும், திரு பொன் பாதத்து - அழகிய பொன்போலும் அருமையான திருவடிகளின், அநுபூதி சிறக்க - அநுபவம் மிக, பாலித்து அருள்வாய் - காப்பாற்றி அருள்வாய், பரப்பு அற்றவருக்கு - சித்த விருத்தி ஒழிந்தவருக்கு; பரத்து அப்பாலுக்கு - மேன்மையான ஞான வெளிக்கு, அணியோனே - சமீபத்திலுள்ளவனே! திரு கை - அழகிய கையில், சேவல் கொடியோனே - சேவற் கொடியை உடையவனே!, செகத்தில் - உலகத்தில், சோதி - சோதி வடிவமான, பெருமானே - பெருமானே!. எ-று. ஏ-ஈற்றசைகள்.

(வி-ரை) கருப்பத்திலே உயிர்படுந் துன்பத்திற்கு அளவில்லையாதலின் 'கருப்பத்தூறிப் பிறவாதே' என்றார். பிறந்த பின் படும் துயரமும் மிகுதி என்பார் 'கனக்க...... உழலாதே' என்றனர். அநுபூதி என்றது யான் எனது என்னும் அகப்புறப்பற்றுக்கள் அழிந்து, ஆன்மா ஆனந்தமயமான திருவடியிலே இரண்டறக் கலத்தலாகிய பேரின்பம் அடைதற்குரிய அனுபத்தை. 'பிறந்தா ருறுவது பெருகிய

துன்பம்; பிறவார் உறுவது பெரும் பேரின்பம்' என்று **இளங்கோவடிகள்** கூறியபடி இவரும் பிறப்பால் வருவது துன்பமே எடுத்துக்கூறினர். இனிப் பிறவாநெறியை நான் அடையும்படி எனக்கு உன்பாதத்தனுபூதி சிறக்கும்படி அருள்புரிய வேண்டுமென்பார், 'அனுபூதி அருள்வாயே' என்றனர். சூரபதுமன் சேவலும் மயிலுமாகி முறையே முருகனுக்குக் கொடியும் ஊர்தியுமாயினன் ஆதலின் 'சேவற் கொடியோனே' என்றார். பரப்பு - சித்த விருத்தி, சித்தவிருத்தி அடங்கிய பெரியோர்கள் உள்ளத்தில் தியானிக்கப் படுபவன் என்பார், 'பரப்பற்றருக் குரியோனே' என்றார். தாயின் கருப்பத்தில் பத்துமாதமும் உயிர் படுந்துன்பத்தைப் பின்வரும் **மணிவாசகப் பெருமான்** திருவாக்காலும் உணர்க.

'ஒருமதித் தான்றியி னிருமையிற் பிழைத்து
மிருமதி விளைவி னொருமையிற் பிழைத்து
மும்மதி தன்னு ளம்மதம் பிழைத்து
மீரிரு திங்களிற் பேரிருள் பிழைத்து
மஞ்சு திங்களின் முஞ்சுதல் பிழைத்து
மாறு திங்களி னூறலர் பிழைத்து
மேழு திங்களிற் றாழ்புவி பிழைத்து
மெட்டுத் திங்களிற் கட்டமும் பிழைத்து
மொன்பதில் வருதரு துன்பமும் பிழைத்துந்
தக்க தசமதி தாயொடு தான்படுந்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்,' (97)

திருவிடைமருதூர்

98 தனதனன தனதனன தனதனன தனதனன
தான தானனா தான தானனா தனதன தனதான.

அறுகுநுனி பனியனைய சிறியதுளி பெரியதொரு
ஆக மாகியோர் பால ரூபமாய்
அருமதலை குதலைமொழி தனிலுருகி யவருடைய
ஆயி தாதையார் மாய மோகமாய்
அருமையினி லருமையிட மொளுமொளென உடலவளர
ஆளு மேளமாய வால ரூபமாய்
அவரொரு பெரியோராய்
அழகுபெறு நடையடைய கிறுதுபடு மொழிபழகி
ஆவி யாயவோர் தேவி மாருமாய்
விழுசுவரை யரிவையர்கள் படுகுழியை நிலைமையென
வீடு வாசலாய மாட கூடமாய்
அளவுளவு தவிடுமிக விதிரவிட மனமிறுகி
ஆசை யாளராய் ஊசி வாசியாய்
அவியுறா சுடாபோலே
வெறுமிடிய னொருதவசி யமுதுபடை யெனுமளவில
மேலை வீடுகேள் கீழை வீடுகேள
திடுதிடென நுழைவதன்முன எதிர்முடுகி யவர்களொடு
சீறி நாய்போல ஏறி வீழ்வதாய்
விரகினொடு வருபொருள்கள் சுவறிட மொழியுமொரு
வீணி யார்சொலே மேலதாயிட
விதிதனை நினையாதே

மினுகுமினு கெனுமுடல மறுமுறுகி நெகிழ்வுறவும்
வீணா சேவையே பூணு பாவியாய
மறுமையுள தெனுமரை விடும்விழலை யதனின்வரு
வாரகள் போகுவார காணு மோனன
விடுதுறவு பெரியவரை மறையவரை வெடுவெடென
மேள மேசொலாய ஆளி வாயராய
மிடையுற வருநாளில்

வறுமைகளு முடுகிவர உறுபொருளு நழுவசில
வாத மூதுகா மாலை சோகைநீரிய
பெருவயிறு வயிறுவலி படுவனவர இருவிழிகள
பீளை சாடிட ஈளை மேலிட
வழுவழென உமிழுமது கொழுகொழென ஒழுகிவிழ
வாடி யூடெ ஈலாம் நாடி பேதமாய
மனையவள் மனமவெருவ

மறுகமனை யுறுமவாகள நணுகுநணு கெனுமளவில
மாதர் சீயென வாலா சீயென
கனவுதனி லிரதமொடு குதிரைவர நெடியசுடு
காடு வாவென வீடு போவென
வலசழிய விரகழிய உரைகுழறி விழிசொருகி
வாயு மேலிட ஆவி போகுநாள
மனிதாகள் பலபேச

இறுதியதொ டறுதியென உறவின்முறை கதறியழ
ஏழை மாதராள் மோதி மேல்விழ

எனதுடைமை யெனதடிமை மெனுமறிவு சிறிதுமற
ஏமொ லேலென வாயை ஆவென
இடுகுபறை சிறுபறைகள திமிலையொடு தவிலறைய
ஈம தேசமே பேயகள் சூழவதாய்
எரிதணி விடும்வாழ்வே

இணையடிகள் பரவுமுன தடியவர்கள் பெறுவதுவும்
ஏசி டாதகளோ பாச நாசனே
இருவினையு மலமுமற இறவியொடு பிறவியற
ஏக போகமாய் நீயு நானுமாய்
இறுகும்வகை பரமசுக மதனையருளிடைமருதில்
ஏக நாயகா லோக நாயகா
இமையவா பெருமாளே.

(இ-ள) பாசம் நாசனே - ஆன்மாக்களின் வினையை ஒழிபபவனே', இடைமருதில ஏகம நாயகா-திருவிடைமருதூரில் எழுந்தருளியிருககும் ஒப்பற்ற தலைவனே!, லோகம் நாயகா - உலகங்களுககுத் தலைவனே', இமையவர் பெருமாளே-தேவாகட்குப பெருமானே', அறுகு நுனி பனி அனைய சிறிய துளி - அறுகம்புல்லின் முனையிலுள்ள பனித் துளியை ஒதத சிறிய துளியானது, பெரியது ஒரு ஆகம் ஆகி-பெரியதாகிய ஒருடமபாகி, ஓர் பாலன் ரூபம் ஆய்-ஓர் இளைய வடிவங்கொண்டு, அருமதலை குதலைமொழி தனில உருகி-அருமையான குழந்தையினது மழலைச் சொற்களைக் கேட்டு மனமுருகி, அவருடைய ஆயி தாதையார் மாயம்

மோகம் ஆய்-அவர்களைப் பெற்ற தாய் தந்தையர் மாயமான ஆசை யுடையவர்களாய், அருமையினில் அருமை இட- அதிகம் அருமை பாராட்ட, மொளுமொளென உடல வளர - பரபரப்புடனே உடம்பு வளர்ச்சியடைய, ஆளும் மேளம் ஆய்-அவரும் மேளம்போல, வாலரூபம் ஆய-வாலிப வடிவமாகி, அவர் ஒருபெரியோர் ஆய-பின்பு அவர்கள் பெரியவர்களாகி, அழகுபெறும் நடை அடைய-அழகை யுடைய நடையை நடந்து, கிருதுபடும் மொழி பழகி-பெரு மிதமுடைய வார்த்தைகளிலே பயின்று, ஆவி ஆய ஓர் தேவிமாரும் ஆய்-உயிர்போன்ற மனைவிமார்களை மணந்த வர்களாய், விழுசுவரை-விழுகின்ற சுவர்போன்ற உடலையும், அரிவையர்கள் படுகுழியை-பெண்களது படுகுழிபோன்ற அல்குலையும், நிலைமை என்-நீடித்திருப்பவை என்று எண்ணி, வீடு வாசல் ஆய் மாடம் கூடம் ஆய் - வீடு வாசலை யுடைய வர்களாயும், மாளிகைகளும் கூடங்களும் உடையவராகி, அணு அளவுதவிடும் இக (?)திரவிட - அணுவளவு தவிடு தானும் இங்கே சிதறவிடுவதற்கு, மனம் இறுகி - மனம் அழுந்தி, ஆசை ஆளர் ஆய் - ஆசையுடையவர்களாகி, ஊசி வாசி ஆய-ஊசிபோனவிடம் தேடுகிறவர்களைபோல நுணுக்க முடையவர்களாய், அவி உறு சுடர் போல வெறுமிடியன்- அணைந்துபோகின்ற விளக்குப்போலக் கெட்டு வறுமை யினால் மூடுண்டவனேனும், ஒருதவசி - ஒரு துறவியேனும் வந்து, அமுதுபடை எனும் அளவில் - சோறுபடைக்க என்று கேட்ட மாத்திரத்தில், மேலைவீடுகேள் கீழைவீடு

கேள்-மேலவீட்டைச் சேர்ந்தகேள் கீழ்வீட்டைச் சேர்ந்து கேள் என்று சொல்லி, திடுதிடு என நுழைவதன்முன் எதிர்முடுகி - விரைவாக அவர்கள் புகுவதற்கு முன் எதிரே சென்று, அவர்களோடு சீறி ஞாளிபோல எறிவீழ்வது ஆய- அவர்களுடன் கோபித்த நாய்போல் மேற்சென்று விழுவதை யுடையவராகி, விரகினொடு வருபொருள்கள் சுவறிவிட - தமது தந்திரத்தினால தம்மைச் சேர்ந்த பொருள்கள் எல்லாம் வறண்டுபோக, மொழியும் ஒருவீணியர் சொலே மேலது ஆயிட-அவர்கள் மனதுக்கிசைய பேசும் வீணர்கள் சொல்லே மேன்மையாக விளங்க, விதிதனை நினையாது-விதியைச் சிறிதும் எண்ணாமல், மினுக்கு மினுக்கு எனும் உடலம் - மினுமினுவென்றிருக்கும் உடம்பு, மரம் முறுகி நெகிழவுற - பாவம் மிகுந்ததால நெகிழ்ச்சி அடைய, வீணர் சேவையே பூணுபாவியாய - பயனில்லாதவரைச் சேவித்தலையே மேற்கொள்ளும் பாவியாகி, மறுமை உளது எனும் அவரை-மறுபிறப்பு உண்டென்று சொல்லுமவர்களை, விழலைவிடும்-அது வீண்பேச்சு விடும், அதனில வருவார்கள் போகுவார் காணுமோ என - அதைப்பெற்று வருவோரும் போவாருமாகியவர்களைப் பார்க்கின்றேமோ என்று பேசி, விடு துறவு பெரியவரை மறையவரை-உலகப்பற்றை விட்டுத் துறந்த பெரியோர்களையும் பிராமணர்களையும், வெடுவெடென மேளமே சொல ஆய் ஆளிவாயர் ஆய்-மேளம் போல முழங்கப்பேசிச் சிங்கம்போன்ற வாயை உடையவராய், மிடை உறவரும் நாளில்-கலப்புப்பொருந்த வரும்

காலத்தில், வறுமைகளும முடுகிவர - தரித்திர காலங்களும் விரைவுடன் வந்துசேர, உறு பொருளும நழுவ - கையிலே இருந்த மிககபொருளும் செலவாகிவிட, சில வாதம் ஊது காமாலை சோகை நோய் பெருவயிறு வயிற்றுவலி படுவன் வர-வாதநோய பெருக்கின்ற காமாலை சோகைநோய பெரு வயிறு வயிற்றுநோய படுவன முதலிய சில நோயகள் தம்மை வந்து சேர, இரு விழிகள் பீளை சாறிட - இரண்டு கண்களிலும் பீளை சரிய, ஈளை மேலிட-சளிமேலாக, வழவ ழென உமிழும அது கொளகொளென ஒழுகிவிழ - வழவ ழென் துப்பும சளி கொகொளென்று ஒழுகி விழ, ஊண் எலாம் வாடிநாடி பேதம் ஆய் - தசையெல்லாம வாடி நரம்பு கள் அனைத்தும மாறி, மனையவள் மனம வேறாய மறுக- மனைவியினுடைய மனம் மாறுபட்டுச சுழல, மனைஉறும் அவர்கள் நணுகு நணுகு எனும் அளவில-வீட்டிலுள்ளவர் கள் வருக வருக என்று சொலலுமளவில, மாதர் சீஎன வாலர் சீயென-பெணகள் சீயென்று இகழ்ந்துசொல்லவும், வாலிபர் சீஎன்று இகழ்ந்து சொல்லவும், கனவுதனில் இரத மொடு குதிரைவர-கனவினகண் தேருடனே குதிரைவர, நெடிய சுடுகாடு வாஎன - நீணட சுடுகாடு வாஎனவும, வீடுபோ என-வீடுபோ என்று சொலலவும், வலது அழிய விரகு அழிய - பலன்அழிய அறிவும்கெட, உரைகுழறி- சொற்கள குழறுபாடு அடைந்து, விழி சொருகி - கணகள் உள்ளே சென்று, வாயு மேலிட ஆவி போகும் நாள்-காற்று அதிகரிக்க உயிர்போகும் நாளில, மனிதர்கள் பல பேச-மனி

தாகள் பலவிஷயங்களைப பேச, இறுதியொடு அறுதி என உறவின முறை கதறி அழ - முடிவுககாலம் அதனோடு எலலா வாழவும போயவிடடதென்று சுற்றததார வாய்விட்டுக கதறிப புலமப, ஏழை மாதராள மோதி மேல்விழ- அறிவிலலாத மனைவி கையால முகததை மோதிககொணடு மேலேவிழ, எனது உடைமை எனது அடிமை எனும் அறிவு சிறிதும அற - என்னுடைய பொருள எனனுடைய வேலையாட்கள் எனனும அறிவு யாதும் நீஙக, நா மொலேல் என - நாககள மொலேலென்று இரைகக, வாயை ஆ என- வாயை ஆவென்று திறநது, இடுகு பறை சிறு பறைகள்- இடைசுருங்கிய பறைகளும சிறிய பறைகளும, திமிலையொடு தவில அழைய-சலலரியோடு தவில எனனும வாததியததை வாசிகக, நமம தேசமே பேயகள் சூழவது ஆய-சுடுகாட்டில் பேயகள் சுற்றியிருபபதாகி, எரிதனில விடும வாழவே- நெருபபிலபோடும வாழககையையே, இணை அடிகள பரவும உனது அடியவாகள பெறுவதும்-இரண்டாகிய திருவடிகளை வாழததும் தேவரீரது அடியாாகள் அடைவதையும், எசிடாகளோ - கறறிந்தோா பழிககமாட்டாாகளோ?, இருவினை மும்மலமும் அற - இருவினைகளும் மூன்று மலஙகளும் நீஙகவும், இறவியொடு பிறவி அற-இறப்போடு பிறபபு ஒழியவும, ஏகம் போகம ஆய் நீயும நானும் ஆய - ஒரே அனுபவமாய் நீயும் நானுமாகி, இறுகும் வகை பரமசுகம் அதனை அருள்-அழுந்தும்படி மேனமையான **அத்துவிதாநந்தத்தை அருள்வாயாக** எ-று.

(வி-ரை) குதலை மொழி - பொருள் நிரம்பாதசொல். ஆயி தாதையரா-தாய் தந்தையர். மொளுமொளென-ஒலிக் குறிப்பு. கிருதுபடுமொழி-செருக்குடைய சொல். ஆவியாய ஓர் தேவிமார்-உயிருக்கு ஒப்பான மனைவிமார். விழுசுவர்-வினைத்தொகை. மனமிறுகி - சிந்தை தாராளமாகச் செல்லாது அடங்கி, லோபத்தன்மைகொண்டு. ஊசி வாசியாய்-ஊசிபோனவிடம் தேடுகின்றவர்களைப்போல அவ்வளவு நுணுக்க முடையோராய். ஞாளி-நாய். அவியுறு சுடர் போலே வெறுமிடியன-அணைகின்ற விளக்குப்போல உயிர்க் களையற்று, இருக்கும் வறிஞன 'வீணாசேவையே பூணு பாவி' என்றார், அடியார் சேவை கொள்ளாமைக்கு இரங்கி. மறுமையுள தெனுமவர்-மறுபிறப்பு உண்டென்று சொல்லுவோர். விழலை-வீண் வார்த்தை. துறவு பெரியவர்-முனிவர். மேளமே சொலாய - மேளம் போல உரத்துப்பேசி. ஆளி வாயர் - சிங்கம்போலக் கர்ச்சிக்கும் வாயை உடையவர். ஊது காமாலை - உடலை பருக்கும் காமாலை என்னும் நோய். மறுக - சுழல. வலது - சாமர்த்தியம். இடுகுபறை-இடை சுருங்கு பறை. திமிலை-சல்லரி, தாளம். ஈமதேசம் - சுடலையிடம். 'காடுவாவென வீடுபோவென' என்பது முதுமையைக் குறிக்கும் தொடர் மொழி. வாலர்-வாலிபர். ஏழை மாதரார்-மனைவி 'எரிதனிலிடும் வாழ்வு' என்றார் இறந்தலை முடிவாகக்கொண்டு போற்றிவளர்த்த உடல் நெருப்பிலிடப்படுதலின்' இக்கருத்தை பற்றி அப்பர் சுவாமிகளும்,

நடலை வாழ்வுகொண் டென்செய்தீர் நாணிலீர்
சுடலை சேர்வது சொற்பிர மாணமே
கடலி னஞ்சமு துண்டவர் கைவிட்டால்
உடலி னார்கிடந் தூர்முனி பண்டமே

என அருளிச்செய்ததூஉங் காண்க.

இத்தகைய வாழ்வை உனதடியவர்கள் பெறுவது எச்சல்லவோ என்றார், அவர் வீடுபேற்றுக் குரியராதலின். 'செத்தேபோலுலை சிரியாரோ' என்றார் பெரியாரும். இருவினை - நல்வினை, தீவினை. மும்மலம் - ஆணவம், கன்மம், மாயை. இறவி - இறப்பு. ஏகபோகம்-தட்டின்றிக் கலந்து நுகரும் போகம், அஃதாவது இரண்டற அத்துவிதமாகக் கலத்தல், அத்துவிதம்-ந + துவிதம்-இரண்டற்றது, ஒன்று மன்று, இரண்டுமன்று-இரண்டு அற்ற தன்மை, அத்துவித இன்பத்தைப் பெறுபவர்கள் இருவினைத் தொடர்ச்சி அற்று ஆணவம் முதலிய மலங்களும் சத்தி கெட்டு அழிந்த பின்னரே யாதலின், 'இருவினை மும்மலமற' என்றார். அத்தகைய பரமசுகத்தைப் பெறுவோருக்கு இறப்புப் பிறப்புகள் அற்றுப்போதலின், 'இறவியொடு பிறவியற' என்றார்.

இடைமருது - திருவிடைமருதூர், இது தஞ்சாவூர் ஜில்லா கும்பகோணந் தாலூகாவிலுள்ள ஒரு பெரிய சிவஸ்தலம் (98)

திருக்கரபுரம்

99 தனதனத் தனதனத் தனதனத் தனதனத்
தனதனத் தனதனத் தனதனத் தனதனத்
தனதனத் தனதனத் தனதனத் தனதனத்-தனதான.

ஒருவரைச் சிறுமனைச் சயனமெத் தையினில்வைத்
தொருவரைத் தமதலைக் கடையினிற் சுழலவிட்
டொருவரைப் பரபரப் பொடுதெருத் திரியவிட் டதனாலே

ஒருவருக் கொருவர்சக் களமையிற் சருவவிட்
டுருவுபத் திரமெடுத் தறையின்மற் புரியவிட்
டுயிர்பிழைப் பதுகருத் தளவிலுச் சிதமனச் செயுமாதர்

தருமயற் பரமைதனிற் றவநெறிக் கயலெனச்
சரியையிற் கிரியையிற் றவமுமற் றொனதுகைத்
தனமவத் தினிலிறைத் தெவருமுற் றிகழவுற் றிரிவேனைச்

சகலதுக் கமுமறச் சகலசற் குணம்வரத்
தவணியிற் புகழ்பெறத் தகைமைபெற் றனதுபொற்
சரணமெப்பொழுதுநட்பொடுநினைத்திடஅருட் டருவாயே

குருமொழித் தவமுடைப் புலவரைச் சிறையிலிட்
டறவுமுக் கிரம்விளைத் திடுமரக் கரைமுழுக்
கொடியதுர்க் குணஅவத் தரைமுதற் றரிசறுத் திடும்வேலா

குயில்மொழிக் கயல்விழித் துகிரிதழ்ச் சிலைநுதற்
சசிமுகத் திடநகைக் கனகுழற் றனகிரிக்
கொடியிடைப் பிடிநடைக் குறமகட் டிருவினைப் புணர்வோனே

கருதுசட் சமயிகட் கமைவுற்க கிறியுடைய
பறிதலைச சமணரைக குலமுதற பொடிபடக
கலகமிட் டெனுயிர்க கழுவினுச சியினிலவைத திடுவோனே
கழுநினிற குலையறக கதலியிற கனியுகக
கழையின்முத் தமுதிரக கயலகுதித துலவுநற
களவயற நிகழதிருக கரபுரத தறுமுகப பெருமாளே.

(இ-ள்) குருமொழி தவம் உடை புலவரை - மேனமை யான சொலலையும தவவொழுககத்தையுமுடைய புலவரை, சிறையிலவைதது அறவும உககிரம விளைததிடும - மிகவும கோபததை உணடாககும இராககதரை, முழு கொடிய தாருணம் அவததரை - முற்றும கொடுமையான தீய குண முடைய வீணரை, முதல தூரிசு அறுததிடும வேலா-அடி யோடு அவாகள குற்றததை ஒழிக்கும் வேறபடை உடைய வனே!, குயிலமொழி - குயிலபோனற இனிய சொலலையும், கயல் விழி-சேலபோனற கண்ணையும, துகிர இதழ்-பவளம் போனற இதழையும், சிலை நுதல - வில்லைபபோல வளைந்த புருவத்தையும், சசிமுகம் - சந்திரனைபபோன்ற முகத்தை யும், இளநகை-புன னகையையும், கனம் குழல - மேகம் போன்ற கூநதலையும், தனமகிரி-மலைகளைபபோனற ஸ்தனங் களையும, கொடி இடை பூங்கொடிபோல நுட்பமான இடை யையும், பிடிநடை - பெண் யானையை ஒத்த நடையினையும் உடைய, குறமகள் திருவினை புணர்வோனே குறமகளாகிய வள்ளிநாயகியின அழகை நுகாபவனே!, கருது சட்சமயி கட்கு-எண்ணபபடும் ஆறு சமயத்தாருக்கும், அமைஉற-

பொருந்த, சிறிஉடை பறிதலை சமணரை - வஞ்சமுடைய பறித்த தலையை உடைய சமணர்களை, குலமுதல பொடிபட-குலத்தோடு அழியும்படி, கலகம இட்டு உடல உயிர்மாறுபட்டு வருந்துகின்ற உயிர்களை, கழுவின உச்சியில வைத்திடுவோனே - கழுமரத்தின உச்சியில ஏற்றிவைத்தவனே! கமுகினில குலை அற-பாக்குமரத்தில குலைகள அற்று விழவும், கதலியின கனி உக - வாழைமரத்தில பழங்கள சொரியவும், கழையில முத்தம உதிர-கரும்பில முத்துக்கள உதிரவும், கயல்குதித்து உலவும்-கயல மீன்கள துள்ளிச் செல்கின்ற, நல கனம வயல்திகழ - செழுமை பொருந்திய பெரிய வயல்கள விளங்கும், திருகாபுரத்து அறுமுகம் பெருமாளே - அழகிய விரிஞ்சிபுரத்தில எழுந்தருளியிருக்கும் பெருமானே!, ஒருவரை சிறுமனை-ஒரு புடலைச சிறிய வீட்டின், சயன மெத்தையினில வைத்து - படுக்கை மெத்தையில வைத்தும, ஒருவரை தமதலைக்கடையினில சுழல விட்டு-ஒரு புருஷனைத் தமமுடைய தலைக்கடையில சுற்றும்படி செய்தும், ஒருவரை பரபரப்பொடு தெருத்திரியவிட்டு-ஒரு புருடனை விரைவாகத தெருவில திரியும்படிவிட்டும், அதனால ஒருவருக்கு ஒருவர சக்களத்தியில சருவவிட்டு-ஒருவருக்கு ஒருவரைச சக்களத்திக காய்ச்சலில பொருந்தும்படி விட்டும், உரு உபத்திரம எடுத்து-அச்சமும துன்பமும் அவர்களுக்குள உண்டாக்கியும், அறையில மல்புரிய விட்டு-படுக்கை அறையில சண்டைசெய்யும்படி செய்தும், உயிர் பிழைப்பது கருத்து அளவில்-உயிர வாழ்வதே என்

ணுங்கால், உசிதம் என செயும் மானர் - மேன்மை என்று எண்ணும்படி செய்யும் பெண்கள், தரும மயல் பிரமையில் - கொடுக்கும் ஆசைமயக்கத்தில், தவம நெறிக்கு அயல் என - தவமார்க்கத்திற்கு அந்நியமாகி, சரியையில் கிரியையில் தவமும் அற்று - சரியையிலும் கிரியையிலும் ஒழுக்கத்தையும் விட்டு, எனது கைதனம அவத்தனில் இறைத்து - என்னுடைய கைப்பொருளை வீணுக்குச் செலவழித்து, எவரும் உற்று இகழவு - எல்லாரும் சேர்ந்து இகழும்படி, திரிவேனை - திரிபவனாகிய அடியேனை, சகல துக்கமும் அற - எல்லாத் துன்பங்களும் ஒழியவும், சகலம் சற்குணம் வர - எல்லா நற்குணங்களும் உண்டாகவும், தரணியில் புகழ்பெற - உலகத்தில் புகழை அடையவும், தகைமைபெற்று - பெருந்தன்மை பெற்று, உனது பொன் சரணம் - தேவரீரது அழகிய திருவடிகளை, எப்பொழுதும் நட்பொடு நினைத்திட அருள்தருவாய் - எக்காலத்திலும் அன்புடன் தியானிக்கக் கருணைசெய்வாய். எ-று.

(வி-ரை) சக்களமை-விரோதம். புலவர்-தேவர். அவத்தர்-வீணர். துகிர்-பவளம். சசி-சந்திரன். கனகுழல்-மேகம் போன்ற கூந்தல். தனகிரி முலைகளாகிய மலைகள். பிடிநடை-பெண் யானையைப் போன்ற நடை. சட்சமயிகள் - ஆறு சமயத்தார். பறிதலைச் சமணர் - மயிரைப் பறித்துக்கொள்ளும் தலையையுடைய சமணர். கலகமிட்டு - வாதுசெய்து, திருஞானசம்பந்தர் முருகப்பெருமான் திருவவதாரமே என்பார், அவர் செய்த செயல்களை இவர் மேலேற்றிக் கூறி

ஞா. கரபுரம் - விரிஞ்சிபுரம், இது வேலூருக்கு அருகில் உள்ள ஒரு சிவஸ்தலம். நீர்வள மிகுதியால் வயல்களிலே கயல்மீன் குதித்துத் துள்ள கமுகமரத்திலுள்ள குலை அற்றும், வாழைக்கனிகள் கீழே விழுந்தும் கரும்பிலே முத்துக்கள் உதிர்ந்து போகும் என்று கூறினார் இவ்வாறு தொடர்பு செய்து கூறுதல் புலவர் மரபு. (99)

விநாயகமலை

100 தனதன தானு தனுதன தனதன தானு தனுதன
தனதன தானு தனுதன-தனதான

சரவண சாதா நமோநம கருணைய தீதா நமோநம
சததள பாதா நமோநம அபிராம

தருணக தீரா நமோநம நிருபமல வீரா நமோநம
சமதள வூரா நமோநம சகதீச

பரமசொ ரூபா நமோநம சுராபதி பூடா நமோநம
பரிமள நீபா நமோநம உமைகாளி

பகவதி பாலா நமோநம இகபர மூலா நமோநம
பவுருஷ சீலா நமோநம அருள்தாராய்

இரவியு மாகாச பூமியும் விரவிய தூளே றவானவ
ரெவர்களு மீடேற எழ்கடல் முறையோவென்

றி டபட மாமே ருபூதர மிடிபட வேதா விசாசர
ரிகல்கெட மாவே கநீடயில் விடுவோனே

மரகத ஆகார ஆயனு மிரணிய ஆகா ரவேதனும்
வசுவெனு மாகார ஈசனும் அடிபேண

மயிலுறை வாழ்வே விநாயக மலையுறை வேலா மகீதர
வனசர ராதா ரமாகிய பெருமாளே.

(இ-ள்) சரவண சாதா நமோ-சரவணப் பொய்கையில் தோன்றினவரே உமக்கு நமஸ்காரம், கருணை அதீதா நமோ நமோ - அருளையுடைய மேலானவரே உமக்கு நமஸ்காரம், சததள பாதா-நூறு இதழ்களையுடைய தாமரை மலர் போலும் திருவடிகளை யுடையவரே!, அபிராம - அழகு நிறைந்தவரே!, தருணக-இளம்பருவமுடையவரே!, தீரா-வலிமையுடையவரே!, நிருப - அரசனே!, மலவீரா - போர் வீரரே!, சமதள ஊரா-திருப்போரூரில் எழுந்தருளி யிருப்பவரே!, சகதீச - உலகத்துக்குத் தலைவரே!, பரமசொரூபா-திவ்விய வடிவமுடையவரே!, சுராபதி பூபா-தேவர்களுக்குத் தலைவனாகிய இந்திரனுக்குத் தலைவரே, பரிமள நீபா-மணம் பொருந்திய கடப்பமாலையை அணிந்தவரே! உமை காளி பகவதிபாலா - கருநிறமுடையவரும் ஆறு குணங்களுடையவருமாகிய உமாதேவியார் புதல்வரே!, இகபர மூலா-இகத்துக்கும் பரத்துக்கும் காரணமானவரே!, பவுருஷ சீலா-ஆண்மைமிக்க ஒழுக்க முடையவரே!, இரவியும் - சூரிய மண்டலமும், ஆகாச பூமியும்-ஆகாசமும் பூமியும், விரவிய தூள் ஏற - நெருங்கியதுகள் பரப்பவும், வானவர் எவர்களும் ஈடேற-தேவர்கள் எல்லாரும் மேன்மையடையவும், ஏழ்கடல் - ஏழுகடல்களும், முறையோ என்று இடர்பட-இது முறைமையோ என்று துன்பப்படவும், மாமேரு பூதரம் இடிபடவே-மகாமேருவாகிய மலை இடிபடவும், நிசா

சரா-இராகத்தரது, இகல்கெட-வலியழியவும், மாவேகம்-மிக்க வேகமுடைய, நீடு அயில் - சிறந்த வேற்படையை, விடுவோனே - விடுபவரே! மரகத ஆகாரம் - பச்சையைப் போலும் திருமேனியையுடைய, ஆயனும் - திருமாலும், இரணிய ஆகாரம்-பொன்னையொத்த திருமேனியையுடைய, வேதனும் - பிரமதேவனும், வசு என்னு ஆகாரம் - அக்கினி யென்று சொல்லப்படும் வடிவையுடைய, ஈசனும்-காலாக் கினி ருத்திரனும், அடிபேணி-திருவடிகளைத் தொழ, மயில் உறை வாழ்வே-மயிலில் ஊர்கின்ற வாழ்வை யுடையவரே!, விநாயகமலை-விநாயகமலை என்னும் திவ்விய ஸ்தலத்தில், உறைவேலா-வசிக்கின்ற வேலனே!, மகீதர-மலையில் வசிப்ப வரே!, வனசரா ஆதாரமாகிய பெருமாளே - காட்டில் வசிக்கின்ற வேடர்களைப் பாதுகாக்கும் பெருமாளே! எ-று.

(வி-ரை) சாதம்-பிறப்பு. அதீதன் - தத்துவங்களுக்கு அப்பாற்பட்டவன். சததளம் - நூற்றிதழ்; தாமரையைக் குறிக்கும். அபிராமம்-அழகு. தருணம்-இளமை. நிருபன்-அரசன். சமதளவூர்-திருப்போரூர், சமம்-போர் 'இகபர மூலர்' என்றார். இம்மைமறுமைவீடுபேறுமுதலிய எல்லாவற் றிற்குங் காரணப்பொருளாய் இருத்தலின். பவுருஷம்-ஆண்மை; புருஷசம்பந்த முடையது; தத்திதாந்தம். ஏழ் கடல்-உவர்நீர்க்கடல், பாற்கடல், தயிர்க்கடல், நெய்க்கடல், கருப்பஞ்சாற்றுக்கடல், தேன்கடல், நன்னீர்க்கடல். ஆகா ரம்-வடிவு; வடமொழி, இரணிய ஆகார வேதன்-பொன் வடிவத்தையுடைய பிரமதேவன். வேதன் - வேதத்துக்குத்-

தலைவன். வசு-அக்கினிதேவன், இங்குக் காலாக்கினி ருத்திரனைக் குறித்தது. விநாயகமலை - ஒரு முருகன் ஸ்தலம். மகீரதம்-பூதரம் போல மலைக்கு ஒரு பெயர், வடமொழி. பேணி என்னும் செய்தெனச்சம் பேண என்னச் செய்வெனச்சமாகத் திரித்துப் பொருளுரைக்கப்பட்டது

ஆகப் பாடல்கள் 100

திருப்புகழ் விருத்தியுரை முற்றிற்று.

திருப்புகழ் விருத்தியுரையின்

பாட்டு முதற்குறிப் பகராதி

பாட்டு	பக்கம்
அ	
அருசுவிதபூதம	335
அதல சேடனூராட	196
அபசாரநிந்தைபட்டு	329
அருக்குமஙகையா	53
அருமாமதனைபபொரு	193
அளகநிரை குலையவிழி	318
அளகபாரமலைந்து	188
அறிவிலாபபிததருனற	244
அறுகுநுனி பனியனைய	412
அனிசசங்கார முகம	106
ஆ	
ஆலமேறற விழியினா	295
ஆலம வைதத விழி	180
ஆலுமயில போலுறற	345
ஆலவிழிநீலத தாலதர	347
இ	
இடருககிடராகிய	302
இருகுழை யெறிநத	90
இலவிதழ கோதிநேதி	160
இறகுமணிமுலை மருவு	403
உ	
உருககாா வாளிகண்கள்	149
உ,வின முறைற கதறி	205
எ	
எதிரிரு குழையை	251
எலலாரு ஞானத	34
எனையடைநத குட்ட்	237
ஏ	
ஏறுமயிலேறி	38
ஒ	
ஒருவரைச சிறுமனைச	421
க	
கடலைச சிறைவிதது	210
கடலை பொரியவரை	218
கணடுபோலமொழி	311
கதியை விலககு	115
கமலமாதுடன்	84
கமலமாடைகக	405
கயல்விழித்தேனைச	342
கரமுமுளரியின் மலா	320
கருபபத்துறிபபிரவாதே	409

பாட்டு	பக்கம்
கருவடைந்து	76
கருவினுருவாகி	111
கறுத்து நீவிடுகூர்வேலி	277
களவுகொண்டு கைக்காசி	248
களபமொழுகிய	98
கறுக்குமஞ்சன	58
கனகக்கும்பமிரண்டு	171
கனைகடல வயிறுகுழும்பி	330
கன்றிவரு நீல	103
கா	
காதல் மோகந்தரும	291
காரணிந்தவரை	118
கு	
குடத்தைத் தகர்த்து	185
குமர குருபரமுருக	123
குயிலொன்று மொழி	307
குவளை பொருதிரு	284
குறித்த மணிப்பணித	325
குறிப்பரிய குழ குமதி	256
கை	
கைத்தல நிறை	43
கோ	
கோமள வெ பினை	130
ச	
சரணகமலாலயத்தை	363
சரத்தே யுதித்தாயுரத்தே	366
சரவணசாதாநமோ	425
சருவும்படி	64
சீ	
சீருலாவிய வோதிம	152
சு	
சுட்டது போலாசை	383
சே	
சேலையடர்த்தாலமிகு	266
த	
தடக்கைப் பங்கயங	355
தமருமமருமனையு	396
தலைமயிர் கொக்கு	313
தறையின் மானிட	146
தி	
திருப்புகழ்படிக்கு	35
தீ	
தீயும்பவனமும் நீரும்	350
து	
துள்ளுமத வேள்கை	334
தோ	
தோகய பெரும்பயோ	264
நி	
நிறைந்ததுப் பிதழ்	260
நீ	
நீரிழிவு குட்டமீளை	386

பாட்டு	பக்கம்
நீள்புயற் குழலமாதா	360
நெ	
நெடியவடகுவ	233
ப	
பஙகவேவும பிரபபந்த	240
பந்தாடியஙகை	155
பழுதர ஒதிக்கடநது	269
பா	
பாதிமதி நதிபோது	305
பு	
புடவிக கணிதுகிலென	222
புணரியு மனஙக	141
புகுவத்தைநெறிதது	280
பூ	
பூததாரசூடுங கொததலா	200
பொ	
பொதுவதாயத்தனிமுத	352
ம	
மதவெங்கரிககிரண்டு	287
மருக்குலாவிய மலரணை	398
மருவுகடல முகிலனைய	368
மருவே செறித்த	128
மலரணி கொண்டை	227
மனறலஙகொநது	80
மு	
முகமு மினுககிபபெரும்	338
முததுககுசசிட்டு	215
முத்தைத்தரு	49
முருகு மயூரச சேவக	390
முழுகிவடவா முகத்தி	358
மொ	
மொழிய நிறஙகறுத்து	400
வ	
வஞ்சக லோபமூடர்	135
வஞ்சஙகொண்டுந்திட	230
வடிவது நீலங்காட்டி	393
வரிசோநதிடு சேல	175
வரைததடங	71
வா	
வாரண முகஙகிழிநது	164
வி	
விடுங்கைக் கொத்தகடா	273
விடுமதவேள்வாளியின்	298
வெ	
வெஞ்சரோருக	95
வே	
வேனின் மதனொந்து	167

பாட்டு முதற்குறிப்பகராதி முற்றிறறு.

Printed by DAIVA MAGAL VILASAM PRESS,
24, Thandavaraya Pillai Street, Sowcarpet, Madras.

Paper Issue Card No Q H M S' 259.
30th June 1947 1000 Copies